32.
R673m211, N28
N36-9-1-6
162351

31

ம. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 9—No. 1.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

3088

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் கூ | யுவ ஆண்டு தைத் திங்கள்<br>1936ஞ ஜனவரிமீ | இதழ் க |

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| தலைமைப் பேருரை ... ... ... | க |
| சைவ இளைஞர் மகா நாட்டுத் தலைமையுரை ... | கக |
| சைவ மங்கையர் மகா நாட்டுத் தலைமையுரை ... | உரு |
| திறப்புப் பேருரை ... ... ... | ருரு |
| 30-வது ஆண்டு அறிக்கை ... ... | சஅ |
| 31-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள் ... ... | ருரு |
| சமாஜ முப்பதாவது ஆண்டு விழா ... ... | ருஎ |
| தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 52-ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி ... ... | கூஉ |

பத்திராசிரியர் :—ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.
உதவிப் பத்திராசிரியர் :—மா. துரைசாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

## முக்கிய அறிக்கைகள்

(1) நமது சமாஜத்தின் சார்பில் தைப்பூச நன்னாளன்று (6-2-1986) திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகாநந்த நிலையத்தில் மாலை 6 மணிக்குச் சிவஞானசித்தியார் சுபக்கத்தைப் பாடமாகத் தொடங்கி, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் காலையில் 8 மணி முதல் 9 மணிவரை மயிலாப்பூர் புதுத்தெருவில் 2/7 எண்ணுள்ள தமது இல்லத்தில் நடத்தி வருவார்கள். சைவ இளைஞர்கள் தவிராது வருக.

(2) இன்று முதல் நமது பத்திரிகையில் வெளியிடுதற்காக அனுப்பப்படும் கட்டுரைகளும் அறிக்கைகளும் மதிப்புரை நூல்களும் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், "சித்தாந்தம்" பத்திராசிரியர், 85, வெங்கடாசல முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பப்படுதல்வேண்டும். சந்தா, புத்தகவிண்ணப்பம் முதலியன காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம், 22 ஏ, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பப்படுதல்வேண்டும்.

### பிரிவாற்றுமை

1912ஆம் காஞ்சிபுரத்திற் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டுக் கூட்டத்தில் தலைமை வகித்தவரும், திருவிதாங்கூர் சமஸ்தானத்து எக்ஸைஸ் கமிஷனராக இருந்தவரும், சிறந்த சிவபக்த சிகாமணியுமாகிய சைவத் திருவாளர் - த. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் 28-12-35 ல் சிவபதமடைந்த செய்தியை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். அவர்களுடைய உறவினருக்கு நமது பிரிவாற்றுமையை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

| மலர் கூ | யுவ ஆண்டு தைத் திங்கள் 1936ஆம் ஜனவரிமீ | இதழ் க |
| --- | --- | --- |

## தலைமைப் பேருரை

[உயர்திரு - சுவாமி விபுலாநந்தரவர்கள்]

(இது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாம் ஆண்டு விழாவில் 29-12-35-ல் நிகழ்த்தப்பெற்றது).

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

**யா**வருக்குந் தந்தை தாயாகிய எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் உள்ளத்திருத்தி, தம்மையடைந்தோரது இன்னல்களை நீக்கியருளும் மூத்தபிள்ளையாரது திருவடிகளைத் தொழுது, தண்டமிழ்க்குரவராகிய இளையபிள்ளையாரது பாதப்போதினைத் தலைக்கணியாக்கி, இப்பேரவையில் எழுந்தருளி யிருக்கும் பெரியோருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

162351 7L R673 211, N48


N36·9

அன்புடையீர்! இங்கு வந்திருந்து தொண்டாற்றுமாறு நீவிர் பணித்த கட்டளையினை வாழ்க்கையில் எய்திய பெரும் பயன்களுள் ஒன்றாக மதிக்கின்றேன். “ஆசையொடும் அரனடியாரடியாரை யடைந்திட்டு, அவர்கருமம் உன்கருமமாகச் செய்து, கூசிமொழிந்து அருண்ஞானக் குறியினின்று, கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே,” எனவுரைத்த அருள் வாக்கினைக் கடைப்பிடித்தொழுக முயலுவேற்கு இப்பணி உவகையினை யளிக்கின்றது. ஈசனது பழவடியாராகிய உங்களுடைய முன்னிலையிலே, மொழிபவற்றைக் கூசி மொழியவேண்டியவனாகின்றேன். அங்ஙனமாயினும், கூசாது மொழிதற்குரிய பொருளும் ஒன்று உளது. அப்பொருள் தான் அகவிருளிரிய மெய்ஞ்ஞானவொளி பரப்பும் உண்மைத் திருநெறியாகிய சைவத்திற்குச் சிறப்பியல்பாக வமைந்தபொருள். எண்ணிலா உயிர்க்கூட்டங்களை ஆண்டு நடத்தும் தனிப்பெருந் தலைவனாகிய இறைவனொருவனுளன், என்னுங் கொள்கையினையுடைய ஏனைய மதத்தினர்க்கும் ஓரோவழி ஒப்பமுடிந்த அப்பொருள் “அருள் ஞானம்” எனப்படுவது. அது அனைத்துப் பொருளினும் தலையாயது என்பது சைவ நூன் முடிபு. “அருளிற் பெரிய தகிலத்து வேண்டும், பொருளிற் றலையிலதுபோல்” என்னும் ஆன்றோர் வாக்கினை நோக்குவார்க்கு இவ்வுண்மை இனிது புலப்படுவதாகும். இருண் மலமாகிய அறியாமை நீங்கி, வீடு பேறடைதற்கு இறைவனது கருணையே வாயிலாகி நிற்கின்றது. அஃதில்லாத வழி, அறியாமை நீக்கமும் வீடுபேறெய்துதலும் இலவாமாதலின், ஆக்கமனைத்தினும் மிக்க தொன்றாகிய பேரின்ப வீட்டினை யடைவிப்பது இறைவனது பெருங்கருணைத் திறமேயென்பது முடிந்த முடிபாகின்றது. அப்பேரருட் டிறத்தின் பெற்றியினை யுணருகின்ற உணர்வே எல்லா ஞானத்தினும் சிறந்த ஞானமாகும். இஃது எய்திய வழி, அனைத்து நலனும்



எய்துவவாதலின், இதனை முரசறைந்து உலகனைத்தினுக்கு முரைப்பது சைவர் மேற் பொறுத்த கடனாகும். இத்திருத்தொண்டினைச் செய்வதற்கு யாம் ஒரு சிறிதேனும் பின்னிற்க வேண்டியதில்லை. சைவராகிய யாம் ஒருங்கு கூடு மிடத்திலெல்லாம் நமது தலைவனது பேரருட்டிறத்தின் பெற்றியினைக் கூசாது மொழிவோமாக. யாம் அவ்வருணெறி நின்று நீடு வாழ்வோமாக. அது நம்மை உய்விப்பதாக.

நமது ஆண்டவனை அவனது மெய்யடியார் பலர் “அருட்கடல்” எனப் புகழா நின்றனர். கடல் எல்லையற்ற நீர்மையது. அவ்வண்ணமே அருளும் எல்லையற்றநீர்மையது. அருளினாலே இவ்வுலகிடை யுதித்தோம். அருளினாலே உயிர்வாழுகின்றோம். அருளே நம்மை நற்கதியிற் புகுத்துவது. தாயாகி நம்மை வளர்த்தெடுத்துத், தந்தையென வந்து பெறுதற்கரிய சால்பினை நல்கிக், குருவடிவாகி இருளினையகற்றித், துணைவனெனவும் துணைவியெனவும், இன்னகைப் புதல்வரெனவும், புதல்வியரெனவும், அன்புடை மாமனெனவும் மாமியெனவும், துய்ப்பனவாகவும் தோற்றி நம்மை நல்வழிப்படுத்துவது அப்பேரருளேயாம்.

இவ்வுண்மையினை யறியா மாந்தர் உடல் வலியும் மனவலியுங்குன்றித், தாயினையிழந்த சேயினைப்போல அல்லலுறுவர். இதனை யுணர்ந்தோர் வேண்டிய பொருளனைத்தினையும்பெற்று இவ்வுலகில் வாழும்பொழுதே இன்ப நிலையினை எய்துவர். “ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆளுவர் காண், என்றுமே யிப்பொருளோ டேகாந்தத்துள்ளவரே” எனக் கவிவாணராகிய பாரதியார் கூறுகின்றார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த அருளினை யடைதற்குரிய வழியினைச் சைவ சாத்திரங்க ளனைத்துங் கூறுகின்றன. ஆதலினாலன்றோ அவையெல்லாம் “அருணூல்” எனவும், “அருட்பா” வெனவும், “அருட்பனுவல்” எனவும் விதந்து பாராட்டப்

பட்டன. திருவருட் செல்வராகிய பெரியார் பலர் ஆங்காங்குக் குறிப்பிட்ட சிற்சில முடிபுகளைத் தொகுத்து நோக்குவோமாக.

பண்டிதத்திறமை கருதி உலகிற் பல கலைஞானங்களையும் ஆராய்ந்து உளங் கொள்ளுவோர் ஆண்டவனது பேரருளுக்குத் தம்மைக் கொள்கலமாக்கிக் கொள்ளாதொழியினு மொழிவர். உலகரால் மதிக்கப்படுகின்ற கல்வியறிவு நிரம்பப் பெறாதவர் ஓரோவழி ஆண்டவனது அருளினாலே உண்மை ஞானமெய்தி எல்லா நலன்களுக்கு மிருப்பிடமாவர். 'ஆண்டவனது பேரருளினைப் பெறுதற்குக் கல்வியினுந் தியானஞ் சிறந்தது, நியாயவாதத்தினும் நெடுமூச்சுச் சிறந்தது, கவிமாரியினும் கண்ணீர்மாரி சிறந்தது, நூலாராய்ச்சியினும் வழிபாடு சிறந்தது, மண்ணோக்கிய சிந்தையினும் வானோக்கிய சிந்தை சிறந்தது' என உண்மையறிஞர் உரையாநிற்பர்.

"சுருதி சிந்தனை பாவனைதரிசனை கருதி யுய்த்து மயக்கங் கடிக" என்றமையால் அருட்டிறத்தின் பெற்றியினை உரைக்கும் நூற் பொருளினைக் கேட்டல் இன்றியமையாதது. ஆயினும் அது முதற் படியேயாம். சிந்தனையும் பாவனையும் தரிசனையும் அதன்பின் எய்தற்பாலன. யாமெதனைச் சிந்திக்கின்றோமோ அதுவாகின்றோம் என்பது உண்மை நூலுக்கும் உலகர் நூலுக்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். உள்ளத்திலே உதிக்கின்ற எண்ணங்கள் பலவற்றுள்ளும் ஒன்று நமக்குச் சிறப்புடையதாகத் தோற்றியவழி, நாம் அதனை மீட்டு மீட்டும் மனத்தின் முன்னிலையிற் கொண்டுவந்து நிறுத்தி, அதனது பூரணவியல்பினை அளவிட முயலுகின்றோம்; அம்முயற்சி தியானமாகின்றது. தியானத்தினாலே அவ்வெண்ணம் தெளிவடையத் தியானிக்கும் உள்ளமானது உவகைமேவிய வியப்பினாலே, தன் செயலிழந்து தியானிக்கும் பொருளினோடு ஒன்றுபட்டு நிற்கும். இந்நிலையே பாவனையெனப்படுவது. மனத்தின்



செயல்களுள்ளே சாதாரண எண்ணமானது தெளிந்த இலக்கின்றிச் சஞ்சரித்து, ஒன்றினை விடுத்து மற்றொன்றினைப் பற்றி அலைவுறா நிற்கும். சிந்தனையானது குறித்த இலக்கினையுடையதாதலின், ஒன்றினையே பற்றி அதனை ஆழ்ந்து ஆராயும் ஆற்றலாக வெளிப்படும். இனிப் பாவனைநிலையிலே சிந்திக்கப்பட்ட பொருளின் சிறப்பியல்பு உள்ளத்தினை நிரப்புமாதலின், அதனால் உவகையும் வியப்புமெய்திய உள்ளமானது எப்பொருளினும் மெய்ப்பொருளாகத் தோன்றும் செம்பொருளினைப்பற்றிய காரணத்தினாலே தன் செயலிழந்துபரவசப்பட்டு நிற்கும். "சாந்தம், சிவம், சுந்தரம், அத்வைதம்" எனப் போற்றப்பட்ட செம்பொருள் தன்னியல்பிலே நிறைந்த அறிவும், நிறைந்த அழகும், நிறைந்த உவகையும் மேவியதாதலின், அதனைப்பற்றிய உள்ளம் மலர்ச்சியும் உயர்வும்பெற்று நிற்பது பொருத்தமேயாம்.

"கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி" என்றமையினால், உரையும் உணர்வும் கடந்து நின்ற உண்மைப் பொருள் உருவோடு தோற்றுமிடத்து எய்தும் உரு அருளுருவேயா மென்பது பெறப்படுகின்றது. "அன்புஞ் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்" என்றற்றொடக்கத்து உறுதி மொழியும் இதனையே புலப்படுத்துகின்றது. ஆண்டவனது அருள்வடிவத்தைச் சிந்தனை செய்யப் புகுவோர் ஆங்கவற்குந் தமக்குமிடையே யாதாயினுமோர் அன்புத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமெனப் பத்தியோக நூல்கள் உரையாநிற்கும். பரந்த இஞ்ஞாலத்தினையும் உயிர் வர்க்கங்களையும், வானகத்து மிளிரும் திங்களையும், ஞாயிற்றினையும், விண்மீன்களையும் உயிர் வாழ்க்கையில் நிகழும் இன்பத் துன்பங்களையும் உளங்கொண் டாராய்ந்த ஆண்மகனொருவன் இவை தம்மை ஆக்கியும் அழித்துங் காத்தும் வருகின்ற தலைவனுளன் எனக் கேள்வியுற்றஞான்று, அத்தலைவன்பால்

அச்சத்தோடு கூடிய அன்பினைச் செலுத்துவான். இந்நிலையிலே ஆண்டானடிமைத் தொடர்பு ஏற்படுகின்றது. தலைவனிடத்துள்ள அன்பு பெருகுதலினாலே அச்சம் ஒருபுடையகல, முன்னர்ச் சேய்மைக்கண் ஆண்டவனாகத் தோன்றிய அருள்வடிவம் பின்னர் அணிமைக்கண் அன்பு நிறைந்த தாயாகவோ, தந்தையாகவோ காணப்படும். முன்னர்த் தன்னை அடிமையாகக் கண்டோன் பின்னர்த் தான் ஆண்டவனுடைய புதல்வருளொருவனென வறிவான். இந்நிலையே புத்திரமார்க்கமென நூல்களாற் கூறப்படுவது. அச்சம் முற்றிலுமகல அன்பு தனித்து நிற்கும் நிலையே தோழநெறியெனப்படும் சகமார்க்கமாகும். மூன்று நிலையும் அருளுருவத்தைப் பற்றி நிற்பனவேயாம்.

ஆண்டவனது அருட்கருணையில்லாதவழி நமக்கு உய்யுநெறியில்லை. கருணையினை நாம் அவாவி நிற்கின்றோம்; ஆதலினாலே நம்மாலியன்றவரை பிறவுயிர்கள்மீது கருணை பாராட்ட வேண்டியவராகின்றோம். அத்தகைய கருணையினைத் திருவள்ளுவப் பயன் செல்வத்துளொன்றாக வைத்து "அருட்செல்வம்" எனக் குறியிட்டு வழங்கும். நாம் காதலிக்கின்ற தலைவனுக்கு இயல்பாக வமைந்த அருள் விளக்கம் நம்மிடத்து எத்துணையாகக் காணப்படுகின்றதோ, அத்துணைக்கு நாம் நமது தலைவனை அணுகி நிற்பவராவோமாதலினாலே, அருட்செல்வத்தினைப் பெருக்குவது சைவராகிய நமக்கு இன்றியமையாத சாதனமாயிற்று.

அருளொழுக்கம் பெருகியவழி, வெறுப்பு, வெகுளி என்னுமிவை தாமே யகல்வனவாம். அருணிறைந்த உள்ளத்தினுள்ளே அச்சம், கவலை, பொறாமை, அழுகை, துன்பம், மிடி, லோபம் என்பன ஒருசிறிதும் புகமாட்டா. அருளினால் அகன்ற சிந்தையினை யுடையோரே பெரியோரெனப்படுவார். இவரைக் கண்டோரனைவரும் இவரது நட்பினை விழைந்து



நிற்பார். உலகனைத்தும் இவர்க்குச் சுற்றமாகும். புகழ், பொருள், நட்பு ஆகிய மூன்றும் இவர்தம்மை வந்தடைவவாதலின், இவரது வாழ்க்கை பல திறத்திலும் நிறைவு பெற்றுத் தோன்றும்.

அருண்ஞானக் குறியினிற்போர் தம்முடைய சிறுமையையும் தலைவனுடைய பெருமையையும் ஒருங்குசேர வைத்துச் சிந்திக்கவேண்டும். தம்முடைய சிறுமையை மாத்திரம் தனித்து நினைத்தல் கவலை, துன்பம், மிடியென்னுமிவற்றிற்கு உள்ளத்தைப் புகலிடமாக்குமாதலின், அது செய்யத்தகாதென்றறிதல்வேண்டும். தலைவனுடைய பெருமையை நினைவு கூருதலினாலே, அவனை யாம் சார்ந்துநின்ற சார்புபற்றி நமது உள்ளத்திலே ஒரு பெருமிதந் தோன்றும். அப் பெருமிதவுணர்வு நமக்கு எல்லாச் செல்வத்தையும் தரவல்லது. "எங்குமியா மொருவர்க்கும் எளியோ மல்லோம், யாவர்க்கும் மேலானோம் என்றிறுமாப் பெய்தித், திங்கண் முடி யாரடியா ரடியோ மென்று, திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே," என்றபடி "எங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்" என்னும் பெருமிதவுணர்வு தலைவனது சார்பினால் நமக்கு ஏற்படுவது; இது இம்மை மறுமைச் சுகம் இரண்டினையுந் தருவது. தனித்த மக்களுக்கு மாத்திரமல்ல, மக்கட் கூட்டத்தினர்க்கும் இவ்வுணர்வு உயர்வினைத் தருவதென்பதற்கு உலக சரித்திரமே சாட்சியாகும். ஆளுடையபிள்ளையாரும் ஆளுடையவரசும் உலகிலே திருவவதாரஞ் செய்த காலத்திற்கு முந்நூறாண்டுகளுக்கு முன்பு தொட்டு அக்காலம்வரையும் அந்நிய மன்னரது ஆட்சியுட்பட்டு வலியிழந்துகிடந்த தமிழ்நாடு அருட்செல்வராகிய அவ்விருவரது வருகையினாலே வலிபெற் றெழுந்த தன்றோ? அக்காலம் முதல் அறுநூறாண்டுகளுக்குத் தமிழ் மக்கள் பெரும் புகழ்பெற்று விளங்கினரன்றோ? ஈழத்திலும், காழ

கத்தினும், கங்கைக்கரையினும் தமிழ்மன்னர் பெற்ற வெற்றி எங்கிருந் தெழுந்தது? தமிழ்மன்னரது வலிமைக்கு ஊற்று யாது? இத்தகைய வினாக்களை யாம் ஊன்றி யாராய்வோமெனின், "நாமார்க்குங் குடியல்லோம்" என நாவரசருரைத்த மகா மந்திரமே தமிழ் மன்னரது வலிமைக்குக் காரணமாயிற்று என அறிவோம். நாவரசர் தமிழ் நாட்டிலிருந்த அக்காலத்திலே மேற்குக் கடலுக்கு வடகோடியிற் கிடந்த அராபி நாட்டிலே, ஆண்டவனுடைய திருத் தூதரொருவர் அவதரித்தார். அவர் போதித்த மார்க்கத்திலே "இறைவ னொருவனே இறைவன்" என்னும் சிறந்த போதனை அமைந்துள்ளது. இப்போதனையினால் வலிமை பெற்ற அந்நாட்டு மக்கள் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் பாகத்தையும் ஆசியாக் கண்டத்தின் ஒரு பாகத்தினையும் தம்மாணையுள் வைத்து ஆட்சி புரிந்தனரன்றே? அருண் ஞானத்தினா லெய்தும் வலிமை யித்தகையதென வுணர்ந்தாம்; அதனை யடைதற்குரிய சாதனை யிதுவென ஆராயப் புகுவாம்.

"சந்ததமும் எனது செயல் நினது செயல், யானெனும் தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன், வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே" என அருண் ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் கூறிய உறுதிமொழி அவ்வருண் ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையினை நமக்கு உணர்த்துகின்றது. "தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கின், நாதனவ னுடலுயிரா யுண்டுறங்கி நடந்து, நானாபோகங்களையுந் தானாகச் செய்து, பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்" என்னும் உண்மைநெறி விளக்கமும் மேற்குறித்த சாதனையினையே விளக்குகின்றது. "அவனிவனாய் நின்றமுறை யேகனாகி, யரன்பணியி னின்றிடவு மகலுங்குற்றம்," என்னும் அருண்மொழியும் இவ்



வுண்மையினை அறிவுறுத்துகின்றது. "தவமொன்று மில்லையொரு சாதனையுமில்லையடா, சிவமொன்றே யுள்ளதெனச் சிந்தைசெய்தாற் போதுமடா," எனவும் "சந்ததமும் எங்கு மெல்லாந் தானாகி நின்றசிவம், வந்தெனுளே பாயுதென்று வாய் சொன்னாற் போதுமடா," எனவும், "நித்தசிவ வெள்ளமென்னுள் வீழ்ந்துநிரம் புதென்றான், சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தையொன்றே போதுமடா" எனவும் அநுபவ ஞானியுங் கவிவாணருமாகிய பாரதியார் கூறுகின்றார்.

பண்டைப் பெருமையையிழந்து கிடந்த இப்பாரத நாடு இந்நாளினும் விளக்கமுறும்படி உண்மை நெறியினை உலகிற் குணர்த்தத் திருவவதாரஞ்செய்த அருட்பெருங் குரவராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் உண்மைப்பக்தனது வாய்மொழியாக வெளியிட் டுரைத்த வாக்கியம் ஈண்டு நினைவு கூருதற்குரியது. அதுவருமாறு: "தலைவ! அடியேன் ஓர் இயந்திரம்; நீர் இயந்திரத்தைச் செலுத்துபவர்; அடியேன் ஒரு மனை; நீர் அம்மனையில் வசிப்பவர்; அடியேன் ஒருதேர்; நீர் அத்தேரினைச் செலுத்தும் சாரதி; தேவரீர் அடியேனை எவ்வாறு பேசுவிக்கின்றீரோ அவ்வாறு பேசுகிறேன்; எவ்வண்ணம் நடத்துகின்றீரோ, அவ்வண்ணம் நடக்கின்றேன்; எதனைச் செய்விக்கின்றீரோ அதனை யான் செய்கின்றேன்." இத்தகைய உணர்வு மேலிட்டுக் குறையிரந்து நிற்போமெனின், அருளாகிய நம்மன்னை வெளிப்பட்டு நமது கரத்தினைப்பற்றி வழிநடத்தி நமக்கு வேண்டுவ புரிவாளென்பதற்கு ஐயப்பாடில்லை. "சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன், கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன், மணிவார்த்தைக் காக்கி ஐம் புலன்களார, வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை, மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத் தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித், தனிச்சுடரே யிரண்டு

யிலித் தமியனேற்கே" என அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்தகையார் கூறிய திருவாசகமும் அருண் ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனையைக் குறித்து நிற்கின்றது.

அருள்வழி நின்று, இறைபணி புரிவோர்க்கு இவ்வுலகமே இன்பவுலகாகும். யாவனொருவன் அன்பு மேலீட்டினாலே தன்னை முற்றிலும் இறைபணிக்கு உரிமையாக்குகின்றானோ அவனுடைய இதயம் இறைவனுக்கு உகந்த கோயிலாகின்றது. காதலெய்திய உலக மாந்தர் அக்காதல் வயத்தினால் அன்னையையும் அத்தனையும் உடன் பிறந்தாரையும் மறந்திருப்பதை யாங் கண்டிருக்கின்றோமல்லவா? அவ்வண்ணமே தனிப்பெருந் தலைவனாகிய இறைவனுடைய பேரருளுக்கு இலக்காயினோரும் உலகத்து மயலினைத் தினையும் மறந்து இடைவிடாது அவனருளிலே யீடுபட்டிருப்பர்; அரசனுழைச் சென்ற விருந்தினர் போலச் சொல்லுதற்கரிய உவகை மேவியிருப்பர். ஒரோவழி மணமகனது முன்னிலையில் இருக்கும் மணமகளைப்போல இவர் இன்பவெறி நிரம்பப் பெற்றவராகக் காணப்படுவார்; உலகத் துன்பங்களைக் கண்டு உளம் வருந்தி மக்கட் கூட்ட மனைத்தினையும் உய்யக்கொள்ள வேண்டுமென இறைவனை வேண்டி நிற்பதும் இவர்க்கு இயல்பாகும். இவரது வேண்டுகோள் இறைவனது திருச்செவியினைச் சென்று சேரும்.

அன்புடையீர்! "அருள் ஞானம்" என்னும் அரும் பெரும் பொருளினைக் குறித்து ஒரு சில முடிபுகளை இப்பேரவையி லெடுத்துக் கூறினேன். நான் வழுவிய விடத்தினை வழு நீக்கியும் குறைவுற்ற விடத்தினை நிறைவாக்கியும் இவ்வுரையினை ஏற்றுக் கொள்வீர்களென்னுந் துணிவு எனக்கு உளது. "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து" உள்ளமானது எந்தத் தலைவனை நாடிற்றோ, அந்தத்



தலைவனது அணிமையிலிருக்கும் அருமை நோக்கியே தில்லைத் திருப்பதியிலே சில காலம் வசித்தேன். பின்பு ஈழத்திற்குப் போக நேர்ந்ததெனினும் "உடலங்கே, உயிரிங்கே" என நின்றமையாற் போலும் இடையிடையே தாய் நாட்டினைத் தரிசிக்கும் பாக்கியத்தினை ஆண்டவன் கூட்டி வைக்கின்றான். அவனது பேரருள் நம்மனைவருக்கும் என்றும் உளதாகுக.

## சைவ இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[உயர்திரு-G. கல்யாணம் பிள்ளையவர்கள், பி.ஏ., டிப்.எக்.]

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

**சிவநேயச் செல்வர்களே!**

திருவருள் துணைகொண்டு ஈண்டு குழுமியுள்ளது ஏழாவது சைவ இளைஞர் மகாநாடாகும். இதற்குத் தலைமை வகிக்குமாறு சமாஜத்தார் "வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைக்கு" யான் எஞ்ஞான்றும் கடமைப் பட்டுள்ளேன். அடியேன் தலைமைவகிக்கத் தகுதியொன்று மில்லேன். அதற்குப் போதிய அறிவும் என்மாட்டில்லை; ஆற்றலும் இல்லை; ஆராய்ச்சியுமில்லை. ஆயினும், சமாஜத்தார் என்மீதுள்ள அன்பின் காரணத்தால் இட்ட ஆணையை மறுத்தற்கஞ்சி இப்பணியை மேற்கொண்டேன். "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்ட" அன்னவர்க்கு என் தாழ்மையான வணக்கம் உரித்தாகுக. இத்தொண்டாற்றுங்கால் நிகழும் குற்றங் குறைகளைப் பொறுத்துக் கொள்வீர்களாக.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாம் ஆண்டு விழா இத்திருவருணைப் பெரும்பதியில் இப்பொழுது நடை பெறுகிறது. அதைச் சார்ந்தே இச்சைவ இளைஞர் மகா நாடும் கூடியிருக்கிறது. நடுநிலையாளர் மல்கும் இந்நடுநாட்டின் கண்ணேயுள்ளது இத்தலம். நினைக்க முத்தி தருவது அண்ணாமலை என்பர். பஞ்சபூதத் தலங்களில் ஒன்ருகவும், ஆருதாரத் தலங்களில் ஒன்ருகவும் இருக்கும் பெற்றி வாய்ந் தது. சோணசைலம், சோணகிரி, அருணசலம், அருணகிரி, திருவருணை, திருவண்ணாமலை, கௌரிநகரம், தேசு நகரம், சிவலோக நகரம், முத்தி நகரம், சுத்த நகரம், ஞான நகரம், தென் கயிலாயம், உயிர்வலிகாந்தம் முதலிய பல பெயர்களைக் கொண்டதாகும். அருணகிரி யென்ருல் சிவந்த மலையென்று பொருள், இத்தொல் பதியைப்பற்றிக் கூறும் நூல்கள் பல பல ; ஈண்டுறைந்த பெரியார் பலர். இது அப்பர் சம்பந்தர் இவர்களின் அருட்பாடல்களைப் பெற்றது. மார்கழித் திங்க ளில் வைகறையில் நீராடச் செல்லும் மங்கையர்க்காக மணி வாசகப் பெருந்தகையார் திருவெம்பாவை பாடியருளியது இவ்விடத்தேயன்ரே! சிந்தைக்கினிய செவிக்கினிய தீஞ் சுவை ததும்பும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இவண் வதிந்தனரல்லவா ! இன்னும் குகை நமச்சிவாயர், குருநமச்சி வாயர் என்ற பெரியார் இங்கிருந்து பாமாலைகள் யாத்தனரே! "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை, அதிற் சார்சிவமாம் தெய்வத்தின் மேற்றெய்வ மில்"லென்று சாற்றிய சைவ எல்லப்ப நாவலர் அருணசல புராணம் இயற்றினர். அவ ருடைய அருணைக் கலம்பகம் சிறந்த கலம்பக நூல்களில் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே.

இத்தலத்திலுள்ள திருக்கோயிலில் பல தமிழ்க் கல் வெட்டுகளும்,கிரந்தக்கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன. பலவகைச்செய்திகளுள்ள கல்வெட்டுகள்நிறைந்தகோயில்கள்



சிலவற்றில் இது ஒன்றெனக் கூறலாம். இக்கல்வெட்டுகளில் சரித்திரம், சமயம், தமிழர் பழக்க வழக்கங்கள் முதலியவை களைப்பற்றிய குறிப்புகள் மிளிர்கின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கூறுவல். கோயில் திருவிளக்குகளுக்கும், பூசை நைமித்திகங்களுக்கும் நிலங்களும், பொன்னும், ஆடுகளும், பசுக்களும், எருதுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. பாணர் தலைவனொருவன் கோயிலைப் புதுப்பித்தான் ; ஒருவன் குளத் தைச் சீர்ப்படுத்தினன் ; கோயிலில் வேதம் ஓதுவோர்க்கு நிலங்களை விட்டான் ஒருவன் ; மான் வேட்டையில் கைக் கணை தப்பி ஒரு மனிதன்மேற் பட்டு அவனிறக்க, அதற்குக் கழுவாயாகக் கோயிலில் திருவிளக்கேற்றி வைக்கப் பசுக்களை யும் எருதுகளையும் ஈந்தான் ஒருவன் ; வணிகர்கள் விழாவிற் குக் கொடிச்சீலைகள் கொடுப்பதாக வாக்குறுதி செய்தனர் ; ஒரு கல்வெட்டு நில விற்பனையைப்பற்றிக் கூறும் ; நில பரி வர்த்தனையைப்பற்றி யுரைக்கும் வேறொன்று ; வரிகளைப் பயன்படுத்தும் முறைகளைப் பகரும் மற்றொன்று ; கோயில் நிலங்களின் வரிகளைத் தள்ளுகடை (Remission) செய்த தைக் குறிக்கும் இன்னுமொன்று ; மாடவீதிகளிலுள்ள மனைகளை விற்பதற்குச் சட்டங்களை விதிக்கும் மற்று மொன்று ; கோயிலுக்கு நற்காரியங்கள் செய்த இருவர்க்கு நிலம் அளிக்கப்பட்டதைச் சொல்லும் மேலும் ஒன்று ; விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயன் வெற்றியைப் புக ழும் இனியும் ஒன்று. இவைகளில் அரசர், அரசியர், குறுநில மன்னர், வணிகர் முதலியோர் பலருடைய பெயர்கள் இருக் கின்றன. சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், இராஷ்டிர கூடர், ஹொய்சளர், துளுவர் முதலிய அரசர்கள் பெயர்கள் மல்கியிருக்கின்றன. அன்பரீர் ! சிறப்பாக ஒரு கல்வெட்டைப் பற்றி இச்சைவக் கூட்டத்தில் சொல்லாமல் விடுவதற் கில்லை. அஃது சிவஞானபோத அமுதை வழங்கிய வள்ளல்

அதன் கொள்கைகளை நன்றாய் அறிந்து கொள்ளவில்லை; அதைப் பரப்புவதற்கும், புகட்டுவதற்கும் ஏற்ற குருமார்கள் அநேகர் இல்லை; தமிழ் மொழியை நன்றாய் ஓதவில்லை; சமய நூல்களான பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சாத்திரங்களையும் நன்கு கற்கவில்லை; சமய வரம்பிற்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை; பெரியார் கூற்றுக்களில் நம்பிக்கை வைப்பதில்லை. ஆதலின் நம்போன்ற இளைஞர் சைவசமயத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து பிறருக்கு எடுத்துக் காட்டி அது பண்டைய நிலையை அடையுமாறு வேண்டிய பணிகளை யாற்றக் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் என்றால் தற்காலத்தில் சுமார் முப்பது ஆண்டு கட்டுப்பட்ட வயதினர்களையே கொள்கிறார்கள். ஆனால் பழந் தமிழ்நூலான திருமுருகாற்றுப்படையில் "அறுநான்கு இரட்டிய இளமைநல் யாண்டு" என்று கூறப்பட்டிருத்தலால் நாற்பத்தெட்டு வயதே இளைஞர்க்கான வரம்பாக இருந்தது. நமது சமயத்திற்கும் இளைஞர்க்கும் நெருங்கிய தொடர்புண்டு. தமிழ்த்தெய்வமான முருகன் என்றும் இளையோன். காழிச் செம்மலும், ஆரூரரும், மணிவாசகரும் இளைஞர்தானே! அப்பரின் அற்புதச் செயல்களையும், வீர மொழிகளையும் நோக்குழி அவரை இளைஞரென்று கூறாமல் வேறென்னவென்று கூறுவது? அவருடைய பக்குவநிலையை யறிய ஆண்டவன் தேவமாதர்களை அவர்முன் அனுப்பியதைக் கவனித்தால் அவரை இளைஞர் என்றே கருதினார்போலும். நம்முடைய சித்தாந்த ஞானத்தலைவர் மெய்கண்டார் இளவல் தானே! "தந்தை தாளொடும் பிறவித் தாளெறிந்த" சண்டியடிகளும், "நாளாறில் கண்ணிடந்தப்பிய" கண்ணப்பரும் இளைஞர்களன்றோ! இளஞ்செம்மல்கள் பாதுகாத்த, பரப்பிய நம் சமயத்தைத் தற்கால இளைஞராகிய யாம் போற்றுகிறோமில்லை; புறக்கணிக்கிறோம். சகோதரர்களே! இனியேனும்



காலந்தாழ்க்காது சமயவளர்ச்சியில் ஊக்கம் கொள்வீர்களாக. சமய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருக்கும் இடையூறுகளைக் களைந்தெறிய முயல்வீர்களாக.

செந்தமிழ்ச் செல்வர்காள்! நம்முடைய நாட்டில் தாய் மொழிப் பயிற்சி குன்றிவருகிறது. அமிழ்தினுமினிய தமிழ் மொழியை மாணவர்கள் அறவே வெறுக்கின்றனர். சிவபெருமானும், முருகனும் ஆய்ந்த தமிழை, சேரன்செங்குட்டுவன் போன்ற சைவவேந்தர்கள் போற்றிய தமிழை, சைவப் புலவர்கள் வளர்த்த தமிழை நாம் புறக்கணித்தல் எக்காரணம் பற்றியோ! சிறந்த தமிழ் இலக்கியங்களெல்லாம் சைவச் சார்புடையனவே. தமிழ்மொழியை நன்றாய்ப் பயின்றால்தான் சைவசமய நூல்களை நன்றாக உணர்ந்து கொள்ளமுடியும். ஆதலின் நான் உங்களைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்றாய்ப் பயிலும்படி வேண்டிக்கொள்கிறேன். அப்பொழுது தான் நம் சைவத்திறம் தழைத்தோங்கும்.

சிவநெறிச் செம்மல்களே! ஆலய வழிபாட்டைப்பற்றி ஈண்டு சில சொல்லுகிறேன். அதன் தத்துவங்களைப்பற்றிப் பேசி உங்கள் அரிய காலத்தைப் போக்க விரும்புகிறேனில்லை. அதன் அவசியத்தைப்பற்றி மாத்திரம் ஒருசிறிது கூறி விடுக்கின்றேன். கிறித்தவர் ஞாயிறுதோறும் குறித்த ஓர் இடத்திற்குச் சென்று தெய்வத்தை வணங்குகின்றனர்; மகம்மதியர் பள்ளிவாயில்களில் வேளைதோறும் தவறாது சென்று தொழுகின்றனர்; மற்ற சமயத்தார் அவரவர்கள் சமயத்தில் விதித்தபடி வழிபடுகின்றனர். ஆனால் நம் சைவ சமயத்தார் மாத்திரம் கோயில் வழிபாடு முறையாகச் செய்கிறதில்லை. சில இளைஞர்கள் 'கோயிலுக்குப் போகவேண்டியதில்லை; இருந்த இடத்திலேயே இறைவனை வணங்கலாம்' என்று கூறுகின்றனர். "கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா" என்றும், "நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம்

மெய்கண்டாரைப் பற்றிக் குறிக்கிறது. திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் இக்கோயிலில் நிறுவிய ஒரு மடத்திற்கு நிலம் விடப்பட்டிருப்பதைக் கூறுகிறது. இது மூன்றும் இராஜராஜ சோழன் காலத்துக் (கி.பி. 1216-1248) கல்வெட்டு. மெய்கண்டார் கால ஆராய்ச்சி செய்குனர்க்கு இது உதவி புரியும்.

இப்பதியில் கொண்டாடப்படும் விழாக்களில் மிகச் சிறந்தது கார்த்திகைத் தீப விழாவாகும். இது அயனும் மாலும் அறியாவண்ணம் பண்டு இறைவன் அழற்பிழம்பாய் நின்ற உண்மையை விளக்கிக் காட்டும். இதைப் பற்றித் திருமுறைகளில் எண்ணிறந்த இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது. பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் "வேலிநோக்கிய விளக்கு நிலையும்" என்பதற்கு நச்சினார்க்கினியர், "கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளின் ஏற்றிய விளக்கு" என்று உரை கூறினர். சமண நூலாகிய சிந்தாமணியிலும் "கார்த்திகை விளக்கிட்டன்ன" என்றும், "நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலை நாள் விளக்கு" என்று கார் நாற்பதிலும், "கார்த்திகைச் சாற்றிற் கழி விளக்கு" என்று களவழி நாற்பதிலும் கூறப்பட்டிருக்கிறது. "தேச விளக்கெலாம் ஆனாய் நீயே" என்பர் அப்பர் சுவாமிகளும். "குன்றிலிட்ட தீபம்", "மலை விளக்கு" இவைகள் பழமொழிகளன்றோ! இவைகளால் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபத்தின் தொன்மையும் பெருமையும் விளங்க வில்லையா?

சைவத் தோழர்களே! இனி, நம்முடைய சைவ சமயத்தைப் பற்றியும், சைவ இளைஞரைப் பற்றியும் ஒரு சிறிது கூறுகிறேன். உலகிடை மக்கள் தோன்றிய ஞான்றே சமயம் ஏற்பட்டிருக்க வேண்டும். மக்களை விலங்கினின்று பிரிப்பது சமய உணர்ச்சி தான். மனிதனுக்கு சமயம் இன்றியமையாதது. அது ஒன்றுதான் உயிர்க்கு இன்பம் தருவது. மற்



காலந்தாழ்க்காது சமயவளர்ச்சியில் ஊக்கம் கொள்வீர்களாக. சமய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருக்கும் இடையூறுகளைக் களைந்தெறிய முயல்வீர்களாக.

செந்தமிழ்ச் செல்வர்காள்! நம்முடைய நாட்டில் தாய் மொழிப் பயிற்சி குன்றிவருகிறது. அமிழ்தினுமினிய தமிழ் மொழியை மாணவர்கள் அறவே வெறுக்கின்றனர். சிவபெருமானும், முருகனும் ஆய்ந்த தமிழை, சேரன்செங்குட்டுவன் போன்ற சைவவேந்தர்கள் போற்றிய தமிழை, சைவப் புலவர்கள் வளர்த்த தமிழை நாம் புறக்கணித்தல் எக்காரணம் பற்றியோ! சிறந்த தமிழ் இலக்கியங்களெல்லாம் சைவச் சார்புடையனவே. தமிழ்மொழியை நன்றாய்ப் பயின்றால்தான் சைவசமய நூல்களை நன்றாக உணர்ந்து கொள்ளமுடியும். ஆதலின் நான் உங்களைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்றாய்ப் பயிலும்படி வேண்டிக்கொள்கிறேன். அப்பொழுது தான் நம் சைவத்திறம் தழைத்தோங்கும்.

சிவநெறிச் செம்மல்களே! ஆலய வழிபாட்டைப்பற்றி ஈண்டு சில சொல்லுகிறேன். அதன் தத்துவங்களைப்பற்றிப் பேசி உங்கள் அரிய காலத்தைப் போக்க விரும்புகிறேனில்லை. அதன் அவசியத்தைப்பற்றி மாத்திரம் ஒருசிறிது கூறி விடுக்கின்றேன். கிறித்தவர் ஞாயிறுதோறும் குறித்த ஓர் இடத்திற்குச் சென்று தெய்வத்தை வணங்குகின்றனர்; மகம்மதியர் பள்ளிவாயில்களில் வேளைதோறும் தவறாது சென்று தொழுகின்றனர்; மற்ற சமயத்தார் அவரவர்கள் சமயத்தில் விதித்தபடி வழிபடுகின்றனர். ஆனால் நம் சைவ சமயத்தார் மாத்திரம் கோயில் வழிபாடு முறையாகச் செய்கிறதில்லை. சில இளைஞர்கள் 'கோயிலுக்குப் போகவேண்டியதில்லை; இருந்த இடத்திலேயே இறைவனை வணங்கலாம்' என்று கூறுகின்றனர். "கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா" என்றும், "நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம்

சாத்தியே சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்திர
மேதடா, நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்,
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ'' என்றும்
சொல்லப்பட்ட சித்தர் வாக்குகளை அவர்தம் கூற்றுக்கு அர
ணாக எடுத்துக்காட்டுகின்றனர். அவைகள் எந்நிலையில் உள்ள
வர்க்குச் சொல்லப்பட்டதென்பதை அவர்கள் ஓர்கிலார்
போலும். ஞானியர்க்கன்றோ அவை பொருந்தும். பெரிய
ஞானியர்களான நால்வர்களும், நாயன்மார்களும், பட்டினத்
தடிகள் முதலியோர்களும் அநேகங் கோயில்களுக்குச்
சென்று வழிபட்டு அருட்பாடல்களைப் பாடியிருக்கின்றன
ரன்றோ! அது எற்றுக்கு? பொய்மாயப் பிறவியெனும் சுழிப்
பட்டுழலும் நாம் பின்பற்றி உய்யும் வண்ணம் அன்றோ அவர்
கள் வழிகாட்டியிருக்கின்றனர். இவ்வூர்த் தேவாரத்தில் ''முந்
திச் சென்று முப்போதும் வணங்குமின்'' என்று கூறுகிறார்
அப்பர் மூர்த்திகள். அப்படிச் செய்தலால் ''பறையும் நாம்
செய்த பாவங்கள்''; ''விண்டு போகும்நம் மேலை வினைகள்'';
''ஓடிப்போகும்நம துள்ள வினைகள்''; ''நல்லவாயின நம்மை
யடையும்''. ஆதலின் இளஞ்சைவச் செல்வர்களே! வாரத்
துக்கு ஒரு முறையாவது திருக்கோயில் வழிபாடு செய்யுங்
கள். அப்பொழுதுதான் நம்முடைய மனம் ஒரு வழிப்படும்.
அதன் மேல் சைவத்தின் மோலியாகிய மோன நிலையையும்
எட்டக்கூடும்.

இங்கு தலயாத்திரையின் அவசியத்தைப் பற்றிக் கூறா
மல் இருக்க முடியவில்லை. தற்சமயம் இருப்புப்பாதைக் கழ
கத்தார் மலிவான பிரயாணச் சீட்டுகள் ஏற்படுத்தியிருக்கின்
றனர். அவைகளை வாங்கித் தலயாத்திரைக்குப் பயன்படுத்
திக் கொள்ளலாம். மற்றொரு செய்தியையும் ஈண்டுக் குறிக்க
வேண்டியிருக்கிறது. அதென்னவெனின், நாம் சைவப் பெரி
யார் பிறப்பிடங்களுக்குச் சென்று வழிபடுவதில்லை யென்



பதே. அவர்கள் திருநட்சத்திரங்களில் விழாக்கள் கொண்
டாடுவதில்லை; அவர்கள் வரலாற்றைப் பற்றியாதல், அவர்
கள் நூல்களைப் பற்றியாதல் சொற்பொழிவுகள் செய்வ
தில்லை. இங்குள்ளவர்களில், 'பூழியர்கோன் வெப்பொழித்த'
காழியர்கோன் பதியைக் கண்டவர்கள் எத்தனை பேர்? 'ஆழி
மிசைக் கல்மிதப்பின் அணைந்தபிரான்' அவதரித்த இடத்தை
அண்மினோர் எத்தனைபேர்? முதலையொரு மதலைதரப் பாடிய
ஆரூரர் பிறந்த விடத்திற்குப் போயினவர் எத்தனை பேர்?
"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்
கண்டார்'' பிறப்பிடத்தை மேவியோர் எத்தனை பேர்?
'தெய்வ மணக்கும் செய்யுள்' தீட்டிய சேக்கிழாரின் குன்றத்
தூரைக் குறுகியவர் எத்தனை பேர்? சகோதரர்களே! குறைவு,
குறைவாக இருக்குமென்றே கூறுவேன். ஆங்கில மகா கவி
சேகப்பிரியர் (Shakespeare) பிறந்து, உறைந்த பதியைக்
காண ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் செல்
கின்றனர் என்ற செய்தியை நாம் பத்திரிகைகள் வாயிலாக
அறிகிறோமல்லவா? அப்படியிருக்க நாம் மாத்திரம் வாளா
இருத்தல் என்னேயோ! சைவப்பெரியார் பிறப்பிடங்களுக்குச்
சென்று வழிபடுவதால் சமய உணர்ச்சியும், சமயப்பற்றும்
பெருகும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இளமையின்பம் பெற்றோர்களே! இனி உடலோம்புத
லைப்பற்றிச் சில சொல்ல விரும்புகிறேன். நம்நாட்டு
இளைஞர் உடலோம்புதலைக் கவனிக்கிறதில்லை. புகைச்
சுருட்டு பிடிப்பதாலும், படக்காட்சிகளில் கண்விழிப்பதா
லும், வேளை தப்பிய சிற்றுண்டிகளாலும் உடலைக் கெடுத்துக்
கொள்கின்றனர். உடம்பைப் பாதுகாத்தல் மிக்க அவசியம்.
"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்.'' உடம்புக்குள்தான்
உத்தமன் கோயில்கொண்டிருக்கிறான். உடலோம்புதலுக்
குத் தேகப் பயிற்சியும், பொருந்திய உணவும் இன்றியமை

யாதன. சைவர் என்று கூறிக்கொள்ளும் அனைவரும் சைவ உணவு கொள்ளல்வேண்டும்; புலால் உணவை அறவே தள்ள வேண்டும். உடலுக்கு உறுதி பயக்க நல்லுணவு வேண்டும் என்றேன். ஆனால் அவ்வுடலுக்கு உறுதியான உயிர்க்கு ஓர் உணவு வேண்டுமல்லவா? அது எது? "உயிர்க் குயிராய்த் தழைத்த" இறைவனே யன்றோ! "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" என்று சேந்தனார் கூறியதூஉங் காண்க. எங்கள் திருநாவுக்கரசரும்,

"மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தால்கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே"

என்றருளியிருப்பதை நோக்குங்கள்.

பேரன்புடையீர்! இதுகாறும் அருணைப்பதியின் பெருமையையும், சைவசமயத்தின் சிறப்பையும், இளைஞரின் பெற்றியையும், தமிழ்மொழியின் நிலையையும், ஆலய வழிபாட்டின் அவசியத்தையும், உடலோம்புதலின் முக்கியத்தையும் பற்றிச் சில சொன்னேன். இனியும் அதிகமாகப் பேசிக் காலத்தைக் கழிக்க எண்ணுகின்றேன் இல்லை. இளைஞர்களாகிய நாம் சமயத்திற் காற்றவேண்டிய தொண்டுகளை ஒருவாறு தொகுத்துக் கூறி என் பேச்சை முடிக்கின்றேன். அவைகளுக்குப் பொருட் செலவில்லை. ஆனால் ஊக்கம், உழைப்பு, பொறுமை என்ற மூன்றும்தான் தேவை. குறைந்தவிலையில் வெளிவரவேண்டிய சைவ நூல்கள் அநேகம் உள. அவற்றில், சைவத்தின் ஒரு கண்ணெனப் போற்றும் கந்தபுராணம் ஒன்று. அதற்குப் பாட்டு முதற்குறிப் பகராதி நாளதுவரை கிடையாது. அவ்வகராதி சேர்க்கும் பணியை ஒருவரோ அல்லது சிலரோ மேற்கொள்ளலாம்; சித்தாந்த சாத்திரங்களில்வரும் உவமான உவமேயங்களுக்கு



ஒருபட்டியல் தயாரிக்கலாம்; திருமுறைகளில் புத்தர், சமணர் இவர்களைப்பற்றிய குறிப்புகளைத் தொகுத்து வெளியிடலாம்; நாயன்மார் வரலாறுகளைச் சிறுவர் நடிக்கத்தக்க எளிய நாடக ரூபமாக இயற்றலாம்; சமாஜம் நடத்தும் சைவப்புலவர் தேர்வுகளுக்கு நூற்களைக் கற்கலாம்; அவரவர்கள் ஊருக்கு அருகிலுள்ள தலங்களைப்பற்றிச் சரித்திர, சமயக் குறிப்புகளைத் திரட்டிக் கட்டுரைகள் தீட்டலாம். இன்னோரன்ன பணிகளே சைவத்திற்காற்றும் உண்மைப்பணிகள் என்று யான் கூறுவேன். நீங்கள் ஒவ்வொருவரும் இவைகளில் யாதானுமொன்றைச் செய்துமுடிக்க வேண்டுமென்று ஆண்டவன் பெயரால் ஆணையிடுகிறேன். "ஆள் இலை எம்பெருமான் இதை அட்டித்தரப்பணியே" என்று நமது சமாஜ அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவது என்நினைவிற்கு வருகின்றது.

இப்போது நடப்பது ஏழாவது சைவ இளைஞர் மகாநாடென்பதை உங்களுக்கு முன்னரே தெரிவித்தேன். முன் மகாநாடுகளில் நிகழ்ந்த சொற்பொழிவுகள் பல; நிறைவேறிய தீர்மானங்கள் எண்ணில; நடைமுறையில் முழுவதும் கொண்டுவரப்பட்ட தொன்றுமில்லை. "வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டும்," "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற சைவப் பெரியார் இருவர் திருவாக்குகளை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். மக்கள் யாக்கையிற் பிறத்தலோ அரிது. அதனினும், "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறல் அரிது." அத்தகைய சைவராகிய நாம் சைவ சமயத்தை நன்குணரவாவது, அதைப் பாதுகாக்கவாவது, பரப்பவாது ஒரு சிறிதாவது தொண்டாற்றுகிறதில்லை. நம் சமயத்தைப் புரக்கச் சென்னையில் சைவசித்தாந்த மகாசமாஜம் என்ற பெருங்கழகம் இருக்கிறது. அதன் சார்பில்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். அது "சேரவாரும் செகத்தீரே" என்று நம்மை அறை கூவி

யழைக்கின்றது. அக்கழகத்திற்கு உறுப்பினர்களாக 413பேர்
கள் தான் இருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் தமிழர்கள்,
எத்தனையோ ஆயிரம் சைவர்கள் நிறைந்த நம் நாட்டில் 413
பேர்கள் தான் ஒரு சைவ சபைக்கு அங்கத்தினர் என்றால்
நம்மைச் சைவர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக
இல்லையா? தமிழ் நாட்டினர் பத்தில் ஒருவர், நூற்றில் ஒரு
வர், ஏன், ஆயிரத்தில் ஒருவராவது அங்கத்தினராய் இருக்
கின்றாரா? இல்லையே! அங்கத்தினராவதற்கு ஆண்டுக்
கையொப்பம் ரூபாய் இரண்டுதானே! "சித்தாந்தம்" என்
னும் அரிய மாத இதழ் அங்கத்தினர்க்கு இலவசமாகக்
கிடைக்கின்றதே! கேவலம் நாள்தோறும் ஒரு தம்பிடி
மிகுத்து வைத்தாலும் போதுமே! விகடப் பத்திரிகைகளி
னும், வீணான படக்காட்சிகளிலும் பொருளைச் செலவழித்து
அற்ப மகிழ்ச்சி யடைகிறோம். உயிர்க்குறுதி பயக்கக்கூடிய,
பேரின்பந் தரக்கூடிய வழிகளில் நாம் ஏன் அப்பொருளைச்
செலவிடக்கூடாது? ஆதலால், அன்பர்களே! இங்குள்ள
ஒவ்வொருவரும் இன்றே, இப்பொழுதே, சமாஜத்தின் அங்
கத்தினராய்ச் சேர இறைவன் திருமுன் உறுதிசெய்துகொள்
ளுங்கள். மேற்சொன்ன சமயப் பணிகளைச் செய்ய முற்
படுங்கள். இன்றே நம் சைவசமயம் தழைத்தோங்கும்.

திருத்தகு நல்லீர்!

"தெய்வந் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்,
பொய்யுரை யஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்,
ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்,
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்,
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்,
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்."



சைவத் தோழர்களே! இதுவரை என்னுடைய புன்
மொழிகளைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்களுக்கு என்
வந்தனத்தைச் செலுத்துகிறேன். தலைமைவகிக்க ஆணையிட்ட
சமாஜத்தார்க்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியறிதலான
வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## சைவ மங்கையர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[பண்டிதை - அசலாம்பிகை அம்மாள்]

அறிவொழுக்கங்களிற் சிறந்த அன்புமிக்க
சகோதரிகளே! சகோதரர்களே!

இம்மங்கையர் மகாநாட்டில் இடம்பெறவும், கடனாற்ற
வும் என்னைப் பணித்த இச் சைவசித்தாந்த மகாசமாஜத்
தலைவர் அவர்கட்கும், இதனை வலியுறுத்திய எனது மெய்
யன்பர்களாகிய பேரறிஞர் குழாங்கட்கும் எனது மனமார்ந்த
வந்தனங்களைச் செலுத்துகின்றேன். உடல்நலம் இழந்து
மூப்பும் நிமிர்ந்துள்ள யான் இக்கடமையை ஆற்ற இசைந்
தது விரும்பத்தகுந்ததன்றென்பதை நன்குணர்வேன். எனி
னும் ஆண்பாற் சகோதர அறிஞர்கள் வேண்டுகோளை மறுப்
பது பெண்மை யியல்புக்கு அழகன்றென்னும் எனது
இயற்கை யுணர்ச்சியை மீறமுடியாமலே முன்வரத் துணிந்
தேன். ஆதலின் என்னிடமிருந்து அரியபெரிய கருத்துக்களை
நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள் என நம்புகிறேன்.

இந்த மகாநாடு கூடியுள்ள மா தலம்,

" தக்க வைம்பூதமாம் தலங்கள் தம்முளே
அக்கினி யிலிங்கமாய் அமரர் போற்றிடும்
திக்கெலாம் புகழ்தரும் திருவண்ணா மலை" யாகும்.

இத்தலத்திற்குப் பதிகம் பாடிய ஞானசம்பந்தமூர்த்திகள் தொடக்கத்தில் சிவத்தோடு கூடிய சக்தியாகப் போற்றாமல் சக்தியோடு கூடிய சிவமாக "உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்" என அருளிச்செய்துள்ளாராதலின் அவ்வம்பிகையின் அருண்மணம் கமழும் திருவடி மலர்களை நினையாது நினைந்து துதிக்கின்றேன்.

இனி இத் திருவண்ணாமலைப் பழம்பதி நடுநாட்டுத் திருப்பதிகளுட் டலைசிறந்ததொன்று.

## நடு நாடு

வடக்கே தொண்டைநாட்டின் எல்லைக்கும் மேற்கே சேரநாட்டின் எல்லைக்கும் தெற்கே சோழநாட்டின் எல்லைக்கும் நடுவில் கிழக்கே கடல்வளத்தோ டமைந்திருத்தலால் நடுநாடென்பது தற்கால வழக்கில் நின்று நிலவுவதாகக் கொள்ளலாம். பெரியபுராண ஆட்சியில் சேதிநாடென்றும் திருமுனைப்பாடி நாடென்றும் காணப்படினும் நடுநாடென்பது நிலைபெறுயதற்கு வேறு சில காரணங்களும் ஊகித்தல் பொருத்தமுடையதாகும்.

## சமய நடுநிலைமை

பண்டைக்காலந் தொட்டே இந்நாட்டில் சைவ வைணவப் போர்கள் கால்கொண்டதில்லை. இத் தகுதி பற்றியே "தெய்வம் ஒருவனே யென்றிங் குணரவல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்" என்று அஞ்சா ஆண்மையுடன் அருளிச்செய்த ஔவைப் பிராட்டியாரும் இந் நடுநாட்டை நேசித்துப் பற்பல அற்புதங்களை நிகழ்த்தி யருளினர்.



இஃதன்றி, வைணவப் பெரியாராகிய வில்லிபுத்தூர் ஆழ்வாரும் நடுநாட்டை மகா பாரதத்தில்,

பாவரும் புகழிற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாள் இரவில்
மூவரு மெய்தி மொழி விளக்கேற்றி முகுந்தனைப் பணிந்த நன்னாடு
தேவரு மறையும் இன்னமுங்காணாச் செஞ்சடைக் கடவுளைப்போற்றி
யாவரு மதிக்கு மூவரிலிருவர் பிறந்த நாடிந்த நன்னாடு.

எனப் போற்றி யிருப்ப தொன்றே சமய நடுநிலைமைக்குத் தக்க சான்றாகும். மேலும் மூவராய மூர்த்தி என்னும் திருநாமத்தோடு மும்மூர்த்திகளுடைய அறிகுறிச் சின்னங்களும் ஓரே பிம்பத்தில் காட்சி யளிக்கும் தேவநாதப் பெருமாள் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய திருவஹீந்திரபுரமும் இந்நாட்டில் திகழ்கின்ற மாண்பு மற்றொரு சால்பாகும்.

இவைகளன்றிச் சைவ சமயாசாரியர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரில் திருநாவுக்கரசு சுவாமிகளையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் ஒருங்கே தோற்றுவித்த பெரும்புகழ் இந்நாட்டிற்கே வாய்த்ததென்னில் மேலும் சிறப்பு வேண்டுமோ?

## பெண்ணின் பெருமையிற் சமரசம்

'பக்தியும் ஞானமும் பாவையர்க்கேது' எனவும், 'மாதர்க்கில்லை மருமமும் உறுதியும்' எனவும், 'எண்ணறக் கற்றெழுத்தற ஓதினும் பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே' எனவும் இடைக்கால அழுக்காறுடையசிலர் தொடுத்துவைத்த பழமொழி யாவும் வழுமொழியாகும்படி ஒழுக்கம், உறுதி, உள்ளத்தூய்மை இவைகள் நிரம்பிய திலதவதியாரைப் பெற்றது இந்நடு நாடே. தருமசேன னென்னும் சமண்மதப் புனை பெயருடன் இருந்த தம்பியார்க்குத் திருநீறளித்து

## மகளிர் மனமாற்றம்

அன்றியும் தற்காலம் அந்நிய மொழிகளில் அதிக ஆர்வமும், அந்நிய நாகரிகங்களில் மோகமும், வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பகட்டுப் பொருள்களில் கவனமும் நம் பாரத புத்திரிகளின் இதயத்தைக் கவர்ந்து விழுங்கிக்கொண்டு வருகின்றன.

இந்நிலைமையிலும், கிராமவாசங்களில் உள்ள மங்கையர் மனத்திலும் நகரவாசங்களில் சுருங்கிய வருவாயிலுள்ள சில பழம்பெண்டிரின் பக்கலிலும் சமயப் பற்றும் ஒழுக்க உணர்ச்சியும், பழமையான செயல்களில் பற்றும், சலியா உழைப்பும் உயிர்த்திருப்பதாகக் கூறலாம். அதற்கும் இடையூறாகத் தற்கால யுவர்களிற் பலர் புதுமைக்கோலம் புனையாத அத்தகைய மகளிரை விரும்புவதில்லை. இதன் பயனாகப் பெரும்பாலான யுவதிகள் அலங்காரப் பதுமைகள்போலாகி மனையோம்பும் வகையறியாது சரீர உழைப்புக்கு நாணி,

தாழ்முழங்கைச் சட்டைகளும் ஜப்பான் சிலுக்குமுகம்
பாழ்படவே பூசும் பவுடர்களும்—சூழ்முழுப்பொய்ச்
சொற்கோலு நாவற் சுவடிகளு மேமகளிர்
தற்கால நாகரிகந் தான்.

என்று வருணிக்கும்படி விரைவில் மாறுகின்றனர்.

## பெண்கள் அடிமைகளா ?

மேலே விவரித்தபடி ஒழுகாமல் நல்லறமாகிய இல்லறம் ஒப்பும் குணவதிகளை நம் பெருமையறியாத பிற நாட்டினர் சிலர் இந்தியநாட்டில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவதாகப் பகர்கின்றனர். நம்மவரிலும் ஒரு சிலர் அம்மொழியை ஆமோதிக்கின்றனர். அக்கருத்தில் சிறிதும் உண்மையில்லை. சுதந்தர முள்ளவர்களாக மதிக்கப்படும் மேல்நாட்டு மாதர்களில் இலட்சக்கணக்கான யுவதிகள் இலண்டன்மாநகர வீதிகளில் ஆகரிப்பாரற்று உணவுக்கும் உடைக்கும் படும் அல்லலை நம் யுவதிகள் அறிவார்களாயின் தங்கள் நிலை பெருமையுடையதென மகிழ்வார்கள்.



வெளித்தோற்றத்தில் பெண்களை நடத்தும் உரிமை முற்றிலும் ஆண்மக்களுடையதுதான். உள்ளே ஆராய்ந்து காணின் ஆண்மக்களின் ஒவ்வொரு செய்கைக்கும் பெண்களின் விருப்பமே அஸ்திவாரமென்பது உண்மை.

ஒரு கடிகார யந்திரத்தில் நேரங் காட்டுவது வெளிப்படையாகக் காணப்படும் நீண்டுள்ள முட்களேயாகும். என்றாலும் அம்முட்களை உள்ளே காணமுடியாதபடி இருந்து இயக்குவிப்பது ஏர்ஸ்பிரிங் என்னும் ஒரு சிறிய கருவியேயாகும். இவ்வுதாரணமே இருபாலார்க்கும் பொருந்துமாதலின், பெண்கள் அடிமைகளாவதெப்படிப் பொருந்தும் ? அப்பட்டம் இந்திய மாதர்களுக்குச் சிறிதும் ஏற்றதன்று. ஆதலின் ஆடவர் முன்னேற்றம் பெண்கள் முன்னேற்றம் எனத் தனித்தனி பிரித்துப் பேசுவதற்கும் முயலுவதற்கும் இடமேயில்லை. பெண்கள் நலமும், ஆடவர் நலமும் ஒன்றையொன்று சார்ந்தே நிற்பவைகளாகும்.

மகாநாட்டில் ஆடவர் சிலர் அறிவுறுத்தும் முறைப்படி தமது சொந்த விஷயங்களில் நடக்க முடியாது பின் வாங்குவதெல்லாம் தமக்குரிய பெண்மக்களை மீற முடியாத காரணத்தினாலேயே என்பது பலரும் அறிந்த இரகசியமே. பெண்மக்கள் அறிவு மிக்கவர்களாயினும் எண்ணப்படி நடக்க முடியாமல் ஊக்கம் குன்றுவதும் ஆண் மக்களின் கருத்தை மீற முடியாத காரணமே என்பது வெளிப்படையான உண்மை. இதுகாறும் எடுத்துக் காட்டிய காரணங்களால் மக்கள் நலம் பிரிக்க முடியாததொன்றென்பதையே நாம் கருத்துட்கொண்டு அறிவை வளர்க்க முயலல் வேண்டுமென்பது புலனாகிறது.

இன்று இவ்வுலகம் போற்றும் சைவ சமய குரவராகச் செய்தவர் அப்பெண் தெய்வம் அன்றோ? இது பற்றியே,

"பெண்ணொருத் திலதமாய்ப் பிறந்து மாசறு
தண்ணல்வா கீசனை அருளுக் காக்கிய
புண்ணியத் திருவையும் பூத்திந் நாடுதான்
எண்ணினில் நடுநிலை யிலக நின்றதே"

எனப் புகழ் பெற்றது.

## ஞானத்திற் சமரசம்

இனிப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய பெரியார்கள் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், மாடம் பிளவஸ்கி, சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ஆகிய மூவர். இவருள் நடுநிலை யென்பதை மக்கட்கு அறிவுறுத்திச் சொற்கட்டடமாகிய திருவருட்பாவினை இயற்றி வைத்து இற்றைக்கு 62 ஆண்டுகளுக்கு முன் சித்திவிளாகத் திருமாளிகையில் திருக்கடைக் காப்பிட்டுக்கொண்டு பூதவுடம்பொடும் மெய்ஞ்ஞான யோகியாய் மறைந்தருளிய சமயங் கடந்த மோன சமரசஞானியைத் தோற்றுவித்த புகழும் இந்நாட்டிற்கே வாய்த்தமையால் இந்நாட்டை நடுநாடென்று வழங்காமல் வேறென் புகல்வது?

## நிலவளத்திலும் நடுநிலைமை

இதுகாறும் எடுத்துக் காட்டிய தனிச் சிறப்புகளைப் போலவே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நாற்றிணை வளங்களும் ஒருங்கே நிறைவளம் கொழிப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## சைவ மங்கையர்

சைவமங்கையர் என்பது சிறப்பாக ஒரு வகுப்பினரைக் குறிப்பதாயினும் இப்பெயரால் இம்மகாநாட்டைக் கூட்டி



பொறுப்பாளர்கள் சைவப்பற்றும் சைவவொழுக்கமுங்கொண்ட எல்லா மரபிலுமுள்ள மங்கையர்களையும் பொதுவகையால் அழைத்ததாகவே கருதுகின்றேன். ஏனெனில் சைவ சமயத்திற்கே தலைமைத்தகுதி வாய்ந்த அறுபத்து மூவர்களிலும் எல்லா மரபு மங்கையர்களும் விரவியுள்ளனர். தவிர வகுப்புப் பூசல் ஆண்பாலார் சிலர் உள்ளத்தில் முளைத்தாலும் அன்னவர் மனையறம் ஓம்பும் மங்கையர் மனத்தில் இயற்கையில் கால்கொண்டெழுவதில்லை யென்பது எனது அநுபவ உண்மை. இது பெண்மைக்கு இயல்பாகிய பேரன்பின் பெருமையால் நிகழ்வதாகும்.

எனவே, சைவ மங்கையர் குழுவினை அன்பு மங்கையர் கூட்டம் என்றழைப்பதும் தவறாகாது. 'அன்பே சிவம்' என்பது அருள்மொழி. அவ்வன்புக்கு உரிமையுடையவர்கள் பெண்மக்களே யாதலின் இஃது அன்புக் கூட்டமேயாகும்.

நாத்திகமொழிந்து ஆத்திகம் வளர வேண்டுமாயின் அது பெண்மக்களின் ஊக்கத்தினாலேயே முற்றுப்பெறும். ஆண்மக்களின் தனிமுயற்சி ஓடிப் படராது. அந்நாளிலும்,

மெய்த்துறவு பூணுதற்கு மேவும் திலதவதி
பத்தியினிற் காரைக்காற் பாவையரும்—எத்திசையும்
சைவம் வளர்ப்பதற்குச் சார்மங்கை யர்க்கரசாம்
பெய்வளையு மென்றேநீ பேசு.

உண்மைக்கு நீலகண்டர் ஒண்மனையும் கற்பெனும்சொல்
திண்மைக் கியற்பகையார் தேமொழியும்—வண்மைக்கு
மாறா விளையான் குடிமாறர் தம்மனையும்
கூறு யறுதினமுட் கொண்டு.

எனவரும் வெண்பாக்களில் சைவத்தை மகளிர் எத்துணை சகிப்புத் தன்மையுடன் வளர்த்தனரென்பது நன்கு விளங்கும்.

## பெண்கள் கல்வி

திலகவதியார், ஒளவையார், காரைக்காலம்மையார், ஆண்டாள் முதலிய தெய்வ மடந்தையர்களைப்போல ஏனையோரும் முயற்சியின்றி அருட்செல்வத்தை அடையலா மென்றெண்ண முடியாது. இயற்கை யறிவைச் செயற்கைக் கல்வி யறிவால் மங்காமல் பிரகாசிக்கச் செய்தல் வேண்டும்.

கற்கப்படுவ தெல்லாம் கல்வியாகாது. சமயப் பற்றினை வளர்க்கும் கல்வி தலை சிறந்தது.

தாய் மொழிப் பற்று ஒரு போதும் அசட்டை செய்ய முடியாதது. பிறமொழிகளில் பயிற்சி பெறுவது பொன் மலர் நாற்றமுடைத்தாதலையே ஒக்கும். மொழிப்பகை கனவிலும் பெண்கள் உள்ளத்தில் கால் கொள்ளல் கூடாது.

கள்ளத்தனத்தையும் இன்ப உணர்ச்சியையும் கிளைக்கச் செய்யும் கற்பனைக் கதைகளைக் கண்ணெடுத்தும் பார்ப்பது கூடாது.

## பெண்கள் ஒழுக்கம்

அறிஞர் குழாங்கள் ஒருங்கு கூடி நிகழ்த்தும் பேருரைகளைத் தவறாமல் செவி மடுத்துத் தழைக்க வேண்டும்.

புன்மையான நாடக அரங்குகட்கும், உயிரற்ற படக்காட்சிச் சாலைகளுக்கும் செல்லும் வழக்கத்தை மறந்தேவிடல் வேண்டும்.

## பெண்மைக்குரிய கடமைகள்

குடும்பத்திற்குத் தலைவியாகிய நீங்கள் கூலிக்காகப் பணியாற்ற வருவோரை நம்பிச் சோம்பல் உற்றுச் சுகமாகக் காலங் கழிக்கக் கூடாது.

உண்டி யமைத்தல், விருந்தினரை யுபசரித்தல், இன்சொல், நகை முதலியவைகளில் சிறந்திருத்தல் ஆகிய



கடமைகளில் அவமானமடையாமல் பெருமைப் படுதல் வேண்டும்.

சொற்ப கல்வி கற்கும் பெண்கள் சிலர் சமையல் வேலை செய்வது இழிவென மதிக்கின்றனர்.

வீட்டின் உரிமையாளராகிய பெண்மக்களின் கைகளால் அமைக்கப்படும் உணவே கணவருக்கும், காதல் மக்களுக்கும் உடல்நலம் பயக்கும் அமுதமாகும். உள்ளன்பில்லாமல் கூலிக்காக ஈடுபடும் பணியாளர் அமைக்கும் உணவு நஞ்சேயாகும்.

"என்பெலாம் பற்றி எரியுதே ஐயையோ, அன்பிலாளிட்ட அமுது" என்ற கட்டுரைப்படி அன்பு கலவாத உணவு உணவன்று.

கல்வியிற் பெரியன் கம்பன் எனும் கவிச்சக்ரவர்த்தியும், "மாதரார் அற்பினின்றன அறங்கள்" என்று அறநிலையம் பெண்கள் உள்ளத்தில் எழும் அன்பின்மேல் கால்கொண்டு நிற்குமென்'றருளினர்.

கச்சியம்பதியில் முப்பானிரண்டறம் வளர்த்தது அம்பிகையேயன்றி ஏகாம்பர நாதனல்ல. பெண்கள் 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்றபடி தம் கடமைகளைக் கூர்ந்து செய்வரேல் பெண்களின் உரிமையையோ இறைமையையோ எவரும் தட்டிவிட முடியாது, முடியாது.

சைவ மங்கையர்களே! இறுதியாக,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்"

என்ற தெய்வப் புலவரின் அருண்மொழியை உங்கள்முன் நினைவூட்டி இச்சிற்றுரையை முடிக்கின்றேன்.

## முடிவுரை

அன்பு மிக்க சகோதரிகளே! மனமுண்டேல் வழியுண்டென்பது ஆங்கிலப் பழமொழி. நீங்கள் உறுதி கொள்வீர்களாகில் விரைந்து மேன்மை பெறுவீர்கள். ஐயமில்லை.

வகுப்புப் பூசல், மொழிப்பகை, ஆடவருக்குரிய கடமைகளில் பதவிப்போட்டி முதலிய சிறுமைக்குழிகளில் வீழ்ந்து ஏமாறாதீர்கள். தெய்வபக்தி, சமயப்பற்று, ஒழுக்கம், சகிப்புத்தன்மை, உழைப்பு, பணிவு, இன்சொல், ஈகை ஆகிய உயர்குணங்களை உங்கள் தனிப்பெருஞ் செல்வமாகக்கொண்டு அவைகட்குரிய நீதி நூல்களை நன்கு மனனம் செய்யுங்கள்; ‘ஓதாமலொருநாளு மிருக்கவேண்டாம்’ என்ற நம் மூதாட்டியார் மொழியைக் கடைப்பிடியுங்கள்.

இதுகாறும் எனது சிற்றுரைகளைப் பொறுமையுடன் செவிமடுத்த நுமது பெரும்பண்புக்கு என் வணக்கமுள்ள வந்தனம் உரியதாகுக.

அன்புக்கும் அறத்திற்கும் அரணாகிய இச்சைவமங்கையர் மகாநாட்டைக் கூட்டியுதவிய சமாஜத் தலைவர்கட்கும் பிற சகோதர சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனங்களைச் செலுத்துகின்றேன்.

# திறப்புப் பேருரை

[கீ. தெய்வசிகாமணி முதலியார்]

**சுவாமிகாள், சைவசித்தாந்த சமாஜத்தின் ஆட்சியாளர்காள்,**
**சகோதரி சகோதரர்காள்,**

*அண்ணாமலையாரின் அடிதொழுது உங்கள்முன் இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.*

பொதுக் கல்வியாலேனும், சமய அறிவாலேனும் குணம் ஒன்றுமில்லாத என்னை ஒரு பொருட்படுத்திச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 30-ம் ஆண்டின் விழாவை ஆரம்பித்துக்கொடுக்கப் பணித்த சமாஜத்தின் ஆட்சியாளர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி அறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை விடுத்து, என்னினும் மேம்பட்டார் ஒருவரை அவர்கள் தேர்ந்தெடுத்திருப்பின் அது உங்கட்கும் எனக்கும் மிகுந்த உவப்பைத் தரக்கூடியதாயிருக்கும். குறைபாடுடைய யான் மிகச் சிறப்பு வாய்ந்த இத்திறத்தல்தொண்டை ஆற்ற ஒப்புக்கொண்டதேனோ எனும் வினா உங்கட்கு நிகழலாம். என்னை வரித்த எனது நண்பர்கள் ஒன்று கூறினார்கள். "உங்கள்மாட்டு எதுகுறை இருக்கின்றதோ, எது இல்லையோ அதை யாங்கள் அறியோம். ஒன்று உங்களிடம் உண்டு. அதுபற்றி யாங்கள் உங்களைக் கேட்பது. உங்களுக்குச் சமயத்தின்கண் மிகுந்த ‘அன்பு’ உள்ளது. அன்புடையார் இத் தொண்டாற்றினால் அது எங்கட்குத் திருப்தியைத் தருவது" என்றனர். எனக்கு மறுமொழி சொல்ல இயலவில்லை. அதன் பயனாக நான் இப்போது உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன். ஆனதுபற்றி நீங்கள் என்னிடம் உயரிய கருத்துக்கள் எவற்றையும் எதிர்பார்க்கக்கூடாது. நான், நந்தமிழ் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பலமுறையும் சென்ற முப்பது வருஷ காலமாக மக்களிடத்தில் நெருங்கிப் பழகியிருக்கின்றேன்; இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் பிரயாணம் செய்திருக்கின்றேன். இதனால் உண்டான அறிவைக்கொண்டு

சில விஷயங்களை உங்களுக்குச் சொல்லத் துணிகின்றேன். நான் சொல்லும் விஷயங்கள் உங்களுக்குப் பொருத்தமுள்ளவைகளாகத் தோன்றாமலும் இருக்கலாம். ஆனால், எனது நோக்கத்தைமட்டும் நீங்கள் நினைத்து என்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## சைவ சித்தாந்தமும் சமாஜமும்

முன்னர், நம் சமாஜத்தைக் குறித்துச் சிறிது சொல்ல விரும்புகின்றேன். இச்சமாஜம் நிறுவப்பெற்று இற்றைக்கு முப்பது வருஷங்களாகின்றன. முப்பதாவது ஆண்டின் விழாவை இன்று நாம் கொண்டாடுகின்றோம். முப்பதாம் ஆண்டுக்குள் ஒருவன் அடையவேண்டிய பொருளை அடையானாயின் பிறகு அது அவனுக்கு எளிதில் கிடைக்காதென்று ஆன்றோர் கூறுவர். இதை அநுசரித்து இச்சமாஜத்தின் காரிய நிர்வாகத்தைக் கவனித்தால் இச்சமாஜமானது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறதென்றே சொல்லல்வேண்டும். இந்தியாவிலுள்ள சமயங்களில் சைவசமயம் என்பது ஒரு முக்கிய சமயமென்று கருதப்படுகிறது. என்றாலும், இச்சமாஜம் ஸ்தாபனமாகுமுன் மேல்நாட்டார் இந்தியாவின் மற்றச்சமயங்களை நன்குணர்ந்தாராயினும், நம்சமயத்தை உணர்ந்தாரில்லை. தமிழ் மக்களிடத்தில் தனிச்சிறப்புவாய்ந்த ஒருபெருஞ்சமயம் மற்றச்சமயங்களைக்காட்டிலும் மிகப்பொலிவுடன் திகழ்கின்றதென்பதன் உண்மையை இச்சமாஜத்தின் வழியாய்த்தான் மேல்நாட்டார் உணர இயன்றது. இச் சமாஜத்தின் முக்கிய கர்த்தராயிருந்த காலஞ்சென்ற திருவாளர்-ஜே. ம. நல்லசாமிப்பிள்ளை அவர்கள் சிவஞானபோதம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேல்நாட்டார்க்கு உதவியும், 'சித்தாந்தம்' என்னும் மாதாந்திரப் பத்திரிகையில் சைவ சமயத்தைக் குறித்துப் பல வியாசங்கள் அடிக்கடி எழுதியும், நமது நெறியை உலகினர் மதிக்குமாறு செய்தார்கள். அதன்பொருட்டு அவர்க்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டதாக இருக்கின்றது. முப்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சைவநெறியின் வாழ்நாள் என்ன



வாகுமோ என்று நினைத்த எண்ணத்திற்கு மாறாகச் சமயம் இருக்கின்றதென்னும் ஓர் உணர்ச்சியை நாட்டில் நிலைபெறுத்தும் ஒரு பேருபகாரத்தை இச்சமாஜம் இம்முப்பது ஆண்டுகளில் செய்திருக்கின்றது. ஆண்டுதோறும் ஆங்காங்குங் கூட்டங்களைக் கூட்டுவித்துச் சமயச்சார்பாகச் சொற்பொழிவுகள் ஆற்றும்படி செய்து, சமய உண்மையை விளக்கிச் சமயத்தை வளர்க்க இச்சமாஜம் காரணமாயிருக்கின்றது. இதுவுமன்றிச் சமய நூல்களை எல்லோரும் வாங்குதல் எளிதாகும் பொருட்டு அடக்கவிலைப் பதிப்புகளென பல நூல்களை அச்சிட்டு எல்லோர்க்கும் வழங்கித் தன்னுடைய நோக்கத்தை ஈடேற்றிக் கொண்டிருக்கின்றது.

## சமாஜத்தின் நோக்கமும் சைவத்தின் சமரசமும்

இச்சமாஜத்தின் தலையாய நோக்கமானது சைவ சித்தாந்த சமயத்தையும், அதன் சாத்திர முடிபுகளையும் பரவச் செய்தல் எனச் சமாஜத்தின் விதிகளில் மூன்றாவது விதியும், பிறசமயத்தினின்றும் சைவசமயம்புக விழைவோர்க்குத் தக்க வசதிகள் ஏற்படுத்திக்கொண்டு அவர்களைச் சைவசமயத்தில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென 8-வது விதியும் குறிக்கின்றன. பண்டை நாளிலும் சைவசமயம் ஏனைய மதங்களைப் போன்று, புறச் சமயத்தினரைத் தன் சமயத்தின்கண் புக ஏற்பாடுகள் செய்வதில்லை என யூகிக்க இடமுண்டு. சைவ சமயமானது பிற சமயங்களைப் பழியாது, 'எல்லாச் சமயங்களிலும் உண்மை உண்டு, அதனால் அவைகள் புறக்கணிக்கத் தக்கவைகளல்ல' என்னும் உயரிய கொள்கையைக் கொண்டது. எவன் எச்சமயத்தில் பிறக்கின்றானோ அவன் அச்சமயத்தைக் கைவிடவேண்டிய அவசியமில்லை. ஆனால் சைவ சமயத்தின்கண் எளிதாகக் காணப்படுகின்ற சில நிறைந்த உண்மைகளை யாவரும் பின்பற்றி உய்யலாம். அதற்காக சமயமாறுபாடு வேண்டுவதில்லை. எல்லாச் சமயத்தின் கோட்பாடுகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அது அவைகட்கெல்லாம் மேலாகத்திகழ்கின்றது. ஓர் ஊருக்குப்போகப் பலபாட்டைகள் இருப்பதுபோல, ஒரு கடவுளை அடைவதற்

குப் பல சமயங்களிருக்கின்றன. சிலபாதைகள் மேடு பள்ளம் உள்ளவைகளாய்ப் பயணம் செய்வதற்குக் கஷ்டத்தைக் கொடுப்பவைகளாயிருக்கும். சில தார் முதலியன பெய்து உருப்பண்ணினவை போன்று மோட்டார்கார்கள் போன்ற சகடங்களில் உடலசையாமல் போக இயன்றனவாயிருக்கும். இவைபோலவே சமயங்கள் இருக்கின்றன. சைவநெறி பயணத்துக்குச் சிறந்ததாய்க் காணப்படும் பாதையைப்போல் இருக்கின்றது. ஆனதுபற்றி அதன் கொள்கைகளை ஜனங்கள் அநுசரிக்கும்படி செய்வது இச்சைவ சமாஜத்தின் மேலான நோக்கம். எவரேனும் இந்நோக்கங்களை அறிந்து ஒழுகுவதோடு சைவ சமயத்தின்கண் புகவேண்டுமென விருப்பம் கொள்வாரெனின் அவ்விருப்பத்திற்குச் சைவ சமயத்தார் எப்போதும் குறுக்கே நின்றதில்லை. பண்டை நாளில் இவ்வளவுக்கு மாத்திரம் நம்முன்னோர் இடங்கொடுத்தனரேயல்லாமல், ஏனைய மதத்தினரைப் போல "உங்கள் மதங்களை விடுத்து எங்கள் மதத்துக்கு வாருங்கள்" என்று அழைத்தார்களில்லை. பிற சமயவாதிகளை நம்மவர் வாதில் வென்ற காலத்தில், தோற்ற சமயத்தவர்கள் தாங்கள் தோற்றதின் காரணமாகவே நஞ் சமயத்தில் புகுந்திருக்கிறார்கள். இது நம்மதத்தினர் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளவேண்டுமென்னும் அவாவினால் ஏற்பட்டதல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். இந்த உடன்பாட்டையே சமாஜத்தின் 8-வது விதி வற்புறுத்துகின்றது என்று நான் நினைக்கின்றேன்.

உலகத்தின்கண் நிலவிய எம்மதமும் உலகத்தினர் எல்லோரையும் தம்மதத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது இயற்கையாயிருக்கச், சைவ நெறி ஒன்றுமாத்திரம் ஏனையோரைத் தன்னிடத்துச் சேர்த்துக்கொள்ள விரும்பாத காரணம்தான் என்னை? நான் முன்சொன்னது போல எம்மதத்திலும் உண்மையிருப்பதால் எவனும் தான்பிறந்த மதத்தைப் புறக்கணிக்க வேண்டுவதில்லையென்பது சைவசமயத்தின் சமரசக்கொள்கையாகும். அன்றியும் ஆதியில் தமிழ் நாட்டாரெல்லாம்-ஏன் இந்தி



நாட்டாரெல்லாம் சைவர்களாயிருக்க, எஞ்சியவர்கள் இல்லாமையால் 'எம் சமயத்தில் வாருங்கள்' என்று அழைக்க அவசியம் ஏற்படவில்லை; சமணம், பௌத்தம் முதலிய மதங்கள் நம் நாட்டிற் புகுந்து சைவர்களைப் புறமதத்தினராகும்படி செய்தபோது மாத்திரம் அம்மதத்தினரைக் கண்டிக்கும் தொழிலையே நம் சைவகுரவர்கள் மேற்கொள்ள நேர்ந்தது. சைவ சமயமானது கடல்கொண்ட தமிழ்நாட்டிலும், சுமத்திரா, ஜாவாமுதலிய தீவுகளிலும் இந்தியநாடு முழுவதிலும் ஒருகாலத்தில் பரவியிருந்ததெனச் சொல்வதற்குப் போதிய சான்றுகள் பூமிவெட்டுச் சின்னங்களிலிருந்து இப்போது ஒருவாறு கிடைக்கின்றன. அப்படிப்பட்ட சமயமானது இப்போது இருக்கும் நிலைமை நோக்குமிடத்துச் சைவர்களா யுள்ளவர்கள் வாளாவிருக்க இயலாது. சைவநெறியின் கொள்கைகள் இன்னவெனச் சைவ சமாஜத்தின் விதிகளில் 11-வது விதி 'உண்மைகள்' என்னும் தலைப்பின் கீழ்எடுத்து விவரிக்கின்றது. ஆனால் அநுபவத்தில் சமயக் கொள்கைகளைத் தெரிந்தோரும் அவைகளின்படி நடப்போரும் எத்தனை பேர் இருப்பர்?

## தற்காலச் சைவன்

இப்போது நம் தமிழ்நாட்டின்கண் பிராமணர்களை விடுத்து ஏனையோரிடத்தில் காணப்படும் சமயங்கள் இரண்டெனப் பொதுப்படக் கூறலாம். ஒன்று சைவம்; மற்றொன்று வைணவம். ஏதோ ஒரு சிறு தொகையினரேயன்றிப் பெரும்பான்மையோர், நேர்ந்தபொழுது விபூதி, திருமண் தரிப்பதைத் தவிர தங்கள் தங்கள் சமயக் கோட்பாடுகளை அறிந்து அவைகளின்படி ஒழுகுகின்றார்களா என்பதை நோக்குவோமானால், எவரும் உண்மையில் சைவர்களுமல்ல, வைணவர்களுமல்ல என்று அறுதியிட்டுக் கூறலாம். அப்படியானால் இவர்கள் இப்போது அநுசரிக்கும் சமயந்தான் என்னை என்றால் நோக்கமில்லாத ஒரு கலப்பு மதமென்றே சொல்லத் துணியலாம். 'ஐய! என்ன நீங்கள் பெரும்பழி சாற்றுகின்றீர்களே, இது உண்மைதானா?' என்று

உங்களிற் சிலர் கேட்கலாம். நமது நாட்டவர் இப்போது
வழிபடும் தெய்வந்தான் என்னவென்று பாருங்கள்.
சாஸ்திரங்களெல்லாம் தெய்வம் ஒன்றென்று அறைகூவுகின்
றன. ஆனால் நாம் வணங்கும் தெய்வங்கள் எத்தனை? ஒவ்
வொரு காரியத்திற்கு ஒவ்வொரு தெய்வத்தை வணங்குகின்
றோம். நம்மூரில் வைசூரி பரவி வந்தால் மாரியம்மனுக்குப்
பூசை; மனைவி கர்ப்பிணியாக இருந்தால் காட்டேரி, இருளன்,
இருசு முதலிய புறக்கடைத் தெய்வங்களுக்கு வழிபாடு; கிரா
மம் செழிப்புற்று இருக்கவில்லையானால் கிராமதேவதை
செங்காட்டம்மனுக்கு உயிர்ப்பலி; உடம்பு குணமாயில்லை
யானால் அல்லா உற்சவத்தில் பகிர் சாயபுவிடம் சர்க்கரை
வழங்கப் பிரார்த்தனை; நோய்வாய்ப் பட்டவன் குணமானால்
மாதா கோவிலுக்கு மெழுகுவர்த்தி கொடுக்கிறேன் என்ற
பிரார்த்தனை; ஓர் ஊரில் பாம்பு புத்து ஒன்று இருந்தால்
அதற்கெல்லாரும் பால்கொண்டுபோய் ஊற்றிப் பூஜிப்பது;
பால் வார்த்து மிடியைத்தீர்த்துக்கொடுக்குமாறு வேண்டுவது;
கிராமத்துச் சிவன்கோவிலில் உற்சவம் என்றால் பாண
வேடிக்கைமேல் நினைவு; பெருமாள் கோயிலில் உற்சவ
மென்றால் அங்கு போனால் உருசியுள்ள பிரசாதங்கள்
கிடைக்குமென்ற அவா. இவைபோன்ற பல வழிபாடுகளில்
பெரும்பான்மையான ஜனங்கள் ஈடுபட்டிருக்க நாம் காண
கின்றோம். இவையெல்லாம் அறியாமையினால் உண்டாவன
வே. இவைகளைப் போக்குவது கற்றறிந்தார் கடனாகும்.

## வினாவிடைப் புத்தகம்

சைவனாயினும் வைணவனாயினும் தனது சமயக்
கொள்கைகள் இன்னவென எளிதில் அறியும்படி செய்யக்
கூடிய நூற்கள் நம்மிடத்தில் இருக்கின்றனவா என்பது
எனக்குத் தெரியவில்லை. அவைகளை ஒருவன் அறியவேண்
டின், அவன் பல நூற்களைப் படித்து அறிந்தார்களிடம்
உசாவிச், சூத்திரங்களின் அர்த்தபேதங்களை அறிந்து தான்
ஒரு முடிவுக்கு வரல்வேண்டும். இப்படிச் செய்வது பண்டிதர்
களல்லாமல் ஏனையோரால் இயலாது. முடிபுகளில் வேறு



பாடுகள் இருந்தபோதிலும் பொதுவாக உள்ள கொள்கைகளைச் சின்னம் சிறு சொற்களால் யாவரும் எளிதில் அறியக்கூடிய மொழியில் புத்தகங்கள் எழுதவேண்டிய அவசியம் மிகுதியும் இருக்கின்றது என நினைக்கின்றேன். இப்போது என் கையில் 'The Catechism simply explained' என்னும் புத்தகம் ஒன்று இருக்கின்றது. கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகள் என்ன, கிறிஸ்தவர்கள் தினப்படி செய்யவேண்டிய காரியங்கள் என்ன, கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளும் மோக்ஷம் என்ன, நரகம் என்ன, இதற்கு மத்தியில் நிற்கும் (Purgatory) தான் என்ன என்பதை யாவரும் எளிதில் அறியும் வண்ணம் அந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய புத்தகங்கள் நம் சமயத்திலும் எழுதப்படல்வேண்டும். அப்பொழுதுதான் பெரும் புத்தகங்களைப் படித்து முடிபுகளை அறிந்துகொள்ள அவகாசமில்லாத பலர்க்கும், நமது சமயக் கொள்கைகள் இத்தகைத்தன, நாம் செய்யவேண்டுவன இவை, கூடாதவை இவையெனத் தெரியவரும்.

## ஒவ்வா வழக்கங்கள்

நமது சமயக் கொள்கைகளுக்கு மாறாக அநேக வழக்கங்கள், நம்மில் புகுந்து கொண்டு அவைகளுக்கு நம்மை அடிமைகளாகச் செய்து கொண்டிருக்கின்றன. இவ்வழக்கங்களை அடியோடு தள்ளிச் சமயத்தை உயர்த்த வேண்டும். என்ன உயரியகொள்கைகள் சாத்திரங்களில் எழுதப்பட்டிருப்பினும், அநுட்டித்திருப்பவர்களைப் பார்த்தே வேற்றோர் நம் சமயத்திற்கு மதிப்பு கொடுப்பார்கள். இவ்வழக்கங்கள் நம்மிடம் பல நூற்றாண்டுகளாக இருக்கலாம். பழமை காரணமாக அவைகளைத் தள்ளுவதற்கு நாம் பின்வாங்கக் கூடாது. நெடுநாள் தூங்கி விட்டோம். இப்பொழுது விழித்து, சீர்திருத்தத்தைக் கைக்கொள்ளவேண்டிய பிரயத்தனத்தைச் செய்யல் வேண்டும். முதலாவதாக நமது தெய்வ வழிபாட்டையும் கோவில்களையும் கவனிப்போம்.

நமது சாஸ்திரங்களே யன்றித், தமிழின்கண் காணப்
படுகின்ற எந்தப் புத்தகமும் தெய்வம் ஒன்று என்று
பறை அறைந்து சொல்கின்றது. ஆயினும் நாம் தினசரி
வழக்கத்தில் பல தெய்வங்களை வழிபடுகின்றோம் என்று
முன்னமே சொன்னேன். நமது கோவில்களை எடுத்துக்கொள்
ளுங்கள். அவைகள் தெய்வம் ஒன்றென்று சாதாரண ஜனங்
களின் மனதில் படுவதற்கு உதவி செய்கின்றனவா என்று
பார்ப்போம். நாம் ஒரு சிவன் கோவிலுக்குள் போவதாக
நினைத்துக் கொள்ளுவோம். கோவிலுள் நுழைந்து, முறையே
விநாயகர், சுப்பிரமணியர், அப்பர், அம்மையார், நடராஜர்
முதலியவர்களைத் தரிசிக்கின்றோம். கல்வியறிவுமிகுதியில்லாத
ஒருவனுக்கு ஒரே கோவிலில் இம்மூர்த்திகளைத் தரிசனம்
செய்வது தெய்வம்ஒன்றென்னும் கொள்கையை உறுதிபடுத்
துமோ! கற்றறிந்தான் ஒருவனுக்கே இம்மூர்த்திகள் பலராகக்
காணப்பட்டாலும், ஒரே கடவுளின் பலகுணங்களைக் காட்டும்
குறிகளென உணர்ந்துகொள்ளுதல்கூடும். ஆனால் சாதாரண
ஜனங்கள் என்னவென்று நினைப்பார்கள். கடவுள் ஒருவர்
உண்டு; அவருக்கு ஒரு மனைவி உண்டு; இரண்டு பிள்ளை
கள் உண்டு; பல பரிவார தெய்வங்கள் உண்டென்று தான்
நினைக்கக் கூடும். கல்யாணங்களும் உண்டு! இப்படி அவர்
கள் நினைக்க வேண்டுமென்பது சமய நோக்கமா? நான் அறி
யாமையினால் இதைச் சொல்லவுங்கூடும். பண்டிதர்களடங்கிய
இச்சபையினர் என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.
கோவில் கட்டி, வழிபடும் கடவுளை ஆங்கு நிறுத்திய தன்
நோக்கந்தான் என்ன என்று கேட்குமிடத்து, வழிபடுவான்
ஒருவனுக்கு மனம் ஒருவழிப்பட்டுப் பக்திமேலிட்டுக் கட
வுளை அடைதல் சாத்தியமாகும் பொருட்டென்றே நான்
நினைக்கின்றேன். இதுதான் நோக்கமானால், இப்போது
நமது கோவில்களில் நடத்தப்படுகின்ற செய்கைகள், மேற்
சொன்ன நோக்கத்தை நிறைவேற்றிக் கொடுக்குமா என்ப
தைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மனம்
ஒருவழிப்பட்டுச் சிவனிடத்தில் அன்புண்டாக வேண்டுமா
னல் ...ற்குத் துணைக்கருவியாய் இருக்க வேண்டுவது நின்



சப்தம். நமது கோவிலின்கண் அது இருக்கிறதா என்பதை நீங்களே சொல்லுங்கள். இப்போது நமது கோவில்களில் நடக்கும் அபிஷேகங்களும், அலங்காரங்களும், நைவேத்தியங்களும், ஆராதனைகளும், உற்சவங்களும் எவ்வளவு தூரம் ஆதி நோக்கத்தோடு பொருந்தியிருக்கின்றன என்று ஆராய்வது மிக அவசியமென்று நான் கருதுகின்றேன். நான் இப்படிச் சொல்லும்பொழுது, நான் கோவிலுக்குச் சென்று அபிஷேகம் செய்வித்து, உற்சவங்களில் சுவாமிதரிசனம் செய்யாமலிருப்பவனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். இவ்விஷயத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டுவது அவசியம் என்பதைத்தான் நான் வற்புறுத்திச் சொல்கிறேன். கோவில் விதிகளை விதித்த ஆகமத்தோடு ஒத்துப்பார்த்து என்ன திருத்தம் தற்காலத்திற்கேற்பச் செய்யவேண்டுமோ அதைச் செய்தல் வேண்டும். நம்முடைய மதக்கொள்கைகளைப் படிக்கும் புறநாட்டார், நமது கொள்கைகள் ஒன்று, செய்கைகள் வேறு என்று எண்ணி நகையாடாமலிருக்கவும், நமது எண்ணம் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததாகாமல், நம்மனோர் க்ஷேமப்படவேண்டி இவ்விஷயம் சீர்திருத்தப்படல் வேண்டுமென நினைக்கின்றேன்.

உயரிய கொள்கைகளை மேற்கொண்டிருக்கின்ற நம் கோவில்களில் உற்சவம் ஆரம்பமாகு முன், கிராமதேவதை உற்சவம் செய்யப்படுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். எக்கிராமத்திலும் சிவன்கோவில் உற்சவம் ஆரம்பமாகுமுன் கிராமப்பிடாரி அம்மன் உற்சவம் நடத்தப் படுகின்றது. இவ்வுற்சவத்தில் செய்யப்படும் உயிர்வதைகள் கிராமத்தாரின் செல்வத்தையும் உற்சாகத்தையும் பொறுத்திருக்கின்றன. சைவ உணவுகொள்வோர் மிகுந்திருக்கும் கிராமத்தில் கூட இவ்வுயிர்வதைகள் செய்யப்படுகின்றன! கொல்லா விரதத்தைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ள சைவர்கள், தாங்கள் வழிபடும் கடவுளை ஆராதிக்குமுன் எத்தனை உயிர்வதைக்குக்காரணர்களாயிருக்கின்றார்கள்? இது அறியாமையேயல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது! கல்கத்தாவிலுள்ள காளிகோவிலுக்கு நான் ஒரு முறைபோகும் சமயம்

சமீபத்தில் அண்ணாமலையாரின் இந்தக்கோவிலுக்கு வந்திருந்
தேன். தீபத்தின்போது அதிகாரத்தையுடைய சிலருக்கு
வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தவிடத்தில் நானும் இருந்தேன்.
இருந்ததின் பயனாகத் தீபதரிசனத்தைச் செவ்வனே கண்
டேன். ஆனால் கூட மற்றொன்றுங் கண்டேன். திரளான
ஜனங்கள் இடிபட்டும் அடிபட்டும் தீபதரிசனம் செய்தாரும்
செய்யாதாரும் ஆனார்கள். யாவரும் மன நிம்மதியுடன் தரிச
னம்செய்ய ஏற்பாடு செய்வது இயலாத காரியமோ! சுவாமி
தரிசனம்செய்யவருவோர் எல்லோருக்கும்இடவசதியிருக்கும்
படி செய்தல் முடியாதோ! இவ்வண்ணாமலையார் கோவில்
கட்டப்படுங் காலத்தில் அமைக்கப்பட்ட இடம் அப்போது
போதியதாய் இருந்திருக்கும். இப்போது சற்றும் போதாது.
யாவரும் இருந்து தரிசிக்கக்கூடிய விதமாய் அதை மாற்ற
வாவது வேறு இடம் அமைக்கவாவது செய்தல் கொள்
கைக்கு மாறுகுமோ ?

கோவிலில் பணம்கொடுப்பாரை ஒருவிதமாகவும் கொடா
தாரை மற்றொரு விதமாகவும் நடத்தும் செய்கை அடுக்கு
மென்று நான் நினைக்கவில்லை. உண்டியைவைத்துப் பணச்சீட்
டுக் கொடுத்துச் சுவாமி தரிசனம் செய்யவைக்கும் முறை நம்
நாட்டின்கண் அல்லாமல் வேறுஎங்கேயும் உண்டோ? அதனை
யான் அறியேன். யான் கோவிலுக்குப் போகும்போதெல்
லாம் இன்னானென்று ஆள் தெரியாமல் போவதுதான் வழக்
கம். அந்த முறைப்படி ஓரிடத்தில் ஒரு வெள்ளிக்கிழமை
அம்மையார் கோவிலுக்குள் புகப் பிரயத்தனம்செய்தபோது
வாயில்காப்போன் ஒருவன் காலணா உண்டியில் போட்டுத்
தான் போகவேண்டுமெனக் கூறினன். எனக்கு அப்போது
இருந்த சாந்தம் குறையுமென்றெண்ணி வாயிலினின்றே
அம்மையாரை நினைந்து வணங்கிவிட்டு வீடு திரும்பி விட்
டேன். பணமில்லாவிட்டால் கோவிலில்லை, சுவாமி இல்லை
யென்றால் நம்நாட்டின் பெரும்பான்மையோர்க்குக் கோவிலும்
அதன்கண்ணிருக்கும் கடவுளும் இல்லையென்றே சொல்ல
வேண்டும். பணம் வசூல் செய்வதைத் தடுக்க ஒரு சட்டம்
செய்வது அவசியமோ என்றுகூட நான் நினைக்கிறேன்.



கோவிலில் வழிபாடுசெய்யப் போவோனுக்கு, அவன் செல்வாக்குடையவனா யிருந்தால் அவனுக்குச் செய்யப்படும் சிறப்பு சிலசமயங்களில் சுவாமிக்குச் செய்யப்படுஞ் சிறப்பை விட விஞ்சுவது அம்மம்ம பொறுக்க முடிவதில்லை.

இன்னொரு முறையிலும் ஒரு சீர்திருத்தம் மிக அவசியம் என்று கருதுகிறேன். சுவாமி தரிசனம் ஆனபின் பிரசாதம் வழங்கும் வழக்கத்தை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். வழங்கும்முறை சுவாமி சன்னதியிலும்கூட ஜாதியையும் பணத்தையும்,செல்வாக்கையும் ஒத்துச் செய்யப்படுகின்றது. எனக்குத் தமிழில் போதுமான அறிவு இல்லையாயினும் நான் படித்த அளவிலே சைவசமயக் கொள்கையானது ஜாதிபற்றி வேறுபடுவதாகக் காண்கிலேன். ஒருகால் அது அப்படி இருப்பினும், சைவத்தின் சமரசத்திற்கு அது பொருந்துமென்று நான் நினைக்கவில்லை. வழிபடுவோர் எல்லோரும் சைவர்களானால் அவர்களை வேற்றுமைப்படுத்துவது எவ்விதத்திலும் பொருந்தாது. பிரசாதம் வழங்கும் அர்ச்சகரானவர் நிற்பவர் யாரென்று கவனியாமலே பிரசாதம் வழங்கும் மனப்பான்மை பெற்றவராதல் வேண்டும். வாங்குவோரும் சுவாமி சன்னதியில் வேற்றுமையின்று என்பதை உணர வேண்டும்.

இன்னும் இப்படியே நமது கோவில் வழிபாடுகளிலும் சமயக் கொள்கைகளை அனுசரிப்பதிலும் குறைகளை எடுத்துச் சொல்லிப் பெருக்கிக்கொண்டே போகலாம். இப்படி இக்குறைகளை நான் ஏன் எடுத்துச் சொல்லுகின்றேன் என்றால், அவைகளை நிவர்த்திக்க என்ன செய்யலாம் என்பதை அறிஞர் ஆலோசித்தல் வேண்டுமென்பதற்கே யாகும். திருத்தும் விஷயத்தில் என் அபிப்ராயத்தையும் சொல்லி உங்களைப் பரிகாரம் தேடுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

## ஒரு யோசனை

கோவில் சம்பந்தமான திருத்தங்களுக் கெல்லாம் சைவாகமத்திலும் சாஸ்திரங்களிலும் வல்லவர்கள் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தினரைக் கூட்டுவித்து அவர்களை, நூல்களை ஆராய்ந்து ஆதியில் இக்கோவிலின் நியமங்கள்

சேர்ந்தது. அங்கு பார்த்ததைச் சொல்லவும் என் நா எழ
வில்லை. தனக்குப் பிரியமானதைத் தன் வழிபடு கடவுளுக்
குக் கொடுப்பது என்னும் நியாயம்பற்றி இப்பலிகள் ஏற்பட்
டவைபோலும். ஜீவஹிம்சையை வெறுக்கின்ற நாம் இவை
களை ஆதரித்தல் கூடாது. தேங்காய் பழம் தானும் பலியின்
பாற் பட்டனவென்றே கூறுதல்வேண்டும் என்று நினைக்கின்
றேன். இவற்றில் ஜீவஹிம்சை இல்லாவிட்டாலும் இவை
நம் மனப்பான்மையைக் காட்டுகின்றன.

கோவிலில் செய்யப்படுகின்ற உற்சவங்கள் வழிபடு
வோர்க்குச் சிறிது பக்தியை உண்டுபண்ணக் கூடுமாயினும்,
அவை செய்யப்படும் காலத்தை நோக்கும்போது, அதாவது
பயிராகும் காலம் முடிந்து, அறுவடையாகித் தானியம் வீடு
வந்து சேர்ந்த பின், ஓய்வு காலத்தில் ஜனங்கள் தீநெறி
வாய்ப்படாமல் சன்மார்க்கத்தில் சந்தோஷமாகக் காலங்கழிப்
பதற்கு இவ்வுற்சவங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று சொல்
லக்கூடும். இதில் ஏதாவது திருத்தம் அவசியமா என்பதை
யும் நாம் ஆலோசித்தல் வேண்டும்.

இன்னொரு வழியிலும் கோவிலின் சீர்திருத்தம்
வேண்டியிருக்கிறது. தாசிகள் எனப்படும் தற்போதைய
வேசிகள் கோவில்களில் தினப்படி சில கிரியைகள் செய்யச்
சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கவரி வீசவும், குடமெடுக்
கவும், பாத நாட்டியம் செய்யவும் அவர்கள்
வருகிறார்கள். அவர்கள் ஆதி நோக்கத்தின்படி கோவிலுக்கு
பணிப் பெண்களாய் மாத்திரம் இருந்திருப்பின், ஒரு வேளை
அவர்களின் செய்கை ஒப்புக் கொள்ளப்படலாம். மெழுகவும்,
அலகிடவும், சுவாமிக்கு உபசரணை செய்யவும் நுழைந்த இப்
பெண்கள், கன்னிகளாகவேயிருந்து காலங்கழித்தார்கள் என்
பதற்குப் போதுமான சான்றுகள் இப்போது கிடைக்கா விட்
டாலும், அவர்கள் அப்படி இருந்தார்களென்று ஊகிக்க இட
மிருக்கின்றது. சில குடும்பங்களிலே முதலிற் பிறந்த பெண்
ணைக் கோவில் பணி செய்ய விடுத்ததாகக் கேட்டிருக்கின்
றோம். எந்தக் குடும்பமாவது தன் பெண்ணை வேசியாக விட
ஒருப்பட்டிருக்க முடியாது. இப்போது கிறிஸ்தவர்களிடே



கன்னியா ஸ்திரீகளை ஒப்ப,
'Nuns' என்று சொல்லப்படுகிற கன்னியா ஸ்திரீகளை ஒப்ப,
இவர்களும் விடப்பட்டிருக்க வேண்டும். நாட்டில் கேட்கப்
படும் மதுரைவீரன் கதை இதை ஒருவாறு மெய்ப்
பிக்கும். ஸ்ரீமீனாட்சியம்மன் கோவில் ஆலத்திப் பெண்களில்
ஒருத்தியை இச்சித்த அந்த வீரன், தனது இச்சை நிறை
வேறு முன்னமே அவன் இறக்க நேர்ந்தபோது, அவ்வாலத்
திப் பெண் உடன்கட்டை ஏறினாளென்கின்ற கதையால், இக்
கோவில் தாசிகள், வேசிகள் அல்ல என்பதை ஒருவாறு நிரூ
பித்தல்கூடும். ஆதி உற்பத்தி எப்படியிருந்தபோதிலும்,
இப்போதைய நிலைமையில் அவர்களைக் கோவிலில் இருக்க
விடுவது நம் சமயத்தை உயர்த்திப்பேச இடந்தராது.
மைசூர் முதலிய நாடுகளில் இவர்களைக் கோவிலிலிருந்து
அப்புறப்படுத்தி யிருக்கின்றார்கள் என்பது நீங்கள் அறிந்த
விஷயம். ஏன் நாம் மாத்திரம் இன்னும் தாமதிக்கவேண்டும்?

கோவில் சம்பந்தமாக இன்னொரு விஷயத்தையும் உங்க
ளுக்குச் சொல்ல விரும்புகின்றேன். கோவில் குளங்களை
நாம் தீர்த்தங்களென்று மதிக்கின்றோம். அவைகளை உண்
மையில் தீர்த்தங்களாக ஆக்கவேண்டுமென்பதுதான் எனது
கருத்து. ஒரு பக்கலில் நீர் விழவும், அதை ஜனங்கள் உப
யோகிக்கவும், உபயோகித்த நீர் மற்றொரு பக்கலில் அகன்று
போகவும் வசதி செய்யப்படல் வேண்டும்.

இப்போது சுவாமியைத் தரிசனஞ்செய்யும் முறையிலும்
சில மாறுபாடுகள் செய்ய வேண்டுவது அவசியம் என்று
நினைக்கின்றேன். நான் சில வருஷங்களுக்குமுன் பிரசித்தி
பெற்ற ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தேன். நூற்றுக்கணக்
கான ஜனங்கள் மழையில் நனைந்துகொண்டிருக்க, எனக்கும்
என்போன்றார்க்கும், பணம் தந்தார்க்கும் அக்கோயிலதிகாரி
கள் சுவாமியைக் காண இடங்கொடுத்தார்கள். ஒருநிமிட நேர
மாவது சுவாமியின் திருவடிகளில் ஈடுபட்டிருக்க வேண்டு
மென்ற எண்ணத்துடன் சென்ற எனக்கு, அந்த எண்ணம்
உதியாதவாறு பணமும் செல்வாக்கும் இல்லாத சகோதரர்
கள் மழையில் நனைந்துகொண்டு துன்பப் படுகின்றார்களே
என்கின்ற எண்ணந்தான் மேலிட்டெழுந்து வருத்திற்று.

சமீபத்தில் அண்ணாமலையாரின் இந்தக்கோவிலுக்கு வந்திருந்
தேன். தீபத்தின்போது அதிகாரத்தையுடைய சிலருக்கு
வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தவிடத்தில் நானும் இருந்தேன்.
இருந்ததின் பயனைத் தீபதரிசனத்தைச் செவ்வனே கண்
டேன். ஆனால் கூட மற்றொன்றுங் கண்டேன். திரளான
ஜனங்கள் இடிபட்டும் அடிபட்டும் தீபதரிசனம் செய்தாரும்
செய்யாதாரும் ஆனார்கள். யாவரும் மன நிம்மதியுடன் தரிச
னம்செய்ய ஏற்பாடு செய்வது இயலாத காரியமோ! சுவாமி
தரிசனம்செய்யவருவோர் எல்லோருக்கும்இடவசதியிருக்கும்
படி செய்தல் முடியாதோ! இவ்வண்ணாமலையார் கோவில்
கட்டப்படுங் காலத்தில் அமைக்கப்பட்ட இடம் அப்போது
போதியதாய் இருந்திருக்கும். இப்போது சற்றும் போதாது.
யாவரும் இருந்து தரிசிக்கக்கூடிய விதமாய் அதை மாற்ற
வாவது வேறு இடம் அமைக்கவாவது செய்தல் கொள்
கைக்கு மாறுகுமோ ?

கோவிலில் பணம்கொடுப்பாரை ஒருவிதமாகவும் கொடா
தாரை மற்றொரு விதமாகவும் நடத்தும் செய்கை அடுக்கு
மென்று நான் நினைக்கவில்லை. உண்டியைவைத்துப் பணச்சீட்
டுக் கொடுத்துச் சுவாமி தரிசனம் செய்யவைக்கும் முறை நம்
நாட்டின்கண் அல்லாமல் வேறுஎங்கேயும் உண்டோ? அதனை
யான் அறியேன். யான் கோவிலுக்குப் போகும்போதெல்
லாம் இன்னானென்று ஆள் தெரியாமல் போவதுதான் வழக்
கம். அந்த முறைப்படி ஓரிடத்தில் ஒரு வெள்ளிக்கிழமை
அம்மையார் கோவிலுக்குள் புகப் பிரயத்தனம் செய்தபோது
வாயில்காப்போன் ஒருவன் காலணா உண்டியில் போட்டுத்
தான் போகவேண்டுமெனக் கூறினன். எனக்கு அப்போது
இருந்த சாந்தம் குறையுமென்றெண்ணி வாயிலினின்றே
அம்மையாரை நினைந்து வணங்கிவிட்டு வீடு திரும்பி விட்
டேன். பணமில்லாவிட்டால் கோவிலில்லை, சுவாமி இல்லை
யென்றால் நம்நாட்டின் பெரும்பான்மையோர்க்குக் கோவிலும்
அதன்கண்ணிருக்கும் கடவுளும் இல்லையென்றே சொல்ல
வேண்டும். பணம் வசூல் செய்வதைத் தடுக்க ஒரு சட்டம்
செய்வது அவசியமோ என்றுகூட நான் நினைக்கிறேன்.



கோவிலில் வழிபாடுசெய்யப் போவோனுக்கு, அவன் செல்வாக்குடையவனு யிருந்தால் அவனுக்குச் செய்யப்படும் சிறப்பு சிலசமயங்களில் சுவாமிக்குச் செய்யப்படுஞ் சிறப்பை விட விஞ்சுவது அம்மம்ம பொறுக்க முடிவதில்லை.

இன்னொரு முறையிலும் ஒரு சீர்திருத்தம் மிக அவசியம் என்று கருதுகிறேன். சுவாமி தரிசனம் ஆனபின் பிரசாதம் வழங்கும் வழக்கத்தை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். வழங்கும்முறை சுவாமி சன்னதியிலும்கூட ஜாதியையும் பணத்தையும்,செல்வாக்கையும் ஒத்துச் செய்யப்படுகின்றது. எனக்குத் தமிழில் போதுமான அறிவு இல்லையாயினும் நான் படித்த அளவிலே சைவசமயக் கொள்கையானது ஜாதிபற்றி வேறுபடுவதாகக் காண்கிலேன். ஒருகால் அது அப்படி இருப்பினும், சைவத்தின் சமரசத்திற்கு அது பொருந்துமென்று நான் நினைக்கவில்லை. வழிபடுவோர் எல்லோரும் சைவர்களானால் அவர்களை வேற்றுமைப்படுத்துவது எவ்விதத்திலும் பொருந்தாது. பிரசாதம் வழங்கும் அர்ச்சகரானவர் நிற்பவர் யாரென்று கவனியாமலே பிரசாதம் வழங்கும் மனப்பான்மை பெற்றவராதல் வேண்டும். வாங்குவோரும் சுவாமி சன்னதியில் வேற்றுமையின்று என்பதை உணர வேண்டும்.

இன்னும் இப்படியே நமது கோவில் வழிபாடுகளிலும் சமயக் கொள்கைகளை அனுசரிப்பதிலும் குறைகளை எடுத்துச் சொல்லிப் பெருக்கிக்கொண்டே போகலாம். இப்படி இக்குறைகளை நான் ஏன் எடுத்துச் சொல்லுகின்றேன் என்றால், அவைகளை நிவர்த்திக்க என்ன செய்யலாம் என்பதை அறிஞர் ஆலோசித்தல் வேண்டுமென்பதற்கே யாகும். திருத்தும் விஷயத்தில் என் அபிப்ராயத்தையும் சொல்லி உங்களைப் பரிகாரம் தேடுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

## ஒரு யோசனை

கோவில் சம்பந்தமான திருத்தங்களுக் கெல்லாம் சைவாகமத்திலும் சாஸ்திரங்களிலும் வல்லவர்கள் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தினரைக் கூட்டுவித்து அவர்களை, நூல்களை ஆராய்ந்து ஆதியில் இக்கோவிலின் நியமங்கள்

எப்படி இருந்தன வென்றும், இப்போது அவைஎப்படி
மாறி இருக்கின்றன வென்றும், இக்காலத்துக் கேற்றவாறு
அவை இனி எப்படி மாற்றப்படலாமென்றும் தேர்ந்து சொல்
லும்படி அவர்களுக்குக் கட்டளையிடல் வெண்டும். இந்த
நிர்வாகக்கூட்டத்தில் சில லௌகிகர்களையும் சேர்த்தல்வேண்
டும். அவர்களுடைய முடிவைக் கோவில்களில் படிப்படியே
கைக்கொள்ளச் செய்யல்வேண்டும். இதற்கு ஆங்காங்குப் பிர
சாரங்கள் செய்யவேண்டிவரும். ஜனங்களையும் விரோதம்
செய்யாமல் ஒப்புக்கொள்ளச் செய்தல்வேண்டும்.

சைவர்களையும் மற்றையோர்களையும் சீர்திருத்தும்
விஷயத்தில் அதாவது சைவசமயம் என்றால் என்ன,
அதனுடைய முக்கியக் கொள்கைகள் யாவை, ஒவ்வொரு
சைவனும் தினப்படி செய்யவேண்டிய கிருத்தியங்கள்
யாவை, சைவனல்லாதாரோடு அவன் நடந்துகொள்ளும்
முறைதான் எது என்னும் விஷயத்தில் செய்யவேண்டுவது
யாதெனின், நான் முன்சொன்ன மாதிரி ஒரு சிறு புத்தகம்
எழுதி ஒவ்வொரு சைவன் கையிலும் கொடுப்பதோடு, ஒரு
பெரும் ஸ்தாபனம் தமிழ்நாடெங்கும் விஸ்தரித்து இருக்க
வும் செய்யவேண்டும். சைவ பரிபாலன சங்கம் என்ற ஒரு
தலைச் சங்கமும், பல கிளைச் சங்கங்களும் நாட்டில் எங்கும்
நாட்டப்படல்வேண்டும். தலைச் சங்கம் தமிழ்நாடு முழுவதும்
ஆணை செலுத்தும். நாட்டைப் பல சிறு பாகங்களாகப்
பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு கிளைச் சங்கம் ஸ்தா
பிக்கப்படல்வேண்டும். தவிர, சங்கத்திற்கு ஒரு தலைவனும்
பல உதவியாளரும் இருத்தல்வேண்டும். ஒவ்வொரு கிளைச்
சங்கத்திற்கும், ஒரு தம்பிரானார் இருத்தல்வேண்டும். எந்தக்
கிளைச்சங்கத்திலும் சேராத தமிழ்நாட்டின் எந்தப் பாகமும்
இருத்தல்கூடாது. கிளைச் சங்கத்தின் கடமை எதுவென்
றால், தன்னுடைய எல்லையில் வசிக்கும் ஜனங்கள் சமய
ஞானத்தையும், சகோதர பாவத்தையும் அறியும்படி செய்வ
தாம். தலைச் சங்கத்தின் கடமை கிளைச்சங்கத்தின் பரிபாலன
மும் அவைகளுக்கு வேண்டிய உதவியும் செய்வது ஆகும்.
நமது சைவ மடங்கள் நாடெங்கும் சமய ஞானத்தைப் பரப்பி



ஜனங்களை நல்வழிப்படுத்தத் தோன்றியனவென்றே நினைக்கின்றேன். அந்த நோக்கத்தின் பொருட்டுத்தான் இம்மடங்களுக்கு ஏராளமான சொத்துக்கள் நம்மக்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு இப்போதும் போதுமான சொத்துக்கள் இருக்கின்றன. நமது சைவ மடாதிபதிகளெல்லாம் ஒன்றுகூடி நான்சொன்னதுபோல தலைச்சங்கங்களையும், கிளைச்சங்கங்களையும் ஸ்தாபித்துச் சமயத்தை நெகிழவிடாது காப்பாற்றுதல் அவர்கள் கடமையென்று நினைக்கின்றேன். சைவத்தின் கொள்கைகளையும், அதனுடைய சமரசத்தையும் கூடியசீக்கிரத்தில் எல்லா ஜனங்களும் அறிந்து கொள்ள வேண்டுமானால் அதற்குச் செய்யும் ஓர் எளிய வழிஉண்டு. நான்முன் சொன்ன கிளைச்சங்கங்கள் தங்களுடைய எல்லையில், பிரதமக் கல்விச் சாலைகளை ஸ்தாபித்து அவற்றின் மூலமாகச் சமயஞானத்தைப் புகட்டினால் சில வருஷங்களில் ஜனங்களுக்கு இந்த ஞானம் உண்டாகிவிடும்.

சகோதரர்களே! சகோதரிகளே! வழக்கத்திற்கு மாறாக என்மனதில் தோன்றியவற்றை எடுத்துச் சொன்னேன். அவை குற்றம் என்று நீங்கள் கருதினால், கல்வியிலும், சமய ஞானத்திலும், ஒழுக்கத்திலும் முதிர்ந்தோர் அடங்கிய இச்சபை என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்.

மற்றுமொரு முறை சமாஜத்தின் ஆட்சியாளர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து, இனி எனக்கு இட்டபணியைச் செய்யத் துவக்குகின்றேன். அடிமுடி காணவியலாத அழற் பிழம்பாய் உருக்கொண்ட அண்ணாமலையான் அடிகளில் சிந்தையை வைத்து நமது சமாஜத்தின் முப்பதாம் ஆண்டுவிழா செவ்வனே நிறைவேறுவதாக எனச் சங்கற்பித்துத் தங்களுடைய அநுமதியை முன்னிட்டு இச்சபை திறக்கப் பட்டதாகக் கூறுகின்றேன்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# 30-வது ஆண்டு அறிக்கை

எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு.

## சமாஜம் நிறுவப்பெற்ற காலம்

இச் சமாஜம் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் - ஞானியார் மடாலயத்தில் 1905ஆம் ஜூலைமீ 7உ நிறுவப்பெற்றது. 1860 ஆம் ஆண்டு சபைப்பதிவுச் சட்டப்படி S. No. 6 of 1915 - 16 என்ற எண்ணுள்ள சபையாக 1915ஆம் டிசம்பர்மீ 11உ அன்று இச்சமாஜம் அரசாங்கத்தாரால் பதிவு செய்யப்பட்டது.

## சமாஜத்தின் நோக்கமும் தொழில் முறைகளும்

இச் சமாஜத்தின் தலையாய நோக்கமாவது சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் பரவச் செய்தலேயாம். இக்கருத்து முற்றுப் பெறுமாறு கையாளப்படும் முறைகளுட் சில கீழ் வருவனவாகும். (1) ஆண்டுக்கு ஒரு முறை இந்தியாவின் எப்பகுதியிலேனும், இலங்கை, பர்மா, மலேயா முதலிய தமிழ் வழங்கும் வெளி நாடுகளிலேனும் ஒரு மகாஜனக் கூட்டம் நடத்தல். (2) மேற் கூறிய இடங்களில் பல கிளைச்சபைகளைத் தாபித்தல். (3) புத் தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் முதலிய வெளியீடுகளை ஆங்கிலத்திலும் சுதேச மொழிகளிலும் இயற்றிச் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றிற்கு ஆதரவு புரியும் ஏனைய கருத்துக்களையும் பரவச் செய்தல் (4) 'சித்தாந்தம்' என்னும் மாதத் தமிழ்ப் பத்திரிகை நடத் தல் (5) பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள் முதலிய சிறந்த நூல்களைப் பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டு அடக்க விலைக்குத் தருதல் (6) எளிய கீழ் வகுப்பினருக்கு அறத்தின் நெறி, சமயத்தின் இயல்பு முதலியவற்றை விளக்



குதல் (7) புறச்சமயத்தினின்றும் சைவ சமயம் புக விழைவோர்க்கு வேண்டுவன செய்தல் (8) கோயில், மடம் முதலிய சமய நிலையங்களைச் சீரிய முறையில் திருத்துதல் (9) கடவுள் உண்டென்ற கொள்கையையும் அருளொழுக்கத்தையும் பரப்புவதில் ஏனைய சமயிகளோடு ஒத்துழைத்தல் (10) இளைஞர்கட்குச் சமய போதனை செய்தல். சமாஜத்தின் பொருள் நிலை, தொண்டர்களின் ஊக்கம், பொது மக்களின் ஆர்வம் முதலியவைகட் கேற்றபடி சமாஜத்தின் திருத்தொண்டு நடைபெற்று வருகிறது.

## சமாஜ நிர்வாக விவரங்கள்

சமாஜத்தின் தொழில்நிலையம் சென்னைத் திருமயிலாப்பூர் கல்லுக்காரத் தெரு, 22-ஏ., என்ற எண்ணுள்ள "திருவருளகம்" என்னும் இல்லத்திலுள்ளது. இச்சமாஜ உறுப்பினர் தொகை இவ்வாண்டின் தொடக்கத்தில் 424 ஆகவும் இறுதியில் 413 ஆகவும் உள்ளது. உறுப்பினர் தொகையைக் குறையாது அதிகரிக்கச் செய்தல் சைவ இளைஞர்கள் கடமையாகும். இவ்வாண்டில் சமாஜ நிர்வாக சபைக்கூட்டங்கள் ஐந்தும் விசேஷ மகாநாடு ஒன்றும், ஆண்டு நிறைவிழா ஒன்றும் சமாஜப் பொதுக் கூட்டங்கள் பதினேழும் நடைபெற்றன. இப்பொதுக் கூட்டங்களுள் ஒன்று திருவொற்றியூர்த் திருவிழாவிலும், மூன்று திருமயிலாப்பூர்த் திருவிழாவிலும், ஒன்று தமிழ் வருஷப்பிறப்பன்று சுந்தரர் தேவார வெளியீட்டுக்காகவும், ஒன்று எழும்பூரில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகட்குப் பிரியாவிடை யுபசாரத்துக்கும், ஒன்று அப்பர் தேவார வெளியீட்டுக்காகவும், ஒன்று திருக்குறள் விளக்கவுரை யாசிரியர் பிரிவாற்றுமைக்காகவும், ஒன்று ஆண்டுவிழாவைத் தீர்மானிக்கவும், எட்டு திருவெம்பாவை விளக்கத்துக்கும் நடந்தன ; இவற்றின் விவரங்கள் அவ்வப்போது 'சித்தாந்தம்' பத்திரிகையில் வெளியிடப்பட்டன.

## சாத்திர வகுப்பு

சைவசித்தாந்த சாத்திரங்களைப் பன்முறை பாடமாகக் கற்பித்த காலஞ்சென்ற திருவாளர் - சரவணப்பெருமாள்

பிள்ளையவர்கள் புதல்வரும் சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்ப் பேரகராதித் தலைமைப் பதிப்பாசிரியருமாகிய
சைவத் திருவாளர்-எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்கள் உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த "சிவப்பிர
காசம்" என்ற சார்புநூலைத் தைப்பூச நன்னாளன்று
தொடங்கி ஞாயிற்றுக்கிழமைதோறும் பாடமாக நடத்திவரு
கிறார்கள். இவ்வாண்டில் 27 வகுப்புகள் நடந்தன; 30 பாடல்
கள்வரையில் பாடம் முடிந்துள்ளது. சைவஇளைஞர்கள்
இவ்வகுப்புக்கு மிகுதியாக வந்து பயன்பெறுவார்களென்று
சமாஜம் எதிர்பார்க்கின்றது. ஊக்கங் குன்றாது மிக்க ஆர்வத்
தோடும் ஆராய்ச்சித் திறமையோடும் இவ்வகுப்பை நடத்தி
வரும் திரு. பிள்ளையவர்கட்குச் சமாஜம் நன்றி செலுத்து
கின்றது. இவர்கள் ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்தல் முதலிய
பல வழிகளிலும் சமாஜத்துக்குப் பேருதவி செய்தலும்
ஈண்டு பாராட்டுதற் குரியது.

## இணைக்கப்பெற்ற சைவ சபைகள்

இவ்வாண்டில் கீழே குறிக்கப்பட்டுள்ள பன்னிரண்டு
சைவ சபைகள் நமது சாஜத்தோடு இணைக்கப்பெற்றுள்ளன:-

1. தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், திருநெல்வேலி
2. சைவசித்தாந்த சபை, ஆத்தூக்குடி
3. ஷ டி திரிசிராப்பள்ளி
4. ஷ டி தஞ்சாவூர்
5. ஷ டி ஸ்ரீவில்லிபுத்தூர்
6. ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை, இராயப்பேட்டை
7. சமரசவேத சன்மார்க்க சங்கம், பெங்களூர்
8. சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபை, புரசபாக்கம்
9. ஸ்ரீ காரணீசுவரர் தமிழ்வேத பாராயண பக்தஜன சபை, சைதாப்பேட்டை
10. சைவ சித்தாந்த இளைஞர் சங்கம், தஞ்சாவூர்
11. ஸ்ரீ வாகீச பக்தஜன சபை, திருவோத்தூர்
12. திருநாவுக்கரசு சித்தாந்த சபை, களிமேடு, தஞ்சை ஜில்லா.

இச்சபைகளின் ஆண்டு விழா முதலிய நிகழ்ச்சிகள் அவ்வப்போது 'சித்தாம்' வாயிலாக வெளி வந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான ஊர்களுள்ள இத்தமிழ் நாட்டில் ஒரு



ஊருக்கொரு சைவ சித்தாந்த சபையேனும் இருத்தல்வேண்டும். திருவண்ணாமலை போன்ற சிறந்த சிவஸ்தலங்களில் சைவ சித்தாந்த சபைகள் இருந்தே தீரவேண்டும். நமது நாட்டிலுள்ள சைவ சபைகளெல்லாம் நமது சமாஜத்தோடு இணைப்புப்பெற்று ஒத்துழைக்க வேண்டுமென்று சமாஜம் மிகத் தாழ்மையாக விண்ணப்பித்துக் கொள்கின்றது.

## சைவத் தேர்வுகள்

இவ்வாண்டில் நடைபெற்ற சைவத் தேர்வுகளில் நான்கு இளைஞர்கள் இளஞ்சைவப் புலவர் பட்டம்பெறும் தகுதியுடையாரென்று தீர்மானிக்கப்பெற்றனர். இத்தேர்வுகளில் விஞாத்தாள் உதவி விடைகளைப் பரிசீலனை செய்து உபகரித்த திருவாளர்கள் - எஸ். வையாபுரிப் பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவர்க்கும், திருப்பாதிரிப்புலியூர், திருப்பாண்டிக்கொடுமுடி, திருமயிலாப்பூர், தஞ்சாவூர் ஆகிய நான்கு இடங்களிலும் இத்தேர்வுகளைச் சமாஜச் சார்பில் செவ்வையாக நடத்தி யுபகரித்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. பெ. கோவிந்தமூப்பனார், திரு. ச. சிவகுமாரப் பிள்ளை, திரு. டி. பி. கே. அழகர்சாமிப் பிள்ளை யவர்கட்கும் சமாஜம் நன்றி செலுத்துகின்றது. அடுத்த ஆண்டிலேனும் நூற்றுக்கணக்கான சைவ இளைஞர்கள் இத்தேர்வுகளிற் கலந்துகொள்வார்களென்று சமாஜம் எதிர்பார்க்கின்றது.

## வெளியீடுகள்

இவ்வாண்டில் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் மூலம் உரையோடு சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிடப்பட்டது. அப்பர் தேவாரமும் சுந்தரர் தேவாரமும் இரண்டாம் பதிப்பாக முறையே திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் பொருளுதவியாலும், திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் பொருளுதவியாலும் வெளியிடப்பட்டன. இவ்விரு பெரியார்கட்கும் சமாஜம் நன்றியுடைத்து. 'ஞானாமிர்தம்' என்ற பழைய நூலுக்குத் தெளிவான உரையொன்றைச் "சித்தாந்தம்" பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் சைவத்திருவாளர் - ஔவை - சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் தொண்டு பெரிதும்போற்றுந்தகையது.

## நன்றிகூறல்

சமாஜக் காரியங்களைச் செம்மையாக நடத்திய காரிய தரிசி, பொருட்காப்பாளர், கணித பரிசோதகர் முதலிய உத்தியோகஸ்தர்கட்கும், பத்திரிகைக்குக் கட்டுரைகள் உதவிய அறிஞர்கட்கும், சமாஜ வெளியீடுகளைப் பரப்பிய தொண்டர்கட்கும், கூட்டங்களை நடத்திவைத்த அன்பர்கட்கும், சமாஜக் கூட்டங்கட்கு இடந்தந்து வேறுபல வழிகளிலும் சமாஜத்தோடு சிறப்பாக ஒத்துழைத்த இராயப்பேட்டை - ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினருக்கும், சமாஜ வெளியீடுகளைத் திருத்தமாகவும், செம்மையாகவும் அச்சிட்டு உபகரித்த சாது அச்சுக்கூடத்தினருக்கும், சமாஜ வெளியீடுகளை அச்சிடுங்கால் பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்குதல், அச்சுத்தாள்களைப் பரிசோதித்தல் முதலிய பல வழிகளிலும் பேருதவி புரிந்த திருவாளர்கள் - எஸ். வையாபுரிப் பிள்ளை, மா. துரைசாமி முதலியார் முதலிய அறிஞர்கட்கும் சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது.

## வேண்டுகோள்

பன்னிருதிருமுறைகளும் பதினன்கு சாத்திரங்களும் சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்புக்களாக வெளி வந்துவிட்டன. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் முதலிய அருள்நூல்களும் சமாஜப் பதிப்பாக இவ்வாண்டு விழாவில் வெளியிடப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணமும் சிவஞானபோத மாபாடியமும் இனி,விரைவில் வெளியிடப்படக்கூடிய நூல்களாகும். இத்தகைய வெளியீடுகள் முதலிய நன்முயற்சிகட்கும் வேறுபல தொண்டுகட்கும் சமாஜத்துக்கு எல்லா வழிகளிலும் ஊக்கமும் பொருளும் அளித்துச் சைவ நன்மக்கள் உதவிபுரிய இறைவன் திருவருள் துணை செய்வதாக.

இங்ஙனம்
உத்தரவின்படி
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாவது ஆண்டு (1-12-1934 முதல் 30-11-1935 வரை)

வரவு செலவுக் கணக்குத் தொகுப்பேடு

| வரவு | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| ஆயுள் சந்தா | ... | 100 | 0 | 0 |
| சந்தா | ... | 719 | 8 | 0 |
| இணைத்தல் சந்தா | ... | 30 | 0 | 0 |
| தேர்வுக் கட்டணம் | ... | 8 | 0 | 0 |
| வெளியீடுகள் விற்பனை | ... | 987 | 8 | 9 |
| நன்கொடை | ... | 121 | 0 | 0 |
| தபால் வகை | ... | 50 | 7 | 0 |
| சில்லரை வகை | ... | 0 | 8 | 0 |
| வட்டி வகை | ... | 15 | 2 | 2 |
| இந்தியன் பாங்கியிலிருந்து | ... | 290 | 0 | 0 |
| வேளாள பாங்கியிலிருந்து | ... | 8 | 2 | 2 |
| | ... | 2330 | 4 | 1 |
| ஆரம்ப இருப்பு | ... | 19 | 2 | 0 |
| ஆகமொத்தம் | ... | 2349 | 6 | 1 |

| செலவு | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| வெளியீடுகள் | ... | 1010 | 5 | 0 |
| சித்தாந்தம் | ... | 341 | 1 | 4 |
| புத்தகம் பேணு முதலியன | ... | 17 | 6 | 0 |
| தபால் வகை | ... | 191 | 13 | 9 |
| சில்லரை வகை | ... | 31 | 10 | 6 |
| முன்பணம் திருப்பித் தந்தது | ... | 50 | 0 | 0 |
| கூட்டங்கள் | ... | 2 | 0 | 0 |
| இந்தியன் பாங்கியில் கட்டியது | ... | 695 | 2 | 2 |
| | ... | 2339 | 6 | 9 |
| முடிவு இருப்பு | ... | 9 | 15 | 4 |
| ஆகமொத்தம் | ... | 2349 | 6 | 1 |

### சமாஜத்தின் ரொக்க இருப்பு

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| இந்தியன் பாங்கியில் | ... | 708 | 2 | 2 |
| வேளாள பாங்கியில் | ... | 0 | 4 | 0 |
| கையிருப்பு | ... | 9 | 15 | 4 |
| ஆகமொத்தம் | ... | 718 | 5 | 6 |

ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி.
தி. க. சுந்தரம் பிள்ளை, பொருட்காப்பாளர்.
க. இரத்தின முதலியார், மாதக்கணித பரிசோதகர்.
ஈ. ந. தணிகாசல முதலியார்,
ஆண்டுக்கணித பரிசோதகர்.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
## 30-வது ஆண்டுக் கணித பரிசோதனை அறிக்கை

இந்த ஆண்டின் கணக்குகளைப் பரிசோதித்ததில்
சென்ற ஆண்டுக்கு இந்த ஆண்டு கையிருப்பு ரூ. 330-8-2
விருந்து ரூ. 718-5-6க்கு அதிகரித்திருக்கிறது. இதன்றியும்
அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் முதலிய அருள்
நூல்கள் யாவும் அடக்க விலைக்கு அச்சிடப்பட்டன. அவை
சமாஜ ஆண்டு விழாவில் வெளிவரும். அதற்காகக் காகிதம்
வாங்கிய மொத்தத்தொகை ரூ. 375-1-7. இவ்வாண்டில் சித்
தாந்த சாத்திரங்கள் விரைவில் விற்கப்பட்ட மாதிரி வரும்
ஆண்டில் திருப்புகழ் முதலியன விரைவில் விலைபெறுமாயின்
ஏனைய சைவ நூல்கள் வெளி வருதற்கு மிகவும் உதவி
யாகும்.

இந்த ஆண்டு வரவு செலவுத் தொகுப்பு ஏடு இத்துடன்
சேர்க்கப்பட்டது.

18-12-35.

ஈ. ந. தணிகாசல முதலியார்,
ஆண்டுக் கணித பரிசோதகர்.

---

உ
சிவமயம்

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
## ௩௧-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள்

[குறிப்பு:—கீழ்வரும் பெயர்கள் ஒவ்வொன்றின் முன் சைவத் திருவாளர் என்றும், பின் அவர்கள் என்றும், சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**
சுவாமி விபுலாநந்தர்

**உதவித் தலைவர்கள்**
கீ. தெய்வசிகாமணி முதலியார்
ஜி. இராமானுஜ முதலியார்

**பொதுக் காரியதரிசி**
ம. பாலசுப்பிரமணிய முதலியார்

**உதவிக் காரியதரிசி**
ஜி. கலியாணம் பிள்ளை

**பொருட்காப்பாளர்**
தி. க. சுந்தரம் பிள்ளை

**பத்திராசிரியர்**
ச. சச்சிதானந்தம் பிள்ளை

**உதவிப் பத்திராசிரியர்**
மா. துரைசாமி முதலியார்

**ஏனைய நிருவாக சபையினர்**
பி. ஆலாலசுந்தரம் செட்டியார்
கச்சி - முனிசாமி உடையார்
பி. தியாகராஜ பிள்ளை
கின்றை - தங்கவேல் முதலியார்
சி. அரங்கநாத முதலியார்
திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
அ. சோமசுந்தரம் செட்டியார்
ச. நடேச முதலியார்
எஸ். வையாபுரிப் பிள்ளை
திரு. வி. உலகநாத முதலியார்
தி. நல்லசிவன் பிள்ளை

**வரவேற்புக் காரியதரிசி**
T. N. சபாபதி முதலியார்

**மாதக்கணக்குப் பரிசோதகர்**
க. இரத்தின முதலியார்

**ஆண்டுக்கணக்குப் பரிசோதகர்**
ஈ. ந. தணிகாசல முதலியார்

**பத்திராசிரியக் கழகம், பணியாளர் கழகம்**
ந. மு. வேங்கடசாமி நாட்டார்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
மு. கதிரேசச் செட்டியார்
ச. சச்சிதானந்தம் பிள்ளை
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
சாமி - வேலாயுதம் பிள்ளை
அ. சோமசுந்தரம் செட்டியார்
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
மா. துரைசாமி முதலியார்

**ஆராய்ச்சிக் கழகம்**
மு. கதிரேசச் செட்டியார்
கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. மு. வேங்கடசாமி நாட்டார்
ச. சச்சிதானந்தம் பிள்ளை
ம. சுவாமிநாத சிவாசாரியார்

வேளியூர் ஆலோசனை சபை

**செங்கற்பட்டு**

வா. தி. மாசிலாமணி முதலியார்
க. வஜ்ரவேல் முதலியார்
அ. மு. பரமசிவானந்தம்

**வட ஆர்க்காடு**

வடமாங்கூர் - அருணாசல முதலியார்
ஜீ. நாராயணசாமி முதலியார்
புரிசை - முருகேச முதலியார்

**தென் ஆர்க்காடு**

சொ. இராஜகோபாலசெட்டியார்
பு. வே. தேவராஜ முதலியார்
எம். சின்னசாமி செட்டியார்

**தஞ்சாவூர்**

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
அடிசைக்கிழார் - அ. சிதம்பரனார்
டி. எஸ். தியாகராய ஞானியார்

**திரிசிராப்பள்ளி**

பி. மாணிக்க செட்டியார்
அ மு சரவண முதலியார்
எஸ். கனகசபாபதி பிள்ளை

**இராமநாதபுரம்**

செ. பழ. சித. சதாசிவ செட்டியார்
சி. ராம. மு. செ. இலக்குமண செட்டியார்
வெ. நா. இலக்குமணசெட்டியார்

**திருநெல்வேலி**

கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. சிவகுருநாத பிள்ளை

மா. வே. செல்லையப்ப பிள்ளை

**மதுரை**

எம். எல். இராமசாமிப் பிள்ளை
எஸ். முத்துக்கருப்ப பிள்ளை
கே. கோதண்டபாணி பிள்ளை

**கோயம்புத்தூர்**

பி. வெங்கடாசல முதலியார்
சி. எம். இராமச்சந்திர செட்டியார்
பி. காளத்தி முதலியார்

**திருவிதாங்கூர்**

ரா. பத்மநாப பிள்ளை

**பெங்களூர்**

ஏ. ஏ. இரத்தினசபாபதி முதலியார்

**புதுக்கோட்டை**

வ. பழ. சா. சாமிநாதசெட்டியார்
ம. பெரி. வீர. அழகர்சாமிசேர்வை

**சேலம்**

அ. வரதஞ்சைய பிள்ளை
அ. மாணிக்க செட்டியார்
வீ. உலகஊழியனார்

**நீலகிரி**

வை. குஞ்சிதபாதம் பிள்ளை

**சிற்றூர்**

மோஹனவேல் செட்டியார்
இராஜவேல் முதலியார்
சி. நரசிங்க முதலியார்

**புதுச்சேரி**

சி. அண்ணாமலை முதலியார்

---

# சமாஜ முப்பதாவது ஆண்டு விழா

[G. கலியாணம், உதவிக் காரியதரிசி]

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் முப்பதாம் ஆண்டு விழாவும், அதை யொட்டிய சைவர் மகாநாடு, சைவமங்கையர் மகாநாடு, சைவஇளைஞர் மகாநாடு முதலியவைகளும் திருவண்ணாமலையில் சத்திவிலாச சன்மார்க்க சபாமண்டபத்தில் சென்ற டிசம்பர் மாதம் 29, 30, 31-ஆம் தேதிகளில் மிகச் சிறப்பாக நடந்தேறின.

28-12-35 இரவு 7 மணிக்கு மகாநாட்டுத் தலைவர் உயர் திரு. சுவாமி விபுலாநந்தர் அவர்களையும், சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர் திரு. G. கலியாணம் பிள்ளை அவர்களையும் யானை முதலிய விருதுகளுடனும், மேள வாத்தியங்களுடனும் அன்பர்கள் புடைசூழ ஈசானிய மடத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். தெருக்களிலெல்லாம் தலைவர்களை வருகவென் றழைக்கும் வளைவுகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

29-12-35 காலை 8 மணிக்கு எல்லா அன்பர்களும் தேவார திருவாசக பாராயணம் செய்துகொண்டு முறைப்படி அருணாசலேசுவரர் திருக்கோயில் வழிபாடு செய்தனர். பிறகு, அருணைக்கோபுரத்து மேவிய முருகப்பெருமான் திருமுன் சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்பாகிய அருணகிரிநாதர் திருப்புகழ்நூல் வெளியிடப்பட்டது. அதற்காக, செந்தமிழ்ப் புரவலர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் ஒரு மாபெருங் கூட்டம் கோயில் மண்டபத்தே கூடியது. சமாஜ அமைச்சர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் நூலின் பதிப்புரையைக் கூட்டத்தினர்க்குப் படித்துக் காட்டினர். தலைவர் தம் அரிய முன்னுரை கூறியபின்னர் திருவாளர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சச்சிதாநந்தம்பிள்ளை, திரு. வி. உலகநாத முதலியார், மா. துரைசாமி முதலியார், புரிசை. முருகேச முதலியார் முதலியவர்கள் அருணகிரிநாதர் வாழ்

வைப் பற்றியும், அவர் அருளிய திருப்புகழ் முதலிய நூல் களின் அருமை பெருமைகளைப் பற்றியும் இனிதாக எடுத்துக் கூறிக் கூட்டத்தினரை இன்பக் கடலுள் ஆழ்த்தினர். திரு. வே. தியாகராய முதலியார் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் பகல் 12 மணிக்கு இனிது முடிந்தது.

அன்று மாலை 2 மணிக்குச் சமாஜ விடுதியான ஓயா மடத்தினின்றும் மகாநாட்டுத் தலைவர் மேள வாத்தியங்க ளுடன் ஊர்வலமாகத் திருக்கோயிலிலுள்ள சத்திவிலாச சன்மார்க்க சபை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். அம் மண்டபம் கொடிகளாலும், பூஞ்செடி களாலும், உயரிய கருத்துக்க ளடங்கிய பழமொழிகளா லும் கண்கவர் வனப்புடையதாக அலங்கரிக்கப்பட் டிருந் தது. அதற்காக திரு. ந. முனிசாமி முதலியார் அவர் கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி பெரிதும் பாராட் டத்தக்கது. சபா மண்டபத்தில் மாபெருங் கூட்டம் கூடியிருந்தது. திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், சென்னைமாகாணக் கூட்டுறவுக் கூட்டுப்பதிப்பாளரான திரு. திவான்பகதூர் கி. தெய்வசிகாமணி முதலியார் அவர்களை மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி விண்ணப்பித்துக் கொண் டனர். திறப்பாளர் தம் திறப்புப் பேருரையை (33-ம்பக்கம் பார்க்க) நிகழ்த்தினார்கள். அவைத்தலைவர் உயர் திரு. விபுலா நந்த அடிகள் தலைமை பூண்டனர். திரு. புரிசை முரு கேச முதலியார் அவர்கள் தலைவர்கள், திறப்பாளர் முதலிய வர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். பின்னர் அவைத்தலைவர் அரியதோர் தலைமைப் பேருரையை யாற்றினார்கள் (முதற்பக்கம் பார்க்க). சமாஜ அமைச்சர் ஆண்டு அறிக்கையை (48-ம்பக்கம் பார்க்க) வாசித்தனர். அதன் பிறகு கீழ்க்கண்ட சொற்பொழிவுகள் நிகழ்ந்தன :—

உயர்திரு. கருணைலய சுவாமிகள்—" தல மகிமை "

திரு. பி. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ.
—" தித்திக்கும் மணிவார்த்தை "

சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார்
—" பௌஷ்கராகமத்தியிற் சில அரும்பொருள்கள் "



திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.
—" கந்தபுராணம் நம் சொந்த புராணம் "

கடைசியாகத் தலைவர் கருத்துரை கூறியதும் இரவு 10 மணிக்கு முதல் நாள் கூட்டம் இனிது நிறைவேறியது.

30-12-35 இரண்டாம் நாள் காலை 8-30 மணிக்கு சைவஇளைஞர் மகாநாடு திரு. G. கலியாணம் பிள்ளை. பி. ஏ. டிப். எக்., அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர்தம் பேருரையை (11-ம் பக்கம் பார்க்க) நிகழ்த்தியபின்னர் திரு வாளர்கள். வெள்ளைவாரணன், சிவக் கொழுந்து இவர்கள் முறையே " திருநாவுக்கரசர் கவன்றதேன் " " சம்பந்தர் தேவாரச் சிறப்பு " என்பனபற்றி சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரையின் பின் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இனிது நிறைவேறியது.

சைவ மங்கையர் மகாநாடு 11-மணிக்கு பண்டிதை உயர் திரு. அசலாம்பிகையம்மையார் தலைமையில் குழுமியது. தலைவியர் தம் அரிய பேருரையாற்றினார்கள். (23-ம் பார்க்க) மங்கையர்க்கு "சித்தாந்தம்" பத்திரிகையைப் 'பாதிகைபொப் பத்திற்குக் கொடுக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை நிறை வேற்றிய பின்னர் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

அன்று மாலை 2-30 மணிக்கு மறுபடியும் மகாநாடு கூடி யது. அவ்வமயம் கீழ்க் குறித்துள்ள பேரறிஞர்கள் அரிய சொற்பொழிவாற்றினார்கள் :—

திரு.உ.அரு. அருணசலஞ்செட்டியார்—"சேக்கிழாரும், மகளிரும்"
" தூடிசைக்கிழார் அ. சிதம்பரனார் —" அடங்கன்முறை "
" தியாகராச ஞானியார் —" சமயத் தொண்டு "
" அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.,
—" தூரிசுகட் குடனின்ற தூய்மை "
" ந. மு. வேங்கடசாமி நாட்டார்
—" பண்டைத் தமிழரும், முருகவேள் வழிபாடும் "
" பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார்
—" தாயுமானவர் அநுபவநிலை "
" திரு. வி. கலியாணசுந்தர முதலியார் —"புனருத்தாரணம்"

அடுத்த ஆண்டில் மகாநாட்டைத் திருவாரூரில் நடத்
தும்படி திரு. தியாகராச ஞானியார் விண்ணப்பித்துக்கொண்
டார். சமாஜ அமைச்சரும் சமாஜச் சார்பாக அதை யேற்
றுக்கொண்டார். தலைவர் அவர்களின் கருத்துரையின் பின்
கூட்டம் இரவு 11 மணிக்கு நன்கு முடிந்தது.

31-12-35 மூன்றாம்நாள் காலை 8-30 மணிக்கு மகாநாடு
மீண்டும் கூடியது. கீழ்க்கண்டபடி சொற்பொழிவுகள்
நிகழ்ந்தன :—

திரு. கே. வஜ்ரவேல் முதலியார், பி. ஏ., எல். டி.
—"திருக்குறளும், சிவநெறியும்"

" ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
—"திருமுருகாற்றுப்படை"

" காவித்தண்டலம் - வேதாசல முதலியார்
—" மனத்தின் மாண்பு"

தலைவர் அவர்களின் கருத்துரைக்குப் பின் காலைக் கூட்
டம் 12 மணிக்கு முடிந்தது. அன்று மாலை 2 மணிக்குச்
சமாஜக் காரியக் கூட்டம் நடந்தது. புதிய ஆண்டுக்கு
உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். (56-ம்
பக்கம் பார்க்க) கோவில்களிலுள்ள வாகனம் முதலிய
சொத்துக்களை அறநிலையப் பாதுகாப்பு மன்றத்திற்குச்
செலுத்தவேண்டிய பாக்கிக்காக ஜப்திசெய்யக் கூடாதென்
றும், அதற்குத்தக்கபடி சட்டத்தைத் திருத்தியமைக்க அர
சாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்றும் ஒரு
தீர்மானத்தைத் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்
கள் கொண்டுவந்தார்கள். திருவாளர்கள் T. P. மீனாட்சிசுந்த
ரம் பிள்ளை, தியாகராசஞானியார், V. S. பத்மநாப முதலி
யார், S. S. பாரதியார், அண்ணாமலைப் பிள்ளை, அருணா
சலம் செட்டியார் முதலியவர்கள் அதை ஆதரித்துப்
பேசினார்கள். தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது
பின்னர் கீழ்க்குறித்த வண்ணம் அரிய சொற்பொழிவுக
நிகழ்ந்தன் :—

திரு. S. S. பாரதியார் எம். ஏ., பி. எல்.
—" பெரிய பொருள்கள் பற்றிச் சில சிறிய ஆராய்ச்சிக



" C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ.,—" திருவண்ணாமலை "
" T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை. எம். ஏ., பி. எல்.,
—" கந்தர் அந்தாதி "

" D. கோபால் செட்டியார்
—'ஸ்வீடன் பர்க்கும், சைவசித்தாந்தமும் "

மகாநாட்டில் சொற்பொழிவுகள் ஒவ்வொன்றிற்கு
மிடையே திரு. சுந்தரமூர்த்திகள் தேவார, திரு
வாசகம், திருப்புகழ்ப் பாடல்களை இன்னிசைக் கருவிகளுடன்
பாடி கூட்டத்தினரைப் பேரானந்தத்தில் திளைப்பித்தனர்.
தலைவர்கள் சொற்பொழிவாளர்கள் முதலியவர்களுக்கு சமா
ஜத்தின் சார்பாக சமாஜ அமைச்சர் வந்தனை கூறினார். பின்னர்
வரவேற்புக் கழகத்தின் சார்பாகத் திருவாளர்கள் புரிசை -
முருகேச முதலியார், அண்ணாமலைப் பிள்ளை இவர்கள் நன்றி
கூறினர். உயர்திரு. சிதம்பரசுவாமிகள் ஆசீர்வாதப் பேரு
ரையை ஆற்றினார்கள். அவைத்தலைவர் அவர்கள் தமது
முடிவுரையில் சிறிய கருத்துக்களைச் சுருக்கச் சொல்லிவிளங்க
வைத்தனர். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் செவ்வனே
நிறைவேறியது.

மூன்று நாட்களிலும் உள்ளூர் வெளியூர்களிலிருந்து
பெண்மக்கள் உள்பட திரளானவர்கள் வந்திருந்து சொற்
பொழிவுகளைக்கேட்டு ஆனந்தித்தது பெரிதும் போற்றத்
தக்கது. இந்த ஆண்டு விழாவை மிகவும் சிறப்பாகத் தம்
சொந்தச் செலவில் நடத்திவைத்த திரு. புரிசை. முருகேச
முதலியார் அவர்களுக்கு யாம் யாது கைம்மாறு செய்யவல்
லேம் ! அவர்கள் நீடூழி வாழ்க.

## தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்

# 52-ம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சி

[ந. சிவகுருநாத பிள்ளை]

**தூ**த்துக்குடி சைவசித்தாந்த சபையின் 52-ம் ஆண்டு நிறைவுவிழா 1935வரு டிசம்பர்மீ 28, 29-ம் நாட்களில், பாம்பே டிப்டி அக்கவுண்டெண்டு ஜெனரல் சைவத் திருவாளர் T. சிவராம சேதுப்பிள்ளை, M. A., B. L., F. C. S. அவர்கள் தலைமையிற் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் 28உயன்று காலையில் திருநெல்வேலி உயர்திரு சுந்தரஓதுவார் மூர்த்திகள் தேவாரக் குழாங்களுடன் சபையார் திருவீதி வலம் வந்து சிவாலய சேவை, மடாலய சேவை செய்யப் பெற்றனர். மாலை 3 மணிக்குப் பேரவை தொடங்கப்பெற்றது. திருநெல்வேலி சிந்துபூந்துறை ரிட்டையர்டு தாசில்தார் உயர்திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A. அவர்களால் பேரவை திறந்து வைக்கப்பெற்றது. பின்னர்த் தலைவர் நியமனமும் வரவேற்பும் நடைபெற்றன. அமைச்சரவர்களால் சபையின் 52-ம் ஆண்டு அறிக்கை படிக்கப்பெற்றது. தலைவரவர்கள் "நான்கண்ட துணையாளன்" என்னும் பொருள்பற்றி அரும்பொருள் பொதுள முன்னுரை நிகழ்த்தினார்கள். அதன் பின்னர் உயர் திருவாளர்கள் T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A. (சாத்தூர்), பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் (தஞ்சை), அ. மு. சரவண முதலியாரவர்கள் (லால்குடி), K, ஆறுமுகம் பிள்ளையவர்கள் (நாகர் கோவில்) ஆகிய பெரியோர்கள் முறையே "திருவள்ளுவரின் தெய்வப் புலமை", "காணியமைக்காணி", "இயற்பகையார் ஏற்றமும் - இறைவன் தோற்றமும்", "சமயப் பழிப்பொழிப்பு" என்னும் பொருள்கள்பற்றிக் கேட்டவர்ப் பிணிக்குந் தகையவாய்ச் சொற்பொழிவு செய்தார்கள். கடவுள் வாழ்த்துடன் முதல்நாள் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

இரண்டாம் நாள் 29-12-35 காலை உயர்திரு மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்களால் சித்தாந்த மாணவர்களின்



ஐய வினாக்கட்கு விடையளிக்கப் பெற்றது. உயர்திரு T. S. கந்தசாமி முதலியார், B. A. அவர்கள் தலைமையில் சைவ இளைஞர் கூட்டம் தொடங்கப்பெற்றது. தலைவரவர்கள் முன்னுரையாக இளைஞர்களின் ஊக்கத்தைப்பற்றியும், இளைஞர்களை இற்றைவரை எக்காரியங்களையும் முன்னின்று சாதித்திருக்கின்றார்கள் என்பதைப் பற்றியும் நமது சைவ இளைஞர்கள் முன்னின்று நமது சைவ சமயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதைப் பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினார்கள். திருவாளர்கள் வேலாயுதஓதுவார்மூர்த்தியவர்கள் "அருண்மொழித்தேவரின் அருள் மொழிகள்" என்னும் பொருள்பற்றியும், மு. ச. சம்பந்தம் அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள்பற்றியும் இனிது சொற்பொழிவாற்றினார்கள். தலைவர்களின் முடிவுரைக்குப் பின் காலைக்கூட்டம் இனிது நிறைவேறிற்று.

மீண்டும் மாலை 3½ மணிக்கு உயர்திரு T. சிவராம சேதுப்பிள்ளையவர்கள் தலைமையில் பேரவை தொடங்கப் பெற்றது. தலைவரவர்களால் முதல்நாள்நடந்த சொற்பொழிவுகளுக்கு முடிவுரை கூறப்பட்டது. பின்னர்த் திருவாளர்கள் S. பெரியசாமிப் பிள்ளையவர்கள் (பரங்கிப்பேட்டை), அ. மு. சரவண முதலியாரவர்கள் (லால்குடி), பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் (தஞ்சை), R. P. சேதுப்பிள்ளையவர்கள், B. A., B. L. (அண்ணாமலைநகர்), K. ஆறுமுகம் பிள்ளையவர்கள் (நாகர்கோவில்) இப்பெரியோர்களால் முறையே "திருநாவுக்கரசும் திருமுறை மாண்பும்", "சேக்கிழார் காட்டிய சேயிழையாரிற்சிலர்", "தானேயுமக்கு வெளிப்படும்", "தமிழ் மொழிமாண்பு" "இறைவன் அருள்நிலை" என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் கேளாரும் வேட்பமொழியச் செய்யப்பெற்றன. தலைவர்களால் ஒவ்வொரு சொற்பொழிவுக்குஞ் சொற்சுருங்க முடிவுரை கூறப்பட்டது.

இதன் அடியிற் கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன :

(a) கலாசாலைகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் விரிவுரையாளர் (Tamil Lecturer)களுக்கு மற்றைய பாடங்களைக்

கற்பிக்கும் விரிவுரையாளர்க்குப் போன்று சம்பளமும், பதவியும் கொடுக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது.

(b) தமிழ்மொழி வளர்ச்சி யடைவதற்கு இன்றியமையாத பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பு வைத்து நடத்தவேண்டும் என்று சென்னைச் சர்வகலாசாலையை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(c) கல்லூரிகளில், ஆங்கில பாடமொழிய ஏனைய பாடங்கள் யாவும் நாட்டுமொழியின் வாயிலாகப் பயிற்றப்படவேண்டும் என்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

கடவுள் வாழ்த்துடன் பேரவை நிறைவேறிற்று.

இரண்டு நாட்களிலும் திரளான மக்கள் வந்து குழுமியிருந்தார்கள். உயர்திரு. சுந்தரஓதுவார்மூர்த்திகளால் இடையிடையே தமிழ்மறை இன்னிசையுடன் ஓதப்பெற்றது. வெளியூர்களினின்று பல அன்பர்கள் போந்திருந்தார்கள். வரவேற்புக் கழகத்தார் விருந்தினரைத் தக்க முறையில் உபசரித்தனர்.

விழாவின் சார்பாக மூன்றும்நாள் 30-12-35 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குச் சைவமங்கையர் மகாநாடு கூட்டப்பெற்றது. இந்நகர் முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமதி இராஜகோபால் ஜெகதீஸ்வரியம்மாளவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவியாரவர்களால் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தைப் பீடிகையாகக் கொண்டு பெண்மக்கட்கு உறுதி பயக்கத்தக்க முன்னுரை நிகழ்த்தப்பெற்றது. பெரியவர்களும் சிறுமியர்களுமாக எழுவர்கள் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவியார் முடிவுரைக்குப்பின் மகாநாடு இனிது நிறைவேறியது.

## தேரழுந்தூர் என்னும் திருவழுந்தூரில் சமாஜத் தொண்டு

சென்ற 30-11-35 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படியூர் போர்டு பாடசாலையில் அச்சாலைத் தலைமை ஆசிரியர் திரு. கோபாலய்யங்கார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் நமது சமாஜ அங்கத்தினர் திரு. G. கலியாணம், B.A., Dip. Ec. அவர்கள் "சைவ சித்தாந்தமும், கம்பரும்" என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர், அப்பொருள் பற்றியே, திருவாளர்கள் சாமிநாத முதலியார், கிருஷ்ணமாச்சாரியார், T. A. பழனியப்ப முதலியார் இவர்கள் பேசினார்கள். தலைவரவர்கள் கம்பர் பிறந்த அவ்வூரில் அவருக்கு ஞாபகச்சின்னம் நாட்ட எல்லோரும் உதவிபுரிய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தம் முடிப்புரையைக் கூறி முடித்தார்கள். தலைவர்க்கும், திரு. G. கலியாணம் அவர்கட்கும் மாலைகள் சூட்டப்பெற்றபின் கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது நிறைவேறியது. பிரபல மிராசுதாரும், ஆலய தரும கர்த்தருமான திரு. K. V. நாராயணசாமி முதலியார், B.A. அவர்கள் இக்கூட்டத்தைக் கூட்ட எடுத்துக்கொண்ட பெருமுயற்சி போற்றத்தக்கது.

---

## மதிப்புரை

திவ்யஞானபோதம் விலை ரூ. 2. இந்நூலில் பெஸண்டம்மையார் எழுதிய தியாசொபி, லெட்பீடர் எழுதிய நான்கு சிறந்த உண்மைகள்,' மாஸ்டர் ஹிலேரியன் எழுதிய திருநெறி விளக்கம் என்ற ஆங்கில நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு. திரு. தி. மு. மாணிக்கம் பிள்ளையவர்களால் செய்யப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பில் பிரமஞான சங்கத்து அடிப்படையான உண்மைகளெல்லாம் சிறந்தமுறையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இதைப் புதிய அன்பர்கள் ஒரு திறவுகோலாகக்கொண்டு பிரமஞான சங்கத்தின் வேறு பல இரகசியங்களை அறிதல்கூடும். வேண்டுவோர் 127, தர்மராஜா கோவில் தெரு, திருப்பத்தூர், வட ஆர்க்காடு ஜில்லா என்ற மொழிபெயர்ப்பாசிரியர் விலாசத்துக்கெழுதுக.

உ

சிவமயம்

## வடநாங்கூரில் சமாஜ விழா

நமது சமாஜம் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு பொதுக்கூட்டம் கூட்டிச் சமயப்பிரசாரம் செய்யவேண்டுமென்ற முறையை மேற்கொண்டு, தைமாதக் கூட்டத்தை வடஆர்க்காடு ஜில்லா வந்தவாசிக் கருகிலுள்ள வடநாங்கூர் என்ற ஊரிலே ராவ்பகதூர் - வ. அ. அருணாசல முதலியார் அவர்கள் போஷகதாவிலே 26-1-1936 ஞாயிற்றுக் கிழமையன்று மிகச் சிறப்பாக நடத்திற்று. அன்று மாலை 2½ மணிக்கு அவ்வூர்ச் சிவாலயத்தினருகில் அமைக்கப்பெற்ற பந்தரில் திவான் பகதூர் - கி. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கியது. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் முடிந்த பின்னர், திருவாளர்கள் - ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகிய பேறிஞர்கள் "ஆலய வழிபாடு", "சைவ ஒழுக்கம்", "சமயக் கல்வி" என்பன பற்றி இக்காலத்திய மக்கள் வாழ்க்கைக்கு வேண்டப்படும் ஒழுக்க முறைகளை வற்புறுத்தி விரிவாகப் பேசினார்கள். பிறகு சமாஜக் காரியதரிசி அனைவருக்கும் சமாஜத்தின் சார்பாக வந்தனங் கூறிச் சைவ சின்னங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பேசினார். பிறகு திரு. புரிசை - முருகேச முதலியாரவர்கள் "புராண படனம்" என்பதுபற்றி விரிவாகப் பேசி, இக்காலத்துக்குப் புராண படனம் எம்முறையில் இன்றியமையாது வேண்டப்படுகிறதென்பதை மிகத் தெளிவாக விளக்கினார். பிறகு தலைவரவர்கள் சொற்பொழிவுகளிலுள்ள சாரத்தை வற்புறுத்தி முடிப்புரை கூறினார்கள். பின்னர் திரு. புரிசை - முருகேச முதலியார் வடநாங்கூரின் சார்பாக அனைவருக்கும் நன்றி கூறினார். கடவுள் வாழ்த்தோடு தைமாதக் கூட்டம் இனிது நிறைவேறிற்று. வடநாங்கூரிலும், வந்தவாசி, திருவோத்தூர், புரிசை முதலிய சுற்றுப்புறங்களிலுமுள்ள மக்கள் நூற்றுக்கணக்காகத் திரண்டுவந்து கேட்டின்புற்றது சமாஜத்துக்குப் பெரிதும் ஊக்கத்தை யளித்தது. சமாஜத்தினரை அன்போடு வரவேற்று உபசரித்துக் கூட்டத்தை அழகாக நடத்தி யுபகரித்த சைவத் திருவாளர் - ராவ்பகதூர் - வ. அ. அருணாசல முதலியார் அவர்கட்கும் அவர்களுடனிருந்து உதவி புரிந்த திருவாளர்கள் - புரிசை - துரைசாமி முதலியார், புரிசை-முருகேச முதலியார் அவர்கட்கும் சமாஜம் நன்றி செலுத்துகின்றது.

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியிவைஉள் நாடு.



| மலர் ௧ | யுவ ஆண்டு மாசித் திங்கள் 1936௵ பிப்ரவரி௴ | இதழ் ௨ |
|---|---|---|



## நமது முன்னேற்றம்

[பத்திராசிரியர்]

'முன்னேற்றம்' என்பது, ஒரு குறிக்கோள் எதிரில் இருப்பதையும், அக்குறிக்கோள் மலையுச்சிபோல் முயன்று அடையத்தக்கதாய் உள்ளதையும் சுட்டும். 'நமது முன்னேற்றம்' என்பதைப்பற்றி எண்ணுகையில், நாம் யார் என்னும் கேள்வி எழும். இக்கேள்வியை அறிவு படைத்த ஒவ்வொருவரும் கேட்டே தீரல்வேண்டும். இதனையும், நாம் வந்தவாறு எங்ஙனே என்பதையும், நாம் போமாறு எதோ என்பதையும் ஒரு சிறிதும் அறிந்துகொள்ளக் கருதாமல், பிற பொருள்களையும் உயிர்த்தொகைகளையும்பற்றி முடிவின்றி ஆராய்ந்துகொண்டு வாழ்நாள் முழுவதும் கழித்தல் சிறப்புடையதாகாது. இவற்றை எல்லாம் ஆராயப்புகும் நாம் யார் என்னும் விசாரணையைத் தள்ளி வைத்தல் மேலோர்க்கு முடியாது.

சைவ சாத்திரங்கள் தரும் உதவிகொண்டு ஆன்மாவின் உண்மையை ஆராயப் புகுவோமானால், அது, ஒன்று உல

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No. 1

உ
சிவமயம்

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில்விருத்தம், வேல் விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெயரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக் குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஓரே நூலாக முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள் புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூபா 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12

நான்கு பிரதிகள் விலை ரூபா 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா $2\frac{1}{2}$

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

| | |
|---|---|
| சைவ சித்தாந்த மகா சமாஜம்<br>22-எ, கல்லுக்காரத் தெரு<br>மயிலாப்பூர், சென்னை<br>10-1-1936 | இங்ஙனம்<br>ம. பாலசுப்பிரமணியன்<br>காரியதரிசி |

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 9—No. 2.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் கூ | யுவ ஆண்டு மாசித் திங்கள்<br>1936ஆம் பிப்ரவரிமீ | இதழ் உ |

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| நமது முன்னேற்றம் ... ... | ... ௬௫ |
| சமாஜ முப்பதாவது ஆண்டு விழா ... | ... ௭௧ |
| அம்மையார் ... ... | ... ௮௬ |
| சிவராத்திரி வழிபாடு ... | ... ௯௦ |
| சமயச் செய்தி ... ... | ... ௯௫ |
| சித்தாந்த சாத்திரம் ... ... | ௯௭ - ௧௦௨ |

சைவ சித்தாந்த மகாசமாஜம்

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணா 4.

கத்தை, அல்லது கடவுளைப் பற்றுக்கோடாய்க் கொண்டு நின்று, எதைச் சார்ந்து நிற்கின்றதோ அதன்வண்ணமாய் விளங்கும் இயல்புடைய அறிவுப்பொருள் என்னும் முடிவிற்கு வருவோம். இப்படிப்பட்ட ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாய், நித்தமாய் அஞ்ஞான இருட்டில் அழுந்தி உழன்று, மெய்ஞ்ஞான நெறிக்குயரும் செலவினையுடையவையாய், படிப்படி முன்னேற்றமடைந்து வரும் மாபெரும் காட்சியும் ஒருவாறு புலனாகும்.

இத்தகைய உயிருக்கு, உடம்பெதனோடுங் கூடாது ஒரு செயலுமற்று மங்கிக்கிடந்த நிலையொன்றும், உடம்பொடு கூடித் தொழில் பல புரியுநிலையொன்றும், உடம்புத் தொடக்கற்று எல்லா நலமும் நிரம்பிய நிலையொன்றும் ஆக மூன்று நிலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வாய்க்கின்றன. இம்முறையில் நமது ஆன்ம முன்னேற்றம் அமைந்துள்ளது. கேவல நிலை எனப்படும் முதல் நிலையைக் கடந்து, உடலிலிருந்து கொண்டு உலகில் தொழிற்படும் சகலநிலையில் நாமுள்ளோம். இந்நிலையிலிருக்கும்போதே, முதிர்ந்த சுத்த நிலையாகிய மூன்றும் நிலையைநோக்கிச் செல்வது நமது முன்னேற்றத்தின் போக்காகும்.

இரண்டாவது நிலையிலுள்ள உயிர்கள் பலவேறு தரத்திலுள்ள உடல்களில் வாழ்கின்றமை கண்கூடு. மக்கள் உடம்பில் வாழும் உயிர்கள் எல்லாம் மக்களினம் என்னும் ஓரினத்தைச் சேர்ந்திருப்பதால் தம்முள் ஒத்தவை என்றாலும், ஒரே காலத்தில் எல்லா நலங்களிலும் ஒரே அளவு முதிர்ந்தவையாக இவை காணப்படுவதில்லை. இந்நலங்களில் அறிவு, ஆற்றல், அன்பு, இன்பம் என்னும் நான்கும் மக்களிடத்தில் எந்த அளவில் நிரம்பியுள்ளனவென்று ஆராயுங்கால், அவர்களிடையே மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் உளவென்பது வெளியாகும்.



அறிவின் முன்னேற்றத்திற்கு அளவுகூற முடியவில்லை. காலதேசங்கட் குட்பட்டு மனத்தினாற் சில பொருள்களைச் சுட்டியறியும் அறிவில் தொடங்கி, காலதேசமாதியன கடந்து சுட்டற ஒருங்கே யாவையும் அறியும் அறிவுவரை அறிவின் முன்னேற்றம் உள்ளது. நினைக்கும் பலவற்றில் ஒரு சிலவற்றை அறைகுறையாய் முடிக்கும் ஆற்றலில் தொடங்கி வளர்ந்து, சங்கற்ப மாத்திரையில் நினைத்தவெல்லாம் நினைத்தபடி செய்து முடிக்கும் வரம்பிலாற்றல் வரையில் ஆற்றல் முன்னேற்றம் செல்லும். தனக்குப் புலப்பட இதஞ் செய்யும் குடும்பத்தாரைக் கடந்து மேற்போகாத அளவில் அன்பு தொடங்கி, ஒருவன் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள'னாகை முதிரும் எல்லை நோக்கி அன்பு முன்னேற்றம் உயரும். காலதேச வர்த்தமானாதிகளால் கட்டுண்டு, அசுத்தமும் துன்பமும் கலந்துள்ளதும், தெவிட்டுவதுமாகிய அற்ப இன்பத்தில் தொடங்கி, நித்தியமாய், சுத்தமாய், துன்பக் கலப்பில்லாததாய், தெவிட்டாததாயுள்ள பூரணசுகமாய் ஆழ்ந்தகன்றுள்ள நிலையை நோக்கி இன்ப முன்னேற்றம் இயங்கும்.

ஒவ்வொரு மனிதனும் மேற்காட்டிய முறையில் புலப்படும், அறிவு, ஆற்றல், அன்பு, இன்பங்களின் முதிர்நிலைகளைத் தன் குறிக்கோளாகக் கொண்டு, அவற்றில் முன்னேற்றமடைய இடைவிடாமல் அறிவார்ந்த முயற்சி செய்ய வேண்டும். இவற்றின் பூரண உயர்விற்கும் நாம் இதுவரை எட்டியுள்ள அளவிற்கும் எவ்வளவு தொலைவு இன்னும் உளதென்பதையும், நம்மினும் மிக்கார் பலர் ஒவ்வொரு துறையிலும் உளர் என்பதையும் நன்றாய் உணரவேண்டும். முன்னேற்றம் ஏதும் நாடாது சும்மா இருந்தால் போதாதோ என்றால், அப்படி மடங்கிக் கிடக்கவொட்டாது, நம்மகத்துள்ளிருந்தே ஏதோ ஒன்று நம்மை இக்குறிக்கோள் முகமாக உந்

திக் கொண்டே யிருக்கின்றது. நம்மின் மிக்காரைக் காணும்
போதும், வேறுபல இன்பத் துன்ப நிகழ்ச்சிகள் உண்டாம்
போதும், நம் குறைபாடு நமக்குத் தோன்றுகின்றது. இவ்
வுணர்ச்சி, பக்குவங் குறைந்தாரிடத்துக் குறைவாகவும், அது
மிகுந்தாரிடத்து மிகுதியாகவும் காணும். கற்க வேண்டிய
பெரு நூல்களைக் கற்பதாலும், கற்றதைப்பற்றிச் சிந்தித்
துத் தெளிவதாலும், பெரியாரொடு பழகுவதாலும் மனிதன்
அறிவு வளம்பெறும். பிரபஞ்சத்தின் பரப்பும், மாண்
பும், அது பரம்பொருளைத் தன் உயிராய்க் கொண்டிருக்கும்
பான்மையும், அவ் வளப்பரும் பிரபஞ்சத்தில் தனி மனித
னுக்குள்ள இடத்தின் சிறுமையும், அவனுக்கும் உலகிற்கும்,
அவனுக்கும் அவனொத்த பிற உயிர்கட்கும், அவனுக்கும்
பரம்பொருளுக்கும் உள்ள தொடர்பும், வரவர அவன் மனத்
தில் நன்கு விளங்கும். இறவோர் காணுமிக் காட்சி பூரண
மாய் எப்போது நமக்குக் கிட்டும் என்னும் அவா முறுகி
யெழும்.

இத் தரிசனமும், இதன் பயனாக வரும் ஆற்றலும்,
அன்பும், இன்பமும் மிகவும் விழுமிய பொருள்களாம். இவை
நமக்குச் சித்திக்க வேண்டுமானால், இயம நியமப் பழக்கங்
களாகிய அஸ்திவாரம் முதலில் நம் அன்றாட வாழ்வில் நிலை
பெற நாட்டப்படல்வேண்டும். மூர்த்திவழிபாடு முறுகி வளர
வேண்டும். இதற்கெல்லாம், அநுபூதிமான்கள் கூட்டுறவு,
நேராகவோ, அது கிடைக்காவிடத்து அவர் அருளிய வாக்
கின்மூலமாகவோ, நாள்தோறும் நம்மைத் தூய்மைப்படுத்தி
வருதல் பெரிய உதவியாயிருக்கும்.

இப்படிப் பகுத்தறிவுடைய தனிமனிதன் ஒவ்வொருவ
னும் தன் ஆன்மலாப முன்னேற்றத்திற்காகத் தன்னாலியன்ற
வளவும் முயன்றுவருவானாயின், உலக முழுதுமே முன்
னேற்ற மடைந்துவிடும். தனிமனிதன் தன்னை உயர்நெறிக்



கண் செலுத்த முயலாதவரையில், அவன் பிறரை அந்நெறி
யிற் செல்லுமாறு கூறவோ, கூறியவாறு செல்லச் செய்
யவோ, சிறிதும் உரிமையும், ஆற்றலும் இல்லாதவனே
யாவன். ஆதலால், நமது தனிவாழ்க்கையை எல்லா நற்றுறை
களிலும் நாள்தோறும் வளமடையச் செய்வதே நமது முன்
னேற்றத்தின் முதற்படியாயுள்ளது.

ஆனால், எம்மனிதனும் தன்னளவில் என்றுமே தனித்து
நின்றுவிட இயலாது. தான் வாழும் சமூகத்திற்கும் தனக்
கும் பிரிக்கமுடியாத தொடர்புண்டு. அவனது நலந் தீங்கு
கள் சமூகத்தையும், சமூகத்தின் நலந் தீங்குகள் அவனையும்
பாதிக்கும். தனிமனிதனுக்கும், பிற உயிர்கட்கும், உலகிற்
கும் உள்ளே ஒரே பேருயிர் தழைத்து நிற்பதால், ஒருவன்
பிற உயிர்களின் முன்னேற்றத்தையும் நாடியே யாகவேண்
டும். தனது முழுமுன்னேற்றம் பிறர் முன்னேற்றத்தையும்
ஓரளவு பொறுத்தே யிருக்கின்றது. ஆதலால் ஒவ்வொரு
மனிதனும் இப்படித் தன் சமூக முன்னேற்றத்திற்காகப்
பாடுபட்டாகவேண்டும்.

தமிழகத்தில் வாழும் நாம் தமிழர் என்னும் முறையால்
சிறப்பாகச் சில சமூகக் கடமைகளை மேற்கொள்ளவேண்டிய
வர்களா யுள்ளோம். அளப்பரும் பெருமையுடைய நமது தாய்
மொழியாம் தமிழைப் பெரிதும்போற்றி, காலத்தின் தேவை
யுணர்ந்து பேணிவளர்த்தல் தமிழ்மக்கள் சிறப்புக்கடமையாம்.
அன்றியும், தமிழ்நாட்டில் மிகுந்து காணும் ஆரிய திராவிடப்
பகைமையுணர்ச்சி, தீண்டாமை உணர்ச்சி என்பனபோன்ற
தீங்குகளைக் களைந்து, உண்மை விளங்கவும், அன்பும் இன்பும்
சமூகத்திடையே வளரவும், அறிவோடும் ஒற்றுமையோடும்
தமிழ்நாட்டு நல்லறிஞர் தொண்டு புரிந்து தம் நாட்டை முன்
னேற்றமடையச் செய்யவேண்டும். இதற்கு உண்மைச் சைவ
அறிவும் ஒழுக்கமும் உறுதுணையாய் நிற்கும்.

இதற்கு மேலும் சற்று விரிந்த நிலையிற் காணுங்கால், நாமனைவரும் இந்தியர் ஆதலின், இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் நாம் தொண்டாற்றவேண்டுவது அவசியம் என்று புலப்படும். அறியாமை, வறுமை, உண்மைக்கு மாறான பேதவுணர்ச்சி, அன்பின்மை, துன்பமலிவு முதலிய குறைபாடுகள் குடிகொண்டுள்ள நம் தாய்நாடு முன்னேற்றமடைதற்கான முன்னணி வேலைகள் அரசாங்கத்தாராலும் சமூகத் தொண்டர்களாலும் செய்யப்பட்டு வருகின்றன. ஆழ்ந்து ஆராயுங்கால், ஒரு நாட்டில் ஆன்ம சுயராஜ்ஜியம் வளருமளவைப் பொறுத்தே அரசியல் சுயராஜ்ஜியமும் வாய்த்து நிலைக்கும் என்னும் உண்மை புலப்படும். எனவே, உண்மையும் அன்பும் இரு கண்களாகக்கொண்டு எவற்றையும் ஆராய்ந்து, ஒவ்வொருவரும் தத்தம்மாலியன்ற பணி புரிந்து, தாய் நாடு நற்றுறைகளில் விரைவில் முன்னேற்றம் அடையுமாறு செய்யவேண்டும். போதிய அளவில் உண்மையான முன்னேற்றம் இந்தியா அடைந்ததும், அது தான் தொன்று தொட்டே கொண்டுள்ள ஆன்மலாப நாட்டமென்னும் விழுமிய குறிக்கோளை அந்நிய நாடுகட்கும் அநுபூதி அதிகாரத்துடன் எடுத்துக்காட்டும் ஆசாரிய நிலைமையை அடையும். அப்போது, இங்கும் எங்கும், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் பரந்த உணர்ச்சியும் மங்கல வாழ்வும் பரவும். உலகமுழுதுமே அறிவு, ஆற்றல் அன்பு இன்புகளில் சிறந்து விளங்கும். இம்முறையில் நம் தனிவாழ்வில் தொடங்கு முன்னேற்றம் உலகமுன்னேற்றம் வரை முதிர்வதே உண்மையாக நமது முன்னேற்றமாகும்.

இக்குறிக்கோள் இனிது கைவருதற்கு, சைவர்கள் என்னும் முறையிலும் நாம் முன்னேற்றமடைதல் அத்தியாவசியமாகும். நம்சமயத்தினரிற்பலர் இந்நாளில், பலகாரணங்களால், தம் சமய உண்மைகளையறியாது கெடுவதும், சமய ஸ்தாப



னங்கள் சீர்கேடடைவதும் வெளிப்படை. இச் சீர்கேட்டை மாற்றிச், சைவசமயம், சைவ மக்கள் அகத்தும் புறத்தும் மீண்டும் நன்னிலையில் விளங்குமாறு செய்ய ஆங்காங்கு அன்பர்கள் சிலர் இயன்ற தொண்டுபுரிந்து வருகின்றனர். சைவ சித்தாந்த மகா சமாஜம் இத்தகைய சமய சோதரர்கள் துணைகொண்டு, சைவப் பணியைக் காலத்தின் தேவையுணர்ந்து புரிய முயன்று வருகின்றது. இதனைச் சைவசமய சகோதரர்கள் உணர்ந்து ஒத்துழைப்பார்களாயின், சைவர் முன்னேற்றமும், தமிழ்நாட்டின் முன்னேற்றமும், தாய்நாட்டின் முன்னேற்றமும், உலக முன்னேற்றமும் குறிப்பிடத்தக்கவளவு நிகழும் என்பது திண்ணம். சிவத்தை நோக்கிய முன்னேற்றம் யாண்டுஞ் சிறப்புடன் நிகழ்வதாக.

# சமாஜ முப்பதாவது ஆண்டு விழா

[உதவிப் பத்திராசிரியர்]

## சைவர் மகாநாட்டுத் திறப்பாளர் உரை

நம் சைவப் பெரியாராகிய திருவாளர் - திவான்பகதூர் சி. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் சைவர் மகாநாட்டைத் திறந்துவைத்தபோது அரியதோர் உரையையும் நிகழ்த்தினார்கள். திருவாளர் முதலியார் அவர்கள் சைவசமயத்தின் அடிப்படையான நல்ல கொள்கைகளை விளக்கியதோடு, பொதுவாக இந்தியநாட்டிலும் சிறப்பாகத் தமிழ்நாட்டிலும் அவர்கள் நேரே கண்ட சமயக் குறைபாடுகளையும், அவற்றைத் திருத்தும் முறைகளையும் குறிப்பிட்டார்கள். சைவ சமயத்தின் பெருமைக்கேற்ப அஃது என்றும் தூய்மையோடு நின்று நிலவவேண்டுமென்னும் அன்பினால் குறிப்பிடப்பெற்ற அத்

திருத்தங்கள் யாவும் பெரிதும் போற்றற்பாலனவாம். அவை யாவும் நம் சைவ சமயத்திற்கு இதுபோது இன்றியமையாது வேண்டப்படும் திருத்தங்களே யென்பது மறுக்கக்கூடாத உண்மையாம். சமய உண்மைகள் முக்காலத்தும் மாறா நிலையின. மற்ற இத்திருத்தங்களோ காலத்திற்கேற்ப மாறுந் தகையன. நாம், நமது சமயத்திலே களையெனக் காணப்படும் குறைகளை அவ்வப்போது நீக்காமையே அது கீழ்ச் செல்வதற்குக் காரணமாம். பௌத்த சமண சமயங்கள் ஒடுங்கியதற்குக் காரணமும் அவற்றிற் புகுந்த குறைகளை அச்சமயத்தோர் அவ்வப்போது களையாமையேயாம்.

தமிழ்நாட்டிலுள்ள இந்துமதம் "நோக்கமில்லாத ஒரு கலப்பு மதமென்றே சொல்லத் துணியலாம்" என்ற முதலியார் அவர்கள் உரையை எவர் மறுக்கவல்லார்? அவர்கள் தம் உரைக்கு ஆதாரமாக இல்லங்கள்தோறுங் காணப்பெறுஞ் சிறு தெய்வங்களின் வழிபாட்டினை விளக்கிக் காட்டுகிறார்கள். இக்குறைபாட்டினின்றும் நீங்கி, ஒருதெய்வ—ஒருமூர்த்தி—வழிபாட்டினைக் கொண்டுள்ளவர்கள் இலக்ஷத்திற் கொருவராகலாம். இன்னும் கோவில்களிலுள்ள சீர்கேடுகளையும் அங்குச் செய்யப்பெறவேண்டிய சீர்திருத்தங்களையும் அடைவாகத் தெரிவிக்கின்றார் திறப்பாளர். நமது கோவில்கள் 'தெய்வம் ஒன்றென்று சாதாரண ஜனங்களின் மனதில் படுவதற்கு உதவி செய்கின்றனவா?' என்று கேட்கின்றார். சைவ சமயம் சிவனொருவனையே கடவுளாகக் கொண்டது. இவ்வுண்மையையே கோவில்களுங் காட்டுகின்றன. ஆனால், பெரும்பாலோரான மக்கள் பல மூர்த்திகளைக் கோவில்களில் கண்டு, பல கடவுள்கள் இருப்பதாக எண்ணுவதும் உண்மையே. அவர் தம் அறியாமையை முதலியாரவர்கள் குறித்தபடி, வினாவிடைப் புத்தகவாயிலாகவும் விரிவுரைகளின் வாயிலாகவுமே போக்குதல் வேண்டும். இன்னும் கோவிலில் செய்யப்படு



கின்ற அபிஷேகங்கள் அலங்காரங்கள், நைவேத்தியங்கள், ஆராதனைகள், உற்சவங்கள் முதலியன எவ்வளவு தூரம் ஆதிநோக்கத்தோடு பொருந்தியிருக்கின்றனவென்று ஆய்ந்து, நமது கொள்கைகட்கும் செய்கைகட்கும் வேற்றுமை வாராமல் பாதுகாக்கவேண்டுமென்று அவர்கள் கூறுவதும் யாவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாம்.

இனிக் கோவில்களில் இப்போதுள்ள தாசிகளைக் குறிப்பிட்டார்கள். தாசிகளென்போர் முன்னாளில் பெண்துறவிகளாயிருந்தோர். இந்நாளில் அவர்களுள் துறவிகள் ஒருவருமே இல்லையென்று துணிந்து கூறலாமாகலின், இனி அவர்களைக் கோவில்களிற் சேர்ப்பது சமயத்திற்குப் பேரிழுக்காமென்பதை எவரும் மறுக்கார். அவர்களைக் கோவிலினின்றும் அப்புறப்படுத்திய மைசூர் முதலிய நாடுகளை நாம் ஏன் பின்பற்றலாகாதென முதலியார் அவர்கள் கேட்கிறார்கள். கோயிலதிகாரிகள் அதனை உடனே கவனிக்கவேண்டும். அப்பெண்களே தம் நிலையையும் சமயநிலையையும் உணர்ந்து விலகிக்கொள்வது இன்னும் மேன்மையாம். இவ்வாண்டு கும்பகோணத்துக் கோவில்களில் நிகழ்ந்த திருவாதிரைத் திருவிழாவின்போது, அவர்கள் தாமே வாராது விலகிவிட்டார்களென்று பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இச்செய்தி உண்மையாயின் அப்பெண்கள் செய்கை போற்றத்தக்கதே. நம் சைவசமயத்திற்கும் இஃதோர் நற்குறியாம். மற்றைய கோயிற்பெண்களும் கும்பகோணத்துக் கோயிற்பெண்களைப் பின்பற்றினால் பெருநன்மையாம்.

இன்னும் கோவில்களில் பணம்பறிக்கும் முறைமை, பணக்காரர் ஏழைகளென்னும் வேறுபாடு, சாதிப்பித்து இவைகளே முன்னிற்கின்றனவென்றும் மொழிந்தார்கள். இக்குறைகள் யாவும் இந்நாளில் அறிஞர்கள் எல்லோராலும் எடுத்துமொழியப்பெற்றாலும், முதலியாரவர்கள் அவற்றைக் களைந்தெறிதற்

குரிய வழிகளையும் விரித்துரைக்கிறார்கள். முதலாவதாக, சைவசமயம் யாது? அதன் கொள்கைகள் எவை? சைவன் நாடோறுங் கைப்பற்றியொழுகுதற்குரிய கட்டாய விதிகள் எவை? என்பவைகளை விளக்கும் ஒரு சிறு வினாவிடை நூல் தேவையென்றும், அஃது ஒவ்வொரு சைவரிடத்தும் இருத்தல் வேண்டுமென்றும் தெரிவிக்கிறார்கள். இப்பணியை நம் சமாஜமே விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

முதலியாரவர்கள் இறுதியாகக் குறிக்கும் இன்னொரு எளியவழியாவது, ஆங்காங்குப் பிரதமகல்விச்சாலைகளை அமைத்து அவற்றின்மூலமாகச் சமய ஞானத்தைப் புகட்டினால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே மக்கள் சமய அறிவைப் பெறுவார்களென்பதாம். இது பெரிதும் போற்றத்தக்கது. இதனைத் தமிழ்நாட்டிலுள்ள செல்வர்கள் கவனித்தல்வேண்டும். திருப்பணிகளுள் இதுவே தலைசிறந்தது. ஆகலினாற்றான், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல், ஆயிரம் அறச்சாலை பதினாயிரம் ஆலயங்கள் கட்டுவதினும் கோடி பங்கு மிக்க புண்ணியத்தைத் தருமென்று ஒரு கவி கூறினார். முதலியாரவர்கள் கூறிய திருத்தங்களிற் சிலவற்றையேனும் செய்து முடிக்கச் சைவர்களும் சமாஜமும் முன் வருதல் வேண்டும். முதலியாரவர்களும் துணை நிற்பார்களென்று நம்பலாம்.

## சைவர் மகாநாட்டுத் தலைவர்
## உயர்திரு - சுவாமி விபுலாநந்தரவர்கள் பேருரை

ஸ்ரீமத் - சுவாமிகள் அருள் உரை அவர்தம் அன்பு நிறைந்த உள்ளத்தினின்றும் மலர்ந்தகதொன்றும். அவர்கள் சைவ சமயிகளின் தற்போதைய நிலையை ஆழ்ந்து உணர்ந்துணர்ந்தே ஆத்திகரனைவர்க்கும் ஒப்ப முடிந்ததும் சைவ சமயத்தின் முடியாக விளங்குவதுமாகிய "அருள் ஞானம்"



என்னும் பொருள் குறித்து அருளினார்கள். பிறவிப்பிணிக்கு மருந்தாய அதனை அடிகள் அன்பு கலந்து அருள் கலந்து நமக்கு ஊட்டுகின்றார்கள். ஆகலின், அவ்வருளுரையின்கண் நிறைந்துள்ள அரும்பெரும் பொருள்கள் மீண்டும் நினைவு கூர்தற்குரியன. அவை சிந்தைக்கும் செவிக்கும் இனிமை பயக்கும்.

இறைவனது பெருங்கருணையால் உயிர்களாகிய நாம் பெறவுள்ளது அவ்வருளாகலினாற்றான், அஃது இறைவனுடைய ஐந்தொழில்களுள் ஒன்றாய் முடிவிலுறுதொழிலாய் நிச்சயிக்கப்பட்டுள்ளது. உடலின் ஆக்கத்திற்கு உணவு விடாது வேண்டப்படுபொருளென அறிவதுபோல், உயிரின் ஆக்கத்திற்கும் அங்ஙனம் வேண்டப்படு பொருள் இறை திருவருளாம். இது சிலர் உணர்விற்குப் புலப்படாது போவது கருதியே, சுவாமிகள் இறைவனது பெருங் கருணைத் திறத்தின் பெற்றியினை உணருகின்ற உணர்வே எல்லா ஞானத்தினுஞ் சிறந்த ஞானமாகுமென்றுரைத்து, அதன் சிறப்பையும் அதனைப் பெறுதற்குரிய வழிகளையும் எடுத்து மொழிந்தருளினார்கள். இன்னும், 'அருளல்' என்னும் இஃது இறைவனது ஐந்தொழில்களுளொன்றாய் ஐந்தாவது தொழிலாய் நிச்சயிக்கப்பட்டிருப்பினும், ஐந்தொழிற்கும் ஆதாரமாகவுள்ளதும் அவ்வருளேயென்னும் உண்மையை விளக்கவே "அருளினாலே இவ்வுலகிடை யுதித்தோம்; அருளினாலே உயிர் வாழுகின்றோம்; அருளே நம்மை நற்கதியிற் புகுத்துவது. தாயாகி நம்மை வளர்த்தெடுத்து, தந்தையென வந்து பெறுதற்கரிய சால்பினை நல்கி, குருவடிவாகி இருளினை யகற்றி, துணைவனெனவும் துணைவியெனவும், இன்னகைப் புதல்வரெனவும், புதல்வியரெனவும், அன்புடை மாமனெனவும் மாமியெனவும், துய்ப்பனவாகவும் தோற்றி நம்மை நல்வழிப்படுத்துவது அப்பேரருளேயாம்" என்றும், "இருண்மலமாகிய அறியாமை

நீங்கி, வீடுபேறடைதற்கு இறைவனது கருணையே வாயிலாகி நிற்கின்றது'' என்றும் கூறியருளினார்கள். சைவ சமயத்தின் முடிந்த முடிபாகவுள்ள ''இவ்வுண்மையினை யறியா மாந்தர் உடல் வலியும் மனவலியுங் குன்றித் தாயினை யிழந்த சேயினைப்போல அல்லலுறுவர். இதனையுணர்ந்தோர் வேண்டிய பொருளனைத்தினையும் பெற்று இவ்வுலகில் வாழும் பொழுதே இன்பநிலையினை எய்துவர்'' என்று சுவாமிகள் துணிந்து மொழிந்ததை ஒவ்வொருவரும் உளத்திலமைத்தல் வேண்டும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த அருளினை அடைதற்குரிய நெறிகளையெடுத்துக் கூறுங்கால், ''ஆண்டவனது பேரருளினைப் பெறுதற்குக் கல்வியினுந் தியானஞ் சிறந்தது; நியாயவாதத்தினும் நெடுமூச்சுச் சிறந்தது; கவிமாரியினும் கண்ணீர்மாரி சிறந்தது; நூலாராய்ச்சியினும் வழிபாடு சிறந்தது; மண்ணைக்கிய சிந்தையினும் வானைக்கிய சிந்தைசிறந்தது'' என்னும் உண்மை அறிஞர் கூற்றை எடுத்துக்காட்டினார்கள். தியானம், பாவனை, சிந்தனை என்னும் படிகளை விளக்கினார்கள். ஆண்டவனுக்கும் அவனைச் சிந்திக்கப்புகும் நமக்கும் இடையே யாதாயினுமோர் அன்புத் தொடர்பினை அமைத்துக் கொள்ளல் வேண்டுமென்றும் மொழிந்தருளினார்கள். அத்தொடர்புகளே ஆண்டானடிமைத் தொடர்பு, தந்தை மகன் தொடர்பு, தோழமைத் தொடர்பு எனவுங் குறிக்கப் பெற்றவை. இத்துணையோ டமையாது, 'ஆண்டவனுடைய அருளைப் பெறுதற்கு அவனுடைய உடைமைகளாய பிறவுயிர்களிடத்தே நாம் அன்பும் அருளும் உடையராதல் வேண்டும்; அது, நம்மிடத்து எத்துணையாகக் காணப்படுகின்றதோ அத்துணைக்கு நாம் நமது தலைவனை அணுகிநிற்பவராவோம்' என்றார்கள். இக்கருத்தினையே வாயுசங்கிதையின் உத்தரகாண்டம்,



''கருமமா தவஞ்செ பஞ்சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர் வசம தாகிப் பொருந்திடேம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்பேம்
உரைசெய்வே மவர்மு னெய்தி யவருளத் துறைவே மென்றும்''

என இறைவன் ஓதியருளியதாகக் கூறுகிறது.

இனி இவ்வருளொழுக்கம் நம்மிடத்துப் பெருகுவதனாலுண்டாம் பயன் ஈதென எவரும் உணருமாறாக அடிகள், ''அருளொழுக்கம் பெருகியவழி வெறுப்பு, வெகுளி என்னுமிவை தாமே யகல்வனவாம். அருணிறைந்த உள்ளத்தினுள்ளே அச்சம், கவலை, பொறாமை, அழுக்காறு, துன்பம், மிடி, லோபம் என்பன ஒருசிறிதும் புகமாட்டா. அருளினால் அகன்ற சிந்தையினை யுடையோரே பெரியோரெனப்படுவர். இவரைக் காண்போரனைவரும் இவரது நட்பினை விழைந்து நிற்பர். உலகனைத்தும் இவர்க்குச் சுற்றமாகும். புகழ், பொருள், நட்பு ஆகிய மூன்றும் இவர்தம்மை வந்தடைவவாதலின், இவரது வாழ்க்கை பலதிறத்தினும் நிறைவுபெற்றுத் தோன்றும்'' என்றருளினார்கள்.

இனி, 'மேற் சொன்ன தொடர்புகளால் இறைவன் பெரியோன், நாம் சிறியோம் என்னும் சிந்தனையே வலுக்க, அதனால் நாம் உயர்நிலை யடையாது இழிவெய்துவோமாகலின், அவனே நாம், நாமே அவன் என்றெண்ணியே இறைநிலையை நாம் அடைதல் வேண்டும்' என எண்ணுவோர் உளராகலின், அவர் தம் ஐயப்பாட்டை அகற்றவே அடிகளார், நம் சிறுமையையும் தலைவன் பெருமையையும் ஒருங்கு சேர வைத்துச் சிந்திக்க வேண்டுமென்றும், நாம் நமது சிறுமையை மாத்திரம் தனித்து நினைத்தல் செய்யத்தகாததென்றும், தலைவனைச் சார்ந்து நிற்பதனாற் பெறும் பெருமித உணர்வே நமக்கு இம்மை மறுமைச் சுகம் இரண்டினையுந் தருவதென்றும், இவ்வுணர்வு தனித்த மக்கட்கு மாத்திரமல்லாமல் மக்கட்

கூட்டத்தினர்க்கும் உயர்வினைத் தருமென்றும் கூறியருளினார்கள். இதனைச் சரித்திர வரலாறுகளாலும் சுவாமிகள் மெய்ப்பித்தார்கள். இன்னும், அவ் வருள்ஞானத்தினைப் பெறுதற்குரிய சாதனைகளை, அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகனார், அருள்ஞானச் செல்வராகிய தாயுமானவர், அருட்பெருங் குரவராகிய இராமகிருஷ்ணதேவர் முதலிய பெரியோர்களின் அருமைத்திருவாக்குக்களால் அடிகள் உணர்த்தியருளினார்கள். அவை எல்லாவற்றையும் நாம் நினைவுகூர்ந்து பயனடைவோமாக. அடிகள் வாழ்த்தியவாறு இறைவனது பேரருள் நம்மனைவர்க்கும் என்றும் இருப்பதாக.

## சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர் உரை

தலைவர், திரு. G. கல்யாணம் பிள்ளை அவர்கள், B. A. உணர்ந்து உணர்ந்து உருகி உருகித் தம் இளைய சகோதரர்க்கு உரைக்கும் உரைகள் போற்றத்தக்கன. அவர்கள் முதலிலே, சமய உணர்ச்சியே மக்களை விலங்கினின்றும் பிரிப்பது என விளக்கினார்கள். ஒழுக்கத்திற் சிறந்து அமைதியின்பத்தையடைய மக்கட்குச் சமயம் இன்றியமையாததே. மன்னனுடைய ஆணைக்கு அஞ்சி ஒழுகும் ஒழுக்கம் புறத்தே நிகழ்வது. சமயத்திற்கு அஞ்சி ஒழுகும் ஒழுக்கம் புறத்தும் அகத்தும் நிகழ்வதாம். கடவுள் உண்டென்று கொள்ளாதாரும் தாங்கள்கொண்ட கட்டுப்பாட்டின் படியன்றோ ஒழுகுகிறார்கள்? இத்தகைய கட்டுப்பாடு தமிழ் நாட்டிலே தொன்றுதொட்டு இருந்தும், அதனுண்மையை அறியப்பெறாதாரும் அறிய முயலாதாருமாகிய இளைஞர்களே நாத்திகம் பேசவும் மதமாற்றஞ் செய்யவும் விரும்பி முன்னணியில் நிற்கின்றார்களென்று பிள்ளையவர்கள் வருந்துகிறார்கள். இதற்குப் பெற்றோர்தம் அறியாமையும், சைவப் பாடசாலைகள் இல்லாமையுமே காரணங்களாம்.



பிறகு, பிள்ளையவர்கள் சைவ சமயத்தின் உண்மை நிலையை ஒருவாறு விளக்கி, அதனைப் பாதுகாத்துப் பரவச் செய்தல் சைவ இளைஞர் கடனென உரைத்தார்கள். "சைவம் சமரச நோக்கமுடையது; பழமைக்கும் பழமையது; புதுமைக்கும் புதுமையது; காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியமைந்தது" என்று அவர்கள் கூறிய வாக்கியங்களை, இளைஞர்கள் தங்கள் உள்ளத்தில் நன்கு பதிய வைத்துக் கொள்ளல் வேண்டும். சைவம் என்னும் மொழி சிவன் தொடர்பு, நல்லான்தொடர்பு என்று பொருள்படும். எல்லா நலன்களையும் ஒருங்கே உடைய ஒப்பற்ற நல்லான் ஒருவனே சிவன் என்னப்படுகின்றான். நன்மையை விரும்பும் மக்கட்கு அவனுடைய தொடர்பின்றி அஃது யாங்ஙனங் கூடும்? எக்காலத்தும் ஒரு பெற்றித்தாகவுள்ள இத்தகைய சமயத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து, உணராதார்க்கு அதனுண்மையை விளக்குதலே அதனைப் பரவச் செய்தலாம். அதனைப் பாதுகாத்தலும் அதுவேயாம். எல்லா நலன்களையும் இயற்கையிலேயே உடைய ஒருவனுடைய தொடர்பை, அஃதில்லாத நாம் பெற்றுய்யவேண்டுமென்று பறை சாற்றுதலே சைவ இளைஞர்கள் செய்யவேண்டிய திருத்தொண்டாம். இத்தொண்டைத் தலைவரவர்கள் இருகூறுபடுத்திக் கூறினார்கள். அவை, தமிழ் வளர்த்தல், கோவில் வழிபாடு என்பன. தமிழ்வளர்த்தலில் சைவப் பாடசாலைகள் அமைத்தல், நூல் இயற்றல், பண்டைநூல்களைப் போற்றிப் பரவச் செய்தல் என்பவைகளும் அடங்கும். கோவில் வழிபாட்டில் தலயாத்திரை யடங்கும். இளைஞர்கள் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் உதவியின்றி மேற்கண்ட உண்மைகளை மக்கட்கு எங்ஙனம் புலப்படுத்துதல் கூடும்? ஆகலின், அன்பர்கள் தாய்மொழியினைப் போற்றி வளர்த்தற்குரிய எல்லா முறைகளையும் விரைந்து கைக்கொள்வார்களாக.

அதனோடு சைவப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களி லெல்லாம் சைவசமய போதனை செய்ய ஏற்பாடுகள் நடைபெறவேண்டும். இம்முறையில் நம் கிறிஸ்தவ முகம்மதிய சகோதரர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியைக் கண்கூடாகக் கண்டும், நாம் மாத்திரம் அம்முறையில் முயலா திருத்தல் அழகாமா? தற்போது சைவப்பாடசாலைகள் அமைக்கப் பொருளில்லையே, அதற்குச் சைவச் செல்வர்கள் முன்வரவில்லையேயெனின், அச்செல்வர்களைக்கொண்டு பாடசாலைகளையமைக்கும் பணியும் இளைஞர்களைப் பொறுத்தேயிருக்கிறது. ஒருநாட்டு இளைஞர்கள் முனைந்தால் நடவாத செயல் ஒன்றுமில்லையென்றே கூறலாம். கிராமங்களிலுள்ள சிறுபள்ளிக்கூடங்களிலுங்கூட எளிய புதிய முறையில் சமயக்கல்வி கற்பிக்கப்படவேண்டும். இன்னும் வீடுகள்தோறும் சமாஜத் திறப்பாளர் குறிப்பிட்ட சைவ உண்மைகளடங்கிய சிறுநூலானது வழங்கப்பெறுதல் வேண்டும். கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படையான உண்மைகளை யறியாத கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் உண்டா? அங்ஙனமே முகம்மதிய மத உண்மைகளையறியாத முகம்மதிய சகோதர சகோதரிகள் இல்லையே. இங்ஙனமிருக்க, சைவர்கட்குச் சைவத்தெய்வம் யாது? அது ஒன்றா பலவா? அதன் இயல்பு யாது? என்பவைகூடத் தெரியாதே. அவர்களுடைய கண்களைத் திறக்கச் சைவ இளைஞர்களே முற்படவேண்டும். அவர்களே பிற சமயத்தார்க்கும் நம் சமய உண்மைகளை எடுத்து மொழிய விரைந்தெழுதல்வேண்டும். சைவ சகோதரர்களே! நீங்கள் எண்ணினால் ஆகாததொன்றுமின்றாம். உண்மைக்கு ஆதரவு செய்யும் நம் பெருமானுடைய துணையும் தானே வந்து சேரும்.

இனி, பிள்ளையவர்கள் கூறியபடி கோயில் வழிபாடும் இன்றியமையாததே. அதனால் நமக்கும் பிறர்க்கும் பெரு



நன்மையுண்டு. கோவில் இல்லாமல் சமயம் நிலைபெறாது. இஃது எங்கும் காணப்பெறும் உண்மை. அவ்வழிபாட்டிலும் இளைய சகோதரர்களே வழிகாட்டிகளாகவேண்டும். கோவிலின் நிலை கேடுற்றிருக்கிறதேயெனின், அதனைத் திருத்தியமைக்க உரியவர் வேறு யாவர்? ஆங்கிலங் கற்ற சைவ இளைஞர்கள் பெரும்பாலார்க்கும் பிற சமய இளைஞர்கட்கும் உள்ள பெரியதோர் வேறுபாடு யாவரும் நாடோறும் அறிவதே. ஆங்கிலங் கற்ற முகம்மதிய இளைஞர்களே கல்லாதாரினும் மிகுதியாகக் கோயிலுக்குப் போகிறார்கள். கிறிஸ்தவர்களுள்ளும் அங்ஙனம் கோவிலுக்குப் போகாதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். தூய உடைகளைத் தரித்திருப்போரும் புழுதியுள்ள தரையிலே முழங்காற்படியிட்டு நீண்ட நேரம் பிரார்த்தனை செய்யப் பார்க்கிறோம். சைவர்களோ கோவிலுக்குப் போகக் கூசுகின்றார்கள். கோவிலில் திருத்தம் வேண்டியதே. அங்குச் செய்யப்பெறவேண்டிய திருத்தங்களைத் தக்கதொரு முறையிலே செய்தமைத்துக்கொண்டு வழிபாடாற்றல் நம் கடன்.

சைவ இளைஞர்களே! சகோதரர்களே! உடலுக்கு உறுதி பயக்க நல்லுணவு வேண்டும். அவ்வாறே உயிர்க்கு உறுதி பயக்கவும் உணவு வேண்டும். அவ்வுணவே இறை என்றார் பிள்ளை. இக்கருத்தைப் பாம்பன் ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் "இரைதேடுவதோ டிமையுந்தேடு" என்று உணர்த்தியருளினார்கள். இறைதேடா திருப்பின் என்னாம்? இரைதேடாதிருப்பின் உடல் நலங்கெட்டு அஃதொழிவதே போல், இறைதேடாவிடின் உயிர் நலங்கெட் டொழியுமென்பதைச் சகோதரர்கள் உயத்துணர வேண்டும்.

\ இறுதியாகப் பிள்ளையவர்கள், சைவர்களுள் ஆயிரத்தில் ஒருவர்கூட சமாஜ அங்கத்தினராக இல்லையே என்று கவல்கின்றார்கள். இளைஞர்கள் செய்யவேண்டிய சைவ சமயத்

தொண்டு சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் நிகழ்வதே பொருத்தமாகலின், அவர்கள் முன்னர் அதனை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். சகோதரர்களே! பிள்ளை அவர்கள் மொழிந்த கீழ்க்கண்ட வீர மொழிகளை மீண்டும் நினைவு கூருங்கள்.

"அன்பர்களே! ஒவ்வொருவரும் இன்றே, இப்பொழுதே சமாஜத்தின் அங்கத்தினராய்ச்சேர இறைவன் திருமுன் உறுதிசெய்து கொள்ளுங்கள். மேற்சொன்ன சமயப் பணிகளைச் செய்ய முற்படுங்கள். முற்பட்டால், இன்றே நம் சைவசமயம் தழைத்தோங்கும்."

## சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைவர் உரை

தலைவர், பண்டிதை - அசலாம்பிகை அம்மையார் அவர்கள் தமது பேருரையிலே சைவத் தாய்மார்கட்கும் சகோதரிகட்கும் எடுத்துரைத்த சில சிறந்த கருத்துக்களை மீண்டும் நினைவு கூர்தல் பயனுடைத்து. அம்மையார் அவர்கள் பெண்மக்கட்கு உரிய எல்லாக் கடமைகளையும் ஒருங்கே திரட்டிக் கூறியதோடு, இந்திய நாட்டிலே பெண்கள் பெற்றுள்ள ஒரு நல்ல நிலையையும் குறித்தார்கள். அம்மையார் அவர்கள் நம் நாட்டுப் பெண்களுடைய நிலையைக் குறிக்குங்கால், "பெண்கள் அடிமைகளா?" என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, அவர்கள் அவ்வாறு நடத்தப்பட வில்லையென விளக்கியுள்ளார்கள். அம்மையார் பொதுவாக நம் நாட்டுப் பெண்மணிகளைப் பற்றிக் கூறினார்கள். சைவப் பெண்மணிகளுடைய நிலைமை யாது? அவர்கள் ஆண் மக்களோடு சமஉரிமை பெற்றிருக்கின்றார்கள். இதற்குச் சிவபெருமானுடைய திருக்கோலமே சான்று. பெருமானுடைய திருமேனியின் அரைக்கூறு பெண்ணுருவென்பதைக் காட்டு



வதே 'அர்த்தநாரீசுர' வடிவமாம். அவன் 'குவளைக்கண்ணி கூறன்' என்றும் அழைக்கப் பெறுகின்றான். இந்நிலைக்கு மாறுபட்ட நூல்களும் இல. இருப்பினும் கொள்ளத்தக்கன வாகா. ஆனால், நம் பெண்மணிகள் இங்ஙனம் நடத்தப்பெறுகின்றார்களாவெனின், இங்ஙனம் நடத்தப் பெறுவதே இயற்கை நெறியாம். இயற்கை நெறியே அமைதிக்கு அரண் செய்வதாம். அல்லாதது அழிவுக்கு அடிகோலுவதாம்.

பண்டிதையார் பெண் மக்களுடைய கடமைகளைக்கூறுங்கால், அவர்கள்பால் தற்போது காணப்பெறுங் குறைகளையும் விளக்கி அவற்றை அறவே அகற்றுதல் வேண்டுமென்றும் வற்புறுத்தி யிருக்கின்றார்கள். அம்மையார் எடுத்துரைத்த குறைகளாவன: அந்நியர் நாகரிகங்களில் மோகம், அயல் நாட்டுப் பகட்டுப் பொருள்களில் கவனம், நன்னெறியினின்றும் விலகச்செய்யுங் கற்பனைக் கதைகளைப் படித்தல், நெறி தவறிய நாடகங்களையும் படக்காட்சிகளையும் பார்த்தல், செல்வப் பெண்கள் தம் உடலுக்கும் உயிருக்கும் உறுதி பயக்கும் அமுதினைத் தாமே சமைக்காது உள்ளன்பிலாத பணியாளர்களாற் சமைப்பித்தல் முதலியவைகளாம். இவற்றுள், நம் மக்களைத் தீநெறியிற் செலுத்தவல்ல (நாவெல்) கற்பனைக் கதைகளும் நாடகங்களும் படக்காட்சிகளும் விளைக்கும் கேடு அளவிடற்கரியது. அந்தோ! இவற்றிற்குக் காரணராக வுள்ளவர்களுடைய அறிவீனத்தை என்னென்பது! அவர்கள் தாம் கெடுவதன்றிப் பிறரையும் கெடுக்கின்றார்கள். சைவத் தாய்மார்களே! சகோதரிகளே! அம்மையார் எடுத்துக்காட்டிய இக்குறைபாடுகளை நீங்கள் உய்த்து உணர்வீர்களாயின், அக்கதைகளும் நாடகக் காட்சிகளும் வெளி வரா; உலகம் திருந்தும்.

அறிவினுண்மிக்க நம் அம்மையார், பெண்மணிகள் கைக்கொள்ளுமாறு கூறிய மொழிகள் போற்றத்தக்கன. அவை

அறிவை வளர்த்தல், அறத்தை வளர்த்தல், அன்புடைமை, கற்புடைமை முதலியன. அறிவு கல்வியாலும் கேள்வியாலுமே பெரிதும் வளருமாகலின், பெண்கள் அறிஞர்கள் நிகழ்த்தும் அறிவுரைகளைக் கேட்டல் வேண்டுமென்றும், கல்வியில் சமயப்பற்றினை வளர்க்குங் கல்வியே தலைசிறந்ததென்றும் அம்மையார் கூறியுள்ளார்கள். இன்னும் தாய்மொழியாகிய தமிழ்மொழிப்பற்று ஒருபோதும் அசட்டை செய்யக்கூடாதது என்ற உரையை ஒவ்வொரு சைவமங்கையரும் போற்றிக் கொள்ளல்வேண்டும். மங்கையர் அறத்தை வளர்க்க வேண்டும் என்ற அம்மையார், இறைவி முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த வரலாற்றையும், கம்பர் "மாதரார் அற்பி னின்றன அறங்கள்" என்று கூறிய பொன்மொழியையும் எடுத்து மொழிந்தார்கள். தாய்மார்களே! இல்லங்கள் தோறும் வருகின்ற ஏழைகட்கு மனமுவந்து இட்டுண்ணும் நீங்களே பிற அறங்களையும் செய்ய எண்ணினால், அவை எளிதில் ஆம் என்ற உண்மையையே அம்மையாரும் உணர்த்தினார்கள்; கம்பரும் மொழிந்தார். இனி, இன்சொல், விருந்தோம்பல் முதலியவும் அன்புடைமையால் நிகழ்வனவாகலான் அன்பை வளர்த்தல்வேண்டுமென்றும், பெண்கட்கு ஒழுக்கத்துள் தலைசிறந்தது கற்புடைமையாகலின அஃது இன்றியமையாததென்றும் அம்மையார் மொழிந்துள்ளார்கள்.

இனி, "வகுப்புப்பூசல் (சாதிப் பிணக்கு) ஆண்பாலார் சிலர் உள்ளத்தில் முளைத்தாலும், அன்னவர் மனையறம் ஓம்பும் மங்கையர் மனத்தில் இயற்கையில் கால்கொண்டெழுவதில்லையென்பது எனது அனுபவ உண்மை. இது பெண்மைக்கு இயல்பாகிய பேரன்பின் பெருமையால் நிகழ்வதாகும்" என்று பெண்மக்கள் சார்பாகப் பண்டிதையார் நம் சைவசமுதாய நிலையைப்பற்றிப் பேசினார்கள். ஆடவர்களோ,



"நான் என்ன செய்வேன். வீட்டிலுள்ளார் ஒப்புக்கொள்ளவில்லை" என்று எளிதாகக் கூறிவிடுகிறார்கள். சைவப் பெண்மணிகளே! உங்கள் சார்பாகப் பண்டிதையார் கூறியது உண்மையாயின் நம் சைவ சமயம் இந்நிலையிலிராது. உலக முழுவதுமே இச்சமயத்தை நாடி நிற்கும். தாய்மார்களே! இனியேனும் அம்மையார் உரை உண்மையுரையாக, சைவர்கள் என்றால் ஒரே கூட்டத்தவர்; அவர்களுக்குள் வேற்றுமையில்லை என்று உள்ளத்திலே நினையுங்கள்; நினைக்கிறபடி வாழ்க்கையை நடத்துங்கள். உங்களுடைய மக்களுடைய உள்ளத்திலே வகுப்பு நினைவு வாராதவாறு அவர்களை வளருங்கள்; சைவம் வளரும்.

இறுதியாகக் கூறவேண்டுவது யாதெனின், அம்மையார் எடுத்துரைத்த மெய்த்துறவு பூண்ட திலகவதியார், பத்தியிற் சிறந்த காரைக்காலம்மையார், சைவம் வளர்த்த மங்கையர்க்கரசியார், உண்மை கடைப்பிடித்த திருநீலகண்டநாயனாருடைய மனைவியார், கற்புக்கடம் பூண்ட இயற்பகையின் தேவியார், வள்ளன்மை மிக்க இளையான்குடிமாறர் மனைவியார் முதலிய சைவப் பெரியார்களின் வரலாறுகளைப் படித்துணர்ந்து அவர்களைப் பின்பற்ற முயலுங்கள்.

சைவத் தாய்மார்களே! இன்று முதலாகவே எல்லோரும் உறுதியோடு உள்ளத்திற் பதியவைத்துக் கொள்ள வேண்டிய எடுத்துக்காட்டு ஒன்று அம்மையார் உரையில் திகழ்கிறது. அது "தெய்வம் ஒருவனே யென்றிங்குணர வல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்" என்னும் ஔவைப் பிராட்டியாரின் உண்மையுரையாகும். கோயில்களிலும் நூல்களிலும் பலபல உருவங்கள் காணப்படுவது கருதி, அவை பல தெய்வங்களைக் குறிக்கின்றனவென்று நம்மில் பலர் மயங்கி உணருகிறார்கள். பிற மதத்தினரும் அது காரணமாக நம்மை எள்ளி நகையாடுகிறார்கள். ஆகலின், 'நம் சைவ சமயக் கடவுளும் ஒருவனே, அவனே சிவன்' என்று தெளிவாய் உணராதார் இன்றே உணர்ந்து, உணராதார்க்கும் உணர்த்தி, உதவி புரிவீர்களாக.

# அம்மையார்

[திரு. G. கலியாணம், பி. ஏ.]

சென்னை, வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழாவில், மறைத்திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் தலைமையில், திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள்பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அச்சொற்பொழிவிலிருந்து என்றால் சில குறிப்புகள் எடுக்கப்பட்டன. அவைகளுள் சில வருமாறு :—

"அம்மையார்" என்பது எடுத்துக்கொண்ட பொருள். அம்மையார் என்பது காரைக்கால் அம்மையாரைக் குறிக்கும். அப்படிக் கூறக் காரணம் என்னவெனின் தெய்வச் சேக்கிழார், பெரியபுராணத்தில் ஐந்தாறு இடங்களில் காரைக்கால் அம்மையாரை "அம்மையார்" என்றே சொல்கிறார். அம்மையார் கைலை சென்றபோழ்தும் சிவபெருமான் அவரை, "அம்மையே" என்றழைத்தார். அங்ஙனஞ் சொன்ன ஆண்டவனுக்கு அம்மையும் இல்லை; அப்பனும் இல்லை. "தாயுமிலி தந்தையிலி" என்றார் மணிவாசகனார். சிவபிரானே காரைக்கால் அம்மையாரை "அம்மை" என்றழைத்திருக்க, யாம் அவரை "அம்மையார்" என்று கூறுவதில் இழுக்கென்னை ?

* * *

அம்மையார் மூத்ததிருப்பதிகத்தில் தம்மைக் "காரைக்காற்பேய்" என்றழைத்துக்கொள்கிறார்; அற்புதத்திருவந்தாதியில் "பேயாகிய யான்" என்கிறார். வன்றொண்டரும் "பேயார்க்கும் அடியேன்" என்றார். அம்மையார்க்குப் புனிதவதியார் என்பது தாய்தந்தையர் இட்ட பெயர்.



அம்மையாருடைய காலத்தைப்பற்றி ஒருசிறிது ஆராயலாம். அம்மையார் மூவர் முதலிகளுக்கு முன்பு இருந்தவர். மூவரும் திருவாலங்காட்டை மிதியாது சென்றனர். அம்மையார் காலம் மூவர் முதலிகளுக்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டு முன்னதாயிருக்கலாம். அம்மையார் அருளிய பாடல்களின் தமிழ்ப்போக்கை நோக்குமிடத்து, அவர் காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

* * *

சமண சமயத்தை மூன்று பகுதிகளாகக் கூறலாம். அவை ஆதிகால சமணம், இடைக்கால சமணம், பிற்கால சமணம் என்பன. இடைக்காலத்தில் உண்டான சமணம் ஆதிகால சமணத்துக்கு மாறுபட்டது. இது வடக்கேயிருந்து வந்தது. திகம்பர சமணம், சுவேதாம்பர சமணம் என்று இருவகையுண்டு. திகம்பரர் தென்னாடு போந்து மன்னர்களை வசப்படுத்தித் தம் மதத்தை நிறுவினர். அவர் பதினாயிரம் விரதஞ் சொல்லியிருக்கிறார். அவைகளால் உடல் சீக்கிரம் அழிந்துபோம்.

* * *

உடலோம்புதல் நாத்திகம் என்று கூறுவது தவறு. "உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்" என்றும், "உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" என்றும் கூறுவர் நம் திருமூலனார். அறிவு விளக்கத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவது உடலேயாகும்.

* * *

திகம்பரர் பெண்களுக்கு மோட்சமில்லையென்று சொல்லி வந்தனர். அதுவுட் தவறு. "ஆணெலாம் இறைவன் பெண்ணெலாம் தேவி" என்று சைவ மகாபுராணம் கூறுகிறது. திகம்பரசமணத்தையே சம்பந்தர் முதலியோர் மறுத்துரைத்தனர். சுவேதம்பரத்தை அவர் மறுக்கவில்லை.

பிறப்பில் உயர்வுதாழ்வு, தீண்டாமை, பெண்ணடிமை என்ற குற்றங்கள் இந்நாட்டிடை யுள்ளன. பெண்ணை இழித்துக் கூறுவது பிழையென்று காட்டுவதற்கே அம்மையார் போன்றார் தோன்றினர்; நாயன்மார் ஆழ்வார்களில் பெண் மக்களும் இருத்தல் கவனிக்கத்தக்கது.

* * *

பெரிய புராணத்தைச் சிறிது ஆராய்ந்து, பின்னர்க் காரைக்காலம்மையார் புராணத்தைச் சிறப்பாக ஆராயலாம். பெரிய புராணம் வெறும் புராணம் அன்று. சேக்கிழார் இப்பொழுது கிடைக்கும் பல கல்வெட்டுகளைக் கொண்டு நூலை எழுதினர். இவைகளுடன் திருவருளும் துணை செய்தது. பெரிய புராணம் ஒரு சிறந்த காவியம். திருக்குறள், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்ற மூன்று சிறந்த நூல்களும் பெரிய புராணத்தைப் பார்த்தால் நினைவிற்கு வரும். சுருங்கச் சொல்வது குறள்; பொருந்திய சொற்றொடர்கள், தமிழ் அழகு இவைகளையுடையது சிலப்பதிகாரம்; அநாவசியமான எதுகை, மோனை முதலியவைகள் இல்லாதது சிந்தாமணி. இந்த மூன்று நூல்களின் தன்மைகளைப் பெரிதும் தன்னகத்தே கொண்டது பெரியபுராணம்.

* * *

உடல், உயிர், அன்பு இந்த மூன்றும் சிறந்த கருவிகள். இவைகள் பெரியபுராணத்தே யுள்ளன. பெரிய புராணத்தை நோக்குதற்குக் கல்விக் கண்ணுடன் சமயக் கண்ணும் வேண்டும்.

* * *

அம்மையார் புராணத்தில் சேக்கிழார் நெய்தல்நிலத்தைப் பற்றிக் கூறுகிறார்; 'காரைக்கால் ஓங்குபதி' என்று முதலில் சொல்கிறார். காந்தியடிகள் வாணிபத்தில் பொய்யில்லாமல் இருக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். சேக்கிழாரும் "மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில் ஊனமில்சீர்ப் பெருவணிகர்" என்று கூறியிருக்கிறார்.



அம்மையார் "சிவபெருமான் திருவார்த்தை"யைப் பாடுவாராம். "பிறந்து மொழி பயின்று***" என்று அம்மையாரே கூறுகிறார். அவர் அழகின் கொழுந்து வளர்ந்தெனை வளர்ந்தாராம். புராணம் இரண்டு மாம்பழங்களைப் பற்றிக் கூறுகிறது. அவைகளில் ஒன்று அம்மையார்க்குரியது. இரண்டாவது பழத்தையும் அவர் கணவன் விழைந்தது பிழையேயாகும். "ஓர் ஆவுக்கு இருகோடு போல" என்று காதல் சொல்லப்பட்டிருக்கிறது.

* * *

சேக்கிழார், "முப்புர மெரித்த முக்கணன் வந்தான்" என்று இறைவன் அடியார்களுக்கு அருள வருமிடத்திலெல்லாம் கூறுவர். முப்புரம் என்பது மும்மலம். "முப்புரமாவது மும்மல காரியம்" என்பர் திருமூலர்.

* * *

சேக்கிழார் அம்மையாரைப் பலவிடங்களில் "திருவனையார்" என்று கூறியிருக்கிறார். அம்மையார் பேய் வடிவமானார். அது ஞானவடிவம். அப்பர் மாயாவுடலில் கைலாயம் நோக்கினார். அம்மையார் ஞானவடிவோடு தலைகீழாய் அங்குச் சென்றார்.

* * *

மூளை மென்மை அடைய அடைய உறுப்புகள் தேய்ந்து போம். கடைசியில் கருவிகரணங்கள் இல்லாத நிலை நேரும். அப்பொழுதுதான் அவைகளில்லாத ஒரு கடவுள் நமக்கு அருளும். "கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்" என்று திருக்கோத்தும்பியில் மணிவாசகர் அருளியுள்ளார். வீரவாகுதேவர், முருகப்பெருமானை, "தண்டையணி கழலடி" வேண்டும் என்று கேட்டார். அம்மையார் "பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னடியை என்றும் மறவாமை வேண்டும்" என்று வேண்டினார்.

# சிவராத்திரி வழிபாடு

[உதவிப் பத்திராசிரியர்]

இது, இவ்வாண்டு மாசித் திங்கள் 9-ஆம் நாள் (21-2-36) வெள்ளிக்கிழமையன்று உறுகின்றது. இவ்வழிபாடு சைவர் யாவராலும் செய்யப்பெறுவது.

சிவராத்திரி எதனைக் குறிக்கிறது? அதுபோழ்து எங்ஙனம் வழிபாடாற்றுவது? என்பவைகளை எவரும் அறிவரேனும், அவ்வப்போது நினைவூட்டல் சிலர்க்குப் பயன்தரும் என்றெண்ணியே அவை ஈண்டுக் குறிக்கப்படுகின்றன.

சிவராத்திரி வரலாறு இருவகையாகக் கூறப்படுகிறது : (1) பிரமதேவனுக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்தில் அத்தேவனும் அவனாற் படைக்கப்பெற்ற உயிர்களும் ஒடுங்கிய காலம் இராத்திரி காலம். அந்த இரவில் திருவருட்செல்வியாம் உமையம்மையார் சிவபெருமானைப் பூசித்து, ஒடுங்கியவர்களையெல்லாம் மறுபடியும் தோற்றுவித்தார். அப்போது அம்மையார், பெருமானை நோக்கி, "நான் தேவரீரைப் பூசித்த இந்த இரவிலே விரதமிருந்து பூசிக்கும் எல்லோர்க்கும் வீடுபேறு தந்தருள வேண்டும்" என வேண்டினர். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் வள்ளலும் அதற்கிசைந்தான். இவ்விரவே சிவராத்திரியாக ஆண்டுதோறும் கொண்டாடப் பெறுகிறது.

(2) ஒருகால் திருமாலும் பிரமனும் தாம்தாம் பெரியோரென வாதித்தனர். அவ்வாதம் போராயிற்று. அதுபோது நம்பெருமான் அவர்கண்மாட்டிரங்கிக் கடைக்கண் நோக்கினார்; இருவர்க்கும் அறிவுகொளுத்த, அவர்கட்கு இடையே அடிமுடி காணக்கூடாத அக்கினித் தூணை அருளுருக்கொண்டு நின்றார். அது கண்டு திடுக்கிட்டு நின்ற அயனும் மாலும், தம் எதி



ரிற்கண்ட உருவத்தின் முடியையும் அடியையும் காணாது தேடினர். அன்னமாய் மேற்சென்ற அயனும், வராகமாய்க் கீழ்ச்சென்ற மாலும் அவ்வுருவத்தின் முடியையும் அடியையுங் காணாது மீண்டனர்; வாடினர்; அறிவு பெற்றனர்; சிவபெருமானுடைய திருவிளையாடலென உணர்ந்தனர்; உடனே வணங்கினர்; போற்றினர். அப்போது ஆண்டவனும் அவர்கள் முன் நின்ற இலிங்க வடிவத்தினின்றும் அழகிய திருவுருவோடு வெளிப்பட்டு நின்று, அவர்கள் தகுதிக்கேற்ப அருள் புரிந்தான். அக்காலமே சிவராத்திரி காலம். அதனுள்ளும், அவன் உருக்கொண்டருளி மால் முதலிய தேவர்கள் பூசிக்க நின்ற காலம் இரவு பதினான்கு நாழிகை முதல் ஒரு முகூர்த்தமாம்.

இவ் வரலாறுகளால், உமையம்மையாரோ அல்லது திருமால் முதலிய தேவர்களோ சிவபெருமானை ஓர் இரவிலே பூசித்துப் பேறு பெற்றார்களென்றும், அதற்கு அறிகுறியாகவே இவ்வுலகிலுள்ள மக்களும் அப்பெருமானை வழிபட்டு நற்பேறு பெறும்பொருட்டுப் பெரியோர்கள் ஓர் இரவைக் குறித்து வைத்தனர் என்றும் பெறப்படுகிறது. ஆகலின், எவர்க்கும் இவ்விரவு ஓர் அரிய இரவேயாம். என்னை? இது சிவபரம்பொருளை வழிபடும்படிச் செய்து சிறந்த பயனைப் பெறவைத்தலினென்க.

இவ்விரவு, மாசித் திங்களில் தேய்பிறைச் சதுர்த்தசியும் திங்கட்கிழமையும் திருவோண நக்ஷத்திரமுங் கூடிய ஒன்றெனக் குறிக்கப்பெற்றுள்ளது. இறைவனை இடைவிடாது தியானிக்கும் பெரியோர்க்கு எல்லா இராத்திரியும் சிவராத்திரியேயாயினும், இங்ஙனம் ஓர் இரவைக் குறிப்பிட்டது எல்லா மக்களுடைய நன்மையையும் கருதியென்க. இங்ஙனம் திங்கட்கிழமையிலேயே எப்போதும் சிவராத்திரி வருவதில்லையாகலின், அங்ஙனம் வருதல் சிறப்பென அறியக் கிடக்

கின்றது. இவ்வாறே சதுர்த்தசி முழுவதும் உள்ள இரவு சிறப்பாம். அதனோடு அமாவாசைச் சம்பந்தமிருப்பின், அவ்விரவு அவ்வளவு சிறந்ததாகக் கருதப்படுவதின்று. ஆகலினாற்றான், ஆசிரியர் - பாம்பன் : குமரகுருதாச சுவாமிகளும்,

“கார்த்திகை சட்டிவை காசிலி சாகமுநன்
கடிதரு தைப்பூ சமுமா
கீர்த்திசெய் பங்குனி யுத்திர மாசறுசுக்
கிரனது வாரங் குகுவை
நீத்தெழு நற்சிவ ராத்திரி யுங்குகனை
நெடுவழி பாடு புரிவோர்
பூர்த்திசெய் மெய்யறி வுள்ளவர் சன்னிதியிற்
புகுதவர் வீடெய் தவரே.”

என்றார்கள். (குகுவை நீத்தெழு நற்சிவராத்திரி = அமாவாசை சம்பந்தமில்லாத மஹா சிவராத்திரி). இவ்வாண்டுச் சிவராத்திரியில் 3-30 மணிக்கு அமாவாசை வருகிறதாகலின், அது வருமுன்னரே சிவவழிபாட்டை முடித்தல் வேண்டும். இத்தகைய நாளில் மேற்சொன்ன சுவாமிகள் அவ்வாறே செய்து காட்டியுள்ளார்கள்.

இனி, வழிபாட்டுமுறை யாதோவெனின், கூறுதும் : அன்று முழுவதும் இயன்றவரை உணவின்றி யிருந்து, இரவிலே சிவலிங்க பூசை செய்தல் வேண்டும். பூசனை அவரவர்கள் அன்பிற்குத் தக்கவாறு நிகழலாம். இரவு முழுவதும் விழித்திருக்க இயலாதார் இறைவன் உருக்கொண்டு அமரர்க்கு அருளிய நள்ளிரவு வரையேனும் விழித்திருந்து சிவதரிசனம் செய்தல்வேண்டும்.

இக்காலத்தில், “ஏகாதசியில் விழித்தவரை பலன்; சிவராத்திரியில் சிறிது கண்மூடினும் பலன் இன்று” என்னும் பொய்யுரை எப்படியோ உலவுகிறது. இதனைக் கேட்கும்



சைவமக்கள் சிலர் தங்களால் இரவு முழுவதும் விழித்திருக்க இயலாதேயெனக் கவன்று, விரதந் தக்காதாகலின், சுகந் தக்கட்டுமெனத் தூங்குகின்றார்கள். ‘ஒரு விரதத்தைத் தம்மால் இயன்றவரை அன்போடு அனுட்டிப்போர்க்கு இறைவன் ஒரு பலனுந் தாரான் ; இயலாமையால் சிறிது அனுட்டிப்புக்குறைவு நேர்ந்ததனாலேயே அனுட்டிக்கும் அவர்கட்குத் தீங்குண்டாக்குவன்’ என்றெல்லாம் கூறுதல் பிதற்றுதலாகவே முடியும். ஆகலின், இனியேனும் சைவ நன்மக்கள் அனைவரும் இயன்றவரை சிவராத்திரி விரதத்தை அன்போடு அனுட்டித்து, இறைவனுடைய பேரருளைப் பெறுவார்களாக. தாங்கள் பெறுவதோடு தங்கள் நண்பர், உறவினர், தெருவார், ஊரார் முதலிய யாவரும் அனுட்டித்து நம் பெருமானுடைய பேரருளைப் பெறச்செய்யும் அறத்தினையும் கைக்கொள்வார்களாக.

இறைவனுக்குச் செய்யும் வழிபாடு ஒன்றே போதுமே, உடலுக்கு இன்றியமையாத உணவையும் உறக்கத்தையும் விலக்கியிருப்பானேன் ? எனச் சிலர் வினவலாம். இங்ஙனம் வினவுவோர் தூயநீரிலே மூழ்கித் தூய உடை உடுத்து, உணவுகொள்ளுமுன் இறைவனைத் தியானித்தும், அங்ஙனஞ் செய்யாது உடல் தூய்மையும் இன்றி, உணவையும் உண்டு இறைவனைத் தியானித்தும் பார்க்கின், இவ்விரு நிலைகட்குமுள்ள வேறுபாட்டினை நன்கு உணர்வர். உடல்நலங் கெடுமாறு எதனையுஞ் செய்யொண்ணாது. எதனையும் மிதமாகவே செய்தல்வேண்டும். ஸ்ரீமத் - பாம்பன் சுவாமிகள், தமது பரிபூரணானந்தபோதச் சிவசூரியப்பிரகாசவுரையிலே, தவம் இன்னதென விளக்குங்கால், “தவமென்பது உணவில்லாமையையன்றி வேறின்று”, “தவசினால் தேவர்கள் தேவத்தன்மையை முற்காலத்தி லடைந்தார்கள்” எனுங் கைத்திரீயாருணசாகை நாராயண உரைகளையும், “தவசில்லா

தாற்கு ஆன்மஞான முண்டாதலில்லை; கன்மப் பிரயோசன முண்டாதலுமில்லை; ஏனெனின், தவசினுற் சத்துவம்(=சித்த சுத்தி) எய்துகின்றது'' எனும் மைத்ராயண்யுபநிஷத உரையையும் எடுத்துக்காட்டியதோடு, "உணவிலேயே உயிரிருக்கவுற்ற இக்காலத்து மாந்தர் இத்தவத்தை யியன்றவளவே யிழைக்கத் தக்கவராவர். இன்னோர் போன்றுரல்லாதாரே பண்டைக் காலங்களிற் பன்னெடுநாள் பல்லாயிரவாண்டு தவமிழைத்திருந்தார். இவ்விவரம் "உயிரானது க-ம் யுகத்தில் எலும்பிலும், உ-ம் யுகத்திற் றசையிலும், ஈ-ம் யுகத்தில் உதிரத்திலும், ச-ம் யுகத்திற் சோறு முதலியவற்றிலு மிருக்கும்" என்று பராசரஸ்மிருதியின் ஆசார காண்டம் யுகதர்ம பேதத்தி லுரைக்குமாற்று ணுணர்க'' என்றும் உணர்த்தியருளினர்கள்.

இவ்வுணவைக் காட்டினும் உறக்கம் உடலுக்குப் பெரிதும் இன்றியமையாதது. நாம் உணவை நீத்துச் சின்னுளிருப்போம். உறக்கத்தை நீத்து ஒருநாள் இருப்பதும் அருமை. ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகளும் அதன் அருமை கருதியே "சிவராத்திரிப்போது துயிலோம் என்ற விரதியரும் அறிதுயிற் போலே யிருந்து துயில்வார்'' என்று கூறியருளினர்கள். ஆகலினுற்றான் விரதகாலங்களில் உணவோடு உறக்கத்தையும் நீத்திருத்தல் பெருந்தவமெனப் பெரியோர்கள் விதித்துள்ளார்கள். ஆனல், ஊக்கமும் உண்மையான தூய அன்புமே நம் தவத்தை அளக்குங் கருவிகளென்பது மறுக்கக் கூடாததாகலின், அதனை எவரும் மறத்தல் கூடாது. நாம் இவ்வுண்மைகளை உய்த்துணர்ந்து உணராத பேர்கட்கும் உணர்த்தி, இயன்றவரை தவங்கிடந்து வழிபாடாற்றி, இறைவன்பால் எல்லா நலன்களையும் பெறுவோமாக.

# சமயச் செய்தி

[உதவிப் பத்திராசிரியர்]

இந்துமத பாடசாலை வாலாஜாபாத், செங்கற்பட்டு ஜில்லா

இப்பாடசாலையின் 19-ம் ஆண்டு அறிக்கைத் தாள் வரப்பெற்றோம். "இப்பாடசாலைப் பிள்ளைகள் இவ்வொரு துறையில் பயிற்சிபெருது போயினரே'' என்று எவரும் எடுத்துக்காட்ட இயலாதபடி எல்லாத்துறைகளையும் தன்பாற்கொண்ட நிலையிலே இது திகழ்கிறது. இப்பாடசாலை உள்ள ஊரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சமயத்தொண்டு புரிவோர்க்கும் வேலை யிராதென எண்ணுகிறோம். தென்னுட்டிற்கே ஒரு முன்மாதிரியாயுள்ள இது, தன்னைப்போன்ற பல பாடசாலைகள் தோன்றத் தூண்டுகோலா யிருக்கும். இறைபணியென இதனை வளர்த்துவரும் அறிஞர்கள் திரு. W. T. பஞ்சாக்ஷர முதலியார் அவர்களும், திரு. W. T. மாசிலாமணி முதலியார் அவர்களும், அவர்கட்குத் துணைநிற்கும் செல்வர்களும் பல்லாண்டு வாழவும், அவர்கள் வேட்கைப்படி இப்பாடசாலை ஒரு சிறந்த குருகுலமாக ஓங்கி வளர்ந்து திகழவும் எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவானுக.

"இந்துமதம் ஒரு தொத்துநோய்''

சாதி வேற்றுமையை ஒழிக்க விரும்புவோர் அஃதுள்ள இந்துமதத் தொடர்பை விலக்கவேண்டுமென்றும், அம் மதமே ஒரு தொத்துநோயென்றும் ஒருவர் பேசியுள்ளார். சைவசமயத்தினரையும் பற்றிய 'சாதிவேற்றுமைப்பிணக்கு' என்னும் தொத்துநோயை ஒழிக்கவே சைவசமய ஆசிரியர்கள் தோன்றினர்கள். அவர்களுடைய வாழ்க்கையையும் உபதேசத்தையும் மறந்துள்ள சைவர்கள் சிலர்பால் அந்நோய் காணப் பெறுகிறதாகலின் அவர்கள் அதனையறிந்து, அதற்கு இடங்கொடாது ஒழிக்க முயலுவார்களாக.

## வைரம் மரகதமாம்

வைரக்கல் மரகதக்கல் முதலிய நவரத்தினக் கற்கள் இயற்கையாகவே உண்டாவன. ஓர் இயற்கைப் பொருள் மற்றோர் இயற்கைப் பொருளாக மாறுவதின்று. ஆனால் பேராற்றலுடைய ஒரு பொருளின் உதவியால் ஒன்றை மற்றொன்றாக மாற்றக் கூடுமென்று அறியப்பெறுகிறோம். இப்போது ரேடியம் என்னும் பொருளின் உதவியால் வைரக் கல்லை மரகதக் கல்லாக மாற்றிவிடலாமெனக் கண்டு பிடித்திருக்கிறார்கள். செம்பையும் பிற பொருள்களையும் ஏதோ ஒரு பொருளினுதவியால் பொன்னாக மாற்றுவோர் உள்ள நம் நாட்டிற்கு இச்செய்தி புதிதன்று. இதனால், சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய சீவர்களாகிய நாமும் பேராற்றலுடைய பரம்பொருளின் திருவருளால் சீவத் தன்மையினின்றும் நீங்கிச் சிவத்தன்மையை அடைந்துவிடல் கூடுமென்னும் உண்மை தெளிவாக அறியக்கிடக்கிறது.

## இந்து மதமும், அதன் அறமும்

இப்பொருள் பற்றி ஓர் அறிஞர் விரிவுரை நிகழ்த்திய போது, "இந்துமதம் முடிவான ஒரு உண்மையைப்பற்றிய பல கொள்கைகளையும், அவ்வுண்மையை அடைவதற்கான பல நெறிகளையுங் கொண்டது ; எல்லாக் கொள்கைகளையும் உள்ளடக்கிக் கொண்டதும் அளத்தற்கரியதுமான நிலையையுடையது ; முன்னே, தவங்கிடந்த முனிவர்கள் உள்ளம் ஒடுங்கிய நிலையிலே நேரே கண்டதும் உணர்ந்ததுமான உண்மைக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டது" என்று கூறியதோடு, அதன் அறத்தில் ஒரு குறையிருக்கிறதென்றும், அதை நிரப்புவதாயின் நம் நாட்டிலேயுள்ள தீண்டாதாராகிய 6 கோடி மக்கட்குச் சம உரிமை வழங்க வேண்டுமென்றும் கூறினார் என்று பத்திரிகை வாயிலாக அறிகின்றோம்.



மாயைக் கொருவனு ரென்னிங்கென்னின் உள்ளவா றுரைப்பக்கேள் நீ என்பதொழித்து, அழிந்தபின் அணுக்கள்தாமே என்பது முதல் இவையாறு செய்யுளானுந் தார்க்கிகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, வருமுறையென்பதனாற் பெறப்பட்ட சற்காரியவாதத்தின் இயல்பு வலியுறுத்தப்பட்டது. ௧௬

புத்திமற் காரி யத்தால் பூதாதி புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றால் அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனான்மாயைக் குணர்வொன் றுமில்லையென்றே
வைத்திடு மதனால் எல்லாம் வருவிப்பா னொருவன் வேண்டும்.

**(உரை)** ஈண்டுக் கூறியவற்றுள் ஏனையவெல்லாம் ஒக்கும், மற்றொரு கடவுளித்தைத் தருதலாவென்றது பொருந்தாது. மாயையே தன் காரியத்தைத் தரும், இதற்கொரு கருத்தா எற்றுக்கெனின்,— அறியாது கூறினாய்; குடங் குயவனாற் செய்யப்படுங் காரியமானாற் போலப் பூதமுதலிய பிரபஞ்சமெல்லாம் ஒரு சேதனப் பொருளாற் செய்யப்படுங் காரியமேயாகலானும், புருடன் சேதனப்பொருளாயினும் அவன் அப்பூதாதியானாகிய தனுகரணாதிகளைப் பெற்றாலன்றி யறியமாட்டாமையானும், மாயை அவற்றிற்கு முதற் காரணமாகலின் அது சேதனப்பொருளாதல் செல்லாமையானும், பாரிசேடஅளவையான் இவ்வனைத்தினும் வேறாய் மாயையினின்றும் பூதமுதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையுந் தோற்றுவிப்பான் ஒரு கடவுள் வேண்டப்படுவன்.

புத்திமற்காரியமென்பது வடசொன்முடிபு. ஆண்டுத் தொக்கு நின்ற ஆறனுருபு காரகப்பொருண்மையின் வந்தது. புத்திமான் சேதனன் என்பன ஒருபொருட் கிளவி. ஒன்றுமென்பது சிறிதுமென்னும் பொருள்பட நின்றது. ஏகாரந் தேற்றம். ௧௭

காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநிமித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னாய்நின் றாக்குவன் அகில மெல்லாம். ௧௮

**(உரை)** அல்லதூஉம், ஒருகாரிய நிகழ்ச்சிக்கு முதல் துணை நிமித்தம் என்னுங் காரணமூன்றுந் தம்முளொன்றையின்றி யமையா

வென்பதூஉம் மூன்றுந் தம்முள் வேறுதலுங்கூடமுதலிய காரியத்திற் காட்சிப்புலனு யறியப்படுதலானும், பிரபஞ்சகாரியத்திற்கும் அவ்வாறே முதற்காரணந் துணைக்காரணங்களின் வேறாய் நிமித்த காரணமும் ஒருதலையான் வேண்டப்படும்.

காரியகாரணங்களென்னும் ஆறாம் வேற்றுமைத்தொகை வடநூன் முடிபு. மாயைக் கொருவனு ரென்னிங்கென்னி னுள்ளவாறுரைப்பக்கேள்நீ என்பதுளப்பட இவையிரண்டு செய்யுளானும், சாங்கியர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்துத் தருபவன் ஒருவன் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. இங்ஙனம் உதிப்பது மீறுமென்பதுமுதல் இத்துணையும், உலோகாயதர் புத்தர் சமணரென்னும் வைதிகப்.புறத்தார் மதம்பற்றியும், மீமாஞ்சகர் தார்க்கிகர் சாங்கியரென்னும் வைதிகத்துட்பட்ட முத்திறத்தார் மதம்பற்றியும், ஐய நிகழாமல் வருமுறை வந்து நின்று போவதுமாதலாலே தருபவனொருவன் வேண்டும் என்ற முக்கூற்றுப் பொருளையுங் காத்துக்கொண்டு, இனி, அக்காரண காரியங்கள் தருபவனொருவனால் தரப்படுமாறும் அவற்றதியல்பும் யாங்ஙனமென்பார்க்கு, ஆரியன்குலாலனாய் நின்றாக்குமாறு ஒன்பது செய்யுளால் தொகுத்துணர்த்துகின்றார். ௧௮

விந்துவின் மாயை யாகி மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி முக்குண மாதி மூலம்
தந்திடுஞ் சிவனை வன்தன் சந்நிதி தன்னில் நின்றே. ௧௯

(உரை) சுத்தஞ் சுத்தாசுத்தம் அசுத்தமெனக் காரியப்பிரபஞ்சம் முத்திறப்படுதலின், அவற்றிற்கு முதற்காரணங்களுந் தம்முள் வேறுதல் பெற்றாம். அவற்றுள், மலகன்மங்களோடு விரவாது முதற்காரணமாய் நிற்பது சுத்தமாயையென்றும், அஃது வனை இரண்டனையும் வியாபித்து மேலாய் நிற்ப அவ்விந்துவின் கீழாயடங்கி மலகன்மங்களோடுவிரவி முதற்காரணமாவது அசுத்தமாயையென்றும், அவ்வசுத்தமாயையது தூலபரிணாமமாய்த் தோன்றுவது பிரகிருதிமாயையென்றும் கூறப்படும். அம்மூன்றனுள், சுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி வைகரிமுதல் வைத்தெண்ணப்படும் நாலுவாக்குந் தோன்றும்; அசுத்தமாயையினின்றுஞ் சங்காரமுறைபற்றி அராகமுதல் வைத்தெண்ணப்படும் காரண தத்துவம் ஐந்துந்தோன்றும்; பிரகிருதி



மாயையினின்றுஞ் சிருட்டிமுறைபற்றிக் குணதத்துவமுதல் வைத்தெண்ணப்படும் போக்கிய தத்துவம் இருபத்துநாலுந் தோன்றும். இங்ஙனஞ் சடரூபமான விந்து மோகினி மான் மூன்றுந் தத்தங் காரியங்களைச் சிவசத்தி சங்கற்ப ரூபசந்நிதியினின்றுந் தோற்றுவிக்கும்.

'விந்துவின் மாயையாகி' என்புழிக் கீழென்னும் பொருள்பட வந்த கண்ணுருபு விரித்துரைக்க. இன் சாரியை. அதோமாயை என்றதும் இப்பொருள்பற்றியென்க. இஃதறியாதார் விந்துவைப் போல மாயையாகியென உவமையுருபாகக் கொண்டுரைப்பாரும் விந்துவினின்று மாயை தோன்றியென நீக்கப்பொருட்டாகக் கொண்டுரைப்பாருமாயினர். இரத்தினத்திரயமென்னும் வடநூலின் அவ்விரண்டனையும் பிறர் கருத்தாக வைத்தோதுதலின் அவை பொருந்தாமையறிக. அநந்தர் சீகண்டர் செய்யுந் தொழிலுஞ் சிவசந்நிதியை யின்றியமையாவென்னுங் கருத்தான் மூன்றற்குஞ் சிவசந்நிதியே கூறினார். அவன், பகுதிப்பொருள் விகுதி. இதனானே, முதற்காரண மூன்றுமாறும், அவை தத்தங் காரியங்களைத் தோற்றுவிக்குமாறும், அது முதல்வனையின்றியமையாதவாறுந் தொகுத்துக் கூறப்பட்டன.

வைகரி செவியில் கேட்ப தாய்அத்த வசன மாகி
மெய்தரும் உதான வாயு மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி
ஐயமில் பிராண வாயு அடைந்தெழுந் தடைவு டைத்தாம். ௨௦

(உரை) மேற்கூறிய வைகரியாதி நான்கனுள், வைகரியாவது தன் செவிக்கும் பிறர் செவிக்குங் கேட்கப்பட்டு நினைந்த பொருளைச் சொல்லுஞ் சொல்லாய்ச் சொல்வானுக்குங் கேட்பானுக்குஞ் சவிகற்பவுணர்வுண்டாதற்கு ஏதுவாதலும், உதானனென்னுங் காற்றான் உந்தப்பட்டு மத்திமைத்தானத்துச் சூக்குமரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணனென்னுங் காற்றான் உந்தப்பட்டெழுந்து புறத்தே யடைதல் உடைத்தாதலும் ஆகிய இரண்டும் இலக்கணமாக உடைத்து.

'மெய்தரும் உதானவாயு மேவிட விளைந்தவன்னம்' என்றது அனுவாதம். விளைதல் உருவெவையுந் தெரித்தல். மெய் உடம்பு. பொய் விபரீதம். ஐயமில் பிராண வாயு, மனத்தின் தொழிற்பாடாகிய ஐய

மின்றுதற்கேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயு
வென ஏதுப்பெயர்கொண்ட குறிப்பு வினைத்தொகை. எழுந்து பொய்
யற அடைவுடைத்தாயென மேலே கூட்டுக. அடைவு பின்னையது
இலக்கணம். ஈண்டுப் புந்தியென்றது ஏற்புழிக்கோடலாற் பிறர்க்
குரிய சவிகற்ப உணர்வின்மேற்றாயிற்று.

உள்ளுணர் ஓசை யாகிச் செவியினில் உறுதல் செய்யா(து) ௨௦
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடைய தன்றித்
தெள்ளிய அக்க ரங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே எழுவ தாகும் மத்திமை வேற தாயே.

(உரை) செவியிற் கேட்கப்படாததாயும் மெல்லோசையாய்க் கண் சுக
டத்திலே விளங்குதல் உண்மையாற் சொல்லுவான்றன்னுள்ளே யுண
ருஞ் சவிகற்ப வுணர்வுக்கேதுவாய் உள்ளே யுணரப்படும் ஓசையாத
லும், பிராணவாயுவின் தொழிற்பாடின்றி உதானவாயுவின் தொழிற்
பாடு மாத்திரையே ஆண்டுண்மையிற் சூக்கும ரூபமாய் அக்கரங்கள்
பிரிந்து தோன்றினும், பல்விதழ் நாவண்ணங்களிற் பட்டுச் சிதறிப்
போதல் இன்மையுமாகிய அவ்விரண்டிலக்கணத்தானும் முறையே
பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாயறியப்படுவது மத்திமைவாக்கு.
இரட்டுறமொழிதலான் உணரோசையென்னும் வினைத்தொகை
யின் ஓசையென்பது ஏதுப்பெயராயுஞ் செயப்படுபொருட் பெயரா
யும் நின்றது. தெள்ளுதல், ஈண்டு வடிவு விளக்குதல். அது விரண்டும்
பகுதிப்பொருள் விகுதி. உயிரிற் *"சேர்ந்துவரு மலைமருவும் உரு
எவையுந் தெரித்து மூர்த்தியிடுஞ் செவியிலுறு துள்ளுணர்வா
யோசை முழங்கியிடு மத்திமை" என்றார் புடைநூலாசிரியரும். உயி
ரிற்சேர்ந்து வருமலை யென்றது முன்னர்க் கூறப்படும் வைகரியை.

வேற்றுமைப் பட்ட வன்னம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுதல் அடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச்
சாற்றிடு மயிலி னண்டம் தரித்திடும் சலமே போன்றங்(கு)
ஆற்றவே உடைய தாகிப் பைசந்தி அமர்ந்து நிற்கும். சஉ

(உரை) பைசந்தி வாக்காவது, மேல் விளங்கித் தோன்றுவனவா
கிய பஞ்சவன்னங்களையுஞ் சூக்குமரூபமாய் அடைவுபடவொடுக்கி

* சிவப்பிரகாசம் - பொது - உக.



நிற்கும் மயில் முட்டையின் நீர்போலப் பலவகைப்பட எழுத்துக்கண்
மத்திமைத்தானத்துப் பிரிவுபட விளங்கித்தோன்று முறைமையினை
அடக்கி மிகவுஞ் சூக்கும ரூபமாய்க்கொண்டு சிந்தையின்கண்நிற்றலும்
நிருவிகற்ப உணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டும் இலக்கணமாக
உடைத்து. உஉ

சூக்கும வாக்க துள்ளோர் சோதியாய் அழிவ தின்றி
ஆக்கிடும் அதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டால்
நீக்கமில் அறிவா னந்தம் முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி லைப்பும் விகாரமும் புருட னின்றாம். சங

(உரை) பரசரீரத்தினுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும்
ஞானமாத்திரைக் கேதுவாதலுமாகிய இலக்கணத்தையுடையது சூக்
கும வாக்கு. அதுதான், பைசந்தி மத்திமை வைகரியாய் விருத்திப்
படுவதாகிய தன்னதிகார மாத்திரைக்கே யழிவுண்டாக, தான் சுத்த
மாயாரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவதாம். தவவிசேடத்தால்
அதனை உள்ளபடி காணப்பெறுவார்க்குச் சுத்தமாயா புவனத்தின்
கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போக முண்டாம்.

ஆய் இன்றி ஆக்கிடுமெனவும், கண்டால் உடைத்தாய் இன்று
மெனவும் வேறுவேறு வினைமுடிபு செய்க. அழிவினை வினைத்
தொகை. புருடனென்பது *"காலமுலகம்" என்னுஞ் சூத்திர விதி
யால் அஃறிணைச் சொல்லாயிற்று. சுத்தமாயா புவனத்தின்கண்ண
தாகிய அபரமுத்திப் பெரும்போகத்தின் இயல்பிதுவென அதன்
பெருமைகூறுவார், "நீக்கமில்அறிவானந்த முதன்மை நித்தியமுடைத்
தாய்ப் போக்கொடு வரவிளைப்பும் விகாரமும் புருடனின்றாம்" என்
றார். தானழிவதின்றித் தன்னதிகாரமாத்திரைக்கு அழிவினைச்
செய்யுமெனவே, அது சிவதத்துவம்போலச் சுத்தமாயையின் வேறன்
மை பெற்றாம். தன்னை உள்ளபடி காண்டலாவது, அதிசூக்கும வாக்
கினை வியஞ்சக வோசைபற்றித் தூலமாய்க் காணும் நம்மனோர்
போலன்றி, நம்மனோர்க்குக் குடம்படமுதலியன காட்சிப்புலனுமாறு
போலத் தன்னியல்பான் இனிது விளங்கக் காண்டல். கண்டா
லெனவே அங்ஙனங் காண்டல் அரிதென்பது பெற்றாம். இவ்வா

* தொல்காப்பியம் - சொல் - கிளவி - ருஎ.

றின்றி, *"ஒவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞான முண்டேற் சேவுயர் கொடியி னன்றன் சேவடி சேரலா"மென்பதே ஈண்டைக்கும் பொருளாகக்கொண்டு, கண்டாலாக்கிடுமெனக் கூட்டித் தமக்கு வேண்டியவாறே உரைப்பாருமுளர். அவர், அழிவதின்றி அழிவினை யாக்கிடுமென்னுந் தொடர் அவ்வாறு பொருள்படுதற் கேலாமையும், கூறியது கூறலாதலும், உண்மையதிகாரத்திற் கூறப்படும் பாமுத்தி இலக்கணம் ஈண்டு வகுத்துக் கூறுதற்கோர் இயைபின்மையும் நோக்கிலர்.

௨௩

நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்ச தாகச் செயல்பரி ணாம மன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடி லானாற் போல
மகிழ்ந்திடும் பிரம மன்று மாமாயை என்பர் நல்லோர். ௨௪

(உரை) இங்ஙனம் கூறிப்போந்த வைகரி முதலிய நான்கு வாக்குக்களும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகள் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச் சிவதத்துவ முதலிய பஞ்சதத்துவங்களி னிருக்கும். இவை சுத்தமாயையினின்றும் விருத்தியாய்க் காரியப்படுவனவன்றி அசுத்தமாயாகாரியம்போலப் பரிணாமமாய்க் காரியப்படுவனவல்ல. இவ் வாக்குக்களைச் சத்தப்பிரமவாதிகள் பிரமமென்பர்; சைவசித்தாந்திகள் பிரமமாதலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தி யெனப்படுஞ் சுத்தமாயா ரூபமாமென்று கூறுவர்.

காரியப்பாட்டிற்கு எள்ளானுய குப்பைபோலப் புத்தர் சமணர் கூறுஞ் சமுதாயவாதமும், நூலானுகிய ஆடைபோலத் தார்க்கிகர் கூறும் ஆரம்பவாதமும், பேய்த்தேரானுய நீர்த்தோற்றம்போல மாயாவாதிகள் கூறும் விவர்த்தன வாதமுஞ் சித்தாந்தத்திற் கேலாமையின், அவற்றை யொழித்து, சித்தாந்தத்திற் கொள்ளப்படும் பரிணாமம் விருத்தியென்னும் இரண்டினுள் இச்செயலியாதோ என்னும் ஐயநீக்குதற்பொருட்டுப் பரிணாமமன்று விருத்தியாகுமென்றும், அற்றேற் பிரமம்போலும் என்னுங் கடாவை யாசங்கித்துப் பிரமமன்று, மாமாயையாமென்றுங் கூறினார். அன்றியென்னும் வினையெச்சத்திகரம் உகரமாய்த் திரிந்தது. ஆகுமென்றது பின்னருஞ் சென்றியையும். பரிணாமம் விருத்தியென்னும் இரண்டனுள், மலகன்மங்களோடு விரா

* சித்தியார் சுபக்கம் - ௨௬.



வாத சுத்தமாயையின் காரியம் படங்குடிலானாற்போல விருத்தியெனவே, ஏனைப் பரிணாமம் அவற்றொடு விரவிய அசுத்தமாயையின் காரியத்திற் கென்பதூஉம் பெறப்பட்டது. பாலினுண்டாகிய தயிர் போல முழுவதும் பரிணமித்தலும், நெய்யினுண்டாகிய புழுப்போல ஏகதேசத்திற் பரிணமித்தலுமெனப் பரிணாமம் இருவகைப்படும். அவற்றுட் பின்னையதே அசுத்தமாயையிற் கொள்ளப்படுவதூஉமென்க. விருத்தியென்பது சூக்கும பரிணாமமென்ப. நிவிர்த்தாதி கலையைப்பற்றித் திகழ்ந்திடுமஞ்சதாக என்பதற்கு, "நிவிர்த்திகலையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலதமமாயும், பிரதிட்டையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலதரமாயும், வித்தையுட்பட்ட புவனவாசிகட்குத் தூலமாயும், சாந்தியுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்குமமாயும், சாந்தியதீத கலையுட்பட்ட புவனவாசிகட்குச் சூக்குமதரமாயும் இங்ஙனம் நால் வகை வாக்கும் ஐவகைப்படும் என்றுரைத்தலும் ஒன்று. ௨௪

வித்தைகள் வித்தை ஈசர் சதாசிவர் என்றி வர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள் மந்தி ரங்கள்
தத்துவம் சரீரம் போகம் கரணங்கள் தாமெ லாமும்
உய்த்திடும் வைந்த வந்தான் உபாதான மாகி நின்றே. ௨௫

(உரை) சுத்தமாயை முதற்காரணமாவது ஈண்டுக் கூறிப்போந்த வாக்குமாத்திரைக்கேயன்று, மந்திரேசுரர் மந்திரமயேசுரர் அணு சதாசிவர் முதலிய அபாமுத்தர்க்கு வேண்டப்படுஞ் சுத்தாத்துவாக்கள் எவற்றினுக்கும் முதற்காரணமாம்.

விந்துவை வைந்தவமென்றது பகுதிப்பொருள் விகுதிபெற்றது.

மூவகை அணுக்க ளுக்கு முறைமையால் விந்து ஞானம்
மேவின தில்லை யாகில் விளங்கிய ஞான மின்றும்
ஓவிட விந்து ஞானம் உதிப்பதோர் ஞான முண்டேல்
சேவுயர் கொடியி னன்றன் சேவடி சேர லாமே. ௨௬

(உரை) மேற் கூறிப்போந்த வாக்குகள் சவிகற்ப ஞானத்துக் கேதுவாகலால், ஈண்டுக் கூறியது சுத்தப்பிரபஞ்சம்போல வித்தைகள் வித்தையீசர் சதாசிவர் மாத்திரைக்கேயன்றி, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்க்கும் ஒருதலையான் வேண்டப்படும் சவிகற்ப ஞானத்திற்கேதுவாகிய அவ்வாக்குக்கள் தன்னின் வேறாகக் காணப்பட்டு

...நீங்க அதற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அவ
...னப்பொழுதே பரமுத்தியைத் தலைப்படுவன்.

எனவே, இவ்வாக்குகள் பரமபந்த மென்பதாயிற்று.

...யின்மேலாதலாவது, வித்தைகள் வித்தையீசர் முதலியோர் போலன்
...றிச் சகலர் முதலிய மூவர்க்கும் வியஞ்சக வேறுபாடுபெற்றி, முறைமை
...தூலதமமாயுந் தூலதரமாயுந் தூலமாயும் பொருந்துதல். முறையே
...கேதுவாகிய வாக்கை ஞானமென்று உபசரித்தார். ஞானத்திற்
...ஞானகலர்க்குத் தனுவில்லையென மயங்கிக் கூறுவாருமுளர். பிரளயாகலர் விஞ்
...ஆகம வசனங்களோடு முரணுதலின் அவசித்தாந்தமென்றொழிக. அஃது
...இவை ஏழு செய்யுளானுஞ் சுத்தமாயையில் தோன்றுங் காரியங்க
...ளும் அவற்றதியல்பும் வகுத்துக் கூறப்பட்டன.

அருவினில் உருவந் தோன்றி அங்காங்கி பாவ மாகி உசு
உருவினில் உருவ மாயே உதித்திடும் உலக மெல்லாம்
பெருகிடும் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகும்
ஒருவனே யெல்லா மாகி அல்லவா யுடனு மாவன்.

(உரை) சூக்குமமாகிய மாயையினின்றும், தூலமாகிய கலாதியும், சஎ
அவற்றினுந் தூலமாகிய மூலப்பகுதியும், அதனினுந் தூலங்களாகிய
குணதத்துவ முதலாயினவுந் தோன்றும். அத்தூலங்களினின்றுந்
தோன்றுங் காரியம் அவற்றினுந் தூலமேயாம். இவ்வாறே காரியப்பிர
பஞ்சமெல்லாந் தோன்றி, நிலம் நீர் தீ வளி விசும்பு ஆண் பெண் அலி
என்றாற்றொடக்கத்து அவயவப் பகுப்புடையனவாய் வளர்ந்துந் தேய்ந்
தும் பரிணமித்துவரும். இத்தன்மையவாகிய காரிய காரணங்கட்குத்
தம்முட் பெரும்பாலும் வேற்றுமை கூறும் நையாயிகர் முதலியோர்
மதம் அடாது. மற்றென்னெனில், பரிணமமாதலை நோக்கிப் பேதா
பேதமாம்; சற்காரியமாதலை நோக்கி அபேதமாம். மேற் சிவனவன்
றன் சந்நிதி தன்னினின்றே தோன்றுமென்பதனாற் பெறப்பட்ட
நிமித்த காரணனாகிய முதல்வன், அநந்தர் ஸ்ரீகண்டர் முகத்தான்
அவற்றைக் காரியப்படுத்துங்கால், கலப்பினாலொன்றாயும் பொருண்
மையால் வேறாயுஞ் செலுத்துதலான் உடனாயுநிற்பன்.

எல்லாமென்றதனாற் சுத்த மாயா விருத்தியினும் அவ்வாறு நிற்ப
னென்பது பெறுதும். உருவினில் உருவாய்த் தோன்றுமெனப்
பிரித்தமையின், எகாரம் பிரிநிலைக்கண் வந்தது. ஒருவனேயென்னும்



எகாரந் தேற்றம். அங்காங்கி பாவமாகிப் பெருகிடுஞ் சுருங்குமெனக்
கூட்டுக. 'அநிர்வசனத்தின் உலகந் தோன்று' மென்னும் மாயா
வாதத்தை மறுப்பார், அருவினில் உருவந் தோன்றியென்றும், 'அவய
வமே பொருளாய்த் தோன்றுவதன்றி அவயவி யென்பதொன்றில்லை'
என்னுஞ் சமுதாய வாதத்தை மறுப்பார், அங்காங்கி பாவமாகி
யென்றும், 'நிலமுதலிய உருவப் பொருளினின்றுங் கந்தகுண முத
லிய அருவந் தோன்று'மென்னும் ஆரம்பவாதத்தை மறுப்பார்,
உருவினில் உருவமாயே உதித்திடுமென்றுங் கூறினார். பெருகிடுஞ்
சுருங்குமென்றதும், பெருக்கஞ் சுருக்கம்பற்றி ஒரு பொருட்கே
பெரும்பாலும் வேற்றுமை கூறும் அவ்வாதத்தை மறுத்தற்
பொருட்டு. பிறவுமன்ன. இதனானே மாயை மூந்திடும் அராகமாதி
முக்குணமாகி மூலந் தந்திடும் என்றதன்கட் படுமியல்பு தொகுத்துக்
கூறப்பட்டது.

அருஉரு ஈறு தாகும் விகாரமும அவிகா ரத்தின் உஎ
வருவது மில்லை என்னின் வான்வளி யாதி பூதம்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடும்
உருவமின் உருமே றெல்லாம் உதித்திடும் உணர்ந்து கொள்ளே.

(உரை) அருவெனவே அவிகாரமாதலும் பெறப்பட்டமையின்,
அப்பெற்றித்தாகிய மாயையினின்றும் உருவமாய் விகாரியுமாகிய பிர
பஞ்சந் தோன்றுமென்றல் பொருந்தாதெனில்,-அறியாது கூறினாய்;
உன் மதத்தில் அருவமும் அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும்
உருவமும் விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்கள் முறையே
தோன்றும்; அதுவேயுமன்றி அவ்வாகாயத்தினின்றும் பல முகில்
களும், முகிலின்கட் பல விகாரங்களும் பலவோசைகளும் பலமின்
களும் பலஇடிகளும் இன்னும் இவைபோல்வன பலவுந் தோன்று
மாகலான், அதனை மறந்து அங்ஙனங் கூறுதல் உனக்கே வழுவாய்
முடியும்.

சற்காரியங்கொண்ட எமக்காயின், அது வழுவன்றென்பது
கருத்து. இதனானே மாயாவாதிமதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து
மேலது வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு, உதிப்பதும் ஈறுமென்பது
முதல் அருவுருவென்ப தீறாகிய இருபத்தேழு செய்யுளானும், முதற்
செய்யுளின் "ஒருவனோ டொருத்தியொன்றென் றுரைத்திடும் உலக

மெல்லாம் வருமுறை வந்துநின்று போவது மாதலாலே தருபவன் ஒருவன்வேண்டும்' என்ற முதற்கூற்றை, முறையே அவ்வவர் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனி ஈறுமாகி அநாதி முத்த சித்துருவாய் மன்னிநின்று மருவு வித்திடுமென்னும் இரண்டாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்துவான் தொடங்கினார்.

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னாலே உஅ
எண்ணிய உருவ மெல்லாம் இயற்றுவன் ஈசன் தானும்
கண்ணுகா ரியங்க ளெல்லாம் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேள்நீ. சகூ

(உரை) இங்ஙனம் அகிலமெல்லாம் ஆரியன் குலாலன்போல் நின்று ஆக்குவனாயின், குலாலன் கடாதி காரியங்களையெல்லாம் அவற்றிற்குக் காரணமாகிய அந்நிலத்தினின்றும் செய்யக் கண்டோமே, ஆரியன் யாங்ஙன நின்று செய்வன்?

'மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே எண்ணிய உருவமெல்லாம் இயற்றுவன் ஈசன்றானும்' என்றது அனுவாதம். ஆயினென்பது சொல்லெச்சம். காரணமென்றது நிலமென்னுந் துணையாய் நின்றது. காண்டல் செய்தல். நின்றென்பது மேலும் கூட்டப்பட்டது. இது வினா. இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட உரைத்தார்.

சீலமோ உலகம் போலத் தெரிப்பரி ததனால் நிற்கும் உகூ
கோலமும் அறிவா ரில்லை ஆயினுங் கூறக் கேள்நீ
ஞாலமே ழினையுந் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ நிலைசெயல் கடவுட் கண்ணே. ருO

(உரை) அவன் உலகம்போலன்றி வாக்குமனாதீத கோசரப் பொருளாகலான், அவன் நிற்குநிலையும் அவ்வியல்பிற்றேயாம். அங்ஙனமாயினும், ஒருவாற்றான் உவமையில் வைத்து உனக்குக் காட்டுதும்: உலகமெல்லாங் காலத்தாற் காரியப்படுமென்பது எல்லோர்க்கும் ஒக்குமன்றே. அக்காலம் அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாப்பொருட்குந் தானாதாரமாய்த் தனக்கோராதாரமின்றி நிற்றல்போல, சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே காரியப்படுத்தும் முறைமை உணர்ந்து கொள்க.



சீலம் தன்மை. ஓகாரம் சிறப்பின்கண் வந்தது. கோலமும் என்ற உம்மை இறந்தது தழீஇயிற்று. ஞாலம் ஏழினையுமென்றது உபலக்கணம். கண் அறிவு. ஒற்றுமைபற்றிச் சிவசத்திமேல் வைத்துக் கூறினார். உயர்திணைக்கட் சிறுபான்மை ளகாரந் திரிதல் மக்கட் பண்பு முதலியனபோல இலேசாற் கொள்க. நிலைசெயலென்பது நிற்றலென்னும் பொருட்டாய். இரண்டாவது தொக்கு நின்றது. அற்றேல் ஞாலமேழினையுந் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணுங் காலம், அத்தொழில் வேறுபாடுபற்றிச் செல்காலம் நிகழ்காலம் எதிர்காலம் கணம் இலவந் துடியென்றற் றொடக்கத்தனவாய்ப் பலவகை யவத்தைப்படுமென்பது, சித்தாந்த நூற்றுணிபாகலின், அதுபோல உலகத்திற்காதாரமாய் நின்று செய்யுமுதல்வனும் அவ்வத்தொழில்பற்றிப் பலவகை யவத்தைப்பட்டுத் துடக்குறுவன் போலுமெனின், அதற்கன்றே வருஞ் செய்யுள் எழுந்ததென்பது. ந.O

கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்
பெற்றியும் சாக்கி ராதி உயிரினிற் பிறந்தொ டுக்கம் [றும்
உற்றதும் போல வெல்லா உலகமும் உதித்தொ டுங்கப்
பற்றொடு பற்ற தின்றி நின்றனன் பரனு மன்றே. ருக

(உரை) காரணங்களானாகிய சாக்கிரமுதலிய அவத்தைகள் ஆன்மாவினொடுங்கித் தோன்றும்வழி ஆன்மாவும் அவத்தைப்பட்டுத் துடக்குறுதல்போல, முதல்வன் எல்லாவுலகமுந் தன்பாலொடுங்கியுதிப்பத் தானுமதுபற்றி இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைப்பட்டுத் துடக்குறுவோனாகியும், கற்றநூற்பொருளுஞ் சொல்லும் வாதனாரூபமாய்ப் புத்தி தத்துவத்தை யொட்டிநின்று ஆன்மபோதத்தின்கண் ஒடுங்கித் தோன்றும்வழி அவ்வான்மபோதம் அதுபற்றித் துடக்குறாதவாறுபோல, ஆண்டுத் துடக்குறுதலின்றியே நின்றனன்.

எதிர் நிரனிறையாகக் கொள்க. ஈண்டுக் கருத்தென்றது உயிருணர்வை. பற்று முதனிலைத்தொழிற்பெயர். இவை மூன்று செய்யுளானும் மன்னிநின்றே மருவிடுமென்றது தடைவிடைகளால் தெரித்துணர்த்தப்பட்டது. இயைபுபற்றி இதனை முன்வைத்தார். இனி ஆறுசெய்யுளான் ஈறுமாகி மருவிடுமென்றதனை வலியுறுத்துகின்றார்.

உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதென் அரன்பா லென்னில்
செயிருறு மலத்தி னாகும் சிதைந்ததே தென்னிற் சித்தத்(து)
அயர்வொழிக் காரி யங்கள் அழியுங்கா ரணங்கி டக்கும்
பயில்தரு காரி யம்பின் பண்டுபோற் பண்ணு மீசன். ௫௨

(உரை) ஈறாகியோனால் ஈறெய்திய உலகம் ஈறெய்தியவாறே யொழியாது மீளவும் அவன்பால்நின்று தோன்றுதல் எற்றுக்கெனின்,—மலபரிபாகம் வரும்பொருட்டுத் தோன்றும். அற்றேல், மீளவுந் தோன்றற்பாலது முன்னழியாது நிலைபெறவேயமையும். அவ்வாறன்றி, அழிதலெற்றுக்கெனில்,—உயிரினிளைப்பு ஒழித்தற் பொருட்டு. முன் இளைப்பினைச் செய்துநின்ற காரியங்கள் அழியு மாகலான், அழிந்தவழியும் முன்னை வினைத்தொடர்ச்சிக்குரியன வாய்த் தத்தங் காரணங்களிற் கன்மத்தோடு பயின்று கிடக்கின்ற அக் காரியங்களை ஒடுங்கியவாறே உதிக்கச் செய்வன்.

'ஆக்க மவ்வவர் கன்மமெல்லாங் கழித்திடல்' என முன்னர்க் கூறுவாராகலின், அதற்குரிய இயைபு ஈண்டேயுணர்த்துவார், 'காரணங் கிடக்கும் பயில்தருகாரியம்பின் பண்டுபோற் பண்ணுமீசன்' என்றார். உயிரவை உயிரோடுங் கூடிய உலகமென்றவாறு. எதென் பது எற்றுக்கென்னும் பொருட்டாய் நின்றது. சித்தத்தயர்வு அறிவின்கண்ணதாகிய இளைப்பு. ஒழியவென்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. கிடக்குமென்பது பெயரெச்சம். இதற்குப் பிறரெல்லாஞ் சற்காரியத்தியல்பின் வைத்துக் கூறியதுகூறலென்னும் வழூப்படவுரைத்தார். ௩௨

தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே உடைய னீசன் புகுந்தது விகார மென்னில்
சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலருங் காந்தம்
காற்றிடும் கனலை நீரும் கரந்திடும் காசி னிக்கே. ௫௩

(உரை) ஒருகடவுள் மூன்று தொழில் இடையறாது செய்வானாயிற் பாரமெய்தி விகாரியாவான்போலும் என்பார்க்கு அஃதில்லை யென்பது, தனக்குரிய முத்தொழில் செய்தும் அதுபற்றி விகாரமெய்தாத ஞாயிற்றின் வைத்து அறியப்படும்.



காசினிக்கென்பது, உருபு மயக்கம். இவையிரண்டு செய்யுளானும் புத்த மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து ஈறுமாகி மருவிடுமாறு வலியுறுத்தப்பட்டது. ௩௩

உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக் குலகம் ஓத
வரைத்தொரு வனுக்கே யாக்கி வைத்ததிங் கென்னையென்னின்
விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி னோர்கள்
புரைத்ததி கார சத்தி புண்ணியம் நண்ணலாலே. ௫௪

(உரை) அயன்மாலிருவரும், புண்ணிய விசேடத்தான் முதல்வனுடைய அதிகாரசத்தி அவனதேவலாற் பெற்றுடையரன்றி, அத் தொழிற்குச் சுதந்திரர் அல்லராகலான், முத்தொழிலுஞ் செய்தற் குரிய சுதந்திரம் ஈறுமாகி யொருவனுக்கே யுண்டு.

*"நல்வினைக்கண் வாழ்நாளின் மாலா யயனாகி" என்றார் புடை நூலாசிரியரும். வேதம் புராணம் இதிகாசம் முதலியவற்றிற்கும் இதுவே கருத்தென்பது சதுர்வேத தாற்பரிய சங்கிரக முதலியவற்றுட் காண்க. வரைந்து வரைத்தென வலித்தது. புரைத்தவென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது. புரைத்தல் உயர்தல்.

இறுதியாம் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்றா ரென்னின் இறுதிதா னுண்டா காதாம்
அறுதியில் அரனே யெல்லாம் அழித்தலால் அவனா லின்னும்
பெறுதுநாம் ஆக்கம் நோக்கம் போதி காரணத் தாலே. ௫௫

(உரை) சங்காரகாலத்தில் ஏனை இருவருந் தத்தம் ஆற்றலோடு நிலைபெறுவாராயின் உலகஞ் சங்காரமாதல் இன்மையான், அக்காலத்து அவ்விருவரும் உளரல்லரென்பது பெற்றாம். அல்லதூஉம், சங்காரக் கடவுளெனப்படுவோன் சிலவற்றை யொழித்துச் சங்கரிப்பானல்லன்; அப்பெற்றியனாகிய சங்காரக் கடவுளை வேறு சங்கரிப்பாரில்லையாகலான், முழுவதுஞ் சங்கரித்தவழி அவனொருவனே எஞ்சி நிற்றல் பெறப்படுதலானும், ஒடுங்கிய உலகங்கட்குப் பெரியதோராதாரம் அவனேயாகலானும் ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுதற்கும் நிறுத்துதற்கும் அவனே உரியனென்பது தானே போதரும். ௩௪

* போற்றிப் பஃறொடை - ௭௧-௭௨

அறுதியில் அரனென்னும் பெயரடையானும் ஓரோதக் கூறிய வாறு. இன்னும் மீளவும் ஆதாரம் அதிகரணமென்பன ஒரு பொருட் கிளவி. பேரதிகாரணமென விசேடித்தார், முதற்காரணமும் அதி கரணமாதலுண்மையின். இவையிரண்டு செய்யுளானும், பௌராணி கர் மதம்பற்றி நிகழுங் கடாவை முறையே ஆகம அளவை பற்றியும் பொருந்துமாறுபற்றியும் பரிகரித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. இதனானே பாஞ்சராத்திரிமதம் இரணியகருப்ப மதங்களைப் பரிகரித்த வாறுமாயிற்று.

௩௫

சொன்னஇத் தொழில்க ளென்ன காரணந் தோற்றவென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாம்உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதுஞ் சொல்ல லாமே.

(உரை) சங்காரக்கடவுள் இங்ஙனங் கூறிப்போந்த தோற்ற முத லிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் யாதெனில், *“காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி” என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி, ஒருசாரார், அத்தொழிற்குக் காரணம் விளையாடற் கருத் தென்பர்; ஒரு சாரார், †“ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்” என்பது முதலிய திருவாக்குகள் பற்றி, விளையாட்டென்றது, ஐங்கலப் பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல அத்துணை யெளி திற் செயப்படுதலை நோக்கியேயாகலின், அக்கருத்தும் உயிர்கட்குப் பெத்தகாலத்துச் சுவர்க்காதி போகமும் பதமுத்திகளும் முத்தி காலத்து வீடுபேறுங் கொடுத்தற் பயத்ததென்பர். அவ்விரண்டுந் தம் முள் முரணுமையான் உயிர்கள்மேற் சென்ற கருணையே ஆண்டைக் குக் காரணம்.

‘மொழிதலும்’ என்னும் உம்மை, எதிரது தழீஇயது; ஏனைய எண்ணும்மை. வழங்கவுமென்னும் உம்மையோடு இயைதற்கேற்பத் துடைப்பதாகவுமென ஆக்கச்சொல் வருவித்துரைக்க. அருளால் என்பதனை மேலுங் கூட்டுக. காரணமென்னையெனக் கடாயினார்க்

* திருவாசகம் - திருவெம்பாவை - ௧௨.
† ஷை ஷை ௧௧.



குப் பயன் கூறிவிடுத்தல் செப்புவழுவாம்போலுமெனின்,—ஆகாது; அருளாலெனவே வழங்கவுந் துடைப்பவும் வைத்த அவ்வருள் காரண மென்பது தாற்பரியமாகலின். அற்றாயினும், அனுக்கிரகம் ஒழித் தொழிந்த தொழில்களெல்லாம் பிறப்பிறப்புக்களிற் படுத்துத் துய ருறுத்துவன வாகலின், அவற்றைச் செய்வது அருளாமாறு யாங்ஙன மெனின், அதற்கன்றே வருஞ்செய்யுள் எழுந்ததென்பது. ௩௬

அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்க ளெல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம். ௩௭

(உரை) ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென்னும் ஐந் தும், முறையே, இளைப்பாற்றலும், கன்மங் கழியுமுகத்தான் மலபாகம் வரச்செய்தலும், கன்மங் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்ம வொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமா கிய உறுதிப்பயத்தனவாகலான், ஐந்தொழிலும் அருட்செயலேயாக லின், இவற்றுட் சில மறத்தொழிலேபோலுமெனப் பழித்தலையொழி வாயாக.

மேன் முத்தொழில் கூறி ஈண்டு ஐந்தொழிலென்றல் மலைவாம்; பிறவெனின்,—ஆகாது; மறைப்பையும் அருளையும் நிலையிறுதிகளின் அடக்கி ஆண்டு முத்தொழிலென்றார், தம்முள் வேற்றுமையுடைமை பற்றி ஈண்டு ஐந்தொழி லென்றாராகலின், இவையிரண்டு செய்யுளா னும், சங்காரக் கடவுள் செய்யுந் தொழில் மறமாய் முடியுமென்னும் நாத்திகர் மதமும், வீண்டொழிலென்னும் மாயாவாதிகள் மதமும், தன்பொருட்டென்னும் பரிணாமவாதிகள் மதமும்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, மேலது சிறப்பிக்கப்பட்டது. இங்ஙனம் ஆறுசெய்யுளான் ஈறுமாகி மருவிடுமென்றதனை வலியுறுத்தி, இனி அநாதிமுத்த சித் துருவென்றதனை இருபத்திரண்டு செய்யுளான் வலியுறுத்துகின்றார்.

அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்
அருவமும் உருவா ரூபம் ஆனது மன்றி நின்ற [னின்
உருவமும் மூன்றுஞ் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே.

(உரை) ஐந்தொழில் செய்யும் முதல்வனுக்கு, வடிவம் இன்றி யமையாமையின், அவ்வடிவமாவது அருவமுதலிய மூன்றனுள் யாதெனின், அவனுக்கு அம்மூன்றும் வடிவேயாம்.

இதுசொற்பொருட்பின் வருநிலை. உள்ளவென்றது அன்பெறுத வகரவீற்றுப் பலவறிசொல். சொன்னவொருவன் அநாதிமுத்த சித்துருவென மேற்கூறப்பட்ட ஒருவன். இதனானே, அநாதிமுத்த சித்துருவாகிய சங்காரக்கடவுளுக்குத் தடத்த வடிவமிவையென்பது கூறப்பட்டது. இனி இம்மூன்றற்கும் சிலர் கூறுங் குற்றங்களைப் பரிகரிப்பாராய், உருவத்தின்கட் கூறுங் குற்றம் பரிகரிக்கவே ஏனையவும் பரிகரிக்கப்பட்டனவாமென்னுங் கருத்தான், உருவத்தின்கண் ஆசங்கித்துப் பரிகரிக்கின்றார்.

௫௮

நண்ணிடும் உருவ மென்னின் நமக்குள உருவம் போலப்
பண்ணிட ஒருவன் வேண்டும் இச்சையேற் பலரும் இச்சை
கண்ணிய உருவங் கொள்ளேம் யாம்பெருங் கடவுள் தானும்
எண்ணிய யோக சித்தர் போலுரு இசைப்பன் காணே. ௫௯

வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோல்
உத்தமன் கொள்வ னென்னின் அவர்களி லொருவ னவன்
அத்தகை யவர்க ளெல்லாம் ஆக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயை யாமே. ௬௦

(உரை) முதல்வனுக்கு உருவமுண்டெனின், உருவமெல்லாம் ஒருபெற்றியவாகலின் உருவமுடைய நம்மனோர்க்குளதாகிய பாதந்திரம் முதல்வனுக்கும் உளதாதல்வேண்டும்; அஃதன்றாயின் முதல்வனுக்குளதாகிய சுதந்திரம் நம்மனோர்க்கும் உளதாதல்வேண்டும். இனி, நம்மனோர்க்கும் யோகிகட்கும் உளதாய வேறுபாடு பெரிதாயினாற்போல, யோகிகள் முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்கும் உளதாகிய வேறுபாடுபெரிதாகலின், ஒப்புமைகூறுதல் பொருந்தாதெனின், அங்ஙனமாயினும், உருவடிவெல்லாம் ஒருபெற்றியவாகலின், உருவத்தின் வேற்றுமையில்வழி அவ்வேறுபாட்டாற் போந்த பயன் என்னை?

'வித்தக யோகசித்தர் வேண்டுருக்கொள்ளுமாபோல் உத்தமன் கொள்வனென்னின்' என்றது அனுவாதஞ் செய்துகொண்டது. இவை இரண்டு செய்யுளுந் தடை; இனி விடை.

௫௮-௬௦



மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
மாய ஆணவ மகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முதல் நண்ணு லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால். ௬௧

(உரை) நீ அங்ஙனங் கூறுதல் பொருந்தாது. அங்கிகளது ஏற்றத்தாழ்வால், அங்கங்களும் ஏற்றத்தாழ்வுடையனவன்றித் தம்முள் ஒப்பனவல்ல. அற்றேல்; அவ்வேற்றத்தாழ்வுகள் என்னையெனிற் கூறுதும்: யோகிகள் நம்மனோரெல்லாரும் மலத்தைப்பற்றிக் கிடக்கும் பசுக்கள்; அதுவன்றியும் ஒன்றையேயறிதலும் ஒன்றையே செய்தலும் ஒன்றிலே முதன்மையாதலுமாகிய அற்பஞானத்தொழின் முதலுடையராம்; முதல்வனுவான் அம்மல நீங்கிய அறிவில் தங்கிநின்று உணர்த்துவோனாகிய பசுபதி ; அதுவுமன்றி எல்லாஅறிவும், எல்லாத்தொழிலும், எல்லா முதன்மையும் உடையன். இங்ஙனம் அங்கிகட்குத் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மையின், அதற்கேற்ப மலத்தைப்பற்றிய பசுக்களுக்கு அதனோடியையுடைத்தாய் ஏகதேச அறிவைச்செய்யும் மாயையுருவமும், அநாதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு மலநீங்கிய வுயிர்க்கு வியாபக அறிவைச் செய்யுஞ் சத்தியுருவமுமாதலாலே அமைவுடைமையின் அங்கங்களினுந் தம்முள் ஏற்றத்தாழ்வுண்மை இனிது விளங்குதலான், அதனையறியாது, இச்சையேற் பலரும் இச்சையென்றும், மாயையென்னில் வடிவெலா மாயையாகுமென்றுங் கூறுதல் அடாது.

தானென்பது அனுவதித்தலையுணர்த்தி நின்றது. பற்றியென்பது பெயர். *"ஐந்தவித்தானாற்றல்" என்புழிப்போலப் பற்றிக்கென்னும் நான்கனுருபு விரித்துரைக்க. நாயகனெல்லா ஞானத்தொழின்முதல் நண்ணலாலெனவே, உயிர்கள் ஒருஞானத்தொழின் முதலே நண்ணுவன என்பது பெற்றாம். அசறல் நீங்குதல். ஆர்தல் பொருந்துதல்; அஃது உபசாரத்தாற் காரியத்தின்மேல் நின்றது. ஓகாரம் சிறப்பின்கண் வந்தது. ஏகதேசஅறிவைச் செய்தல் ஏகதேசப்படுந் தகுதியுடைய பொருட்கேயன்றி ஏனையதற்குரித்தன்று. வியாபகஅறிவைச் செய்தல் வியாபகப் பொருட்கேயன்றி ஏகதேசப்படுந் தகுதியுடையதற்கு உரித்தன்று. ஆகலான், ஏகதேசத்தில் அறியும்

* திருக்குறள் - நீத்தார் பெருமை - ௫.

பசுக்களுக்கு ஏகதேசப்படுந் தகுதியுடைய மாயையே உருவமாயிற்று; வியாபகமாயறியும் பசுபதிக்கு அதுபோல் ஏகதேசப்படுந் தகுதியில்லாத சத்தியே உருவமாயிற்றெனக் கொள்க. இனி, ஆணவமகன்ற அறிவொடு தொழிலையார்க்கும் என்பதற்கு, வியாபகஞானத் தொழில்களை ஆணவமலந் தடுக்குமென்றுரைப் பாருமுளர். முன்னும் பின்னும் பொருளியைபுபடுதற்கேலாது நின்றுவற்றுமாகலின், அஃதுரையன்மை யறிக.

௪௧

சத்தியே வடிவென் றாலும் தான்பரி ணாம மாகும்
நித்தமோ அழியும் அத்தால் நின்மலன் அருவே யென்னின்
அத்துவா மார்க்கத் துள்ளான் அலனிவன் அருமை தன்னைப்
புத்திதா னுடையை போல இருந்தனை புகலக் கேள்நீ. ௪௨

(உரை) அங்ஙனமாயினும், உருவமெல்லாங் கண்டிதப்பொருளாகலிற் பரிணமித்தழிவெய்துமது சிவசத்திக்குத் தகாமையால், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் முதற்கட் கூறப்படும் அருவப்பொருளாதன் மாத்திரையென்றலே அமைவுடைத்தெனின்,—ஆறத்துவாவையுங் கடந்த பொருளை அவற்றோடொப்ப வைத்து அங்ஙனங் கூறுதல் பொருந்தாது.

புத்திதானுடையைபோல இருந்தனை என்பது, இழித்தற்கண் வந்த குறிப்புமொழி. அன்றென்பது பாடமாயின், அத்துவா மார்க்கத்துள்ளானென்பது, அத்துவா மார்க்கத்துள் ஒன்றாகக் கருதப்படானென்றுரைத்து, அன்றிவனென்பது அவ்வத்துவாக்களதியல்போடு மாறுபட்ட இவனென வினைத்தொகையாக வைத்துரைக்க. அன்றுதல் அப்பொருட்டாதல் *"அன்றினார் புரமெரித்தார்க்கு" என்பதனுமறிக. அற்றேல், முதல்வன் அருவமேயெனில், அத்துவாக்களில் ஒருவனாய் முடியுமென்றல் யாங்ஙனமெனின், அது, வருஞ்செய்யுளிற் கூறப்படும்.

௪௩

உலகினில் பதார்த்த மெல்லாம் உருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்றொன் றாகா நின்றஅந் நிலையே போல
அலகிலா அறிவன் றானும் அருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன் குறித்திடாயே.

* பெரியபுராணம் - பூசலார் - ௧.



(உரை) ஆகாயம் முதலிய அருவப்பொருள் உருவத்தின் இயல்புடைய தாகாது; நிலமுதலிய உருவப்பொருள் அருவத்தின் இயல்புடைய தாகாது; சந்திரன் முதலிய அருவுருவப்பொருள் அருவியல்பே யுடையதுமாகாது, உருவியல்பே யுடையதுமாகாது. இங்ஙனம் ஆறத்துவாவுட்பட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றின் இயல்புடையதாகமாட்டாது. ஆகலான், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனை அருவப்பொருளேயெனின், அவனுமவைபோல மாட்டாமை யுடையனெனப்பட்டு அவற்றுளொருவனாய் முடியும்.

உருவமோ டருவ மென்பதனை இரட்டுறமொழிந் துரைத்துக் கொள்க. ஒன்றினியல்பு ஒன்றுடைத்தாகா தென்பார், ஒன்றொன்றாகாவென உபசரித்தார். இவ்வாறுரையாதார்க்குச் சற்காரியவாத முரணுமாறுணர்க. இதனானே நின்மலன் அருவேயென்பார் மதமும், அருவுருவே யென்பார் மதமும் மறுக்கப்பட்டவாறுமாயிற்று. அஃதங்ஙனமாக, சத்தியே வடிவென்றால் பரிணாமமாகவே அநித்தமுமாய் விடுமெனக் கூறிய குற்றத்திற்குப் பரிகாரமென்னையெனின், அது வருஞ்செய்யுளிற் பெறப்படும்.

௪௪

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லான்
அந்தமும் ஆதி யில்லான் அளப்பில னாத லாலே
எந்தைதான் இன்ன னென்றும் இன்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே.

(உரை) அநாதிமுத்த சித்துருவாகிய எந்தை, கட்டு வீடென்னும் பதங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடையன் அல்லனாகலானும், எழுவாயிறுவாய் இலனாகலானும், அவையிலனாகவே அளவைகட் கெட்டாமையானும், அருவம் உருவம் அருவுருவமென்னும் முக்கூற்றுள் இன்னனவனென்றுதான் அம்முக் கூறும்படும் விருத்தி பரிணாமம் விவர்த்தனம் என்பவற்றுள் ஒன்றிற்படுவன் படானென்றுதான் கூறுதற்கோர் ஆசங்கையுமில்லை. ஆசங்கையின்மையின் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லை.

அருவமெல்லாம் உருவமாய்த் தோன்றுதலும் உருவமெல்லாம் அருவமாயழிதலும் ஒருதலை. அதுபற்றி அவை அளவைகட்கு வரம்புபடுவனவுமாம். அநாதிமுத்த சித்துருவாகிய எந்தைக்குத் தோற்றக் கேடுகளின்மையானும், அவையின்மையின் அளவைகட்கு வரம்புபடா

மையானும், அவன் முக்கூற்றுள் ஒருகூற்றினும் வைத்து மொழியப்படானென்பார், அந்தமும் ஆதியில்லான் அளப்பிலனாதலாலே எந்தைதான் இன்னனென்று சொல்ல வழக்கொடு மாற்றமின்றே என்றும், கட்டுவீடுகளிலனாகலின் எவ்வாறுமாமென்பார், பந்தமும்வீடுமாய பதபதார்த்தங்களல்லான் இன்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே யென்றும் கூறினார். எதிர்நிரனிறை. *''எந்தையாரவர் எவ்வகை யார்கொலோ'' என்றருளிச்செய்த பாசுரமுமிது. பதபதார்த்தமென்றது குழைக்காதுபோல் இரண்டாம் வேற்றுமைத்தொகை. பதம் அவ்வச்செவ்வி. ஆதியுமென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. அற்றேல், உருவமுடையாரெல்லாம் விகாரப்படுதலும் ஏகதேசமாதலுந் துடக்குறுதலும் உடையாதல் காணப்பட்டமையின், முதல்வனுக்கு உருவமுண்டாயின் அவையும் உளவெனப்பட்டு வழுவாமாலெனின், அவ்வாசங்கை நீக்குதற் கெழுந்தது வருஞ்செய்யு ளென்பது. ௬௪

குறித்ததொன் றாக மாட்டாக் குறைவிலன் ஆத லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளி னாலே. ௬௫

(உரை) விகாரப்படுதற்குக் காரணம் பாதந்திரமும், ஏகதேசமாதற்குக் காரணஞ் சிற்றுணர்வு சிறுசெயல்களும், துடக்குறுதற்குக் காரணம் விருப்பு வெறுப்புக்களுமேயாகலின், அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன்மாட்டு அவ்வுபாதிகளின்மையின், அக்குற்றங்களுக்குச் சேயனாகிய அவன், ஆணவமகன்ற அறிவொடு தொழிலையார்த்து நி... றலின், தான்நினைந்ததொரு திருமேனியைத் தனதாகக் கொண்ட... னாவன்.

குறித்ததொன் றாகமாட்டாக் குறைவே பாதந்திரமாவதென்... றிக. அற்றேல், அக்குற்றங்களிலனாகிய முதல்வன் உருவமின்... நின்றே எத்தொழிலுஞ் செய்ய வல்லுமாகலான், உருவங் கோடலா... போந்த பயனென்னையெனின், அஃதுணர்த்துதற்கன்றே வரு... செய்யுள் எழுந்ததென்பது.

* சம்பந்தர் தேவாரம் - திருப்பாசுரம் - ௩.



ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவ ரில்லை யாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே. ௬௬

(உரை) உயிர்க்குத் தன்னுடம்பை இயக்குதற்கண் வேறோர்உருவம் வேண்டாமைபோல, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்கு தன்னுருவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்தற்பொருட்டு வேறோர் உருவம் வேண்டப்படுவதன்றாயினும், பிரளயாகலர் சகலரென்னும் பசுவர்க்கம் இரண்டும் முறையே முன்னிலையினும் படர்க்கையினும் நின்றுணர்த்தினாலன்றி உணரமாட்டாமையின், உயிர்வர்க்கங்கள் பொருளியல்புணர்ந்து வீடுபெறுமாறு வேதாகமங்களைக் கோவைபடச் செய்தற்பொருட்டும், அதனைக் குருபரம்பரையின்கண் வைத்தற்பொருட்டும், திருமேனி ஒருதலையான் வேண்டப்படும்.

கதித்தல் கதியடைதல். அற்றேல், இவ்வாற்றால் அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தனுவுண்டாகவே, தனுவிற்குரிய தொழில் கரணம் புவனம் போகங்களும் உளவாமாகலின், அவைபற்றி நம்மனோர்போலச் சுட்டியுணரப்பட்டு வாக்குமனாதீதனென்றல் வழுவாம்போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௬௭

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவிற் றோன்றும்
கருமமும் அருள ரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமரு வுபாங்க மெல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்த னன்றே.

(உரை) அரன்றனுரு அருளாகலான், உயிர்கட்கு உணர்வளிப்பதாய அவ்வுருவிற்றோன்றுந் தொழில்களுங் குணங்களுமாகிய கரணமும் அருள்வடிவே; கைகால் முதலிய வுறுப்புக்களும் அருள்வடிவே; உபாங்கமாகிய புவனபோகங்களும் அருள்வடிவே; இவ்வருள்வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றித் தன்பொருட்டன்மையான் இவை பற்றிச் சிந்திதனாயினும் அசிந்திதனே.

அருளுரு முன்னையது வினைத்தொகை; ஏனையது இருபெயரொட்டுப் பண்புத் தொகை. குணம் வாய்மை முதலியன. அவையே அவனுக்குச் சூலம் மழுமுதலிய படைக்கலமாகலின், அவை கரண

மெனப்பட்டன. கரசரணுதி சாங்கந் தருமருளென்பது முன் வைக் கற்பாலதாயினும், செய்யுளாகலின் முறை; பிறழவைத்தார். ஆதியென் றதனால் ஏனையங்கப் பிரத்தியங்கங்களுந் தழுவப்பட்டன. இவற்றைச் சாங்கமென்றது உபசாரம். அசிந்தனென்னும் வடசொல் அன் மொழித்தொகை. அன்றே அசை. இவையொன்பது செய்யுளா னும் முதல்வனுக்கு உருவத்திருமேனி யுண்டென்பது. பிறர் கூறுங் குற்றங்களான் இகந்துபடாமைக் காத்து வலியுறுத்தப்பட்டது. இனி, சிந்திதனுகியும் அசிந்திதனேயென்றதனை வலியுறுத்து முகத் தான், அவ்வுருவடிவின் பேதங்களும் அவற்றின்கண் நிகழுந்தொழில் களும் அவற்றானுய பயன்களுந் தொகுத்துணர்த்துகின்றார். ௪௭

உலகினை இறந்து நின்ற தரன்உரு வென்ப தோரார்
உலகவ னுருவில் தோன்றி ஒடுங்கிடு மென்றும் ஓரார்
உலகினுக் குயிரு மாகி உலகுமாய் நின்ற தோரார்
உலகினி லொருவ னென்பர் உருவினை யுணரா ரெல்லாம்.

(உரை) சிந்திதனுயினும் அசிந்திதனேயென்பதற்கு, வேதத் துள் உருத்திரன் விச்சுவாதிகனென்றும், விச்சுவகாரணனென்றும், விச்சுவத்திற் கந்தரியாமியென்றும், விச்சுவரூபியென்றுங் கூறுஞ் சுருதிகளே சான்று.

மாயையில் தோன்றியொடுங்கும் உலகம், அதற்காதாரமாய் நின்ற முதல்வனுருவில் தோன்றி ஒடுங்கியதூஉமாமென்பது, கிழங்கினின் றுந் தோன்றிய தாமரையைப் பங்கயம் என்பதனானும் அறிக. ௪௮

தேவரி னொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாதர்
ஆவது முணரார் ஆதி அரிஅயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரார் அவனுரு விளைவு மோரார்.

(உரை) விச்சுவாதிகனென்பது முதலிய நான்கு சுருதிகளையும் முறையே வலியுறுப்பனவாய் அரியுமயனும் அடி முடி தேடியறியா வண்ணம் நீண்ட திருவுருவின்நிலை கூறும் புராணவசனமும், மும் மூர்த்திகளுந் தன்னுறுப்பிற்றோன்றி நின்ற வடிவின் இயல்பு கூறும் புராணவசனமும், அவன் வடிவிலே விளைந்தவண்ணமே உலகிற்கு ௪௯



விளைவு கூறும் புராணவசனமும், அர்த்தநாரீசுர வடிவு கூறும் புராண வசனமுமாகிய இவையுமதற்குச் சான்று.

இவையிரண்டு செய்யுளும் அசிந்திதன் என்றதற்கு உரை யளவை காட்டியவாறு. ௪௯

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவ னென்பர். ௭௦

(உரை) முதல்வன்கொண்ட திருமேனிகளிற் சிலதிருமேனி போகவடிவமும், சிலதிருமேனி கோரவடிவமும், சிலதிருமேனி யோகவடிவமுமாகக் கொண்டது, முறையே, உயிர்கட்குப் போகம் புரிதற்பொருட்டும், வினையினை வீட்டுதற்பொருட்டும், யோகமுத்தி யுதவுதற்பொருட்டுமாம். ௫௦

ஒன்றொடொன் றொவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொ[ண்டு]
நின்றலால் உலக நீங்கி நின்றனன் என்று மோரார்
அன்றிஅவ் வேட மெல்லாம் அருள்புரி தொழிலென் றோரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றஅக் குணமென் றோரார்.

(உரை) அங்ஙனம் போகவடிவுங் கோரவடிவும் யோகவடிவு மாய்த் தம்முள் மாறுபட்ட பலவடிவம் ஒருவனே கொண்டுநிற்றலும், தம்முள் மாறுபட்ட அப்பலவடிவங்களும் அங்ஙனம் போகமும் வீடும் யோகமும் உதவுமுகத்தான் அனுக்கிரகமொன்றற்கே ஏதுவாதலும், தீமை செய்வது நன்மையைப் பயத்தலும், உலகத்தின் வைத்தறியப் படாத அதிசய நிலையாகலான், இதுவுமதற்குச் சான்று.

உலகினையிறந்துநின்றது அரனுருவமென்பதூஉம் ஈண்டினிது விளக்கியதூஉமாயிற்று. நிற்றல் நின்றலென விகாரம். அன்றிய வென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற்றொக்கது. இவையிரண்டு செய்யுளானும் அசிந்திதனுதற்கு ஏதுக் காட்டியவாறு. ௫௧

நாயகன் கண்ந யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்றார்.

**(உரை)** அவ்வேடமெல்லாம் அருள்புரி தொழிலென்பதற்கு முதல்வி திருக்கண் பூதைத்த திருவிளையாட்டின்கண் நிகழ்ந்த நிகழ்ச்சியே சான்று.

நயப்பு மகிழ்ச்சி. பாய்தல் பரத்தல். தேயம் உலகம்.

கண்ணுதல் யோகி ருப்பக் காமன் நின்றிடவேட் கைக்கு ருஉ
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்தலோரார்.

**(உரை)** பலவேறுவகைப்பட்ட அருள்புரிதொழிலும் அவ்வேடத்தை இன்றியமையாமைக்குக் கண்ணுதல் யோகிருந்துழி உலகத்தின்கண் நிகழ்ந்த நிகழ்ச்சியே சான்று.

உலகினுக்குயிருமாய் நின்றவற்றை இவ்விருவகைத் திருவிளையாட்டின்வைத்து இனிது விளக்கியவாறுமாயிற்று. ஒன்றொடொன்றுவ்வாவேடம் ஒருவனே தரித்துக் கொண்டதும் இதனுட் கண்டு கொள்க. இவையிரண்டு செய்யுளானும் மேலதனைக் கண்கூடாகத் தெளிவித்துச் சிந்திதனும் அசிந்திதனேயென்றதனை வலியுறுத்திய வாறு. சீகண்ட ருத்திரர்க்குரிய வடிவங்களும் பெயர்களுந் தொழில்களும் முதல்வனுக்கும் ஒப்பவுளவென்பது வாயுசங்கிதையுட் கூறப்படுதலின், ஈண்டுக் கூறியனவெல்லாம் முதல்வனுக்கு உரியனவேயாமெனக் கொள்க. அற்றாகலினன்றே ஈண்டுக் கூறிய வடிவங்களெல்லாம் மகேசுரமூர்த்தம் இருபத்தைந்தனுள் வைத்தெண்ணப் பட்டன என்பது.

படைப்பாதித் தொழிலும் பக்தர்க் கருளும்பா வனையும் ருங
நூலும், இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்
றும், அடைப்பானும் அதுவும் முத்தி யளித்திடு மியோகும்
பாசந், துடைப்பானுந் தொழிலும் மேனி தொடக்கானேற்
சொல்லொ ணாதே.

**(உரை)** ஆரணம் ஆகமமென்னுஞ் செய்யுளிற் கூறிப்போந்த எச உபதேசமாத்திரைக்கேயன்றி உலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடுமென்பதுமுதலாக இங்ஙனங் கூறிப்போந்த தோற்ற மறைப்பு நிலையருளிறுதியென்னும் ஐந்தொழில் செய்தற்கும் அவ்வடிவம் இன்றியமையாச் சிறப்பினவாய் வேண்டப்படும்.



படைப்புக்கு வாதுளாகமத்தின் ஓதியவாறே, இயங்கியற் பொருளும் நிலையியற்பொருளுமாகிய உலகங்கள் முதல்வனது திருமேனியில் ஒவ்வோர் உறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்யவேண்டுதலானும், மறைப்புக்கு ஊனநடனம் இயற்றவேண்டுதலானும், திதிக்கு மாதராளோடியைய வேண்டுதலானும், அனுக்கிரகத்திற்கு யோகிருந்து காட்டவேண்டுதலானும், சங்காரத்திற்குத் தோன்றின முறையே அவ்வவ்வுறுப்புக்களின் ஒடுக்கவேண்டுதலானும், உபதேசமாத்திரைக்கேயன்றி இவற்றிற்கும் உருவத்திருமேனி இன்றியமையாச் சிறப்பினவென்பது கண்டுகொள்க. ஏனைத்தொழில்களைக் கிளந்து கூறுதலிற் படைப்பாதியென்பதற்குப் படைப்பாகிய ஆதித் தொழிலென்றுரைக்க. பத்தர்க்கருளும் பாவனையென்பது பத்தர்க்கு இருவினையொப்பின் அருளுதற்பொருட்டுச் செய்யும் பாவனையெனத் திரோதானத் தொழிலை யுணர்த்திற்று. பாவனையென்றார், அஃதவனுக்கு இயல்பன்மையின். நூலுமென்பது நூலைச்செய்யுமெனப் பெயரடியிற் பிறந்த பெயரெச்சவினையாய் இடப்பாகமாதராளுக்கு அடையாயிற்று. இவ்வாறன்றி, எண்ணும்மை யேற்ற சொல்லாகவே வைத்து, மேற்கூறிப்போந்த ஆரணவாகமங்களைப் பிரித்துக் கூட்டலென்னும் உத்தியால் ஈண்டுமுடன்வைத்து எண்ணினுமொன்றுரைப்பினுமாம். பாசந் துடைப்பானுந் தொழிலென்றது ஈண்டுச் சங்காரத்தின்மேற்றென்பது, கொன்றது வினையைக்கொன்று நின்றவக்குணமென்பதனான் அறிக. அடைப்பான் துடைப்பானென்பன பானீற்று வினையெச்சம். செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார். இவையனைத்துஞ் சுத்தமாயையிற் படுங் காரியங்களை நோக்கிக் கூறியதென்றுணர்க. உலகினையென்பது முதல் இவ்வேழுசெய்யுளானும் மேலைச் செய்யுளின் அசிந்திதன் என்றதனை வலியுறுத்துமுகத்தான், அவ்வருளுருவின்பேதங்களும் அவற்றுடைய தொழில்களும் பயனும் அவை இன்றி யமையாச் சிறப்பினவாமாறுந் தொகுத்துக் கூறப்பட்டன. ருச

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே. எரு

(உரை) திருமேனியெல்லாம் ஒரு நிகரனவாகலின், ஏனையவர் உருவத் திருமேனி அருவுருவத் திருமேனிகளதுண்மையும் அவையும் அவ்வியல்பினவாமாறும் உருவத்திருமேனிக் கோதிய ஏயமே பற்றி அறியப்படும்.

உருவமெனப்படுந் தூலப்பொருட்கெல்லாம் அருவமெனப்படுஞ் சூக்குமஅவத்தை ஒருதலையான் உண்டென்னுஞ் சற்காரியத்தின் இயல்புபற்றி, 'உருமேனி தரித்துக்கொண்டதென்றலும் உருவிறந்த அருமேனியதுவுங் கண்டோ'மென்றும், அவ்வருவம் எனப்படுஞ் சூக்குமப்பொருள் பின் உருவமெனப்படுந் தூலாவத்தை எய்தும்போது அவ்விரண்டற்கும் பொதுவாயதோர் அவத்தையும் உண்டென்பது,தானே போதருமென்பதுபற்றி அருவுருவானபோது திருமேனி யுபயம் பெற்றோமென்றும், வேறுபொருளன்மையான், அவையும் அவ்வுருவடிவோடு ஒக்குமென்பதுபற்றி, மூன்றும் நந்தங் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவென்றும் கூறினார். இதனானே ஏனைத் திருமேனிகளிரண்டினது உண்மையும் அவற்றதியல்பும் உருவத் திருமேனியோடுளதாகிய இயைபுபற்றிச் சாதிக்கப்பட்டன.

அத்துவா மூர்த்தி யாக அறைகுவ தென்னை என்னின் ௭௫
நித்தனாய் நிறைந்த வற்றின் நீங்கிடா நிலைமை யானும்
சித்துடன் அசித்திற் கெல்லாம் சேட்டித னாக லானும்
வைத்ததாம் அத்துவாவும் வடிவென மறைக ளெல்லாம்.

(உரை) ஈண்டுக் கூறியவாற்றான் முதல்வனுக்குக் கருணை வடிவேயன்றி மாயை வடிவு இல்லையாயின், ஆகமங்களின் அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமென்ற தென்னையெனின்,—அது, எல்லாமாகி யல்லவாயுடனுமாம் இயல்புடைய முதல்வனுக்குத் தனது திரோதான சத்தியானவற்றோடு உளதாகிய இயைபு நோக்கிக் கூறும் உபசாரமே யாம்.

அத்துவாவுமென்னும் உம்மை உபசார வடிவென்ப துணர்த்தி நின்றது.

மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத் ௭௬
தந்ததென் அரனுக் கென்னில் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீத மான சிவசத்தி சேர்ந்து நிற்கும். ௭௭



சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆத லானும்
சத்திதான் பிரேரித் துப்பின் றனதிட் டித்துக் கொண்டே
அத்தினாற் புத்தி முத்தி அளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவா மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம். ௭௮

(உரை) அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவத்தைச் சிறந்தெடுத்தோதியது, தலைமையும் பயனும்பற்றி விசேடவுரிமையாதல் நோக்கி.

சகத்தினுக்கு உபாதானங்கள் விந்துமோகினிமான் மூன்றுமென்றது அனுவாதம். ஆரதீதம் பண்புத்தொகை. சேர்ந்து சேரப்பட்டு. விந்துத்தன்னிற் றோன்றின என்பது விந்துத்தன்பால் வைகரியாதி எனக் கூறிப் போந்தவாற்றானறிக. பிரேரித்தல் சாதகராவார் கணிக்குமாறு செலுத்துதல். அதிட்டித்தல் கணித்த பின் பயன் கொடுத்தற் பொருட்டு அவற்றை வாயிலாகக் கோடல். விசேட வுரிமையாதல்பற்றி அரனுக்கென்றே வைத்தவென்றார்.

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரம் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேள்நீ
முந்திய தோற்றத் தாலும் மந்திர மூலத் தாலும்
அந்தமில் சத்தி யாதிக் கிசைத்தலு மாகு மன்றே. ௭௯

(உரை) மந்திர வடிவுள்ளும் பஞ்சப்பிரம வடிவைச் சிறந்தெடுத்தோதியது, ஏனைய மந்திரங்கட் கெல்லாம் முற்படத் தோன்றி முற்படக் கொண்ட வடிவாதல் பற்றி.

தந்திரம் ஆகமம். இங்ஙனம் கூறிய அத்துவாமூர்த்தி மந்திர மூர்த்தி பஞ்சப்பிரம மூர்த்திகளெல்லாம் அவற்றைச் செலுத்தி நிற்குந் திரோதான சத்திக்கிசையச் செய்த உபசார வடிவென்பார், சத்தியாதிக் கிசைத்தலுமாகுமென இறுதிக்கட் கூறினார். சத்தியாதியென்பது முன்பின்னாகத் தொக்க இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஆதிசத்தியெனினுந் திரோதான சத்தியெனினும் ஒக்கும். உம்மை சிறப்பின்கண் வந்தது. இவை நான்கு செய்யுளானும் முதல்வனுக்கு உபசாரத் திருமேனி இவையென்பது கூறப்பட்டது. அருவமோவென்பதுமுதல் இதுகாறுந் திருமேனியின் இயல்பு கூறுமுகத்தால் அநாதிமுத்த சித்துருவாதலைத் தெரித்துணர்த்தியவாறு. அற்றேல் அயன் முதலியோரையும் அத்துவா

மூர்த்திமான்களாக வைத்துத் தத்தம் எல்லையளவும் அவரவர் வடிவின் அத்துவநியாசஞ் செய்யுமாறும் ஆகமங்களின் விதித்தலின் அவருருவும் அரனுருவோ டொக்கும் போலுமெனின்,—அதற்கு விடை, வருஞ் செய்யுளிற் பெறப்படும். இங்ஙனம் மண்ணினிற் கடாதியென்பது முதன் மந்திரமதனில் என்பதீறாகிய முப்பத்தொரு செய்யுளானும், முதற்செய்யுளின் ‘ ஈறுமாகி மருவிடும்அநாதிமுத்த சித்துரு மன்னிநின்றே’ என்ற இரண்டாங் கூற்றை, அவ்வவர் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனித் தான்முதலென்ற மூன்றாங்கூற்றை அவ்வாறு வலியுறுத்துகின்றார். ௫௯

அயன்றனை ஆதிஆக அரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தி யாதி பதிதலாற் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே யாயின் முன்னவ னென்னை முற்றும்
நயந்திடும் அவனி வர்க்கு நண்ணுவ தொரோவொன் றாமே.

**(உரை)** அயனுருவம் அரியுருவம் முதலியவற்றையும் அரனுருவோடொத்த உருவாக வைத்து வேதாகமங்களில் தத்தம் எல்லையளவும் அத்துவநியாசம் மந்திரநியாசம் முதலாயின விதித்தலின், சங்காரக்கடவுளோடொப்ப அவரும் முதல்வராவான் செல்வர் போலுமென மலையற்க. படைப்பாதிதொழில் செய்யுஞ் செனனி முதலிய சிவசத்திகள் ஒரோவொன்று அவர்மாட்டுப் பதிந்து நின்று செலுத்துதலான் அவ்வியைபுபற்றி வேதாகமங்களின் அவ்வாறு உபசரித்து ஓதப்பட்டன.

அற்றேல், ஒரு தொழிற்கு இருவராதல் எற்றுக்கென்பாரை நோக்கி, அமைச்சர் முதலாயினார்க்கு அரசனையின்றி அமையாமை போல, அயனரி முதலாயினார்க்கு அரனருளையின்றி அமையாமை தருக்கமுகத்தான் விளக்குவார், படைப்புமூலம் முயன்றனர் இவரேயாயின் முன்னவனென்னை என்றும், அரசனுக்கு அமைச்சர் முதலாயினார்போல அரனுக்கு அயனரி முதலாயினாரும் வேண்டப்படுவரென்பது எதுமுகத்தான் விளக்குவார், முற்றுநயந்திடு மவனிவர்க்கு நண்ணுவதொரோவொன்றாமே என்றுங் கூறினார். உவமை, வருஞ் செய்யுளிற் பெறப்படும். ஐ அழகு. அஃதாகுபெயரான் அழகுடையுருவத்தின்மேல்நின்றது. இரண்டனுருபாக வைத்துரைப்பார், முடிக்குஞ் சொல்லோடு இயைபின்மை நோக்கிலர். ஆகஅரனுருவென்னும்



உவமைத் தொகை *பையரவல்குல்போல்நின்றது. ஆகம் உடம்பு. பயத்தல் படைத்தல். படைப்பு மூலம் படைப்பாதி யென்க. பயந்திடுஞ் சத்தியாதி பதிதலைப் பிரித்துவைத்துக் கூறுகின்றமையின், இவரேயென்னும் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. உரைத்த இத்தொழில்களென்னுஞ் செய்யுள், பௌராணிகரை நோக்கி இயைபின்மை மாத்திர நீக்கி ஈறுமாகி மருவிடுமென்றதனை வலியுறுத்தியது. இஃது அநேகேசுரவாதிகளை நோக்கிப் பிறிதினியைபு நீக்கித் தான்முதலென்றதனை வலியுறுத்தியது. இவை இரண்டற்குந் தம்முள் வேற்றுமை. அற்றேல் அநேகேசுரவாதம் பரிகரித்தற்பொருட்டுப் பயந்திடுஞ் சத்தியாதியெனச் சத்திக்குப் பன்மை கூறவே, சத்திமான் ஒருவனாதல் செல்லாமையின், இது தேளுக்கஞ்சிப் பாந்தள் வாயின் விழுந்தாலொப்ப மறித்தும் அநேகேசுரவாதமாய் முடியும் போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கன்றே வருஞ்செய்யுள் எழுந்ததென்பது. ௬0

சத்திதான் பலவோ வென்னில் தானொன்றே அநேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடு மொருவன் சத்தி போலரன் உடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவன் நினைந்த வாறாம்.

**(உரை)** அரசன் சத்தியொன்றே அமைச்சர் படைத்தலைவர் பாடி காவலர் முதலாயினார்மாட்டு நின்று செய்யுங் காரியவேறுபாட்டாற் பல வேறு வகைப்பட்டாற்போல, சிவசத்தியொன்றே அவ்வவர்மாட்டு நின்று செய்யுங் காரியவேறுபாட்டாற் செனனி முதலியவாய்ப் பலவேறு வகைப்படும். சிவசத்தியொன்றேயென்பதும் அதுவே கடவுளர்மாட்டு நின்று நடாத்துமென்பதும் அமைச்சர் முதலாயினார் எவையெவை செய்யினும் அரசன் நினைந்தவாறன்றியாகாமைபோல, போகம் வீடுபேறுகளெல்லாம் அரன் நினைந்தவாறன்றியாகாமைபற்றி அறியப்படும்.

தானொன்றே அரனுடையதாகிக் காரியத்தால் அநேகமாக வைத்திடுமென இயையும். அரன் நினைந்தவாறன்றி யாகாமை, தக்கன் வேள்வி மார்க்கண்டி வாழ்நாள் ஆலாலத் தோற்றரவு முதலியவற்றால் இனிது விளங்கக் கிடத்தலின், வகுத்துக் கூறாராயினார். அற்றேல்

* சம்பந்தர் தேவாரம் - திருவாலவாய் - பண் - புறநீர்மை - ௫.

ஈண்டுக் கூறியவாற்றாற் செனனிமுதலிய பேதமெல்லாஞ் சிவசத் திக்குத் தடத்த மென்றாயவழிச் சொரூபமென்னையோவெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ் செய்யுளெழுந்ததென்பது. ௯௧

சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்
உய்த்திடு மிச்சை செய்தி இவைஞானத் துளவோ வென்னின்
எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி
வைத்தலான் மறைப்பில்ஞானுல் மருவிடுங் கிரியை எல்லாம்.

**(உரை)** உயிர்கட்கு அனுக்கிரகமாத்திரங் குறித்துப் பொதுவகை யானறிந்தும் அறிவித்து நிற்பதாகிய ஞானமொன்றே சிவசத்தியின் சொரூபம். அதுவே பராசத்தியெனப்படும். அந்த ஞானம், உயிர் கட்கு மலபாகம் வருதற்பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்புவகையான் வியாபரிக்குங்கால், ஒருகூற்றானே திரோதான சத்தியென நின்று இச்சா ஞானக் கிரியையென மூத்திறப்பட்டு வியாபரிக்குமாகலான், இச்சைகிரியைகளும் ஞானத்தின் வேறன்மை யாற் காரியத்தால் அநேகமாகிய செனனிமுதலிய வியாபார சத்திக ளெல்லாம் முற்கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய ஞானமொன்றான் உளவாவனவேயாம்.

தடை—தடுத்தல்; மறைப்பென்றதும் அது. தடுத்தற்குச் செயப்படு பொருள் வருவித்துரைக்க. தடையிலா ஞானமெனவே, தடைசெய் யும் ஞானமும் உண்டென்பது போந்தமையின், அதுவே திரோதான சத்தி யெனப்படும். இதனாற் பஞ்சசத்திகளுங் கண்டுகொள்க. ஞானத் துள என்புழி, நீக்கப்பொருட்கண் வரும் இன்னுருபு விரித்துரைக்க. உளவாதல் ஈண்டுத் தோன்றுதன்மேற்று. ஏனையபோலத் தோன்றின வல்ல என்பார்,எத்திற ஞானமுள்ளதத்திறம்இச்சை செய்தியென்றார். ஞானத்தின் வியாபார விசேடங்களே அவையென்பதாம். *"நீடு பரா சத்தி நிகழிச்சாஞான நிறைகிரியை தர" என்றதூஉம், †"கிரி யையறி விச்சைகிளர்ந்த சத்தியேதா-பெரியபரா சத்தியெனப் பேசாய்" என்றதூஉம் இக்கருத்தே நோக்கியென்க. ஞானமென்பது அம்மூக் கெட்டுருபேற்று ஞானலென நின்றது. அம்மூக் கெடுதல்

* சிவப்பிரகாசம் - பொது - ௨.
† துகளறுபோதம் - ௪௨.



*"பெற்றொன் றுயர்த்த பெருமான்" †"கோணுகணையான்" என் றற்போல்வன வற்றுள்ளுங் காண்க. அத்துச்சாரியை விகாரத்தாற் றொக்கதெனினுமாம். கிரியை வியாபாரம். இதனாற் போந்த பொரு ளென்னையெனின், அது, வருஞ் செய்யுளிற் கூறப்படும். ௯௨

ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேச மாகும்
நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னுல் ஆக்குவன் அகில மெல்லாம்.

**(உரை)** பராசத்தியாவது, தடையிலா ஞானமெனப் பொதுமை யான் ஒன்றாய், இச்சாஞானக்கிரியையென வியாபார பேதத்தான் மூன்றாய், அவையே மற்றுமவ்வக்காரிய பேதத்தாற் பலதிறப்படும். அம்மூன்றும் முறையே, உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித் தற்கண்ணுளதாகிய கருணையும், அதற்குச் செய்யக்கடவதான உபா யங்களை யெல்லாம் அறியுமறிவும், அவற்றையவ்வாறே சங்கற்பித்துச் செய்யுஞ் சங்கற்பமுமாம்.

‡"உள்ளியதெல்லாம்" என்றாற்போல நன்றெலாமென்பது ஒருமைப்பன்மை மயக்கம். நன்மை உபாயம். அன்று அறிந்த போதே யென்க. இவை நான்கு செய்யுளானும், அயன்றனையாதி ···ாக அரனுரு வென்றல் பற்றியுஞ் சத்திபலவாதல் பற்றியுந் தானொ ·வனே முதற்கடவுளென்றல் செல்லாதென்னும் அநேகேசுரவாதி தத்தை ஆசங்கித்துப் பரிகரித்துத் தான்முதலென்றது வலியுறுத் ப்பட்டது. ௯௩

·வனும் இச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்பன்
ஆவ னென்றிடின் அநாதி மலம் இவற் றினைம றைக்கும்
ாவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்
ாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற் றாகும். ௯௪

**(உரை)** இச்சை முதலிய மூன்றும் முதல்வனோடொப்ப உயிர்க் நும் உளவென்பது மாத்திரையேபற்றி உயிர்களும் முதல்வனோ

* சம்பந்தர் தேவாரம் - திருப்பாசுரம் - ௧௧.
† ஷை - கோயில் - குறிஞ்சி - ௧.
‡ திருக்குறள் - வெகுளாமை - ௯.

டொக்கும் போலுமென மலையற்க; இவை அவைபோலன்றிக் கேவலத்தின் மூலமலத்தான் மறைபடுதற்குரிய தன்மையும், சகலத்திற் கன்மத்தளவின் ஏகதேசப்பட்டு நிகழ்தற்குரிய தன்மையும், அக்கன்மத்தால் வரக்கடவதாகிய போகப் பயன்போலச் சுத்தத்தின் அதனின் வேறாகிய முத்திப் பயனும் முதல்வன் கொடுப்பவே கொள்ளுமுரிமைத் தன்மையும் உடைமையான், இத்தன்மைகளில்லாத முதல்வனுடைய இச்சாஞானக்கிரியைகளோடு இவற்றிடை வேற்றுமை பெரிதாகலின்.

பண்பு தன்மை. பாவி வடசொல். புத்திபோலென்னும் உவமவுருபு விகாரத்தாற்றொக்கது. இங்ஙனம் உரையாதார் கன்மத்தளவினிற் கொடுப்பக் காண்டலே புத்திப்பயன் கோடலென்பதுணர்ந்திலர். இதனானே, சிவசமவாதிமதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. அற்றாயினும், ஆகமங்களின் இலயசிவன் போகசிவன் அதிகாரசிவனெனச் சிவப்பன்மை கூறுதலின் தான்முதலென்று ஒரு பொருள்மேல் வைத்தோதுதல் அமையாது போலுமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யுட்கள் எழுந்தன என்பது.

௬௪

ஞானமே யான போது சிவன்றொழில் ஞான மொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை உருத்திரன் இலய போகம்
ஆனபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னாமே. ௮௫

(உரை) மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள், யாண்டுமொரு பெற்றித்தாய் வியாபரிக்கும் இச்சையையொழித் தொழிந்த ஞானக்கிரியைகளிரண்டும், தனித்தனி வியாபரித்தலானும், ஒத்து வியாபரித்தலானும், தம்முளேறிக் குறைந்து வியாபரித்தலானும், சிவஞ் சத்தி சதாசிவம் மகேசுரஞ் சுத்தவித்தையென்று ஐவகைப்பட்டு, இலயம் போகமதிகாரமென மூன்றாயடங்கு மவத்தைகளையும், அவத்தைக்கேதுவாய் அங்ஙனம் வேறுபட்ட ஆதாரங்களையுமுடையனாய உருத்திரனொருவனே அவ்வப்பெயர் பெற்று நிற்பன்.

உருத்திரனுமென இயையும். ஈண்டு உருத்திரனென்றது மாசங்காரக் கடவுளாகிய பரமசிவனை; அவனுக்கும் உருத்திரனென்னும் பெயருண்மையின். அவ்விலயபோகமெனச் சுட்டு வருவித்துரைக்க.

## சமாஜத்தின் மாசிமாதக் கூட்டம்

இக் கூட்டம் காஞ்சிபுரம், ஆடிசன்பேட்டையிலுள்ள ஜவுளிக் கடை சத்திரத்தில் 1936௵ மார்ச்சு௴ 1௳ ஞாயிற்றுக்கிழமை (யுவ௵ மாசி௴ ௧௮௳) மாலை 2 மணி முதல் 6 மணிவரை நடைபெறும். பல பேரறிஞர்களின் சொற்பொழிவுகள் நிகழும். அன்பர்களனைவரும் வருக.

---

## சமாஜத்தில் தைப்பூசக் கூட்டம்

இக்கூட்டம் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகாநந்த நிலையத்'தில் தைப் பூசத் திருநாளன்று நடைபெற்றது. கடவுள் வழிபாடு முடிந்தவுடன் சைவத் திருவாளர் - எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் சிவஞானசித்தியார் சுபக்கத்தைப் பாடமாகத் தொடங்கினார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் காலை 8 மணி முதல் 9 மணி வரை மயிலாப்பூர், புதுத் தெருவில், 2/7-வது எண்ணுள்ள பிள்ளையவர்கள் இல்லத்தில் முறையாகப் பாடம் நடைபெறும். சைவ இளைஞர்கள் தவிராது வருக.

---

## திருவாசகம் மூலமும் உரையும்

திருத்தமான சமாஜப்பதிப்பு. திருவாளர் - கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் உரை. திருவாளர்கள் - பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், அ. மு. சரவண முதலியார் ஆகிய முப்பேரறிஞர்களால் செப்பஞ் செய்யப்பட்டது. கலிக்கோ பயிண்டு. நல்ல கிளேஸ் காகிதம்; 532 பக்கங் கொண்ட அரிய நூல். **விலை ரூபா மூன்று.**

**சமாஜ அங்கத்தினர்க்குக் குறைந்த விலை ரூபா 1½.**

ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 8.

சில பிரதிகளே உள்ளன. உடனே முந்துக.

---

## பதினோராந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்வியப் பிரபந்தங்கள் அடங்கியது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது. பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு.

**தனிப் பிரதி விலை அணா பதினொன்று;**

**ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஆறு.**

**எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஐந்து;**

**ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று அணா பத்து.**

**சைவர்களாகிய உங்கள் முதற்கடமை இதை வாங்குவதே**

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No. 2

உ
சிவமயம்

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில்விருத்தம், வேல் விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெய ரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக் குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணுமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள் புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூபா 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு 12
நான்கு பிரதிகள் விலை ரூபா 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா 2½
உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-எ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10-2-1936

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.

1448 1448

egistered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 9—No. 3.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

ர் கூ | யுவ ஆண்டு பங்குனித் திங்கள் 1936வரு மார்ச்சுமீ | இதழ் ௩

உள்ளுறை — பக்கம்


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| மெய்ம்மையின் மேன்மை ... | ... ௯௭ |
| நமது சமாஜ வெளியீடுகள் ... | ... ௧0௪ |
| நீலகண்ட யாழ் ... ... | ... ௧௧௩ |
| சமயக் கல்வி ... ... | ... ௧௧௫ |
| அப்பர்தேவாரச் சிறப்பு ... | ... ௧௨௧ |
| சமயச் செய்தி ... ... | ... ௧௨௪ |
| சித்தாந்த சாத்திரம் ... ... | ௬௮௧ - ௬௯௨ |


சைவ சித்தாந்த மகாசமாஜம்
'திருவருளகம்'', 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணு 4.

# சேந்தமங்கலம் சைவசித்தாந்த சபையார் நடத்திய பன்னிரு திருமுறைப் பெருவிழா

[இளஞ்சைவப் புலவர், **மணிவாசகம்**]

சேந்தை சைவ சித்தாந்த சன்மார்க்க சபையாரின் ஆதரவின் கீழ்ப் பன்னிரு திருமுறைப் பெருவிழா, சைவத் திருவாளர்-கோவை வழக்கறிஞர் C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., F.M.U. அவர்கள் தலைமையில், சேந்தைச் சிவதளியில் சிறந்த பந்தரின் கீழ், சென்ற 31-1-36, 1-2-36, 2-2-36-ம் தேதிகளில் மிகச்சிறப்பாகநடந்தேறியது.

முதல்நாள் ஜனவரி 31-ந் தேதியன்று மாலை $3\frac{1}{2}$ மணிக்கு, வேதாரணிய தேவார ஆசிரியர், திரு. க. அருணாசல தேசிகரும், அவர் குழாமும் திருமுறை ஓத, பேரவை தொடங்கப்பெற்றது. பிறகு தலைவர் நியமனம், வரவேற்பு, சன்மார்க்க சபையின் ஆண்டு அறிக்கை படித்தல் முதலியன நடைபெற்றன. தலைவர், நாழிகை கடந்துவிட்டதால் முன்னுரையைப் பின்னுரையாக ஆற்றுவதாகக் கூறினர். பின்பு உயர் திருவாளர்கள் - அ. முத்துச்சாமி பிள்ளை (நாமக்கல்), ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளை (ஜலகண்டபுரம்), அடிசைக்கிழார், அ. சிதம்பரனார் (திருவாரூர்), வி. உலக ஊழியர் (நாமக்கல்) ஆகிய பெரியோர்கள் முறையே "சைவ சமயமும் இச்சமயமும்', "சேக்கிழார் தெய்வப் பாக்கிழார்", "திருமுறை", "பாலுந் தேனும்" என்னும் பொருள்கள்பற்றி 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட'ச் சொற்பொழிவாற்றினர். இரவு $10\frac{1}{2}$ மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

1-2-36 10 மணிக்கு இரண்டாம்நாட் கூட்டம் தொடங்கியது. அவ்வமயம் திரு. ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளை—"குறிகளும் அடையாளமும் கோயிலும்" என்பதுபற்றியும், திரு. வீ. குமார வீரய்யர்—"அருண்மொழித்தேவரும்-பொருண்மொழி வல்லுநரும்" என்பதுபற்றியும் விரிவுரை நிகழ்த்தினர். காலைக்கூட்டம் 12 மணிக்கு இனிது முடிந்தது.

மாலை 3 மணிக்கு மீண்டும் கூட்டம் கூடியது. அவ்வமயம் உயர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்களும், மறைத்திரு. மணிவாசக சரணாலய அடிகளும்—"மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லார்", "துறவு" என்னும் சொற்பொழிவுகளைக் கேட்பார் உவப்ப ஆற்றினர்.

மாலைக் கூட்டம் இரவு $10\frac{1}{2}$ மணிக்கு இனிது கலைந்தது.

மூன்றாம்நாள் காலை $9\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் துவங்கியது. கீழ்க் கண்ட சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. உயர்திரு. கருணாலய சுவாமிகள் "சமய வாழ்க்கை", திரு. குமாரசுவாமிப் பிள்ளை "திருமுறையும் கொங்குநாட்டுத் தலங்களும்" என்னும் பொருள்கள்பற்றிப் பேசினர். கூட்டம் பகல் $12\frac{1}{2}$ மணிக்கு இனிது முடிந்தது. மறுபடியும் மாலை $2\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் தொடங்கியது. அப்போது உயர்திரு - அ. மு. சரவண முதலியார் அவர்கள் சொற்சுவை பொலிய, பொருட்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

| | | |
|---|---|---|
| மலர் ௯ | யுவ ஆண்டு பங்குனித் திங்கள்<br>1936௵ மார்ச்சு௴ | இதழ் ௫ |

## மெய்ம்மையின் மேன்மை

[ச. சச்சிதானந்தம் பிள்ளை]

*உண்மை நினைக, உதிக்கும் கருத்துகள்*
*மண்ணவர் பஞ்சம் மாற்றும் உண்டியாம்.*
*வாய்மை பேசுக,நின் வார்த்தை யொவ்வொன்றும்*
*ஏயுநற் பலந்தரும் இயல்புடை வித்தாம்.*
*மெய்ம்மையில் வாழுக, மேன்மையும் பெருமையும்*
*எய்துசீர்ச் சமயமாய் இலகும்நின் வாழ்க்கை.*

மேலே தந்துள்ள செய்யுள், ஹொரேஷியஸ் போனர் என்னும் அறிஞர் ஆங்கிலத்தில்* வெளியிட்டதோர் அரும்

* "Think truly, and thy thoughts
Shall the world's famine feed;
Speak truly, and each word of thine
Shall be a fruitful seed;
Live truly, and thy life shall be
A great and noble creed."—*Horatius Bonar.*

பெருங் கருத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாம். அக்கருத்தின் அகலமும் நீளமும் ஆழமும் அளத்தல் எளிதன்று. ஆயினும் அம்முயற்சியை அனைவரும் மேற்கொள்ளல் அவசியமே.

மக்களெல்லாம் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களால் முறையே நினைத்தல், பேசல், நடத்தல் என்னும் மூவகைத் தொழில்களைப் புரிந்து வருகின்றனர். ஆனால் நினைப்பது எதனை? பேசுவது எதுபற்றி? நடப்பது எதை நோக்கி? எவ்வாறு?

'கோடியும் அல்லபல' என்னும்படி மக்கள் மனத்தகத்தே எண்ணங்கள் எழுகின்றன. எழுந்தெழுந்து மாய்வன பல. இருந்து சின்னாள் இன்புறுத்துவன சில. சாந்துணையும் சஞ்சலமே விளைத்துத் துன்புறுத்துவன பல. இவ்வாறு எண்ணங்கள் மாறிமாறிப் பிறந்திறத்தல் ஏன்? இருப்பனவும் பெரும்பாலும் இன்னற்கு ஏதுவாதலேன்? நம் எண்ணங்கள் எல்லாம், என்றும் நிலைபேறுள்ள உண்மைப் பொருளைப்பற்றி நில்லாமையால்தான். என்றும் ஒருபடித்தாய் உள்ளதொரு செம்பொருள் உண்டு. அதுவே என்றும் சத்தாய் இலகும் பொருள்; மற்றப் பொருள்களினூடும் உயிராய்த் தழைத்து நிற்கும் பொருள். மக்களாகிய நாமோ சிறுபொழுது இச்சத்துப் பொருளின் சார்பில் நிற்கின்றோம்; பெரும்பொழுது அசத்துப்பொருளை அடுத்து நிற்கின்றோம்; இப்படி இயங்கும் நமக்கோ தனியியல்பு என்பதொன்றில்லை; எதைச் சார்ந்து நிற்கின்றோமோ அதனியல்பே நம்மியல்பாக அமைகின்றது. இதனாற்றான், சத்தைச் சார்ந்து நிற்குங் காலத்துச் சத்தாயும் அசத்தைச் சார்ந்து நிற்குங் காலத்து அசத்தாயும் காணும் சதசத்துப்பொருள் உயிர் என்று சைவ சித்தாந்தம் சாற்றுகின்றது.

விகாரங்களுக்குட்பட்ட அசத்துக்களோடு சார்ந்து அசத்துத் தன்மையை அடைந்து நிற்கும் நிலையில் நாம் துன்புறு



கின்றோம். விகாரங்களுக் குட்படாது சத்தையே பற்றி நிற்போமாயின் நமது அவலம், கவலை, கையாறு, அழுங்கல் முதலிய தொல்லைகள் யாவும் தீரும். இப்படிப்பட்ட உண்மைப் பொருளையே மனத்துள் நிலைக்க வைத்து விடுவோமாயின், நமதுபேச்சும் அவ்வுண்மைப்பொருளை நாடியதாகவே எழும். நமது ஒழுகலாறும் உண்மை நாடியே இயங்கும். ஆனால், மக்களிற் பெரும்பாலோர்க்குத் தம் மனதை ஒரு கணமாயினும் உண்மைப் பொருளில் அசைவின்றி நிறுத்துதல் அரிதினும் அரிதாய்க் காண்கின்றது. உண்மையான எண்ணங்கள் மனதில் முழுமையோடு எழுவதே அரிதாயுள்ளது. எதையும் தாமே ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து மெய்ப்பொருள் காணப் பெரும்பாலோர் முயலுவதில்லை. ஒரோவழி முயன்றாலும் அது நெடுகச் சென்று முற்றுப் பெறுவதில்லை. அதனால் குழப்பமான எண்ணம் தங்கிவிடுகின்றது. ஆதலால், உண்மையைக் கண்டு எவரேனும் தெளிவாக வெளியிட்டால், கேட்ட அக்கணத்திலேனும், அதனிடத்தில் ஆவலும் நன்மதிப்பும் அனேகர் கொள்ளுவர். பசித்திருந்த ஒருவனுக்குப் பாலன்னம் கிடைத்ததுபோல் மகிழ்ச்சியுறுவர். கேட்டுத் தாமுணர்ந்த உண்மையைப் பற்றிநின்று வாழ்க்கையை நடாத்த வேண்டும் என்று அவாவுங் கொள்ளுவர். ஒழுக்கமுடையார் வாய்ப் பிறக்கும் உண்மை ஒன்றிரண்டு மக்கள் மனதில் நிலைபேறாய்ப் பதிந்து விடுமாயின், அது அவருக்கு நீடித்த இன்பளிக்கும் ஊற்றாய்விடும். இதையெல்லாம் உள்ளடக்கியே, 'உண்மை நினைக்க உதிக்கும் கருத்துகள் மண்ணவர் பஞ்சம் மாற்றும் உண்டியாம்' என்னும் வாக்கெழுந்தது.

இனி, வாய்மை பேசுதல் உள்ளத்தில் உண்மை தோன்றியபின் நிகழத் தக்க தொன்று. உள்ளத்தில் உண்மை தோன்றாதிருக்கவும், வாயினால் வாய்மை மொழி பேசினும்

அது நிறைவான வாய்மையாகாது. ஒருகிளிப் பிள்ளை, அல்லது, ஒரு ஒலிக்கருவி, உயரிய உண்மை மொழிகளை வெளியிட்டாலும், அது நிறைந்த வாய்மை என்று உலகம் கொள்ளாது. உள்ளத்தில் உண்மை எனக் கண்டு அவ்வுணர்ச்சியுடன் அதை வெளியிடும் சொல்லே வாய்மை மொழியாகும். அப்படிப் பேசுபவர் ஆயிரத்தில் ஒருவர் தானும் உண்டோ என்பது ஐயமே. சில சமயத்து ஒருவர் அவ்வாறு பேசும்போது மக்கள் அவர் பெரியார் என உடனே உணர்கின்றனர்; அலங்கார ஆரவாரப் பேச்சாளராய்த் திரியும் சாமானிய மக்களினின்றும் இவரை வேறு பிரித்து மதிக்கின்றனர். உள்ளமும் உரையும் ஒருமுகப்பட்டு நிற்கும் வழி, அவ்வுரைக்கு ஒரு உயிர்ச்சத்து அமைகின்றது. அது அனைவரையும் உயர் நிலையை விரும்புமாறு தட்டி எழுப்புகின்றது. இத்தகைய உரை ஒவ்வொன்றும் கேட்போர்க்கு நல்லதொரு பயனைத் தரும் வித்துப்போல உபகரிக்கின்றது. இவற்றில் ஒன்றிரண்டு ஒருவர் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துவிடுமாயின் அவர்கள்பால் நீடித்த நன்மாறுதல் தோன்றும். மேன்மேல் ஆன்மப் பிரகாசம் வளரும். "சொன்னதுமோ ஒருசொல்லே அச்சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன்"! என்ற உயரிய அநுபூதிவாக்கு, சுருங்கிய ஓரளவில் இங்கும் பொருந்துவதாகும். இதையெல்லாம், "வாய்மை பேசுகநின் வார்த்தை யொவ்வொன்றும் ஏயுநற்பலந் தரும் இயல்புடை வித்தாம்" என்னும் அடிகள் குறிக்கும்.

உள்ளமும் உரையும் ஒன்றுபட்டபோது உடம்பின் வாயிலாய் நிகழும் ஒழுகலாறும் உண்மை வயத்ததாகவே நிகழும். உடம்பிற் காணும் செயல்கள் பல, மனமுயற்சி சிறிதும் இன்றியே நிகழ்வன. கண்ணிமைத்தல், மூச்சுவிடல், நடத்தற்காகத் தசை நரம்புகளை இயக்கல்போன்ற எண்ணிறந்த பல காயச் செயல்கள் உதாரணமாம். உண்



ணல், பருகல், உறங்கல்போன்ற வேறு பலசெயல்கள் மனத்தால் நினைத்துச் செய்வனவே. என்றாலும், இவை ஆழ்ந்து சிந்தித்து முழு உண்மையுணர்ச்சியுடன் நிகழ்வனவல்ல. பெரும்பாலும் உடலளவில் நிற்கும் இவ்விருதிறச் செயல்களையும் நீக்கிப்பார்க்கையில், ஆழ்ந்த சிந்தனையின் பயனாய் உள்ளத்தெழும் முடிபுகளும், அவை பிறப்பிக்கும் உணர்ச்சிகளும், இவற்றின் வழித்தோன்றும் ஆற்றல்களும் ஆரம்பநிலையில் அகத்தின்முன் புலப்பட நின்று, உரைகளை உண்மை வயப்படுத்தி இயக்குவதுபோலவே, உடலையும் உள்ளத்துக்கண்ட உண்மை வழி இயக்கும். இப்படி மெய்யுணர்வானது மெய்யை (உடம்பை) இயக்கும்போது பெறப்படும் ஒழுக்கம் மிக்க மேன்மையுடைத்தாம். இப்படி எவரிடத்து உள்ளமும், உரையும், உடலும் ஒருமுகப்பட்டுத் தொழிற்படுகின்றதோ அவரைத்தான் மக்களில் உத்தமர் என்று உயர்வாக மதிக்கின்றோம். உள்ளங் காட்டும் உயரிய குறிக்கோளின் வழியே தமது உரையும், இவ்விரண்டின் வழியே தமது ஒழுக்கமும் அமையப்பெற்ற பெரியார்கள் வாழ்வே மக்களின் சமயவாழ்விற்கு எடுத்துக்காட்டாய் உள்ளது. 'சமயம்' என்னும் சொல்லுக்கு, நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள் என்ப. முழு உண்மைப் பொருளை அடைந்து, அதனோடு ஒன்றாகி, நிலைபேறும் இன்படைதற்கு, முக்கரணமும் ஒத்தியங்கும் வாழ்வுதான் நன்றாகச் செய்யப்பட்ட வழியாகும்.

"மனம்வேறு, சொல்வேறு, மன்னு தொழில்வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே!
மனமொன்று, சொல்லொன்று, வான்பொருளு மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண்"

என்னும் நீதிவெண்பாச் செய்யுள் ஈண்டுக் கருதற்பாலது. இவ்வாறு, உள்ளத்துணர்வும் உடலின்பாற்காணும் ஒழுக்க

மும் ஒருவன் பிறர்க்குச் செய்யும் உபதேசத்திற்கு மாறாய் இருப்பதை மக்கள் காணும்போது, அவன் பேச்சுக்கு மதிப்புத் தரமாட்டார்கள். அவன்சொல்லிற்கும் செயலிற்குமுள்ள வேறுபாட்டைத் தமக்குள்ளேயே நினைத்துப் பார்த்தோ, அல்லது அதனுடன் பிறரிடமும் கூறியோ அவனை அவமதிப்பர். அவன் கூறும் உண்மைகள் எவ்வளவு அரியனவாயிருப்பினும், எவ்வளவு அழகிய மொழிகளால் வெளியிடப்படினும், அவற்றிற்கு மக்கள் மனதைக் கவர்ந்து மேனெறிக்குயர்த்தும் ஆற்றல் வாயாது. இத்தகைய பிரசங்கியை நோக்கி, "வைத்தியனே! உன் நோயை முதலில் தீர்த்துக்கொள்" என்று உலகங்கூறும். முக்கரணங்களும் ஒத்தியங்கும் வாழ்க்கையுடையான் மொழிகட்கோ, மூவுலகும் முடிதாழ்த்தும். அவன் வாழ்வோ பலர்க்கு மலைமேலிட்ட விளக்குப்போல் ஒருபெருங் குறிக்கோளாய் இலகும். இதை எல்லாம் உள்ளடக்கியே, "மெய்ம்மையில் வாழுக மேன்மையும் பெருமையும், எய்துசீர்ச் சமயமாய் இலகும் நின்வாழ்க்கை" என்னும் வாசகம் எழுந்தது.

இப்படித் திரிகரணங்களும் ஒத்தொழுகலே நமது முந்தையோர் கண்ட நன்னெறி என்பது, மேலே தந்துள்ள மொழி பெயர்ப்பில் வரும் மூன்று செந்தமிழ்ச் சொற்களினாலேயே அறியக்கிடக்கின்றது. அச்சொற்கள், 'உண்மை', 'வாய்மை', 'மெய்ம்மை' என்பன. ஒரு பொருள் குறித்த பல சொற்களாய் வழங்கும் இம்மூன்றன் அமைப்பைச் சற்றே உற்றுநோக்கின், நம்பண்டைத் தமிழ்மக்களின் உள்ளத் துயர்வும், அதை இனிது வெளிப்படுத்தும் இயல்புடைய தெய்வச் செழுந் தமிழின் சீரும் புலப்படும். இம்மூன்று சொற்களும் தன்மைப் பொருளுணர்த்தும் 'மை' விகுதி பெற்ற பண்புப் பெயர்கள். எனவே, 'உண்மை' என்பது 'உள்ளத்தின் தன்மை' எனவும், 'வாய்மை' என்பது 'வாயின் தன்மை' எனவும்,



'மெய்ம்மை' என்பது மெய்யின் (உடம்பின்) தன்மை எனவும் பொருள்படும். எனவே, இம்மூன்று தன்மைகளும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது ஒத்தியங்கும் இயல்பின என்னுமுண்மை தொனிக்கின்றதன்றோ! 'மெய்' என்பது சத்தியம் என்னும் பொருளில் இன்றும் அன்றாட வழக்கில் உலவி வருகின்றது. 'வாய்' என்பதும் செய்யுள்வழக்கில் இப்பொருளிலேயே முன்னாளில் எடுத்தாளப்பட்டது. "வடுவஞ்சி வாய்மொழிந்து" என வரும் பட்டினப்பாலை அடியில் 'வாய்' என்பதற்கு வாய்மை என்பதே பொருள். இப்படி, 'மெய்', 'வாய்' என்னும் உடல் பற்றிய பெயர்களே உண்மை வெளிவரும் இரு கரணங்களாதல்பற்றி, உண்மைக்கே பரியாயப் பெயர்களாகவும் வழங்குவது பெருஞ் சிறப்பன்றோ!

இப்படி முக்கரணங்களும் ஒத்தியங்குதல் இந்நாளிற் பலர் வாழ்வில் முயற்கொம்பாய் விட்டபடியினால்தான், இறைவன் தந்தருளிய இன்ப உலகில், மனிதன் துன்பம் வளர்த்து வருகின்றான். துன்பம் தடைப்பட வேண்டுமாயின், இன்பம் எழுதர வேண்டுமாயின், நமது தனிவாழ்விலும் சமூக வாழ்விலும், பொய்யில் நாட்டம் பொன்ற வேண்டும்; மெய்யில் நாட்டம் மிக்குற வேண்டும்; சத்திய வடிவினனும் சருவேசுவரனது சரணல்லாற் சரணில்லை என்றுணர்ந்து அதனைச் சாரவேண்டும்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

# நமது சமாஜ வெளியீடுகள்

[காரியதரிசி]

திருவருள் வழி நின்றொழுகும் நமது சமாஜம் பன்
னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் திருப்
புகழ் முதலிய திருவாக்குக்களையும் அடக்கவிலைச் சுத்தப்
பதிப்புக்களாகவெளியிட்டதைப் பொதுவாகத் தமிழ்மக்களும்
சிறப்பாகச் சைவ சீலர்களும் பாராட்டிப் போற்றிவருவது
தமிழ்நாடறிந்ததொன்று. நமது சமாஜம் பணி புரிந்து புகழ்
கொள்வதைக் கண்டு அழுக்காறடைவோரும் சிலருண்டு ;
தமிழ் நூல்களை அச்சிட்டு அதிக விலைக்கு விற்றுப் பொரு
ளீட்டும் சில வியாபாரிகள் நமது சமாஜம் நூல்களை வெளி
யிடத் தொடங்கிய நாள்தொட்டு எரிமூண்டதென்ன விழித்
துப் புகையெழப் பொங்குவதை நாம் நேரிற்கண்டதுமுண்டு,
பிறர் கண்டு சொல்லக் கேட்டதுமுண்டு. இதை நமது சமா
ஜம் என்றும் பொருட்படுத்தியதில்லை.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்துக்
குச் சென்னை பவழக்காரத்தெருவில் ஒரு தொழில் நிலைய
முண்டு. இதில் தலைமைப் பணியாளராக ஊதியம் பெற்று
வேலை பார்ப்பவர் திரு-வ. சுப்பையாபிள்ளையென்பவர். இவர்
ஏறக்குறைய இரண்டு மாத காலமாக நமது சமாஜ நிர்வாக
சபையினர் சிலரிடத்திலும் வேறு பலரிடத்திலும் நேரிலும்
கடிதவாயிலாகவும் நமது சமாஜத்தையும் நமது சமாஜ வெளி
யீடுகளையும் கண்டவாறெல்லாம் குறைத்துக் கூறுவதாகத்
தெரிகிறது. நமது சமாஜ வெளியீடுகளை மிகச் செம்மை
யாக அச்சிட்டுதவும் சாது அச்சுக்கூடத்தையும், நமது சமா
ஜத்தோடு அன்பு கூர்ந்து பற்பல வழிகளில் ஒத்துழைக்கும்
இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையை
யும் இவர் தூற்றி வருவதாக அறிகிறோம். புகழை இறை



வன் திருவடியிற் சேர்ப்பது போலவே இவர் கூறும் வேற்
றுரைகளையும் அத்திருவடிக்கே ஆக்குகின்றோம்.

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்
பதிப்புக்கழகம்செய்துவரும் பணியை நாம்போற்றுகின்றோம்.
அக்கழகம்நூல்களை வெளியிடுவதற்குத் தொடங்குமுன் தமிழ்
நூல்களைக் கண்கவர் வனப்போடு செம்மையாகவும் அழகா
கவும் அச்சிடும் பழக்கம் தமிழ் நாட்டில் இல்லையென்றே
சொல்லவேண்டும். பிறமொழி நூல்களோடு தமிழ்நூல்
களையும் ஒரே வரிசையில் ஒருநூல்நிலையப்பேழையில் கூசாது
ஆர்வத்தோடு மக்கள் வைக்கத்தலைப்பட்டது இக்கழகம்
தோன்றிய பின்னரேயாகும். இக்கழகத்தலைவர் திரு. மா.
வே. நெல்லையப்பபிள்ளையவர்கள் நமது சமாஜத்தோடு நெருங்
கிய தொடர்புடையவர்; நமது சமாஜத்தலைவர்களுள் ஒருவர் ;
நமது சமாஜத்துப் பத்திராசிரியக் கழகத்திலும், பணியாளர்
கழகத்திலும், வெளியூர் ஆலோசனைசபையிலும் உறுப்பினரா
கவுள்ளவர்; நமதுசமாஜவாயிலாகப் பற்பலவகையான சமயத்
தொண்டு புரிந்து உபகரிப்பவர்; நமது சமாஜத்தினர் வணங்கு
தற்குரிய ஒழுக்கமும் விழுப்பமும் வாய்ந்தவர். இக்கழகச்
செயற்குழுவினருள் ஒருவராகிய திரு. ந. சிவகுருநாத
பிள்ளையவர்கள் சைவசித்தாந்த சாத்திரங்களை எழுத்தெண்
ணிப்படித்தவர் ; அவைகளை நாடோறும் நன்மாணவர் பலர்க்
குப்பாடமாகச் சொல்லும் ஆற்றல்வாய்ந்தவர் ; நமது சமா
ஜப் பணியில் சிறந்த ஆர்வமுடையவர். இக்கழக உறுப்பி
னர் பற்பலர் நமது சமாஜப் போஷகராகவும் ஆயுளங்கத்த
வராகவும் உறுப்பினராகவும் இருப்பவர். இக்கழகத்தின்
சார்புடைய தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம் நமது
சமாஜத்தோடு இணைக்கப் பெற்ற சைவ சபைகளுள் தலை
மைத்தானம் பெற்று விளங்குவது. இவ்வாறு பற்பல
வழிகளில் நமது சமாஜத்தோடு மிகநெருங்கிய தொடர்

புடைய இக்கழகமும் கழகத்தினரும் நமது சமாஜத்தையும் சமாஜப்பணியையும் சமாஜ வெளியீடுகளையும் திடிரென்று எவ்விதகாரணமுமின்றிக் குறைகூறத் தீர்மானிக்கமாட்டார்கள். அவ்வாறு தீர்மானித்ததாகவும் நமக்கு எவ்வித செய்தியும் கிடைத்திலது. எனவே திரு. சுப்பையாபிள்ளையவர்கள் இக்கழகத்தின் கட்டளையும் அனுமதியுமின்றி இக்கழகம் நமது சமாஜத்தோடு கொண்டுள்ள தொடர்பை அறவே மறந்து, தமது சொந்த பொறுப்பில் இவ்வாறு செய்து வருவதாகத் தெரிகிறது. இவர் செயலினால் சீற்றங்கொண்டு நமது சமாஜத்தினர் எவரும் இக்கழகத்தை எவ்விதத்திலும் குறைத்துக் கூறுதல் கூடாதென்பதை ஒவ்வொருவரும் நன்றாக ஞாபகத்துள் வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். 'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்துவிடல்' என்பது வள்ளுவர் வாய்மை. நமது சமாஜத்துக்கு இன்னாசெய்யும் இவர் நாணும்படி இவர் பணிபுரியும் கழகவெளியீடுகளை மிகுதியாக வாங்குமாறு நமது சமாஜத்தினரை வேண்டிக் கொள்ளுகிறோம்.

இவரும் இவருடைய நண்பர்சிலரும் செய்துவரும் விஷமப் பிரசாரத்தைப்பற்றி ஆலோசிக்கச் சமாஜ நிர்வாகசபைக் கூட்டம் ஒன்று 21-2-1936-ல் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நமது சமாஜம் சைவநூல்களை வெளியிட்டுவரும் விஷயத்தில் அழுக்காறுகொண்ட சிலர் விஷமப் பிரகாசம் செய்வதைக் கண்டு அக்கூட்டம் வருந்துவதாகவும், இப்பிரசாரத்தால் விளையக்கூடிய தப்பெண்ணத்தை நீக்குவதற்காகச் சமாஜம் ௸ நூல்களை வெளியிட்டதன் கருத்தை விளக்கமாகச் சித்தாந்தத்தில் காரியதரிசியார் எழுதிப்பிரசுரிக்க வேண்டுமென்றும் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்களால் பிரேரேபணை செய்யப்பெற்ற ஒருதீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.



இத்தீர்மானத்திற் கிணங்க சமாஜத்தின் கருத்தை வெளியிடுகின்றோம்.

1929௵ மேமாதத்தில் திருப்பாதிரிப்புலியூரில் சைவர் மகாநாடு ஒன்று நமது சமாஜத்தின் சார்பில் கூட்டப்பட்டது. அம்மகாநாட்டுக்குத் திருநெல்வேலியிலிருந்து பலசைவப்பேரறிஞர்கள் வந்திருந்தார்கள். அப்போது பன்னிருதிருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் மிகக்குறைந்தவிலைக்கு அச்சிட்டு சமாஜம் வெளியிடவேண்டுமென்ற விஷயம் ஆலோசிக்கப் பட்டது. மகாநாட்டுத்தலைவர் உயர்திரு - மறைமலையடிகள் அவ்வாறு வெளியிடுவதாற் பயனொன்றுமில்லையென்றும், திருவாசகம் இரண்டணாபதிப்பு இருபதினாயிரம் பிரதிகளை வெளியிட்டதால் எவ்விதத்தில் சைவசமயவளர்ச்சி நிகழ்ந்ததென்று தமக்குப்புலப்படவில்லையென்றும், பேரறிஞர்களைக் கொண்டு ஆராய்ச்சி நூல்களை எழுதுவித்தலே சிறந்த பணியென்றும் கூறினார்கள். திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் இவ்வாறே கூறினார்கள். சமாஜம் குறைந்த விலைக்கு வெளியிடத் தொடங்கினால் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளின் விற்பனையில் குறைவு ஏற்படுமோ என்ற விஷயம் ஆழ்ந்து ஆலோசிக்கப்பட்டது. அப்போது சைவத் திருவாளர்கள் - மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்கள், ந. சிவகுருநாத பிள்ளையவர்கள், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், இராமலிங்கம் பிள்ளையவர்கள், முருகப்பப் பிள்ளையவர்கள் முதலியோரெல்லாம் கழக வெளியீடுகளை வாங்கும் மக்களுடைய செல்வநிலை வேறு, சமாஜ வெளியீடுகளை வாங்கக்கூடியவர்கள் நிலை வேறென்றும், சமாஜம் குறைந்த விலைக்கு நூல்களை வெளியிடலாமென்றும் கூறினார்கள். மணப்பரிசுகள், பாடசாலைப் பரிசுகள், புத்தக நிலையங்கள் முதலியவற்றிற்கே பெரும்பாலும் தங்கள் கழக வெளியீடுகள் விற்கப்படுவதால் எவ்வித பாதகமும் ஏற்படா

தென்று கழக அமைச்சர் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் உறுதி கூறினார்கள். இவ்வாறு தீர்க்காலோசனை செய்து முடித்தபிறகே நமது சமாஜத்தின் முதல் வெளியீடாகிய சுந்தரர் தேவாரத்துக்காக அம்மகாநாட்டுக்கு வந்த புண்ணியசீலர்கள் பலர் பொருளுதவியும் செய்தனர். இம்முதல் வெளியீடும் 11-8-1929-ல் பிரசுரம் செய்யப்பட்டது.

அவ்வாண்டின் இறுதியில் கிரிஸ்ட்மஸ் விடுமுறையில் அடியேனும் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆண்டு விழாவுக்குத் தலைமைவகிக்கச் சென்றேன். அப்போது சமாஜத்தின் முதல் வெளியீடாகிய சுந்தரர் தேவாரத்தை ஆங்குக் குழுமிய சைவப் பெருமக்களனைவரும் பாராட்டியதோடமையாது நூற்றுக் கணக்கான பிரதிகளையும் வாங்கி ஆதரித்தார்கள். திருவாளர்கள்-வ. திருவரங்கம் பிள்ளை, ந. சிவகுருநாத பிள்ளை முதலிய அன்பர்கள் அடியேனையும் சமாஜத்தையும் தூத்துக்குடியிலுள்ள சில பெருஞ்செல்வர்கட்கு அறிமுகம் செய்வித்து, அப்பர்தேவார வெளியீட்டின் பொருளுதவிக்காகக் கையொப்பமும் வாங்கித் தந்தார்கள்; கையொப்பமிட்டவர்களிடம் புத்தகங்களைச் சேர்ப்பித்துப் பணத்தையும் வசூலித்தனுப்பி உபகரித்தார்கள்.

1931௵ டிசம்பர்மீ தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழாவுக்கு அடியேன் ஒரு சொற்பொழிவியற்றச் சென்றேன். அப்போது திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் வேறு சில நண்பர்களும் நானும் பேசிக்கொண்டிருக்கும்போது, சமாஜத்தில் அது வரையில் ஏழு திருமுறைகளும் வெளி வந்தது போலவே ஏனைய திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறை நீங்கலாக மற்றவை வெளிவரலாமென்றும், ஒன்பதாம் திருமுறைமட்டும் கழக வெளியீடாக வந்துள்ளபடியால் சமாஜத்தில் வெளியிட வேண்டிய அவசியமில்லையென்றும் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்



கள் தெரிவித்தார்கள். சமாஜ நிர்வாக சபைக்கு இதைத்தெரிவித்துக் கூடிய வரையில் இவ்விஷயத்தில் வேண்டுவன செய்வதாக நான் ஒப்புக் கொண்டேன். அடுத்த மார்ச்சுமீ இவ்விஷயம் நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுத் திருமுறை வெளியீட்டில் ஒரு திருமுறையைமட்டும் விட்டுவிடுதல் ஒழுங்காகாதாகையால் ஒன்பதாம் திருமுறையைமட்டும் தனிநூலாக வெளியிடாமல் எட்டு ஒன்பது திருமுறைகளை ஒரே நூலாக வெளியிடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பதினான்கு சாத்திர மூலம் திருக்குறள் மூலம் ஆகிய இரண்டினையும் அடக்க விலைப் பதிப்புக்களாக வெளியிடவேண்டுமென்று பலர் விரும்பியபோதிலும் அவை கழக வெளியீடுகளாக வந்துள்ளபடியால் சமாஜ வெளியீடுகளாக வெளியிடப்படவில்லை. சமாஜ வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் காற்பங்கினை இறகெடைத்தாளில் (feather-weight paper) அச்சிட்டு மொராக்கோ ரெக்ஸைன் முதலியவற்றில் பைண்டு செய்து பொன்னெழுத்திட்டு அழகாக வெளியிடவேண்டுமென்று கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்களும் வேறு பல நண்பர்களும் அடிக்கடி தெரிவிப்பதுண்டு. இவ்வாறு செய்வதால் கழக வெளியீடுகட்குப் பாதகமேற்படக் கூடுமென்றெண்ணி இவ்வேண்டுகோளுக்குச் சமாஜம் இணங்கவில்லை. சமாஜத்தில் வெளியிட்ட திருவாசக மூலம் செலவான பிறகு மற்றொரு பதிப்பு வரவேண்டுமென்று பலர் விரும்பிய போதிலும் கழகத்தினர் ஒரு பதிப்பைத் தயாரித்துள்ளபடியால், சமாஜத்தில் வேறொரு பதிப்பை வெளியிடாமல் கழகத்தினர் பதிப்பில் ஆயிரம் பிரதிகட்குமேல்வாங்கிச் செலவுசெய்துவருவது பலர் அறிந்த விஷயம். சிவஞான சுவாமிகள் உரைக்கொத்து, குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு முதலிய பலநூல்களைச் சமாஜத்தில் அடக்கவிலைப்பதிப்புக்களாக

வெளியிட வேண்டுமென்று பல நண்பர்கள் தெரிவித்த போதிலும், இவையெல்லாம் கழகத்தில் வெளிவந்துள்ளபடியால் சமாஜம் வெளியிடவேண்டாமென்று கருதி மறுத்து வருகிறது. மேற்கூறியவைகளிலிருந்து கழக வெளியீடுகளின் விற்பனைக்குப் பழுதுவாராத வகையில் சமாஜம் எவ்வளவு தூரம் முழுவிழிப்போடு தனது வெளியீடுகளைத் திட்டம் செய்து வருகிறதென்பது நன்கு புலனாகும்.

நமது சமாஜவெளியீடுகள் அடக்கவிலைச் சுத்தப்பதிப்புக்களல்லவென்று முதன்முதலாக இப்போது கூறப்படுகிறது. இவ்வாறு கூறித் தமிழ்மக்களை வஞ்சித்துச் சமாஜம் ஏமாற்றிவருவதாகவும் சிலர் வாய்கூசாது கூறுகின்றனர். ஈண்டு "ஆடுநனைகிறதென்று ஓநாய் அழுகிறது" என்ற தமிழ்ப் பழமொழி அன்பர்கள் நினைவுக்கு வருதல் இயல்பு. பொதுவாக, நூல்கள் அதிகவிலைப் பதிப்பு, அடக்கவிலைப் பதிப்பு, அசல்விலைப்பதிப்பு எனமூவகைப்படும். அதிகவிலைப்பதிப்புக்களை வெளியிடுவோர் ஆசிரியர்கட்கு ஊதியம் கொடுத்தல், வியாபாரிகட்கு மூன்றிலொருபங்கு, சரிபாதி என்பனபோன்ற விகிதப்படி தரகு கொடுத்தல் முதலிய வழிகளிலெல்லாம் செலவிடநேர்வதால் அதிக விலையை வாங்குவோர்தலையிற் சுமத்துவது வழக்கம். நமது சமாஜ வெளியீடுகளில் ஊதியம், தரகுமுதலியன பெரும்பாலும் இன்மையால் மிகக்குறைந்த விலைக்கு அவை விற்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. காகிதவிலை, அச்சுக்கூலி, பைண்டுகூலி, விற்றுமுதலாகும் வரையில் செலவிட்டபணத்தில் வரக்கூடிய வருவாய், பிரதிகள் விரைவில் விற்கப்படாவிட்டால் விலையைக் குறைத்து விற்றுமுதல்செய்வதால் ஏற்படக்கூடிய நஷ்டம், பிரதிகளைப் பல இடங்களிற் கூட்டங்கள் வைத்து விற்றுமுதல் செய்வதற்குரிய செலவு, தொண்டர்கள் தங்கள் உழைப்பை மதிப்பிட்டு அது சமாஜத்துக்கே



போக வேண்டுமென்று தெரிவித்தால் அதன் மதிப்பு முதலிய பலவிஷயங்களைக் கருதியே சமாஜம் நூல்கட்கு விலை குறிப்பது வழக்கம். தொழில்நிலைய வாடகை, வேலைபார்ப்போருக்கு ஊதியம் முதலிய செலவுகள் அடியேன் காரியதரிசியாகத் தொண்டுபுரியத் தலைப்பட்ட நாள்தொட்டு சமாஜத்துக்கில்லையென்பது அனைவரும் அறிந்ததொன்று. சமாஜ வெளியீடுகள் குறைந்த விலைபெற்ற அடக்கவிலைப் பதிப்புக்களேயொழிய அசல்விலைப் பதிப்புக்களென்று எவராலும் எக்காலத்திலும் கூறப்படவில்லை. இது, முதல் முதலில் வெளிவந்த சுந்தரர் தேவாரத்து முகவுரையில் விளக்கப்பட்டுள்ளது. நமது வெளியீடுகள் விற்பனைக்கு வருவதற்குமுன் நூல்கள் பிற வியாபாரிகளிடம் எந்த விலைக்குக் கிடைத்தனவென்பதை நமது விலை விகிதங்களோடு ஒத்துப் பார்ப்பவர்கட்கு நமது வெளியீடுகளின் குறைந்த விலையும், விலைக்குறைவினால் தமிழ்மக்களடைந்த பயனும் நன்கு புலனாகும். இவைகளை விரிவாக எடுத்துக் கூற நாம் விரும்பவில்லை. பல்லாயிரக்கணக்கான பிரதிகளை விற்றுமுதல் செய்த இந்த ஏழு வருடங்களில் சமாஜத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் இலாபமாக வரவில்லையென்பதையும், அவ்வாறு வரவேண்டுமென்ற குறிக்கோளும் சமாஜத்துக்கில்லையென்பதையும் தமிழ்நாடு நன்கறியும்.

நமது சமாஜ வெளியீடுகள் விரைவாகவும் தொடர்ந்தும் வந்தமைக்குப் பல புண்ணியசீலர்களின் கூட்டுறவே காரணம். சமாஜத்தின் பொருளைக்கொண்டே இவை வெளிவருவனவாயின் பற்பல ஆண்டுகள் கழிய நேரிடும். தமிழ்மக்களோ நூல்கள் தொடர்ந்து வெளிவரவேண்டுமென்று மிகுந்த ஆவலோடு வற்புறுத்தி வந்தனர். இந்நிலையில் சமாஜ வெளியீடுகளிற் சில சமாஜச்செலவிலும், சில சமாஜத்தொண்டர்கள் செலவிலும் வந்துள்ளன. சமாஜத்துக்கு வியாபாரம்

செய்து ஊதியம் குவிக்கும் கருத்தில்லையாகையால், தொண்டர்கள் செலவில் வெளிவரும் நூல்களின் வரவு செலவு அவரவர்களோடேயே இருத்தல் வேண்டுமென்று சமாஜ நிர்வாக சபைக் கூட்டங்கள் அவ்வப்போது தீர்மானித்துள்ளன. சமாஜத்தின் பெயரால் சிலர் வியாபாரம் செய்வதாக இம்முறை கெடுகிறதென்று சிலவியாபாரிகள் இதைக் குறைகூறுவதாக அறிகிறோம். இதுவரையில் இவ்வியாபாரிகளுள் எவரும் இவ்வாறு சமாஜ வெளியீடு ஒன்றையேனும் ஏற்றுக்கொண்டு அச்சிட முன்வரவில்லை. சமாஜத்தின் பெயரைவைத்து இலாபம் சம்பாதிக்கக்கூடிய நிலைமை உண்மையாக இருப்பின், வியாபாரிகள் மேலே விழுந்து போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். அவ்வாறின்றி அவர்கள் வாளாவிருத்தலே அவர்கள் சொல்வது பொய்யென்பதை விளக்கும் சான்றாம். சமாஜம் வெளியிடக்கருதும் நூல்கள் பலவுள. இனியேனும் குறைகூறுவோர் குறைகூறுதலை விட்டு, சமாஜத்தோடு ஒத்துழைக்க முன்வருவார்களாக. 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று.'

அடக்கவிலைச் சுத்தப்பதிப்புக்களாகத் தமிழ்நூல்களை வெளியிடல் வேண்டுமென்ற எண்ணம் தமிழ்நாட்டில் வேரூன்றிவிட்டது. வியாபாரிகள் அழுக்காறு கொள்வதாற் பயனில்லை. சமாஜம் வெளியிடும்பணியை நிறுத்தினால் வேறுபல அன்பர்களாலும் சபைகளாலும் அப்பணி நடைபெறுமே தவிர ஒருபோதும் நின்றுவிடாது. சிவபெருமான் திருவருளையே துணையாகக் கொண்டுள்ளபடியால் மாயப்படையெழுச்சியால் சமாஜத்துக்கு எவ்விதத் தீமையும் விளையாது.

"ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே."

# நீலகண்ட யாழ்

[உதவிப்பத்திராசிரியர்]

**சை**வ சித்தாந்த மகாசமாஜத் தலைவர் உயர்திரு. சுவாமி விபுலாநந்தரவர்கள், சென்னைப் பல்கலைக் கழக ஆதரவிலே, தமிழ்ப் பெருமக்களுடைய இசை, சித்திரம், சிற்பம் முதலிய கலைகளைப்பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவற்றுள், பண்டைக் காலத்திலே மிகச்சிறப்புற்றிருந்த இசையையும் இசைக் கருவியாகிய யாழையும் பற்றிய வரலாற்றின் சுருக்கம் வருமாறு:—

இந்திய நாடு முழுவதும் வசித்திருந்தவர்களும், இயேசு பிறந்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே எகிப்து கிரீஸ் முதலிய அயல்நாடுகளோடு வாணிபம் நடத்தியவர்களுமாகிய தமிழர்கள் எல்லாக் கலைகளிலும் சிறப்புற்றிருந்தது போன்றே இசைக் கலையிலும் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தார்கள். சரித்திர காலத்திற்கு முற்பட்ட சங்க காலத்தின் முற்பகுதியிலே தமிழ்மொழி தனித்து விளங்கியது. அதன் பிற்பகுதியிலே வடக்கிருந்து வந்த சமண பௌத்தர்களுடைய தொடர்பை அது பெற்றது. தமிழிசை சிறப்புற்றிருந்த காலம் சங்க காலத்தின் முற்பகுதியேயாம். அப்போது பாணர் என்னும் ஒரு வகுப்பினர் இருந்தனர். அவர்கள் கலையுணர்ச்சியே உருவானவர்கள். அவர்களே யாழ் வாசித்தவர்கள். அவர்கள் ஓரிடத்திலே வசிப்பதில்லை. அவர்கள் பல குறுநிலமன்னர்களிடத்தே சிற்சில காலம் தங்கி யிருப்பார்கள். ஓரிடத்திலே தங்கி யிருந்த பாணர்களும் இருந்தார்கள். அவர்களும் ஊருக்கு வெளியே உள்ளத்தை ஈர்க்கும் இயற்கை வளப்பம் மிக்க அழகிய இடங்களிலே அமர்ந்திருந்தார்கள். மன்னர்கள் போர் புரிந்து வந்த பின்னும், வேட்டையாடித் திரும்பிய பின்னும் அவர்களைப் பாணர்கள் இன்னிசையால் மகிழ்விப்பார்கள். அரண்மனையின் அந்தப்புரத்திலும் பாணர் செல்லலாம். மன்னர்களுடைய விழாக்கள் பாணரின்றி நடைபெறா. அக்காலங்களில் பாணன் யாழ் வாசிப்பான்; அவனுடைய கற்புள்ள

மனைவியாகிய பாடினி ஆடுவாள். மன்னர்கள் பாணனுக்குப் பொற்றாமரையையும், பாடினிக்குப் பொன்மாலையையும் பரிசிலாக அளிப்பார்கள். பாணர்கள் தேர், குதிரை, யானை முதலியவும் பரிசாகப் பெறுவதுண்டு. அப்பாணர்கள் மன்னர்களால் அன்புடனும் சமத்துவத்துடனும் நன்மதிப்புடனும் நடத்தப் பெற்றார்கள்.

பாணர் எடுத்துச் சென்றயாழ்கள் இருவகை. ஒன்று பேரியாழ்; மற்றொன்று சீறியாழ் அல்லது செங்கோட்டியாழ். இச்சீறியாழ் 7 நரம்புகளையும், பேரியாழ் 21 நரம்புகளையுங் கொண்டவை. கிறிஸ்துவுக்குப் பின் இரண்டொரு நூற்றாண்டுகளில் வேறு இரண்டு யாழ்கள் தோன்றின. அவை மகரயாழ், சகோடயாழ் என்பவை. மகரயாழிற்கு நரம்புகள் 17; சகோடயாழிற்கு 14. நரம்பின் ஒலியே மக்களுடைய இயற்கை யொலியை ஒட்டி ஒலிக்கு மென்பதும், தந்தியின் ஒலி அவ்வாறாகா தென்பதும் அறியக்கிடக்கின்றன. இசையொலிகள்யாவும் சிலபிராணிகளின் குரல் ஒலிகளையும், பறவைகளின் குரல் ஒலிகளையும் ஒத்தே நிற்கின்றன வென்னலாம். ஏழு இசையொலிகட்கும் உரிய தமிழ்ப் பெயர்கள் குரல் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. அவை முறையே ம, ப, த, நி, ச, ரி க ஆகும். இவ் யாழ்கள் யாவும் விலையுயர்ந்த இரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்றனவாய்ப் பட்டு மூடிய அழகிய பெட்டகங்களிலே வைக்கப் பெற்றனவாய் இருந்தன.

இனி, இளம்பெண்கள் அரங்கேறி ஆடியபோதும் யாழுங் குழலும் இன்றியமையாத இசைக்கருவிகளாக இருந்தன. அப்போது உபயோகிக்கப் பெற்ற யாழ் சகோடயாழாகும். சிலப்பதிகார காலத்திருந்த அவை, அதன் உரையாசிரியராய அடியார்க்கு நல்லார்காலத்தே பெரிதும் மறைந்து விட்டன. சமணபுத்த துறவிகள் ஆடல் பாடல்களைக் கூடாவொழுக்கங்களென எண்ணி அவற்றைப் புறக்கணித்தமையே இக் கலையழிவிற்குக் காரணமாம். இத்துறவிகளால் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் பெரியதொரு மாறுதலைப் பெற்றது.



பின்னர் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழ்க்கலைகள் புத்துயிர் பெற்றன. இக்காலத்தேதான் சைவ ஆசிரியர்களாகிய திருஞான சம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் தோன்றினார்கள். தமிழ்க்கலைகள் புத்துயிர் பெற்றமைக்கு இப்பெரியோர்களின் வருகையும் ஒரு காரணமாகும். திருஞானசம்பந்தருடைய பத்திச் சுவை நிரம்பிய பாடல்கள் மக்களுடைய உள்ளங்களை உருக்கி உயர்ந்த குறிக்கோள்களிற் செலுத்தின. அது கேட்ட நீலகண்டரென்னும் பெயருடைய பாணர் (திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்) மதங்கசூளாமணியென்னும் மனைவியாரோடு போந்து ஞானசம்பந்தரைக் கண்டார். பெயர் மட்டோடு நில்லாது நாம் சரித்திர ரீதியாக அறியப்பெறுகிற முதல் இசை ஆசிரியர் நீலகண்டரேயாவார். அவர் நல்ல செல்வ நிலையிலே இருந்தார். அவருடைய இசைக்கலை எல்லோராலும் மதிக்கப் பெற்றது. அவர் ஆளுடைய பிள்ளையாருடைய பிரியாநட்பையும் பெற்றார். ஞானசம்பந்தருடைய இசைப்பாடல்களை நீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவியாரும் யாழிலிட்டு வாசித்துப் பாடினார்கள். அவர்கள் கொண்டிருந்தது சகோடயாழாம். நீலகண்டர் பொருட்டே ஞானசம்பந்தர் யாழ்மூரி பாடியவரலாறும், அந்தணராய திருநீலநக்க நாயனார் தீண்டக் கூடாத நீலகண்டர்க்கும் அவர் மனைவியார்க்கும் வேள்வித்தீ வளர்க்கும் அறையிலே இடமளித்த வரலாறும் பெரிய புராணத்திலே சேக்கிழாரால் அழகாகக் குறிக்கப்பெற்றன.

இனி, ஒன்பதாம் நூற்றாண்டிலே இரண்டு பாணர்கள் இருந்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான்பெருமாள் ஆகிய இவர்கள் காலத்திருந்த பத்திரனார் ஒருவர்; திருப்பாணாழ்வார் மற்றொருவர். பத்தாம் நூற்றாண்டிலே தோன்றிய பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய நூல்களிலும் யாழ்வாசித்தலைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இப்பத்தாம் நூற்றாண்டிலிருந்த கல்லாடனார் வேறு நான்கு யாழ்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அவை 1000 நரம்புள்ள நாரதப் பேரியாழ், 100 நரம்புள்ள இசகப்பேரியாழ், 9 நரம்

புள்ள தும்புரு யாழ், ஒரு நரம்புள்ள மருத்துவை யாழ் என்பவை. நாரதப் பேரியாழ், எத்துணையளவு அக்கருவியைப் பெருக்கிச் செல்லக்கூடு மென்பதைச் செய்து காட்டியதாக ஆகுமேயன்றி உண்மையிற் பயன்படுத்தியதாகமாட்டாதென்னலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டிலே சேக்கிழார் பண்டைத் தமிழிசையைப் பற்றிப் பலவிடத்துக் குறிக்கிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டிலே 'சங்கீதரத்னாகரம்' என்னும் நூலியற்றிய சாரங்கதேவர் தமிழ்த் தேவாரப் பண்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்புக்கள், அப்பண்களிற் சில மீண்டும் உயிர்பெறுமாறு செய்யத் துணைபுரியும். எங்கும் புத்துயிர் காணப்பெறும் இக்காலத்து மக்களும் இசைக்கலையை உயிர்ப்பித்து வளர்ப்பார்களாக.

# சமயக் கல்வி

[கோவைக்கிழார்]

நமது சைவப்பெரியார் திரு. திவான்பகதூர்-சி. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் சைவர் மகாநாட்டைத் திறந்துவைத்தபோது பேசிய அரிய உரையைப்பற்றி நமது 'சித்தாந்தத்'தில் படித்து மகிழ்ந்தேன். அவர்கள் உரைத்த பல பொருள்களில் இறுதியாக உரைத்த ஒரு பொருளைச் சைவமக்கள் அனைவரும் பெரிதும் கைக்கொள்ள வேண்டும். அது என்னவெனில் "ஆங்காங்கு பிரதமக் கல்விச்சாலைகளை அமைத்து அவற்றின் மூலமாகச் சமயஞானத்தைப் புகட்டுனால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே மக்கள் சமய அறிவைப் பெறுவார்கள்" என்பதாம். "இத்திருப்பணி மிகச் சிறந்ததாகையால் தமிழ்நாட்டிலுள்ள செல்வர்கள் கவனிக்கவேண்டும்" என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். இத்திருப்பணியை ஏனைய சமயத்துச் செல்வர்களேயன்றி சமயசேவை செய்யும் கற்றோர்களும் கைக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அதனை முக்கியமாக நமது சைவசித்தாந்த



சமாஜம் எடுத்தாளவேண்டும் என்றும் வற்புறுத்தும் பொருட்டு இதை எழுதப்புகுந்தேன்.

கல்வி, குணம் இவைகளை அறிவுறுத்துவதற்கு எவ்வாறு இளமை தகுதியோ, அவ்வாறே சமயஞானத்தை அறிவுறுத்துவதற்கும் இளமையே தகுதியான தருணம் என்று எல்லோரும் அறிவர். இதனைச் செவ்வையாக அறிந்த கிறித்தவர்கள் தம் சிறு பாடசாலைகளிலேயே தமது சமய நூலாகிய விவிலிய நூலைக் கட்டாயப் பாடமாக வைத்துப்போதிக்கிறார்கள். பெரியவர்களான ஒவ்வொரு கிறித்தவ ஆணுக்கும் பெண்ணுக்கும் சமயஞானம் சிறிதேனும் இருக்கும். நாள்தோறும் செய்யும் பிரார்த்தனையும் சமயச் சடங்கும் எல்லோரும் அறிவர். அவர்களைப்போலவே முகம்மதியர்களும் தம் சின்னஞ்சிறு வயதிலேயே சமயஞானத்தை ஊட்டப்பெறுகின்றனர். ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குர்ஆனிலுள்ள போதனைகளும் தமது ஆசாரியர்களுடைய சரித்திரமும் தொழுகை விவரங்களும் தெரியவரும். வழிப்போக்கர்களும் குறித்த காலம் வந்துவிட்டால் ஒரு துணி விரித்துத் தொழுகையை ஆரம்பித்து முடிப்பதை நாம் அறிவோம். இதுபோது நமது நாட்டில் பிராமணர்களும் தம் சிறுவர்களுக்குக் கட்டாயமாகச் சிறு வயதில் சந்தியாவந்தனம் கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்களில் பலரும் பொருள் தெரியாமல் சடங்குகளைச் செய்வது நாம் அறிவோம்; மற்றும் பலர் ஏனைய இந்துக்களைப் பின்பற்றி அச்சடங்குகளை விட்டுவிடுவதும் இக்காலத்தில் சகஜமாகிவிட்டது. இது கிடக்க, நமது சைவர்களில் சமய போதனை சிறுவர்களுக்குச் செய்வது ஏன் நின்றுவிட்டது? தப்பித்தவறி ஏதாவது சமய தீட்சை பெற்றவர்கள் இருந்தால் அவர்கள் நூற்றுக்கு எவ்வளவு பேர்? இல்லை. சமயஞானமும் ஆசாரியர்கள் சரித்திர அறிவும், தேவாராதி தோத்திர பாடமும் அறிந்தவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? இதனை ஆராயப்புகுங்கால் நமது தாழ்வைக் கண்டு நாம் தலைகுனியவேண்டியிருக்கும்.

இச்சமய அறிவின்மையை நீக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதைத்தான் திரு. முதலியார் அவர்கள் வற்புறுத்தியது. ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொரு பிரதம பாடசாலை வைத்து அதில் சமய ஞானத்தைக் கட்டாயமாக ஊட்டுவதே ஆகும். இதற்கு அதிக பணம் வேண்டும் ; செல்வந்தர்கள் முற்பட்டு வரவேண்டும் என்பதில்லை. ஏனைய சமயத்தினர்கள் அதிக செல்வத்தை வைத்துக்கொண்டு இச்சேவை செய்வதில்லை. கிறித்தவர்கள் பாடசாலைகளை நடத்தும் முறையைக் கண்டவர்கள் செல்வம் அதிகம் வேண்டியதில்லை என்பதை அறிவார்கள். நமது நாட்டில் எங்கணும் கிடைக்கும் பலவிதமான நிலைகளிலிருந்தும் கிடைக்கக்கூடிய உதவிகளைக்கொண்டு நாடு முழுவதும் கணக்கில்லாத பாடசாலைகளைப்பரப்பமுடியும். ஆனால் அதற்கு ஊக்கமும் அறிவும் வேண்டும்.

இவ்விதப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் இதுவே தருணம். ஏனையோர்கள் 50 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்திருந்தாலும் நாம் இப்போதாவது ஆரம்பிக்கலாம். டாக்டர் அம்பேத்கர்போன்றவர்கள் இந்து சமயத்தை விட்டு பிற மதங்களுக்குச் சென்று விடுவோம் என்று பயமுறுத்தும் இக்காலத்திலேயே இவ்வியக்கத்தை ஆரம்பித்தால் அதனால் பலன் மிகப் பெரிதாக விளையும். லூதர் உரோமானிய மதத்தை விட்டு விலகிய காலத்தில் லயோலா என்ற பெரியார் உரோமானிய மதக்கல்வியை வற்புறுத்தியதால் அம்மதம் அழியாமல் இன்றைக்கும் தழைத்து நிற்கிறது. ஆகவே, இத்தருணத்தைக் கைவிடாது நாம் பாடசாலைச்சமயபோதனை இயக்கத்தை முற்றுமாகக் கைக்கொண்டால் சமயம் விருத்தியாகி நம் மக்களை நல்வழிப்படச் செய்யும்.

இனி உதாரணமாக, கிறித்தவர்கள் செய்து வரும் வேலையைச் சிறிது எடுத்துக் காட்டுகிறேன். சேலம் ஜில்லாவில் 1934-35-வது ஆண்டில் மொத்தம் 1676 பிரதம பாடசாலைகளில் 1049 பொதுப் பாடசாலைகளும் 233 மிஷனரி பாடசாலைகளும் 394 மிஷனரி அல்லாத பாடசாலைகளும் இருக்கின்றன. இவைகளில் ஆண்பிள்ளைப் பாடசாலைகள் 212



மிஷனரி. 383 மிஷனரி அல்லாதவை. பெண் பாடசாலைகளில் 21 மிஷனரி, 11 மிஷனரி அல்லாதவை.

படிக்கும் பிள்ளைகளில் மொத்தம் 92744 பிள்ளைகளில் சர்க்கார் பாடசாலைகளில் 62457 பிள்ளைகளும், மிஷனரி பாடசாலைகளில் 12510 பிள்ளைகளும், மிஷனரி அல்லாதவைகளில் 17122 பிள்ளைகளும் வாசிக்கிறார்கள். இவர்களில் மிஷனரி பாடசாலைகளில் 8475 ஆண்களும், 4035 பெண்களும், மிஷனரி அல்லாதவைகளில் 13551 ஆண்களும், 3571 பெண்களும் வாசிக்கிறார்கள். மேற்சொன்ன மிஷன் பாடசாலையில் வாசிக்கும் 1250 பிள்ளைகளுக்கும் கிறிஸ்துமதப் பாடம் கட்டாயமாகப் போதிக்கப்படுகின்றது. அவர்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள் நமது சமயக்கொள்கைகளை அவர்கள் அறியாவிட்டாலும் கிறித்தவமத அறிவைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவைகளை நன்றாய்ப் படிப்பதற்காகப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இப்படியிருக்கும் போது, சைவ சமயம் எவ்வாறு நம் இளைஞர்கள் அறிவது அதற்கு ஒரு பாடசாலையேனும் உண்டா? ஆண் பிள்ளைகளையன்றி நமது பெண்பிள்ளைகளிலும் 4035 பேர் சதாகாலம் இப்போதனைக் குட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்போது இவர்களுக்குச் சைவஞானம் வரப்போகிறது?

சில ஆண்டுகளுக்கு முன் நானும் எனது நண்பர் C. K. சு. அவர்களும் "கடவுள் வணக்கச் செய்யுட்கள்" என்று ஒரு தோத்திரத் திரட்டை வெளியிட்டு, பாடசாலைகளில் புகுத்தினோம். முதலில் சில உபாத்தியாயர்கள் அந்நூலை எடுத்தாண்டார்கள். பிறகு நாள் ஆக ஆக, அந்நூலை எடுத்தாளுவதையே விட்டு விட்டார்கள். நமது நாட்டு மக்களின் சமய ஊக்கம் இத்தகையதாக இருக்கிறது. ஆகவே சமாஜத்தார் வற்புறுத்திச் சாலைகளை ஏற்படுத்தினால் ஒழிய சமயஞானம் பரப்புதல் அரிது. மேலும், 68469 ஆண் பிள்ளைகளில் 8475 பேரும், 24275 பெண் பிள்ளைகளில் 4035 பேரும், கிறித்தவப் பாடசாலைகளில் பயிற்சி பெறுகிறார்கள். அதாவது 8-ல் ஒரு ஆணும் 6-ல் ஒரு பெண்ணும் கிறித்தவப் பாடசாலையில் வாசிக்கிறார்கள். இவ்விதக்

கல்வி சமய மாறுதலுக்கு எத்துணை வசீகரமாக இருக்கும். தவிர மிஷனரி பாடசாலைகளில் பெரும்பான்மையான பேர் தாழ்ந்த வகுப்பினராக இருப்பார்கள். அவர்களில் நமது சமயஞானம் மிகக் குறைவு. நம் பெரியோர்கள் அன்னாருக்கு உதவி புரிவதும் இல்லை. துன்பமும் இயற்றுகிறார்கள். ஆகவே அன்னார்கள் வெளிப்போவதற்குக் காரணங்கள் பல ஏற்படுகின்றன. சமீப காலங்களில் கிராமங்கள் கிராமங்களாகச் சமய மாறுதல்கள் ஏற்படுவதற்கு இதுவே காரணமாகும். சில கற்றோர்கள் அவர்கள் போனால் போகட்டும் என்கிறார்கள். இக்கொள்கை தற்கொலையே தவிர வேறில்லை. ஆண்பாடசாலைகளில் மொத்தம் உபாத்தியாயர்கள் 2861 பேர். இவர்களில் 402 மிஷன் உபாத்தியாயர்களும் 633 ஏனைய உபாத்தியாயர்களும் இருக்கிறார்கள். மிஷன் பாடசாலை உபாத்தியாயர்கள் தங்கள் ஒழிந்த நேரங்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கிராமங்களுக்குச் சென்று பஜனை, உபந்நியாசம் இவைகளைச் செய்து சமயபோதனை செய்கிறார்கள். மற்ற உபாத்தியாயர்கள் ஒழிந்த நேரங்களில் என்ன செய்கிறார்கள்?

இவ்வெண்களைக் கண்டவர்கள். கோவை போலவே ஏனைய ஜில்லாக்களிலும் இருக்கும் என்றறிய வேண்டும். நமது சமாஜத்தார் ஆங்காங்கு ஆரம்பப் பாடசாலைகளை வைத்துச் சமய போதனை செய்தால் சமய ஞானம் பரப்பலாம். பல ஏழை ஆசிரியர்களுக்கு வேலை தரலாம். சமய நூல்களை நாடு முழுதும் பரப்பலாம். இதற்காக ஒரு உட்சங்கமும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு பாடசாலையாக ஏற்படுத்தினால் சில ஆண்டுகளில் அநேக பாடசாலைகள் ஏற்பட்டு விடும். ஊக்கம் இருந்தால் உதவிதானே வரும்.

---

# அப்பர் தேவாரச் சிறப்பு

[திரு. G. கலியாணம், B.A.]

திருவதிகையில் சமாஜ ஆண்டு விழாவில் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவினின்றும் என்னால் எடுக்கப்பட்ட குறிப்புகளுள் சில வருமாறு:—

அப்படிகள் முதன் முதலில் பதிகம்பாடிய தலம் திருவதிகை. திருவதிகை என்றால் மெய்ப்பொருள் அல்லது செல்வம் தங்குமிடம் என்று பொருள். அப்பதியை அழகு படுத்துவது தெய்வப்புனல் கெடிலநதி. கெடிலம் என்றால் கேடு இல்லாதது (கேடு + இலம்) என்று பொருள்படும் போலும்.

* * *

கடவுளை அநுபவித்து அதன்பயனைச் சொல்லிக் காட்டுகிற வேதம் தமிழ்மொழியில்தானிருக்கிறது; வேறு மத நூல்களில் இல்லை. இதைக் காலஞ்சென்ற V. கிருஷ்ணசாமி அய்யர் நன்றாக ஒப்புக்கொண்டிருக்கிறார். நால்வர் அநுபவ மொழிகள்தான் தேவார திருவாசகங்களாக வெளிவந்தன. சிவானந்தத்தைக் கொடுக்கும் நூல்கள் தேவாரங்கள்; அவை அன்புமொழிகளால் அநுபவத்தையும் காட்டுகின்றன. "முத்தினைப் பவளத்தை", "முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை" என்பன அன்பால் சொல்லப்பட்டவை.

* * *

சேக்கிழார் அப்பரைக் காதலியாகச் சொன்னார். சம்பந்தரையும் அப்படியே சொல்லியிருக்கிறார். "தூயபொன் மேனி..." என்ற பாட்டில் அப்பரைக் காதலியாகச் சொன்னது காண்க. அப்பர்சுவாமிகள் வாக்கு மிக்க நயமுடையது. திருமறைக்காட்டில் கதவம் ஏன் விரைவில் திறக்கப்படவில்லையென்றால், இறைவன் "பண்ணின் பயன் துய்ப்பான்" என்று கூறுவார் சேக்கிழார். திருநாவுக்கரசர் தேவாரம் நயத்தால்

அல்லாது அளவாலும் சிறந்திருக்கிறது. அவர் அருளிய பதிகங்கள் 49,000 என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பர் தாயும் ஆனவர் என்று சொல்லலாம். "உலகுக்கெல்லாம் அன்பு நிறை கடல்" என்றார் சேக்கிழார். "கூற்றாயினவாறு" என்ற தொடக்கத்த பதிகத்தாலும், "உடம்பைத் தொலைவித்து" என்ற செய்யுளாலும் அவரது தாய்த் தன்மை விளங்கும். மேலும், "மனிதர்காள் இங்குவம்மொன்று சொல்லுகேன்..." என்ற பாட்டில் அவர் மனிதர்களைக் குழந்தைகளைப்போல் அழைத்துக் கனி தருகிறேன் என்கிறார்.

* * *

மனிதன் விரும்பும் எல்லாப் பொருள்களிலும் இனியன் கடவுள் என்பர். படுகுழியாகிய வயிறு சாணளவாக இருந்தபோதிலும் நிறைவதில்லை என்று கூறுகிறார். "மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே...." என்ற பாட்டில் பொய் சொல்லிப் பொருள் சேர்ப்பதைக் கண்டிக்கிறார். பெண்ணின்மேல் வைத்த தவறான ஆசை மடியில் நெருப்பைக் கொண்டதுபோலும் என்கிறார். "வேம்பினைப் பேசி விடக்கினை ஓம்பி" என்ற தொடக்கத்த செய்யுளில் கசப்பாய்ப் பேசி, உடல் வளர்க்கப் பேசித் திரிவதை வெறுத்திருக்கிறார். "நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே" என்றதில் தெய்வமில்லையென்பாரை ஒறுத்துப் பேசுகிறார். கடவுள் நாமத்தை ஓயாமல் சொல் என்பார். "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே", "கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்" என்ற தொடக்கத்த பாக்களில் வெளி வேடத்தை எள்ளி நகையாடுகிறார். கடவுளை உண்மையாக உறுதியாக வழிபடல்வேண்டுமென்கிறார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதை வற்புறுத்துகிறார். இவர் மக்கள் இயல்பறிந்த மாபெரும் பாவலர் (Poet of human nature).

அப்பர் கடவுள் இயற்கையை எளிதிற் கூறுகிறார். ஓதாதன் கடவுள் என்கிறார். கள்ளர்களையும் அறிவார் ஈசன் என்பதைப் "பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும் எழு



தும் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே" என உரைக்கிறார். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற பாசுரத்தில் இறைவன் வல்லமையைக் கூறியிருக்கிறார். ஆண்டவன் எல்லையில் இன்பத்தை அருள்பவன் என்கிறார். "உமையலாதுருவமில்லை" என்பதில் தூய உடம்பினன் என்பதைக் குறிக்கிறார். "என்னில்யாரும் எனக்கினியாரில்லை, என்னிலும் மினியான் ஒருவன் உளன்" என்று கடவுளின் அன்பைப் போற்றுகிறார்.

அப்பர் தேவாரத்தில் எல்லாக் கலைநயங்களும் காணக்கிடைக்கும். அவர் எண் சுவையைப்பற்றிக் கூறியிருக்கிறார். நகைச்சுவைக்கு உதாரணமாக, சிவபெருமான் திருமுடியிலுள்ள கங்கையை மயிலென்றும், சந்திரனை மின்னலென்றும், அவர் அணிந்துள்ள நாகம் அஞ்சுகிறதென்கிறார். "நாகத்தை கங்கை யஞ்ச", "கிடந்த பாம்பு" என்ற தொடக்கத்த செய்யுட்களைக் காண்க. "அங்கட் கடுக்கை" என்ற தேவாரச் செய்யுளில் திருமுடியை வர்ணித்திருக்கும் அழகை நோக்குங்கள். அதில் ஐந்து நிலங்களுக்கு உவமைகள் சொல்லியிருக்கிறார். "என்று கொண்டாய் என்னை எம்பெருமான் இனி அல்லம் என்னில் சான்று கண்டாய் இவ்வுலகமெல்லாம்" என்று சட்ட திட்டத்தைக் கூறுகிறார். அவர் கூறியிருக்கும் காதல் உவமைகள் பல. கீழ்க்கண்ட செய்யுளை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே".

இச்செய்யுளுக்கும் திருக்குறள் முதல் அதிகாரத்திலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுட்களுக்கும் பொருத்தம்

தோன்றுகிறது. காமங்கேட்டாள் என்பதற்கு ஆதிபகவன் என்பதைக் கூறலாம்; வண்ணங்கேட்டாள் என்பதற்கு வாலறிவன் என்பதைச் சொல்லலாம்; ஆரூர் கேட்டாள் என்பதற்கு மலர்மிசை என்ற உள்ளக்கமலத்தைக் கேட்டாள் என்பதை உரைக்கலாம்; பெயர்த்துமவனுக்கே பிச்சியானாள் என்பதற்கு "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பை யில" என்பதை யொப்பிடலாம்; அன்னையையும் அத்தனையும் என்பதற்கு "தனக்குவமை யில்லாதான்" என்ற குறளைக் கூறலாம்; தலைப்பட்டாள் என்பதற்கு "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்பதை உரைக்கலாம்.

ஆதலின், அன்பர்களே! பலவகைச் சிறப்புக்களையுடைய அப்பர் தேவாரத்தைப் படித்து, சிந்தித்துப் பேரானந்தத்தை அடைவீர்களாக!

# சமயச் செய்தி

[உதவிப் பத்திராசிரியர்]

## மேஜர் ஈட்ஸ்ப்ரேளன்

இவர் ஓர் ஆங்கிலர்; நூலாசிரியர்; இந்திய யோக சாத்திரத்தைக் கற்று வருபவர். இவர், தற்போது இந்தியாவிலுள்ள யோகீசுரர்களையெல்லாம் தரிசிக்கப் போந்துள்ளார்; சிலரைத் தரிசித்தார்.

* * *

இவர் ரிஷிகேசத்திலே 45 நாள் பூமியிற் புதைக்கப்பட்டிருந்த ஓர் இளையயோகியைத் தரிசித்தார். அந்த யோகியின்பால் இவரை அழைத்துச் சென்ற ஒருவர், அவரே பேசினாலொழிய பேசக்கூடாதென்றும், எவ்விதமான வினாக்களையும் வினவக்கூடாதென்றும் இவருக்குக் கட்டளையிட்டனராம். ஆகலின், தம்மைப் பிறர்க்குத் தெரிவித்துக் கொள்ளா



திருத்தல், இந்தியாவிலுள்ள சமயப் பெரியோர்க்கமைந்த ஒரு குணம் என்று மேஜர் கூறுகிறார்.

* * *

மேஜர், பனாரஸிலிருந்த தம்முடைய குருநாதர் 18 திங்கட்கு முன்புதான் காலமானார் என்று கூறுகிறார்.

* * *

"குருவைத் தேடுவோர் காலதேசத்தாலுண்டாம் கஷ்டங்களைக் கடந்தாகவேண்டும். ஒரு குருவையடைய நேருந் துன்பம் ஒரு மலையின்மீது ஏறுவோர் அடையுந் துன்பத்தையொக்கும். முயன்று மலையேறுவோர் மலையுச்சியை யடைந்தும் பெருமகிழ்ச்சியை யடைவார்கள். அம் மலையுச்சியை எளிதாக அடைவோர் அம்மகிழ்ச்சியை அடையார். இவ்வாறே குருவை முயன்று அடைவோரே, அடைந்தபின் பெருமகிழ்ச்சியைப் பெறுவர். நாம் பக்குவமுடையவர்களானால் குருவை அடையும் வாய்ப்பு தானேவரும்; யாரேனும் ஒருவர் போந்து கடவுளையடையும் நெறியிற் செலுத்தி அந்நெறிக்குத் துணையாகவும் நிற்பர்" என்றும் ஈட்ஸ் ப்ரௌன் கூறியுள்ளார்.

## சநாதன தருமமும் தீண்டாதாரும்

அலஹாபாத் கும்பமேலாவில் அகிலஇந்திய சநாதன தருமிகளின் மகாநாடு கூடியது. அம்மகாநாட்டில் 'ஹரிஜனங்களென்றழைக்கப்படுவோர்க்கு, கோயில் வழிபாடு, பள்ளிக்கூடங்களில் சேர்த்தல், கிணறு குளங்களை உபயோகித்தல் முதலிய எல்லா உரிமைகளும் கொடுக்கவேண்டும்; இன்னும், பிராமணர்களைக் கொண்டு இவ்வாண்டுச் சிவராத்திரிநாளிலே சிவமந்திரத்தை உபதேசிக்க நிருவாக சபையார் ஏற்பாடுகள் செய்யவேண்டும்' என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பண்டித மதன்மோஹன மாளவியரின் விண்ணப்பம்

இப்பெரியார், சநாதன தருமிகட்கும், எல்லாச் சநாதன தரும சபைகட்கும், இந்துசபைகட்கும், தாழ்த்தப்பட்ட

வகுப்பினர் சங்கங்கட்கும் செய்த விண்ணப்பத்தின் சாரம் வருமாறு :—

“ சிவராத்திரி விரதம் மற்றைய விரதங்களைக்காட்டிலும் சிறந்ததாக நம்முடைய சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்று தவஞ்செய்வோர் ஆண்டு முழுவதுஞ் செய்த பாவத்தையொழித்துத் தூய்மையடைந்து இம்மையிற் சுகத்தையும் மறுமையில் பேரின்பப் பேற்றையும் பெறுவர். இவ்விரதம் இந்தியநாடுமுழுவதும் அநுட்டிக்கப்பெறுகிறது. மந்திரதீக்ஷை பெறுவதற்கும் இது மிக நல்லநாள். இந்நன்னாள் இவ்வாண்டு 21-2-36-ல் வருகிறது.

இப்போது அர்த்தகும்ப பிரயாகையில் கூடிய அகில இந்திய சநாதன தர்ம மஹா சபையில் தீர்மானித்தவண்ணம் சிவராத்திரி விரதத்தைத் தேசீய விரதமாகக் கொண்டாட வேண்டுமென்றும், அன்று இம்மை மறுமைச் சுகங்களை நல்கும் கருணைக் கடலும், பெரிய கடவுளுமாகிய சதாசிவமஹாதேவனுடைய வழிபாட்டை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் செய்யவேண்டு மென்றும், இன்னும் ஒவ்வொருவரும் தத்தம்மாலியன்றவரை இவ்விரதத்தைப் பிறரும் அநுட்டிக்குமாறு தூண்டவேண்டுமென்றும் சநாதன தருமிகளாகிய பெரியோர்களையும் அறிஞர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எக்காரணத்தாலாவது இதுவரை எந்தயந்திர தீக்ஷையும் பெறாத இந்து சகோதர சகோதரிகள் சிவராத்திரியன்று அத்தீக்ஷையைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மஹாசபையின் தீர்மானப்படி சநாதன தருமிகள் ஒற்றுமையாகவிருந்து ஒரே பொதுப் பிரார்த்தனையைச் செய்வதற்காக எல்லோரும் நமச்சிவாய மந்திரத்தைப் பெற்று மஹா சிவ பூஜையைச் செய்தல் வேண்டும். ஆகலின், இதற்குரிய ஏற்பாடுகளை எல்லாச் சபையாரும் இயன்றவரை செய்யவேண்டுமென்று நான்கேட்கிறேன். மிகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய அந்த்யஜர் உட்பட்ட எல்லாச் சநாதனிகளும் தீக்ஷைபெற்றுக் கொள்ளுதல் வேண்



டும். சாத்திரப்படி சிவராத்திரி விரத அநுட்டிப்பே தூய்மையையும் உயர்வையும் தரும். அன்று தீக்ஷை பெறுவோர்க்கு அது, மும்மடங்கு அதிகமான நலத்தையும் உயர்வையும் சமுதாயத்திலும் சமயத்திலும் நல்கும்.

ஆனரபில் தர்பங்கா மஹாராஜாதிராஜருடைய தலைமையின் கீழ்ப் பிரயாகையில் கூடிய மஹாசபையில் தீண்டாதார் உட்பட்ட எல்லா இந்துக்கட்கும் மந்திரதீக்ஷை கொடுத்தல் வேண்டும் என்று பேரறிஞர்களாகிய பண்டிதர்கள் செய்த தீர்மானம் இந்துக்களுடைய சரித்திரத்திலே மிக மகிழ்ச்சியைத் தரத்தக்க ஒரு புதிய பகுதியைக் குறிக்கிறது. ஒவ்வோர் இந்துவும் இத்தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தத்தம்மாலியன்றவரை என்றும் நினைவிலிருக்கத் தக்க இவ்வுழைப்பில் ஈடுபட்டுப் பல ஆண் பெண்மக்கட்கு நன்மை செய்ய வேண்டுகிறேன்.

இத்தீர்மானத்தின்படி எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவையுஞ் செய்யக் காசியில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பழமையைப்பற்றி நிற்கும் வைதிகர்கள் பலரும் இத்தீர்மானத்திற்கு ஆதரவு செய்கிறார்களென்று மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். சிவராத்திரியன்று காசியில் பன்னிரண்டு முக்கியமான இடங்களில் தீக்ஷை கொடுக்கப்படும். இத்தகைய ஏற்பாடுகள் இந்திய நாடுமுழுவதும் இயன்றவிடங்களிலெல்லாம் செய்யப்படுமென்று நம்புகிறேன். இந்த இயக்கத்தை வாழ்த்தி இதற்கு வேண்டிய முழு ஆதரவையும் செய்யவேண்டுமென்று எல்லா ஆசிரியர்களையும், மடாதிபதிகளையும், மஹந்துக்களையும், குருமார்களையும், மஹாத்மாக்களையும், சாதுக்களையும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.”

### சிவராத்திரியில் தீக்ஷைகள்

பண்டித மதன்மோகன மாளவியா அவர்கள் சிவராத்திரியன்று காசிக் கங்கைக் கரையிலே பலபண்டாக்களுக்கருகே யிருந்து, தீண்டாதாரென்போர் உட்பட்ட பல இந்

திக்கட்கு குருமந்திரத்தை உபதேசித்தார். அதனைப் பெற்றவர்களெல்லோரும் தூய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார்.

* * *

திருவாங்கூர் இராச்சியத்திலே திருவனந்தபுரத்தில் எட்டு இடங்களிலும் மற்றும் பல ஊர்களிலும் தீண்டாதாரென்போர் உட்பட்ட பல இந்துக்கட்கும் சிவராத்திரியன்று பஞ்சாக்ஷர மந்திர தீக்ஷை கொடுக்கப்பெற்றது. பல பிராம்மணர்கள் இதனை முன்னின்று நடத்தி யுள்ளார்கள்.

* * *

ஆரிய சமாஜத்தைச் சார்ந்த ரிஷிகேஷ் என்பார் சிதம்பரம் நந்தனார் குருகுலத்திலுள்ள 48 பிள்ளைகட்குப் பூணூல் கொடுத்துக் காயத்திரி மந்திரத்தை உபதேசித்தனர். 135 பிள்ளைகள் பஞ்சாக்ஷர மந்திரோபதேசத்தைப் பெற்று உருத்திராக்க மணிந்தனர். பிறகு, இவர்கள் எல்லோரும் அன்று உயர் வகுப்பாரென்பாரோடு இருந்து சிற்றுண்டியருந்தினார்கள்.

* * *

காஞ்சிபுரத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள தீண்டா வகுப்பினர்க்குச் சிவராத்திரியன்று மந்திர தீக்ஷை செய்யப் பெற்றது.



ஆனபோ தென்பதனையும் பிரிநிலை ஏகாரத்தையுந் தொழில் என்பத
ஞேடுங் கூட்டுக. பின் வந்த ஞானஞ் சத்திக்குப் பரியாயப்பெயராய்
நின்றது. ஒக்கிலென்பதற்கு, இவ்விரண்டுமென எழுவாய் வருவித்
துரைக்க. பேரீசன் மகேசனென்னும் பொருட்டு. ஆதாரம் அதி
காரணம் என்பன ஒரு பொருட்கிளவி என்பது மேலும் உரைத்தாம்;
கடைப்பிடிக்க. அற்றேல், அவ்விலயபோக அதிகாரங்கட்கு ஏதுவாய்
நின்ற அதிகரணங்களியாவை அவற்றியல்பென்னையோ எனின், அது கூ௫
வருஞ் செய்யுளிற் கூறப்படும்.

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்கள் ஐந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்தன் சுதந்திர வடிவ மாகும்
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே. அசு

(உரை) அவ்வவியாபாரங்கட்கு இடமாய் ஐவகைப்பட்டு மேற்
கூறிப்போந்த அவ்வப்பெயரே பெயராக உடையனவாஞ் சுத்த தத்து
வம் ஐந்தும் அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய அதிட்டானமுமாம்.
முன் பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபார
பேதம்பற்றி இவற்றிற்கு முற்பிற்பாடு கூறப்படினும், இவ்வைந்துந்
தோன்றிய பின்னர்த் தோன்றுவதாய காலதத்துவம் இவற்றது
தோற்றத்திற்கு ஏதுவாகாமையிற் காலம்பற்றி முற்பிற்பாடு கூறுதல்
செல்லாது, காலவரையறையைக் கடந்து நிற்றலால்; அதுபற்றி
இவை சிவனுக்கு நித்திய அதிட்டானமென்றுரைக்கப்படும்.
அநந்ததேவர் முதலியோர் வாயிலாக நின்று அதிட்டிக்கப்படும்
ஏனை மாயேயம் போலன்றித் தானே அதிட்டிக்கப்படுதலின், இவை
சுதந்திர வடிவமெனப்பட்டன. அதிட்டானத்தை வடிவமென்று உப
சரித்தார். தோற்றக் கேடுகளுடையனவாய தத்துவங்கள் இறைவ
னுக்குச் சுதந்திர வடிவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை ஆசங்
கித்து, நித்தமென் றுரைப்பர் என்றும், நித்தயாதற்கேதுக் கூறுவார்
காலநீங்கிய நிலைமையாலென்றும், அற்றேற் காலநீங்கிய வழி இவற்
றின் தோற்றத்திற்கு முற்பிற்பாடு கூறுதல் செல்லாதென்பாரை
நோக்கி ஈண்டு முற்பிற்பாடு கூறியது காலம்பற்றி அன்றென்பார்
வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலென்றுங் கூறினார்.
ஈண்டுக் கருமமென்றது மேலைச் செய்யுளிற் கூறிய வியாபார பேதங்

களை. அந்த வியாபாரங்கட்குக் காரணங் கலையித்திரியெனப் பெயர் பெற்றுக் காலத்தானமாய் நிற்குஞ் சிவசத்தியேயாகலின், ஆண்டுக் காலவின்மைபற்றி முற்பிற்பா டின்மைக்கு இழுக்கின்மையும் அறிக. அற்றேல் இலயசிவன் முதலிய மூவருந் தம்முள் வேறென்றாது சுத்த சிவனொருவனே இவ்வதிகரணங்களைப்பற்றிய வியாபார பேதத்தால் அங்ஙனம் மூன்றவத்தை எய்துவனெனின், விகாரியாவா னென்பது. போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது, வருஞ் செய்யு

௬௬

ஒருவனே இராவ ணாதி பாவக முற்றாற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாம் தன்மையும் திரியா னாகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச் சிவத்தினோ டியைந்து நிற்கும்.

(உரை) ஒருவன் கூத்திற்குரிய பல வேடங்கட்டி நடித்தானாயி னுந் தன் தன்மையிற் சிறிதுந் திரியாமைபோல, முதல்வன் ஐந்தொழிற்குரியனவாய் இங்ஙனம் கூறிப்போந்த பேதமெல்லாம் எய்தியும் அவ்வேறுபாடெல்லாங் குணகுணி பாவமாய் உடன்நிற்குந் தனது சத்தியிற் காணப்படுவனவாகலின், அதுபற்றித் தன் தன்மை வேறுபட்டு விகாரியாவா னல்லன்.

ஏகாரந் தேற்றம். தன்மையும் என்னும் உம்மை சிறப்பின்கண் வந்தது. இருமையென்றது ஈண்டெண்ணின்மேல் நின்றது. சத்தியிற் காணப்படுவனவற்றைச் சத்தியென்றுபசரித்தார். அற்றேல், தனது சத்தியிற் காணப்படுவது தனக்காமாறு யாங்ஙனமெனின், அதுவருஞ் செய்யுளிற் கூறப்படும்.

௬௭

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின்
தன்மையாய் நிற்கு மாபோல் சத்திதன் பேத மெல்லாம்
நின்மலன் தானாய்த் தோன்றி நிலைமையொன் றாயே நிற்பன்
முன்னருட் சத்தி தன்பால் முகிழ்க்குந்தான் முளையா னன்றே.

(உரை) பொன்மை நீலாதிகளைத் தன்னிறமே பற்றத் தானும் அத்தன்மைகள் அனைத்துமாய்த் தோன்றி வேற்றுமையின்றி நிற்கும் படிகம்போல, முதல்வனுந் தனது சத்தியிற் காணப்படும் அப்பேதமெல்லாந் தானாகத் தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன்; அவன்



யாண்டுஞ் சத்தியினிடமாகவே தோன்றுவானன்றித் தானாக வேறு தோன்றானாகலான்.

வன்னம் படிகநிறம். ஏகாரந் தேற்றம். தன்னென்றது இடைச்சொல். கிரியை தன்னாலாக்குவன் என்றாற்போல. ஆகவென வருவித்துரைக்க. இவை நான்கு செய்யுளானுஞ் சிவபேத வாதிகள் கூறுங் கடாவை ஆசங்கித்துப் பரிகரித்து மேலது சாதிக்கப்பட்டது. இம்முத்திறத்தொன்பது செய்யுளானுந் தான் முதலென்றதனை வலியுறுத்தியவாறு.

௬௮

சத்தியுஞ் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார். ௬௯

(உரை) இறைவன் இவ்வாறு சத்தியுஞ் சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே, பலவேறு வகைப்பட்ட உயிர்வடிவங்களனைத்துங் குறியானுங் குணத்தானும் ஆண்பெண்ணென அவ்வவியோனிக்குள் இருவேறு வகையாயடங்கித் தம்முட் கூடிக் களித்து வாழாநின்றனவாகலான், இப்படியே ஈண்டுக் கூறிப்போந்த வாழ்வுகளெல்லாஞ் சிவசத்தி மணந்ததனாலாகிய வாழ்வென்பதறியப்படும். அச்செலாம் இலிங்காங்க பகாங்கமாம்படி சிவமுஞ் சத்தியுங் கொண்டருளிய பீடலிங்கவடிவமே அங்ஙனம் இருவேறு வகைப்பட வைத்ததனைக் கண்கூடாக அறியச்செய்தல் சான்று.

ஒத்தொவ்வாமையாவது, அவ்வப் பிறப்புக்கியைய வடிவங்களெல்லாம் ஒத்துங் குறிகுணங்கள் ஒவ்வாது இருவேறு வகைப்படுதல் ஆண்பெண்ணென்பன குறியுணர நின்றன. உணர்குண குணியுமாகியென்பது, அவ்வக்குறிகட்கேற்ப உணரப்படும் இருவேறுவகைக் குணங்களையுடைய குணியுமாகியென்பதாம். இருவேறுவகைக் குணமுடையனவாதலாவது, ஆணெனப்பட்டன எல்லாம் ஆண்மைக் குணமும், பெண்ணெனப்பட்டன எல்லாம் அமைதிக் குணமும் உடையனவாதல். ஈண்டுக் குணியென்றது வாளாபெயராய் நின்றது, கரிகரம் பணிபணம் என்றாற்போல. ஈண்டுக் கூறிப்போந்த வாழ்க்கையாவன, உலகமெல்லாம் அவயவப்பகுப்புடையனவாதலும், முத்தொழிலுடை

யனவாதலும், கருத்தாவையுடையனவாதலும், சங்காரக் கடவுளினின் றுந் தோன்றுவனவாதலும், அவனையே முதற்கடவுளாக வுடையன வாதலும் என்னுமிவை. இதனானே, தான்முதலாதலைக் கண்கூடாக விளக்குமுகத்தான் முதல்வனுக்குரிய பொது வியல்பனைத்துந் தொகுத்துக் கூறப்பட்டன. கூக

சிவன் அரு உருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்க ளொன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுத லியோக போகம் தரிப்பவ னல்லன் தானே
இவைபெற இயைந்து மொன்றும் இயைந்திடா இயல்பினானே.

(உரை) ஈண்டுக் கூறிப்போந்தவை யனைத்தும் முதல்வனுக்குத் தடத்தலக்கணமாதலின், சொரூபலக்கணமெனப்படுந் தன்னுண்மை இவற்றின் வேறாம்; அஃது உண்மையதிகாரத்திற் பெறப்படும்.

இதனானே முதல்வனுக்குரிய சிறப்பியல்பு தொகுத்துக் கூறப் பட்டது. எ௦

---

# இரண்டாஞ் சூத்திரம்

முதற் சூத்திரத்தின் ஈறுமாகி மருவிடு மென்றதன்கட்படும் அவாய் நிலையை நிரப்புதற்குப் புனருற்பவமாமாறுணர்த்து முகத் தானே ஆண்டுலகிற்கு நிமித்தகாரணனாகிய பதியுண்மைக்கு அளவை கூறிய ஆசிரியர், காரணமாதற் பொதுமையான் இயைபுடைய எனைத் துணைக்காரண முதற்காரணங்களதுண்மைக்கு அளவையும் அவற்றாற் காரியப்படுமாறும், இரண்டாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமல னாகி நின்றனன் நீங்கா தெங்கும். கூக

(உரை) மேற் கூறிப்போந்த சிவன், புனருற்பவஞ் செய்யுங்கால் உயிர்களிடத்து உடலுயிர் கண்ணருக்கன் அறிவொளிபோற் பிறிவரு மத்துவிதமாய் அவ்வவுயிர்களின்வழி நிற்பதாகிய சத்திரூபமாகியும், தனதாணையான் வரும் இருவினைக்கேற்ப அவ்வுயிர்கள் ஐந்தொழிலிற்



யட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழில் நடாத்துவதாகிய பதிரூபமா கியும், அத்தன்மைகளின் வேறாய் அவற்றோடுந் தாதான்மியமாய், எவ்விடத்துந்தானே சொயம்பிரகாசரூபமாம் இயல்புடையனாய் நிற்பன்.

அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன், ஒன்றினுந் தோய்வின் றித் தானே சொயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையிற் சிவமென வும், உலகெலாமாகிவேறாயுடனுமாய் இவ்வாறுயிர்களின்வழி நிற்குந் தன்மையிற் சத்தியெனவும், தாதான்மியத்தான் இருதிறப்பட்டு, பின் ஐந்தொழில் செய்யுந்தன்மையிற் பதியெனப் பெயர்பெற்று நிற்ப னென்னுஞ் சிவாகமநூற் றுணிபுணர்த்துவார், இவ்வாறு பகுத்தோ தினார். ஈண்டுலகமென்றது உயிர்களை. ஒளியென்றது சத்தியை. தலைவ னெனினும் பதியெனினும் ஒக்கும். நீங்காமை தாதான்மியம். இச் செய்யுள் முதனூல் இரண்டாஞ் சூத்திரம்போல நாற்கூற்ற தாமாறு கண்டு கொள்க. க

ஒன்றென மறைக ளெல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னின்
அன்றவை பதிதான் ஒன்றென் றறையும்அக் கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே.

(உரை) வேதத்துள் ஆன்மா ஏகனேயென்பதற்குப் பரமான்மா ஒருவனேயென்பது தாற்பரியமாகலான் அதுபற்றி முரணுத லின்மையான், மேலைச் செய்யுளின் வேறாயென்றதூஉம், ஒன்றா கிய அகரம் பலவெழுத்துக்களின் விரவிநிற்றல் காணப்படுதலின், ஒருவனாகிய பரமான்மாப் பலவுயிர்களின் விரவிநிற்றல் யாங்ஙனமென் னும் ஆசங்கைக்கு இடமின்மையான், உடனுமாயென்றதூஉம், அமை வுடையன. உ

உம்மை சிறப்பின்கண் வந்தது.

உருவொடு கருவி யெல்லாம் உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்
தருமுயி ரவனை யாகா உயிரவை தானு மாகான்
வருபவ னிவைதா னாயும் வேறுமாய் மன்னி நின்றே. கூ௩

(உரை) முதல்வன் அங்ஙனம் வேறாகியும் உலகெலாமாகி நிற்றல் அமைவுடைத்தென்பது உடம்பின்கண்ணதாகிய உயிரியல்பின் வைத்துக் கண்டுகொள்க.

ஐ சாரியை. அவை பகுதிப்பொருள் விகுதி. நின்று வருபவனென இயையும். இவையிரண்டு செய்யுளானும், பேதவாதம் பேதாபேதவாதம் அபேதவாதமாகிய முக்கூற்று மதங்களையும் பரிகரித்து, உலகெலாமாகி வேறாய் உடனுமாய் என்ற முதற்கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது. இன்னும் இதன்கட்படுங் கடாவிடைகளெல்லாம் முன்னர் விரித்துக் கூறப்படுமென்பதுபற்றி ஈண்டு விரித்திலர். இனி ஒளியாயோங்குதற்கட்படுங் கடாவிடைகளை மேலைச்சூத்திரத்துள் இயைபுபற்றிக் கூறிப் போந்தமையின் ஈண்டுத் தெரித்திலர். அஃதங்ஙனமாக, முதனூற்பொருளை முதனூலிற் கிடந்தவாறன்றித் தொகுத்தல் முதலிய நால்வகையாப்பினுள் ஒன்றுபற்றிச் செய்தலன்றே வழிநூலாவது; அவ்வாறன்றி, அன்றவை பதிதாமென்றென்றறையும் எனவும், உருவொடு கருவியெல்லாமெனவும், பிறாண்டுஞ் சிலவற்றை முதனூலிற் கிடந்தவாறே கூறுதல் வழிநூற்கு மரபன்று போலுமெனின், *“முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் - பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கு—முன்னோரின் - வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்குங் - கூறு பழஞ் சூத்திரத்தின் கோள்” என்பவாகலின், அப்பயன்பற்றி ஒரோவழி யங்ஙனங் கூறுதலும் வழிநூற்கு மரபாமென விடுக்க. இதனானே கூறியது கூறலென்னும் வழூவின்மையுங் கண்டுகொள்க. இனி நாற்பத்தேழு செய்யுளான் அலகிலாவுயிர்கள் கன்மத்தாணையினமர்ந்து செல்லவென்ற இரண்டாங்கூற்றை அவ்வவர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்துகின்றார்.

௫

இருவினை இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து
வருவது போவ தாகும் பன்னிய வினைப்பலன்கள்
தருமரன் தரணி யோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்ம பலன்களும் மறுமைக் கண்ணே.

(உரை) மேற் கூறிப்போந்தவுயிர், முற்பிறவியிற் செய்யப்பட்டுக் கிடந்த இருவினைக்கீடாக இப்பிறவியின் வரும் இன்பத்துன்ப

---

* நன்னூல் - பொதுப்பாயிரம் - ௯.



நுகர்ச்சியான் மேலும் வினையேறுதலின் அதனான் மீளமீளப் பிறந்திறத்தலும் துறக்க நிரயங்களிற் சென்று மீடலும் உடைத்தாகலான், உடம்போடு நிலைபெறும் அவ்வினைப்பயன்களை மருத்துவனும் வேந்தனும்போல முதல்வனே அவ்வுயிர்க்குத் தனதாணையாற் கூட்டுவன். அவ்வாறன்றிச் சடமாகிய அவைதாமே மறுமைக்கண் வந்து கூடமாட்டா.

தரணமென்னும் வடமொழி, கடத்தலென்னும் பொருட்டாகலான், நோயைக் கடப்பித்தலின் மருத்துவனுக்குத் தரணியெனக் காரணக் குறியாயிற்றென்பது; அற்றாகலினன்றே மருத்துவன் உரைத்த நூலினை முன்னர் வகுத்துக் கூறுவாராயினரென்பது. இதனானே முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்றலானாய பயன் இதுவென்ப துணர்த்து முகத்தான் இரண்டாங் கூற்றின்கட் படுமியல்பெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டது.

௬

இருவினை யென்னை இன்பத் துன்பங்கள் இயல்ப தென்னின்
ஒருதன்மை இயல்புக் குள்ள தொருவனுக் கிரண்டு செய்தி
வருவதென் மலருந் தீயும் மருவலின் வாசம் வெம்மை
தருவதென் நீரென் செய்து தானியல் பாகு மன்றே. ௭

தன்னியல் பொழியப் பூவும் தழலும்வந் தணைய நீரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினையி னானும்
உன்னிய இன்பத் துன்பம் உறும்உயி ருணர்வி லாத
துன்னிய அசித்தை இன்பத் துன்பங்கள் சூழ்ந்தி டாவே.

(உரை) ஒரு பொருட்குத் தம்முள் மாறுபட்ட இரண்டு தன்மை காரணத்தானன்றி உளவாகாமையானும், தண்ணீருக்கு வாசமும் வெப்பமுஞ் செயற்கையான் உளவாயின ஆகலின் அதுவே ஈண்டைக்கு உவமையாய் முடிதலானும், இன்ப துன்ப நுகர்ச்சி சித்தன்றிச் சடத்துக்குக் கூடாமையானும், அவ்வின்பதுன்பம் இரண்டற்குங் காரணம் வேண்டப்படுமாகலான், இருவினை எனப்படுஞ் சஞ்சிதமே ஈண்டைக்குக் காரணம்.

என்னையென்னும் வினா இன்மை குறித்து நின்றது. அதுவென்னும் பகுதிப்பொருள்விகுதி அப்பண்பின்மேல் நின்றது.

தன்னியல்பு தட்பம். உணர்விலாத அசித்தென்றது *"அடியளந் தான்றாயது" என்றாற்போலக் கொள்க. ௫—௬

இம்மையின் முயிற்சி யாலே இருநிதி ஈட்டி இன்பம்
இம்மையே நுகர்வர் செய்தி இலாதவர் பொருளு மின்றி
இம்மையே இடரு ழப்பர் வேறிரு வினைய துண்டேல்
இம்மையின் முயற்சி யின்றி எய்திட வேண்டும் இங்கே. ௯௭

இருவினைச் செயல்காண் இம்மை இரும்பொரு ளின்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரும் மடியு மின்றித்
தருவினை யதனில் அத்தந் தானறும் துயருந் தங்கும்
ஒருவினை செய்யா தோரும் உடையர்இவ் வுலகத் துள்ளே.

(உரை) அற்றேல் அக்காரணமாவது முயற்சியேயாம் என்பது உடம்பாட்டினும் எதிர்மறையினும் வைத்துக் கண்கூடாக அறியக் கிடத்தலின், அதுவே அமையும், வேறுமோர் காரணங் கோடல் மிகையாமென்றது பொருந்தாது. அஃதொரோவழிப் பிறழ்தலும் அவ்விருதிறத்தினும் வைத்தறியக்கிடத்தலின், நியதகாரணம்வேறுண் டென்பது பெறப்படுதலால், அதுவே ஆண்டைக்குப் புலனாகாத சஞ்சிதவினையென்று அறியப்படும்.

ஒருவினை செய்யாதோரும் உடையாதல் கிழியீடு நேர்பட்டப் பெற்றார் முதலாயினார்மாட்டுக் காணப்படும். ஈண்டுடையரென்றது செல்வரை; அஃது †"உடையார்முன் இல்லார்போல்" என்பதனானு மறிக. இவை நான்கு செய்யுளானும் உலோகாயதர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்துச் சஞ்சிதமெனப்படும் இருவினை உண்மை காரிய ஏதுவின் வைத்துச் சாதிக்கப்பட்டது. அற்றேல், இருவினையே அமையுமாகலின் ‡"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை— இன்மை புகுத்திவிடும்" என்பதுபற்றிச் செல்லும் மனவெழுச்சிக் குப் பயனில்லைபோலும் எனின், அது முன்னர்க் கூறப்படும். ௭—௮

பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறுமுன் கருவுட் பட்ட தவ்விதி அனுப வத்தால்

* திருக்குறள் - மடியின்மை - ௪௦.

† திருக்குறள் - கல்வி. ௫. ‡ ஷை ஆள்வினையுடைமை - ௯.



ஏறிடும் முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ இனிச்செய் கன்மம் மேலுடற் சேரு மென்றே. ௯௯

(உரை) எடுத்ததோர் உடம்பின் வரக்கடவனவாகிய இன்ப துன்பங்கட்கு ஏதுவாகிய செல்வ வறுமைகளும் அவற்றான் வரும் உயர்விழிவுகளும் அவற்றானாய இன்ப துன்பங்களு மாகியவாறும், முன்னேதானே சூக்குமமாய்க் கருவினுள் அமைந்து கிடந்தனவன்றி அப்போதப்போது உளவாவனவல்ல; அவை பின்னர்த் தூலமாய் வந்து கூடுதல் அவற்றை அனுபவித்தற்குத் துணையாகிய முயற்சி யானும்; அங்ஙனம் அனுபவித்தற்குத் துணையாக எழுந்த முயற்சியும் அவ்வளவின் ஒழியாது மற்றோர் உடம்பிற்படும் அவ்வறுவகைக்கும் வித்தாய் நிலைபெறும்; முற்பிறவியில் நிகழ்ந்த முயற்சி இப்பிறவி யின் வருமவ்வாறற்கும் ஏதுவாயினாற்போலும் அத்தனையே முயற்சியா னாகக் கடவது பிறிதில்லை.

பிணியென்றது ஈண்டுத் துன்பமாத்திரையே உணர்த்தி நின்றது. *"நோயும் இன்பமும்" என்றார் தொல்காப்பியனாரும். ஈண்டு மூப்பென்றது உயர்ச்சியின் மேற்று; அது "விண்ணோர்க்கெல்லா மூப்பாய்" என்பதனானும் மூத்த திருப்பதிகம் என்பதனானும் உணர்க. சாக்காடு போறலின் இழிவைச் சாக்காடென்று உபசரித் தார். ஏனை மூப்புச் சாக்காடுகள், பேறிழ இன்பம்: பிணிபோலத்தம்முள் மறுதலையாகாமையானும், அவற்றின் மறுதலைப் பொருள்களை உடன் கூறாமையானும், இவற்றுள் அடங்குதலின் வேறு கூறவேண்டாமை யானும், காலம்பற்றி ஒருதலையான் வரும் மூப்பின்கண் ஐயமறுத்தல் வேண்டாமையானும், அவற்றை உடன்வைத்தெண்ணி உரைசெய்தல் பொருந்தாமை அறிக. ஒடு எண்ணின்கண் வந்தது. சூக்கும அவத்தை யிற் பாகுபாடின்மை பற்றிப் பட்டதென்று ஒருமைப்பாலாற் கூறினார். கூறவே ஏறிடுமென்பது தூலமாய் விளங்கும் என்பதா யிற்று. இது சற்காரியவாதம். அனுபவமெனக் காரணத்தைக் காரிய மாக உபசரித்தார். முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற்கேது என்றது எடுத்துக்காட்டுவமை. ஈண்டுக் கன்மமென்றது முயற்சியை. மேலே வினையென்றதுமது. ௧

* தொல்காப்பியம் - பொருள் - பொருளியல் ௨.

உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினைஇந்த உடல்வி ளைக்கும்
தொடர்ச்சியால் ஒன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதி வித்தின்
இடத்தினின் மரம்ம ரத்தின் வித்தும்வந் திடையு மாபோல்.

(உரை) அங்ஙனம் உடலும் வினையும், வித்தும் மரமும்போலத் தம்முட் காரணகாரியமாய்த் தொன்றுதொட்டுப் பிரவாகாநாதியாய் வருதலின், அவற்றிற்குத் தம்முள் முற்பிற்பாடு முடியாது.

அற்றேல், வரம்பின்றியோடி அநவத்தையாம்போலுமென மலையற்க. அவ்விரண்டற்கும் மூலமாகிய சூக்குமஉடம்பு வேறுண்மையின்.

முற்செயல் விதியை இந்த முயற்சியோ டனுப வித்தான்
இச்செயல் பலிக்கு மாறென் இதமகி தங்கள் முன்னர்
அச்செய லானால் இங்கும் அவைசெயின் மேலைக் காகும்
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் தொடருஞ் செய்தி. ௧௦௧

(உரை) அற்றேல் இத்துணையுங் கூறியவாற்றான் முன்பு செய்த கன்மம் இங்கிவற்றிற்கு ஏதுவென்பதூஉம் அவற்றை யனுபவித்தற்குத் துணையாதன் மாத்திரையே முயற்சியென்பதூஉம் ஒக்குமாயினும், அவ்வாறு வினைப்பயனுக்கீடாக வருகின்ற முயற்சி மேலுடற் சேருதற்குரிய வினையாமாறு யாங்ஙனமெனின்,—நன்று சொன்னாய்; முன்வினையெனப்படும் இதமகிதமாவன முற்பிறவியின் அவ்வாறு நிகழும் முயற்சியேயன்றி வேறின்மையான் அதனை யுடம்பட்டாய்க்கு அந்நயம்பற்றி இங்கும்அம்முயற்சி நிகழ்ந்தால் அது மேலைக்கு வினையாமென்பது தானே போதரும். அற்றேல் ஒரோவழி முயற்சியின்றி யிருப்பார்க்கு மேல் வரக்கடவதொன்று இல்லைபோலுமெனின்,—அற்றன்று; அனுபவமாவது முயற்சியை யொட்டியே நிகழ்வதொன்றாகலிற் பிராரத்தவினை யனுபவமுள்ளளவும் முயற்சியும் ஒருதலையா னுண்டென்பது பெறப்படுதலின், அனுபவமுள்வழி மேலைக்கு வரக்கடவதொன்றில்லை யென்றல் யாண்டையதென்றொழிக.

ஒருவினை செய்யாதோரும் உடையரொன்றதும் வருந்திச் செய்ய வேண்டாது எளிதிற் பெறுவது நோக்கியே பிறிதன்றென்பது கருத்து. மரங்கள் முதலியவற்றிற்குத் தண்ணீர் முதலியவற்றை



ஏற்றுக்கோடற்குரிய சூக்குமமுயற்சி யுண்டென்பது உணர்ந்து கொள்க. யாண்டும் பிறழாமை யுணர்த்துதற்கன்றே பிற்செயாதனுபவிப்பதின்று என எதிர்மறை முகத்தான் வரைசெய்து கூறினானென்பது. ஆனாலென்பது தெளிவின்கண் வந்தது; காண்பவன் சிவனேயானால் என்றாற்போல. அற்றேல், ஒன்றன்பொருட்டு வந்தது மற்றொன்றன் பொருட்டாதல் கண்டிலமாதலின், இதமகிதங்கள் முன்னர் அச்செயலாயவாறுதான் யாங்ஙனமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ்செய்யுள் எழுந்ததென்பது. ௧௧

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை உணவு மாகி
ஞாலத்து வருமா போல நாம்செயும் வினைக ளெல்லாம்
மேலத்தான் பலமாச் செய்யும் இதமகி தங்கட் கெல்லாம்
மூலத்த தாகி யென்றும் வந்திடும் முறைமை யோடே. ௧௦௨

(உரை) உலகத்தின் உணவின்பொருட்டு விளைந்த கனிமுதலாயின உணவுமாய் வித்துமாதல் கண்டாமன்றே; அதுபோல், நாமென்னு முனைப்பாற் செய்யப்படுவதாகிய முயற்சியுஞ் செயல்வகையான் வினைக்கீடாகவரும் அனுபவத்தைப் பயக்கும், கருத்துவகையான் இதமகிதமெனப்படும் ஆகாமிய வினையைப் பயக்கும்.

இவ்வியல்பு தொன்றுதொட்டு வீடுபெறுந்துணையும் இடையறவுபடாது தொடர்ச்சியாய் வருமென்பார், என்றுமென்றார். மூலத்ததென்னும்ஒருமை அத்தருமத்தின்மேல்நின்றது. இதமகிதங்களென்பது என வருகின்றதும் அது. *"ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்றாற்போல ஈண்டு ஒடு ஆனுயிற்று. இவை நான்கு செய்யுளானும், முயற்சிக்குப் பயன் இதுவென்பது உணர்த்துமுகத்தான், வருவாயின்மையின் வினையுண்மை பெறப்படாதென்னுமவர் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, வருவாயின் இயல்பு கூறி மேலது வலியுறுத்தப்பட்டது. அற்றேல், அம்முயற்சியினுளவாகிய இதாகிதங்களது இயல்பாமாறும் அவை பின்னர்ப் பயப்படுமாறும் யாங்ஙனமெனின், அது முன்னர்க் கூறப்படும். ௧௨

இதமகி தங்கள் என்ப திகல்மன வாக்குக் காயத்(து)
இதமுயிர்க் குறுதி செய்தல் அகிதமற் றதுசெய் யாமை

* தொல்காப்பியம் - சொல் - வேற்றுமையியல் - ௧௨.

இதமகி தங்க ளெல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டிங்(கு)
இதமகி தத்தால் இன்பத் துன்பங்கள் ஈவ னன்றே. ௧௦௩

(உரை) உயிர்க்குறுதியென வேதாகமங்களின் விதித்தவற்றைச் செய்தலே இதம்; அவற்றது மறுதலையைச் செய்தலே அகிதமாக லான், அவ்விரண்டனையும் அறியவல்ல முதல்வனே அவற்றைக் கைக்கொண்டு பயனளிப்பன். ௧௩

இறைவனிங் கேற்ப தென்னை இதமகி தங்க ளென்னின்
இறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தின் நிலைமை யாகும்
அறமலி இதஞ்செய் வோருக் கனுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன். ௧௦௪

(உரை) முதல்வன் அவற்றையேற்றுக் கோடற்குக் காரணம் உயிர்கள் வீடுபேறெய்தற் பொருட்டு வைத்தகருணையேயாம். கருணை யாயினும் காரணம் இருவேறு வகைப்பட நிகழ்தமையிற் பயனும் இருவேறு வகைப்படச் செய்வன். ௧௪

நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வ(து)
அக்கிர மத்தால் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே ஈண்டறம் இயற்றி டென்பன்
எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே யென்றும். ௧௦௫

(உரை) அங்ஙனம் அகிதஞ்செய்தாரைக் கண்டித்தல் நல்வழிப் படுத்தற் பொருட்டேயாகலின் அதுவுங் கருணையாதற்கிழுக்கில்லை.

தான் அசை. உம்மை இறந்தது தழீஇயிற்று; சிறப்புமாம். திரோபவித்தல் சங்கரித்தலுட்பட்ட செயல்களும் அருளேயென்பார், எக்கிரமத்தினாலும் இறைசெயல் அருளேயென்றார். ஏகாரந்தேற்றம்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொ லாற்றின்
வந்திடா விடின்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும். ௧௦௬

(உரை) இன்னோன்னவை செயல்வகையான் வெகுளிபோலத் தோன்றினும் கருத்துவகையான் அருளேயாதல் கடைக்காலறியப் படும்.



நீர்முறைமை உவமைத்தொகை; நீர்மை இயல்பு. இவைநான்கு செய்யுளானும் மீமாஞ்சகர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, மன்னிய வினைப்பயன்கள் தருமரனென்றது பொருந்துமாறும் அது பற்றி அவனுக்கு இழுக்கின்மையுங் கூறப்பட்டன. ௧௬

செயல்களே பலத்தைச் செய்யும் தெய்வம்வேண் டாஇங் கென்னின்
முயலுமிச் செயல்க ளிங்கே முழுவதும் அழியு மெங்கே
பயனளிப் பனவ ழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே
வயலிடும் தழையும் தின்னும் மருந்தும்பின் பலிக்கு மாபோல்.

செய்க்கிடுந் தழையும் தின்னுந் திரவிய மதுவும் போல [ன்
உய்த்திடுஞ் செய்தி கெட்டே உறுவிக்கும் பலத்தை யென்னி
வைத்திடுஞ் சோறும் பாக்கும் அருந்தினர் வயிற்றின் மாய்ந்தால்
மெய்த்திடும் பலம்உனக்கு மலமலான் வேறு முண்டோ.

(உரை) அற்றாயினும், வினைகளே தம்பயனைத் தோற்றுவிக்க வல்லுமாகலின் ஆண்டைக்கு முதல்வன் மிகையாம்போலுமென்றல் பொருந்தாது; செய்தவினை செய்தபொழுதே கெட்டொழிவதாக லிற் பின்னின்று பயன்தருதல் செல்லாமையானும், கெட்டுப் பயன் தருதலே உலகத்துப் பொருள்களிற் கண்டாமெனில் கெட்டவை பயன்தருமென்பது சிலவற்றினன்றி யாண்டுஞ் செல்லாமையானும்.

செய்க்கிடுந் தழையுந்தின்னுந் திரவியமதுவும்போல வுய்த்திடுஞ் செய்திகெட்டே யுறுவிக்கும் பலத்தையென்றது, அனுவாதஞ்செய்து கொண்டது. மெய்த்திடும் பலம் மெய்யின்கண்ணதாய் வரும் பலம். அற்றேல், கெட்டுப்பயன்தருதல் சிலவற்றினயினுங் காணப்படுதலின் வினையும் அவ்வாறு கெட்டுப் பயன்தருமென்பது அமைவுடைத் தென்பாரை நோக்கி அதனை மறுத்தற்கெழுந்தது வருஞ் செய்யு ளென்பது. ௧௭—௧௮

திரவியம் உவமை யன்று செய்திக்கண் திரவி யங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரும் இம்மை அம்மை
பாவிநீ பார்நீ ரங்கி பாத்திரத் திட்ட வெல்லாம்
கரவிடு மிங்கே எங்கே பலன்கொளக் கருதி னாயே. ௧௦௭

(உரை) ஈண்டெடுத்துக் காட்டிய தழை முதலிய பொருள் களுந் தாங்கிடந்தவிடத்தே கெட்டு ஆண்டே பயன் தருவனவாம்;

வினை யவ்வாறன்றி இவ்வுடம்பிற் செய்வதீண்டே கெட்டு மற்றோருடம்பிற் பயன்தருமாகலின், அவையிரண்டுந் தம்முளொவ்வாமையானும், அற்றேற் சேர்ந்தவிடத்திற் பயன் தாராது கேடுமாத்திரமுடைய பொருள்களும் பல உளவாகலின், அவை மற்றோரிடத்துப் பலிக்குமெனக் கொண்டு அவற்றோடு உவமிக்க அமையுமெனின், ஓரிடத்திற் கெட்ட பொருள் மற்றோரிடத்திற் பலித்தலில்லை என்பது தீயொழுகக் காய்ந்த கலத்தில் வாக்கிய நீர் முதலியவற்றிற் காணப்படுதலானும், வேறிடத்துப் பயனுதற்குரிய வினைதானே பயனாய் வருமென்றல் கூடாது.

செய்திக்கென்பது செய்திக்கண்ணென உருபு மயக்கம். பரவிப் பார்த்தல் புடைபடவொற்றி ஆராய்தல். அற்றேல், இம்மை யம்மையாதல்பற்றி வேறிடமென வேண்டாம் இருமையினும் வினை செய்தாரின் வேற்றுமை இன்மையிற் செய்தார்வினை செய்தவர் அறிவின் கண்ணே அடங்கிச் செய்க்கிடுந் தழை முதலியனபோல ஆண்டே பயனைத் தோற்றுவிக்குமென அமையுமாகலின், திரவியம் உவமையன்றென மறுத்தல் பொருந்தாதென்பாரை நோக்கி, அதனைப் பரிகரித்தற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௧௯

சேய்தவர் மனத்தே எல்லாச் செய்தியும் கிடந்து பின்னர்
எய்தவே பலன்க ளீனும் என்றிடின் இருஞ் சுவர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த(து)
ஐயனே அழகி துன்சொல் இந்திர சால மாய்த்தே. ௧௧௦

(உரை) வினைக்குப் பயனுவன துறக்க நிரயநிலமென்னும் அவற்றுட்பட்ட பல வேறுவகைப் புவனபோகங்களாமன்றே அவையனைத்தும் வயலின் விளைவுபோல ஆன்மபோதத்தின்கட் கிடந்துளவாமென்றல் சொன்மாத்திரையே யன்றிப் பொருள்படாது.

ஐயனே என்பது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி. செய்தவர் மனத்தைக் கூறவே, இனம்பற்றி ஏற்போர் மனமுங் கொள்ளப்படும். அற்றாகலினன்றே மறுத்தற்கட் புந்தியிற் கிடந்து போந்ததெனப் பொது வகையான் எடுத்தோதி விடுத்ததூஉமென்க. ௨௦

தானஞ்செய் பொருள் தரித்தோர் செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் னுறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டும்



ஈனமில் செய்தி ஈச னிடும்பணி இவைநாம் செய்தால்
ஞானங்கள் அதிக நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர.

(உரை) அற்றேல், அவ்வச்செய்தி அவ்வச் செயப்படுபொருளிற் கிடந்து பின்னர்ப் பயன்தருமெனக் கோடுமெனின்,—செயப்படுபொருள் முதலிய அனைத்தும் நிலைபேறின்றிக் கெட்டொழிவனவேயாகலான், நிலைபேறுடையனாய்ப் பயன்தரும் முதற்கடவுள் வேறு வேண்டப்படும். அற்றேல், முதற்கடவுள் பயன்தருதற் கியைபென்னையெனின்,—முயற்சியாவது முன்னைவினை அனுபவித்தற்பொருட்டுத் தரப்படும் முதல்வனது ஏவல்வினையாகலான், அதனை நாமாக முனைத்துநின்று செய்தால் அது தீர்தற்பொருட்டு அச்செய்தியானுயபாவபுண்ணியங்களையறிந்து அவை தீர்தற்குரிய பயன்தருதல் அவ்வேவுவானுக்குக் கடப்பாடு.

தானஞ்செய்பொருளென்றது உபலக்கணம். அற்றேல் இச்செய்தி ஈசனிடும் பணியென்றற்குப் பிரமாணமென்னையெனின், அது காட்டுதற்கன்றே வருஞ்செய்யுள் எழுந்ததென்பது. ௨௧

உலகுடல் கரணங் காலம் உறுபலம் நியதி செய்தி
பலவிவை கொண்டுகன்மம் பண்ணுவ துண்பதானால் [ளா(து)
நிலவிடா திவைதாம் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்
அலகிலா அறிவ னாணை அணைத்திடும் அருளி னாலே. ௧௧௨

(உரை) வினைமுதற்காரகமாகியவுயிர், ஏனையேழு காரகங்களுந் தனக்குத் துணையாகக்கொண்டு வினைகளையீட்டலும் நுகர்தலும் உடைத்தென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், உயிரையின்றி யமைந்து தொழிற்படமாட்டாத சடமாகிய அக் காரகங்களாதல் அவற்றையின்றி யறியமாட்டாத சிற்றறிவுடைய அவ்வுயிராதல் தாமே கூடமாட்டாமையிற் பாரிசேட அளவையானே சுதந்திர அறிவனாகிய முதல்வனே தனதாணையாகிய திருவருளால் அவற்றை யவ்வுயிர்க்குப் பொருத்திச் செய்விப்பனென்பது பெறப்படுதலின், அச்செயலெல்லாம் அவன் பணியேயாம்.

ஆதலால் அச்செயலெல்லாம் அவன்பணியே யென்பது குறிப்பெச்சம். ஈண்டு உலகென்றது உயிர்களை. *"இன்னதற்காக இது பய

* தொல்காப்பியம் - சொல் - வேற்றுமை மயங்கியல் - ௨௧.

இங்குநாம் சிலர்க்குப் பூசை இயற்றினல் இவர்களோவங்(கு)
அங்குவான் தருவா ரன்றேல் அத்தெய்வ மத்த னைக்காண்
எங்கும்வாழ் தெய்வமெல்லாம் இறைவனணையினல் நிற்ப(து)
அங்குநாம் செய்யுஞ் செய்திக் காணவைப் பால ளிப்பன்.

(உரை) பசு பார்ப்பார் தந்தை தாய் முதலாயினரை இம்மைக் கண் வழிபட்டார்க்கு அஃதறிந்து மறுமைக்கட் பயன்தருங் கடவுள் வேறென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், ஈண்டுமவ்வாறு தல் அமையும். அற்றேல் தம்மை வழிபட்டார்க்கு அவ்வத்தேவரே எதிர்தோன்றி நின்று பயன்கொடுத்தாரெனவும் ஆண்டாண்டுக் கேட்கப்படுதலின் அவரும் அதற்கு வல்லுவர்போலுமென மலையற்க; அரசனணையே அமைச்சர் முதலாயினர்மாட்டு நின்று பிறர்க்களிக்கு மாறுபோல, முதல்வனே தன்னணையைத் தன்னேவல்வழி நிற்கும் அவ்வக்கடவுளர்மாட்டு வைத்துப் பயன்கொடுப்பன் ; அவ்வாறன்றித் தாமே வினைத்தொடக்கிற்பட்டுப் பாதந்திரராய் நிற்குமக்கடவுளர் பிறர்க்குப் பயன்கொடுக்குமாறு யாண்டையது.

அற்றேல் அவ்வக்கடவுளர்மாட்டுச் செய்யும் வழிபாடுஞ் சிவபிரானே ஏற்றுக்கொண்டு பயனளிப்பனுயிற் பசு புண்ணியமுஞ் சிவ புண்ணியமாவான் செல்லும்போலுமெனின்,—பசுபுண்ணியஞ் சிவ புண்ணியமெனப் பாகுபட்டது செய்வோர் கருத்துவகையானன்றிக் கொள்வோர் கருத்துவகையான் அன்ருகலாற் செல்லாதென விடுக்க. நிற்பதென்னுமொருமை அத்தொழின்மேல் நின்றது. இவை நான்கு செய்யுளானும், ஈசனிடும்பணி நாஞ்செய்தலான் நூனங்கள் அதிகமாமாறும், அவை நோக்கி நுகர்விக்குமாறும் பொதுவகையானுஞ் சிறப்பு வகையானுந் தெரித்துணர்த்தப்பட்டன. இனி அவை நூனங்கள் அதிகமாதற்கட்படும் விசேடங் கூறுகின்ருர். ௨௬

காண்பவன் சிவனே யானல் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம் அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

(உரை) இத்துணையுங் கூறியவாற்ருல் எனைக் கடவுளர் மாட்டுச் செய்யும் வழிபாடுகளையும் ஏற்றுக்கொண்டளிப்பவன் சிவபிரானென் பது பெறப்படவே, அவனை வழிபடுதலே நல்லதோரறம், அவனை யன்றிச் செய்வனவெல்லாம் வீணென்பது போதருதலானும், புண்ணியமாவது வேதாகமங்களின் அவ்விறைவனல் விதிக்கப்படும் விதியாகலானும், ஒன்றினும் விருப்பிலனுகியும் உயிர்கள்மாட்டுக் கருணை பூண்டு விருப்பஞ்செய்யும் அவ்விறைவன் திருவடிப் பூசனையே ஒருதலையாகச் செய்யற்பாற்று.



இல்லான் பூண்டனன் என்பன முற்றெச்சங்கள். சிறப்பும்மை விகாரத்தாற் ருெக்கது. அற்றேல், வாக்குமனதீத கோசரமாகிய இறைவன் திருமேனி கொண்டருளிய வழியுஞ் சுத்ததத்துவ புவனத்தினன்றி ஈண்டு வைகுதலின்மையின், அவனை யீண்டுள்ளார் எங்ஙனங் கண்டு பூசிக்குமாறெனின், அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௨௭

தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்
நீபரன் தன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை
யாய்பரம் பொருளை நாளும் அர்ச்சிநீ அன்பு செய்தே. ௧௧௮

(உரை) சதாசிவ தத்துவத்தின் வைகும் இறைவன், புறத்தே திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியுந் திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக்கொண்டுநின்றும் ஈண்டுள்ளார் செய்யும் பூசைகொண்டருளுவனுகலான், அஃதறிந்தவ் விடங்களின் வழிபடுக. ௨௮

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே. ௧௧௯

(உரை) அறம்பாவங்கள் பயன் தருவது கொள்வாரது வன்மை மென்மைபற்றியன்றிச் செய்வாரது வன்மை மென்மைபற்றியாதல் செய்வினைகளது வன்மை மென்மைபற்றியாதல் அன்றென்பதற்கு உடம்பாட்டினும் எதிர்மறையினுந் தக்கனுந் தண்டீச நாயனருமே சான்ருகலானும் சிவபிரானையே அர்ச்சிக்கற்பாற்று.

இவைமூன்று செய்யுளானும் நூனங்கள் அதிகநோக்கி நுகர்வித்தற்கட்படும் விசேடங் கூறப்பட்டது. இத்துணையும் மீமாஞ்சகர்

மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து இருவினைகளதியல்பு கூறுமுகத்தானும், அவை இறைபணியாமாறு கூறுமுகத்தானும், அவற்றை நாஞ்செய்யுமாறு கூறுமுகத்தானும், அவை பயன்படுமாறு கூறுமுகத்தானும்,தாமே மருவிடாவடிவுங் கன்ம பலன்களும் மறுமைக்கண்ணே என்றதனை வலியுறுத்தியவாறு. இனித் தரணியொடு தராபதிபோலென்ற உவமைப்பொருளைத் தெரித்துணர்த்துகின்றார். ௨௧

மறைகளீ சன்சொல் அச்சொல் வழிவாரா உயிரை
வைக்கும், சிறைகள்மா நிரயம் இட்ட பணிசெய்வோர் செல்
வத் தோடும், உறையும்மா பதிகள் உம்ப ருலகங்கள் யோனிக்
கெல்லாம், இறைவனா ணையினால் இன்பத் துன்பங்கள் இயை
வதாகும். ௧௨௦

(உரை) மேற்கூறியவாற்றான் இருவினை முதலாயின அழிவெய்தவனவாகலானும்,இதமகிதங்களெல்லாஞ் சிவபிரானே ஏற்றுக்கொடாவன்றியும், அவனே இன்பத் துன்பங்கள் ஈவனென்பது போந்தது. அது ழியே. நரகமாவது அம்மொழிவழி நடவாதாரைத் தண்டித்தற்பொருட்டு அவனால் அமைக்கப்பட்ட சிறைக்களமே. துறக்கவுலகமாவது அம்மொழிவழி நடப்போரை வாழ்வித்தற்பொருட்டு அவனால் அமைக்கப்பட்ட கோனகரமேயாகலானும், உயிர்கட்கு இன்பத்துன்பங்கள் அவனாலாகற் பாலனவே.

இயைவதென்னும் ஒருமை அத்தொழின்மேல் நின்றது. ௩௦

ஆணையால் அவனி மன்னன் அருமறை முறைசெய் யாரை
ஆணையில் தண்டஞ் செய்தும் அருஞ்சிறை யிட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும் ஆணையே ஆணை யேகாண்.

(உரை) உலகத்து வேந்தர் ஆணையாற் கிளந்த தமது மொழிவழி நடவாதாரை ஒறுத்துச் சிறைக்களப்படவும் வைப்பர்; அம்மொழிவழி நடப்போரை வாழ்வித்துத் தங்கீழ் அதிகாரமுஞ் செய்யவைப்பர். அமைச்சர் முதலாயினார்மாட்டு அவ்வாறு காணப்படுமாணையும் அவ்வேந்தர் தாணையேயாம். அதுபோல முதல்வன்மாட்டுங் கண்டுகொள்க.



ஈண்டு மறையென்றது, மொழிமாத்திரையையுணர்த்தி நின்றது ஏகாரம் முன்னையது தேற்றம்; பின்னையது அசைநிலை. இஃது ஒட்டென்னும் அலங்காரம். அற்றேல், அரசனாணை வேறுள்வழி இறைவனாணையே யாண்டுமென்றல் செல்லாதென்பாரை நோக்கி அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யு ளென்பது. ௩௧

அரசனும் செய்வ தீசன் அருள்வழி அரும்பா வங்கள்
தரையுளோர் செய்யில் தீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமும் சேரார் அந்த நிரயமுன் னீர்மை ஈதாம். ௧௨௨

(உரை) அரசதண்டம் வைத்தது, நரகதண்டம் வாராமற் பாதுகாத்தற்பொருட்டாகலானும், நரகதண்டத்தை அறிவுறுத்தற்பொருட்டாகலானும், அவ்வரசனாணையும் முதல்வனாணையின் வழித்தாவதன்றிச் சுதந்திரமன்று.

பாவஞ்செய்யிற் றண்டலின் வைத்துத் தண்டத்துரைசெய்து தீர்ப்பன் நிரயமுன்னீர்மை யீதாமெனவே, புண்ணியஞ் செய்யின் அதற்குரியவரிசையின் வைத்துத்தீர்ப்பன்,அந்தத் துறக்கமுன்னீர்மை யீதாமென்பதூஉம் பெற்றாம். நிரயமும் என்னும் உம்மை சிறப்பு. தண்டத்துரை செய்தலாவது மேலும் பாவஞ்செய்யின், இத்துணையின்றி இன்னுங் கொடிதாகச் செய்வலென அத்தண்டத்தையெடுத்துச் சொல்லி அச்சுறுத்தல். சாரியையுள்வழித் தன்னுருபு நிலையாது வருதல் இலேசாற்கொள்க. மோனையெழுத்துக்கேற்பத் தண்டமாகிய துரையைச் செய்தெனினும் அமையும். துரை மிகுதிப்பாடு; அது *"என்னுடைய துரைமாண்டவாபாடி" என்பதனானுமறிக. முன்னீர்மை ஏதுப்பெயரோடு முடிந்த வினைத்தொகை. நீர்மையுடையதனை நீர்மையென்றுபசரித்தார். இவை மூன்று செய்யுளானுந் தராபதிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது. அற்றேல், பாவமாத்திரையேயன்றிப் புண்ணியத்தையுந் தீர்த்தலெற்றுக்கெனின், அது முன்னர்க் கூறப்படும். ௩௨

அருளினால் உரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்

* திருவாசகம் - திருத்தோணோக்கம் - ௧௪

பொருளெலாஞ் சுவர்க்க மாகி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளிலா மலங்கள் தீர்க்கும் மருந்திவை வயித்திய நாதன்.

(உரை) வேதாகமநூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழி நில்லாமை புண்ணியம். இரண்டும் உயிர்க்கு நோயாகலான் அவற்றாற் பந்தமுறாமைப்பொருட்டுச் சிவபிரானாகிய வைத்தியன் இன்பத்துன்பங்களாகிய மருந்தை நுகர்விப்பன்.

இஃது ஏகதேச உருவகம்.

௫௫

மருத்துவன் உரைத்த நூலின் வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிகள் தப்பில் தப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்துசெய்யா துயம்பிணி சென்றுந் தீர்ப்பன்
உரைத்தநூற் சிவனுமின்னே உறுக்கண்ம ரூட்டித் தீர்ப்பன்.

(உரை) வாகடநூல்வழி யொழுகாது தப்பியவழியொழுக அங்ஙனமான்மிகத்தானும் பௌதிகத்தானும் வரும் பிணிகளை அதற்குத் தக்க மருந்துகளைத் திருத்தியும், தப்பியவழி யொழுகாதிருப்பவுந் தைவிகத்தான் வரும் பிணிகளை அவற்றிற்குத் தக்க உபாயங்களிலே செலுத்தியும், தீர்த்திடுவன் மருத்துவன். இவ்வாறே, சிவபிரானும் உயிர்கட்கு வரும் இருவினையைப் பலதிறத்தானு மூட்டித் தீர்ப்பன்.

மேலுருவகஞ் செய்ததனைத் தெரித்துணர்த்தியவாறு. தப்பிய வழியுமென்றவும்மை இழிவுசிறப்பின்கண் வந்தது. திருத்தினனென்பது முற்றெச்சம். நன்மருந்தென்பதூஉம் பாடம். சென்றும் உம்மை இறந்தது தழீஇயிற்று. சென்றுமென்புழி விவ்விகுதி விகாரத்தாற் றொக்கது; *"குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்றாற்போல. அவற்றிற்குத் தக்கவுபாயங்களிலேயென்பது அவாய்நிலையான் வந்தது. அவ்வுபாயங்களாவன தானம் பூசை யோகமுதலாயின. செய்யாதென்னும் எதிர்மறை செயவெனச்சத்திரிபு. அற்றாயினும், துன்பநுகர்ச்சியேயன்றி இன்பநுகர்ச்சியும் மருந்தோடொக்குமாறு யாங்ஙனமென்பாரைநோக்கி அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

மண்ணுளே சிலவி யாதி மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாம்

* திருக்குறள் - வெஃகாமை - க.



கண்ணிய கட்டி பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம் அருத்தியே வினைய றுப்பன்.

(உரை) அவ்வந்நோய்கட்கேற்ப மருத்துவன் செய்யும் இருவேறுவகையும் மருந்தாதல் உலகத்துக் காணப்படுதலின், அவ்வாறே முதல்வன் நுகர்விக்கும் இன்பத்துன்பம் இரண்டும் மருந்தாதல் உணர்ந்து கொள்க.

இவை மூன்று செய்யுளானுந் தரணிபோலத் தருமாறு தெரித்துக் கூறப்பட்டது. இனி, அண்ணல் அருத்தும் அவ்வின்பத் துன்பங்களை உயிரருந்து முறைமை எவ்வாறென்பார்க்கு இன்பத்துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு கூறுகின்றார். ௫௬

பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபந் தானே
யாதனா சரீர மாகி இன்பத்துன் பங்க ளெல்லாம்
நாதனார் ஆணை யுய்க்க நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவா யோனி சேர்ந்திடும் சீவ னெல்லாம். ௧௨௬

(உரை) இத்தூலவுடம்பு கழிந்தவழித் தானும் உடன்கழிதலின்றி நிலை பெற்றுள்ளதாகிய சூக்குமவுடம்பினின்றும் அவ்வினைப்பயன்களை அனுபவித்தற்குரிய வெவ்வேறு உடம்புகளுளவாதலான், உயிர்களவ்வுடம்போடு நாதனாராணை செலுத்தச் சென்று துறக்கநிரயத்தின்பத்துன்பங்களை நுகர்ந்து பின்பு அவ்வினைச்சேடம் அனுபவித்தற்பொருட்டுச் சூக்குமவுடம்போடு நிலத்திற்சென்று கருப்பாசயத்தைத் தலைப்படும்.

ஆகியென்பது காரியகாரணப் பொருள்பற்றி வருஞ் செயவெனெச்சத்திரிபு. பொன்விலங்கு போறலின் துறக்கவுடம்பையும் யாதனாசரீரமென்றார். நிலவுலகத்து வரும்போது அணுவாயோனி சேர்ந்திடுமெனவே, துறக்கநிரயங்களிற் செல்லும்போதும் யாதனாசரீரத்தைப் பற்றியே செல்லுமென்பது பெற்றாம். இங்ஙனம் பூதனாசரீரம் போனவழி யாதனாசரீரத்தைப் பற்றுதற்கும் யாதனாசரீரம் போனவழிப் பூதனாசரீரத்தைப் பற்றுதற்கும் காலம் இடையீடில்லையோவுமெனின், அஃதுணர்த்துதற்கன்றே வருஞ் செய்யுள் எழுந்ததென்பது. ௫௭

உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கு மொன்றிற்
படர்வுறா தறும்பா வத்தாற் பாடாணம் போற்கி டந்து
கடனதாம் காலஞ் சென்றாற் கடுநர கதனில் வீழ்ந்தங்(கு)
இடருறும் உருவங் கன்மத் தளவினில் எடுக்கு மன்றே. ௧௨௭

(உரை) அவ்வவ்வினைகளது வன்மை மென்மைகட்கேற்பப் பூதனுசரீரம் போயவாறே யாதனுசரீரத்தை யெடாது மற்றுமோர் பூதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு; யாதனுசரீரம் போயவாறே பூதனுசரீர மெடாது மற்றுமோர் யாதனுசரீரத்தை யெடுத்தலுமுண்டு. இவையெல்லாம் இடைவிடாது நிகழ்தலுமுண்டு; இடைவிட்டு நிகழ்தலுமுண்டு.

உம்மை எதிரது தழீஇயது. பாவப்பயன் கூறவே, இனம்பற்றிப் புண்ணியப்பயனும் அவ்வாறாதல் பெறப்படும். அற்றேல் இறந்தவுயிர் தானே மீளப் பிறக்குமெனின்,—உடம்பு முதலியனவும் இறந்தவை தானே மீளத்தோன்றுமெனல் வேண்டும்; அஃதின்மையின், அதுவில்லையெனக் கிரீடாப்பிரமவாதி முதலியோர் கூறுங் கூற்றை யாசங்கித்து உவமைமுகத்தாற் பரிகரித்தற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. ௩௭

பன்னகம் அண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோல் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவே போல
உன்னிய வுயிர்கள் தூல வுடல்விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல். ௧௨௮

(உரை) முன்னைத் தோல் முதலியவற்றை விட்டுச்சென்று மற்றொன்றினைப் பற்றும்பாம்பு முதலியனபோல, உயிர்களும் முன்னுடம்புவிட்டு வானெறிச் சென்று மற்றோருடம்பில் நிலைபெறும், நனவுணர்வு மாறிக் கனவுணர்வைத் தலைப்படுமாறுபோல் அறிவுவேறுபட்டு.

சென்றென்பது சொல்லெச்சம். அறிவு வேறுபட்டென்பது அவாய்நிலையான் வந்தது. நனவு கனவென்பன ஆகுபெயர். பன்னகம் முதலிய நான்குந் தான் வேறாதலின்றியுந் தன்னுடலும் இடமும் அச்சம் அறிவும் வேறாதற்கும் முறையே உவமையாயின. இவை மூன்று செய்யுளானும் இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு வகுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு இருவினையென்னையென்பது முதற்பன்னகம் அண்டசம் என்பதீறாகக் கிடந்த முப்பத்து நான்கு செய்யுளும், இருவினை இன்பத்துன்பத் தென்னும் மேலைச் செய்யுளிற்கூறிய பொருள்களை அவ்வம்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி வகுத்துக் கூறினவெனக் காண்க. ௩௮



தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே ஆன்மா வின்தன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமு மூலங் காட்டிக் காம்மிய மலமாய் நிற்கும். ௧௨௯

(உரை) இத்துணையுங் கூறியவாற்றாற் போந்த கன்மம் எனப்படுவது, சதசத்தாற் செய்யப்படுதலின், அறம் பாவமென் றிருவகைத்தாய் இருவகைக்குமுரிய பயன் தருதலாற் செயப்படு பொருளாகிய தனக்கு முதற்காரணம் உண்டென்பது காட்டிக் காம்மிய மலமெனப்பட்டுப் பந்தமுறுத்துதல் ஒப்புமையான் மும்மலத்துள் ஒன்றென உடன்வைத் தெண்ணப்பட்டுக் காரண ஏதுவானுங் காரிய ஏதுவானும் அனுமித்தறியுமாறு நிற்கும்.

மூலகன்மங் காரியமாய்ப் பரிணமித்தன்றிப் பயன் தாராமையின், ஏனையபோல வேறு வைத்தெண்ணப்படாதாயிற்று. உம்மை சிறப்பு. காம்மியம் காமியமென மரீஇயிற்று. ௩௯

இருவினை அநாதி யாதி இயற்றலால் நுகர்வால் அந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா உருவுகள் மருவி யார்த்துத்
தருசெயல் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
அருவதாய் நின்ற ரன்தன் ஆணையின் அமர்ந்து செல்லும்.

(உரை) அவ்வினைதான் நாசோற்பத்தி பண்ணப்பட்டுச் சந்தானமாய் வருதலாற் காரியப் பிரபஞ்சம்போல் ஆதியந்தமுடைத்தாயும் பிரவாகாநாதியாய் ஏனையிரு மலங்களின் காரியங்களோடு கூடி உயிரைப் பந்தித்துத் தனது காரிய வேறுபாட்டிற்கேற்ப அவ்வுயிர்க்குப் பல வேறுவகைப்பட்ட யோனிகளைத் தோற்றுவித்துச் சூக்குமமாய் நின்று இறைவன் ஆணையின் நடக்கும்.

அரன்தன் ஆணையினமர்ந்து செல்லுமென்றது முடிந்தது முடித்தல். இவை இரண்டு செய்யுளானும் அவ்விருவினையின் சொரூபம் இதுவென்பது கூறப்பட்டது. ௪௦

இறைவன் செய்த அச்சை இறைவன் மாற்றுதற்கண் ஆசங்கை யென்னை.

இவ்வென்பது வகாரவீற்றுப் பலவறிசொல், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது. அற்றேல் இவ்வாறு அச்சு மாறித் தோன்று மாயிற் சற்காரியவாதத்திற்கு இழுக்காம்போலும் என்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது. சக

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னில்
கூறிய சூக்கு மத்தாம் உருவெனிற் குறியொன் றென்னின்
வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகும்
தேறுநீ யொருவ னலிச் செயலெலாம் சிவனு லாகும். கஎ

(உரை) செய்வானதாற்றலான் ஒருபொன் வெவ்வேறணிகலங்களாய்ப் பரிணமிக்குமாறுபோல, இறைவன தாற்றலான் ஒரு சூக்கும உடம்பு வெவ்வேறு அச்சுக்களாய்ப் பரிணமித்துத் தோன்றுதல் உண்மையின், ஆண்டுச் சற்காரியவாதத்திற் கிழுக்கில்லை. சஎ

சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தின்
ஆக்கியோ ருடல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்(கு)
ஒக்கிய சத்தி யுண்டாய் உடல்தருங் காலம் உற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீள்மர நிகழ்த்து மாபோல். கஅ

(உரை) அங்ஙனஞ் சூக்கும வுடம்பினின்றும் இத்தூலவுடம்பெல்லாம் வருவது, ஆரம் வீரசங்கிலியானுற்போல ஒன்று பிறிதொன்ருவதுமன்று, வித்து மாமாளுற்போல ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவதுமன்று, மதிக்கெழு கலைகள்போல ஒன்றின்கண் ஒன்று கிடந்து தோன்றுவதுமன்று; மற்றென்னையெனின்,—மாவேரின் மற்றொரு மாம்போலச் சூக்குமவுடம்பில் தூலவுடம்புகள் சத்திருபமாயிருந்து தோன்றுவன.

சற்காரியமாதற்கட்படும் விசேடங் கூறியவாறு. யோக்கியம் ஒக்கியமென மரீஇயிற்று. சஅ

விதிப்படி சூக்கு மத்தே உருவரும் வினையா லிங்கே
உதித்திடா உருவ மாக உருவரு மாங்கள் வித்தில்
கதித்தெழு மரமும் வித்தும் கழியும்பின் அழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே. ககூ



(உரை) மரந் தோன்றுதல் வித்தையின்றி யமையாதவாறு போல, அத்தூலவுடம்பு தோன்றுதலுந் தனக்கொரு முதலில்வழிக் கூடாதென்னும் அருத்தாபத்தியால் அஃதுண்டென்பது அறியப்படும்.

சூக்குமவுடம்புண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு. ஆண்டுத் தோன்றும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு மதிக்கெழு கலைகள் போல வருவதுபோவதாமெனவுமுடன் கூறினுர். அற்றேல், தூலவடிவுக்குக் காரணம் ஐம்பெரும் பூதமேயமையும். சூக்குமவடிவு எற்றுக்கெனின்,—அறியாது கூறினுய்; சற்காரியவாதத்தில் தூலப்பொருட்குக் காரணஞ் சூக்குமமேயாவதன்றிப் பிறிதில்லையெனவும், அச் சூக்குமவுடம்பாவது சூக்குமபூதமெனப்படுந் தன்மாத்திரையான் இயன்ற வடிவாகலின், அதன் காரியமாதல்பற்றியே தூலவுடம்பை ஐம்பெரும் பூத வடிவென்பதெனவும் தெற்றெனவுணர்ந்துகொள்க. உருவருமாங்கள் வித்திற் கதித்தெழுமென்பது எடுத்துக்காட்டுவமை. மாமும் வித்துங் கழியுமென்பதுமது. அழியுஞ் சூக்குமமென்னியென்று உரைத்துக்கொள்க. சூக்கம் பாகதச்சிதைவு. இவை மூன்று செய்யுளானுஞ் சூக்குமவுடம்பு முதற் காரணமா மாறுணர்த்தித் தான்பல பேதங் காட்டுதல்பற்றிச்சற்காரிய வாதத்திற்கு இழுக்கின்மை கூறப்பட்டது. அற்றேல், இப்பெற்றித்தாகிய சூக்குமவுடம்புக்கு மூலம் வேறில்லை போலுமெனின், அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௬௯

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி அதன்மு தற்ருன்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாம்
சாலவின் ருகும் ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்த போது. கச0

(உரை) தூலவுடம்பிற்கு முதற்காரணஞ் சூக்குமவுடம்பு; அதற்கு முதற்காரணம் மூலப்பகுதி; அதற்கு முதற்காரணம் மோகினி. அதுவே பரமமுதற்காரண மெனப்படும். வினைக்குண்டலினி சத்தியோவெனின், அது சுத்தமாய் இவையனைத்திற்கும் வியாபகமாய் நிற்கும். இவ்விருவகைப் பிரபஞ்சமும் ஆன்மாச் சிவத்தினைச் சார்தற்கேதுவாகிய பக்குவ காலஞ் சாலுதற்பொருட்டு இப்பெத்த காலத்துள வாவன.

அதன்முதற்றூ னென்பது அம்மூலப்பகுதிக்கு முதலாகிய தா னென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் மோகினியின் மேல் நின்றது. அதன் முதற்றூ னென்றனுவதித்து மேலதா மெனப் பரமமுதற் காரணமாதல் கூறப்பட்டது. இவ்வாறன்றி முதலென்ற தனை எழுவாயாக வைத்துரைப்பார்க்கு, நகரமிரட்டித்தல் பொருந் தாமையுஞ் சித்தாந்தத்திற்கு ஏலாமையுமுணர்க. சிவமென்றது முன் னையது சுத்தமென்னும் பொருட்டு. சாலவாகுமென வியையும். சாலுதல் அமைதல். சார்ந்தவென்னும் பெயரெச்சம் ஏதுப்பெயர் கொண்டது. இதனானே மேலதன்கண் நிகழும் ஆசங்கை நீக்கி வருஞ் செய்யுட்குத் தோற்றுவாயுஞ் செய்யப்பட்டது. இருவினையின்ப வென்னுஞ் செய்யுள்முதல் இதுகாறும் முதற்செய்யுளின் அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையினமர்ந்து செல்ல என்ற இரண்டாங் கூற்றை வலியுறுத்தியவாறு. இனி, இருபத்திரண்டு செய்யுளான் மூன்றாங் கூற்றின்கட்படும் முறைமையெல்லாந் தெரித்துணர்த்து கின்றார்.

அரன்விதி யருள தென்றே அறைந்தனம் அதுவு முன்னே ௫௦
தரைநர கருந்து றக்கம் தனுகர ணாதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தால் தீர்த்துப்
பாகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும்.

(உரை) எல்லாஞ் சிவத்தினைச் சார்ந்தபோது சாலவின்றாத கசக லாகிய அதுவும் இலயம் போகம் அதிகாரமென்னும் அவத்தைகளி னின்ற இறைவன் செய்யுஞ் செய்தியென்றும் அது கருணையே யென்றுந் தொகுத்தும் வகுத்தும் மேலே கூறிப்போந்தாமாகலின், அத்தனுகரணாதிகள் மலகன்மங்களாகிய நோய்க்கு மருந்தாக அவ னால் அமைக்கப்பட்டன; அவற்றால் அந்நோய் தீர்ந்தவழிப் பர ஞானத்தை விளக்கிச் சிவானந்தப்பெரும்பேறும் அவனால் தரப்படும். கதியென்பது ஞானத்தினையுணர்த்தல் வடமொழி மதம். முன்னே யறைந்தனம் என்றதனால் அமர்ந்துசெல்லத் தலைவனாதற் கட்படும் இயல்பெல்லாம் ஈண்டே கூறற்பாலனவாயினும், ஒவ்வோ ரியைபுபற்றி ஆண்டாண்டு ஒருங்கு வைத்தோதப்பட்டன. அவை யெல்லாம் ஈண்டுய்த்துரைத்துக் கொண்டுணர்க என்பதுஉமாயிற்று. மாயாகாரியமெல்லாஞ் சிவத்தினைச் சார்தற்பொருட்டாமாறு யாங்



னமென்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு அநாதி மலங்களிம் மருந்தாற்றீர்த்துப் பாகதியதுவுந் தந்து பாதபங்கயமுஞ் சூட்டுமென் றார். மலந்தீர்க்கு முகத்தால் அவையங்ஙனமாமென்றவாறாயிற்று. *"இலனென்றுதீயவை செய்யற்க" என்றாற்போல அன் ஈறுஈண்டுத் தன்மைக்கண் வந்தது. மேல் இன்பத்துன்பமருத்தியே வினையறுப்ப னென்ற ஆசிரியர், ஈண்டு மாயாகாரியங்களை மருந்தென்றல் மலை வாம் போலுமெனின்.—ஆகாது; நோய் தீர்தற்கு ஏதுவாயினவெல் லாம் மருந்தெனப்படுமாகலின், அது †"உற்றவன் தீர்ப்பான் மருந் துழைச் செல்வானென்—றப்பானாற் கூற்றே மருந்து" என்பதனானு மறிக. இஃது ஏகதேசவுருவகம். இதனானே மேற்கூறிப் போந்த தூலம் சூக்குமம் மான் மோகினி விந்துவெல்லாம், மருத்துவனுக்கு மருந்துபோல, மலவயித்தியனாகிய அரனுக்குப் பரிக்கிரக விபூதி யாதல் கூறப்பட்டது. ௫௧

எழுமுடல் கரண மாதி இவைமலம் மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னில்
செழுநவ அறுவை சாணி உவர்செறி வித்த ழுக்கை [னேன்.
முழுவதுங் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன் முன்

(உரை) அழுக்கைக்கொண்டு அழுக்கை நீக்கவேண்டுதலின், மாயேயமலம் ஏனை மலங்கட்கு மருந்தாகக் கூறப்பட்டது.

மலம் அழுக்கு என்பன ஒருபொருட்கிளவி. இதனானே மேலது வலியுறுத்தப்பட்டது, இனி, அம்மாயை மாயேயங்களது இயல் பாவது என்னையென்பார்க்கு, அதனை வகுத்துக் கூறுவான்தொடங்கி னார். ௫௨

நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர்
வித்துமாய் அசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே.

(உரை) உலகிற்கு முதற்காரணம் எனப்படும் மாயையாவது நித்தமாதல் முதலிய இலக்கணங்களை யுடையது.

---

* திருக்குறள் - தீவினையச்சம் - ௫.

† ஷை - மருந்து ௰.

மாயையின் சொரூபங் கூறுவார், புவனபோகந் தனுகரணமும் உயிர்க்காயென்றும், அதுவும் மாத்திமிகர் மதம்பற்றிச் சூனியத்திற் செல்லாமைப்பொருட்டு உலகத்திற்கோர் வித்துமாயென்றும், அது வும் கணிக வாதிகள் மதம்பற்றிச் சார்பினிற் செல்லாமைப்பொருட்டு நித்தமாயென்றும், அதுவும் உலோகாயதர் மதம்பற்றி பூதங்களிற் செல்லாமைப்பொருட்டு அருவாயென்றும், அதுவும் வைசேடிகர் முதலியோர் மதம்பற்றிப் பரமாணுக்களிற் செல்லாமைப் பொருட்டு எங்கும் வியாபியாயென்றும், அதுவுஞ் சாங்கியர் மதம்பற்றி முக் குணங்களிற் செல்லாமைப்பொருட்டு ஏக நிலையதாயென்றும், அது வும் பாற்கரியர் மதம்பற்றிப் பிரமத்திற் செல்லாமைப்பொருட்டு விமல னுக்கோர் சத்தியாயென்றும், அதுவும் சிவாத்துவித மதம்பற்றிச் சிற்சத்தியிற் செல்லாமைப் பொருட்டு அசித்தாயென்றும், அதுவும் மாயாவாதி மதம்பற்றி அநிருவசனத்திற் செல்லாமைப்பொருட்டு வைத்ததோர் மலமாயென்றும், இத்தன்மைத்தாகிய மாயை ஆணவ மலம்போல மயக்கமே செய்யுமென்னுஞ் சைவருள் ஒரு சாராரை மறுத்தற்பொருட்டு மயக்கமுஞ் செய்யுமென்றுங் கூறினர். செய்யு ளாகலின் முறை பிறழ வைக்கப்பட்டன. ஈண்டு மயக்க மென்றது விபரீத உணர்வை. மயக்கமும் என்னும் உம்மை, அது தன் னியல்பன்மையுணர நின்றது.

மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்றும் ௫௩
ஆயஅக் கால மூன்றாய் ஆக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாம் காலசங் கையினைப் பண்ணி
நாயக னாணை யாலே நடத்திடுஞ் சகத்தை யெல்லாம்.

(உரை) அத்தன்மைத்தாகிய மாயையினின்றுங் காலமுதலிய ௧௪௬
தத்துவங்களுளவாம். அவற்றுட் காலமாவது முதல்வனாணையான் முத்திறப்பட்டுத் தனக்குக் கீழுள்ள காரியப் பிரபஞ்சம் அனைத்தை யுங் காலவரை யறையிற் படுத்திக் கன்மத்தை வரைசெய்து நிற்கும்.
எண்ணும்மை முன்னருஞ் சென்றியையும். நாயகன் ஆணை யாலே என்பதனைத் தத்துவாதிகார முழுதினும் உய்த்துரைக்க.

நியதிபின் தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும் ௫௪
அயர்விலாக் கலைபின் தோன்றி ஆணவம் ஒதுக்கிச் சித்தின்

சுவை ததும்ப, “இயற்கை மாட்சியும் இறைவன் காட்சியும்” என்னும் பொருள்பற்றிப் பேசினார்.

விழாவில் ஒவ்வொரு விரிவுரைக்கு மிடையே தேவார ஆசிரியரும் அன்னார் குழுவினரும் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறை ஓதிக் கூட்டத்தினரை மகிழ்வித்தனர். மூன்று நாளும் திரளான மக்கள் வந்து கேட்டின்புற்றனர். விரிவுரையாளர் ஒவ்வொருவருக்கும் மாலையிட்டு வந்தனமளிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையாக மிகவும் அரும்பொருளுடைய விரிவுரை ஒன்றினை அளித்தார். பின்னர் மாலை 5½ மணிக்குக் கூட்டம் கலைந்தது.

மீண்டும் 7½ மணிக்கு யானை வாகனத்தின்மீது, சேக்கிழார் பெருமான் திருவுருவத்தினையும் பன்னிரு திருமுறைகளையு மமைத்து அலங்கரித்தனர். சிவபெருமான், திருமால், கணேசர், முருகன், உமாதேவி முதலிய மூர்த்தங்களும் அலங்கரிக்கப்பட்டன. எல்லா மூர்த்திகளும் திருமுறை ஓத, பதினாயிரத்துக்குமேற்பட்ட மக்கள் சூழ, ‘ஹர’ முழக்கமும் வாணங்களும் விண்ணுலகத்தை முட்ட ஊர்வலம் வந்தனர். விழாவானது சேக்கிழார் பெருமான் திருவருளால் மூன்றாம் நாள் இரவு மூன்று மணிக்கு இனிது முடிந்தது.

இதனை முன்னின்று நடத்திய சைவப் பெரியார், லா. தி. ம. முத்துச்சாமி பிள்ளையவர்கள் எல்லா நலனும் இனிது எய்துமாறு ஆறு முடித்த அருட்கடலளித்த ஆறுமுடிப் பெம்மானை இறைஞ்சுகின்றேம்.

## சமாஜத்தின் மாசிமாதக் கூட்டம்

இது மிகச் சிறப்பாகக் காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் திவான்பகதூர் - ஈ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில், யுவஹு மாசிமீ ௧௮உ ஞாயிற்றுக்கிழமை (1-3-1936) மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெற்றது. திருவாளர்கள் P. பொன்னரங்க முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், K. வஜ்ரவேல் முதலியார், பூ. சமரபுரி முதலியார் ஆகிய நான்கு பேரறிஞர்கள் முறையே ‘சமயத்தின் அவசியம்’, ‘பூசலார்’, ‘திருமுறைகள்’, ‘கோயில்வழிபாடு’ என்பனபற்றிப்பேசினார்கள். தலைவர்க்கும், சொற்பொழிவாளர்க்கும், கூட்டத்தை நடத்திவைத்த ராவ்பகதூர்-K. சாம்பசிவ செட்டியார், சாமிநாத முதலியார், மெய்கண்டார் கழகத்தினர் முதலியோர்க்கும் காரியதரிசி வந்தனம் கூறினார். தலைவரவர்கள் அழகிய முடிவுரை கூறிக் கூட்டத்தை முடிவு செய்தார்கள். அவ்வூர்த் தேவார பாடசாலை மாணவர்கள் தமிழ்மறை ஓதினார்கள்.

## சமாஜத்தின் பங்குனிமாதக் கூட்டம்

இது திருவான்மியூரில் பங்குனி மாதம் நடைபெற இருக்கும் திருவிழாவில் பத்தாந் திருவிழாவன்று நடைபெறும். சித்திரை மாதக் கூட்டம் திருவிற்கோலத்தில் நடைபெறும் திருவிழாவில் ஒரு நாளில் நடத்த ஏற்பாடு செய்யப்படுமென்று அறிகிறேம்

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No. 3

உ
சிவமயம்

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !!

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில்விருத்தம், வேல் விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெய ரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக் குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும்பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங் கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள் புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூபா 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12
நான்கு பிரதிகள் விலை ரூபா 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா 2¼

உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-ஏ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10-3-1936

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 19, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No. 4.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

1 - MAY 1938

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௯ | தாது ஆண்டு சித்திரைத் திங்கள் 1936ஆம் ஏப்ரல்மீ | இதழ் ௪

உள்ளுறை பக்கம்


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சமயத்தின் அவசியம் ... | ... கஉக |
| தேடிக்காணும் அநுபவம் ... | ... கஙக |
| சமயமும் பௌதிகக் கலையும் ... | ... கஙஅ |
| நீலகண்டயாழ் (உருவப்படம்) ... | ... கசஉ |
| ஞானாமிர்தம் மூலமும் விளக்கவுரையும் | ... கசங |
| சமயச் செய்திகள் ... ... | ... கருஎ |
| சித்தாந்த சாத்திரம் ... ... | ருகங - ருசஎ |


சைவ சித்தாந்த மகாசமாஜம்

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணா 4.

## பிரிவாற்றாமை

### திருவாளர் கா. ரா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

நமது சமாஜ ஆயுளங்கத்தினருள் ஒருவராகிய சைவத் திருவாளர் கா. ரா. நமச்சிவாய முதலியார் அவர்கள் 13-3-36-ல் முருகநாதன் திருவடிநீழலெய்தினார். அவர் ஆடம்பரமற்ற சமயப் பற்றுடையவர். அவர் தமிழ்த் தொண்டு சமுதாயத் தொண்டு முதலிய செய்ததுபோலவே சமயத்தொண்டும் ஆற்றியுள்ளார். அவர் நூல்களை நுணுகி நோக்குவார்க்கு இஃதினிது புலனாம். அவர் தமது 60-ஆம் ஆண்டுப் பூர்த்தி விழாவைத் தமது வழிபடு கடவுளாகிய தணிகைநாதன் விழாவாக அனைவரோடும் சென்று ஆற்றி மகிழ விரும்பியதாக அறிகிறோம். இது போற்றத்தக்கது. முதலியாரவர்களுடைய குடும்பத்தினர்க்கு, நமது பிரிவாற்றாமையை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

### திருவாளர் P. போன்னரங்க முதலியார் அவர்கள்

சைவத் திருவாளர் P. பொன்னரங்க முதலியார், B A. அவர்களைச் சைவருட் பலர் அறிவர். அவர் ஒரு நல்ல சைவர்; சிவத்தொண்டு செய்ய எப்போதும் முன்னிற்பவர். அவர் தம் ஆழ்ந்த கல்வியாற் சமாஜத்திற்கும் பன்முறை பணியாற்றியுள்ளார். அப்பெரியார் 15.3 36-ல் ஆண்டவன் திருவடியை யடைந்த செய்தியை ஆற்றொணாத் துயரத்தோடு அறிவிக்கிறோம். அவர் வாழ்நாளில் இறுதியாகச் செய்த சொற்பொழிவு, 1-3-36-ல் காஞ்சிபுரத்திற்கூடிய சமாஜக் கூட்டத்திலாகும். அவர்கள் இறுதியாக எழுதியதும் அன்று செய்த 'சமயத்தின் அவசியம்' என்னும் விரிவுரையை நமது 'சித்தாந்த'த்தில் வெளியிட எழுதிய கட்டுரையேயாமென அறிகிறோம். அக்கட்டுரை இவ்விதழில் வெளி வருகிறது.

### திருவாளர் அப்பாதுரை ஆச்சாரியார் அவர்கள்

இவர் காலஞ் சென்ற திரு. கந்தசாமி நாயகரவர்களுடைய மாணவர். அவருடைய சிறந்த மாணவர் இருவருள் திரு. இராமகிருஷ்ண முதலியார் முன்னரே காலமானார். சைவத் திருவாளர் அப்பாதுரை ஆச்சாரியார் ஒருவரே சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் வேதத்தை இசையொடு ஓதுவதில் தலை சிறந்து விளங்கினார். அன்பு, அடக்கம், ஆற்றல் அமைந்த ஆச்சாரியார் 4-3-36-ல் இறைவனடி சேர்ந்தனர். அவர் பிரிவிற்கு நாம் வருந்துகிறோம்.

Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| | | |
|---|---|---|
| மலர் ௯ | தாது ஆண்டு சித்திரைத் திங்கள்<br>1936௵ ஏப்ரல்௴ | இதழ் ௪ |


## சமயத்தின் அவசியம்

[திரு. P. பொன்னரங்க முதலியார், B. A.]

சமயத்தின் அவசியத்தைப்பற்றி யோசிக்கப் புகுமுன் சமயம் என்றால் என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாய் 'சமயம்' என்னும் பதம் 'காலம்' என்னும் பொருளில் வழங்குவதை நாம் காண்கிறோம். 'இது நல்ல சமயம்', 'இப்போது சமயம் சரியாயில்லை' முதலிய சொற்றொடர்களை நாம் கேட்டிருக்கிறோம். பிறகு, அந்தந்தக் காலத்திற்குரிய மதக்கொள்கைகளை நிறுவ எழுந்த பெரியார் அக்கொள்கைகளைச் சமூகத்தினர் முன்பு நிலைநாட்டும்போது அவை சமயங்கள் எனத் திகழ்ந்து நின்றன என்று சில ஆண்டுகட்கு முன் ஒரு தமிழறிஞர் சொல்லியிருக்கிறார். அஃதே போல ஒருவனது பக்குவ காலத்திற்கேற்ப அவனுக்குப் பாரமார்த்திக விஷயங்களை உணரவேண்டும் என்னும் எண்ணம் அவன் உள்ளத்தில் எழும்போது அவனிடம் சமய உணர்ச்சி அரும்புகின்றது என்று சொல்லலாம்.

ஆகவே, சமயம் என்பது ஒரு தனிமனிதனுடைய கால நிலையை அல்லது ஒரு சமூகத்தின் நிலையை அவ்வக் காலங்களில் விளக்கும் கோட்பாடுகள் அல்லது கட்டுப்பாடுகளின் தொகுதி என்று சொல்வது மிகையாகாது.

சிலர் சமயம் வேறு, மதம் வேறு என்பர். அன்னார், சமயம் என்பது மதத்தின் உட்பிரிவென்றும், மதத்தின் நலத்தை உத்தேசித்து அதில் அடங்கிய சமயங்கள் ஒன்றோடொன்று வேற்றுமைகளைப் பாராட்டாமல் இருக்கவேண்டுமென்றும் சொல்வர். இராமலிங்க அடிகள் "சாதியும் மதமும் சமயமும் தொலைத்தேன்" என்று சொல்லியிருக்கிறார். பெரிய புராணத்தில் "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" என்று சொல்லியிருப்பதால் சைவமானது வேதமாகிய நெறியிலுள்ள ஒரு துறை என்றும் அறிகிறோம். ஆனால், தாயுமானவர் "சைவமாகிய மதம்" என்ற சொற்றொடரை ஆகாய புவனம் என்னும் தலைப்பையுடைய பாட்டுக்களின் இறுதிப் பாட்டில் பிரயோகித்திருக்கிறார். அதேபோல் திருவாசகத்து அகவலில் "சைவமதம்" என்று கூறியிருக்கிறார். ஆகவே, சமயம் என்பதே மதம், மதம் என்பதே சமயம் என்றும் நாம் கொள்ளக் கிடக்கிறது.

பல சமயங்கள் இருந்தபோதிலும் அவையெல்லாம் கடவுள் ஒன்றே என்ற கொள்கையை உடையன. ஆனால், கடவுளை அடையும் நெறியில் ஒரு சமயம் இன்னொன்றைவிட மேலானதாக இருக்கலாம். ஆதலால்தான், "அங்கையில் அனலும் வைத்தார் அறுவகைச் சமயம் வைத்தார்" என்ற அப்பர் சுவாமிகள், "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினால் சொன்னாரேனும்" என்று கூறியிருக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்" என்று கூறியிருத்தலால் சில சமயங்கள் அறிவினால் மிக்கவை என்றும், மற்றப் புறச்சமயங்கள்



அறிவில் மிகாத தன்மையுடையன என்றும் அறிகிறோம். சித்தியாரில், "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெற லரிது" என்பதை நாம் கவனிக்க வேண்டியது. தாயுமானரும், "சைவ சமயமே சமயம்" என்று சொல்லி, "பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டா" என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆகவே, சில சமயங்கள் பொய்யில் பிறந்து பொய்யை நிலைநாட்டும் தன்மையுடையன என்று யூகித்தறிந்து அவைகளில் அகப்படாதிருக்க நாம் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். உதாரணமாக உலோகாயதமதத்தைக் குறித்துத் தாயுமானர், "மின்னனைய" என்னும் தொடக்கத்த பாட்டில், "தன்னிகரில் லோகாயத சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி மன்ன ஒரு சொற்கொண்டு" என்று தன் குருவை வாழ்த்துகிறார். ஆகவே, அறிவினால் மிக்க சமயங்களைக் கடைப்பிடிக்கும்போதும் பொய்யில் பிறக்காதவைகளையே கடைப்பிடிப்பது நமது கடமை. மேலும் சைவசமயமானது அன்பையே சிலாகிக்கிறது. அருளையே நாம் அடைய வேண்டும் என்று திருவருள்பால் நம்மை அழைக்கிறது. 'அன்பே சிவம்' என்ற திருமூலர்கருத்தை ஊன்றிப்பார்த்து உணர்ந்தவர், அறிவைவிட அன்பு மேல் என்று ஓர் ஆங்கிலப் புலவர் சொல்வதின் நுட்பத்தை உணர்ந்து, சமயநடை மூலமாய் அன்புப் பிழம்பாய்த் திரிய முயல வேண்டும். "அப்பா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல்வேண்டும்" என்று இராமலிங்கஅடிகள் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இப்படி அன்பையும் அறிவையும் விருத்தி செய்து அவைகளின் மூலமாய் அடக்கமும் அமைதியும் பெற நாம் பாடுபடவேண்டும். அன்புடன் அறம் இணைந்துள்ளதை நாம் மறக்கொணாது.

"அறத்திற்கே அன்பு சார்பென்ப" என்பது பொய்யாமொழி. அதனால்தான் அன்பாகிய அம்பிகையை அறமாகிய சிவத்துடன் சேர்த்து அர்த்தநாரீஸ்வரராய் அவர்கள் விளங்குவதை நமது சைவசமய நூல்கள் நமக்குக் காட்டுகின்றன. "சிவனுக்கு அன்பு அருள் அம்பிகை" என மதுரைத் திருப்புகழில் அருணகிரிநாதர் கூறுகிறார். ஆகவே, அறம், அன்பு, அறிவு இவற்றின் மூலமாய் அடக்கத்தையும் அமைதியையும் பெற்றால் பஞ்சபாணனாகிய கருவேளை நாம் சுலபமாய் வெற்றிகொள்ளலாம். செவ்வேளை வணங்குவோர் கருவேளை ஜெயிப்பது கஷ்டமல்ல. ஆனால் சமய நெறியில் வழுவாதிருந்தால் தான் அது சாத்தியமாகும். அந்நெறியில் முக்கியமாய் விபூதி அணிவதை வற்புறுத்துகிறார்கள். அதனாலேயே 'பூதி சாதனம்' என்று ஒரு சொற்றொடர் எழுந்திருக்கிறது. அப்பர் சுவாமிகளும் "எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால்" என்று சாதனங்களின் அவசியத்தை வற்புறுத்துகிறார். திருமூலர், "கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை..........சேர்வரே" என்று திருநீற்றின் மகிமையை நன்றாகப் பாராட்டுகிறார். அந்த நீறு சமயத்திலுள்ளது என்று சம்பந்த சுவாமிகள் திருநீற்றுப் பதிகத்து முதலிலேயே காட்டுகிறார். "மந்திரமாவது நீறு, தந்திரமாவது நீறு, சுந்தரமாவது நீறு" என்று அவர் சொல்லியிருப்பது, "மந்திரமாவதும், தந்திரமாவதும், சுந்தரமாவதும், இணையடியே" என்று திருமூலர் கூறியிருப்பதை நமக்கு நினைவூட்டுகிறது. திருமூலர் 'இணையடி' என்பதை, சம்பந்தர் 'நீறு' என்று காட்டுகிறார். "இணையார் திருவடி எட்டு எழுத்தாகும்" என்று திருமூலர் சொல்லியிருப்பதை நாம் கவனித்தால் அஞ்சக்கரம் ஓர் அடி என்பது நமக்கு விளங்கும். அந்த அஞ்சக்கரத்தை ஓதியே நீறு இட



வேண்டும் என்று தேவாரம்,திருவாசகம்முதலிய நூல்களால் அறிகிறோம். ஆகவே, அஞ்சக்கரம் ஓதுதல், நீறு இடல், அக்குமணி அணிதல் முதலிய சாதனங்களால் சமயத்தின் மூலமாய் அடையக்கூடிய பலனை நாம் அடையும்படி முயற்சிக்கவேண்டும். அப்போது நாமும் அப்பர் சுவாமிகளைப் போல் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று முழக்கக் கூடும்; சம்பந்தரைப்போல் 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்' என்று வற்புறுத்தக் கூடும்.

மேலும் சமயத்தின் மூலமாய் நாம் அரோகதிடகாத்திர சரீரத்தையும் அடையலாம். சமயநெறிப்படி ஒழுகுபவர்களைப் பிணிகள் சாரா என்று நம் சாத்திரங்கள் கூறுவதை நாம் அனுபவத்தால் அறியலாம். பல நோய்களுக்குக் காரணம் கவலையே என்பதை நாம் உணர்ந்தால் கவலையின்றி வாழ இறைவன் காலைத் தொழவேண்டும். "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்பது வள்ளுவர் வாக்கு.

சமயநெறி வழுவாது வாழ்ந்தால் கூற்றையும் அஞ்சும்படி செய்யலாம். "கூற்றை அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே" என்பர் ஆளுடையபிள்ளையார். "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று" என்பர் திருவள்ளுவனார். கடைசியாக நம் சமயத்தின் மூலமாய்ச் சிவமாம் தன்மை அடையக்கூடும் என்றும் அறியலாம். காட்டிலிருந்த ஒரு துறவியைப் புலி பிடித்து விழுங்கும்போதுங்கூட அவர் 'சிவோகம்' என்று சொல்லிக் கொண்டிருந்ததாகச் சுவாமி விவேகாநந்தர் பிரசங்கத்தால் அறிகிறோம். அப்படிப்பட்ட பெரியோர் அஞ்சா நெஞ்சம் உள்ளவர் என்பது திண்ணம். "அஞ்சாநெஞ் சாக்கம் தரவல பெருமாளே" என்று திருப்புகழில் கூறியிருப்பது உண்மையே என்று இத்தகைய சம்பவங்களால் அறியலாம்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று சமய உணர்ச்சி யில்லாதார் கூறமுடியுமா என்று யோசிக்கவேண்டி யிருக்கிறது. " நானே சிவம் " என்று சொல்லக்கூடிய நிலையை உடையவர்கள், அந்நிலையை அடைவதற்குப் பாவனை அவசியம். அப்பாவனையில் உறைத்து நின்ற பிறகு பாவனாதீத நிலையை அடையலாம் என்று நம் சமய நூல்கள் சொல்லுகின்றன. " யாதுமோர் பற்றிலாத பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாமே " என்று நம்மாழ்வார் கூறி யிருக்கிறார். பாவனையைக் கைப்பற்றாமல் ' நான் சிவம் ' அல்லது 'நான் பிரமம்' என்று சொல்வது இழிவான நிலையில் நிற்பதையே குறிக்கும். "நாம் பிரமம் எனு ஞானம் ஞானிகள்பால் உளவாகும்" என்பர் சிவஞான வள்ளலார். அவர்கள் உள்ளத்தில் அப்படி உன்னுவாரே யன்றி வாய்ப்பறை அடிப்பவர்கள் அல்லர். அப்படி உண்மையாக உழைத்துச் சமய நெறியில் ஒழுகுவதின் பயனை அடைபவர் வியாதியடைந்து நையாமலும், மனக் கவலைக்கு ஆளாகாமலும், துன்பத்தால் பீடிக்கப்படாமலும் எந்நாளும் இன்ப நிலையிலேயே இருப்பர் என்பதை நாம் நன்றாக உணர்ந்து, பிறரும் உணரும்படி செய்வது நமது கடமை.

சமயத்தின் அவசியம் என்பதைப்பற்றிச் சுவாமி விவேகானந்தர் ஒரு பிரசங்கம் மேல் நாட்டில் செய்ததாக நாம் அறிகிறோம். அதில், *சமயத்தின் மூலமாய்ப் புலன் இன்பத்திற்கு மேலான நிலையை நாம் அடையலாம் என்றும், பகுத்தறிவுக்கு மேலான அருள்நிலையில் நிற்கலாம் என்றும், நம் நடவடிக்கை ஒழுங்காக இருக்கக் கூடும் என்றும், கடைசி-

* "We can transcend the limitations of the senses and even the powers of reasoning. We can build up character. We can be at peace with others and with ourselves."



யாக, தீவிரமான அன்புக்கு உறையுளாயிருப்போம் என்றும் கூறுகிறார். (அப்பர் சுவாமிகள் " அருந்துணையை " என்ற தொடக்கத்த பாசுரத்தில் "வான்புலன்கள் அகத்தடக்கி" என்று கூறி யிருப்பது ஈண்டு நினைவிற்கு வருகிறது.) அதை யொப்ப, 'ஜர்னல் ஆப் ரிலிஜன்' (Journal of religion) என்னும் ஓர் ஆங்கில மாதப் பத்திரிகையில் சமயத்தின் மூலமாய்ப் பொருளாதார உலகில் நடமாடும் பேராசைப் பேய்க்கு இடங்கொடாம லிருக்கலாம் என்றும், சமயக் கல்வி பயன்படாத ஒரு வித அனுபவமும் எந்த சமூகத்திலும் இல்லை என்றும், பணம் சேகரிப்பதைவிட அருளுக்குப் பாத்திரமாவது மேல் என்று நாம் அறியக் கூடும் என்றும் கூறியிருக்கிறது. ("You can guard against greed inherent in the economic order. There is no area in the social sphere outside the influence of religion. Religion can create society which is so ordered that man's chief pre-occupations will be the pursuit, not of bread, but of spiritual values.") இவைகளைக் கூர்ந்து நோக்கி அன்பர்கள் சமயநிலையில் சரிவர நின்று திருவருளுக்குப் பாத்திரராகும்படி எல்லாம்வல்ல இறைவன் அனுக்கிரகம் புரிவானாக.

" இக்காலத் தின்னவினை யென்றமைப்பை யப்படியே
யக்காலத் தவ்வூ ழருத்திடுவை—யிக்காலந்
தப்புவா ருண்டோ தமியேற்குந் தப்பரிதேன்
னப்பனே சொக்கநா தா.

Thou arrangest that such deed shall happen at such time; Thou feedest such deed at the proper time accordingly. Can any one escape that time? I cannot escape, O, my Father, Sokkhanatha!"

—குருஞான சம்பந்த சுவாமிகள்.

# தேடிக்காணும் அநுபவம்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

(இக்கட்டுரை எட்டிங்டன் என்ற வானநூல் ஆசிரியர் எழுதிய ஒரு நூலின் இறுதிப்பகுதியிற் காணப்பெறும் சில கருத்துக்களைத் தழுவியது-Based on section IX of "Science and the Unseen World", the Swarthmore Lecture for 1929 delivered by A. S. Eddington and published by Allen & Unwin Ltd., London).

தேடிக்காணும் அநுபவத்தின் சிறப்பை அளவு கடந்து வற்புறுத்த இயலாது. ஏனெனில் அவ்வாறு செய்வது முடிபுகளின் மேன்மையைத் தாழ்த்துவதாக முடிதலுங் கூடும். என்றாலும் மேற்கூறிய அநுபவத்தை ஒவ்வொருவரும் நன்குணரவேண்டும். முடிபுகள் முடிபுகள் என்று அனைவரும் எங்கணும் கூக்குரலிடுகின்றனர். முடிபுகள் பெரும்பாலும் தெளிவாகவும் வரையறுக்கப்பட்டும் உள்ளபடியால் அவைகள் நமக்குத் தேவையென்று கருதப்படுகின்றன. அவைகளை நாம் பல வழிகளில் உபயோகிக்கலாம் என்று எண்ணப்படுகின்றது. ஆனால் முடிபுகள் நிலையற்றனவாகவே காணப்படுகின்றன. ஆராய்ச்சியின் வளர்ச்சியால் இந்தத் தலைமுறையில் கூறப்படும் முடிபுகள் அடுத்த தலைமுறையில் பிரயோஜனப்படுவதில்லை. தேடுகின்ற அநுபவம் இல்லாதவிடத்து முடிபுகளின் கூர்மையானது மழுங்கிவிடுகின்றது. இது அறிவியல் துறையிலேயன்றி ஏனைய துறைகளிலும் காணப்படும் பொது உண்மையேயாம்.

இன்றைக்கு ஒரு சொற்பொழிவில் சில முடிபுகளை விவரித்து நான் கூறினால், ஐம்பது ஆண்டுகட்குப் பின்வரும் ஓர் அறிஞன் எனது சொற்பொழிவின் பெரும் பகுதியை மறுத்தே பேசுவான். தேடிக்காணும் அநுபவத்துக்கு



முதன்மைத் தானம் கொடுத்தாலொழிய அறிவியலினுடைய உயிர் நாடியையும் சமயத்தினுடைய உயிர் நாடியையும் ஒருவன் அறிந்தவனாகான்.

அறிவியலாசிரியனும் சமயாசிரியனும் உலகத்தையும் பொருள்களையும் பார்க்கும் பார்வைகளுள் ஒற்றுமையும் அநுதாபமும் நிலைப்பதற்குச் சமயமுடிபுகள் தடைகளாகவே இருக்கும். ஒரு சமயத்திலுள்ள ஒழுக்கங்கள் அச்சமயத்தை அநுஷ்டிக்கும் அறிவியற் பேரறிஞர்கட்கிசைந்தபடி அமைக்கப்படுதல் கூடாமையாகுமென்பதை நான் நன்குணர்வேன். சமய முடிபுகளின் அவசியத்தைத் தாங்கிப் பேசுதல் கூடுமென்பதையும் நான் நன்குணர்வேன். ஆயினும் இப்போது நமது வாழ்க்கையில் கையாளப்படாத முடிபுகளையும் நமது வாழ்க்கையை இயக்கி வைத்துச் செம்மைப்படுத்தாத முடிபுகளையும் பழமைபற்றிய பரிபாஷையில் ஆரவாரத்தோடு கூறும் சமயக்கொள்கையை அறிவியல் ஆக்ஷேபிக்கிறது. தேடிக்காணும் அநுபவம் முடிபுகளை நாட்டமாகக் கொள்வதில்லை. நியூடன் சட்டங்கள், மாக்ஸ்வெல் சட்டங்கள் முதலியவைகளில் நம்பிக்கையுண்டென்று பிரமாணம் செய்யும் பழக்கம் ஒரு பல்கலைக்கழகத்தில் உண்டெனின், அக்கழகத்தைக் காண எனது நெஞ்சு திடுக்கிடும். அக்கழகத்து மாணவர்கள் அறிவியலாராய்ச்சியின் நோக்கத்தை யறியாதவர்கள் என்பது மிகையாகாது.

முடிபுகளைப் புறக்கணிப்பதால் ஒருவன் தீவிர நம்பிக்கையற்றவன் என்று கூறவியலாது (Rejection of creed is not inconsistent with being possessed by a living belief). அறிவியலில் முடிபுகள் இல்லாவிடினும் நம்பிக்கை வழுவழுப்பின்றி திடமாகவேயுள்ளது. அந்த நம்பிக்கை நாம் கூறுவது நிலைத்திருக்கும் என்பதல்ல; நாம் போகும் வழி சரியான வழியென்பதே அந்நம்பிக்கையாகும்.

நாம் அவ்வப்போது கூறும் உண்மைகள் நிழல்கள் போன்று மாறிவரினும், அவை மாறாதவுண்மையென்ற ஒளியினால் சாய்க்கப்பெற்ற நிழல்களேயாகும் (If our so-called facts are changing shadows, they are shadows cast by the light of constant truth). இவ்வாறே சமயத்துறையிலும், காணப்படாத பொருள்கள் இயங்கும் முறைகளை முக்காலத்துக்கும் முடிந்த முடிபென அறுதியிட்டுக்கூறும் வாதம் அருவருக்கப்படும். ஆனால் நாமே தேடித் துருவிக்காணுங்கால் நமது அநுபவத்தில் நமக்கு ஒளி நல்கி வழி காட்டுவதை நாம் புறக்கணித்தலாகாது. உண்மை நாட்ட முடையானுக்குச் சமயம் சந்தேகமும் வினவுதலுமாகவே இல்லை. அவனுக்கும் ஒரு திடமும் தெளிவும் உண்டு. ஆனால் அவை சமய சட்டதிட்ட முடிபுகட்கு வேறுவன. (Religion for the conscientious seeker is not all a matter of doubt and self questionings. There is a kind of sureness which is very different from cocksureness.)

# சமயமும் பௌதிகக் கலையும்

## (Religion and Science)

[மா. துரைசாமி முதலியார்]

சேலம் ஜில்லா கலெக்டர் திரு. எஸ். வி. இராமமூர்த்தி, ஐ. ஸி. எஸ். அவர்கள், சேலம் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்திலே இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய விழாவை முன்னிட்டுச் செய்த சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:-

"ஒரு பெரிய ஞானியைப்போற்ற நாம் கூடியிருக்கிறோம். நாம் ஞானிகளைப் போற்ற அடிக்கடி கூடுவதில்லை.



பௌதிகக் கலை வல்லவர்களில் பெரியோருஞ் சிறியோருமாக உள்ளவர்களைப் போற்றவே நாம் அடிக்கடி கூடுகிறோம். இந்தியர்களாகிய நாம் சமயப்பற்றைப் பெரிதும் விட்டுப் பௌதிகக் கலையிற் காணப்பெறும் முடிபுகளைத் தேடுங் கூட்டத்தோடு சேர்ந்துவிட்டோம். இவ் வேற்றுமையை அகற்றவே ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் அவருடைய சீடராகிய சுவாமி விவேகானந்தரும் முயன்றார்கள்; அவர்கள் அம்முயற்சியில் சிறிது வெற்றியும் பெற்றார்கள். ஆனால் பௌதிகக் கலையுணர்ச்சி மறுபடியும் மிகுந்துவிட்டது. கைத்தொழிற் சம்பந்தமான அக் கலையறிவின் பயனால் நாட்டின் வறுமையை நீக்கலாமென நம்பப்படுகிறது. முற்கால நிகழ்ச்சிக்கும் தற்காலப் போக்கிற்கும் இடையே காணப்பெறும் இவ்வேறுபாடு இந்திய அறிஞரிடத்தும் கைத்தொழிலாளரிடத்தும் இருக்கிறது. இவர்கட்கும் மற்றைப் பெரும்பகுதியினரான பொதுமக்கட்கும் ஒற்றுமையில்லை. பொது மக்கள் சமயத்தில் விருப்புடையவர்களாக இருக்கின்றார்கள். பௌதிகக் கலையுணர்வு இவர்களைப் பற்றவில்லை. சில தினங்கட்கு முன் நான் இராசிபுரம் சென்றிருந்தேன். அவ்வூரார் 50,000 ரூபா செலவழித்து ஒரு கோயிலைப் புதுக்கியுள்ளார்கள். விவசாய சம்பந்தமான தொழிற்காட்சிக்குக் கேட்பினும் அவர்கள் 50 ரூபா கொடுக்கமாட்டார்கள். இந்தியமக்கள்பால் இன்னும் சமயப்பற்று இருக்கிறது. அவர்களுடைய தலைவர்கள்பால் அஃதில்லை. இந்திய வாழ்க்கைக்கு இஃதோர் குறைபாடாம். சமயத்திற்கும் பௌதிகக் கலைக்கும் ஏற்படக் கூடிய ஒற்றுமையே பொது மக்கட்குப் பழமையிலுள்ள விருப்பத்தையும் அறிவுடைய சிலர்க்குப் புதுமையிலுள்ள விருப்பத்தையும் ஒன்றுபடுத்தும். இந்நிலை இந்தியாவிற்கு இன்றியமையாதது.

பௌதிகக்கலையிற் கண்ட முடிவுகளை ஒருவருக்குக் காட்ட இயலும். சமயமுடிவுகளை அவ்வாறு காட்டஇயலாது. பௌதிகக்கலைச் சோதனைகள் பல, அதற்குரிய சாலையின்கண் பலமுறை செய்யப்படலாம். நாமும் அவற்றைப் பார்த்தல் கூடும். ஆனால் பௌதிகக்கலையின் முடிவான பிரமாணங்கள் (Laws) அவ்வாறு சோதித்தறியக் கூடியனவாகா. எய்ன்ஸ்டன் கண்ட ஒரு பிரமாணம் முழு சூரியகிரகணகாலத்தில் சோதித்தறியத் தக்கது. அத்தகைய கிரகணம் ஒரோவோர் காலத்தில் பூமியின் ஒரு சிறுபாகத்திலே தெரியக் கூடும். எய்ன்ஸ்டன் பிரமாணமும் பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள ஒரு சிறு தீவிலே பரிக்ஷிக்கப்பெற்றது. இச்சோதனை நம்மில் எத்தனை பெயரால் செய்தறியக் கூடும்? இச்சோதனையை நிகழ்த்திய அறிஞர்களுடைய சொல்லில்வைத்த நம்பிக்கையினாலன்றோ நாம் அப்பிரமாணத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். யோகாப்பியாசத்தினால் சமாதிநிலையை அடையக்கூடுமென யோகிகள் கூறுவர். பஸிபிக் மகாசமுத்திரத் தீவுகட்குச் செல்லுவதைக் காட்டிலும் யோகாப்பியாசம் கடினமானதெனக் கூறினும் பலர் அவ் வப்பியாசத்தைச் செய்திருக்கின்றார்கள். பௌதிகக் கலைஞர்களுடைய சொற்களில் நம்பிக்கையுடையவர்களாய் நேரே கண்டறியக் கூடாத அவர்களுடைய பிரமாணங்களை நம்புகின்ற நாம், யோகிகளுடைய சொற்களிலும் அனுபவத்திலும் ஏன் நம்பிக்கை வைத்தலாகாது? பௌதிகக் கலை, அறிவையே ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை. சமயமும், நம்பிக்கையைமட்டுமே ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை. சமயம் பௌதிகக் கலை ஆகிய இரண்டுமே அறிவையும் நம்பிக்கையையும் ஆதாரமாகக் கொண்டுள.

முதலில் பௌதிகக் கலையின் ஆதிக்கம் நாம் காணும் பொருள்களில் இருந்தது. ஆனால், அது அந்நிலையை இப்போது கடந்துவிட்டது. ஓர் அணுவின் உட்பகுதியை நாம்



காண்பதில்லை. பொருள்கள் யாவும் பூமியினால் கவரப்படுகிற ஒரு சக்தியின் நிலையையும் நாம் காண்பதில்லை. இவ்வாறே இன்னும் பல பிரமாணங்களையும் நாம் பார்ப்பதில்லை. பௌதிகக் கலைக்கு இடமாய்ப் புலனாகிற இவ்வுலகம் புலனாகாத உலகத்தோடு கலந்தே இருக்கிறது. இவ்விரண்டு உலகத்தையும் பற்றியே சமயமும் பௌதிகக்கலையும் இருக்கின்றன. ஆனால் சமயம் காணாதவற்றையும் பௌதிகக்கலை காண்பனவற்றையும் பெரிதும் பற்றி நிற்கின்றன.

ஆகவின், சமயத்திற்கும் பௌதிகக் கலைக்குமுள்ள வேறுபாடு, அவை ஆதாரமாகக்கொண்ட பொருள்களைப் பற்றி யிருக்கின்றனவே யல்லாமல் இயற்கையில் அவைகட்குள் வேறுபாடு இல்லை.

பொதுமக்களுடைய வாழ்க்கைக்குப் பௌதிகக்கலைஞர், ஞானிகள் ஆகிய இருதிறத்தினரும் வேண்டியவர்களே. கலையும் சமயமும் ஒன்றிற்கொன்று மாறுபட்டனவாகா; ஒன்றிற்கொன்று ஆதாரமாகவுள்ளனவேயாம். சமயத்திற்கும் பௌதிகக்கலைக்கும் உண்மையில் வேற்றுமையில்லை. பௌதிகக்கலையைச் சமயத்தின் குழந்தையென்று சொல்லுதல் வேண்டும். இக்கலை சமயத்தை நிரப்ப உள்ளதன்றி அழிக்கவுள்ளதன்று. வெளித்தோற்றத்தைக் கடந்து உண்மை காண்பதே ஞானிகளுடைய நோக்கமும் கலைஞர்களுடைய நோக்கமுமாம்.

# நீலகண்ட யாழ்



இந் நீலகண்ட யாழே பண்டைக் காலத்து, சகோட யாழ் என்னும் பெயரொடு நிலவியது. இவ்வுருவப்படம் தலைவர் - சுவாமி விபுலாநந்தரவர்களுடைய அரிய ஆராய்ச்சியின் பயனாக வெளியாயதாகும். இதன் வரலாறு சென்ற இதழில் வெளியிடப்பெற்றது.

வாகீச முனிவர் அருளிய

# ஞானமிர்தம்

## மூலமும் விளக்கவுரையும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, திருவோத்தூர்]

### அகவல் 5

#### அவையடக்கம்

உரைசால் பகுதிப் புரையோர் போலத்
தமிழ்த்துறை கிரம்பாத் தன்மை யேனை
அறத்தின் விருப்புச் சிறப்பொடு நுந்தப்
பாப்புனை பான்மை நோக்கினென்* வலித்துழி,
எழுதாக் கேள்வியும் கேள்வி; பழிவாழ்
வனோர் கேள்வியும் கேள்வி ; மாண
வருபடை தாங்கிய கிளர்தா ரகலத்(து)
எறிவே லிளைஞர் போலப் பொறிவாழ்
புலப்பகை தாங்கிப் பிறப்பற எறியும்
அறப்போர் வாழ்க்கையும் வாழ்க்கை, திறப்பட
'இம்மையும் பயவா(து) அம்மையும் உதவாது
செச்சைக் கண்டத் தொத்தூன் போல
வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை ; தாவா
ஒருமைத் தன்றே யாயினும் சான்றோர்க்(கு)
எம்முடைப் புன்சொல் தம்முடைச் சிறப்பே
அதனால், அவரினும் அளியம் மற்(று) யாமே கவரா
வனோ ரளிக்குந் தானீ யின்றே;
அவரே, தம்பா டெய்தல் தம்பா லோர்க்கே;
எம்பா டெய்தல் இருமையு முடைத்தே ;
இவ்விரு பகுதியும் எழுத்துச் சொல்யாப்(பு)
அவ்வயி னுடைத்தே†; பொருட்பா டின்றே.

---

*நோக்கினன் என்றும்,
†அவ்வயினடைத்தே என்றும் பாடமுண்டு.

இஃது அவையடக்கம் கூறுமுகத்தால், தமிழ்த்துறை திரம்பாத என்னை, அறநூல் விருப்புமிகுந்து ஊக்குதலால், அகவற்பாவால் நூல்செய்வான் புகுந்தேன்; நன்மையும் தீமையுமுடைய கேள்விவகையும், வாழ்க்கைவகையும் பொதுமையில் ஒருமையுடைய வாதல்போல, சான்றோர் செய்த நூலொடு, யான்செய்த நூலும் பொதுமையில் நூலெனப் படுமாயினும், இந்நூல், அவர் நூலின் சிறப்புத்திகழ்தற்கு ஏதுவாதல் உடைத்து. அதனால், அவரும், அவர்பாற் படாது ஏனைச் சாலார்பால் யான் தங்குதலின் இவரும் என இருபாலாரும் என்னை அருளுவர்; அதற்குக்கேடில்லை. சான்றோர், தம்மினத்தாராகிய சான்றோர் பாலே பெருமை பெறுவர்; யான், அவ்வாறின்றிச் சான்றோர், சாலார் என்ற இருவர்திறத்தும் பாடெய்துவேன். சான்றோர் விரும்பும் குணமும், ஏனையோர்க் குரிய குற்றமும், எழுத்து, சொல், யாப்பு என்ற அவ்விடம் உடையதே யன்றி, இந்நூற்பொருள் உடையதன்று; அது குணமே நிறைந்தது என்கின்றது.

அவையடக்கம் என்பது செய்யுளியலில் அவையடக்கியல் என வழங்கும். "அவையடக்கியலே யரிறபத்தெரியின், வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென், றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே" (தொல். பொ. 425.) என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறினர். இதனால், செய்யுள் செய்வார், வல்லன கூறலும், மாட்டாதன கூறலும் உண்டென்பதும், வல்லன கூறுவார், கூறுதற்கண், "வகுத்துமெய்ந்நிறுத்தல்" முதலிய உத்திநெறி பிழையாது கூறுவர் என்பதும், அதனை யுரைப்போரும் அந்நெறியேயுரைப்பர் என்பதும், மாட்டாதார், மாட்டாதனவே கூறலின், அம்மாட்டாமை தோன்றும் எழுத்து, சொல், யாப்பு முதலிய பகுதியினையும், பொருட் பகுதியினையும் வகுத்துக் கொள்க வென்பரென்பதும், கூறியதனைக் கூறியாங்



குக் கொள்ளாது, கேட்போர் வகுத்துக் கோடலாகியசெயல் வருத்தம் எய்துதல் குறித்து. பணிந்தமொழியால் வழிபடுவர் என்பதும், அறிந்தார்க்கும், இதுகருவியாக அறிந்து, அன்னராதற்குரிய அறியாதார்க்கும் ஒப்பவழி மொழிதல் வேண்டும் என்றற்கு எல்லா மாந்தர்க்கும் என்று கூறுப என்பதும் பெற்றாம். பெறவே, இவ்வகவற்கண், "பொருட்பாடின்றே" (21) என்றதனால், பொருளதுசிறப்பும், "தமிழ்த்துறைதிரம்பாத்தன்மையேனை" (2) என்றதனால், வல்லா கூறினமையும், "சான்றோர்க்கு எம்முடைப் புன்சொல் தம்முடைச் சிறப்பே" (15) என்றும், "ஏனோரளிக்கும் தானீறின்றே" (17) என்றும் கூறியவற்றால்வழிமொழிந்தமையும், "எம்பாலெய்தல் இருமையும் உடைத்தே"(19) என்றதனால், எல்லாமாந்தரையும் நோக்கிக் கூறினமையும், சான்றோர், சாலார் என்ற இருதிறத்தாரையும் வகுத்து நிறுத்தி, நூற்சிறப்பினையும், அம்முறையே வகைப்படுத்திக் கூறினமையின், இந்நூலினையும் அம்முறையேவகுத்துக்கோடல் வேண்டுமென உடம்பொடு புணர்த்தமையின், "வகுத்தனர் கோண்மின்" என்பதும் கூறியவாறு காண்க.

இனி, இவ்வடக்கியல் சூத்திரம் பற்றியதோர் சிற்றாராய்ச்சி செய்தல் மற்றொன்று விரித்தலாமாயினும், அறிஞர் உண்மை துணிந்து உணர்த்துமாறு வேண்டி, அதனை ஈண்டு எழுதுகின்றேன்: இச்சூத்திரத்தின் இரண்டாமடி, "வல்லாகூறினும் வகுத்தனர் கொண்மின் என்று" எனப் பதிப்புக்கள் எல்லாவற்றினும் காணப்பெறுகின்றது. வகுத்தனர் என்னும் முற்றெச்சம் கொண்மின் என்னும் முன்னிலைப் பன்மைவினைகோடலின், முற்றுவாய்பாடு பிழையாது வகுத்தனிர் கொண்மின் என்று வரல் வேண்டும். அது, வகுத்தனர் கொண்மின் என்று வருதல் நேரிதன்று என்று தெரிகிறது. "கண்டு செயற்குரியவை கண்ணினர் கொளலே," "வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்" (தொல். எழுத்து. 405, 483) என்றும், "திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே," "கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே", "ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்", "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்", "சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்" (சொல். 295, 296, 389, 442, 463) என்றும், "கிழவோன் குறிப்பினை யெடுத்

தனர் மொழிதலும்", "உணர்ந்தனர் இயக்கலும் உரியர் என்ப", "பொருளே யுவமம் செய்தனர் மொழியினும்", "வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே", "இயற்சீர்ப் பாற்படுத் தியற்றி னர் கொளலே", "தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்", "இறுத்தியல் மருங்கின் தெரிந்தனர் உள்ள", "இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்", "நரியும் அற்றே நாடினர் கொளினே", "தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்" (பொ. 177, 212, 284, 323, 340, 414, 514, 522, 564, 665) எனப் பிறவிடங்களிலெல்லாம், இந்நெறியில் அர் ஈற்றுப் படர்க்கை வினைமுற்றெச்சமே வழங்கப்பட்டமையின், ஈண்டும் அதுவே பாடம் என்று கொள்ளின், அது முடிதற்குரிய இயைபினையுடைய **கொளல்** எனும் வியங்கோள்வினை பாடமாதல் வேண்டுமேயன்றி, **கொண்மின்** என்னும் முன்னிலைவினை பாடமாதல் கூடாதாம். ஆகலின், இவ்வடக்கியற் சூத்திரத்து இரண்டாமடி, "வல்லா கூறினும் வகுத்தனிர் கொண்மினென்று" என்றுதல், "வல்லா கூறினும் வகுத்தனர் கொளலென்று" என்றுதல் திருத்தமெய்துதல் வேண்டிற்று. இவற்றுள், வழக்குப் பயிற்சியுடைமையின், இரண்டாவது திருத்தமே தக்கதென்பது பொருந்துமாற்றால், இனிது விளங்குதலின், இச்சூத்திரம், "அவையடக்கியலே யரிறயத் தெரியின், **வல்லா கூறினும் வகுத்தனர் கொளலென்**, றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே" (பொ. 425) என்று இருத்தல் வேண்டுமெனத் துணிகின்றேன். இனி, பேராசிரியர், இவ்வடிக்கு "வல்லாதன சொல்லினும், அவற்றை ஆராய்ந்து கொண்மின் என" என்று உரை கூறினாராயினும், உரையாசிரியர், "அரியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல் வேண்டும் என்று" என்றும், நச்சினார்க்கினியர், "வல்லாதவற்றைக் கூறினும் ஆராய்ந்து கொள்க என்று" என்றும் வியங்கோட்பொருண்மை பெய்த் கூறினமையாலும், பேராசிரியர் கூறிய முன்னிலைவினைப் பொருண்மை வியங்கோட்கண் எய்துதற்குரிய இயைபுண்மையாலும், இச்சூத்திரத்தை இவ்வாறு திருத்திக் கொள்ளுதல் அமையும் என்பது தோன்றும். இனி, அறிஞர் ஆராய்ந்து உண்மை துணிவார்களாக.

இனி, இவ்வகவல், "உரைசால் பகுதிப் புரையோர்" (1) என்பது முதல், "நோக்கினென்" (4) என்பதுவரை ஒரு தொடராகவும், "வலித்துழி" (4) என்பது முதல், "அவரினும் அளியம் மற்றியாமே" (16) என்பதுவரை ஒரு



தொடராகவும், "கவரா" (16) என்பது முதல், "பொருட்பா டின்றே" (21) என்பதுவரை ஒரு தொடராகவும் துணித்துக் கொள்ளப்படும்.

உரைசால் பகுதிப் புரையோர் போலத்
தமிழ்த்துறை நிரம்பாத் தன்மை யேனை
அறத்தின் விருப்புச் சிறப்பொடு நந்தப்
4. யாப்புனை பான்மை நோக்கினென்.

இதன்கண் ஆசிரியர் தம் நிரம்பாமை கூறி, இந்நூல் செய்தலைத் தாம் கருதியதற்கு ஏது கூறுகின்றார்.

உரைமுடிபு :—துறைநிரம்பாத் தன்மையேனை, விருப்பு நந்த, புரையோர்போல, யான் யாப்புனை பான்மை நோக்கினென் என்பது.

உரை :—தமிழ் மொழியின்கண் விரிந்துள்ள கலைத் துறைகளை நிரம்பவுங் கல்லாத தன்மையினையுடைய என்னை ஞானப்பொருண்மேற் சென்ற விருப்பம் மிக்கெழுந்து ஊக்குதலால், புகழமைந்த பகுதியினையுடைய பெரியோர்களைப் போல, கவிபாடும் பான்மையினை நினைத்தேன்.

உரை - புகழ்; "உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின்" (சிலப். 2 - 1) என்றாற்போல. புரையோர்-உயர்ந்தோர்; "புரையமன்ற புரையோர் கேண்மை" (நற். 1) என்றார் பிறரும். தமிழின் கலைவகைபலவும் அடங்க, "துறை" யென்றார். இன்ப நிலையமாய்ப் பயில்வாரது அறிவைச் சீர்மைசெய்யும் ஞானவாரிதியாகலின், "தமிழ்த்துறை" யெனப்பட்டது. அதுபற்றியன்றே, மணிவாசகப் பெருந்தகை, "கூடலிறையுய்த்த வொண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" (கோவை. 20) எனச் சிறப்பித்தருளினர். தமிழ்த்துறை ஞானவாரிதியே யென்றற்கு, திருக்கோவையாரைச் சிறப்பிக்கும், "ஆரணங் காணென்ப ரந்தணர் யோகியர் ஆகமத்தின், காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர், ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர், சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச்

செப்பிடினே" எனவரும் அரிய செய்யுளாலும் தெளியப்படும். தமிழின் துறைகளாவன அகமும் புறமுமாகிய பொருட்கூறு என்பர் பேராசிரியர்; இந்நூலின் பழையவுரைகாரர் தமிழின் இயல்பு என்பர்; இவற்றுள் நல்லது கொள்க. எதிர்மறைப் பெயரெச்சம் ஈறுகெட்டு ஏதுப் பெயர் கொண்டது. அறம் என்றது ஈண்டு ஞானத்தை; ஆசிரியர் திருவள்ளுவனாரும் ஞானப்பகுதியினை அறத்துப் பாலில் வைத்தோதுதலாலும், "ஆலதன் கீழறம் நால்வர்க் கருள்செய்தானை" என ஆளுடையவரசர் கூறியவாற்றாலும் துணியப்படும். சிறப்பு - மிகுதி. நுந்தல் - செலுத்துதல்; ஈண்டு ஊக்குதலையுணர்த்திற்று. பா - ஆகுபெயர். செய்தற் கேதுவாகலின் நோக்கினென் என உபசரித்தார்.

யாவர்மாட்டும், உரைக்கப்படுதற்குரிய பகுதிகள் உளவாயினும், உயர்ந்தோரால் உரைக்கப்படுவனவே உரையும், அதுவே அவராற் கொள்ளப்படும் சால்பும் உடைமையின், "உரைசால் பகுதி" யென்றும், உயர்ந்தோர்க்குளதாகிய வுயர்வு அவர்பாற் காணப்படும் உரைசால் பகுதிக் கண்ணதாகலின், "உரைசால்பகுதிப் புரையோர்" என்றும் கூறினார். இனிப்பழைய வுரைகாரர், "மிகுந்தவசனமாகிய பதினெட்டுப் பாடையுமிக வுணர்ந்த பெரியோர்" என்பர். இது புனைவுரையாதலன்றிப் பொருளுரையாகாமையுணர்ந்து கொள்க. உவமமும் அளவையாம் இயைபுடைமையாலும், உயர்ந்தோர் சென்னெறிபற்றிச் சேறல் உலகுயிர்களின் இயல்பாகலினாலும், "போல" என்றார். போலப் பாப்புனைபான்மை நோக்கினென் என இயைக்க. "பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாக" வசிபெற்ற அகத்தியன் முதலிய அறிஞர் பெருமக்களாலும் நிரம்ப வறியப்படாத பெருமையுடைய தமிழ்த்துறையினை, பசுத்தன்மைகெடாத யான், அது நிரம்பல் வாயாது என்றும், அதற்குரிய ஏது அப்பசுத் தன்மை கெடாமையே யென்றும் கூறுவார், "தமிழ்த்துறை நிரம்பாத் தன்மையேனை"யென்றார். தன்மை-பசுத்தன்மை. பதிப்பொருளாகிய பரமன் ஆய்ந்த தமிழ்த்துறையினை, அப்பதிஞானமுடையாரன்றி ஏனைப் பசுபாசஞானங்களுடையார்



நிரம்பவறிதல் கூடாதென்பதனை, "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிக்காண்க" எனவரும் சிவஞானசித்தித் திருவாக்கினால் உய்த்துணர்ந்து கொள்க. உண்மைஞானத்தால் மெய்ம்மையுணர்தல் தலையாய அறமாதலின் ஞானத்தை அறம் என்றும் அதனை யறியுமிடத்துப் பேரின்பம் சுரந்து, மனத்தின்கண் விருப்பம் எழுதலின், "அறத்தின் விருப்பு" என்றும் கூறினார். நலங்காணுமிடத்தெல்லாம் நல்லோர்க்கு அதன்பால் விருப்புத் தோன்றல் இயல்பாயினும், அது மிக்க வழியல்லது, அதன் பயனாய செயல்மேல் உள்ளம் செல்லாமையின், அவ்வாறு சேறற்குரிய விருப்பம் மிக்கெழுந்ததனோடமையாது, "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" (திருமந்.85) என்னும் அருளுணர்வால், கருத்தைச் செயலின்கண் ஊக்கிற்றென்பார் "அறத்தின்விருப்புச் சிறப்பொடுநுந்த" என்றுகூறினார். ஊக்க என்னாது நுந்த என்றதனால்அச்செயல்மிக அருமையுடையதென்பதும், அதுகருதியுள்ளம் மடங்கி நின்றதாயினும், விருப்புச் சிறப்பு அச்செயற்கண் பிடித்து உந்த, செய்தலைநோக்கிற்றென்பதும் கொள்க. உள்ளத்தின் இயற்கைமொழியும், உரைநடைக்குப் பிறப்பிடமும் பாட்டே* யாகலின், "பாப்புனை பான்மை நோக்கினென்" என்றார். ஏனைப்பாக்கள் போலாது பேரெல்லைத்தாகலின், ஆசிரியப் பாவினை ஈண்டுப் "பா" என விதந்தார்.

இதனாற் பயன், தமிழ்த்துறை நிரம்பேனாயினும் ஞானப் பொருட்கண் சென்றவிருப்பு மிக்குற்று என் உள்ளத்தை ஊக்கினமையின், யான் அத்துறைநிரம்பிய பெரியார் போல, தமிழ்ப்பாவால் (அகவற்பாவால்) இந்நூலைச்செய்வான் தொடங்கினேன் என்பதாம். இவ்வாறே, திரிகூடராசப்பக்

---

*"Poetry is nothing but the language of the mind"
—*Francis Jeffrey.*

"The origin of prose is poetry and it is free from the rules of prosody; but good poetry breaks down those rules when it is vigorously engaged in the delineation of human emotion...."—*George Brimley's Poetry and Criticism.*

கவிராயர், "புகழ்தருமறைக்கு மேலோன் புடார்ச்சுன புரத்தின் மேன்மை, நிகழ்தர நிகழ்த்தவல்லை நீகொலென் றெனது நெஞ்சே இகழ்தர வெழுந்த நாணும் இச்சையும் தினம் போராடி அகழ்தர நாணந் தோற்ற தாசையே வென்றதம்மா" என்று தாம்பாடிய திருக்குற்றாலத் தலபுராணத்துக் கூறுதல் காண்க.

> ..............................வலித்துழி,
> எழுதாக் கேள்வியும் கேள்வி, பழிவாழ்
> ஏனோர் கேள்வியும் கேள்வி; மாண
> வருபடை தாங்கிய கிளர்தா ரகலத்து,
> எறிவேல் இளைஞர் போலப் பொறிவாழ்
> புலப்பகை தாங்கிப் பிறப்பற எறியும்
> அறப்போர் வாழ்க்கையும் வாழ்க்கை, இறப்பட
> இம்மையும் பயவாது அம்மையும் உதவாது
> செச்சைக் கண்டத் தொத்தூன் போல
> வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை; தாவா
> ஒருமைத் தன்றே யாயினும் சான்றோர்க்(கு)
> எம்முடைப் புன்சொல் தம்முடைச் சிறப்பே
> அதனால், அவரினும் அளியம் மற்(று) யாமே.

இதன்கண், இந்நூலாசிரியர், சான்றோரோடு சாலாததான், அவர்போலப் பாப்புனையினும், சான்றோர் செய்யுளும் தன் செய்யுளும், வினைமுதல் வகையால், உயர்வு தாழ்வெய்தி ஒத்தல் எய்தாமையின், அப்பெற்றியவாய செயல் சிலவற்றால் ஒருமை நெறி காட்டி, அச்சான்றோர் செய்யுட்குத் தன் செய்யுள் ஏற்றம் பயந்து நிற்றலின், அவராலும் தான் அருளப்படும் இயைபுடையர் என்று கூறுகின்றார்.

உரை முடிபு :—வலித்துழி, கேள்வியும் கேள்வி (ஆதலாலும்), படைதாங்கிய அகலத்து இளைஞர்போல, புலப்பகை தாங்கி எறியும் அறப்போர் வாழ்க்கையும், இறப்பட, பயவாது, உதவாது, செச்சைக் கண்டத் தொத்தூன்போல வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை (ஆதலாலும்), தாவா ஒருமைத்து (என்பது கண்டு நூலெனப்படுமாறு யானும் இதனை யெழுதத் துணிந்தேன்). ஆயினும், சான்றோர்க்கு, எம் சொல், தம்முடைச் சிறப்பே; அதனால், யாம் அவரினும் அளியம் என்பது.

உரை :—அங்ஙனம் உள்ளத்தால் ஊக்கப்பெற்று, பாப்புனை பான்மை நோக்கிய வழியும், தமிழ்த்துறை நிரம்பாமை இடையீடுபடுத்ததாயினும், செய்தலையே உள்ளம் வற்புறுத்தியவிடத்து, எழுதாத நூலாகிய வேதத்தைக் கேட்பதாகிய கேள்வியும், குற்றம்பொருந்திய ஏனையோர் எழுதிய நூலைக் கேட்பதாகிய கேள்வியும் கேள்வியென ஒருமைப்படக் கூறப்படுதலினாலும், தம்மேல் மண்டிவருகின்ற படையினை மாண்புறத் தடுத்துநிற்கும், வண்டுகிளரும் மாலையணிந்த மார்பினையுடைய, எறிகின்ற வேலேந்திய வீரரைப்போல, மெய்வாய் முதலிய பொறிகளிடத்தே தங்கும் ஊறு, சுவை முதலிய புலன்களாகிய பகையைத் தடுத்து, பிறப் பிறப்புக்கள் இல்லையாகும்படி வெல்லும் ஞானத்தாற் பெருமை மிகும் வாழ்க்கையும் நன்னெறிப் பயனாய இம்மை யின்பமும், மறுமை யின்பமும் பெறுதலின்றி, ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதர் போல வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை யென ஒருமைப்படச் சொல்லப் படுதலினாலும், நன்மையும் தீமையுமாகிய இரண்டும் கெடாது ஒருமைப்பட நிலவுதல் கண்டு, யானும் இது நூலெனப் படுமாறு எழுதுவேனாயினேன். ஆயினும், எம்முடைய புல்லிய சொற்களாலாகிய இது, சான்றோர் சிறப்பினையே விளக்கும் கருவியாய் நிற்றலின், யாம் அவர்களாலும் அருளப்படுதலை யுடையேம்.

வலித்தல் - வற்புறுத்தல். இயைபுடைய சொற்கள் பெய்துரைக்கப் பட்டன. எழுதப்படாது தந்தை மகற்குச் சொல்ல, அவன் தன்மகற்குச் சொல்ல இவ்வாறே செவி வழியாக நிகழ்ந்து கேட்கப் படுதலின், வேதத்தை "எழுதாக் கேள்வி" என்ப. உம்மை - சிறப்பு. அறப்போர் வாழ்க்கையும் என்புழியும் அதுவே. கேள்வி - கேட்கப் படுவதன்மேற்று. ஏனோர் கேள்வியும் என்புழியும், வாழ்வோர் வாழ்க்கையும் என்புழியும் உம்மை-இழிவுச் சிறப்பு. தாங்குதல்-தடுத்தல்; "தார்தாங்கிச் செல்வது தானை" (குறள், 767.) என்புழிப்

போல. பொறியென்புழி வழனுருபு விகாரத்தால் தொக்கது. புலப்பகை - இருபெயரொட்டு. செச்சை - ஆடு. கண்டம் - கழுத்து; வடசொற்றிரிபு. தொத்துன் - தொங்குகின்ற அதர்; அதள் என்றும் கூறுப. சிறப்புத் தருவதனைச் சிறப்பு என்றார். அதனல் என்பது கூன். "சீர் கூறுதல் கோடிக் குரித்தே" என்பது தொல்காப்பியம். "அவரே" (18) என் பதுமது. அவரினும் என்றது உம்மை எதிரதுதழீஇய எச்ச வும்மை. இன்னுருபு வதுவினும், மற்று அசை நிலையினும் வந்தன. ஏகாரம் இரண்டனுள் முன்னையது தேற்றமும், பின் னது அசையுமாம்.

அறத்தின் விருப்பம் மிக்கெழுந்து ஊக்கிய தனல், பாப்புனை பான்மை நோக்கினேனுயினும், தமிழ்த் துறை நிரம்பாமை யிடையீடுபடுத்தமையின், அழுங்கிய நெஞ்சிற்குப் பிற்கூறியவாற்ருல் வற்புறுத்தலுற்றமை தோன்ற, "வலித்துழி" யென்ருர். பழையவுரைகாரர், "இசைத்த விடத்து" என்று கூறினர். அதனற் பொருள் சிறவாமை காண்க. "பழிவாழ் வனோர் கேள்வியும் கேள்வி" என்றதனல், "எழுதாக் கேள்வி" குற்றம் சிறிதுமில்ல தென்றவாறு. பழிவாழ் வனோர் எனவே, அவர் கேள்வியும் பழியுடையதென்பதாம். பழிவாழேனோர், "பழியுண்டாக வாழும் பாவகாரிகள்" என்பது பழையவுரை. தம்மைக் குறித்துவரு படையினை மார்புறத்தாங்கி, எதிர்த்தோரைப் புறங்காணும் போர்வன்மையே ஆடவர்க்கு மாண்புதருவ தாகலின், "வருபடைமாணத் தாங்கிய" என்றும், போர் வீரர்க்கு மார்பிற் பட்டபுண் வீரச்சிறப்புத்தரும் மேன்மைய தாகலின், "கிளர்தாரகலத்" தென்றும், பகைவர் விட்ட படையினைத் தாங்கி, அவர் தம்மைக்கடந்து செல்லாவகை யில் கற்சிறைபோல் நின்றெழியாது, அவர் நெருங்காதபடி வேலெறிந்தவண்ணமாய் அசைவு சிறிதுமின்றி நிற்றல் தோன்ற, "எறிவேல் இளேஞர்" என்றும் கூறினர். பொறி வழியெய்திப் பலவகையானும் அலைத்துப் பிறவிக்குரிய வினையகப்படுத்தமுயலும் புலன்களைச் செயலற வொடுக்கி வென்றுவாழும் வாழ்க்கையினும், பேரின்ப நுகர்ச்சிக்குரிய



வாழ்க்கை,யாண்டும் இன்மையின், அதனை, "பொறிவாழ்புலப் பகைதாங்கிப் பிறப்பற எறியும் அறப்பேர் வாழ்க்கை" என்று சிறப்பித்தார். இனி, இதற்குப் பழையவுரைகாரர், "அழகுண்டாகவருகிற படையைத் தாங்கிய, வண்டுகிளரப் படாநின்ற மாலையையுடைத்தாகிய மார்பையுடையசத்துரு பக்கத்தாரையெறியும் வேலையுடைய வீரபுருடரைப்போல, சோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் என்று சொல்லப்பட்ட இந்திரியங்களிலே வாழும் சத்தாதிபுலனு கிய பகைகளைத்தாங்கி, உற்பீசம், அண்டசம், சராயுசம், சுவேதசம் என்னும் நான்குவர்க்கத்துப் பிறப்பையும் அற வெறியும் ஞானவான்கள் திருவுலாச் செய்தருளுதலும் வாழ்க்கை" யென்பர்.

ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதர், அதன் உடற் காதல், உயிர்க்காதல் எதற்கும் பயன் படாது. அஃது அசைந் துழி யசைந்தும், அமைந்துழி யமைந்தும், உடலோடழிவது போல், கீழோர் வாழ்க்கையும், அவன் மனம் இயலுமாறு இயன்று, இம்மைப்பயனும் மறுமைப்பயனும் தாராது, அவர் உடலழிந்தவழி உடனழிந்து கெடும் இயல்பினதாகலின், "செச்சைக்கண்டத் தொத்துன்போல" எனவுவமித் தொழிந்தார். வனை மறுமை வீடுகளை எய்துதற்கும் இம்மை வாழ்வே யேதுவாகலின், "இம்மையும் பயவாது" என்ற தனேடமையாது, "அம்மையும் உதவாது" எனவகுத் தோதினர். மறுமையும் வீடுபேறும் அடங்க, "அம்மை" யென்ருர். ஒருமைத் தென்பது முறையே கேள்விக்கும், வாழ்க்கைக்கும் தனித்தனி சென்று இயையும். "இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும் நன்பகலமையும் இரவும் போல, வேறு வேறியலவாகி மாறெதிர்ந்'து', உளவெனவுணர்ந் தனையாயின்" (அகம். 327) எனச்சான்ருேர் கூறுதலின், "தாவா ஒருமைத்து" என்ருர். எனவே, வேறுவேறு இயல வாகி மாறெதிர்ந்து உளவாயினும், அவற்றிற்கு இடந்தந் துதவும் இவ்விரிந்தவுலகம், இந்நூலையும் வனு கொள்ளும் என்பது கருதினுராயிற்று. மேலும், பெரியோர் பெருமை, சிறியோரது சிறுமைச்செயலால் விளக்கமெய்தி, பலராலும்

சிறப்பிக்கப்படுதல் உலகியலின் நாடோறும் நிகழும்செய்தியாகலினாலும், "நிழலினருமை வெயிலில் தெரியும்" என்னும் பழமொழி இக்கருத்தினைத் துணிவித்தலாலும், "சான்றோர்க்கு எம்முடைப்புன்சொல் தம்முடைச்சிறப்பே" என்றார். எல்லோர்க்கும் அருள்செய்தல் சான்றோர்க்கு இயல்பாயினும், தம்செயலுக்குச் சிறப்பளித்துநிற்கும் தனிஇயைபு குறித்து நோக்கியவழி, அவரது அருள் தமக்குச் சிறப்புநெறியினும் உரித்தென்பது தோன்ற, "அதனால் அவரினும் அளியம் மற்றுயாமே" யென்றார். சுட்டுமுதலாகியகாரணக்கிளவி அருட்பேற்றின் சிறப்புரிமை எய்துவித்தது.

இதனால், வேறுவேறு இயலவாய்மாறெதிர்ந்துள்ள கேள்வியும் வாழ்க்கையும் காட்டி, அவ்வியல்பினால் இந்நாளும் உலகில் நிலவும் என்பது கூறி, இதனையாக்கும் எம்மையும் அச்சான்றோர் சிறப்புற அருளுவர் என்பது கூறியவாறும்.

16. ..............................கவரா
ஏனோ ரளிக்கும் தான் ஈறின்றே;
அவரே, தம்பா டெய்தல் தம்பா லோர்க்கே,
எம்பா டெய்தல் இருமையும் உடைத்தே;
20. இவ்விரு பகுதியும் எழுத்துச் சொல் யாப்(பு)
அவ்வயின் உடைத்தே; பொருட்பா டின்றே.

இஃது, யாம், சான்றோர் போலாது, சாலார் பாலும் அளிக்கப் பெறும் இயைபுடையோம் என்பது கூறி, இந்நூற் பொருள் குற்றமற்ற தாகலின், குற்றமென்பன தங்குவது எழுத்தினும், சொல்லினும், யாப்பினும் என்ற இப்பகுதியிடத்தே என்கின்றது.

உரைமுடிபு :—ஏனோர் அளிக்கும் ஈறு இன்று; அவர் பாடுஎய்தல் தம்பாலோர்க்கே, எம்பாடு இருமையும் உடைத்து; இவ்விருபகுதியினையும், அவ்வயின் உடைத்து; பொருட்பாடு இன்று என்பது.

உரை :—சால்புக்குரிய ஞானவமைதி யின்மையின் சான்றோரால் விரும்பப் படாத ஏனை அறிவில்லாதாருடைய



ஆதரவுக்கு எமக்குக் குறைவில்லை. சான்றோராயின், அவர் பெருமை பெறுவதெல்லாம் தம்மை யொத்த சான்றோரிடத்தே யாகும். யாமாயின், சான்றோர் சாலார் ஆகிய இருதிறத்தாரிடத்தும் பாடு பெறுவேம். இவ் விருதிறத்தாருக்கு முரிய நன்மை தீமைகளை, இந்நூற்பொருள் நிற்கும் எழுத்து, சொல், யாப்பு என்ற இவ்விடம் உடையதே யன்றி, பொருளிடத்துக் குற்றம் இல்லை.

"கவர்வு விருப்பாகும்" (சொல். 362.) என்ப வாகலின், விரும்புதற்குரிய வினைமுதலும், படாமைக்குரிய ஏதுவும் வருவிக்கப் பட்டன. அளி-ஆதரவு. தான் என்பது கட்டுரைச் சுவைபயந்து நின்றது. அவரே-கூன். அவர் தம்பாடு எய்தல் கூறவே, யாம்எம்பாடு எய்துதல் கொள்ளப்பட்டது. இருமை-இருதிறத்தார் மேற்று. பகுதியும் என்புழி இரண்டாவது தொக்கது. பொருளினை வேறே வாங்கிக் கொண்டமையின், எழுத்தும், சொல்லும், யாப்பும் கூறப்பட்டன.

ஞானவமைதியுடையாரை விரும்பியவழி, அவர் கேண்மையெய்தி, சான்றோர் செய்வினைச் சிறப்பைக்கெடுத்து, பிறவிக் கேதுவாகிய அஞ்ஞானத்தை யூட்டுமாகலின், சாலாரை, "கவரா ஏனோர்" என்றார்; "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும், சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை-யறப்பித்துப், பத்த ரினத்தனாய்ப் பரனுணர்வி னாலுணரும், மெய்த்தவரை மேவா வினை" (சிவ. போ. சூ. 12. அதி. உ. உதா.) என்ற திருவாக்குமஇதனைவலியுறுத்தும். ஏனோர்க்குரிய ஞானமின்மை எம்மிடத்தும் உண்மையின், தம்மினத்து எம்மையும் கொண்டு, தம் ஆதரவால், எம்மை அளித்தல் அவர்பால் பெரிதும் உண்டு என்பார், "ஏனோர் அளிக்கும் தான் ஈறு இன்றே" என்றார். "புலமிக்கவரைப் புலமை தெரிதல், 'புலமிக்கவர்க்கே புலனாம்" (பழமொழி) என்பவாகலின், சான்றோர் சால்பினை அச்சான்றோரேயறியும் தகுதியுடையரென்பது பற்றி, "தம்பாடெய்தல் தம்பாலோர்க்கே" என்றும், "எம்முடைப்புன்சொல் தம்முடைச் சிறப்பே" என்றும் கூறினார். "கவரா ஏனோர்" என்று கூறியதனால், இருதிறத்தாரும் அளித்தற்குரிய தன்மை தம்பால்

இருத்தலைக் காட்டினாராகலின், ''எம்பாடெய்தல் இருமையும் உடைத்தே'' என்றார். பேராசிரியர் முதலிய தமிழ்ப்பெருமக்களால் கொள்ளப்படாது, விலக்கப்படும் இலக்கணச் சிறுமையுடைமையின், அணியினை விலக்கி, ஏனை எழுத்தும், சொல்லும், இவற்றானியன்ற யாப்புமே கூறினார். செய்யுட்குரிய வனப்புவகையுள் அடக்கிக் கொள்ளப்பெறும் தகுதிபெறின், அணி, யாப்பின்பால் அடங்குமாகலின், அதனைக்கூறாராயினர் என்றுமாம். பழையஉரைகாரர், அணியினையும் கூறிக்கொள்வர். இந்நூற்பொருள் பரமனருளிய ஆகமப்பொருளாகலினாலும், அதன்பாற் குற்றமின்மை உலகமறிந்ததாகலினாலும் ''பொருட்பாடின்றே,'' என வாளாது கூறினார்.

இதுகாறும் கூறியவாற்றால், தமிழ்த்துறை நிரம்பாத் தன்மையேனாகிய என்னை அற நூற்கண் சென்ற விருப்புந்துதலால், அந்நூற் பொருளைத் தமிழ்ப்பாவால் இயற்றத் தொடங்கினேன்; கேள்வி, வாழ்க்கை என நின்றவற்றுள், பெரியதும் சிறியதும் பொதுவகையால் ஒருமையுற நிலவுதலின், துறை நிரம்பினோர் பாவொடு, அது நிரம்பா என்பாவும் ஒருமையுற நிலவுமாயினும், உயர்ந்தோர் பாவின் உயர்வுடைமையினை, சிறியேன் பாவின் சிறுமை யுடைமை சிறப்பித்தலின், அவ்வுயர்ந்தோராலும், சிறியேனாகலின் சிறியோராலும் அளிக்கப்படும் இயைபுடையேன் என்பதும், ஏனை உயர்ந்தோர் போலாது, யான் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற இருதிறத்தாரிடத்தும் பாடு பெறுகின்றேன் எனத் தன்னை வியப்பதுபோல அடக்கியலும், இந் நூற்பொருள் பரமனருளிய தாகலின், குற்றங் காண்டற் குரியவை நூற்பொருளை நுதலிவரும் பாக்களின் எழுத்து, சொல்முதலிய அமைதியேயென்பதும் கூறி, அவையடக்கம் கூறும் ஆன்றோர் ஆசாரமும் இதுவென அருளியவாறும்.

# சமயச் செய்திகள்

[உதவிப் பத்திராசிரியர்]

## சமயமும் ஆராய்ச்சியும்

சர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்திற் பேசியபோது கூறிய சில குறிப்புக்கள் வருமாறு:—

இளைஞர்களே புதியனவும் வளர்ச்சிக் குரியனவுமான கருத்துக்களையும் எண்ணங்களையும் உடையவர்கள். தற்கால இளைஞர்களுட் சிலர் பழமையானவை யாவும் அப்பழமை கருதியே நன்றாகாவென விலக்குகிறார்கள். அவர்கள் தங்கள் அறிவைப்பயன்படுத்தாதவர்கள்; புதுமைக்கு அடிமைப்பட்டவர்கள்; கண்மூடித் தனமாகவே மேல் நாட்டைப் பின்பற்றுகிறவர்கள்.

* * *

ஆராய்ச்சியின் ஊக்கத்திற்கும் சகிப்பின் வளர்ச்சிக்கும் துணைசெய்யாத சமயம் சமயமாகாது. சமயமும் எண்ணமும் இறந்துபட்டதாக இல்லாமல் உயிருள்ளன வாகவும் சக்தி வாய்ந்தன வாகவும் வளர்ச்சி பெறுவன வாகவும் இருத்தல் வேண்டும். ஆராய்ச்சியே எல்லாச் சமயங்களின் உயிர். எண்ணத்தின் உயிரும்அதுவே.வெளியாசாரமான வெறும்பிரார்த்தனைகளும் பலிகளுமே சமயமாகா. இன்ப துன்பங்களோடு கூடிய மனித வாழ்க்கைப் போரிலே வழிகாட்டியாகவுள்ள தெதுவோ அதுவே சமயம். சமயம் உற்சாகத்தையும் முயற்சியையும் உண்டு பண்ணக் கூடியது. உற்சாகமும் முயற்சியும் இல்லாதவர் சமயத்தைச் சார்ந்தவராகார்.

* * *

மாணவர்கள் மனிதத் தன்மையைக் காப்பாற்ற முன்வரவேண்டும். நாம் தற்போது அடிமைகளாயிருக்கிறோம்.

நாம் சிறு சச்சரவுகளைப் பொருட்படுத்தி அவைகட்குக் கட்டுப்பட்டிருக்கும் வரை அடிமைகளாகவே யிருப்போம். நாம் சமய, மாகாண, தேசீய, சாதீய வேற்றுமைகளைப் பொருட்படுத்தாது,எல்லாக் குறிக்கோள்களைக்காட்டிலும் மிக உயர்ந்ததும் பெரியதும் தெய்வீகமானதுமான மனிதத் தன்மையின் குறிக்கோளைப் பற்றிக் கொள்ளல் வேண்டும்.

## இந்துக் கோயில்களும் இந்திய இசையும்

மிஸ். டினைஎஸ்கா என்னும் பெண்மணி இந்தியக்கலைகளை யறியும்பொருட்டுப் போலந்தினின்றும் இந்தியா போந்துள்ளார். அவ்வம்மையார் தென்னிந்தியாவில் மூன்று மாதங்கள் கழித்தார். அவர், திருவனந்தபுரத்திலே இந்தியாவைப்பற்றிப் பேசியபோது, இந்துக் கோயில்களைப்பற்றியும், இசைக் கலைகளைப்பற்றியும் பேசியதன் சுருக்கமாவது:—

இந்துக் கோயில்களினுள் உறைகின்ற இரகசிய சக்தி என் உள்ளத்தை ஈர்த்தது. அவைகள் மின்சார சக்தி நிறைந்துள்ள கருவிகளைப்போல் இருக்கின்றன. போலந்தில் உலக மாதாவுக்கென அமைக்கப்பட்டுள்ள இரண்டிடங்களைத் தவிர மேல்நாடுகளில் எவ்விடத்தும் இத்தகைய சக்தியைப் பார்க்கவில்லை. இச்சக்தியிலும் பேதங்கள் உள. சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ஆகிய இம் மூவிடங்களிலுமுள்ள சக்தி ஒன்றிற்கொன்று சிறிது பேதப்படுகிறது. ஆனால் ஒவ்வோரிடமும் சக்திக் களஞ்சியமாகவே இருக்கின்றது. திருச்செந்தூர்க் கோயிலில் தியானஞ் செய்திருந்தபோது அச்சக்தி மிகுதியும் பாய்வதை உணரநேர்ந்தது.

இந்திய இசை மிக ஆச்சரியமான தன்மையுடையது. அது ஒருவனை நேரே தெய்வ நிலையிற் சேர்க்கவல்லது. மேல்நாட்டு இசை மிகுதியும் மனச்சலனத்தைச் செய்யும். இந்திய இசை தியானத்திற்குரிய உயர்ந்த மன அமைதியைத் தரும். இவ்விரண்டு இசைகளையும் கலத்தல் கூடாது. இவற்றைச் சிலர் கலக்கச் செய்யும் முயற்சி, இந்தியக் கலை



துப் பெருந்தீங்கு செய்வதோடு இந்திய இசையின் தூய்மையை அழித்து,அதுபற்றிய தப்பெண்ணத்தைப் பரப்பும்.

## சிறப்பாற் சாதி யில்லை

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே, சம்ஸ்கிருத பண்டிதராகிய பி. பி. எஸ். சாஸ்திரியார் அவர்கள் சம்ஸ்கிருத நூல்களைப் பற்றி ஒரு சொற்பொழிவாற்றியபோது, சாதி வேற்றுமையைக் குறித்துக் கூறியதாகவுள்ள சில குறிப்புக்கள் வருமாறு:—

சமயப்பகையும் வகுப்புப் பூசலும் மிகுந்துள்ள இந்நாளில், வேத காலத்திலிருந்த அவற்றின் நிலைமையை ஆய்தல் மகிழ்ச்சியைத் தரும். சாதிப் பிரிவு இப்போது காணப்படுவதுபோல், கடினமான நிலையில் அப்போது இருந்ததில்லை. உயிரின் இயற்கையை ஆய்ந்து உண்மை காண்டற்பொருட்டு நிகழ்ந்த வாதங்களில், எல்லாச் சாதியினரும் தாராளமாகக் கலந்து கொண்டார்கள். அவ்வாதங்களில் தாழ்ந்த சாதியினரென்போர் பிராமணர்களைத் தோல்வியடையச் செய்திருக்கின்றார்கள்.

வேத காலத்தில், பெரியோரென்போர் யாவராக இருப்பினும், எந்த வகுப்பில் பிறந்தவராக இருப்பினும் அவர்கள் பெரியோராகவே யாவராலும் மதிக்கப்பட்டார்கள். தற்செயலாய் நேரக் கூடிய பிறப்பு பாராட்டப்படவில்லை. அவர்கள் செய்கையாற் பெற்ற சிறப்பே பாராட்டப் பெற்றது. கீழ்க்குடியிற் பிறந்தோர் உயர்ந்த நிலையை அடைதல் கூடாதென்னும் நியதியும் இருந்ததில்லை. விசுவாமித்திரர் பிராமணியாதற்காக முயன்ற வரலாற்றினால், அக்காலத்திலே ஒரு சாதிக்கும் மற்றொரு சாதிக்கும் இடையே கடினமான தடைகள் இருந்ததில்லை யென்பதை உள்ளத்தில் பதிய வைத்தல் வேண்டும்.

## "ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த இந்தியா"

பண்டைப் பொருள்களைக் கொண்டு அக்கால நிலையை அறிந்து கூறும் இலாக்கா டெப்புட்டி டைரக்டர் கெ. என். தீக்ஷித் என்னும் பெரியார் மேற்கண்ட பொருள்குறித்துப் புதிய டெல்லியில் ஒரு சொற்பொழிவாற்றினார். அவர், முன்னே நாகரிகமுள்ள நாடுகளாக முன்னணியில்இருந்தவற்றோடு இந்திய நாடும் இருந்ததென்றும், கிறிஸ்துவுக்கு 3000 அல்லது 4000 ஆண்டுகட்கு முன்னமேயே இந்தியா மிக உன்னத நிலையை அடைந்திருந்தது என்பதைக் காட்டக் கூடிய பொருள்கள் இண்டஸ் பள்ளத்தாக்கிலே காணப்பட்டனவென்றும், ஒழுங்கும் விசாலமுமான தெருக்களைக் கொண்ட நகரங்களும் அதற்குரிய பலபொருள்களும் காணப்பட்டனவென்றும், அப்போதைய சமயமும், அவர்களுடைய சிற்பம் கலை முதலியவற்றைப்போல் ஆடம்பரமற்ற ஒன்றாகவும்,ஆனால் திறமையானதாகவும் இருந்திருக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

## முஸ்லிம்களும் வெள்ளிக்கிழமையும்

இராமநாதபுரம் ஜில்லாவில் சிக்கல் என்னும் ஊருக்கருகிலுள்ள கடற்கரைக் கிராமம் ஒன்றில் இந்து முஸ்லிம்கள் கடலிலே முறைபோட்டுக்கொண்டு மீன் பிடித்து வந்தார்கள். இப்போது முஸ்லிம்கள், விரத தினமாகிய வெள்ளிக்கிழமைதோறும் எவரும் மீன்பிடிக்கக் கூடாதெனத் தடைசெய்கிறார்களாம். இதனால் இந்துக்கட்கும் அவர்கட்கும் சச்சரவு ஏற்பட்டு அரசாங்கத்தார் தலையிட்டுள்ளார்கள்.

---



செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
உயர்கலை யதனில் தோன்றி அறிவினை உதிக்கப் பண்ணும்.

**(உரை)** நியதிதத்துவம் அக்காலத்தின் பின்னாக மாயையினின்றுந் தோன்றி அவரவர் செய்த கன்மம் அவரவரே நுகருமாறு நியமிக்கும். அதன்பின் அம்மாயையினின்றே கலைதோன்றி ஆணவத்தை ஏகதேசத்தின் நீக்கி ஆன்மாவின் கிரியாசத்தியை விளக்கி வினைக்கீடாக வரும் போகத்திற் செலுத்தி நிற்கும். அக்கலையினின்றும் வித்தை தோன்றி அவ்வான்மாவினது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கி அதன்கட் செலுத்தி நிற்கும். இஇ

விச்சையின் அராகந் தோன்றி வினைவழி போகத் தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி ஆன்மா
நிச்சயம் புருட னாகிப் பொதுமையின் நிற்ப னன்றே. கசகூ

**(உரை)** அவ்வித்தையினின்றும் அராகந் தோன்றி இச்சாசத்தியை விளக்கி அப்போகத்திற் செலுத்தி நிற்கும். இவ்வாறு கலை முதலிய மூன்றுந் தொழில் முதலிய மூன்றனையும் விளக்கியவழி, கன்மத்தை வரையறுத்தலும் நியமித்தலுஞ் செய்யுமுகத்தான் உபகரிப்பனவாய காலநியதிகளும் உளப்படப் பஞ்சகஞ்சுகமுடைய உயிர், அவ்விச்சை முதலிய மூன்றனையும் ஏகதேசத்தின் மருவிப் பொதுவகையாற் புருட தத்துவமெனப் பெயர்பெற்று அப்போகத்தினுன்முகமாய் நிற்கும்.

சிறப்பு வகையாற் புருடதத்துவமென நிற்றல் மூலப்பகுதியிற்றோன்றும் அவிச்சை முதலிய பஞ்சக்கிலேசமும் உடைத்தாய வழியே என்பார், ஈண்டுப் பொதுமையின் நிற்பனென்றார். போகத்துன்முகமாகிய உயிரே புருட தத்துவமென நிற்பதன்றி வேறில்லையென்ப துணர்த்துவார், நிச்சயம் புருடனாகி என்றார். இக

வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையில் தோன்றித்
தருங்குண மூன்றாய் ஒன்றிற் றொன்மூன்றாய் மும்மூன் றாகும்
இருங்குண ரூப மாகி இயைந்திடு மெங்கும் ஆன்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்த மாமே. கசள

(உரை) அதன்பின் மூலப்பகுதி கலையினின்றும் அவ்வியத்த குண வடிவாய்த் தோன்றித் தன்கணின்றும் வியத்தமாய்த் தரப்படுங் குணதத்துவஞ் சாத்துவிக முதலிய மூவகையாய் அவற்றுளொவ்வொன்று மூத்திறப்பட்டு ஒன்பது வகையாம். போகத்திற்குச் சாதனமாய தன்கட்டோன்றும் புத்தி முதலிய தத்துவங்களும் குணவடிவேயாய் உயிரைப் பந்திக்கும். அதனாற் போகநுகரும் இடமெங்கணும் உயிரும் அக்குண ரூபமாய் நிற்கும். இள

சித்தமாம் அவ்வி யத்தம் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்திஅவ் வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும். கசஅ

(உரை) குணதத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப்பட்ட மூலப்பகுதி, அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி, விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சையினையுந் தோற்றுவிக்கும். அதன்பின்பு புத்திதத்துவம் அந்தக் குணதத்துவத்தினின்றுந் தோன்றி அவ்வவுயிர்கள் செய்த புண்ணிய பாவங்கள் தன்பாற் சாரப்படுதலும், அவ்விருவினைக்கீடாக வந்த விடயத்தை இஃதின்னதென நிச்சயித்தலும், நிச்சயித்தபின் சுகதுக்கமோகவடிவாய்ப் பரிணமித்தலும், பரிணமித்த வழி உயிரின் அறிவு தொழில்கட்கு விடயமாதலுமுடைத்தாய் நிற்கும்.

'சித்தமாம் அவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ் செய்யும்' என்பதனைச் சித்தத்தின்மேல் வைத்துரைப்பாருமுளர். *"சிந்தைநினைவையம் வந்துதருமனமொழிய வகுப்பொணாதே" எனப் புடைநூலாசிரியர் ஓதுதலின், மனத்தின் பின்னதாயதன்கண் அடங்குஞ் சித்தத்தை ஈண்டுக் கூறுதற்கோரியைபின்மையானும், புடைநூலாசிரியர் அவ்வாறோதாமையானும், சிவாகமங்களோடு முரணுதலானும், அவ்வுரை போலியென்றொழிக. ஈண்டுச் சிந்தனையென்றது ஏற்புழிக்கோடலான் விபரீதவுணர்வின்மேற்றாயிற்று. உம்மை இறந்தது தழீஇயது. கன்மாவென்றாற்போல வியத்தமென்பது அம்முக்கெட்டு உருபேற்று வியத்திலென நின்றது. அகரம் சுட்டுப்பொருட்டு. சார்ந்து சாரப்

* சிவப்பிரகாசம் - பொது - க.



பட்டு. பேணி பேணப்பட்டு. பித்துப்போல உயிரை மயக்குதலாற் சுகதுக்கமோகங்களைப் பித்தென்றார். மயங்குதல் ஈண்டுப் பரிணமித்தல். இஅ

ஆங்காரம் புத்தி யின்கண் உதித்தகந் தைக்கு வித்தாய்
ஈங்கார்தான் என்னோ டொப்பார் என்றியான் என்ன தென்
றீங்காதே நிற்குந் தானும் மூன்றதாய் நிகழு மென்பர் [றே
பாங்கார்பூ தாதி வைகா ரிகம்தைச தம்தா மனன்றே. கசகூ

(உரை) அப்புத்தி தத்துவத்தினின்றும் அகங்காரதத்துவந் தோன்றி, என்னோடொப்பாரில்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் வாயிற்காட்சிக்கு விடயமாய்த் தோன்றியதொன்றனை இஃதின்னதென்று புத்திதத்துவ நிச்சயிக்கும்படியாக யானென்றும் எனதென்றும் அதன்கண் ஒருப்பட்டெழுந்து ஆன்மாவோடும்வேற்றுமையின்றி நிற்கும். அதுவுங் குணவேற்றுமைபற்றிப் பூதாதி முதலிய வேறுபாட்டான் மூத்திறப்படும்.

அகங்காரம் ஆங்காரமென மரீஇயிற்று. நீங்காது நிற்குமெனவே, அது கலைபோல வினைமுதற்காரகமென்று உபசரிக்கப்படுமென்பதாயிற்று. இகூ

மனமது தைச தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையின் நிற்கு மாங்கே
இனமலி சோத்தி ராதி கன்மஇந் திரிய மெல்லாம்
முனமுறை செய்த வைகா ரிகம்தரு மென்பர் முன்னோர்.

(உரை) அம்மூன்றனுள், தைசத அகங்காரத்தினின்றும் மனந் தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும், பின்னதன்கணையுற்று நிச்சயித்தற்கண்ணதாகிய வேட்கையை விளைத்தும் நிற்கும்; மனத்தின் பின்னதாக ஞானேந்திரியங்களும் அத்தைசத அகங்காரத்தினின்றே தோன்றும். ஏனை வைகரி யகங்காரத்தினின்றுங் கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும்.

சோத்திராதி தோன்றுமெனச் சொல்லெச்சம் வருவித்துரைக்க.

நற்செவி துவக்குக் கண்நா நாசிஐந் தினையு நல்லோர்
புத்திஇந் திரிய மென்று புகன்றனர் இவைத மக்குச்

சத்தநற் பரிச ரூப இரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக அடைவினின் மருவு மென்றே.

(உரை) அவ்விருவகை இந்திரியங்களுள் ஞானேந்திரியங்களாவன சோத்திரமுதலிய ஐந்துமாம். அவற்றிற்கு விடயமாவன முறையே சத்தமுதலிய பூதகுணம் ஐந்துமாம். சக

வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
மீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்தம்
ஊக்கமார் ஐந்து மைந்தின் தொழிலென ஓதி னாரே. கருஉ

(உரை) வினைக் கன்மேந்திரியங்களாவன வாக்கு முதலிய ஐந்துமாம். இவை தொழில் செய்யுங் கருவியாகலின் ஞானேந்திரியங்களின் வேறாக வைத்துக் காணப்படும். இவற்றின் தொழிலாவன முறையே வசன முதலிய ஐந்துமாம்.

அற்றேல், ஆன்மாவின் ஞானக்கிரியைகளை விளக்குதற்கு இந்திரியம் அந்தக்கரணங் கலாதியென்னும் முத்திறத்துள் ஒன்றே யமையுமாகலின் ஏனைய மிகையாம்போலுமெனின், அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யுள் என்பது. சுஉ

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகும்
ஓயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகும்
ஆய்வார்கட் கராக மாதி அவற்றினுட் கருவி யென்பர்
மாயாள்தன் வயிற்றி வற்றால் துடக்குண்டு வாழு மான்மா.

(உரை) அவ்விருவகை இந்திரியங்களும் ஒன்றனை விடயிக்குறுவார்க்கு உடம்பின் புறத்தே தோன்றி விடயிக்கும் புறக்கருவிகள்; மனமுதலாயின அவ்விந்திரியங்களால் தரப்பட்ட விடயத்தை உடம்பின் அகத்தே நின்று விடயிக்கும் உட்கருவிகள்; வினைக் கலாதிகளாவன அவ்வந்தக் கரணங்களான் விடயிக்கப்பட்டு வந்த பயனை ஆன்மாவின் இச்சாஞானக்கிரியைகட்குப் பொருத்துவனவாய உள்ளந்தக் கரணங்களாம்; இவை தம்முள் வேற்றுமையாகலின் இம்முத்திறக் கருவிகளும் ஒருதலையான் வேண்டப்பட்டு உயிரைப் பந்தித்து நிற்கும்.



மாயாளெனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி மதம்பற்றி; உருவகஞ் செய்தற்பொருட் டெனினுமாம். ஓயாமை மனத்துக்கடை. சுந

ஓசைநற் பரிச ரூப இரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தின்
நேசஇந் திரியங் கட்கு நிகழுறி விதனாற் காண்டும்
ஆசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான். கருச

(உரை) அவ்விருவகை இந்திரியங்களுந் தோன்றியபின் வினைப் பூதாதி யகங்காரத்தினின்றுஞ் சத்த முதலிய தன்மாத்திரை ஐந்துந் தோன்றி அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு அக்கஞ் செய்வித்து உடனிற்கும். இத்தன் மாத்திரைகள் ஐந்தும் அந்தக்கரணங்கள் மூன்றுமாகிய எட்டுங் கூடிப் புரியட்டக உடம்பாமென்றறிக.

மாத்திரையென்றது தலைக்குறை. விடயவடிவாகிய சத்தாதிகட்குந் தன்மாத்திரை வடிவாகிய சத்தாதிகட்குந் தம்முள் வேற்றுமை காணமாட்டாதாருக்கு வேற்றுமை காட்டுவார், மனாதி தன்மாத்திரை புரியட்டகமென்பதூஉமுடன் கூறினார். சுச

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண் தொடக்கியே ஒன்றுக்கொன்
றேற்றமா மோசை யாதி இருங்குண மியைந்து நிற்கும்[றங்(கு)
ஆற்றவே விடயபூதம் அங்காங்கி பாவத் தாமே. கருரு

(உரை) அச்சத்த முதலிய தன்மாத்திரைகள் ஐந்தினும் நின்று முறையே ஆகாய முதலிய தூலபூதம் ஐந்துந் தோன்றி அவற்றுடன் பிரிப்பின்றி முறையே ஒன்றற்கொன்றேற்றமாகிய சத்த முதலிய குணங்கள் வியத்தி ரூபமாக உடையனவாய் நிற்கும். இவ்வைம் பெரும் பூதங்கள் தன்மாத்திரையோடு கூடிநின்று இந்திரியங்களின் தொழிற்பாட்டை யாக்குதற்கு இவற்றின் காரிய பூதங்களாகிய தாத்துவிகங்கள் அறுபதும் அங்காங்கி முறைமையவாய் உடனிற்கும்.

ஆற்றுதல் வல்லுதல். விடயமென்றது ஈண்டுக் காரியமென்னுந் துணையாய் நின்றது. இவை பதினான்கு செய்யுளானுந் தத்துவங்களொன்றினொன்று தோன்று முறைமையும் அவற்றின் தொழிற்

பாடும் பயனும் தாத்துவிகங்களதியல்புங் கூறப்பட்டன. இந்தத் தத்துவங்களெல்லாம் அகமும் அகப்புறமும் புறமுமென மூவகைப்படும்; அவற்றுள் பூதங்களின் வைத்துப் புறப்பூதங்களிற்படும் விசேடங் கூறுகின்றார். கூ௫

இரந்தர மாகி வான்றன் இடங்கொடுத் திடும்ச லித்துப்
பரந்தவை திரட்டும் கால்தீச் சுட்டொன்று வித்தல் பண்ணும்
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயும் நீர்மண் தானும்
உரந்தரு கடின மாகித் தரித்திடும் உணர்ந்து கொள்ளே.

(உரை) ஆகாய முதலிய ஐம்பெரும் பூதங்கள் முறையே வெளியாதல் இடங்கொடுத்தல் முதலிய குணமுந் தொழிலும் உடையன.

மண்புனல் அனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகும்
தண்பிறை மூன்று கோணம் தருமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மைகறுப்பொடு தூமவன்னம்
எண்தரும் எழுத்துத் தானும் லவரய ஹவ்வு மாமே. கருள

(உரை) அவை நிலமுதலாகக்கொண்டு முறையே நாற்கோண முதலிய ஐவகை வடிவும் பொன்மைமுதலிய ஐவகை நிறங்களும் லகாமுதலிய ஐவகைப் பீசங்களுமாகிய இவையுமுடையன. கஎ

குறிகள்வச் சிரத்தி னோடு கோகந தஞ்சு வத்தி
அறுபுள்ளி அமுத விந்து அதிதெய்வம் அயன்மா லாதி
செறிபுக ழீச னோடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலைஐந் திற்கும் நிகழ்த்துவர் இந்த நீர்மை. கருஅ

(உரை) வச்சிரமுதலிய அடையாளம் ஐந்தும் அயன் முதலாகிய அதிதெய்வம் ஐந்துமாகிய இவையும் அப்பூதங்கள் முறையே யுடையனவாம்; இவை நிவிர்த்திமுதலிய கலைகட்கும் இவ்வாறே கூறப்படும்.

இவை மூன்றுசெய்யுளானும் புறப்பூதங்களதியல்பு வேறெடுத்துக்கொண்டு வகுத்துக் கூறப்பட்டது. ஏனை யகப்பூதங்களதியல்பு நேச இந்திரியங்கட்கு நிகழறிவிதனாற் காண்டுமெனவும், அகப்புறப் பூதங்களதியல்பு ஆசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்டகந்தானெனவும், சூக்குமபூதமாகிய தன்மாத்திரைக் கோதியவாறுபற்றி அறியக் கிடந்தன. கஅ



சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகை மையின் இயம்பும் இவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன் னியங்க ளாந்து
சித்தசித் தான்மா வொன்று முப்பதும் அசித்தே செப்பில்.

(உரை) இயைபுபற்றி மேலைச்சூத்திரத்துட் கூறிப்போந்த சுத்த தத்துவங்கள் ஐந்துடன் ஈண்டுக் கூறிய தத்துவ முப்பத்தொன்றும் உளப்படத் தொகையான் முப்பத்தாறு தத்துவமாம். இவற்றுள், முன்னைய ஐந்துஞ் சடமாயினுஞ் சிற்சத்திக்குச் சுதந்திரவடிவாகலிற் சைதன்னியமெனப்படும்; ஏனை முப்பத்தொன்றனுட் புருடதத்துவஞ் சார்ந்ததன் வண்ணமாய்ச் சித்தசித்தெனப்படும்; அஃதொழிந்த முப்பதும் அசித்தெனவேபடும்.

சித்தசித்தென்றது தமிழ்நூலின் முடிபு. இதனான் மேற்கூறிப் போந்த தத்துவங்களுக்குத் தொகையும் அவற்றதியல்புங் கூறப் பட்டன. கூக

ஐந்துசுத் தத்தின் கீழேழ் சுத்தாசுத் தம்அசுத் தந்
தந்திடும் புமான்கீ ழெண்மூன் றாயதத் துவஞ்சீ வற்கு
வந்திடும் பிரேர காண்டம் மருவுபோ கசயித் திரத்தோ(டு)
அந்தமில் அணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே. கூ௦

(உரை) இத்தத்துவம் முப்பத்தாறனுள், முன்னைந்தும் நடுவண் ஏழும் பின்னிருபத்து நான்கும், முறையே, சுத்தம் மிச்சிரம் அசுத்தமெனவும், பிரேரகாண்டம் போகசயித்திருகாண்டம் போக்கியகாண்டமெனவுங் காரணக்குறி பெற்று, முத்திறப்படும்.

முன்னைய ஐந்துஞ் சுத்தமாதல் மேற்கூறிப் போந்தமையின் ஈண்டு அனுவதித்தொழிந்தார். போகசயித்திருவென்னும் வடசொல்லினுகரமும் அதனோடென்பதனுள் அன்சாரியையும் விகாரத்தாற்றொக்கன. அது பகுதிப்பொருள் விகுதி. இவை காரணக்குறியாமாறு உய்த்துணர்ந்துகொள்க. இதனானே அம்முப்பத் தாறு தத்துவமும் மூவினமாதல் கூறப்பட்டது. எ௦

தத்துவ ரூப மாகும் தரும்அரு வுருவ மெல்லாம்
தத்துவம் தூல சூக்க பரங்களு மாகி நிற்கும்

தத்துவம் தன்னிற் சாரும் அணுக்கள்சா தாக்கி யத்தில்
தத்துவ சத்தம் சாரும் சகலமும் தத்து வங்காண். ௧௯௧

(உரை) அருவுமுருவும் அருவுருவுமாயுள்ள காரியப்பிரபஞ்சம் அனைத்தும் இத்தத்துவவடிவேயாம். இம்முப்பத்தாறுந் தூலதத்துவஞ் சூக்குமதத்துவம் அதிசூக்கும தத்துவமென ஒரோவொன்று மூவகைப்பட்டுப் பொதுவும் பொதுச்சிறப்புஞ் சிறப்புமாய் நிற்கும். இத்தன்மையவாய தத்துவங்களை யதிட்டிக்கும் அணுபக்க சம்புபக்கத் ததிதெய்வங்களும் அவ்வத் தத்துவப்பெயர் பெறுமாகலான் எல்லாப் பொருளையுந் தத்துவங்களின் வைத்துக் காண்க.

எனவே, இத்தத்துவம் முப்பத்தாறும் உணர்ந்தானுக்கு எல்லாப் பொருளும் இனிது விளங்குமென்பதாயிற்று. இச்செய்யுளிற் கூறிய பொருளனைத்துஞ் சிவாகமங்களின் விரித்துணர்ந்துகொள்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் உரைப்ப. இதனானே தத்துவங்கள் ஒருதலையான் உணரற்பாலன என்பது கூறப்பட்டது.

௭௧

தத்துவம் எண்மூன் றுஞ்சென்று ஆன்மதத் துவத்தொ
டுங்கும், வித்தையி னொடுங்கும் ஆறும் சிவத்தினி னொடுங்
கும் மூன்றும், நித்ததத் துவம்இம் மூன்றும் என்பர்கள்
இரண்டு நின்ற, சுத்தமாம் சிவத்தொ டுங்கும் தோற்றமும்
இதுபோ லாகும். ௧௯௨

(உரை) இம்முப்பத்தாறு தத்துவங்களுஞ் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களின் ஒடுங்கும்வழி, நிலமுதன் மூலப்பகுதி யீறாகிய இருபத்துநான்கு தத்துவங்களுஞ் சீகண்ட ருத்திரனொடொடுங்கும்; மூலப்பகுதிக்கு மேலுள்ள ஆறு தத்துவமும் வித்தை ஈசராகிய அனந்தரானொடொடுங்கும்; அவற்றின்மேலுள்ள சுத்ததத்துவம் முதலிய மூன்று தத்துவமும் இலயத்தினின்ற சிவனொடொடுங்கும்; ஏனைச் சத்தி தத்துவஞ் சிவதத்துவம் இரண்டுஞ் சுத்த சிவனால் ஒடுங்கும். இவை புநருற்பவமாங்காலும் அவ்வவை அவ்வவரானாம். சுத்தசிவன் ஒருவனே நித்தியன்; ஏனை மூவரையும் அவ்வாறு நித்தியர் என்பாருமுளர்; அஃதுபசாரமே.



மூலப்பகுதிக்குங் குணதத்துவத்திற்குந் தம்முள் வேற்றுமை அவ்வியத்தமாதலும் வியத்தமாதலு மாத்திரையே யன்றி ஏனைய போலப் பரிணாம விசேடமின்மையின், அதுபற்றி அவை இரண்டனையும் ஒன்றாக வைத்தெண்ணினார். ஏதுப்பொருட்கண் வரும் இன்னுருபு ஏனையிடங்களினும் விரித்துரைக்க. ஆன்மாவுக்கு அதிதெய்வமாகிய தத்துவம் ஆன்ம தத்துவமென உருத்திரனுக்குப் பெயராயிற்று. ஈண்டான்மாவென்றது ஏற்புழிக்கோடலாற் சகலவர்க்கத்தின்மேல் நின்றது. தத்துவமென்பது பொதுச்சொல். ஆன்ம தத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமென அவ்வக் காரணக் கடவுளர் பெயர் இயைபுபற்றி அவ்வத் தத்துவங்களுக்குமாயின என்பது உணர்த்துவார், அவரை அவ்வப் பெயரால் கூறினார். இனி, நவந்தருபேதங் கூறுவான் புகுந்த ஆசிரியர் அதற்குத் தோற்றுவாயாக இச்செய்யுளை ஈண்டு வைத்தாராயினும், இயைபுபற்றி, ஐந்து சுத்தத்தினென மூவகைப்படுத்தோதிய செய்யுளின் பின்னாக வைத்துக் கண்டுகொள்க. இதனானே அத்தத்துவங்களைத் தோற்றியொடுக்குங் காரணக் கடவுளர் இவரென்பது வகுத்துக் கூறப்பட்டது. இத்துணையும் மூன்றாங் கூற்றிற் படுமுறைமை யெல்லாந் தொகுத்துக் கூறியவாறு. இனி எழு செய்யுளான் நாலாங் கூற்றைத் தெரித்துணர்த்துகின்றார். ௭௨

மோய்தரு பூத மாதி மோகினி அந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தருஞ் சைவ மாதி இருமூன் றும் வித்தை யாதி
எய்துதத் துவங்க ளேயும் ஒன் றுமின் றெம்பி றைக்கே.

(உரை) சாருவாகமுதல் ஐக்கியவாதசைவம் ஈறாகிய புறப்புறச் சமயமும் புறச்சமயமும் அகப்புறச்சமயமும் என்னும் முக்கூற்றுச் சமயத் தெய்வங்களெல்லாம் பூதமுதல் அசுத்த மாயாதத்துவ மீறாக ஒவ்வொரு தத்துவங்களின் நிலைபெறும். சிவாகமங்களுட் கூறப்படும் "ஏகனேகனிருள்கரும மாயையிரண்டு" என்னுமாறு பொருட்கும் உண்மைத் தன்மை விளக்குகின்ற சைவமெனப்படுந் தலையாகிய அறுவகைச் சமயத் தெய்வமாய் நின்ற அதிகாரபோகலய சிவபேதங்கள் சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றின்

நிலைபெறும். சித்தாந்த சைவத் தெய்வமாகிய சுத்தசிவம் இம்முப் பத்தாறையும் கடந்து நிற்கும்.

அமலனுதலைத் தெரித்துணர்த்தியவாறு. அவ்வத் தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ்வச் சமயத்தார்க்கு முத்தித்தான மென் பதூஉம் இதனாற் பெறுதும். அவ்வவற்றின் மேலுள்ள தத்துவங்கள் அவ்வச்சமயத்தார்க் குணர்ச்சி செல்லாமையின், அவ்வத் தத்துவத்தி னளவினன்றி அவருக்கு மேற்சேறல் கூடாமை யறிக. சமயத் தெய் வங்களைச் சமயமென் றுபசரித்தார். இருமூன்றும் என்றதுமது. ஆணவமலத்துண்மை கொள்ளமாட்டாத ஐக்கியவாத சைவரை நீக்கு தற்கு, மெய்தரு சைவமென்றும், ஆதியிருமூன்றென்றும் விசேடித் தார். பாடாணவாத சைவமுதற் சுத்த சைவம் ஈறாகக் கிடந்த வழு னுள் பாடாண வாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேற் றுமை சிறிதாதல்பற்றி அவையிரண்டனையும் ஒன்றாக வைத்து இரு மூன்றெனத் தொகை கூறியவாறு. இவ்வாறன்றி யுரைப்பனவெல் லாஞ் சிவாகமங்களோடு முரணுமென்றொழிக.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன் ௭௧
உவந்தருள் உருத்தி ரன்தான் மால்அயன் ஒன்றினொன்றாய்ப்
பவந்தரும் அருவ நாலிங் குருவநா லுபய மொன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்ப னென்பர்.

(உரை) அங்ஙனமொன்றுமின்றி நிற்கும் எம்மிறைவன் ஒன்றி ௯௪ னொன்றாகத் தோன்றி ஒவ்வொரு தத்துவங்களி னின்றுகொண்டு தத்தந் தொழில்களைச் செய்யுஞ் சிவமுதல் அயனீறாகிய முத்திறத் தொன்பதுவர்க்கத்தினும் வேற்றுமையின்றி நின்று அவ்வத்தொழில் களைச் செய்வன்.

ஏகாரம் தேற்றம். 'மேல் ஒருவனே இராவணனாகிப் பாவகமுற்றாற் போல' என்றதனை ஈண்டும் அறிவுறுத்துவார், நடிப்பனென்றார். செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது. இவ்வொன்பது பேதத் துட் சத்திவிந்துவென்னும் இரண்டும் சத்திபேதமாயினும், வினை மனோன்மணிமுதலிய பேதம்போலன்றி ஒன்றினொன்றாகப் பவந்தரு முறையிற்காரணமாயிடைநிற்றல்பற்றிச் சிவபேதத்துடன் வைத் தெண்ணி நவந்தருபேதமெனப்பட்டன. 'நவந்தருபேதமேக நாதனே நடிப்பன்' என்றதும் ஒற்றுமை நயம்பற்றிப் பொதுவகையாற் கூறிய



தென்பது. அவை முறையே சிவத்துக்கும் நாதத்துக்குமுரிய சத்தி பேதமேயாத லென்பது வருஞ்செய்யுளிற் காண்க. ௭௨

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மணிதா னாகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்
எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளு நிற்பள். ௯௫

(உரை) மேற்கூறிய சிவபேதம் ஏழற்குமுரிய சத்திபேதமும், முறையே சத்திமுதல் வாணியீறாக ஏழுவகைப்படும். எம்மிறைவனா கிய பரமசிவன் சிவபேதம் ஏழினும் நின்று நடாத்துமாறெல்லாம், அவனோடு தாதான்மியமாய் நிற்கும் பராசத்தியும் இச்சத்திபேதம் ஏழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும்.

அற்றேல், மேலைச்சூத்திரத்தின் வரும் வடிவெல்லாஞ் சத்தி எனக்கூறி ஈண்டுச் சிவபேதஞ் சத்திபேதமென வேறுவைத்து எத் திற நின்றான் ஈசன் அத்திறமவளுநிற்பளென்றல் மலைவாம்போலு மென மயங்காமைப் பொருட்டு அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௭௩

சத்திதான் நாத மாதி தானாகுஞ் சிவமு மங்கச்
சத்திதா னாதி யாகும் தரும்வடி வான வெல்லாம்
சத்தியும் சிவமு மாகும் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே.

(உரை) மரமுங் காழ்ப்பும்போல ஒப்பவியைந்து நிற்றலின் எல் லாத் திருமேனியுஞ் சத்திசிவம் இரண்டற்கும் பொதுவடிவேயாமா யினும், சத்தனுக்குச் சத்தி தேவியுமாமாகலான் அதற்குரிய வடிவு விசேடங் குணவிசேடம்பற்றிச் சிவபேதஞ் சத்திபேதமென்றாயின.

ஆகலான் அதற்குரிய வடிவுவிசேடங் குணவிசேடம்பற்றிச் சிவ பேதஞ் சத்திபேதமென்றாயின என்பது குறிப்பெச்சம். சத்தனுக் கோர் சத்தியாமென்றது வல்லவனுக்கு வல்லமையாய் நிற்குமெனச் சிவசத்திகட்கு நாயகநாயகிபாவங் கூறியவாறு. நாயகநாயகிபாவமா தலை வலியுறுத்துவார், சத்தன்வேண்டிற்றெல்லாமாஞ் சத்தியெனச் சத்தியின் பெருமை கூறினார். வேண்டிற்றெல்லாமென்றது ஒருமைப் பன்மை மயக்கம். இவைமூன்று செய்யுளுந் தாதான்மியமாய் நீங்

காது நிற்றலைத் தெரித்துக் கூறியவாறு. அற்றேல், மேல் ஒன்றி னொன்றாய்ப் பலந்தருமெனப்பட்ட சத்திசிவங்களை ஈண்டுத் தலைவ னுந் தலைவியுமாய்த் தம்முட் புணருமென்பது முறையன்றுபோலும் என்பாரை நோக்கி அதனையுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

௭௬

சிவம்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியு மன்றே.

(உரை) சத்தியுஞ் சிவமுஞ் செய்யுமிச் செயல்களெல்லாம் நம் மனோர்பொருட்டாக நடித்துக்காட்டும் நாடகமாத்திரையேயன்றிப் பிறிதில்லை.

உம்மை சிறப்பு. பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான் என்பது முதலாக மேலைச்சூத்திரத்தின் விரித்துக் கூறியவற்றை ஈண்டுருவகஞ் செய்யுமுகத்தால் தொகுத்துணர்த்தி, இவற்றின் தன்மை தனக்கெய்தலின்று தலைத் தெரித்துக்கூறியவாறு.

௭௭

தனுகரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடென்(று)
அணுவினோ டெல்லா மாகி அடைந்திடுந் தத்து வங்கள்
இனிதறிந் திவைநி விர்த்தி முதல்கலை யிடத்தே நீக்கி
நணிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானி யாவன். ௧௯௮

(உரை) தனுகரண புவனபோகங்களும், அவைமூலமாயுள்ள பெத்தமுத்திகளும், அப்பெத்தமுத்திகளிற்படும் பேதங்களனைத்தும், மேற்கூறிப்போந்த தத்துவங்களாறுயினவென்றும், அத்தத்துவங்கள் உயிர்களோடு இயைவனவன்றி முதல்வனோடு இயைவனவல்லவென் றும், நூல்களானும் பொருந்துமாற்றானுந் தெளியவுணர்ந்து, அத் தத்துவங்களைக் கழியுமுறைமையின் வைத்துக்கழித்து, அவற்றிற்கு மேலாய் நிற்பதொன்றனை ஐயந்திரிபின்றி யுணரப்பெற்றோன் யாவன் அவன் பவன் பிரமசாரியும் பான்மொழி கன்னியுமாமென்னும் அவ்வுண்மை யறிவுடையனாவன்.

தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமென்ற தனைத் தெரித்துணர்த்தி மேலதனை வலியுறுத்தியவாறு. தற்பர



மென்னும் வடசொல் அப்பொருட்டாதல் தாற்பரியம் என்பதனானும் அறிக.

௭௮

எல்லாமாய்த் தத்துவங்கள் இயைந்ததென் அணுவுக்கென்னில்
தொல்லாயகன்மமெல்லாம் துய்ப்பித்துத்துடைத்தற்கும்பின்
நில்லாமை முற்று வித்து நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்த தன்றே. ௧௯௯

(உரை) அங்ஙனந் தத்துவங்கள் அணுவினோ டெல்லாமாகி யடைந்ததூஉம், இருவினைகளை நுகர்வித்து நீக்குதற்பொருட்டும்,அத னாற் பருவமெய்தியவழி மேலைக்கு வித்தாகாதவாறு தீக்கையான வற்றை முதிர்வித்துப் பற்றறக் கழித்தற்பொருட்டும், அவை கழியு முகத்தால்எல்லாஅநத்தங்கட்கு மூலமாகிய ஆணவமலத்தைப்போக்கு தற்பொருட்டுமாம்.

எனவே, தத்துவங்களான் நீக்கப்படுவனவாகிய மலகன்மங்கள் அணுவுக்கேயன்றிச் சிவத்துக்கின்மையான், அத்தத்துவங்களும் அணுவினோடன்றிச் சிவத்தோடு இயைபிலவாயினவென அதன்கண் ஆசங்கை நீக்கியவாறாயிற்று. அணுவுக்கேயென்னும் பிரிநிலை ஏகாரமுந் தொன்மையென்னும் மகரஐகாரவிகுதியும் விகாரத்தாற் றொக்கன. இவை ஏழு செய்யுளானும் நாலாங் கூற்றிற்படும் மூத் திறப்பொருளும் வகுத்துக்கூறப்பட்டன. அற்றேல் ஈண்டெடுத்துக் கொண்ட ஆணவமலம் யாது? அதனால் வரும் பொல்லாமையாது? அதனைப் போக்குமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கிப் பதினேழு செய்யுளான் ஒழிபு கூறுகின்றார்.

௭௯

ஒன்றதாய் அநேக சத்தி யுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினிற்க ளிம்பேய்ந்(து)
என்றும்அஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே.

(உரை) எண்ணிறந்த சத்திகளான் எண்ணிறந்த உயிர்களினுஞ் செம்பிற் களிம்புபோல் அநாதியே விரவிநிற்பதொன்றாய்க் கேவலத் தில் ஆவாரகசத்தியானுஞ் சகலத்தில் அதோநியாமிகாசத்தியானும் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது மேற்கூறிப்போந்த ஆணவமலம்.

போத்திருத்துவம் போகநுகர்ச்சிக்கு வினைமுதலாதற்றன்மை. இதனானே மலத்தின் சொரூபங் கூறப்பட்டது.

மலமென வேறொன் றில்லை மாயாகா ரியம தென்னின் ௮0
இலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை
விலகிடும் மலமி வற்றை வேறுமன் றதுவே றாகி
உலகுடல் கரண மாகி உதித்திடும் உணர்ந்து கொள்ளே.

(உரை) உயிரோடொற்றித்து நின்று அறிவிச்சைசெயல்களை மறைப்பதாகிய மலத்துக்கும் வேறுநின்று அவற்றை விளக்குவதாகிய மாயைக்குந் தம்முள் வேற்றுமை பெரிதாகலான், அஃதறியாது மாயையே மலமென்பார் மதம் போலி.

மாயையே ஆன்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்கும் ௮௧
தூயவெம் பரிதி தன்னைச் சுடர்முகில் மறைத்தாற் போலப்
போய்முகில் அகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே.

பரிதியை முகில் மறைப்பப் பாயொளி பதுங்கி னாற்போல் ௧௭௨
உருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைகள் ஒளிக்கு மாகும்
கருதிடும் இச்சா ஞான காரியம் காயம் பெற்றால்
மருவிடும் உயிர்க்குக் காயம் வந்திடா விடின்ம றைப்பே.

(உரை) மாயை உலகுடல்கரணமாய் வேறுநின்றே உயிரை மறைத்தலமையுமென்பது உடம்பாட்டினும் எதிர்மறையினும் பரிதி முகிலுவமையின் வைத்தறியப்படுமென்றது பொருந்தாது. மேகம் போல மாயை மறைக்குமாயின், மறைத்தலாகிய காரியம் பரிதியிற் போல உயிரின்கண் நிகழ்தல் வேண்டும்; அஃதீண்டில்லையென்பது உடம்பாட்டினும் எதிர்மறையினும் வைத்து அறியப்படுதலான் அவ்வுவமை யீண்டைக்கேலாது.

போதகா ரியம்மறைத்து நின்றது புகல்ம லங்காண் ௮௨—௮௩
ஓதலாம் குணமு மாக உயிரினுள் விரவ லாலே
காதலால் அவித்தை சிந்தத் தரும்கலை யாதி மாயை
ஆதலா லிரண்டுஞ் சோதி இருளென வேறா மன்றே.

(உரை) அல்லதூஉம், மலத்தாகிய அஞ்ஞானம், முகிலாகிய மறைவுபோலன்றி, உயிரோடு வியாபகமாய் விரவிக் குணம்போலத் ௧௭௪



தோன்றி நிற்பதொன்றாகலானும், தொழிற்பாட்டின்கண் ஒளியிருள் போல மாயையோடு இகலி நிற்பதாகலானும், அப்பெற்றித்தாகிய ஆணவமலமே உயிருணர்வின் காரியப்பாட்டைத் தடுக்கவல்லதெனத் தெற்றென உணர்க.

குணமும் என்னும் உம்மை எதிர்மறைக்கண் வந்தது. இவை நான்கு செய்யுளானும், ஐக்கியவாதி பாசுபதி முதலியோர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து, ஆணவமலத்தினது உண்மை சாதிக்கப் பட்டது. ௮௪

புருடன் தன் குணம் அவித்தை யெனில்சடம் புருட னாகும்
குருடன் தன் கண்ணின் குற்றம் கண்ணின்தன் குணமோ கூறாய்
மருள் தன்றன் குணம தாகி மலம்அசித் தாகி நிற்கும்
தெருள் தன்றன் குணம தாகிச் சித்தென நிற்கும் சீவன்.

(உரை) உயிரினுள் விரவி நிற்பதனை உயிரின் குணவிசேடமென்றல் பொருத்தமுடைத்தெனின்,—அறியாது கூறினாய்; ஒரு பொருளின்கட் குணத்தோடொப்பக் குற்றமும் உடன் விரவி நிற்கப் பெறுமென்பது குருட்டுக் கண்ணிற் காணப்படுதலின், விரவிநிற்றலே பற்றிக் குற்றமுங் குணமாதல் செல்லாமையானும், அஞ்ஞானத்திற்குக் குணிப்பொருள் சடமாவதன்றிச் சித்தாகாமையானும், உயிர் அறிதற்றொழிலுடைய சித்தேயாகலானும், உயிரின்கட் குற்றமாய்க் காணப்படும் அறியாமைக்குக் குணிப்பொருள் மலமென வேறுண்டு.

இதனானே, அறியாமை உயிர்க்குக் குணமென்னும் பாடாணவாதிகள் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மலத்தினுண்மை சாதிக்கப்பட்டது. ௮௫

மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போல்
மம்மர்செய் தனுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமல மிசைப்பன் இன்னும்.

(உரை) மேலே தன்மமோடு அதன்மமாகியெனக் கூறப்பட்ட கன்மமலமும் அதன் பின்னாக நித்தமாய் அருவாயெனக் கூறப்பட்ட மாயாமலமும் ஈண்டுக் கூறப்பட்ட ஆணவ மலமுமாகிய இம்மூன்று

மலங்களும், நெல்லுக்கு முளைதவிடுமிபோல் உயிரைப் பந்தித்து நின்று முறையே போகமும் பந்தமும் போத்திருத்துவமும் பண்ணு வனவாம். இம்மலங்கள் மூன்றனோடுங் கூடிநின்று பந்திப்பன வேறும் இருமலங்களுள.

இது நிரனிறை. கன்மமலம் போகம்பண்ணுதலாவது, நெல் லின்கணுளதாகிய முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறு போல, உயிரின்கட் சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்று வித்தல். மாயாமலம் பந்தம் பண்ணுதலாவது, முளைத்தற்கு அனு கூலஞ்செய்து உடன் நிற்குந் தவிடுபோல, அச்சுகதுக்கங்கள் ஆண் டுத் தோன்றுதற்குத் துணைக் காரணமாய்த் தன் காரியமாகிய தனு காண முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்றல். ஆணவ மலம் போத்திருத்துவம் பண்ணுதலாவது, அம்முளை ஆண்டுத் தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோல அத்தோற்றத்திற்கு நிமித்த காரணமாய் அவற்றை முறுகுவித்து நின்று அச்சுகதுக்கங் களை உயிர் நுகருமாறு நிலைபெறுத்துதலெனக் கொள்க. "பந்தம் போகம் போக நிறுத்தலும் வந்த மாயை வினைமலத்து" என்றார் ஞானமிர்த நூலுடையாரும். முளை ஆகுபெயர். முளைதவிடுமிகள் பந் தத்திற்குங் காரணமாதல் மாத்திரைக்கும் உவமையாயின. ௮௬

மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும்
ஏயும்மும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியதென்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்.

(உரை) வேறும் இருமலம் எனப்படுவன அச்சுகதுக்க விளைவு கட்கெல்லாம் இடமாய் நின்று வியாபகமாகிய ஆன்மாவின் அறி விச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதென மேற்கூறிப்போந்த மாயாகாரியமும், அவ்வமலங்களை யவ்வத்தொழிலிற் படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசத்தியுமாம். அவற்றுள், மாயாகாரியம் மாயையில் அடங்குமாயினும், பந்தித்தற்கட்படும் வேற்றுமைபற்றி மாயேய மல மென வேறுவைத்தெண்ணப்படும்; அம்மலங்கட்கு அனுகூலமாய் நின்று செய்யுஞ் சிவசத்தி பாசத்தியின் அடங்குமாயினும், தொழில் வேற்றுமைபற்றி உபசாரத்தால் திரோதாயியென வேறு வைத்தெண் ணப்படும். இவ்வாறிவ்வைந்து மலமும் உயிர்தோறு நின்று செய் யும் பந்த வேறுபாடு கண்டுகொள்க.



திரோதான கரியென்பது திரோதானத்தைச் செய்வதென்னும் பொருட்டாய வடசொல். ௮௭

மலம்மாயை கன்மம் மாயே யம்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பில் தங்கிஇத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்கண்
அலமாரும் இறைவ னாணை யால்உயிர் நடக்கு மன்றே. ௧௭௮

(உரை) மேற்கூறிப்போந்த பிறப்பிறப்புக்கள் எல்லாவற்றிற்குங் காரணம் இவ்வைவகை மலங்களுமாம்.

மன்னி அலமாருமென்பது மழைபெய்து குளநிறைந்ததென்றாற் போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது. அலமரும் அலமாரு மென நீட்டும் வழிநீட்டல். இறைவன் ஆணையால் உயிர் நடக்கு மென ஈண்டுங் கூறியது அவ்வலமாலை நீக்கும் வாயிலுணர்த்துதற் பொருட்டு. அது முன்னர் வகுத்துக் கூறப்படும். இவை மூன்று செய்யுளானும், மலங்கள் இத்துணைய என்பதூஉம் அவை பந்திக்கு மாறுங் கூறுமுகத்தான் ஆணவ மலத்தானாகிய பொல்லாமை கூறப் பட்டது. ௮௮

அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயு சத்தோ(டு)
எண்தரு நாலெண் பத்து நான்குநூ றாயி ரத்தால்
உண்டுபல் யோனி யெல்லாம் ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரி யங்காண். ௧௭௯

(உரை) நால்வகைத் தோற்றத் தெழுவகைப் பிறப்பின் எண் பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதத்தினின்றும் விரிந்த பேதங்கள் அளவின்றியுள்ளன; அவற்றுள் மானுடப் பிறவியே அவ்வலமாலை நீக்குதற்கு வாயில். ௮௯

நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னாகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே. ௧௮௦

(உரை) மானுடப் பிறவியினும் உத்தம சமயத்துக்குரித்தாய் உத்தமநாட்டிற் பிறக்கும் உத்தமசாதியே அதற்கு வாயில். ௯௦

வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடும் சைவமாம் சமயஞ்சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே.

(உரை) உயர்ந்த சாதியினும் உயர்ந்த குடிப்பிறப்பே அதற்கு வாயிலாம். அவ்வுயர்ந்த குடியிற் பிறந்து சைவத்தினெய்திச் சித்தாந்த நெறியுணர்ந்து சிவபிரானை வழிபடப் பெறுவாருளராயின், அவர் மலத்தானாகிய அவ்வலமாலை நீக்கி வீடுபேறெய்துவர்.

வாழ்வாவன: குலம் இளமை கல்வி செல்வம் அதிகாரமென்னும் இவை. மையல் செருக்கு. வாழ்வெனு மையலெனவும், வறுமையாஞ் சிறுமையெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவை மூன்று செய்யுளானும் அம்மலபந்தத்தைப் போக்குதற்குரிய வாயில் இவை என்பது கூறப்பட்டது. ௯௧

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனைஅர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.

(உரை) அவ்வலமாலை நீக்குதற்பொருட்டுச் செய்யப்படும் அரன்பணி ஏனைப் பிறவிகளில் கூடாமையாற் பிறவி விசேடம் வேண்டப்படும்; அவ்வரன்பணி பயன்படுதல் ஏனையுலகங்களிற் கூடாமையால் தேயவிசேடம் வேண்டப்படும். இவ்வுண்மை ஏனையோர் அறியமாட்டாமையிற் சாதிவிசேடம் குடிப்பிறப்புவிசேடம் வேண்டப்படும்.

இதனானே அவை வாயிலாதற்கு உரிமை கூறப்பட்டது. வாக்காயமென்னுந் தொகைச்சொல் வடநூன் முடிபு. ௯௨

கருவினுள் அழிவ தாயும் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனாய் அழிவ தாயும்
தருணனாய் அழிவ தாயும் தான்நரைத் தழிவ தாயும்
உருவமே யழிவே யானால் உள்ளபோ தேபார் உய்ய. ௧௮௩



(உரை) மானுடயாக்கை அத்துணைப் பெருமைத்தாயினும், இத்துணைப்பொழுது நிற்குமென்றறிய வாராது நீர்க்குமிழிபோல் எப்பொழுதும் அழிதன்மாலைத்தாகலின், இவ்வாக்கைநிலையாமை இளமைநிலையாமைகளை உணரவல்லார்க்கே அவற்றானாகிய மையலை விடுதல் கூடும். ௯௩

ஒருபுலன் நுகரும் போதங் கொன்றிலை ஒன்றன் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடும் எல்லாம் மாறும்
ஒருபொழு துணரி னுண்டாம் அல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே. ௧௮௪

(உரை) அவ்வாக்கையின் கண்ணதாகிய அறிவும் விடயங்களை ஒவ்வொன்றாய் அறிவதன்றி ஒருங்கே அறியமாட்டாது. ஒருவிடயத்தின்கண்ணும் விட்டுவிட்டறிவதன்றி இடையீடின்றி அறியமாட்டாது. அதுவும் உறக்கம் மூர்ச்சை முதலியவற்றிற் சிறிது மில்லையாய்விடும். அஃதன்றி இவ்வாக்கையின் பொருட்டுளதாகிய செல்வத்தழனியும் முறையே மயக்கப்பொருளுங் கனப்பொருளும்போலத் தோன்றியபொழுதே மாய்வதுமாம்; இடையே மாய்வதுமாமாகலான், இவ்வறிவு நிலையாமை செல்வ நிலையாமைகளை உணரவல்லார்க்கு அவற்றானாகிய மையலை விடுதல் கூடும்.

உணரினுண்டாமென்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க. பயன் அறிதற்பயன். அல்லதென்பது அன்றியென்னும் வாய்பாட்டு வினையெச்சக் குறிப்பு. மருள்போல அன்றேமாயும் கனவுபோலப் பின்னும் மாயுமென்று உரைத்துக்கொள்க. மருளும் கனவும் ஆகுபெயர். வாழ்க்கை என்புழியும் பின்னென்புழியும் இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கன. ௯௪

அரிசனம் பூசி மாலை அணிந்துபொன் னாடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட உணர்வு மாண்டு
பெரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலால் பிணத்தோ டொப்பர்.

(உரை) அதிகாரஞ்செய்து செருக்குறுவார் செத்தாரின் வேறல்லரென்பது ஆண்டுநிகழும் நிகழ்ச்சிபற்றி அறியவல்லார்க்கு அதனானாகிய மையலை விடுதல் கூடும்.

உணரினுண்டாமென்றதனை ஈண்டுந் தந்துரைக்க. பெரியவ ரொன்றது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி. பெருமை அதிகாரத் தானுயது இவை மூன்று செய்யுளானும் வாழ்வெனுமையல் விடுதற்கு உபாயங் கூறியவாறு.

௯௫

பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்க ளுடலுயிர் உணர்வு மெல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறீர் அரனை என்றும் வானவர் வணங்க வைப்பன்.

(உரை) சிவபிரானை வழிபட்டுப்பெறும் இறவாச் செல்வத்தை நோக்கக் கணத்தின் அழிதன்மாலைத்தாகிய உடம்பின்பொருட்டு வருந்தியீட்டப்படுஞ் சிறுசெல்வஞ் செல்வம் அன்றென்ப துணரவல் லார்க்கு, இச்சிறு செல்வத்தை வேண்டி அவ்வதிகாரச் செருக்குடை யார் பின்சென்று நின்றேக்குறுஞ் சிறுமையின் நீங்குதல் கூடும்.

உடலுயிருணர்வு மெல்லா முணக்கியென இயையும். இதனானே வறுமையாஞ் சிறுமை தப்புதற்கு உபாயங் கூறியவாறு. ஒன்றதா யென்பது முதல் இத்துணையும் ஒழிபு கூறியதெனக் கொள்க. ௯௬

---

# மூன்றாஞ் சூத்திரம்

முதற் சூத்திரத்தும் இரண்டாஞ் சூத்திரத்தும் முறையே பதி யுண்மைக்கும் பாசவுண்மைக்கும் பிரமாணங் கூறிய ஆசிரியர், இரண் டாஞ் சூத்திரத்தின் அலகிலா உயிரென்று எடுத்துக்கொள்ளப்பட் டெஞ்சிநின்ற பசுவுண்மைக்குப் பிரமாணம் மூன்றாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

உயிரெனப் படுவ திந்த உடலின்வே றுளதாய் உற்றுச்
செயிருறும் இச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறும் இன்பத் துன்பப் பலங்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்ச வத்தைப் படும்உண்மை துரியா தீதம்.

(உரை) உயிர் சூனியமெனின், அவ்வாறு சொல்வதொன் றுளதாய் நிற்றலானும், உடம்பே உயிர் எனின் உடம்பகத்தே பொருந்தி நின்று யானெனதென்னுஞ் செருக்குறுதலானும்,



ஐம்பொறியே உயிரெனின், ஞானமாத்திரையே யன்றி ஞானங் கிரியை இச்சையென்னு மூன்றும் உடைத்தாகலானும், சூக்கும உடம்பே உயிரெனின், கனவொடு பயின்றதனை நனவின்கண் உற்றறிந்து நிற்றலானும், பிராணவாயுவே உயிரெனின், இன் பத் துன்பப்பயன் ஒடுங்கிய விடத்தின்றி யொடுங்காதவிடத்து நுகர்ந்து நிற்றலானும், பிரமமே உயிரெனின், அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப்பட் டறிதலானும், அனைத்துங் கூடிய சமுதாயம் உயி ரெனின், அனைத்தும்நீங்கிய துரியாதீதத்தும் உண்மையானும், இந்த உடலின்கண் உயிரெனப்படுவது இவை யனைத்திற்கும் வேறு.

உயிரெனப்படுவதென்றது சாதியொருமை. துயிலொடும் பயில் வுறுமென இயையும். துயிலென்றது ஈண்டுக் கனவின் மேற்று. பயில் வுறுமென்புழி இரண்டாவது விரித்துரைக்க. பயில்வு ஆகுபெயர். பார்க்கில் நுகருமென மாறுக. பார்க்கில் விழித்தவிடத்தென்றவாறு. *"ஐயுங்கண்ணு மல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகா இறுதி யான" என்பதோத்தாகலின், ஏழாவது இறுதிக்கட் டொக்கது. துரி யாதீதத்தில் உயிருண்டென்பது விழித்தபின்னர்ச் சுகமாகத் துயின் றேன் என்று உணர்வு நிகழ்தல்பற்றித் தெளியப்படும். உளதாயென் பது முதலிய ஏழுங் குறிப்பேதுவாகலான், அவற்றை இங்ஙனம் விரித் துரைத்து முதனூலின் மூன்றாஞ் சூத்திரம்போல இச்செய்யுள் ஏழு கூற்றதாயவாறு கண்டுகொள்க. அற்றேல், சூனியமுதலியவற்றுள் ஏனையவெல்லாம் அறியுமென்பது காட்சியளவைக்கு எய்தாமையின் உயிர் அவற்றின் வேறெனக் கொள்ளினும், உடம்பாதல் உடம்பின் கணுளவாகிய ஐம்பொறிகளாதல் அவ்வைம்பொறிகளையூக்கி இயங் குவதாய பிராணவாயுவாதல் அறியுமென்பது காட்சியளவையான் அறியக்கிடத்தலின், உயிர் அம்மூன்றனுள் ஒன்றாகற் பாற்றென் றலே பொருத்தமுடைத்துப்போலும் என்பாரை நோக்கி அம்மூன் றனையுஞ் சிறந்தெடுத்தோதி மறுத்தற்கெழுந்தன வருஞ்செய்யுட்க
க
ளென்பது.

உடலின்வே றுயிரேன் இந்த உடலன்றோஉணர்வதென்னின்
உடல்சவ மான போதும் உடலினுக் குணர்வுண் டோதான்

---

* தொல்காப்பியம் - சொல் - வேற்றுமை மயங்கியல் - ௨௨.

உடலினின் வாயுப் போனால்உணர்ச்சியின் றுடலுக்கென்னின்
உடலினில் வாயுப் போகா துறக்கத்தும் உணர்வ தின்றே.

**(உரை)** அவயவங்களின் ஒன்றனுங் குறைபாடின்றிக் கிடக்கும் பிணக்கிடையினும் நீகூறும் பூதக்கூட்டத்தின் ஒன்றனுங் குறைவின்றிக் கிடக்கும் உறக்கத்தினும் அறிவு நிகழக் காணாமையான், உடம்பறியுமாறு யாண்டையது.

போகாதவென்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது.

அறிவதைம் பொறியே யென்னின் உறக்கத்தி னறியாவாகும்
அறிவதும் ஒன்றொன் றாக ஒன்றொன்றாய் அறிவ தென்னின்
அறிவுக ளொன்றையொன் றங்கறிந்திடாஐந்தையுங்கொண்(டு)
அறிவதொன் றுண்ட தான்மா ஐம்பொறி அறிந்தி டாவே.

**(உரை)** பிணமாம்போது கெட்டொழிவதாகிய ஐம்பொறிகளே அவ்வுடம்பினின்று நனவின்கணறியும் உறக்கத்தின் கண் அறிதலின்றி ஒடுங்கி நிற்குமெனின், அது பொருந்தாது; நனவின்கண் அவை அறிவதும் ஒவ்வொரு பொறியாய் அறிவதன்றி ஒருங்கே யறிவனவல்ல வாதலானும், ஒன்றொன்றாய் அறியுமதுவே அவற்றியல்பெனின், அங்ஙனமாயினும் இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையானும், இவ்வைந்தினும் ஐம்புலன்களையும் அறிவதொன்றுளதாகலானும்.

அறிவது ஐம்பொறியே உறக்கத்தின் அறியாவாகுமென்னின் என வியையும். அறிவதென்பது அத்தொழின்மேல் நின்றது. உம்மை சிறப்பு. அறிவுகள் ஆகுபெயர். அஃதென்னும் ஆய்தம் விகாரத்தாற்றொக்கது. இவ்வாறன்றி, அறிவது ஐம்பொறியே என்னின் உறக்கத்தின்அறியாவாகும் அறிவதும் ஒன்றொன்றாக ஒன்றொன்று யறியுமென்னின் என்பதற்கு, என்னுடம்பகத்து நின்றறிவது ஐம்பொறிகளேயாம் அவையுறக்கத்தின் அறியாதவழகும் நனவின்கண் ஒவ்வொரு விடயமாக அறிவதும் இருவர் மதத்தினும் ஒக்கும் அதுபற்றி என்னை யாசங்கித்தல் கூடாமையான் அவ்வைம் பொறிகளே யொருதலையாக அறியும் வேறுமோர்உயிர் கோடன் மிகையாமென்பையாயின் என்றுரைத்தலுமொன்று. உறக்கத்தின் அறியாமை யிழுக்கன்றென்பான் வாகென்றானென்பது. ௩



அறிந்திடும் பிராண வாயு அடங்குதல் விடுதல் செய்தால்
அறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரண மின்மை
அறிந்திடு முதலி யாகின் அதுநிற்கக் கரணம் போகா
அறிந்திடும் பிராணன் தன்னைஅடக்கியும் விட்டும் ஆன்மா.

**(உரை)** பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தாலே அறிவு நிகழக் காண்டலின், அதுவே அவ்வைந்தையுங் கொண்டறிவதாகிய உயிரெனவமையும், உறக்கத்திலஃதியங்கினும் ஆண்டுக் கருவியின்மையான் அறியாதாயிற்றெனின்,—அது பொருந்தாது; கரணமுதலி நிற்புழிக் கரணம் போதல் கூடாமையிற் கரணங்களையுந் தன்னையுங் கொண்டறிவதாகியவுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான்.

இவை மூன்றுசெய்யுளானும், முறையே உடல் பொறி பிராண வாயுவென்னும் மூன்றனையுங் காட்சியளவையான் அறியக்கிடந்த விசேடம்பற்றி வேறெடுத்தாசங்கித்துப் பரிகரித்து, இந்தவுடலினுயிரெனப்படுவது வேறென்பது சாதிக்கப்பட்டது. ஏனையவெல்லாம் வருஞ்சூத்திரத்தின் ஆண்டாண்டியைபுபற்றிக் கூறக்கிடத்தலானும், உளதாயென்னு முதற்கூற்றில் ஆசங்கை விசேடமின்மையானும் அவற்றையீண்டு விரித்திலர். ௪

---

## இலக்கணவியல்—நான்காஞ் சூத்திரம்

மேன் மூன்று சூத்திரத்தானும் பொருளுண்மைக்கு அளவு கூறிய ஆசிரியர், நிறுத்த முறையானே பொருளியல்பு கூறுவான் தொடங்கி, மேற்கூறிப்போந்த பதிபாச பசுக்களை எதிர் நிரனிறையாகவைத்து முதற்கட் பசுவிலக்கணங் கூறுகின்றார்.

உணர்வன கரணமென்னின் ஒன்றையொன் றுணரா வெவ்வே(று)
அணை தருஞ் செயல்கள் நான்கும் அறிந்தவைஅடக்கி ஆக்கிப்
புணருமுட் கரண மாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
இணை தரு மிவற்றின் வேறாய் யானென தென்ப தான்மா.

**(உரை)** இனி அந்தக்கரணமே உணருமென்பார்க்கு, இவையும் ஐம்பொறிபோலொன்றனை யொன்றுணராவாகலான், உயிர் இவற்றின் வேறாகியும், யானெனதென்னுஞ் செருக்குக்கேதுவாகிய ஆணவமலம் உடனுயிரணைந்து நிற்குமாகலான் தனக்கென அறிவின்றி, இவ்

வந்தக்கரணங்களாகிய நான்கு தொழிலையும் இவற்றொடு கூடியறிந்து இவற்றை யடக்கவேண்டுழி யடக்கி உட்கருவிகளாக்கியும், ஆக்கவேண்டுழியாக்கிப் புறக்கருவிகளிற் போக்கியும், வெவ்வேறு அவத்தைகளையணையும்.

எனவே, ஆணவமலத்திற் பிணிப்புண்டு அவத்தையுறுதல் ஆன்மாவுக்கு இலக்கணமென்றவாறாயிற்று. இது தடத்தலக்கண மெனப்படும் பொதுவியல்பு. உணராவாகலான் இவற்றின் வேறாகியும், யானெனதென்ப தினைதருமாகலான் அறிந்தடக்கியாக்கி ஆக்கிப் போக்கி வெவ்வேறு அணைதருமென வினைமுடிபு செய்க. அடக்குதல் சொப்பனாவத்தையிற் செலுத்துதல். ஆக்குதல் சாக்கிராவத்தையிற் செலுத்துதல். இனம்பற்றி ஏனையவத்தைகளுங் கொள்ளப்படும். அவையடக்கியாக்கிப் புணரும் உட்கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கியென்பது நிரனிறைப்பொருள்கோள். வேறாயுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க. என்பதெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். யானெனதென்பதென்னும் பெயரடை, அதனுண்மை சாதித்தற்குக் குறிப்பேதுவாய் நின்றது. இச்செய்யுள் முதனூல் நாலாஞ்சூத்திரம்போல முக்கூற்றதாமாறு கண்டுகொள்க. இனி அம்முக்கூற்றுள், உணர்வன கரணமென்னில் ஒன்றையொன்று உணராவாகலான் ஆன்மா இவற்றின் வேறுமென்னும் முதற்கூற்றை வலியுறுத்துகின்றார்.

௧
கருவியாம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்
மருவிஆன் மாவே என்ன வரும்தீப மெனத்தெ ரிந்தாங்(கு)
ஒருவியான் மாவி னுண்மை உணர்ந்தவர் தமையு ணர்ந்தோர்
தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம். ௧௬௨

(உரை) மனமுதலிய நான்கும், ஒருவிடயத்தை அறிதற்குக் கருவியாக மருவி, இவையே கருத்தாவென்னும்படி உயிரோடு ஒற்றித்து நின்று நிகழ்வனவாம். கண்ணுக்கு விளக்குப்போல இவை உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து நீங்கி நின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவினுண்மை யாதென்றாராய்ந்தார்க்கு ஆன்மசொரூபம் இனிது விளங்கும்; அதன்பின்பு அங்ஙனம் ஆராயும் அறிவு பசுஞானமாகலான் அதனைத் தரும் பொருள் யாதெனத் தேர்வார்க்குச் சிவஞானம் அதற்கு மேலாய் விளங்கும்.



ஈண்டு ஆன்மாவென்றது கருத்தாவென்னுந் துணையாய் நின்றது, தமையுணர்ந்தோரென முன் வருதலின், இதனானே அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவென்பது தம்மையுந் தலைவனையும் அறியுமாற்றின் வைத்துக் காட்டப்பட்டது.

௨
அவ்வுடன் உவ்வும் மவ்வும் மனம்புத்தி அகங்கா ரங்கள்
செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகும் [றும்
ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்தும் உணர்வுதித் தொடுங்குமா
பவ்வமும் திரையும் போலும் பார்க்கில்இப் பண்புந் தோன்றும்.

(உரை) அவை கருவியாவதூஉம் அகரமுதலிய எழுத்துக்கள் உடனின்று செலுத்தியவழியேயாமாகலான், சமட்டியிற் பிரணவரூபமாம் இவ்வைந்தெழுத்தானும் உயிரின்கண் உணர்வுமாறிமாறித் தோன்றுதல், கடலின்கண்ணே திரை புதிதுபுதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலாம். சவிகற்பவுணர்விற்குக் காரணம் நிவிர்த்தாதிகலையைப்பற்றி ஐந்தாய்த்திகழும் நால்வகை வாக்குக்கள் என்பதனை உற்று நோக்கின் இவ்வியல்பு இனிது விளங்கும்.

ஒற்றுமைபற்றி எழுத்துக்களை அவையாக உபசரித்தார். புருடதத்துவமும் அதனைச் செலுத்தும் அக்கரமும் ஈண்டொப்புமை பற்றியுடன் கூறியவாறு. புருடதத்துவத்தைச் செலுத்துதலாவது புருடதத்துவமாந்தன்மையை நிகழ்வித்தல். *"அகார உகாரம் அகங்காரம் புத்தி - மகாரம்" என முதனூலுட் கூறுதலானும், துகளறுபோதத்தும் அவ்வாறே கூறுதலானும், ஈண்டு அவ்வுட னுவ்வுமவ்வு மனம் புத்தி யகங்காரங்கள் என்றது எதிர்நிரனிறை யெனக் கொள்க. பிரணவமாகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறாது ஒவ்வெனக் கடைக்குறைத்துக் குறுக்கல் விகாரமாக்கிக் கூறினார். ஐந்தானுமென்னும் ஆனுருபு விகாரத்தாற் றொக்கது.

௩
அயன்அரி அரனு மீசர் சதாசிவம் அதிதெய் வங்கள்
உயவரும் அவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங் கட்குப்
பயனுறும் அஞ்சில் ஆன்மாப் பரவிடில் அசித்தாம் பார்க்கில்
சயமுறு வளியி ரண்டும் தவிர்த்துறில் தானுந் தோன்றும்.

* சிவஞானபோதம் - சூத். ௪ - ௩.

**(உரை)** அவ்வெழுத்துக்களை முறையே அயன் முதலிய ஐவரும் அதிதெய்வங்களா யதிட்டித்து நிற்பாராகலான், இவ்வாறு காரணமும் அக்கரமும் அதிதெய்வமும் என்னும் இம்முத்திறத்தைந்தொடும் ஆன்மாப் பாவியவழியறிதற்பயனுறும், பாவாவிடிற் சடம்போலறிவிலதாம்; இவ்வியல்பும் இருவகை வளியுமடக்கிச் செய்யும் யோகப் பயிற்சியுடையார்க்கு இனிது விளங்கும்.

அசித்தோடொக்குமென்பார் அசித்தாமென்றுபசரித்தார். பாவாவிடிலென்பது சொல்லெச்சம். இவையிரண்டு செய்யுளானும் அவைகருவியாதற்கட்படு முறைமையும் அதனையறிதற்கு உபாயமுங் கூறப்பட்டன. அற்றேல், இம்முத்திறத்தைந்துங் கூடிய கூட்டத்தின்நிகழ்வதே அறிவாகலின், இப்பலபொருட் கூட்டமே அவ்வறிவுக்கு முதலாதலமையும். இடையே உயிரென வொன்று கோடல் எற்றுக்கென்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது. ௪

ஆன்மாவின் வடிவு தானே அநேகார்த்தக் கூட்ட மென்னில்
பார்ப்பார்கட் கான்மா இன்றாய்ப் பலபொரு ளுண்மையாகும்
சேர்ப்பாய பலவே உண்மை என்றிடில் சென்றி வற்றை
ஓர்ப்பான்வே றுணர்வோர்க் கெல்லாம் உணர்பொருள் வேறதாமே.

**(உரை)** கூட்டமென வொருபொருள் இன்மையானும், கூடுவனவாய பலபொருள்களும் வேறாயறியப்பட்டு நிற்றலானும், அறியப்படுவதும் அறிவதுந் தம்முளொன்றுதல் செல்லாமையானும், இப்பதினைந்தினையும் இவைகூடியவாற்றையும் அறிவதாகியவுயிர் வேறுண்டென்பது பெறப்படுதலான், இப்பலபொருளின் கூட்டம் உயிராதல்யாண்டையது.

இதனானே அவை உயிரின் வேறாதல் வலியுறுத்தப் பட்டது. மேலைச்சூத்திரத்தின் உண்மை துரியாதீதமென்ற இறுதிக்கூற்றைச் சவுத்திராந்திகர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுக்குமாறும் இதனானே பெறுதும். இவை நான்கு செய்யுளானும் அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவாமாறும், கருவியாதற்கட்படு முறைமைகளும் அவை உயிரின் வேறுமாறும் உணர்த்தி முதற்கூற்றை வலியுறுத்தவாறு. இனி இருபத்தாறு செய்யுளான், பரமதங்களை யெடுத்தோதிப் பரிகரித்து ஆன்மாவிற்கு இலக்கணங் கூறுமுகத்தால், யானென



தென்ப தினைதருமென்ற இரண்டாங் கூற்றை வலியுறுத்துவான் தொடங்கினர். ௫

அறிவிச்சை செயல்களெல்லாம் அடைந்தனல் வெம்மையும்போல்
குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவ மாகி
நெறியுற்று நிற்கு மென்னில் நிகழ்புலன் கரண மெல்லாம்
செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமோ சீவ னார்க்கே. ௧௬௬

**(உரை)** சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த் தோன்றி அறிவிச்சை செயல்களையடைந்து தீயுஞ் சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மையுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்குமெனப் பரிணாமவாதிகள் கூறுவர். கருவிகளையன்றி யறியமாட்டாத சீவான்மா அவ்வாறாதல் யாண்டையது.

எல்லாம் அங்ஙனங் குறியுற்றறிவிச்சை செயல்களடைந்தனல் வெம்மையும்போல் ஏகாநேக குணகுணி பாவமாகி நெறியுற்று நிற்குமெனக்கொண்டுகூட்டியுரைக்க. ஏகாநேகம் பேதாபேதம். ஆர்விகுதி இழித்தற்குறிப்பின்வந்தது. இதனானே மேலைச்சூத்திரத்தின் ஆறாங் கூற்றை வலியுறுத்தவாறுமாயிற்று. ௬

குணங்களையின்றி யொன்றாம் குறியுடைத்தான்மாவென்னின்
இணங்கிடா இச்சா ஞானக் கிரியைகள் இவையு டற்கட்
பிணங்கிடுஞ் சந்நி திக்கண் எனிற்பிணத் துறக்கத் தின்றாம்
உணங்கிடும் கர்ண மென்னில் சந்நிதி ஒழிந்த தன்றே. ௧௬௭

**(உரை)** இனிச் சாங்கியர் குணகுணித்தன்மையின்றிக் கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்றல் உயிரியல்பென்றும், அவ்வுயிரின் சந்நிதியின் உடம்பின்கண்ணே நின்று காணங்கள் செயற்படுமென்றும், அதனாற் றொழிலறிவிச்சைகள் அவ்வுடம்பின்கண் நிகழுமென்றுங் கூறுவர்; பிணத்துமுறக்கத்துஞ் சந்நிதிக்குக்கேடின்றாகவும் உடம்பின்கண் அவை நிகழக் காணாமையின் சந்நிதிமாத்திரையான் அவை நிகழ்தல் யாண்டையது.

இன்றென்னு மொருமை அப்பண்பின் மேல்நின்றது. ௭

சந்நிதி குணம தாகும் தானென்போல் என்னிற் காந்தம்
முன்னிரும் பொன்றா யீர்க்கு முறைமையுண்டகற்ற லின்றாம்

உன்னுத லொடுங்கல் ஓடல் இருத்தலே கிடத்தல் நிற்றல்
என்னுமித் தொழில்கள்மற்றும்இயற்றுவதான்மாவென்னே.

(உரை) வியாபகமாய் நிற்கப்பெறுதன் மாத்திரையே சந்நிதி யன்று, மற்றுக்காந்தமுன் இரும்புபோல உயிர்முன் உடம்பு தொழிற் படுதற்கு ஏதுவாயதொரு குணவிசேடஞ் சந்நிதியெனக் கொண்டா மாகலின் அக்குற்றம் ஈண்டைக்கெய்தாதெனின், அங்ஙனமாயினும் ஒரு குணம் ஒருதொழிலன்றித் தம்முள்மாறுபட்ட பலதொழில் செய்யுமாறு யாண்டையது. ௮

உருவுயி ரென்னின் இந்த உடலினுட் காண வேண்டும்
வருவது பரிணா மத்தாய் அநித்தமாம் பூத மாகும்
கருவினில் நுழையு மாறும் காட்டிட வேண்டும் கண்ணின்
மருவிடா தென்னின் உன்றன் வாயினால் உருவன்றென்னே.

(உரை) இனிப் பௌராணிகர் உயிருருவப் பொருளென்பர். பரிணமித்தழிதலும் காட்சிப்புலனாதலும் இல்லாத பொருள் அவ்வியல்புடைய பூதங்களோடொப்ப உருவாமாறு யாண்டையது.

சூக்கும உருவ தென்னில் தூலகா ரணம தாகும்
ஆக்கிய மனாதி தன்மாத் திரைவடி வசேத னம்பின்
நீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டென்னின்
ஆக்கிடும் உருவமெல்லாம் அசித்துமாய் அநித்த மாமே. ௨00

(உரை) பூதம்போலக் காட்சிப்புலனாதற்குரிய தூலவுருவாதலின்றிச் சூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின், அது தூலவுருவைத்தோற்றுவிக்குஞ் சடமாகிய புரியட்டகவுடம்பேயாகலானும், அப்புரியட்டகதேகத்துள் அதிசூக்குமவுருவாய் நிற்பது உயிரெனின், அதுகலையாதிமண்ணந்தமாயுள்ள பரவுடம்பாகலானும், அவ்வுருவங்களனைத்தும் அசித்தாதலும், அசத்தாதலும் ஒருதலையாகலானும் அவ்வியல்பில்லாதவுயிர் உருவப்பொருளாமாறு யாண்டையது. ௧0

அருவுரு வென்னில் ஆன்மா அருவுரு வாவ தின்றும்
உருவரு வாகா தாகும் ஒருபொருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோல் மருவு மென்னின்
உருவமுங் காண வேண்டும் உண்மையும் ஒழிந்து போமே.



(உரை) இனிக்கவுளர் அருவுருவப்பொருள் உயிரென்பர். ஒன்று பிறிதொன்றாகாமையானும், மறுதலைப்பட்ட இரண்டு தன்மை ஒரு பொருட்கின்மையானும், காட்டமும் வன்னியுந் தம்முள் வேறாதலின் ஈண்டைக்கு எடுத்துக் காட்டாதல் செல்லாமையானும், அது பொருந்தாது. ௧௧

சந்திரன் வடிவு போலத் தான்அரு வுருவ மென்னின்
வந்துநங் கண்ணிற் றோன்றும் வடிவுள தாமு யிர்க்கும்
இந்தவூ னுருவந் தானாய் எழுவது முயிரே யென்னில்
பந்தமாய் அசித்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே. ௨0௨

(உரை) தலையுவாவின் அருவாய்நின்றே பின் முறைமுறையான் வளர்ந்து பூரணையில் தூலவுருவாய் விளங்குதன் மதியின்கட் கண்டாமன்றே; அதுபோல உயிரும் அருவாய்நின்றே கருவுட்புகுந்து முறைமுறையான் வளர்ந்து இவ்வுடம்புருவாய்த் தோன்றுமாற்றான் அருவுருவென அமையுமெனின்,—சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்குவதாகியவுயிர், அசித்தாய்ப் பூதகாரியமாய்ப் பந்தமாவதாகிய உடம்புருவமாமாறு யாண்டையது. ௧௨

அருவவி காரி யான்மா ஆகாயம் போல வென்னின்
உருவினைக் கட்டி யாட்டி ஓட்டிமீட் டுலாவப் பண்ணி
மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்க ளெல்லாம் தருவதென் பேசி டாயே. ௨0௩

(உரை) இனிப் பாதஞ்சலர் ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிரென்பர். அது பொருந்தாமே காட்சியளவையான் உடம்பின்கண் நிகழும் நிகழ்ச்சிபற்றி யறியப்படும். ௧௩

அசித்தெனின் உணரா தான்மா அசித்துச்சித் தாகுமென்னின்
அசித்துச்சித் தாகா தாகும் சித்தசித் தாவ தில்லை
அசித்தொரு புறமா யொன்றில் சித்தொரு புறமாய் நில்லா(து)
அசித்துறுச் சித்தே யென்னின் அசித்தடைந் தறிவ தின்றாம்.

(உரை) சடப்பொருள் சித்தாதலுஞ் சித்துப்பொருள் சடமாதலும் உலகத்தின்மைபால், உயிர்சடமென்றும் அதுபின் மனத்தோடுங் கூடிச் சித்தாயறியுமென்றுங்கூறும் வைசேடிகர் முதலியோர்மதமும்

மாறுபட்ட இரண்டு தன்மை ஒருங்கு நில்லாமையால், உயிர் சித்தசித்தென்னுஞ் சைவரில் ஒருசாரார் மதமும், அசித்தாகிய கருவியை இன்றி அறிதல் செல்லாமையால், உயிர் சித்தேயாமென்னும் பட்டாசாரியர் மதமும் அடா.

உறுதவென்னும் பெயரெச்சத்தீறு விகாரத்தாற் றொக்கது. ௧௪

உயிரினை அணுவ தென்னின் உடல்பல துவார மோடும்
பயில்வுறக் கட்டு ணுது பாரமும் தரித்துச் செல்லா(து)
அயர்வுறும் அசித்தாய்ப் பூத அணுக்களி னென்ற தாகும்
இயல்புறும் அவய வத்தால் அணுவுரு இறக்கு மன்றே. ௨௦௫

(உரை) இனி உடம்பகத்துப் பரமாணு அளவிற்றாய் நிற்பது உயிரென்னும் பாஞ்சராத்திரிகள் மதமுமடாது. என்னை? அணுவாயின் ஒரு துவாரத்தால் ஓடிப்போவதன்றி, உடம்பிற் கட்டுண்டற்கும் பாரந் தாங்கற்கும் உடம்படாதென்பது முதலிய குற்றந் தங்குமாகலான். ௧௫

உடலினின் ஏக தேசி உயிரெனின் உருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்கும் சுடரொளிப் பண்ப தென்னில்
சுடர்தொடிற் சுடுவ தெங்கும் தொட்டிடம் அறிவுண் டாகும்
அடர்புலன் இடத்து மொக்க அறிவெழ வேண்டு மன்றே.

(உரை) இனி மிருதிநூலார் உயிராவது உடம்பகத்துப் புன்னுனித் துளிபோல் ஏகதேசமாய் இதயத்தானத்தில் நிற்ப, அவ்வுயிரின் அறிவு விளக்கொளிபோல யாங்கணும் வியாபிக்குமென்பதும் அடாது. என்னை? உயிர் ஏகதேசமாயின் மேல் உருவுயிரென்றார்க்கு ஓதிய குற்றமனைத்தும் எய்துமாகலானும், குணங் குணியளவினன்றி மேற்செல்லாமையானும், விளக்கினொளியாவது விளக்கினது சூக்குமவடிவே யன்றிக் குணமன்றாகலான் அஃது ஈண்டைக்கு உவமையாகாமையானும், ஆமெனவே கொள்ளினும் அதனோடிதனிடை வேற்றுமை பெரிதாகலானும்.

உயிரினை அணுவென்பார்க்கும் இஃதொக்கும். ௧௬

உருவினில் நிறைந்து நின்றங் குணர்ந்திடும் உயிர தென்னின்
மருவிடா துறக்கம் வாயில் அறிவொக்க வழங்க வேண்டும்



பெருகிடும் சுருங்கும் போதம் பேருடல் சிற்று டற்கண்
வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்துபின் மாயு மன்றே.

(உரை) இனிச் சமணர் உடம்பளவில் நிறைந்து நின்று உணர்வது உயிரென்பர். அவர், உறக்கமுறுதலும், ஐம்பொறியினும் ஒருங்கே யறிவு நிகழாமையும், அவ்வவுடம்பளவிற்குத் தக்க அறிவாதலின்மையும், குறைப்பக் குறையாமையுமாகிய இன்னோரன்னவற்றை நோக்கிலராகலால், அவர் மதமும் அடாது. ௧௭

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணரும்இவ் வான்மா
வென்னில், தங்கிடும் அவத்தை போக்கு வரவுகள் சாற்றல்
வேண்டும், பங்கமார் புலனொன் றொன்றாய்ப் பார்த்திடல்
பகரல் வேண்டும், இங்கெலாம் ஒழிந்தான் நிற்ப தெங்ஙனம்
இயம்பல் வேண்டும். ௨௦௮

(உரை) இனி ஐக்கிய வாதிகள் முதல்வன்போல் எங்கணும் வியாபியாய் நின்று அறிவனான்மாவென்பர். அங்ஙனங் கூறுவார்க்கு, அவத்தை போக்குவரவுகளுறுதலும் ஐம்புலனும் ஒருங்கே யறியாமையும், எல்லாமாய் வியாபித்தல் ஒழிந்தானாகி உடம்பினுள் ஏகதேசமாய் நிற்றலும் எவ்வாறு கூடும்.

ஒழிந்தானென்றது முற்றெச்சம்; எல்லாமென்றது வியாபகமுணர நின்றது. ஆக்கச்சொல் வருவித்துரைக்க. ஒழிந்தாலெனப் பாடமோதி, சங்காரகாலத்தின் எல்லாப்பொருளும் அழிந்தவழி நிற்பதெங்ஙனமென்றுரைத்து, மூர்த்தப் பொருளனைத்தினுஞ் சையோகமாதலே வியாபகமெனவும் அவையனைத்தினையும் அறிதலே முற்றுணர்வெனவுங் கொண்டு, அங்ஙனங் கூறுவார் மதத்தை அவர் மதமேபற்றி மறுத்தாரெனினும் அமையும். ௧௮

சுத்தமாம், ஆன்ம சித்தைத் துகளுடல் மறைத்த தென்னின்
வைத்துறு துடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம்
ஒத்துறும் மலமற் றாலும் உறுமலம் வீடு மின்றாம்
பெத்தமு மடையான் முத்த னய்ப்பிர காச னாமே. ௨௦௯

(உரை) உயிர் எங்கும் வியாபகமாய் நின்று அறிவதாயினும் மாயாகாரியம் அவ்வறிவைத் தடைசெய்து நிற்றலின் உறக்க முதலியன வுற்று ஏகதேசப்படுவதாயிற்றென விடுப்பின்,—அது பரிகா

மன்று; அறிவு விளங்குதற்கு ஏதுவாய மாயாகாரியம் அதற்கு மறுதலையாய்த் தடைசெய்தல் கூடாமையானும், முன் சுத்தமாயிருந்த உயிரை அது பந்தித்ததெனின், வீடுபெற்ற வழியும் உறுமெனப்பட்டு முத்தியென்பது இன்றாய் முடியுமாகலானும், வீடுபெற்றபின் னுறாதெனின், அநாதி நிலையோ[illegible]னிடை வேற்றுமை யின்மையான் அநாதியே பந்தமுறுதலின்றி முத்தனாய் விளங்குதல் வேண்டுமாகலானும்.

அறிவிச்சை செயல்களென்னுஞ் செய்யுள்முதல் இத்துணையும் உயிருண்மை கொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத சமயிகள் தத்த மதத்துக்கேற்பக் கூறும் உயிரிலக்கணங்களும் அவை பொருந்தாமையுங் காட்டப்பட்டன. இன்னும் அவ்வமதத்தார் வேறுபடக் கூறும்உயிரிலக்கணங்களெல்லாம் இங்ஙனம் கூறியவற்றுள் வைத்துக் கண்டுகொள்க. அற்றேல், மற்றென்னையோ வுயிருக்கு இலக்கணமாவதென்னுமவ் வைக்கியவாதசைவரை நோக்கிச் சித்தாந்தங் கூறுமுகத்தால் யானெனதென்பதிணைதருமாற்றைச் சாதித்தற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

௧௧.

அசித்தரு வியாப கம்போல் வியாபகம் அருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னாகிப் பசுவென நிற்கு மான்மா. ௨௧௦

(உரை) ஒருவாற்றானும் அசித்தாதலரிய வியாபகப்பொருள் போல ஔபச்சிலேடிகவியாபகமாதலும் அதுபற்றி அதிசூக்குமசித்தாதலுமின்றி, அதுவதுவாய் வசிப்பினானும் வியாபகமாதலும், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடக்கும் இச்சாஞானக்கிரியைகளையுடைத்தாதலின் பசுவெனப்படுந் தூலசித்தாதலுமுடையது உயிர்.

*"உறற்பால - தீண்டா விடுதலரிது" என்றாற்போல அருமை ஈண்டின்மை குறித்து நின்றது. அருவமென்றது, †"இல்லா வருவாகி நின்றானை" என்றாற்போல, அதிசூக்குமமாதலை யுணர்த்தி ஆகுபெயராய் நின்றது. இதற்குப் பிறவெல்லாம் இனையபறவுரைத்

* நாலடியார் - பழவினை - ௬.

† சிவஞானபோதம் - சூத் - ௮ - ௫.

## தஞ்சைச் சைவ சித்தாந்த சபை

## ஆறும் ஆண்டு விழா

(சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு இணைக்கப்பெற்றது).

இத்தலைப் பெயர் பூண்ட சபையின் ஆறும் ஆண்டு விழா (8-3-36) ஞாயிறன்று பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கப்பெற்று இரவு 10 மணி யளவில் நிறைவெய்தியது.

அங்கு அன்பர் குழாங்கள் நிறைந்திருந்தன. தலைவரவர்கள் மேளவாத்தியத்துடனும், தமிழ்மறை முழக்கக் கூட்டத்துடனும் அழைத்து வரப்பெற்றார்கள்.

பென்ஷன் ஜில்லா முன்ஸீப் சைவத் திருவாளர் வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் தலைமைவகித்தனர். பின்பு தமிழ்மறை ஓதப்பெற்று, வரவேற்பு, அறிக்கை படித்தல் நிறைவேறியதும் தலைவரவர்கள் சைவசமய உயர்வைப்பற்றி முன்னுரை யாற்றினர். பின்னர் சைவத் திருவாளர் சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் B.A., L.T., சைவத்திருவாளர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள், திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள், திரு. பா. சிவகுருநாத பிள்ளை அவர்கள், செல்வர்கள் செ. சண்முகசுந்தரம், வேணு கோபாலன் என்ற சைவ இளைஞர்கள், முறையே, "பேரின்பம்", "முருகவேளின் திருவருள்", "வாளான் மகவரிந் தூட்டவல்லர்" "அப்பா எடுத்த அளவிலாப் புதையல்", "விபூதியைப் பற்றிய அளவளாவல்கள்" என்னும் பொருள்கள்பற்றிப் பேசினார்கள்.

பின்னர்த் தலைவரவர்கள் முடிப்புரைகூறச் சபை இனிது நிறைவெய்தியது.

தஞ்சை, திரு. மாயாண்டிசாமிகள் மடாலயத்தில் சைவ சித்தாந்த சபையும், சைவ சித்தாந்த இளைஞர் சங்கமும் நடைபெற்று வருகின்றன. இவ்விரு சங்கங்களும் சைவ சமயத்துக்கு உழைத்துப் பயனடைவது வியக்கத்தக்கதேயாகும்.

இதுபோன்று மற்றுஞ் சைவசமய சங்கங்கள் உழைத்து வருமாயின் கூடிய விரைவில் நம் ஒப்புவமையற்ற சைவ சமயம் முன்னுக்கு வந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

இப்படிக்கு

சு. சுப்பிரமணியன்,

இளஞ்சைவப் புலவன், தஞ்சை.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No.

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக வெளிவந்து விட்டது. இப்பதிப்பில் சிவஞான போதமூலம், சிவஞானசுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞான போதச் சூர்ணிக்கொத்து, மெய்கண்டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் ருஎசு + 40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

தனிப்பிரதி விலை ரூபா ஒன்று ;
ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா எட்டு.
பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து ;
ரயில்வே பார்சல் கூலி, தபாற்கூலி வேறு.
உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-ஏ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10-4-1936

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapath Mudali Street, Royapettah, Edited and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.

047

gistered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 9—No. 5.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

பர் கூ | தாது ஆண்டு வைகாசித் திங்கள் 1936ஆம் மேமீ | இதழ் ரு

உள்ளுறை பக்கம்

திருமுருகன் இளமை வணப்பு ... ... கசுக
சுவாமி விபுலாநந்தர் (உருவப்படம்) ... ... கசுஉ
திருநீலகண்ட நாயனார் சரித்திர நட்பம் ... கசுஅ
ஸ்ரீ இராமகிருஷ்ணரும் இயற்கை உணர்வும் ... கஎ௩
காஷ்மீரச் சைவம் ... ... ... கஎசு
இறை இருப்பில் நம்பிக்கை ... ... கஎஅ
சிவகாருண்யம் ... ... ... கஅ0
திருநீற்றின் சிறப்பு ... ... ... கஅசு
சமயச் செய்திகள் ... ... ... ககூ0
சித்தாந்த சாத்திரம் ... ... ருஉரு - ருஎசு

சைவ சித்தாந்த மகாசமாஜம்
திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணா 4.

# முக்கிய அறிக்கைகள்

1. நமது சமாஜக் காரியாலயம் கோடை விடுமுறைக்காக 10-5-1936 முதல் 20-7-36 வரையில் மூடப்படும்.

2. நமது சமாஜத்தின் பங்குனி மாதக் கூட்டம் எப்ரில்மீ 6,7ம் தேதிகளில் திருவான்மியூரிலுள்ள பாம்பன் - ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளின் கோவில் - மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் திரு - மா. துரைசாமி முதலியாரவர்கள், சுவாமிகள் கூறிய சில உண்மை வரலாறுகளை விரித்துக் கூறி, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் நுட்பங்களை விளக்கினார்கள். இரண்டாம் நாள் திருவாளர்கள் சச்சிதாநந்தம் பிள்ளை, உலகநாத முதலியார், கலியாணம்பிள்ளை ஆகிய மூவரும் சுவாமிகள் திருப்பாடல்கள் சிலவற்றை விளக்கி சமய ஒழுக்க முறைகளைப் பற்றிப் பேசினார்கள்.

3. நமது சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று 28-4-36ல் இராயப்பேட்டை குகாநந்த நிலயத்தில் நடந்தது. தலைவர் சுவாமி விபுலாநந்தரவர்கள் 'தொல்காப்பியமும் சைவமும்' என்பது பற்றி அரியதொரு விரிவுரையாற்றினார்கள். இதன் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

4. சமாஜத்தின் சித்திரை மாதக் கூட்டம் கூவம் என வழங்கும் திருவிற்கோலத்தில் 3 5-36ல் திரு. கீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் நடந்தது. திருவாளர்கள் உலகநாத முதலியார், முத்துசாமி முதலியார், சார்ங்கபாணி பிள்ளை, கலியாணம் பிள்ளை, துரைசாமி முதலியார், சபாபதி முதலியார், சோமசுந்தரம் செட்டியார் ஆகிய அன்பர்கள் முறையே சமய ஒழுக்கம், அன்பு, தாயுமானவர், கண்ணப்பர், ஆலய வழிபாடு, விபூதி, சுந்தரர் தேவாரம் என்பன பற்றிப் பேசினார்கள்.

5. சமாஜத்தின் வைகாசிமாதக்கூட்டம் திருப்பாதிரிப்புலியூரில் 4-6-36ல் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் நடைபெறும்

6. சமாஜ விழாவும் சைவர் மகாநாடும் திருவாரூரில் இக்கோடை விடுமுறையில் நடைபெறுதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் ஜூன்மீ முற்பகுதியிலிருக்கலாம். விவரங்கள் தினசரிப் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டு அறிக்கைகள் மூலமாகவும் தெரிவிக்கப்படும்.

---

## சைவசித்தாந்த இளைஞர் சங்கம், தஞ்சை

நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவிழா 12-4-36ல் திரிபுவனம் - கட்டளைத் தம்பிரான் - ஸ்ரீமத் - இராமலிங்க சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் - தி. கி. நாராயணசுவாமி நாயுடு, இ. கோவிந்தசாமிப் பிள்ளை, கு. சோமசுந்தர தேசிகர், பா. சிவ குருநாதபிள்ளை ஆகிய அன்பர்கள் முறையே சிலையும் நம் கலையும், பேரிறைவன் சீருருவம், சைவசமய சிந்தனை, சென்றடையாச் செல்வன் என்பனபற்றி விரித்துரைத்தார்கள். இடையே இராசாங்கம், கந்தசாமி என்ற இளைஞர்களுடைய உரையாடல் நடந்தது.

Reg. M. 2330.

11 JUN 1936

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.



| மலர் ௯ | தாது ஆண்டு வைகாசித் திங்கள் 1936௵ மேமீ | இதழ் ௫ |
|---|---|---|



## திருமுருகன் இளமை வனப்பு

[ஸ்ரீமத் - சுவாமி விபுலானந்தர்]

பரமர்திருச் சடைப்புனலும் பரைதிருக்கைம் மலரும்
படிந்தழகு விளங்குதிருப் பதநினைந்து நினைந்தெஞ்
சிரமிசைவைத் தருணகிரி திருப்புகழாற் புகழ்ந்த
திருமறையின் பொருளுரைத்த சிவகுருவே யென்போம்
சரவணத்தில் வந்துதித்த தனிமுதலே யென்போம்
தமிழ்விளக்கே பரஞ்சுடரே தமனியப்பொன் னுருவே
திருமுருக நினதிளமைச் செவ்வியையாங் காணச்
சிறியேமுக் கருள்புரியுந் தெள்ளமுதே யென்போம்.

இமயமலையின் வடசாரலிலே கருங்குவளைப்பூ மலிந்த பசிய சரவணப் பொய்கையானது தெய்வ வனப்போடு விளங்குகின்றது. ஒருநாட் காலையில் அன்பினாற் கவரப்பட்ட உள்ளத்தினராகிய நாரத முனிவர் இப்பொய்கைக் கரைக்கு வந்தார். வந்து தம்முன் தோன்றிய தெய்வக் காட்சியைக் கண்டு மனமுருகி ஆராமை மிக்கு இமையா விழியினின்றும்





உவகைக் கண்ணீர் கலுழச் சிரமேற் கூப்பிய கரத்தராய்ச் சுவரிற்றீட்டிய சித்திரம்போல நின்றார். சிறிது பொழுதிற் கசிவுற்ற உள்ளமானது ஓரளவுக்கு நிலைபெற்று நிற்க, ஏழிசை யமுதுகுக்கும் யாழினைக் கரத்தெடுத்துச் சுதிகூட்டி மிடறுங் கருவியும் ஒருங்கு செல்லப் பாடுவாராயினர்.

கண்ணு யிரத்தோன் மிடிதீர்க்கும் கருத்தா லுலகு தழைத்தோங்கத்
தண்ணார் கமலத் திருக்கரத்திற் றனிவே லெடுத்த பெருமானே,
தண்ணார் கமலத் திருக்கரத்திற் றனிவே லெடுத்துஞ் சிறுமகவாய்
விண்ணோர் வாழச் சரவணத்தில் விளையாட் டயரும் வியப்பென்னே!

அரியு மயனும் பெரிதுமுயன் றமைத்துப் புரக்கு மவனியெலாம்
சரியக் கணத்திற் றுகள்படுத்துஞ் சதுர்வே லெடுத்த முதல்வோனே,
சரியக் கணத்திற் றுகள்படுத்துஞ் சதுர்வே லெடுத்துஞ் சிறுமகவாய்
விரிதண் கமல மலர்சிதைத்து விளையாட் டயரும் விழைவென்னே!

அள்ளற் பள்ளத் தகன்பணைநாட் டால வாயை யழிக்கவரும்
வெள்ளஞ் சுவற்றிக் கடலலைத்த விறல்வே லெடுத்த திறலோனே,
வெள்ளஞ் சுவற்றிக் கடலலைத்த விறல்வே லெடுத்துஞ் சிறுமகவாய்
மெள்ளத் தவழ்ந்து விரல்சுவைத்து விளையாட் டயரும் விதமென்னே!

என்று இவ்வாறு பாடித் துதித்து அருந்தவப் பேற்றினை உடையாராகிய இருடி பத்தினிமார் அறுவரும் பாலூட்டி வளர்த்த ஆறு திருவுருவங்களையுந் தனித்தனியாக நோக்கினார். ஒரு திருவுருவம் அறுவரன்னைமாருள் ஒருவருடைய மடித்தலத்திலிருந்து அவ்வன்னையினது முகத்தைப்பார்த்து இளநகை புரிந்து குதலைச்சொல் மொழிந்துகொண்டிருந்தது. முகம் கோடி சூரியப் பிரகாசமாக விளங்க, ஒரு திருக்கரம் ஆகாயத்தைச் சுட்டி நிற்க, மற்றொரு திருக்கரம் தொழிலின்றி மருங்கு கிடப்ப, அழகனைத்துந் திரண்டு ஒருரு வெடுத்தாலொப்பத் திகழ்ந்து மன்னிய திருவுருவத்தைக் கண்டு மகிழ்ந்த முனிவரர்,

உலகிரு ளகற்றப் பலகதிர் பரப்பி யொப்பிலா வனப்பொடு விளங்கிப்
பொலிவுறு முகமுந் தெறுகதிர் வெம்மை போக்குதற் கெண்ணிவிண்
[படர்ந்து
செலுமுனி வரரைப் புரந்தபொற் கரமுந் திருநகை முறுவலுமருங்கிற்
குலவிய கரமுங் கண்டுகண் டுவந்தேன் குமரநா யகன்றிருக் கோலம்!

எனத் துதித்து அப்பால் நோக்கினார். சிறிய யானைக்கன்றின் மேலிவர்ந்து ஒரு திருக்கரமானது தொடைமிசையமர, மற்றொரு திருக்கரத்தில் அங்குசத்தைத் தாங்கி வேண்டுவார் வேண்டும் வரங்களைக் கொடுத்து வருகிற இளந் திருக்கோலத்தைக் கண்டார். கண்டு மனமுருகி,

விழைபவர் விழையும் வரங்களை யளிக்க
விரும்பிய திருமுகப் பொலிவை
அழகிய தொடையி லமைத்தபொற் கரத்தை
யங்குசந் தாங்கிய கரத்தை
மழகளி றூர்ந்து வருதிரு வுருவ
வனப்பினை நினைக்குமெல் லையிலே
குழைவுறு மனத்தேன் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

எனத் துதித்து மற்றொருபுறம் நோக்கினார். நிலத்திற் படுத்திருந்த சிங்கக் குருளை யொன்றின்மே லிருந்துகொண்டு ஒரு திருக்கரத்தில் ஒரு சிறிய வேலும் மற்றொரு திருக்கரத்தில் வட்டமாகிய சிறிய பரிசையும் ஏந்தித் தென்றிசை நோக்கிச் சற்றுத் தூரத்திலே வேதநெறி வழுவா அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயினைப் பார்த்தவண்ணமாக இருந்த இளந் திருக்கோலத்தைக் கண்டார். கண்டு அன்பினால் அகங் குழைந்து,

மந்திர விதியின் மரபுளி வழாது
மாமறைத் தீயினை வளர்க்கும்
அந்தணர் வேள்வி புரந்தரு ளிறையை
அந்தரத் தமரர்கள் வாழச்



சுந்தரப் பரிசை யயிற்படை யேந்துந்
துணைக்கரத் தெழிலுரு நிறைவைக்
கொந்தவிழ் பொழிலிற் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

எனத் துதித்துச் சரவணப் பொய்கை நடுவண் நோக்கினார். ஆங்கு அலர்ந்திருந்த வெள்ளைக் கமலமொன்றின்மீது பதுமாசனமிட்டுக் கண்மூடி மவுனமாகவிருந்த இளந் திருக்கோலத்தைக் கண்டார். இந்தத் திருவுருவத்தின் திருமுகங் கலை நிறைந்த சந்திரனென்னத் தண்கதிர் பரப்பியது. ஒரு திருக்கரம் சிங்கமுத்திரை விளங்க மார்பில் வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு திருக்கரம் மார்பிலே தாழ்ந்த மாலையைப் பற்றியவண்ணமாக விருந்தது. முனிவரும் நெஞ்சுநெக்குருகி,

அளிமிகு மியல்பா லருமறைப் பொருளும்
ஆகமத் துட்பொருண் முடிபும்
தெளிவுறின் மவுன மெனுந்திரு முகமும்
சின்மய மிதுவெனக் காட்டும்
ஒளிமிகு கரமும் மார்பினன் மாலை
யுற்றபொற் கரமுமா யொளிரக்
குளிரிதழ் மலர்மேற் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

என்னத் துதித்து மெய்ம்மறந்து நின்றனர். சிறிது நேரத்திற் றெளிந்து மற்றொரு திசையை நோக்கினார். மயில் வாகனத்திலிவர்ந்து வருகிற இளந் திருக்கோலத்தைக் கண்டார். பால் மணம் மாறாத திருமுகத்திலே வெகுளி தோற்றியது. தொடியணிந்த ஒரு கை சுழன்று கள வேள்விசெய்யும் முத்திரையைக் காட்டியது. மற்றொருகை மணியை அசைத்து ஒலி உண்டாக்கியது. இத்திருவுருவத்தைக் கண்ட முனிவரர்,

விரைவினிற் செல்லுங் களிமயி லேறி
விளங்கிள வுருவின தெனினும்
பரிவொடு கறுவுந் திருமுக வனப்பும்
படுமணி யிரட்டிய கரமும்

திருநிறை தொடியோ டெடுத்தபொற் கரமுஞ்
சிந்தைகொள் தலைபவர்ப் புரக்குங்
குறைகழற் பொலிவுங் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்திருக் கோலம்.

என்று துதித்து மற்றொரு திசையை நோக்கினார். அன்பே யுருவாய திருமுகத்திற் புன்னகையரும்ப, மார்பிலே சந்தனமும் முத்து மாலையும் பொலிய, மழலைக் குழவிப் பருவத்தோடு மணமகனுருவமும் விளங்க, மலர்மாலைகளையெடுத்துத் தம்மை வணங்கி முன்னிற்கின்ற தெய்வப் பெண்களுடைய கழுத்தில் ஒவ்வொன்றாக அணிவதையும், மங்களகரமான மழையைப் பொழிவிப்பதையுங் கண்டார். கண்டு பரவசராகி,

அணியா மகளிர் விழைவினை யகற்ற
அவர்மன நினைவினிற் பொருந்தும்
மணமக னுருவும் மாலையை யேந்தி
மயங்கிய திருக்கர வனப்பும்
பணைகல மடைய வுலகுயிர் தழைப்பப்
பயன்றரு மழைபொழி கரமும்
குணமிலேன் சிறியேன் கண்டுகண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

என்று பாடித் துதித்து நிலமிசைச் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டு எழுந்து நின்றார். அங்ஙனம் நின்ற நாரத முனிவர்மீது திருவருள் சுரந்த குமாரக்கடவுள் யானைக்கன்றின் மேலேறிய திருவுருவத்தினராக முன்வந்து "ஏ, நாரதமுனிவ! நீ விரும்பியதெது?" என்று கேட்டருளுதலும், முனிபுங்கவர் மீண்டும் பணிந்தெழுந்து "எம்பெருமானே, பெருந்தவப்பேற்றினால் தேவரீருடைய இளந்திருக்கோலத்தைத் தரிசிக்கப்பெற்றேன். நான் விரும்பியபோதெல்லாம் இந்தத் திருவுருவத்தோடு காட்சி தந்தருள வேண்டும். இதுவே நான் வேண்டுவது, பிறிதெதுவும் வேண்டேன்," என்றார். இதனைக்கேட்ட பாலசுப்பிரமணியர் புன்னகை புரிந்து "முனியே, தேவரும் உலகரும் எம்மை நோக்கி நெடுநாள் தவங்கிடந்து நாம் வெளிப்படும்போது மண்ணைப் பொன்னை மக்களை வாழ்வைக் கேட்டுப்பெற்றுக் கொண்டுபோய் விடுகிறார்கள், நீயேது முழு மூடத்தனமாக ஒன்றும் வேண்டாமென்று சாதித்துக்கொண்டு நிற்கிறாய், விரும்பியதைக் கேட்டுப் பெற்றுக்கொள்" என்று பணித்தார். நாரதரும் சுவாமியை நோக்கி "முருகா, கபடநாடக சூத்திராவதாரியாகிய கண்ணன் மருகா, தேவரையும் மக்களையும் ஏமாற்றியனுப்பி விடுவதுபோல என்னையும் ஏமாற்றியனுப்பிவிடப்பார்க்கிறாயா? எனக்கு மண்ணும் வேண்டாம்; பொன்னும் வேண்டாம்; மக்களும் வேண்டாம்; வாழ்வும் வேண்டாம்; நீ மாறாது எனது உள்ளத்தில் வதிந்தருள வேண்டும்; பேரழகு வாய்ந்த நினது இளந்திருக்கோலத்தைக் கண்டபின் வேறு விரும்பத்தக்க பொருள் மூவுலகத்தினுமில்லை. நினக்கு நீயே யொப்பான நீர்மையனே! இவ்வுலகில் தொட்டவற்றையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப்பெற்றும் அதனை வீசியெறிந்துவிட்டு அப்பரிச வேதியினாற் பொன்னாகச் சமைந்த சிறியதோர் இரும்புத்துண்டைச் சேமித்து வைப்போனும், விரும்பிய பொருளையெல்லாந் தரும் கற்பக விருட்சத்தை விரும்பாது அக்கற்பகந் தந்த சிறியதொரு பொற்குவையை விரும்பியவனும் மூடரெனக் கருதப்படுவதுபோலக் காண்டற்கரிய நின்னைக் காணப்பெற்ற பின் பிறிதொன்றின்மேல் உள்ளத்தைச் செலுத்தும் வீணரும் மூடரெனப்படுவார்; நான் அந்த மூடர் வரிசையிற் சேரமாட்டேன். பெறற்கரும் பொருளைப் பெற்றேன்; பிறிதொன்றும் வேண்டேன். நான் தருங் கையுறையாகத் திருமான்மகளிர் இருவரை நினக்குக் கலியாணஞ்செய்து வைக்கப்போகின்றேன். போய் வருகிறேன் விடை தந்தருளுக" என்றார். குமரநாயகனும் திருவருள் சுரந்து தமது திருவடியைத் தெண்டனிட்டுக் கிடந்த முனியினது சிரமீது வைத்து அநுக்கிரகிக்க, பெறற்கரும் பொருளினைப்பெற்ற முனியும் கன்றைப் பிரிந்த புனிற்றாவைப்போலப் பிரிவாற்றாது பிரிந்து போயினார்.

"இந்து சாதனம்"

# திருநீலகண்ட நாயனார் சரித்திர நுட்பம்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

திருநீலகண்ட நாயனார் சரித்திரம் நம்மிற் பலர் அறிந்த தொன்று. அச்சரித்திரத்திலுள்ள பல நுட்பங்களை நாம் கருதுவதுமில்லை; அவை இக்காலத்திற் பல கிளர்ச்சியாளர்கள் கேட்கும் வினாக்களுக்குத் தகுந்த ஆணித்தரமான விடைகளாகவுள்ளன என்பதை நினைவதுமில்லை. எனவே, இவைகளைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து இந்நுட்பங்கள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றனவென்பதைக் கூர்ந்து நோக்குவோமாக.

திருநீலகண்ட நாயனார் என்பவருடைய பெயர் காரணப் பெயர். இவரது மனைவியார் "திருநீலகண்டம்" என்ற மந்திரத்தைக் கூறும் பழக்கமுடையவராய் அம்மந்திரத்தையே ஆணையாகக் கூறித் தம்மைத் தீண்டுதல் கூடாதென்ன, நாயனாரும் அவ்வாணை கடவாது ஒழுகினதால் இவர் இக்காரணப் பெயர் பெற்றார். நாயனாரது இயற்பெயர் தெரியவில்லை. எனவே, நமது நாயனாருக்கு வழங்கும்பெயர் இவரது மனைவியார் செய்கையாற் கிடைத்த பெயரென்பது குறிக்கத் தக்கது. தமது இயற்பெயர் வழக்கொழிந்து மனைவியார் செயலின் மேன்மையாற் கிடைத்த ஒரு காரணப் பெயரே வழங்குவதாயிற்றென்றால், அக்காலத்தில் பெண்மக்களுக் கிருந்த பெருமை ஒருவாறு உணரப்படும்.

நமது நாயனார், "பொய்கடிந் தறத்தின் வாழ்வார்," "வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்," என்று பெரிய புராணம் கூறுவதால் இவர் செவ்வையாக இல்லறம் நடத்தியவரென்பது பெறப்படும். எனவே



இவரது மனைவியாரும் ஒத்த கருத்தினராய் இவருக்கு இல்லறத் துணைவியாராயிருந்தனரென்பது தானே போதரும் உண்மையாகும். இவர் மனைவியார் "அருந்ததி கற்பின் மிக்கார்" எனப்படுதலால் இவர் கற்பிற் சிறந்தவர் என்பதில் ஐயமில்லை. நாயனார் தமது குலத் தொழிலாகிய மட்கலம் வனைதலையே மேற்கொண்டு மட்கலத் திருவோடுகளை அடியார்க் களிக்கும் தொண்டு புரிந்து ஒழுகினார். இவர் மனைவியார் "திருநீலகண்டம்" என்று ஓதும் பழக்கம் உடையவர். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் "அவ்வினைக் கிவ்வினை" என்றருளிச் செய்த பதிகத்திலும் ஒவ்வொரு திருப்பாட்டின் இறுதியில் இம்மந்திரத்தைக் கூறியிருத்தலால் அக்காலத்தில் இம்மந்திரம் பெருவாரியாக வழங்கி வந்திருத்தல் கூடும்.

செம்மையாக இல்லறம் நடத்திவந்த நாயனார் "இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார்" என்றும், "ஆங்கோர் பரத்தைபால் அணைந்து" நண்ணினார் என்றும் பெரிய புராணம் கூறுகின்றது. "தகர நறுமலர் பொதுளிய குழலியர் கலக கெருவித விழிவலை படவிதி தலையில் எழுதி" என்று அருணகிரிநாதர் (திருப்புகழ்—சமாஜப் பதிப்பு 740-வது பாட்டு) கூறுவதுபோல, கன்ம வசத்தால் நாயனார் இவ்வாறு செய்ய நேர்ந்தது என்று கொள்வதே தகுதியாகும். இதை விடுத்து, நாயனார் ஆலயத்தில் அர்த்த ஜாம பூசை தரிசனம் செய்துவிட்டுத் திரும்பும்போது மழைபெய்ய, ஒரு வீட்டின் நடைப் புறத்தில் இவர் ஒதுங்க, அவ்வீடு தாசி வீடா யிருக்க, தாசி இவருக்குச் சந்தனம் தாம்பூலம் கொடுத்துபசரித்தனுப்ப, மழை நின்றவுடன் இவர் வீடு செல்ல, மனைவியார் தம்மைத் தீண்ட வேண்டாமென்று சூளுரைத்தார் என்று இக்கதையைத் திரித்துக் கூறுவது பெரிய புராணத்திற் காணப் பெறாத வரலாறாகும். மேலும் இன்பத்

துறையினில் எளியரானார், பரத்தைபால் அணைந்தார் என்று புராணம் கூறுவதற்கு மாறாகவும் இவ்வரலாறு துலங்கும். மழைக்கு ஒதுங்கிய சிறிது நேரத்தில் நடந்த உபசாரத்துக்காக ஆயுள் முழுமையும் தீண்டா விரதம் கொள்ளுதலும் பொருந்தாது.

நாயனாரது மனைவியார் "திருவினும் உருவம் மிக்கார்." எழில் மிக்க இவரை மறந்து பரத்தையர்பாற் சென்ற நாயனார் செயல் தவறானது. இத்தவறு மனைவியார் மனத்தைத் தாக்கியது. மானம் பொறாது மனைவியார் ஊடல் கொண்டார். ஊடல் கொண்ட மனைவியார் என்ன செய்தார்? "மனையின் வாழ்க்கை ஏனைய எல்லாம் செய்தே உடனுறைவு இசையார் ஆனார்" இந்த வாக்கியம் பொன்னெழுத்திற் பொறித்து ஒவ்வொரு தமிழ் மகளும் தனது படுக்கையறையில் வைத்தற்குரிய நீதி வாக்கியமாகும்.

இக்காலத்தில் பெண்ணுரிமை வேட்கை சில விபரீத முறைகளிற் செல்கின்றது. புருஷன் தன் பெண்சாதியை விட்டு விட்டுப் பரத்தையிடம் சென்றால், பெண்சாதி ஏன் அத்தகைய புருஷனை விடுத்து வேறொருவனிடம் செல்லக் கூடாதென்று சில மகாநாடுகளில் கேட்கப்படுகின்றது. பணம் பெற்றுக் காமத்துக்காக ஒருவனை யடைவதுதான் வியபிசாரமேயொழிய, பணமின்றி ஆசைக்காக ஒருவனிடம் செல்வது வியபிசாரமாகாதென்று ஒரு மாதர் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டதாகப் பத்திரிகைகள் சிலவற்றில் ஒரு செய்தி சில மாதங்கட்கு முன் வெளியாயிற்று. மேல் நாட்டுச் சட்ட முறையில் புருஷன் ஒரு பரத்தையிடம்சென்றால் பெண்சாதி விவாகத்தை ரத்து (Divorce) செய்து கொண்டு வேறொரு புருஷனை மணந்து கொள்ளலாம் என்ற நீதியுள்ளது. அந்த நீதியை நமது தேசத்துக்கும் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சி பல சங்கங்களில் நடைபெற்று வருகிறது.



நமது நாயனாருடைய மனைவியார் மனைவாழ்க்கைக்குரிய எல்லாப் பணிகளையும் செம்மையாகச் செய்தார். மெய்யுறு புணர்ச்சி (Co-habitation) என்ற உடனுறைவு ஒன்றற்கு மட்டும் இசையவில்லை. ஏன்? நாயனார் பரத்தையரிடம் உடனுறைவுபெற்றமையால் தம்மிடத்திற் பெறுவது மிகையென்பதையும் நாயனார் ஒழுக்கம் தமக்கு மானக்குறைவென்பதையும் அறிவுறுத்த வேண்டியே அவ்வாறு செய்தார். அம்மையார் பட்டினி கிடத்தல், அயல் வீடுகட்கறிவித்தல், தாயார் வீட்டை யழைத்தல் முதலிய முறைகளைத் தழுவாது விடுத்தது அவருடைய அறிவின் மேன்மை, ஒழுக்கத்தின் விழுப்பம் முதலியவற்றைப் புலப்படுத்தும். அம்மையார் ஒழுக்கம், அறிவு செறிந்த ஒத்துழையாமைப் புலவி (Intelligent Non-co-operation) ஆயிற்று.

இப்புலவியைத் தீர்க்க நாயனார் "வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில், தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம் என்றார்". இவ்வாணையைக்கேட்ட நாயனார் "எம்மை என்றதனால் மற்றை மாதரார் தமையும் என்றன் மனத்தினும் தீண்டேன்" என்றார். கற்புறு மனைவியாரும் நாயனார் பணி விடைகளையெல்லாம் மெய் தீண்டாதுசெய்து, மெய்யுறு புணர்ச்சியின்றி அயலறியா வண்ணம் இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தார். நாயனாரும் பரத்தையர், மனைவியார், ஏனைய பெண்கள் ஆகிய எவரையும் மெய்யாலும் மனத்தாலும் தீண்டாத சுத்தமான வாழ்க்கையை நடத்தினார்.

இவ்வளவு கடுமையாக நாயனாரைத் தண்டிப்பது கற்புக்கழகாகுமாவென்று சிலர் கேட்கக்கூடும். திருக்குறள், தொல்காப்பியம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ள கற்பொழுக்கத்தில் புலவி, ஊடுதல் முதலிய நிகழ்ச்சிகள் பற்பல காரணங்களையொட்டி வருதல் காணக்கிடக்கும். மேல்நாட்டு நாகரிகத்திலும் ஒரு புருஷன் பரத்தை யொருத்தியிடம்

ஓரிரவே சென்றிருப்பினும் அவன்மனைவி விவாகத்தையே முறித்துக் கொள்ளலாம் என்ற உரிமையுடையவளாகின்றாள். நமது நாகரிகத்திலும் ஒருபெண் ஓரிரவே கணவனை விடுத்து அயலானிடம் சென்றாலும் அவள் கற்பழிந்தவளாகக் கருதப் படுகிறாள். அவளைப் புருஷன் ஒதுக்கிவிட்டு வேறு மணமும் புரிந்து கொள்வதைக் காணலாம். இஃதிவ்வா றிருத்தலின், புருஷன் பரத்தையிடம் செல்வதை மானக்குறைவென் றெண்ணி மனைவி உடனுறைவை மறுத்தல் மட்டும் எவ்வாறு அடாத செயலாகும்?

இங்கே முக்கியமாகக் கவனித்தற் குரியது அயலறியாது இவர்கள் இவ்வாறு வாழ்ந்த முறையாகும். புருஷன் வழுவிய காலத்துப் பெண்சாதி திருத்துவதும், பெண்சாதியைப் புருஷன் திருத்துவதும் அயலார் அறியாது நடைபெற வேண்டிய செயல்கள். அயலறிந்தால் இருவர்க்கும் மானக் குறைவேயாகும். இல்லறத்தின் மாண்பு இறந்தே போகும்.

மெய்யுறு புணர்ச்சியின்றியே, செம்மையாக இல்லறம் நடத்தும் முறையே மேல்நாட்டுப் பேரறிஞர்கள் துணைமுறைமணம் (Companionate Marriage) என்று கூறுகின்றார்கள். இம்முறையில் பலநூற்றாண்டுகட்கு முன்னரே நமது தமிழ்நாட்டில் ஒருசிறந்த சிவனடியார் இல்லறம் நடத்தினாரென்ற செய்தி இத்தகைய கருத்துக்கள் நமது நாட்டுக்குப் புதியனவல்ல வென்பதைப் புலப்படுத்தும்.

மேலே சரித்திரத்தின் போக்கை விரிக்க வேண்டா. இறைவன் ஓடு கொணர்ந்தான், நாயனாரிடம் வைத்தான், மீண்டும் வந்து கேட்டான், ஓட்டைக் காண இயலவில்லை, வேறு ஓட்டை ஏற்க மறுத்தான், குளத்தில் மூழ்கச்செய்தான், நாயனார் மனைவியாரைத் தீண்டாமலே மூழ்கித் தமது சபதத்தைக் காத்தனர், பாரோர் கேட்பப் பண்டு தம் செய்கையை வெளியிட்டனர், இருவரும் இளமை பெற்றனர்.



நாயனார் வாழ்க்கை ஒருபோலியான, வெளியாருக்கு மட்டும் நலமென்ற தோற்றமுடைய, உண்மையில் அன்பில்லாத வாழ்க்கையல்லவா (Merely keeping up appearances) என்று சிலர் கேட்டல்கூடும். இவ்வாறு கனவிலுங் கூட எண்ணுதல் கூடாது. மனைவியார் சபதங் கூறியவுடன் நாயனார் சிற்றின்ப நாட்டத்தை அறவே ஒழித்தார். மனைவியாரும் மெய்யுறு புணர்ச்சியை விரும்பினாரில்லை. இருவரும் ஐம்புலன்களையும் வென்ற தவச்சிரேஷ்டர்களானார்கள். இருவரும் குளத்தில் மூழ்கி யெழுந்ததும் இடபவாகனத்தின் மீது இறைவன் தோன்றி "வென்றஐம்புலனால் மிக்கீர்" என்று இவர்களை விளித்தது இதனை நன்கு புலப்படுத்தும். ஐம்புலன்கட்கிரையாகிய நம்போலியர்க்கே மெய்யுறு புணர்ச்சியொன்றே இல்லறத்திற் குயிராயது என்றகொள்கை சிறந்ததெனக் காணப்படும். வென்ற ஐம்புலனால் மிக்க இருவர் உடனுறைவின்றி இல்லறம் நடாத்துதல் அன்பு செறிந்த செம்மையான வாழ்க்கையே யாம்.

இச்சரித்திரத்தாற் கிடைக்கும் தலையாய பொருள் இல்லறத்திலிருந்தே ஐம்புலன்களை வென்று பேரின்பமுத்தி யெய்தலாமென்பதாகும். மெய்யுறு புணர்ச்சியை இல்லறத்துக்கு அடிப்படை யெனக்கொள்வது தவறென்பதும் இச்சரித்திரத்தாற் கிடைக்கும் உண்மையாகும். கணவனை மனைவி தகுந்த முறையில் அயலறியாது திருத்துவது கற்பொழுக்கத்துக்கு ஏற்ற செயலே யென்பதும் இவ்வரலாற்றாலறியப் படும் உண்மையாகும். தமிழ்ப் பெண்மக்கள் இச்சரிதத்தைப் போற்றிப் பயன் பெறுக.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரும் இயற்கை உணர்வும்

[மா. துரைசாமி முதலியார்]

சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தில், இராமகிருஷ்ண தேவருடைய நூறும் ஆண்டு பிறந்த நாள் விழாவில், திரு. எஸ். குப்புசாமி சாஸ்திரியார் அவர்கள் தலைமையில், திரு. எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் செய்த சொற்பொழிவிற்கண்ட சில குறிப்புக்கள் வருமாறு :—

“ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஸ்ரீ சங்கரர் முதலியோர் வாழ்க்கைகள் விஞ்ஞான நூல் நெறிகளைக் கடந்துள. உள்ளதைக் கூறுவதே விஞ்ஞான சாத்திரம். வாதிக்கக்கூடிய பகுதி அதைச் சுற்றிலுமிருக்கிறது. அதைக் கடந்துளதே காண்டற்கரிய கடவுள். இராமகிருஷ்ணரைப் போன்றவர்கள் கடவுள் நிலையைச் சேர்ந்தவர்கள். அவர்களை இயற்கை உணர்வினாலேயே அறிதல்வேண்டும். மன நிலையைக் கடந்துள்ள இயற்கை உணர்வைப்பற்றி மிகுதியாக அறியக்கூடவில்லை. பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாறுகளில் அறிகிற அனுமானங்களினின்றுமே இயற்கை யுணர்வு இன்னதென ஒருவாறு அறியவேண்டும். எண்ணம் யூகம் விசாரணை முதலிய மன விருத்தி ஒன்றுமில்லாமலே அம்மனதிற்கு நேரே புலனாவதுதான் இயற்கை உணர்வென்பதும் ஒருவகை இலக்கணம்.

இத்தகைய உணர்வு இராமகிருஷ்ணருடைய பிறவியைப்பற்றியே அவருடைய பெற்றோர்க்கு நிகழ்ந்திருக்கிறது. கயாவிலிருந்த தந்தைக்கும் கிராமத்தில் காளி கோயிலில்



வழிபட்டுக் கொண்டிருந்த அவருடைய தாய்க்கும் ஒரே சமயத்தில் அவ்வுணர்வு தோற்றமாயிருக்கிறது. இராமகிருஷ்ணருக்கு இவ்வுணர்வு மிகுதியாக உண்டாதற்கு முன்னர் அவர் அளவுகடந்த பிரயாசையில் ஈடுபட்டிருந்தாரென அறிகிறோம். கணித சாத்திரத்தில் இயற்கையுணர்வு வாய்க்கப்பெற்றிருந்த இராமானுஜம் என்பவருடைய வாழ்க்கையிலும் இத்தகைய சம்பவங்களைக் காணலாம். இயற்கையுணர்வைப் பெறுவதற்குக் காமம், குரோதம், உலோபம் என்னும் தீய குணங்களை ஒழித்தல்வேண்டும். இன்னும் இயற்கை யுணர்வு மிக இரகசியமானதும் நழுவிப் போகக் கூடியதுமாகும். அவ்வுணர் வுண்டாகும் காலத்தையும், உண்டாகும் விதத்தையும் சொல்ல இயலாது. அதன் விடுதலை இரகசியமாக நடைபெறும் நீதித்தலத் தீர்ப்பை ஒத்திருக்கிறது. இயற்கை உணர்வைக் கொண்டே இராமகிருஷ்ணர் வழக்கத்திற்கு விரோதமான சில செயல் முறைகளைப் பின்பற்றி நடந்தார்.

அநுபவிகளாகிய பெரியோர்கட்கு இயற்கையுணர்வு அறிவிக்கும் உண்மைகள் வாக்கைக்கடந்துநிற்பனவாகுமென்பதே அவ்வுணர்வின் இன்னொரு குணமாகும். ஆகையினாற்றான் அநுபவ ஞானிகளாகிய இயேசுகிறிஸ்து இராமகிருஷ்ணர் முதலியோர் மறைபொருளமைந்த வாக்கியங்களாற் பேசினர்கள். இயற்கையுணர்வு அறிவிற்கு ஆதாரமானதாகாதென உலகாயதர் கூறுகின்றார்கள். இன்னொரு வகையார் அறிவிற்காதாரம் இயற்கையுணர்வேயென்று கூறுவர். மற்றொருவகையார் அஃதும் ஓர் ஆதாரமாகலாம் என்பர். அனுபவ ஞானிகளைச் சந்திப்பதாலும், அவர்களுடைய சந்நிதானத்தில் இருப்பதாலுமே மானத தருக்கங்கள் யாவும் ஒரு முடிவையடைந்துவிடும். இதை விளக்க இராமகிருஷ்ணருடைய சரிதத்தில் பல வரலாறுகள் இருக்கின்றன.”

தலைவர் தம் முடிப்புரையில் அகத்திலேயே அரும்பி மலர்வதே இயற்கையுணர்வென்றும், அது புறச்சார்பால் உண்டாவதன்றென்றும், அவ்வியற்கை யுணர்வை மிகுதியும்பெற்றுள்ளவர்கள் தைரியமும் விசுவாசமும் நிறைந்தவர்களாக இருப்பார்களென்றும் மோல்லகவி கூறிய பாடலை எடுத்துக் கூறினார்கள்.

# காஷ்மீரச் சைவம்

[இளஞ் சைவப் புலவர் - அ. முத்துக்குமார சுவாமி]

சைவ சமயமென்பது சிவனை வழிபடுஞ் சமயம். சிவ வழிபாடு தமிழகத்திலும் இந்தியாவின் வேறு பல பாகங்களிலும் நெடுங் காலமாக நடந்து வருகிறது. அவற்றுள் தமிழகத்து வழங்குவது சைவ சித்தாந்தம் என்னுஞ் சமயம். வேறிடங்களில் வழங்குவனவற்றுள் காஷ்மீரத்துத் த்ரிகா என்னும் ப்ரத்யபிக்ஞா தரிசனமும் ஒன்று. இதைப் பற்றிச் சில எழுதுவதே இங்கு எனது நோக்கம்.

பதி பசு பாசங்களாகிய மூன்றைப் பற்றியதாதலின், இச்சமயத்துக்கு, த்ரிகா என்னும் பெயர் ஏற்பட்டது. இது அத்வைதத்தின்பாற்படுவதென்பது, சோமானந்தரின் சிவத்ருஷ்டி முதற் சுலோகத்தில், பூஜிப்பவன், பூஜையால் போக்கிக் கொள்ள நினைக்கும் விக்கினங்கள் ஆகிய இவை சிவனுகவே கருதப்படுவதிலிருந்து தெரியவரும்.

இச்சமயம், காஷ்மீரத்தில் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் வசுகுப்தரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் மஹாதேவ கிரியில் ஓராச்ரமத்தில் வசித்து வந்த முனிவர் என்பதும், சிவனே கனவில் வந்து அக்கிரியில் ஒரு பாறைமேலெழுதப்பட்டிருந்த சூத்ரங்களைப் பற்றிக் கூற அவற்றைக் கண்டு பிடித்து 'சிவசூத்ரம்' என்னும் நூலாக அதை வெளியிட்டவர் என்பதும், பகவத் கீதைக்கு வாசவீடீகா என்று ஒரு பாஷ்யம்செய்தவர் என்பதுமே இவரைப் பற்றித் தெரிந்தவை. இச்சிவசூத்ரத்திற்கு வ்ருத்தி, வார்த்திகம், பாஷ்யம் முதலியன உண்டு.

இச்சமய நூல்களை மூன்று வகையாகப் பிரிப்பர்; (1) ஆகம சாஸ்திரம், (2) ஸ்பாண்ட சாத்திரம், (3) ப்ரத்யபிக்ஞா சாஸ்திரம், தவிரவும் (ஞானப்ரதான மான) பரம், (க்ரியாப்ரதானமான) அபரம், (தலப்பான) பராபரம் எனவும் பிரிப்பர்.

இவற்றுள் ஆகமநூல்கள் ஞானக்ரியைகளைப் பற்றியன; பல கால குரு சிஷ்யக்ரமத்தில் வருவன; சிவ சூத்ரத்துக்கு முந்தினவும், துவைதமாகப் பொருளுரைக்கப் பட்டு வந்த [illegible]மான சில தந்திரங்களைத் தன்னுள் அடக்கியவை.

ஸ்பாண்ட சாத்திரம் க்ரியையை விவரிக்கும் 52 சுலோகங்களாக உள்ளது. இதற்குக் கலாதரின் வ்ருத்தியும், ராமகாந்தரின் விவ்ருத்தியும், உத்பல வைஷ்ணவரின் பிரதீபிகையும் உள்ளன. மேலும் க்ஷேமராஜரின் ஸ்பாண்ட சந்தோஹமும், ஸ்பாண்ட நிர்ணயமும் இவ்வகையைச் சேர்ந்தனவே.

மூன்றுவதான ப்ரத்ய பிக்ஞா சாஸ்திரநூல்கள் தத்வக் கொள்கைகளை (Philosophy) விளக்குவன. இவற்றுள் சோமானந்த சித்தரின் சிவத்ருஷ்டி, அவராலேயே செய்யப்பட்ட அதனுடைய வ்ருத்தி, உத்பலதேவரால் செய்யப்பட்டு சிவத்ருஷ்டியைவிட மிகுந்த ப்ராபல்யமடைந்த ஈசுவரப்ரத்யபிக்ஞாசூத்ரங்கள் முதலியன அடங்கும். இச்சோமானந்தர், துர்வாசரின் மானஸ புத்திரருள் ஒருவரான த்ரியம்பகரின் வம்சத்தில் ஆனந்தரென்பாருக்கு மகனாகப் பிறந்தவர்.

இம்மூவகை நூல்களைத் தவிர ஸ்தோத்ரங்களும், கர்மாநுஷ்டான விதிவிளக்க நூல்களும், மிகப் பிரசித்தி பெற்ற அபிநவகுப்தரால் சைவத்தைப்பற்றி விவரமாக எழுதப்பட்ட 'தந்த்ராலோகம்' என்னும் நூலும் வேறு சிலவும் உள்ளன.

# இறை இருப்பில் நம்பிக்கை

கும்பகோணம் விக்டோரியா ஜூபிலி ஹாஸ்டல் யூனியனில் டாக்டர் ஆர். நாகராஜ சர்மா அவர்கள் செய்த சொற்பொழிவிற்கண்ட சில குறிப்புக்கள் வருமாறு:—

"கடவுளைப் பற்றிய கருத்து எப்போதும் ஒன்றாகவேயிருந்ததில்லை. கடவுள் இல்லையென்னும் கொள்கையிலிருந்தே கடவுள் உண்டு என்னும் கொள்கை வந்தது. உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் பெரிய சக்தியொன்று உண்டென்றும் அதுவே கடவுளென்றும் நம்பப்படுகிறது.

* * *

ஒழுங்காக அமைக்கப் பெற்றுள்ள இவ்வுலகத்தை நோக்கின் இதற்கொரு காரணம் இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இக்காரணத்தையே கடவுள் நம்பிக்கை யுடையோர் எல்லாப் பொருள்களோடுங் கலந்துள்ள பெரிய சக்தியென்றும் கடவுளென்றும் சொல்லுகிறார்கள். பௌதிகக்கலை வல்லாரும், பிற அறிஞர்களுங் கூட அச்சக்தியே கடவுளென்று நம்பாவிடினும், அத்தகைய சக்தியின் இருப்பை நம்புகிறார்கள்.

* * *

ஹால்டேன் பிரபு கடவுளின் இருப்பைத் தற்கால பௌதிகக் கலையின் துணைகொண்டும் ஆய்ந்துள்ளார். அவர் உலகம் தானே தோன்றி வளர்ச்சியடைந்து வருகிறதென்னும் கொள்கை திருப்திகரமானதாக வில்லையென்றும், அறிவுடைய ஒருசக்தி இருக்கவேண்டுமென்றும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்பெரிய சக்தியே உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் கடவுளென வேதாந்த சூத்திரத்திற் கூறிய கொள்கை மிகவும் திருப்திகரமானது. உதயணர் எழு



திய "குசுமான்ஜலி" என்னும் தத்துவ நூலிலும் கடவுளின் உண்மை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

* * *

தற்போது மக்களுடைய சமுதாய நிலை குழப்பமானதாகஇருக்கிறது. எளியார் பொருள்களைத் தந்நலமுடைய வலியார் கவர்வதே எங்கும் காணப்படுகிறது. இந்நிலை ஒழிய வேண்டுமானால், மக்கள் கடவுள் நெறியைக் கைப்பற்றி வாழ வேண்டும். மக்கள் முன்னமே பலபிறவிகளை யெடுத்துள்ளதாகவும், விடுதலை யென்னும் முத்தியை அடைவதன்முன் இன்னும் பல பிறவிகள் எடுக்கவேண்டுமென்றும் நம்புகிறார்கள். இப்பிறவிகள் ஓர் ஏணியாகக் கருதப்படுகின்றன. மக்கள், பிறவிகளாகிய ஏணியின் துணைகொண்டே உயரச் சென்று தங்கள் குறிக்கோளை அடையவேண்டும். மக்கள் அவ்வாறு நம்புவதற்குக் காரணம் அவர்கள் முன் வினையில் வைத்த நம்பிக்கையாம். முன் வினையிலுள்ள இந்நம்பிக்கை மக்களைச் சோம்பேறிகளாக்காமல் மிக்க சுறு சுறுப்புள்ளவர்களாக ஆக்குகிறதென்பதே சிலர் கொள்கை.

* * *

ஒரு மனிதன் விடுதலையை விரும்பிச் செல்லும் பிரயாணத்தில் அயலானும் தன்னோடு கூடவருபவனே என்று கடவுள் நம்பிக்கை வற்புறுத்துகிறது. ஆகலின், ஒருவன் இப்பிறவியில் நன்றாக வாழ மற்றவர் இயன்றவரை துணைபுரிய வேண்டுமென்றும் கடவுள் நம்பிக்கை கற்பிக்கிறது. இன்னும் இந்நம்பிக்கையால் ஒருவர் பொருளை மற்றொருவர் கவர்வதும் ஒழியும். ஒவ்வொருவரும் பிறரை நன்கு நடத்துவதே தங்களுடைய குறிக்கோளென்றும் அறிவார்கள். ஈதல்லாமல் பௌதிகக்கலையிற்கண்ட உண்மைகளை ஆதரிக்கும் புதிய கொள்கைகளொன்றும் தற்காலவாழ்க்கையைச்செம்மைபடுத்தா. மனிதன் தான் பெறும் நலங்களெல்லாம் கடவுளால் கொடுக்கப்பட்

டனவென்றும் அதனுல் பிறர்க்கும் பணிசெய்வதே வாழ்க்கையின் நோக்கம் என்றும் உணராவிட்டால் தற்கால சமுதாயக் குழப்பத்திற்கு முடிவுகாண இயலாது. மனிதன், தான் ஒரு குறித்த நோக்கத்தோடு கடவுளால் படைக்கப்பட்டிருத்தலையும், தன்னுல் செய்யப்படும் ஒவ்வொன்றையும் கடவுள் அறிகின்றுரென்னும் உண்மையையும் அறிந்தால் அவன் பிறர்க்குத் தீங்குண்டாகக் கூடிய எதையுஞ் செய்யமாட்டான். ஆகலின், சுகதுக்கங்கள் முன்வினையின் பயனுகவே ஒருவனுக்கு உண்டாகின்றன வென்பதையும் கடவுள் நம்பிக்கை அறிவுறுத்துகிறது. மக்கள் இவ்வுண்மைகளை உணர்ந்து அவற்றிற் கேற்பத் தம் வாழ்க்கையை நடத்துவார்களானுல், இவ்வுலகம் தேவ உலகமாகத் திகழும்.''

—மா. து.

# சீவகாருண்யம்

[திரு. கச்சி. முனிசாமி உடையார், B. A.]

[இஃது திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் செய்த சொற்பொழிவின் சாரம்]

சீவகாருண்யம் என்னும் சொற்றொடர் ஒரு சீவன் மற்றொரு சீவனிடத்தில் காட்டும் காருண்யம் என்றும், கடவுள் சீவர்களிடத்தில் காட்டுகிற காருண்யம் என்றும் இருபொருள் பட நிற்கின்றது. சீவன் என்றுல் உயிர்; காருண்யம் என்றுல் அருள், தயை, கிருபை. சீவ காருண்யம் என்றுல் ஒருயிர் மற்ருேர் உயிரிடத்தில் வைக்கும் அருள் அல்லது கருணையாகும். இங்கு எடுத்துக் கொண்டது இப்பொருளிலாம்.

உலகம் உயிர் ஆகியவற்றுள் உலகம் அறிவில்லாதது; உயிர்கள் அறிவுடையன. உடல் பேதங்களால் உயிர்கள்



ஐந்துவகைப் படும். அவை, தொட்டால் அறிந்துகொள்ளும் ஓரறிவுடைய உயிர், அவ்வறிவோடு சுவையு மறிகின்ற ஈரறிவுடைய உயிர், இவ்விரண்டோடு நாற்றமுமறிகின்ற மூவறிவுடைய உயிர், இம்மூன்ருேடு ஒளியுமறிகின்ற நாலறிவுடைய உயிர், இந்நான்கோடு ஓசையுமறிகின்ற ஐயறிவுடைய உயிர் என்பனவாம். மரம், செடி, கொடி, புல் முதலியன ஓரறிவுடைய உயிர்கள். சங்கு இப்பி முதலியன இரண்டறிவுடைய உயிர்கள். கரையான் முதலியன மூன்றறிவுடைய உயிர்கள். தும்பி, வண்டு முதலியன நாலறிவுடைய உயிர்கள். விலங்கினங்கள் ஐயறிவுடைய உயிர்களாம். இந்த ஐவகை உயிர்களும் தாழ்ந்தனவாம். இவ்வையறிவோடு மனத்தால் அறிகின்ற அறிவுடைய மக்கள் உயர்ந்தவராவர். மனவறிவுடைமையின் மனிதர் எனப்படுகின்றனர். இவ்வறுவகை உயிர்களுள் ஆறறிவுடைய மக்களின் தொகை மிகச்சிறிதாம். ஐயறிவுடைய உயிர்களின் தொகை அதனினும் பெரிதாம். நாலறிவுடைய உயிர்களின் தொகை அதனினும் பெரிதாம். மூவறிவுடைய உயிர்களின் தொகை அதனினும் பெரிதாம். ஈரறிவுடைய உயிர்களின் தொகை அதனினும் பெரிதாம். ஓரறிவுடைய உயிர்களின் தொகை அதனினும் பெரிதாம். மற்ற உயிர்களின் எண்ணில் கோடி தொகையை நோக்குமிடத்து மனிதப்பிறவி மிகச் சிறந்ததாகும். ஆகையால் "பெரிய யோனிகள் பிழைத்து இவண் மானிடம் பெறல்" மிகவரிது. வடகடற்படு நுகத்தடியுள் தென்கடல் இட்டதோர் நோன்கழி சிவணி அத்துணை அகவயின் செறிந்தென அரிதாம் மானிடம் பெறல். மனிதர், தேவர், நரகர், விலங்கினம் எனும் நால்வகைச் சாதிகளுள் பின் மூன்று சாதிகளினுள்ள அனேக கோடி யோனி பேதங்களினின்று பிழைத்து மனிதஉடல் பெறுவதும், பெறினும் கொலைகளவு முதலிய புன்தொழில் புரியும் இழி குலங்களில் பிறக்காமல் நல்ல

தொல்குலத்தில் பிறத்தலும், பிறந்தும் கூன், குருடு, செவிடு எனும் பல அங்கவீனங்கள் இன்றி உருவின் மிக்கதோர் உடம்பு பெறுதலும், பெறினும் ஆறுவதறிவாகிய மனஅறிவு பெறுதலும், இவை எல்லாம் வாய்ப்பினும் புண்ணிய பூமியாகிய இந்நாட்டில் பிறத்தலும் அரிதென்பதை நாம் உணரின், இவ்வுடலால் ஆகவேண்டுவனவற்றை இஃதுளபோதே விரைந்து செய்யவேண்டும் எனும் உண்மை புலனாகின்றது.

மக்களெல்லோருக்கும் அறிவுண்டு. அஃது கட்புலனுக்குத் தெரியாதெனினும் அதன் உண்மையைச் செய்கையினால் அறிகிறோம். பூமியின் வளனை அதில் உண்டாகும் செடிகளாலும், மரத்தின் தன்மையை அதுதரும் பழத்தாலும், பொன்னின் உயர்வை அதன் மாற்றாலும் அறிவதுபோல் மக்களின் அறிவை அன்னார் செயலால் அறியலாம். உலகத்தில் எவரும் இருக்கும் நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை அடைய விரும்புதல் இயற்கை. உயர்ந்த நிலையடைதற்கு முயற்சி இன்றியமையாதது. "முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்". நீராம்பல் நீளவேயாதல்போல் ஒருவனுடைய உயர்வு அவன் செய்யும் முயற்சியின் அளவே யாகும்.

முயற்சி செய்வதற்கு மனம், வாய், உடல் ஆகிய மூன்று முக்கிய கருவிகள் நமக்குள. மனத்தால் நல்லனவும் தீயனவும் எண்ணுகிறோம். வாயால் நல்லனவும் தீயனவும் பேசுகிறோம். உடலால் நல்லனவும் தீயனவும் புரிகிறோம். இப்படி அறுவகையான செயல்கள் நிகழ்த்துகிறோம். இவற்றில் உடல் செய்வதைக் காட்டிலும் வாய்பேசுவததிகம். வாய் பேசுவதைக் காட்டிலும் மனம் நினைப்பது மிகவும் அதிகம். "ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப கோடியுமல்ல பல" என்றார் வள்ளுவரும். நல்லன செய்தல், நல்லன பேசல், நல்லன நினைத்தல் ஆகிய இம்மூன்றும் நல்வினை, சுகர்மம்



அல்லது புண்ணிய மெனப்படும். தீயனசெய்தல், தீயன பேசல் தீயன நினைத்தல் தீவினை, துஷ்கர்மம் அல்லது பாவமெனப்படும். ஒருவன் நினைத்தலும், பேசலும், செய்தலும் அன்னியருக்குச் சுகந்தருவதாயின் அது புண்ணியமாம், துக்கந் தருவதாயின் பாவமாம்.

நல்வினை, செய்வானை விடாது பற்றி அவனுக்கின்பம் பயக்குமாதலின் இன்பம் கருதுவோர் யாரும் நல்வினையே செயக்கடவர். இன்புடன் வாழ்தலே உயர்ந்த வாழ்க்கையாகும். பிறவுயிர்களின் துன்பத்தைப் போக்கலின் பயனாக நமக்கு இன்பம் வருமாதலின், பிறவுயிர்கள் உறுகணடைந்த காலத்து அதைப்போக்கி அவ்வுயிர்கட்கு இன்பம் தரக்கடவோம். ஒருவன் நல்வினை செய்ய ஆற்றானாயினும் தீவினை செய்யா திருக்கக் கடவன். மற்றவர் புகழ்தற்கு அது இடமாயிருப்பதுந் தவிர அவனை நல்ல வழியில் செலுத்துவதற்குந் துணையாயிருக்கும்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப்படூஉ நெறியுமா ரதுவே"

என்பது புறநானூற்றுச் செய்யுள்.

தீவினையைச் சிந்தித்தலும் பேசுதலும் கூடாதாயினும் அதைச் செய்தலான் ஏற்படும் துன்பங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங் காரணமாக அதைப்பற்றிச் சிறிது பேசல் நலம். அல்லித்தண்டை முறித்து விட்டாலும் நூல் அறா திருப்பதுபோல் உயிரும் உடம்பும் வேறுபட்டாலும் அவ்வுடம்பால் செய்யப்பட்டபாவங்கள் உயிர் செல்லும் உடல்கள் தோறும் அதைத்தொடர்ந்து சென்று அவ்வுயிருக்குத் துன்பத்தையே விளைவிக்கும். எட்டிமரம் எவ்வளவு நல்ல நிலத்தில் பயிரானாலும் அது கசப்பான பழங்களையே தருவது

போல் உயிர் எவ்வுடலை அடைந்தபோதிலும் பாவங்கள் அதை நீங்காது பற்றித் தொடர்ந்து துன்பத்தையே விளைவிக்கும்.

“அல்லித்தா ளற்ற போது மருதநா லதனைப் போலத்
தொல்லைத்தம் முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்
றெல்லையில் துன்ப வெந்தீச் சுட்டெரித் திடுங்க ளன்றே”

என்பது சிந்தாமணிச் செய்யுள்.

ஒரு விதை முளைத்துப் பல பழங்களைத் தருவதுபோல், ஒருவினை பத்தாக நமக்குப் பலன் தரும். எனவே, மற்றவருக்குச் செய்த ஒரு துன்பத்தை நாம் பத்து மடங்காக அநுபவிக்க நேரிடும். இருக்குமுடல் நீங்கினும், உயிரை மற்ற உடல்கள் தோறும் தொடர்ந்து சென்று துன்பத்தை விளைவிக்குமாதலால் நாம் மற்ற உயிர்களுக்கு எவ்வித துன்பமும் செய்யா திருக்கக்கடவோம். மேலும் பாவத்தை நாமே செய்யாவிடினும் செய்விக்கவும் செய்யத்தூண்டவுங் கூடாது. அப்பாவச்செய்கை, செய்தார், ஏவினார், உடன்பட்டார் அனைவரையும் பற்றுமென்பது திண்ணம். விளையாட்டின் பொருட்டும் பறவைகளை அவற்றின் கிளைகளினின்றும் நீக்கிக் கூட்டிலடைத்து வைத்தலும் தீவினையேயாம். அவ்வினை புரிந்தவர் ஒருகாலத்தில் தம் கிளையினின்று நீங்கிப் போவர் என்பது பொய்த்திலது. இக்கருத்தைச் சிந்தாமணியார் முத்தியிலம்பகத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

“பூவைகிளி தோகைபுணர் அன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையி னீங்கியழ வாங்கி
காவல்செய்து வைத்தவர் கடங்கிளையி னீங்கிப்
போவர்புகழ் நம்பியிது பொய்த்திலது கண்டாய்”

கொலை பஞ்சமாபாதகங்களில் ஒன்று. “கொலையே களவு கள் காமம் பொய்கூறல் மலைவான பாதகமாம்” என்றார் திருமூலர். கொலையை முதலில் வைத்துக் கூறினமையின் அது



மற்ற எல்லாப் பாவங்களைக் காட்டிலும் மிகக் கொடியதாம். கொடிய தொழிலுக்குக் கொடிய தண்டனை விதிக்கப்படும் என்பது எல்லோரும் அறிந்த தொன்று. சட்டங்களிலும் கொலைக்கு மாத்திரம் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பது நாம் அறிந்ததே. கொலையாளர்களுக்கு அரசன் தூக்கு தண்டனை விதித்தல் நாட்டில் மற்றவர் ஓங்கற் பொருட்டேயாம். இது பயிர் வளரக் களையைப் பிடுங்குதலை ஒக்கும்.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்”

என்றார் வள்ளுவனார். கொலைப் பாதகம் புரிந்தோர் இம்மையில் அரசனால் தண்டிக்கப்படுவதுமன்றி மறுமையில் நரகத்தில் இடர்ப்படுவர் என்பதையும் அறிய வேண்டும்.

“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டி
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே”

கோறல் புலால் உண்ணற்கும் காரணமாதலின் உணற் பொருட்டாகவும் ஒருவன் கொலை புரியா திருக்கக் கடவன். புலையருக்கு அரசன் மூலமாகத் தண்டனை இல்லெனினும் அறக் கடவுள் மூலமாக உண்டென்பது,

“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே”

என்னும் மந்திர மொழியால் அறியக் கிடக்கிறது. கொலைப் பாதகர்களை மக்கள் என்று கூறற்கஞ்சி “கொலை வினையராகிய மாக்கள்” என்று வள்ளுவரும் “கொல்லிடு குத்தென்று கூறிய மாக்கள்” என்று திருமூலரும் கூறுகின்றனர்.

கொல்லுதல் பல பாவங்களைத் தரும். கொல்லாமையே அறவினையாகும். தன்னுயிர் நீங்க நேரினும் ஒருவன் பிறிதின்னுயிர் நீக்கும் வினையைச் செய்யா திருத்தல் வேண்டும். பிற உயிர்களுக்கு உறுகண் செய்யாமையே தவமாகும். "கொல்லாமை நலத்தது நோன்மை". கொல்லாமை பூண்டொழுகுவான்மேல் கூற்றம் செல்லாது; ஏனெனின், கொல்லாமையே அறவினை யாதலாலும், தருமம் தலைகாக்குமாதலாலும். செடி கொடிகளும் உயிருடையன வாதலின் அவைகளுக்கும் ஒருவன் இன்னா செய்யா திருத்தல் வேண்டும். முல்லைக்குத் தேரீந்து பாரி பேர் பெற்றதும், வேட்டுருவம் கொண்டு இந்திரன் கொடுத்த கத்தியால் வனத்திலுள்ள செடிகளின் கிளைகளைக் கழித்துக் கபிலர் என்னுமோர் முனிவர் தவ வன்மை குன்றிச் சீரழிந்ததும் உலகறிந்த கதைகளாம்.

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை, வேளாங்கண்ணி]

(மலர் - அ. இதழ் - கக. பக்கம் - சருகூ-ன் தொடர்ச்சி)

திருநீற்றின் சிறப்பைப் பிறர் மொழியைக் கேட்டோ அல்லது தாமே ஆராய்ந்தோ அதன்கண் கூறி யிருக்கும் முறையினைக் கடைப் பிடித்து அதன் வண்ணமே தரித்து நன்னெறிக்குள்ளாகிப் பரசிவத்தின்பால் பதியவேண்டுமென்னும் கொள்கை யில்லாதார் யாவர் என்றும், அன்னவர் யாருக்கு ஒப்பாவர் என்றும் வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் திருவருட் பாக்களில் 'சிவபுண்ணியத் தேற்றம்' என்



னும் பதிகத்தில் கூறியுள்ளமை பரக்கக் காணலாகும். அப்பாக்களின் முதற்குறிப்புப் பின் வருமாறு:—

| | |
|---|---|
| 1. கடவுள் நீறிடாக் கடையர். | 6. அருள்செய் நீறிடார். |
| 2. போற்றி நீறிடாப் புலையர். | 7. முத்தி நீறிடார். |
| 3. தெய்வ நீறிடாச் சிறியர். | 8. இனிய நீறிடார். |
| 4. தூய நீறிடாப் பேய்கள். | 9. நாட நீறிடா மூடர். |
| 5. நல்ல நீறிடார் | 10. விலைகொள் நீறிடார். |

என்பனவும் பிறவுமாம்.

இம்மட்டோ! திருநீறிடாதாரை விளித்துக் கூறும் பனுவல் பல உள. அவற்றை எடுத்துக் காட்டப்புகின் இவ்விதழ் இடங்கொடாதெனினும் சிலவற்றை மட்டும் காட்டுதும்:

"சிறப்புடை யடியார் தில்லை செம்பொனம் பலவர்க் காளா
முறைப்படி யடியார்க் கீழ்க்கீ ழுறைப்பர்சே வடிநீ றிடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே இனியராய் மீண்டு மீண்டும்
பிறப்பரைக் காணக் கண்வாய் பேசாதப் பேய்க ளோடே"

எனவும்,

"திருநீறிடா வுருத்தீண்டே னென்னும்"

"நிர்த்தியா அடல முழுதுநீ றணிய நேசியா தமலவைர் தெழுத்தும்
சிந்தியா அழலு மெனைக்கொடுக் கூற்றென் செயுமோ வறிந்தி
லேன் தமியேன்"

எனவும்,

"உருக்கொடு பணியாதாரை உளத்திலைந் தெழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவள நீற்றைப் பேணியே யணியாதாரைத்
தருக்கொடு நின்று கண்ணீர் ததும்பமுன் னுடாதாரைத்
திருக்கோயில் வலம்வ ராரைச் சினத்தொடு பொருஞ்செங் குந்தம்."

எனப் பற்பல சைவப் பெரியார் மொழிந்தமையானும் விபூதி தரிக்கப் பெறாதாருடைய ஆசாரமும், சத்தியமும், வாழ்வும், தவமும், ஐவகை வேள்வியும், புண்ணிய தீர்த்தமாடலும், பூசைத் தியானாதிகளும் பயனற்றன வாகும் எனக் கொள்ளச் சிறிதும் ஐயமின்றாம். திருநீறு தரித்தோரின் திருமுக

மும், மற்றையோரின் வெறுமுகமும் ஒன்றாய் ஒப்புநோக்கின் எது பொலிவுடன் மிளிர்கின்றது என்பதை நாம் உணர்வோமாக. திருநீறு தரியாதாரைக் கருணை நிதியாகும் கடவுளும் எள்ளித் தள்ளுவர். அந்தோ பரிதாபம்!

"பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தி யம்மா
திணிநிலம் பிளந்து காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநாம் அஞ்சு மாறே"

எனவும்,

"மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும் நம்பிரான் எம்பி ரானைச்
செஞ்செவே ஆண்டு கொண்டான் திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே"

திரு - செல்வம். நண்டைக்கு விபூதி என்க.

எனவும் நமது வாதவூர்ப் பெருமான் திருநீறு தரியாதார்க் கன்றி மற்ற யாருக்கும் அஞ்சுவதில்லை என மொழிந் துள்ளார். இத்தகைய திருநீற்றைத் தரிக்காததால் விளையும் பெருங்கேட்டை யுன்னுவோமாயின் திருநீறு தரியாது இருப்போமா?

"வீழ்முத்த ராகிநிதம் வெண்ணீ றணிந்தறியாப்
பாழ்முகத்தோர் தம்பால் படர்ந்துறையேல்"

என்பதையும் உன்னுக. இன்னும் விரிக்கிற் பெருகும் எனினும் அருணகிரிப் பெருந் தகையாரின் அருட்டிருவாக்கினை மட்டும் செவி மடுத்து ஏனைய விடயங்களை யாராய்வாம்.

"ஆமுன தேயஅடி யாரோடு கூடுகிலன்
நீறுநு தல்மீதிலி டாமூட னேதுமிலி
யாயினுமி யானடிமை யீடேற வேகழல்கள் தருவாயே"

(பழனி 116)



"நீறிடு சாத்திர வழிக்கதி தூரன்" (திருத்தணிகை)

"உணர்வான நேயர்கள் பூசுமெய்த் திருநீறிடா விருவினையேனைப்
பூசி மெய்ப்பதமான சேவடி காணவையே"

"அரஹரா வெனாமூடர் திருவெணீறிடா மூடர்
அடிகள் பூசியா மூடர் கரையோரார்" (சீர்காழி)

"அறக்க நீறிட அரஹரவென உளம் அமையாதே" (திருவலிவலம்)

எனவும் பிறவும் திருப்புகழ் என்னும் தேன்மழையில் வந்துழி வந்துழிக் கண்டுகொள்க. ஸ்ரீ அருணகிரிப் பெருந்தகை முருகப்பிரான் அருள்பெற்றுப் பேரின்பமுற்று அப்பெருமானின் திருச்சந்நிதி வீற்றிருக்குங் காலையில் அருணகிரிப் பிரபுவின் அருள்பெற வந்த அன்பர்கட்கும், பேய் பூதத்தால் பிடிபட்டோர்கட்கும் அநேக நோயாளிகட்கும் முருகப்பெருமானை நல்லிசைப்பாவால் புகழ்ந்து திருநீற்றையன்றே கொடுத்தருளி அவ்வவர் வேண்டும் வரமதைக் கொடுக்கலாயினர். ஆதலின் திருநீற்றின் சிறப்பை யாவர் தான் வகுக்கப்பாலர். இப்பிறவியில் விபூதியைத் தரித்துக் கொள்ளச் சனனங்கடோறும் தவமாற்றியிருத்தல்வேண்டும். ஏனெனில் தரிக்க முத்தி தரிக்கும் வெண்ணீற்றின் பெரும்பேறு நம்நாட்டிலுள்ளார் யாவர்க்கும் கிடைத்திருக்கின்றதா?

"பூதியணி யாதவுடல் புந்திசுடு காடு
ஆதி யான் நாமமுரை யாதவர்கள் ஊமை
சோதிவிரு தந்தமணி சொந்தமொடு பூணார்
பாதகர் எடுத்தவுடல் பன்றியுட லாமே!"

எனவரும் திருமந்திரத்தாலேனும் உணர்வாம்.

(தொடரும்)

# சமயச் செய்திகள்

[உதவிப் பத்திராசிரியர்]

"பெண்மக்களை உயர்த்துங்கள்;
அவர்களுடைய பிள்ளைகள் உயர்வடைவார்கள்"

கல்கத்தா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் சிட்டிக்கி அவர்கள், டெல்லியில் உருது கல்லூரியில் பெண்மக்கள் நிலையைப் பற்றிப் பேசியபோது மேற்கண்ட வாக்கியத்தைக் கூறிமுடித்தார். அவர் சொற்பொழிவிற்கண்ட சில செய்திகள் வருமாறு:—"ஐரோப்பியர் சென்ற நூற்றாண்டு வரை முதன் முதற் பாவஞ் செய்தவள் பெண் என்று கூறி வந்தார்கள். தலைவர்களாகிய ஜே. ஜே. ரோஸ்ஸே, ஜான் நாக்ஸ் முதலியோரும் பெண் ஆண்மகனுக்கு அடிமையென்றே கருதினார்கள். கீழ்நாடுகளில் பெண்மக்கள் அவ்வாறு நடத்தப்படவில்லை. பூர்வீக இந்தியாவில், முக்கியமாகப் பௌத்த காலத்தில் பெண்மக்கள் தாழ்வாக எண்ணப்படவில்லை. சமய நிலையிலும் அவர்கள் சம உரிமை பெற்றிருந்தார்களென்பதற்கு முஸ்லிம் நாகரிகமும் சான்று பகரும். பெண்மக்கள் பல துறைகளிலும் முன்னணியில் இருந்ததாக இஸ்லாம் சரிதை கூறுகிறது. பெண்கள் போர் புரிந்தார்கள்; சேனைத் தலைவரானார்கள்; அரசாங்கத்தை நடத்தினார்கள்; முக்கியமாக சமயத்துறையிலும் அறிவியல்துறையிலும் யாவரும் போற்றக்கூடிய நிலையை எய்தினார்கள்; பண்டிதர்களாகவும் உபாத்தியாயர்களாகவும் இருந்தார்கள். அவர்களுடைய தற்கால நிலையோ மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது.

பெண்மக்களை உயர்த்துங்கள். அவர்களுடைய பிள்ளைகள் உயர்வடைவார்கள்"

## நாஸிக்கில் ஹிந்து தலைவர்கள்

ஸ்ரீ சங்கராச்சாரியர் தீண்டாதாரிடையே பேசியபோது, "நாங்கள் வெற்றி பெறுவோம். நீங்கள் இந்து மதத்தினின்



றும் அகலாமலிருக்கவே நாங்கள் வேலை செய்கிறோம். ஆனால், நீங்கள் எங்களை விட்டு அகன்றாலும், உங்களைத் திருப்பிக் கொண்டு வருகிறவரையில் நாங்கள் தொடர்ந்து வேலை செய்வோம்" என்று கூறினார்

பண்டித மதன் மோஹன மாளவியா பேசியதாவது:— "நீங்கள் இதுவரை ஹிந்துக்களாகவே எங்களோடு இருந்தீர்கள். உங்கட்கு இடர்ப்பாடுகள் மிகுதியாக இருந்த காலத்திலெல்லாம் நீங்கள் ஹிந்துமதத்தை விட விரும்பவில்லை. ஹிந்து தலைவர்கள் தீண்டாமையை ஒழிக்கத்தங்களால் இயன்றவரை முயற்சி செய்கிற இத்தருணத்திலா உங்கள் முன்னோர்களுடைய மதத்தை நீங்கள் விடுவது? நீங்கள் எங்களோடு சுகமாகவும் திருப்தியாகவும் வாழப் பார்ப்போம். பிறப்பினால் தீண்டாமை யிருப்பதாக ஒருகால் ஒப்புக் கொண்டாலும், சாத்திரங்களிற் கூறியுள்ள தீக்ஷை அவ்வேற்றுமையை ஒழித்துச் சம உரிமையைக் கொடுக்கும்.

## ஒரு கிறிஸ்தவ அம்மையாரும், சைவ சித்தாந்த சாத்திரமும்

மிஸ். வயொலெட் பரஞ்சோதி அம்மையார் என்பவர் இந்தியக் கிறிஸ்தவர். அவ்வம்மையார் பெண்களுடைய கிறிஸ்தவக் கலாசாலையில் பி. ஏ. பட்டத்தையும், சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையில் எம். ஏ. பட்டத்தையும் பெற்று, லக்னௌவிலுள்ள இஸபெல்லா தோபர்ன் கலாசாலையில் தத்துவ சாத்திரங் கற்பிக்கும் ஆசிரியராக அமர்ந்துள்ளார். இவ்வம்மையார் சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் செய்தருளிய சாத்திர நூல்களை ஆதாரவாகக் கொண்டு 'சைவ சித்தாந்தம்' என்னும் பொருள் குறித்து ஒரு கட்டுரை எழுதி அனுப்பியதற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அவ்வம்மையார்க்கு பிஎச். டி. என்னும் பட்டத்தை அளித்துள்ளார்கள். இவ்வரிய பட்டத்தைப் பெற்ற முதல் கிறிஸ்தவப் பெண்மணியார் இவ்வம்மையாரே என்று கூறப்படுகிறது.

## நாஸிக்கில், மாளவியா சிவதீக்ஷை செய்தல்

17-3-36ல் கார்ப்பூரி துறையில் திரு. மாளவியா அவர்கள் சாமர், மாஹர் வகுப்பைச் சார்ந்த 150 பேர்கட்குத் தீக்ஷை செய்தார். அவர் முதலிலே நதியில் மூழ்கிப் பூசைக்குரிய உடையை உடுத்திக் கொண்டார். பின்னர்ப் பஞ்சகவ்வியத்தைத் தீக்ஷை பெற இருந்தவர்கட்குக் கொடுத்து, விதிப்படி மூழ்கச் செய்தார். அவர்கள் மூழ்கிய பின் திருநீறுபூசிக்கொண்டு மாளவியா அவர்களெதிரே வர, அவர் தீக்ஷாமந்திரமாகிய 'நமச்சிவாய' மந்திரத்தைத் தனித்தனியே ஒவ்வொருவருக்கும் உபதேசித்து, 'உண்மை பேசுவேன், சுத்தமாக இருப்பேன், மாட்டிறைச்சி உண்ணமாட்டேன்' என்பனவாதிய உறுதியுரைகளையும் கூறச் செய்தார்; இனி நடந்து கொள்ளுவதற்காக மந்திரவிதிகளடங்கிய ஓர் அட்டையையும், மந்திரம் அச்சிட்ட ஒரு துணித் துண்டையும், ஜெபமாலையையும் கொடுத்தார்.

## சாத்திரமுஞ் சாத்திரிகளும்

பண்டிதர்களுடைய பிடிவாதமான நிலைமையைப் பற்றி மாளவியா அவர்கள் கூறும்போது, "சாத்திரிகள் தங்கள் கருத்துக்கு ஒவ்வாத சாத்திரங்களை ஒப்புக்கொள்ளுவதில்லை. அவர்களோடு வாதஞ்செய்தல் கூடாமையாய் இருக்கிறது. நாம் வெற்றி பெறும்வரை அமைதியோடும் பொறுமையோடும் ஆற்றும் பணியை விட்டு விடுதல் கூடாது" என்றார்.

## திருவிழா நிறுத்தப்பட்டது

மலையாள ஜில்லாவில் கன்னனூரிலுள்ள சுந்தரேசுவர சுவாமி கோயில் திருவிழா வழக்கம்போல் நடைபெறாமல் இவ்வாண்டு நிறுத்தப்பட்டதாம். காரணம் ஹிந்து முஸ்லிம் வேற்றுமையாம்.



தார். இதனை உயிருக்கு அநாதிநிலையாகிய தன்னுண்மை கூறப்பட்டது. உ0

மாயையின் வயிற்றுள் மன்னி வருஞ்செயல் ஞான மிச்சை
யயுமக் கலாதி மூன்றால் ஏகதே சத்தி னேய்ந்திங்(கு)
ஆயுமுக் குணங்கள் அந்தக் கரணங்க ளாதி யெல்லாம்
காயபெத் தங்க ளாகிக் கலந்துடன் நிற்கு மான்மா. உகக

(உரை) அங்ஙனம் பசுத்துவமாத்திரையாற் கேவலப்பட்டு நின்ற ஆன்மா, அதன்பின் அசுத்தமாயையில் அனந்ததேவராற் கலக்குண்ட பாகமாகிய காரணசரீரத்தைப் பொருந்தி, அவ்வறிவிச்சை செயல்கள் பொதுவகையாற் சமட்டிரூபமாய் விளங்கப் பெறும். அதன்பின் அம்மாயாதத்துவத்தினின்றுந்தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப் பொருந்தி அவை வியட்டிரூபமாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்புவகையான் விளங்கப்பெறும். அதன்பின் அந்தக் காரணமுதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அவ்வறிவிச்சைசெயல்கள் முன்னர்க் கூறப்படும் இருசரீரங்களிடமாக வரும் விடயங்களின் வியாபரிக்கப் பெறும்.

இங்ஙனம் பாசசரீரம் மூவகைப்படுமெனக் கொள்க. மாயையிற் கலக்குண்டபாகத்தை வயிறாக உருவகஞ்செய்தார். மேலே மாயாடன் வயிற்றென்றதுமது. அதுவே அசுத்தமாயா தத்துவமெனத் தத்துவங்களிடை வைத்தெண்ணப்படுவதூஉமென்க. மன்னிவருமென்னும் வினையெச்சமுடிபு காரணகாரியப்பொருட்டாய் நின்றது. ஏகதேசத்தினேய்ந்தென மூன் வருதலின் ஈண்டு வருமென்பதற்கு அது பொருளாதலறிக. *"அன்பிலாரெல்லாந் தமக்குரியர்" என்றாற்போல, எல்லாவற்றானுமென்னுஞ் சாரியையும் உருபும் விகாரத்தாற்றொக்கன. காயம் ஆகுபெயர். ஆகிக்கலந்து நிற்குமென ஒற்றுமைபற்றிக் குணவினை குணிமேல் ஏற்றப்பட்டது. உக

சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள அவத்தையுள் தங்கி யெங்கும்

---

* திருக்குறள் - அன்புடைமை - உ.

போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்க ளெல்லாம் அருந்தியும் நிற்கு மான்மா.

**(உரை)** அம்மூன்றையும் முறையான் எய்தியபின், சூக்கும தேகத்தைப் பொருந்திப் போக்குவரவு செய்து சூக்குமவினைப்பயன்களை ஈட்டியும்நுகர்ந்தும், தூலசரீரத்தைப் பொருந்திப் போக்குவரவு செய்து தூலவினைப்பயன்களை ஈட்டியும்நுகர்ந்தும், இவ்வாறு அதீத முதல் அஞ்சவத்தைப்பட்டு நிற்கும்.

சாக்கிரமுதலென்றது ஒடுங்குமுறைபற்றிக் கூறியதெனவறிக.

மருவா னந்தம் விஞ்ஞான மனோபி ராணன் அன்னமயம்
உருவாந் தன்மையுண்டாய்முன் ஒன்றுக்கொன் றுசூக்குமமாய்
வருமாம் அன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகும்
அருவா யான்மா ஐங்கோசத் தார்ப்புண் டவற்றின் அகம்புறமாம்.

**(உரை)** காரணசரீரமுதலிய அவ்வைந்தும், அவ்வாறு மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்கு வடிவாய் முறையே ஆனந்தமய கோசமுதலிய ஐவகைப்பெயர் பெற்று ஒன்றற்கொன்று தூலமாய் நிற்க, கேவலத்தில் ஒன்றுமின்றி மலமாத்திரையாய் நின்ற ஆன்மா இவ்வைங்கோசங்களில் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய்ப் போக்குவரவு செய்து நிற்கும்.

கேவலத்தில் ஒன்றுமின்றி நின்றஆன்மா, மாயையில் அங்ஙனங் கலக்குண்ட பாகத்தை முதற்கட்பொருந்தி அறிவிச்சைசெயல்கள் பொதுமையான் அவ்வளவு விளங்கப்பெற்ற மாத்திரையே அம்மயக்கறிவால் ஓரானந்தமுண்டாகப் பெறுதலின், அஃதானந்தமயகோசமெனப்பட்டது. ஏனையவுங் காரணக்குறியாமாறு உய்த்துணர்ந்து கொள்க. இவ்வைங்கோசங்கட்கு வேறுவேறு பொருள் கூறுவார் மதங்களையெல்லாம் மறுத்தற்பொருட்டு, இவ்வாறெடுத்தோதி மாயை முதற்காரணமாகுமென்றுங் கூறினர். ஆன்மாவித் தரைகீழ்மேலுங் கொள்ளிவட்டம் கறங்கென நிமிடத்தின்கண் அலமரும்படிகொண்டு திரிதரல்பற்றி, இவ்வைங்கோசங்களை ஐந்து பறவையாகவும் அவற்றுள் ஒரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலியவுறுப்புக்களாகவும் *வேதத்துள் உருவகஞ்செய்துணர்த்தியவாறென்க. ஆன்மாவின்

* தைத்திரீயம் - பிரமானந்தவல்லி.



உண்மையுணர்தற்கு இவற்றை இங்ஙனம் பகுத்தறிதலும் ஒருசாதனமெனக்கொள்க. இவை மூன்று செய்யுளானும், பசுத்துவவுபாதியான் மறைப்புண்டு நின்றவவ்வறிவிச்சைசெயல்கள் பின்ஒருபுடை விளங்கி அவத்தை போக்குவரவு முதலிய வுறுதற்குரிய உபாதி கூறுமுகத்தால், வசித்திட வருமாறு தெரித்துணர்த்தப்பட்டது. இன்னும் ஆன்மாச் சார்ந்ததன்வண்ணமாய் வசித்திடவருமாற்றிற்குச் சருவஞானோத்தரத்தில் அவ்வச்சார்புவிசேடம்பற்றிப் பூதான்மாமுதல் அறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்தும்ஓதியதூஉம் ஈண்டுஉய்த்துணர்ந்துகொள்க. உங

தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவைஇயக்கமுஞ்சீர்த்
தேர்ப்பாரிற்செலவும்வேறுய்ச்செலுத்துவோர்செய்திதானும்
பார்ப்பாய வேடங் கட்டி ஆடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மாநின் றூட்டு மாறே. உகச

**(உரை)** அன்னமயகோசமுதலிய ஐந்தினும் ஆன்மா வேற்றுமையின்றி நின்று செலுத்துமாறு, முறையே, தேர்ப்பாரிற்செலவும் மரப்பாவையியக்கமுந் தோற்பாவைக்கூத்தும் வேறுய்ச்செலுத்துவோர் செய்தியும் வேடங்கட்டியாடுவோர் பரிசும் போலும்.

வேறுய்ச்செலுத்துவோர் செய்தியென்றது பரகாயப்பிரவேசத்தை. இவை ஐந்தும் முறையே ஒன்றற்கொன்றந்தரங்கமாய் அவ்வைங் கோசங்களினும் ஆன்மா நின்று செய்யுமாற்றிற்கு உவமையாமாறு தெரிந் துணர்ந்துகொள்க. செய்யுளாகலின் முறை பிறழ வைத்தார். காயம் சாதியொருமை. இதனானே, ஆன்மா அங்ஙனம் வசித்திடவரினும் அவ்வேகதேசப்பொருள்கட்கு வேறாய் வியாபியெனும் வழக்குடையனாதல் அவற்றைச் செலுத்துமாற்றின் வைத்துணர்த்தப்பட்டது. உச

என் னுடல் பொறிபி ராணன்கரணம்என் னுணர்வென் றக்கால்
தன்னின்வே றாகும் நீஎன் றன்மனை யென்ற வெல்லாம்
நின்னின்வே றாகும் என்னின் நீங்கிடா இவையிங் கென்னின்
உன்னின வாகும் நீயாம் உகிர்மயிர் உகவுங் காண்டி. உகரு

**(உரை)** தன்மனைமுதலியவற்றோடொப்ப எனதென்று வழங்கப்பட்டுச் சில நீங்குதலுங் காணப்படுதலால், இதனானும் ஆன்மா அவற்றிற்கு வேறென்பது அறியப்படும்.

உன்னின என்பது இன்சாரியை பெற்றவகரவீற்றுப் பலவறி சொல். அற்றேல் உடல்பொறி முதலியவற்றை எனதென்பது, தன் மனைமுதலியவற்றை எனதென்றதுபோலன்றி இராகுவினது தலை யென்றாற்போல அபேதம்பற்றிக் கூறுங் கருத்தேயாகலின், உரைப் போர் குறிப்பொடுபடுத்துக் காணுங்கால் அவ்விருவகை வழக்கிற்குந் தம்முள்வேறுபாடுண்மையின், அவை தம்முளொக்குமாறு யாங்ஙன மெழுந்தது வருஞ்செய்யுளென்பது. உ௰

போன்னணி யாடை மாலை போதுமே லான போதிங்(கு)
என்னணி யானென் றுன்னி இருந்தனை பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினை காய நின்னில்
அன்னிய மாகும் உன்னை அறிந்துநீ பிரிந்து பாரே. உகூ

(உரை) உடல்பொறி முதலியவற்றை எனதென்றல், இராகு வினது தலையென்றாற்போலச் சிறுபான்மை வழக்கமாதலின்றிப் பெரும்பாலும் யாண்டும் யாரும் வழங்கக்காண்டலின், அவற்றை அபேதம் பற்றிய கருத்தாலெனதென்றன் மெய்ப்படுத்த அணிகல முதலியவற்றை அவ்வாறெனதென்றல்போல அறிந்துபிரிந்து பாராத மடமையே பிறிதன்று.

உடலியா னல்லேன் இந்த உணர்வுயான் அல்ல வான உக
கடனியா தென்னின் வேறு கண்டுணர் வென்ன தென்கை
இடரிலா என்ற வான்மா என்றபோ தான்மா வேறு
திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண். உகள

(உரை) ஆன்மாவை எனதென்றல் வேறாகக் காணுங்கருத்தின்றி இராகுவினது தலையென்றாற்போல ஒருசாரார் கூறுஞ் சிறுபான்மை வழக்காகலின் அஃதபேதம்பற்றிய வழக்கெனவமையும். விஞ்ஞான மயகோசம் ஆனந்தமயகோசங்களை எனதென்றல் ஏனைக்கோசங்கள் போல வேறாகக்காணுங் கருத்தால் எல்லாராலும் வழங்கப்படும்பெரும் பான்மை வழக்காதலின் அஃததுபோல் அபேதம்பற்றிய வழக்கென அமையாமையின் அவையும் ஏனையபோல உயிரின் வேறேயாம்.

விஞ்ஞானமயகோசம் உயிரின் வேறாதல் கூறவே இனம்பற்றி ஆனந்தமயகோசம் உயிரின் வேறாதலும் அதனாற் கொள்ளப்படும்.



உணர்வென்னதென்கை வேறுகண்டாகலான் இந்தவுணர்வுயானல் லவான கடனெனக் கூட்டுக. கண்டிடாரென்பது முற்றெச்சம். உள

புந்தியை மனம தென்றும் மனமது புந்தி யென்றும்
சிந்தையைச் சீவ னென்றும் சீவனைச் சிந்தை யென்றும்
முந்தனை யான்மா வென்றும் ஆன்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற வான்மா என்றது மற்றொன் றைக்காண்.

(உரை) அல்லதூஉம், உள்ளவாறு நோக்குவார்க்கு என்றனான் மாவென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன்னோடியையுடைய பிறி தொன்றின்மேல் ஆகுபெயராய் நிற்குமாகலான், அவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை.

ஆகலான் அவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லையென்பது குறிப்பெச்சம். அவ்வாறு ஆகுபெயராய் ஆண்டாண்டு வருதலை எடுத்துக் காட்டுவார், புந்தியை மனமதென்றும் மனமதுபுந்தியென்றுஞ்சிந்தையைச் சீவனென்றுஞ் சீவனைச்சிந்தையென்றும் முந்தனை யான்மாவென்றும்ஆன்மாவைமுந்தனென்றும்வந்திடுமென்றார். ஏனை மூவகைக்கோச மாத்திரையே வேறெனக்கொண்டு விஞ்ஞானமய கோசம் ஆனந்தமயகோசம் இரண்டும் முறையே சீவான்மாவும் பரமான்மாவுமாமென்பார் மதத்தை மறுத்தற்பொருட்டு, அவற்றைஇங்ஙனம் வேறெடுத்தோதி வலியுறுத்தவாறு. இவை நான்கு செய்யுளானும் உலகவழக்கின் வைத்துணர்த்தி மேலது வலியுறுத்தப்பட்டது.

அறிவுடல் சிந்தை யான்மா அணைதலால் ஆன்மா வென்பர்
எறிசுடர் விளக்கி ருக்கு மிடத்தையும் விளக்கென் றாற்போல்
பொறிபுலன் கரண மெல்லாம் புலப்படும் அபேத மாகிப்
பிறிதரா தறிவ தான்மா அறிபொருள் பின்ன மாமே. உகக

(உரை) ஆன்மாவின் வேறாகிய அவ்வைங்கோசங்களை ஆன்மா வெனவுபசிடதங்களிற் கூறியதூஉம், விளக்குத்தகழியை விளக்கென் றாற்போலத் தானியாகுபெயராதற்குரிய இயைபுபற்றியேயன்றிப் பிறிதில்லையாகலால், அவையெல்லாவற்றின்கண்ணும் அபேதமாய்ப் பிறிதலின்றி யறிவதாகிய ஆன்மா அவற்றிற்கு வேறு.

அறிவுடல்சிந்தையென்றதும் பொறிபுலன்கரணமென்றதும் உப லக்கணம். எல்லாவற்றின் கண்ணென்னும் ஏழாவதும் அறிபொருட்

கென்னும் நான்காவதும் விகாரத்தாற்றொக்கன. அபேதமாகிப் பிறிதாதென்றற்கு *"ஞானநிரோதகமாய் மறைத்துக்கொடுநிற்றல்" என்றாற்போலக்கொள்க. இதனானே ஐங்கோசங்களை ஆன்மாவென்னும் உபநிடதத்திற்குத் தாற்பரியங் கூறி, மேலது வலியுறுத்தப்பட்டது.

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கிக் காயம்
உண்டியும் வினையு மின்றிக் கிடந்துயிர்த் திடஉணர்ந்து
கண்டிடுங் கனவுஞ் சொல்லி ஒடுக்கமுங் கருதி வேறாய்
உண்டியும் வினையும் உற்றிங் குணர்த்திட உணரா நிற்கும்.

(உரை) அன்னமயகோசமுதலிய நான்கனையும் ஒரோவொன்றாக விட்டுவிட்டு அஞ்சவத்தைப்பட்டு விழித்தபின், அவை கூடிநின் மறுதலையின் வைத்தும் அங்ஙனம் அவத்தைப்பட்டவாற்றை அறியாநிற்குமாகலால், இதனானும் உயிரவற்றின் வேறெனத் தெளியப்படும். அவை கூடியபின்னன்றி அறிவுநிகழாமையால் அறிதற்கு அவை ஏதுவாதல் பெறப்பட்டது. ஒடுக்கமென்றது சுழுத்தியை. அது கனவு போற்சொல்ல வாராமையிற் கருதியுணர்தற்பாலதாயிற்று. சித்தமுஞ் செல்லாத வினையிரண்டுங் கருதவும் வாராமையின் மறுதலையின் வைத் துணர்தற்பாலவாயின. உணர்ந்தபின் என்றது உணர்ந்தெனத் திரிந்துநின்றது. உணர்தல் ஈண்டுத் துயிலெழுதன்மேற்று. இதனானே அவத்தைப்படும் இயல்பின் வைத்துணர்த்தி மேலது வலியுறுத்தப் பட்டது. தோற்பாவையென்பது முதல் இத்துணையுங் கூறியவாற்றான் மேலைச்சூத்திரத்தின் உற்றுச்செயிருறுமென்பது முதலிய நாற்கூற்றுப் பொருளையும் வலியுறுத்தவாறுமாயிற்று. ௫௦

புருடனே அறிவ னாகில் பொறிபுல னாதி போதம்
தருவதென் அறிவு மாயா தனுகர ணாதி பற்றி
வருவதிங் கநாதி யாக மலத்தினின் மறைந்து நிற்பன்
அருவனாய் இவற்றோ டாளும் அமைச்சரும் அரசும் போல்வன்.

(உரை) ஆன்மா முதல்வன்போலச் சுத்தசித்தேயாகின் மாயா காரியங்களைப் பற்றிநின்றறிதல் வேண்டா ; அவ்வாறன்றி அமைச்சரும் அரசும் போலுடனின்று மாயாகருவிகளைப்பற்றியறிதலுண்மையால் அநாதியே யாணவமலத்தின் மறைந்து அருவனாய் நிற்றல் பெறப்படும்.

தேற்றேகாரத்தை அறிவனென்பதனோடுங் கூட்டியுரைக்க. என்னென்பது ஈண்டு வேண்டாமை குறித்து நின்றது. போல்வனென்பது முற்றெச்சம். பின்வரும் அனுமானத்தை வலியுறுத்தற் பொருட்டுப் புருடனேயறிவனாகிற் பொறிபுலனாதிபோதந் தருவதென்னெனத் தருக்கமெடுத்தோதினார். இதனானே ஞானச்செய்தி அநாதியே மறைத்துநிற்கும் பசுத்துவமுடையனாதல் காரியானுமானத்தின் வைத்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது. அறிவிச்சை செயல்களென்பது முதல் இத்துணையும் பரமதங்களைப் பரிகரித்து ஆன்மாவுக்கிலக்கணங் கூறுமுகத்தால் இரண்டாங் கூற்றை வலியுறுத்தவாறு. இனி ஒன்பது செய்யுளான் மூன்றாங் கூற்றைத் தெரித்துக் கூறுகின்றார். ௫௧

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லில்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னர்
அடைதருந் தனியே அந்தப் புரத்தினில் அதுபோ லான்மா
உடலினின் அஞ்ச வத்தை உறுமுயிர் காவ லாக. ௨௨௨

(உரை) புருடன் அவற்றோடமைச்சருமரசும் போறலின் அரசன் போலவற்றை விட்டுவிட்டுச் சென்று ஐவகையவத்தையுறும்.

இதனானே வெவ்வேறவத்தை அணைதருமாறு மேற்கூறிய உவமையோடு படுத்து வருத்துக் கூறப்பட்டது. ௫௨

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய இதயந் தன்னில் துரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீதம் நுவலின்மூ லத்தி னொன்றே. ௨௨௩

(உரை) ஆன்மா அரசன்போல விட்டுவிட்டுச் சேறற்கட்படுமவத்தையாவன : சாக்கிரமுதலியனவாம். அவ்விடங்களாவன : இலாடமுதலியனவாம். ஆண்டாண்டு நிற்குங் கருவிகளாவன : முறையே முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும் ஒன்றுமாம்.

* சிவஞானபோதம் - சூத் - ௪ - ௨.

அசிந்திய விசுவசாதாக்கியத்தில் அவத்தைக்கு நிற்குங் கருவிகளிற் கலாதிகளையுமுடன் கூட்டியெண்ணி நாற்பத்தொன்று முதலியனவாகத் தொகைகூறுதலானும், கலாதிகளுளவாகவே சுத்தத்தத்துவங்களின் தொழிற்பாடும் ஆண்டுளவென்பது பெறப்படுதலானும், கலாதிகளில்வழிப் புருடதத்துவமொன்றென வைத்தெண்ணப்படுதல் செல்லாமையானும், ஈண்டு முப்பத்தைந்து முதலியனவாகத் தொகைகூறியது மலைவாம்போலுமெனின்,—ஆகாது; கடைதொறும் விட்டுவிட்டென்ற உவமைக்கேற்ப விடப்படுதன் மாலையவாய் நிற்குங் கருவிகள்மாத்திரைக்கே ஈண்டுத் தொகைகூறப் புகுந்தாராகலானும், அதுபற்றிக் கலாதிகளின் ஐயஞ் செல்லாமைப்பொருட்டு அவற்றைப் புருடதத்துவத்துளடக்கி அதனையும் உடன்வைத்தெண்ணினாராகலானும் என்க. துரியாதீதத்திற் காரணசரீரமாத்திரையேயன்றிக் கஞ்சுகசரீரமில்லையென்றது, ஆண்டுக் கலாதிகள் வேறு நில்லாது அதனோடொற்றித்து நிற்குமென்னுங் கருத்தே பிறிதில்லையெனக்கொள்க.

இருவகைச் சாக்கி ராதி அவத்தைக ளியல்பு தானும்
ஒருவகை கீழே நூக்கி உற்பவங் காட்டு மொன்று
பெருகமேல் நோக்கித் தீய பிறப்பறுத் திடுமி யோகில்
தருவதோர் சமாதி தானும் தாழ்ந்துபின் சனனஞ் சாரும்.

(உரை) மேற்கூறிப்போந்த சாக்கிரமுதலியஐந்தும் கீழ்நோக்கிச் சென்றொடுங்குமுறையும் மேனோக்கித் தோன்றுமுறையும்பற்றி யிருவகைப்படும்.• அவற்றுள் ஒடுங்குமுறையது கன்மார்ச்சிப்புக்கேதுவாகலாற் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாம்; தோன்றுமுறையது கன்ம நுகர்ச்சிக்கேதுவாகலாற் பாரம்பரையிற் பிறவியறுத்தற்குக் காரணமாய் மேற்படும். இனி இதயமுதல்துவாதசாந்தமீறாகிய தானங்களிற் புறக்காரணம் உட்காரணங்களைப் பற்றியும் பற்றாதும் பிரத்தியாகாரமுதல் ஐவகைப்பட்டு நிகழும் யோகாவத்தையும் அதுபோல ஒடுங்கியுந் தோன்றியும் அவ்வாறே பயன்தருவதன்றிப் பிறிதன்று.

யோகிற்றருவதோர் சமாதியுண்டென்பதும் அனுவாதமுகத்தால் நீண்டே பெற்றும். தாழ்தல் இழிதல். சனனஞ்சார்தல் ஏறுதல். இந்த யோகாவத்தையைத்தானே மீட்சியில்லாதாகிய ஞானவத்தைபோலுமெனக்கொண்டு மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காமைப்



பொருட்டு இதனையதனோடொப்ப வைத்தீண்டுக்கூறினார். இச்செய்யுளிற் கூறியமூன்று பேதமும் முறையே சகலத்திற் கேவலம் சகலத்திற் சகலம் சகலத்திற் சுத்த மெனப்படுமென்க. இதனுள் இருவகைப் பிறப்பறுத்திடுமென்றது தாப்பிசையாய் அறிதரு முதலவத்தை யடைதருமிடத்தே ஐந்துஞ் செறிதருமென வருகின்றதனோடுஞ் சென்றியைந்து பொருள்தரு மாகலான் அதற்கும் இவ்வாறுரைத்துக் கொள்க. ௩௪

அறிதரு முதல வத்தை அடைதரு மிடத்தே ஐந்தும்
செறிதருங் கரணந் தன்னில் செயல்தொறுங் கண்டு கொள்நீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற அருளா லாங்கே
குறியொடும் அஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட. ௨௨௫

(உரை) சாக்கிராதி யவத்தையென மேற்கூறிப்போந்த ஐந்தனுள் முதலவத்தையாகிய சாக்கிரத்தானத்தின் கண்ணேயுஞ் சாக்கிர முதலைந்தவத்தையுளவாம். அவை கருவியான் விடயங்களை யறியுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமா யிடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டு கொள்ளப்படும். இனி இவையே யன்றிக் கேவலசகலங்கள் நீங்கிய சுத்தத்தினும் அவ்வாறே ஐவகையவத்தையுள, அவையுண்மையதிகாரத்துள் உணர்த்த நின்றன.

முதலவத்தை அடைதரும் இடமாவது மேற்கூறிய இலாடத்தானம். அறிதருமிடத்தே யென வியையும். சுத்தாவத்தையின் இயல்பு ஈண்டுக் கூறுதற்கோ ரியைபில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டுக் கூறியவை மாத்திரையே போலுமென மலையாமைப் பொருட்டு இவ்வாறு கூறியொழிந்தார். ௩௫

ஐந்துசாக் கிரத்தின் நான்கு கனவினில் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னின் இரண்டொன்று துரியா தீதம்
தந்திடும் சாக்கி ராதி அவத்தைகள் தானந் தோறும்
உந்திடுங்கரணந் தன்னில் செயல்தொறுமுணர்ந்து கொள்ளே.

(உரை) அறிதரு முதலவத்தை யடைதரு மிடத்தேயென மேற்கூறிப்போந்த சாக்கிராதி யவத்தைகள் ஐந்தனுள், சாக்கிரத்திற் சுத்தவித்தை யீறாகிய ஐந்து கருவியும், சொப்பனமுதலிய நான்கினும்

முறையே அவற்றுள் ஒரோ வொன்றொழித் தொழிந்த கருவியுங் கலாதிகளைச் செலுத்திநிற்கும்.

தானந்தோறும் கலாதிகள் தொழிற்படும் இடந்தோறும். உந்துதல் செலுத்துதல். இச்செய்யுள் பிறிதோரவத்தைக் கோதியது போலுமென மலையாமைப் பொருட்டுக் காணந்தன்னிற் செயல் தொறுங் கண்டு கொள்ளென மேற்கூறியவதனை ஈண்டு மறித்துணர்வு நிகழக்கூறினர். இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப. ஈண்டைந்து நான்கு மூன்றிரண் டொன்றென்றது செலுத்துங் கருவிகளை யென்பது. உந்திடு மென்றதனானும் *"சுத்தக் கருவிகள் ஐந்துங்கொண்டே சொல்லவத்தை ஐந்துஞ் சித்திக்கும் போதத்திலொன்றொன்று சென்றிடும்" என்பதனானும் அறிக. இனி இவ்வாறன்றி அறிதருமுதலவத்தை யடைதருமிடத்தே யைந்துஞ் செறிதருமென மேற்கூறிப்போந்ததனையே ஈண்டு ஐந்துசாக்கிரத்தினென்றனுவதித்து ஏனைச் சொப்பன முதலியவற்றின் முறையே அவை நான்கு மூன்றிரண்டொன்று பொருந்து மென்றவாறாகக் கொண்டுரைத்தலுமொன்று. இப்பொருட்குச் சாக்கிராதியவத்தைகள் ஐந்தெனக் கூட்டுக. தானம் நுதல் முதலியவிடம். உந்துதல் பொருந்துதல். இவை நான்குசெய்யுளானும் மேலைந்தவத்தை யென்றவற்றின் பெயரும் வகையு மிடமும் அவற்றதியல்பு மிவையென்பது கூறப்பட்டது. ௩௬

கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாம்
காவலன் கொடுத்த போது சகலம லங்க ளெல்லாம்
ஓவின போது சுத்த முடையன் உற்பவந்து டைத்தே. ௨௨௭

(உரை) ஆன்மா அவ்வாறு நிகழுங் காரிய அவத்தைகளை உறுதற்குக் காரணமாகக் கேவலஞ் சகலஞ் சுத்தமென மூன்றவத்தை எய்துவன். அவற்றுட் கேவலமாவது தன்னிச்சாஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித் தான்மாத்திரையே யுளனாதல்; பின்பு தனுகரணாதியோடுங் கூடி அவையொருபுடை விளங்குமவதாஞ் சகலம்; பின்பு பஞ்சமலங்களும் நீங்கிச் சிவத்தோடு கூடி அவ்விச்சாஞானக்

* சிற்றம்பல நாடிகள் கலித்துறை - ௩௭.



கிரியைகளெங்குமாய் வியாபித்து விளங்கும் அவதாஞ் சுத்தமெனப்படும்.

இதனானே மேற்கூறிப்போந்த அவத்தைகட்குக் காரணமிவையென்பதூஉம் அவற்றதியல்புங் கூறப்பட்டன. ௩௭

அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன் கலாதி யோடும் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்தில் ஆன்மா.

(உரை) வாக்கடவனவாய அறிதன் முதல் ஏகதேசியாத லீறாகிய பத்துக்காரியங்களுள் ஒன்றுமின்றி யாணவமலத்தோடு மாத்திரையே கூடிநிற்பது கேவலம்.

ஈண்டு அமூர்த்தமென்றது உடம்பின் பிராகபாவத்தை; நித்தமென்றது தோற்றக்கேடுகளின் பிராகபாவத்தை; வியாபகமென்றது ஏகதேசத்தின் பிராகபாவத்தை. ஏனையின்மைகளும் அவ்வப்பிராகபாவங்களைக்குறித்து நின்றனவாகலான், இவ்விலக்கணங்கள் ஏனையவத்தைகளிற் செல்லாமையின் இவற்றுளொன்றே கூறஅமையுமாயினும் கேவலந்தன்னுண்மையென்றது விளங்குதற்பொருட்டு இவையனைத்தும் வருத்துக் கூறினர். பிறிவிலன் மலத்தினோடும்என்றதும் அதன்பொருட்டு. ஈண்டுக் குறியென்றது முதனிலைத்தொழிற்பெயராய் இச்சையையுணர்த்திநின்றதென்பது செயலினைச் சாரவைத்தலானறிக. அறிவிலனென்றதனையு மீண்டுத் தந்துரைக்க. அராகாதிகுணமென்றது புத்திகுணம் எட்டினையும். அராகாதிகுணங்களென்ற உபலக்கணத்தால் ஏனைப்போக்கியகாண்டக் கருவிகளுங் கொள்ளப்படும். இதனானே தன்னுண்மை கேவலமாதல் காட்டப்பட்டது. ௩௮

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயம் தன்னில்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதரும் சகல மான அவத்தையிற் சீவன் சென்றே. ௨௨௯

(உரை) மேற்கூறியஇன்மைகள் பத்துக்கும் மறுதலையாகிய இப்பத்துக்காரியமும் உடையனாய்ச் சீவித்து நிற்பது சகலம்.

போககாண்டமாகிய கலாதியைப் போகமென்றும் போக்கிய காண்டமாகிய புத்தியாதியைப் போக்கியமென்றுங் கூறினர். உன்னலென்றது ஈண்டு விரும்புதன்மேற்று. செப்பலென்றது செப்பப்படுவனவாய நால்வகை வாக்குக்களையும் உணர்த்தி அவை காரணமாய் நிகழும் அறிவின்மேல் ஆகுபெயராய் நின்றது. புரிவதுமென்றவும்மையான் நுகர்வதுமென்றதெஞ்சிநின்றது. உருவினைக்கோடல் அமூர்த்தனாதற்கும், போகபோக்கியத்துச்செறிதல் கலாதியோடுஞ்சேர்விலன் அராகாதிகுணங்களோடுஞ் செறிவிலனாதற்கும், உன்னல் செப்பல் வருசெயன்மருவுதல் அறிவிலன் செயல்களில்லான் குறியிலனாதற்கும், சத்தமாதியாம் விடயந்தன்னிற் புரிவதுஞ்செய்தல் கருத்தாவலனாதற்கும், உம்மையாற்போந்த நுகர்வதுஞ்செய்தல் போகத்திற் கொள்கையில்லானாதற்கும், எல்லாயோனியும் புக்குழலுதல் நித்தனாதற்கும், சென்றுதிரிதரல் வியாபியாதற்கும் மறுதலையாயவாறு கண்டுகொள்க. இதனானே மெய்பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனாதல் வகுத்துக் கூறப்பட்டது.

௫௯

இருவினைச் செயல்க ளொப்பின் ஈசன்தன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்தன் பாதம் பெறுவது சுத்த மாமே. ௬௰

(உரை) மேற்கூறிய பத்தனுள், சத்தமாதியாம் விடயந்தன்னிற் புரிவதுஞ்செய்தல்கழிதற்கேதுவாகிய இருவினையொப்பும், போகபோக்கியக்கருவிகளின் செறிவுகழிதற்கேதுவாகிய சத்திநிபாதமும், உருக்கழிதற்கேதுவாகிய குருவருளும், எல்லாயோனியும் புக்குழலுதல்கழிதற்கேதுவாகிய ஞானசாதனமும், சென்றுதிரிதருதலாகிய ஏகதேசத்தன்மைகழிதற்கேதுவாகிய மும்மலநீக்கமும், சத்தமாதியாம் விடயந்தன்னில்நுகர்வதுகழிதற்கேதுவாகிய வாதனைநீக்கமும், பாசவறிவிச்சைசெயல்கள்கழிதற்கேதுவாகிய ஞானப்பெருக்கமும் முறையே கிடைப்ப, அவற்றான் அக்காரியம் பத்தும் நீங்கப்பெற்றுத் திருவருளைக் கூடுதல் சுத்தம்.

சத்திநிபாதத்திற்கு மூலமாகிய மலபரிபாகமும் இருவினையொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமுமென்னும் இன்னோரன்னவற்றை ஈண்டுக் கூறுதொழிந்தார். மேற்கூறிய காரியம் பத்தும் நீங்குதற்கேது



வாவன மாத்திரையே யீண்டுக் கூறப்புகுந்தாரன்றி அனைத்துங்கூறப் புகுந்தாரல்லராகலின் அவையெல்லாம் முன்னர்க் கூறப்படும். இதனானே மலங்களெல்லாமோவினபோது சுத்தமுடையனாமாறு வகுத்துக் கூறப்பட்டது. புருடனேயறிவனாகி லென்றது முதல் இத்துணையும் வெவ்வேறணைதருமென்ற மூன்றாங் கூற்றை வகுத்தோதியவாறு.

---

## ஐந்தாஞ் சூத்திரம்

நான்காஞ் சூத்திரத்திற் பசுவியல்பு கூறியஆசிரியர், அதன்மேல் நின்ற பாசத்தின் இயல்பு கூறுவாராய் அதனை யுள்ளடக்கிநிற்குந் திரோதானசத்தியின் இயல்பு ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனால் அறிந்தான் மாவை
அறிதரா அவையே போல ஆன்மாக்க ளனைத்து மெங்கும்
செறிதரும் சிவன்ற னாலே அறிந்திடும் சிவனைக் காணா
அறிதரும் சிவனே யெல்லாம் அறிந்தறி வித்து நிற்பன்.

(உரை) தன்னை யறியமாட்டாத பொறிமுதலியவற்றைத் தானறிந்தறிவித்துடனிற்கும் புருடன்; அதுபோலத் தன்னை யறியமாட்டாத அப்புருடனை அறிந்தறிவித்து உடன்நிற்பது சிவம்.

சிவனேயெல்லாம் அறிந்தறிவித்து நிற்பனெனப் பொருட்கேற்றி அதனை உவமையினும் ஏற்குமாறியைவித்து உரைத்துக்கொள்க. திரோதான சத்தியின் இயல்பை உபசாரத்தாற் சிவன்மேலேற்றிக் கூறியவாறு. அறிதருஞ்சிவன் முடிவின்கண் உண்மையறிவைத் தரக்கடவோனாகிய சிவன். அறி முதனிலைத்தொழிற்பெயர். இச்செய்யுள் முதனூலஞ்சாஞ் சூத்திரம்போல இரு கூற்றதாமாறு கண்டுகொள்க அவற்றுள் முதற்கூற்றுப்பொருளை உள்ளடக்கிநிற்கும் இரண்டாங்கூற்றை அவ்வம்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்துகின்றார்.

௧

இறைவனே அறிவிப் பானேல் ஈண்டறி வெவர்க்கும் ஒக்கும்
குறைவதி கங்கள் தத்தம் கன்மமேற் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரும் முளரிகட் கிரவி யும்போல்
அறைதரும் தத்தங் கன்மத் தளவினுக் களிப்பன் ஆதி.

(உரை) அறிவித்தற்பொருட்டு இறைவன் வேண்டப்படுமெனக் கொள்வார்க்கும், அறிவுகள் ஒருபெற்றியவாதலின்றி ஏற்றத்தாழ்வுகளாய் நிகழ்தற்குக் காரணங் கன்மமெனக் கொள்ளவேண்டுதலின் அதுவேயமையும் வேறுமோரறிவிப்பானைக் கோடன் மிகையாமாலெனின்,—அற்றன்று; பங்கயத்தினதலர்ச்சிக்குப் பங்கயமேயன்றி இரவியும், உழவுமுதலிய செயல்களின் பயனுக்கு அச்செயலேயன்றி விளைநிலமுங் காரணமாதல் கண்டாமன்றே; அவைபோல் அவ்வக்கன்மம் பக்குவமாதலும் பயன்தருதலும் வேறோரிறைவனையின்றி யமையாமையின் மிகையாதல் யாண்டையது.

குறைவதிகங்கள் தத்தங்கன்மமெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். செயல் ஆகுபெயர். முறைதருசெயல், உழுதல் எருப்பெய்தல் வித்தல் கட்டல் நீர்கால்யாத்தல் காத்தலென்றிம்முறையால் தரப்பட்டுஞ் செயலென்க. அற்றேற் கன்மத்தோடுங் கூடியவுயிரே அதற்குக் காரணமாதலமையும், வேறுமோரிறைவன் எற்றுக்கென்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது. உ

அறிந்திடும் ஆன்மா வொன்றை ஒன்றினால் அறித லானும்
அறிந்தவை மறந்த லானும் அறிவிக்க அறித லானும்
அறிந்திடுந் தன்னை யுந்தான் அறியாமை யானுந் தானே
அறிந்திடும் அறிவன் அன்றாம் அறிவிக்க அறிவ னன்றே.

(உரை) இந்நான்கேதுக்களானும் அறிவு நிகழ்ச்சிக்குப் பொறிபுலன்முதலியவற்றோடொப்ப வேறுகாரணத்தை அவாய்நிற்பதன்றி உயிர்தானேயறிய வற்றன்று.

ஒன்றை யொன்றினு லறிதலே அதனியல்பென்பாரை நோக்கி அறிந்தவை மறத்தலானுமென்றும், அறிந்ததனைப் பின்னறிய வேண்டாமையின் மறக்கலாயிற்றென்பாரை நோக்கி மீளஅறிவிக்க அறிதலானுமென்றும், எவ்வாற்றானும் அறிதலில் திரிபில்லையன்றே என்பாரை நோக்கி அறிந்திடுந்தன்னையுந் தானறியாமையானுமென்றுங் கூறினார். இதனானே சாங்கியர்மதம் பரிகரித்து முதற்கூற்றை வலுயுறுத்தவாறுமாயிற்று. விதந்துகூறாது ஒன்றையொன்றினுலெனப் பொதுப்படக்கூறியதும் அதன்பொருட்டு. அற்றேல், ஈண்டொன்றினுல்எனப்பட்ட மாயையே அதற்கமையும் இறைவன் எற்றுக்கென்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது. ந



கருவியால் பொருளால் காட்டால் காலத்தால் கருமந் தன்னால்
உருவினால் அளவால் நூலால் ஒருவரா லுணர்த்த லானும்
அருவனாய் உண்மை தன்னில் அறியாது நிற்ற லானும்
ஒருவனே எல்லாந் தானும் உணர்த்துவன் அருளி னாலே.

(உரை) கருவிமுதலிய எட்டும் ஒரு சேதனப்பொருளுங் கூடி நின்றொருவிடயத்தை யுணர்த்த உயிருணர்தலானும், அல்லுழி யுணராமையானும், இவையனைத்தையுங் கொண்டுகூட்டி யறிவிப்பானொரு சேதனன் வேறு வேண்டப்படுமாகலான், இறைவனையின்றி அறிதலமையாது.

கருவி உயிர்செலுத்தப்படும் ஆன்மதத்துவம். பொருள் தாத்துவிகம். காட்டு உயிரினறிவிச்சைசெயல்களை விளக்குவனவாய கலைமுதலியன. காலம் கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத்துங் காலதத்துவம். கருமம் கன்மத்தை யேறாது குறையாது நிறுத்தும் நியதிதத்துவம். உரு உடம்பு. அளவை பிரமாணம். நூல் நூல்கட்குக்காரணமாய நால்வகை வாக்கு. ஒருவிடயத்தை அறிதற்கண் இவற்றுள் ஒன்றையின்றியும் அமையாமை கண்டுகொள்க. கருமமும் நூலும் ஆகுபெயர். இயற்பெயர்ப் பொருளாக வைத்துரைப்பாருமுளர். தன்னுண்மை உண்மையெனத் தலைகுறை. உண்மையில் ஒன்றுமிலனாதல் பற்றி அருவனென்றார். இவை மூன்று செய்யுளானும், முறையே கன்மமும் உயிரும் மாயையுமென்னும் இவையே ஆண்டைக்கமையுமென்னும் ஆருகதர் மீமாஞ்சகர் சாங்கியர் முதலியோரை மறுத்துப் பாரிசேடவளவையான் அறிதருஞ்சிவனே எல்லாம் அறிந்தறிவித்துநிற்றல் வலியுறுத்தப் பட்டது. ச

கருவியும் பொருளுங் காட்டும் காலமுங் கன்மந் தானும்
உருவமும் அளவும் நூலும் ஒருவரு முணர்த்த வின்றி
அருவனு யுலக மெல்லாம் அறிந்தவை யாக்கி வேறாய்
ஒருவனே உயிர்கட் கெல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன்.

(உரை) இறைவனுக்குக் கருவிமுதலியன கூடி அறிவு நிகழ வேண்டாமையின், உயிர்கட்குப்போலத் தனக்கு மேலொருவன் அவாவப்படும் போலுமென்னும் அவவத்தைக்கிடமின்றித் தானே தூயனாயறிந்தும் ஆக்கியும் உணர்த்தியும் நிற்கும்.

உலகெலாம் அறிந்தென்றது கேவலத்திற் சூக்கும ஐந்தொழில் செய்தன்மேற்று. ஆக்கியெனவே இனம்பற்றி ஏனை நான்குதொழில்களும் உடன்கொள்ளப்படும். அவை தூலஐந்தொழிலென்பது. உணர்த்தி நிற்பனென்றது முதலவத்தை யடைதருமிடத்தே செயற்பாலனவாய் ஈண்டெடுத்துக் கொண்ட அதிசூக்கும ஐந்தொழின் மேற்று. அறிதலும் ஆக்குதலுமாகிய இருதிறத்து ஐந்தொழிலும் முதல்வன் செயலாதல் மேற்கூறிப் போந்தமையின் அவைபோலிவையும் முதல்வன்தொழிலே யாமென்பார், அறிந்தாக்கி யுணர்த்திநிற்பன்என உடன் கூறினர். இதனானே மேற்கூறியதுபற்றி அசலத்தை யின்றுமாறு கூறப்பட்டது. அற்றாயினும், கருவியறிதலால் வரும் பயன் உயிர்க்காயவாறுபோல உயிரறிதலால் வரும் பயனும் அதனோடு உவமிக்கப்படும் இறைவனுக்காவான் செல்லும், செல்லவே, இறைவனும் பந்தமுறுவனெனப்பட்டு வழுவாமாகலின் இறைவன் உயிர் போல் அறிவிப்பனென்றல் இழுக்காம்போலுமென்னும் அவ்வாதிகளை நோக்கி எழுந்தது வருஞ் செய்யுளென்பது.

இறைவன்தன் சந்நி திக்கண் உலகின்றன் சேட்டை யென்னு று
மறைகளும் மறந்தாய் மாயை மருவிடான் சிவன வன்கண் [ம்
உறைதரா தசேத னத்தால் உருவுடை உயிர்கட் கெல்லாம்
நிறைபரன் சந்நி திக்கண் நீடுணர் வுதிக்கு மன்றே. உ௩௬

(உரை) இறைவனலன்றி உயிர் சேட்டியாமைக்கு மேற் காட்டிய பாரிசேட அளவையேயன்றி ஆகமஅளவையும் இனிது விளங்கக் கிடத்தலின் அதனையும் அறியாது மறித்து மறித்துப் பிணங்குகின்றபேதாய்! எல்லாவற்றினும் நிறைந்துநின்ற இறைவன் சந்நிதியில் நிகழும் அவ்வறிவின்பயன், வினைக்கீடாய் வரும் வடிவுடைய உயிர்கட்கே உண்டாமதுவன்றி இறைவனுக்காதல் செல்லாது, சடமாகிய வுலகம் அவனெதிர் முனைத்து நிற்றலாற்றாமையான்.

மறந்தாயென்பது விளியுருபேற்ற பெயர். மாயையும் உணர்வும் ஆகுபெயர். உயிர்கட்கு உதிக்குமென இயையும். பிரிநிலையேகாரம் விரித்துரைக்க. ஐம்பொறிபோலன்றி உணர்தற்பயன் உயிர்க்கேயாதற்கு ஏதுக்கூறுவார், உருவுடையுயிரென விசேடித்தார். சந்நிதிக்கண் நீடுணர்வுதிக்குமென்றதும் அதன்பொருட்டு. *"வினையாலுற்

* சிவஞானபோதம் - சூத் - ௫ - ௫.



கண்டறிந்து நிற்குங்கா - ணண்ணான் சிவனசத்தை யின்று" என்றார் முதனூலாசிரியரும். இதனானே அறிவித்தல்பற்றி இறைவனுக்குத் துடக்கின்மை கூறப்பட்டது.

உலகமே உருவ மாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன். உ௩௭

(உரை) புருடன் உடம்புமுதலியனவற்றைக் கொண்டு நின்று உணருமாறுபோல, இறைவன் உலகமுதலியனவற்றைக் கைக்கொண்டு நின்றுணர்த்துவன்.

எனவே, தன் உடல்பொறி கரணங்களைச் செலுத்துதற்கண் உயிர்க்கு விகாரமில்லாமைபோல இறைவனுக்கதுபற்றி விகாரமில்லையென்றவாறாயிற்று. புலன் ஆகுபெயர். இறைவன் ஐந்தொழில் செய்தல் உயிர்கள்போலக் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரையாற் செய்வதென்பதுதோன்ற, நாடகநடிப்பனென்றார். ஈண்டு ஐந்தொழிலென்றது அறிவித்தற்கட்படும் அதிசூக்கும ஐந்தொழிலை. இதனானே அதுபற்றி விகாரமின்மை கூறப்பட்டது. அற்றேல் இவை நலமிகுதொழிலாமாறு யாங்ஙனம் என்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது.

தெரிந்துகொண் டொரோவொன் றாகச் சென்றைந்து
புலனும் பற்றிப், புரிந்திடும் உணர்வி னோடும் போகமுங்
கொடுத்தி யோனி, திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண்
டுயிர்கட் கெல்லாம், விரிந்திடும் அறிவுங் காட்டி வீட்டையும்
அளிப்பன் மேலோன். உ௩௮

(உரை) இறைவன் இங்ஙனம் ஏகதேச அறிவை நிகழ்வித்துச் சிறுபோகங் கொடுத்துப் பிறவியிற் படுத்துதல், அதனால் பருவ முதிர்வித்து வியாபக அறிவை நிகழ்வித்துப் பரபோகமுங் கொடுத்தற் பொருட்டு.

ஏகதேச அறிவு நிகழ்ந்தன்றிச் சிறுபோக நுகர்ச்சி செல்லாமையும், வியாபக அறிவு நிகழ்ந்தன்றிப் பரபோக நுகர்ச்சி செல்லாமையும் உணர்த்துவார், புரிந்திடும் உணர்வினோடு போகமுங் கொடுத்தென்

றும், விரிந்திடும் அறிவுங் காட்டி வீட்டையும் அளிப்பன் என்றுங் கூறினார். இதனானே தூல ஐந்தொழிற்கட் படுவதாகிய அவ்வதிசூக்கும ஐந்தொழிற்குப் பயன் கூறப்பட்டது. அற்றேனும் அதனால் இறைவனுக்காகக்கடவதென்னை என்பாரை நோக்கி எழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௮

அருளது சத்தி யாகும் அரன்தனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை அந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்(கு)
இருளினை ஒளியா லோட்டும் இரவியைப் போல ஈசன். ௨௩௯

(உரை) அங்ஙனம் கொடுத்துக் காட்டியளிப்பதாகிய அக்கருணை இறைவனுக்கு இயற்கைக் குணமெனப்படுஞ் சத்தியாகலான், குணங் குணியைவிட்டு நீங்காமையின் ஞாயிற்றிற்கொளிபோல இறைவனுக் கவ்வருட்குணம் மேம்படுதலின் வேறாய் யாண்டைக்காகக்கடவது பிறிதில்லை.

இதனானே அவ்வருள் இறைவனுக்கு அணிகலமாதல் கூறப்பட்டது. ௯

---

# ஆறாஞ் சூத்திரம்

இனி எஞ்சிநின்ற பதிப்பொருளுக்கு இலக்கணம் ஆறாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார்.

அறிவுறும் பொருளோ ஈச னறிவுறா தவனோ வென்னின்
அறிபொருள் அசித்த சத்தாம் அறியாத தின்றாம் எங்கும்
செறிசிவம் இரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்
நெறிதருஞ் சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே.

(உரை) சிவன் சுட்டியறியப்படும் பொருளாயிற் சடமாயழிந்து போவதுமாம்; ஒருவாற்றானும் அறியப்படாத பொருளாயிற் சூனியமாம்; நெறியாகிய சிவஞானத்தால் தரப்படுஞ் சிவத்தினெதிர் அசத்தாகிய பாசஞானஞ் சிறிதும் நில்லாமையிற் சிவம் அவ்விரண்டு தன்மையுமின்றிச் சித்துசத்தாகி நிற்கும்.



இருவர் கூற்றாய் வேறு முடிபு கோடலில் திணைவழுவின்மையுணர்க. அசத்தெனவே அசித்தாதலும் அடங்குமாயினும், விளங்குதற்பொருட்டு வேறு கூறினார். சித்தொடு சத்தாய் நிற்குமென்றதுமது; சடத்தை நீக்குதற் பொருட்டுமாம். தருதல் ஈண்டு விளக்குதன்மேற்று. ஆண்டுச் சத்தென்றது சிவமென்னுந் துணையாய் நின்றது. அசத்து முன்னில்லாமையின் அறிபொருளாதலும் நெறிதரு சத்தாகலின் அறியாப்பொருளாதலும் இல்லையென்பார், நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடாவாகலான் இரண்டுமின்றி யென்றார். ஆகலானென்பது சொல்லெச்சம். முதல்வனுக்குத் தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு மேற்புனருற்பவம் வருமாறுணர்த்து முகத்தாற் பெறுவிக்கப்பட்டமையால், இது சொரூபலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பெனக் கொள்க. அற்றாகலினன்றே உண்மையதிகாரத்தைச் சார ஈண்டு வைத்தோதியதூஉமென்க. முதனூல் ஆறாஞ் சூத்திரத்திற் கொண்ட இருகூற்றொடும் அறியாததின்றாம் என்றதனை வேறு கோடலால் இச்செய்யுள் முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க. ௧

ஆவதாய் அழிவ தாகி வருதலால் அறிவு தானும்
தாவலால் உலகு போகம் தனுகர ணாதி யாகி
மேவலான் மலங்க ளாகி விரவலால் வேறு மாகி
ஓவலால் அசத்தாம் சுட்டி உணர்பொரு ளான வெல்லாம்.

(உரை) சுட்டறிவாவது காலத்தான் ஏகதேசமாதலும் இடத்தான் ஏகதேசமாதலும் அதுவதுவாய்ப் பல வேறுவகைப்படுதலும் மலத்தொடு விரவுதலும் வேறுபடுதலுமாகிய இவ்வியல்புகளுடைமையான் அசத்தேயாகலின், இவ்வறிவினால் அறியப்பட்டன அனைத்தும் அசத்தாவனவன்றி அவற்றுள் ஒருபொருளுஞ் சத்தாதல் செல்லாது.

அசித்தாம் என்பதூஉம் பாடம். உம்மை முன்னையது இழிவு சிறப்பு. இதனானே அறிபொருள்களின் ஒரு சாரனவே யன்றி அனைத்தும் அசத்தாதலில்லையென்னுந் தார்க்கிகரை நோக்கி அறிபொருளனைத்தும் அசத்தென்பது அவ்வறிவியல்புபற்றித் தெரித்துணர்த்தப்பட்டது. ௨

மண்டனில் வாழ்வும் வானத் தாசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூத பேத யோனிகள் யாவு மெல்லாம்
கண்டஇந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
உண்டுபோல் இன்றாம் பண்பின் உலகினை அசத்து மென்பர்.

(உரை) காணப்பட்டன அனைத்தும் இந்திரசால முதலியன போல நெடுங்கால நிலைபெறுவனபோலத் தோன்றி அங்ஙனம் விரையக் கெட்டு மறைந்துபோம் இயல்புபற்றி அவற்றை அசத்தென்றல் அமைவுடைத்து.

அசத்துமென்னும் உம்மை, பொருட்டன்மையாற் சத்தென்படநின்ற எதிர்மறை. இந்திரசாலம் தோன்றும்பொழுதே இல்லையாய் வேறுவனவற்றிற்கும்,கனாக்காட்சி கடைபோதலின்றி இடையே அழிவனவற்றிற்கும், கழுதிரதம் ஒரு காரணங் காட்டி அழிவெய்துவனவற்றிற்கும் உவமையாயின. இதனானே, சற்காரிய வாதத்தில் அசத்தென ஒன்றின்மையின் ஈண்டறிபொருள் அசத்தென்றல் அமையுமாறு யாங்ஙனமென்னுஞ் சாங்கியரை நோக்கி, அறிபொருள் அசத்தாமாறு உவமையோடு படுத்துக் காட்டப்பட்டது. இவை இரண்டு செய்யுளானும் அறிபொருள் அசித்தசத்தாம்என்ற முதற் கூற்றை வலியுறுத்தவாறு.

உணராத பொருள்சத் தென்னின் ஒருபய னில்லைத் தானும் ௩
புணராது காழும் சென்று பொருந்துவ தின்றாம் என்றும்
தணவாத கரும மொன்றுந் தருவது மில்லை வானத்(து)
இணரார்பூந் தொடையு மியாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும்.

(உரை) அறிபொருள்போல அறியப்படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலியன இன்மையான் அதனைச் சத்தெனக்கொண்டாற் றோர் பயனில்லை; ஒருஞான்றும் அதனோடெமக்கோர் இயைபுண்டாமாறும் இல்லை ; அதனாலாகக் கடவதோர் செயலுமில்லையென்பது, ஆகாயப் பூவானியன்ற மாலை, ஆமை மயிரானியன்ற கயிறு முதலியன போல உணராத பொருள்களின் வைத்தறியப்படுதலான், அது பொருளன்று.

ஆகாயத்தினும்ஆமையினும் பூவுமயிரும் புலனாதலின்றி அதிருக்குமாயுள அவற்றானாகற்பாலனவும் உளவெனக்கொண்டு பிணங்கு



வார் உளராயினும், அவரை மறுத்தற்பொருட்டு அறிந்து செய்வதொரு வினை முதலை இன்றியமையாத காரியப் பொருள்மேல் வைத்துக் கூறினார். இதனானே, அறியாதது உண்டென்றாற்படும் இழுக்கென்னை என்னும் மாணாக்கனை நோக்கி இரண்டாங் கூறு வலியுறுத்தப்பட்டது. அற்றேல் இவ்விரண்டுமின்றி நிற்கும் பொருளை அநிருவசனீயமென்றது சித்தொடசெத்தாய் நிற்குமென்றது யாங்ஙனமென்னும் மாயாவாதியை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுள் என்பது. ௪

சத்தாவஞ் சத்(து) அசத்துச் சதசத்து மன்றென் றாலென்
உய்த்துணர்ந் துண்டோ இன்றோ என்றவர்க் குண்டென் றேநில்
வைத்திடுஞ் சத்தே யாகும் மனத்தொடு வாக்கி றந்த
சித்துரு அதுஅ சித்தாம் மனத்தினால் தேர்வ தெல்லாம்.

(உரை) மேற்கூறிப்போந்த இருதிறனுமல்லாத பிரமப் பொருளாவது உள்பொருளுமன்று இல்பொருளுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்று என்று அநிர்வசனமாகக்கூறிற் படுமிழுக்கென்னையெனின்,—நன்று சொன்னாய் ; அங்ஙனம் அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருளொன்று உண்டோ இல்லையோவென வினவினாற்கு இல்லையென்னில் உணராத பொருட் கோதிய குற்றமாமென்றஞ்சி உண்டென்று கூறுவாயாயின், பிரமம் உள்பொருளாவதன்றி அநிர்வசனமாதல் இன்றென்பதற்கு உன் வாய்மொழியே சான்றாயிற்று. உள்பொருளாயின், அறியப்படுகவெனிற் சுட்டுணர்விற் பட்டனவெல்லாஞ் சடமாய் அழிவெய்திடுமாதலாற் சுட்டுணர்வினைக் கடந்துநின்ற சேதனப் பொருளேயது.

தேர்வதெல்லாமென்பது *"உள்ளிய தெல்லா முடனெய்தும்" என்றாற்போல ஒருமைப் பன்மை மயக்கம். அற்றேல், அறிபொருளுமன்று அறியாததுமன்றென விடுப்பதூஉம் சத்து அசத்துச் சதசத்துமன்றென்பதுபோல் அநிர்வசனமாய் முடியுமன்றேயென்னும் அவ் வாதியை நோக்கி அவ்வாசங்கை நீக்குதற்கெழுந்தது வருஞ் செய்யுளென்பது. ௫

---

* திருக்குறள் - வெகுளாமை - ௯.

அறிபொருள் அசித்தாய் வேறும் அறிவுருப் பொருள்சத்தே
அறிபவன் அறியா னாகில் அதுஇன்று பயனு மில்லை[ன்னின்
அறிபவன் அருளி னாலே அநநிய மாகக் காண்பன்
அறிபொரு ளறிவாய் வேறாய் அறிவரு ளுருவாய் நிற்கும்.

(உரை) மேற்கூறிப்போந்தவாற்றால் அவ்விருதிறனும் இழுக்குப் படுமென்னுமதனை அறியவல்லான் ஒருவனுக்கு அச்சிவப்பொருள் அதனோடொற்றித்து நின்று அவ்வருளானே அறியற்பாலதாம். அங்ஙனம் அறியப்படும்பொருளாகிய அதுதான் அவ்வறிவேயாய் வேறுமாய் உடனுமாய் நிற்பதோரியல்பிற்றாகலான்.

அறியுமாறிதுவென்பது பாரிசேடப்பிரமாணத்தான் உணர்த்துவார், அறிபொருளசித்தாய்வேறும் அறிவுருப்பொருள்சத்தென்னின் அறிபவனறியானாகிலதுவின்று பயனுமில்லையென மேற்போந்ததனை அனுவதித்துக்கொண்டு கூறினார். கிழவனறிந்தான் கிழத்தியறிந்திலள் என்புழிப்போல அதனையென்னும் உருபேற்ற சுட்டுப்பெயர் வருவித்துரைக்க. அறிவருளுருவாய் நிற்குமெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். உடனாய் நின்றன்றி யறிவையருளுதல் செல்லாமையின் அஃததற்குக் காரணமாதலறிக. அநந்நியமாயவழிக் காண்பானும் காட்சிப்பொருளாமாறும் அருளான்உபகரிக்கப்படுமாறும் யாங்ஙனஞ் செல்லுமென்பாரை நோக்கி, அறிவேயாதலும் வேறாதலும் உடனாதலுமாகிய முத்திறமும் தன்கட்டோன்றநின்றதோர் அத்துவித இயைபுடைமையின் அவ்வாறாதல் செல்லுமென்பார், அறிபொருள் அறிவாய் வேறாய் அறிவருளுருவாய் நிற்குமியல்பும் உடன் கூறினார். இவையிரண்டு செய்யுளானும் மாயாவாதிமதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்த மூன்றாங்கூறு வலியுறுத்தப்பட்டது. அற்றேல் அருளால் அநந்நியமாகக்காண்டல் எற்றுக்கு யோகபாவனை செய்து காணவேயமையுமென்னும் பாதஞ்சலரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது.

சு

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம்
பாவிக்கும் அதுநா னென்னில் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பரன் அருளி னாலே. ௨௪௬



(உரை) நீ கூறும் பாவனையாவது, கருவிகளோடுங் கூடி நின்று செய்வதெனிற் சகலமாய்ப் போகலானும், கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதென்னில். அப்பொழுது கேவலம் வந்து தலைப்படுமாகலானும், இரண்டுமின்றிப் பாவிப்பதென்னில் அஃதநிர்வசனீயமெனப் பட்டுப் பாழாய் முடியுமாகலானும், அவ்வாறன்றிப் பாவனைக்கு எய்தாத பொருளை எய்தியதாகவைத்துப் பாவிக்கும்பொருள்யானென்று தன்மேல் வைத்துப் பாவிப்பதென்னில் அதனானுவதோர் பயனில்லையாகலானும், அப்பாவனையனைத்தும் நாடகமாத்திரையேயாமாகலான் மேற்கூறியவாறு அநந்நியமாய்நின்று அவ்வருளாற் காண்டலே யீண்டைக்குரிய பாவனையாவதன்றிப் பிறிதில்லை.

பாவிக்குமதுநானென்னிற் பாவகமென்பதனை இறுதிக்கண் வைத்துரைக்க. பாவம் பாவகம் நாடகமென்பன ஒருபொருட்கிளவி. இதனானே பாதஞ்சலர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்த மேலது வலியுறுத்தப்பட்டது. அற்றாயினும், பரம்பரனருளினாலே பாவிக்கப் படுவதென்றது மலமாசு தீர்ந்தவழிச் சிவத்தோடொப்பதாய உயிர் அறிவே அதனை அறியுமென்றாற் படும்இழுக்கெனை என்னும் சமவாதசைவரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது. எ

அன்னிய மிலாமை யானும் அறிவினுள் நிற்ற லானும்
உன்னிய வெல்லாம் உள்நின் றுணர்த்துவன் ஆத லானும்
என்னதி யானென் றோதும் இருஞ்செருக் கறுத்த லானும்
தன்னறி வதனாற் காணும் தகைமையன் அல்ல னீசன். ௨௪௭

(உரை) அச்சிவம் ஒன்றாய் வேறாய் உடனுமாய் நிற்பதொன்றாகலானும், அந்நிலை அறிவானும் அறிபொருளும் அறிவுமெனப் பகுத்தறிய வாராமையானும், அஃதுயிரறிவால் அறியப்படுவதொன்றன்று.

உன்னிய வெல்லா முண்ணின் றுணர்த்துவனென்பதற்கு, மேல் அறிவருளுருவாய் நிற்குமென்பதற்கு உரைத்தாங்குரைக்க. செருக்காலுண்டாகிய பகுத்துணர்வைச் செருக்கெனவுபசரித்தார். அற்றேல் அம்முத்திறம் ஆண்டுளவென்பதெற்றாற் பெறுதுமென்னும் அவரை நோக்கி அஃதுணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. அ

ஒன்றெனு மதனால் ஒன்றென் றுரைப்பதுண் டாகை யாலே
நின்றனன் வேறாய்த் தன்னின் நீங்கிடா நிலைமை யாலே

பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமையன் அறிவி னுள்ளே
என்றுநின் றிடுத லாலே இவன்அவ னென்ன லாமே. ௨௪௮

(உரை) சிவமும்உயிரும் ஒன்றென்பாரை நோக்கி அங்ஙனமறிவதொரு பொருள் உண்டென்பதுபற்றி வேறாய்நிற்றல்பெற்றாம். வேறென்பாரைநோக்கி அறிவுக்கறிவு பிரிந்துதோன்றாமைபற்றி வேறென்னும் அறிவுக்கெட்டாது உடனாதல் பெற்றாம். அவ்வளவே கூறுவாரை நோக்கி அவ்வறிவினுள்ளாக நீர்நிழல்போல் ஒற்றித்து நிற்றல்பற்றி உயிரே சிவமெனும்படி ஒன்றாதல் பெற்றாம்; ஆகலான் அப்பெற்றித்தாய அத்துவிதநிலையை அருளினாலே அநந்நியமாகக் காண்டலே தக்கது.

இவையிரண்டு செய்யுளானுஞ் சிவசமவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேலது வலியுறுத்தப்பட்டது. ௧

---

## சாதன வியல்—ஏழாஞ் சூத்திரம்

நாலாஞ்சூத்திரமுதலிய மூன்றானும் பொருளியல்பு கூறிய ஆசிரியர், நிறுத்தமுறையானே, "வேண்டுஞ்செய்தி முறைமை" எனப்படுஞ் சாதனங்களதியல்பு மூன்று சூத்திரத்தாற் கூறுவான்றொடங்கினார். அவற்றுள், மேற்கூறிப்போந்த முப்பொருள்களுட் சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையதிது என்பது பாரிசேடஅளவையின் வைத்துணர்த்துதற்கெழுந்தது ஏழாஞ்சூத்திரம்.

அனைத்துஞ்சத் தென்னின் ஒன்றை அறிந்திடா
தசத்தா லென்னின், முனைத்திடா தசத்துச் சத்தின் முன்
னிருள் இரவி முன்போல், நினைப்பதிங் கசத்தே யென்னில்
சத்தின்முன் னிலாமை யானும், தனக்கொடோன் றுணர்த
லானும் தானேசித் துணரா தன்றே. ௨௪௯

(உரை) மேலைச்சூத்திரத்து வரைசெய்துணர்த்திய சத்தசத்துக்களைப் பகுத்தறியும் பொருள் யாதென வினவினார்க்கு, சத்தாகிய சிவமேஅசத்தாகிய பாசமனைத்தினையும் அறிவதெனச் சிவாத்துவித சைவர் விடுப்பின், சத்தாகிய சிவம் வியாபகஅறிவாதலால் எவற்றினையும் ஒருங்கே யறிந்து நிற்பதன்றி ஏகதேசமாய்ப் பகுத்து ஒன்றை



றியுமாறில்லை; அற்றேல், சிவம் வியாபகவறிவாயினும் உயிரின் பொருட்டு அசத்தெனப்படுங் கருவிகரணங்களிடமாக நின்று அங்ஙனம் பகுத்தறிதல் கூடுமெனின், இரவிமுன் னிருள்போலச் சத்தெதிர் அசத்து முனைத்து நில்லாமையின் அசத்திடமாய்நின்று அங்ஙனம் அறியுமென்பதுங் கூடாது; இனி விகாரமின்றி நிற்கும் ஆன்மசந்நிதியில் அசத்தாகிய கருவியே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்றறிவதெனச் சிவசங்கிராந்தவாதிகள் விடுப்பின், சத்தெதிர் முனைத்து நில்லாதென மேற்கூறினமையானும் பிறிதொன்றுணர்வதற்குத்தான் கருவியாய் நிற்பதன்றித் தனக்கோரறி வில்லாதாகலானும் அசத்துச் சத்தை யறியுமென்பதுங் கூடாது.

எனவே, பாரிசேட அளவையான் இவ்விரண்டினும் வேறாய் எஞ்சிநின்ற பசுப்பொருளே இவ்விரண்டினையும் பகுத்தறியுமென்பது பெறப்பட்டது. படவே, முதனூல் ஏழாஞ்சூத்திரம்போல இச் செய்யுளும் முக்கூற்றதாயவாறு காண்க. அனைத்தையுமென இரண்டாவது விரித்துரைக்க. அறிவதென்பது அவாய்நிலையான் வந்தது; அஃதசத்தாலென்பதனோடுங் கூட்டியுரைக்கப்பட்டது. முனைத்திடாமையாவது, இஃது குடம் இஃது ஆடையென நம்மனோராற் சுட்டி அறியப்படுமாறுபோல முதல்வனாற் சுட்டிஅறியப்படுவதாய் வேறு நில்லாமை. இதனுட்போந்த முக்கூற்றினுள், முன்னைஇருகூற்றினும் விரிக்கக்கடவதாய விசேடமின்மையின் அவற்றைஈண்டே வினாவிடைகளால் தொகுத்துணர்த்தி, ஏனை மூன்றாங்கூற்றை மூன்றுசெய்யுளான் விரித்துணர்த்துகின்றார். அவற்றுட் பாரிசேட அளவையாற் பெறப்பட்டெஞ்சி நின்ற பொருளை இனிது விளக்கி அதனியல்பு வரைசெய்துணர்த்துதற்கெழுந்தது வருஞ்செய்யுளென்பது. ௧

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்தும் அசத்து மன்று
சித்தனாய்ச் சதசத் தாகி நின்றிடும் இரண்டின் பாலும்
ஒத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது
வைத்திடுந் தோற்றம் நாற்றம் மலரினின் வருதல் போலும்.

(உரை) தம்முள்உரிமையில்லாத அவ்விரண்டினையும் அறிவது ஆன்மாவேயாம்; அதுதான் அவ் விரண்டற்கும் வேறாய் இரண்டன்பாலும் மலரின்கண்நாற்றம்போல் அதுவதுவாய் நின்று சதசத்தாவதோர் உரிமையுடைத்தாகலான்.

உயிர் அவ்விரண்டின் வேறாயும் அதுவதுவாய்நிற்பதொன்றென்றவிதனானே, சத்தசத்தறிவதாகிய ஆன்மாத் தன்னை அறியுமோ அறியாதோவெனக் கடாயினார்க்கு அவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையும் அறியுமுகத்தான் அறியப்படுவதாமெனத் தன்னை அறியுமாறு கூறியதூஉமாயிற்று. அற்றேல், சிவன்சீவன்இரண்டுஞ் சித்தாகவும், சிவனெதிர் முனைத்துநிற்றலாற்றாத அசத்துச் சீவனால் அறியப்படுவதாய் அதனெதிர் முனைத்து நிற்றலாற்றுதற்கு என்னையோ காரணமென்பாரை நோக்கியெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

௨
சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபோல் அசத்தஞ் ஞானம்
ஒத்துறு குற்ற மெல்லாம் உற்றிடு முயிரின் கண்ணே
சத்துள போதே வேறாம் சதசத்தும் அசத்து மெல்லாம்
வைத்திடும் அநாதி யாக வாரிநீர் லவணம் போலும். ௨௯௧

(உரை) அநாதியாகிய முப்பொருள்களுட் சிவமுயிர்இரண்டும் நித்த வியாபகசித்தாதற் பொதுமையான் ஒக்குமாயினும் அவற்றுட் சிவம் அதிருக்குமசித்தாதலின் ஆண்டு அசத்து நிற்றலாற்றாது, உயிர் தூலசித்தாதலின் அதனெதிர் முனைத்து நிற்றலாற்றுமென்பது, கடலும் நீருந் தூயனவேயாகவுங் கடலின் மருவலாற்றாது கடல்நீரின் மருவிநிற்கும் உப்புப் போலுமாகலான் ஆண்டைக்கு வேறு காரணமில்லை.

இலவணமென்பதன்இகரம் விகாரத்தாற் றொக்கது. சுத்தமெய்ஞ் ஞானமேனிச் சோதிபாலசத்தஞ்ஞான மொத்துறுவென்ற விதனானே முன்னை இருகூற்றையும் ஒருவாற்றானே வலியுறுத்தவாறுமாயிற்று. தூலசித்தென்பது உயிரென்னும் பெயரானும் உவமையானும் பெறுதும். அற்றேல், சிவம் அதிருக்குமசித்தென்பதும் உயிர் தூலசித்தென்பதும் எற்றாற்பெறுதும் என்பாரை நோக்கியெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

௩
அறிவிக்க அறித லானும் அழிவின்றி நிற்ற லானும்
குறிபெற்ற சித்தும் சத்தும் கூறுவ துயிருக் கீசன்
நெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்பன் அன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின் னுயிர்க் கருளி னாலே.



(உரை) தன்னறிவு நிகழ்ச்சிக்கு வியஞ்சகத்தையின்றி அமையாமையால் உயிர் தூலசித்தென்பதூஉம், அவ்வுயிரின் கண்ணதாகிய மலத்தை நீக்கியறிவிக்கும் வியஞ்சகப்பொருளாகலாற் சிவந் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாத அதிருக்கும சித்தென்பதூஉம் இனிது விளங்கும்.

இவ்வியல்பு கண்ணொளி ஞாயிற்றினொளிகளின் வைத்துக் கண்டு கொள்க. சித்தியல்புபோற் சத்தியல்பினும் வேற்றுமை காட்டுவார், அழிவின்றிநிற்றலாற் சத்துங் கூறுவதென்றார். அறிவிக்க அறிதலானும் அறிந்தபின் அழிவின்றி நிற்றலானும் என்றுரைக்க. அறிந்த பின்னென்றது ஆற்றலான் வந்தது. சுத்தசித்தென்புழியுஞ் சத்தென்பது கூட்டியுரைக்கப்படும். பிறிவிப்பன் மலங்களெல்லாம் பின்னுயிர்க்கருளினாலே என்றவிதனால் வருகின்ற சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்ததூஉமாயிற்று. இவை மூன்று செய்யுளானும், முறையே உயிர்க்குச்சத்தசத்திரண்டினையும் அறியும் உரிமையுண்மையும், அதற்குக் காரணமும், அஃதாண்டுளதாமாறுந் தெரித்துணர்த்திப் பாரிசேட அளவையாற் பெறப்பட்ட மூன்றாங் கூற்றுப்பொருள் வலியுறுத்தப்பட்டது.

---

## எட்டாஞ் சூத்திரம்

மேலைச் சூத்திரத்தாற் சாதித்துப்பெறும் உரிமை தனக்கே யுண்டென்ப துணர்ந்த உயிர்க்கு அப்பேறு தனக்கு வேண்டற்பாலதென்பதூஉம், அதற்குச் சிறந்த சாதனமாவதிது வென்பதூஉம், அது வருவாயுமுணர்ந்தன்றிச் சாதனஞ்செய்தற்கு மனவெழுச்சி செல்லாமையின், மனவெழுச்சி சேறற்பொருட்டு அவற்றை யுணர்த்துதற்கெழுந்தது எட்டாஞ்சூத்திரம்.

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்(து)அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணு மாபோல்

துன்னியனும் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்தொல் லுயிரை
மன்னும்அருட் குருவாகி வந்(து)அவரின் நீக்கி
மலம்அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

(உரை) உயிர் தன்னிலையிற் பிறழ்ந்து ஐம்பொறிகளுட்பட்டு அறிவிழந்து வருந்துமாற்றை, நித்தமுத்தசுத்தசித்தெனப்படும் அவ்வீசன் குருவடிவங்கொண் டெழுந்தருளிவந்து தவமுதிர்ச்சி நோக்கி யுணர்த்தி மீட்டுத் தொன்னிலையிற் பிறழாது வைத்து வாழ்விப்பன்.

இங்ஙனம்வாழ்வித்தல் ஈசனுக்குக் கடப்பாடாதல்இனி துவிளக்குவார், பிள்ளைமைப்பருவத்து மடமையால் வேடருட்பட்டுப் பாதந்திரனாய்த் தன்சாதிக்குரிய பெருந்தகைமைஇழந்து இழிதொழில் பயிற்றி வருந்தும் மன்னவகுமாரனாவான் ஒருவனுக்கு அவன் தந்தை செய்யும் உதவியை எடுத்துக்காட்டிக் கூறினார். மும்மலச்சுழலிற்பட்டு வருந்துதல் காட்சிப்புலனாதல் செல்லாமையின், அதனையொழித்துக் காட்சிப்புலனாய் எளிதின் அறியப்படுவதாய ஐம்பொறிச்சுழலிற்படுதலே யீண்டெடுத்துக் கூறினார், தூலவருந்ததிநயம்பற்றிச் சோபானமுறையின் வைத்துணர்த்துதல் மரபாகலின். துணைவனையும் என்னும் உம்மை தன்னையறியாமையேயன்றியென இறந்தது தழீஇயது; சிறப்புமாம். மன்னுமருளென்றது ஈண்டிறப்பிறவத்தின் மேற்று. மூன்றாவது விரித்துரைக்க. என்மகன் நீ என்றென உவமையுட் கூறுதலாற் பொருளினும் உணர்த்தியென்பது வருவித்துரைக்கப்பட்டது. * "தலத்தினினுணர்த்து" என்றார் முதனூலாசிரியரும். இங்ஙனம் உரைத்தவாற்றான் முதனூல் எட்டாஞ் சூத்திரம்போல இச்செய்யுளும் நாற்கூற்றதாமாறு கண்டுகொள்க. இவற்றுட் குருவாகிவந் துணர்த்தியென்ற முதற்கூற்றுப்பொருளை ஒன்பதுசெய்யுளான் வகுத்துக் கூறுவான் தொடங்கினார்.

௧

உரைதரும்இப் பசுவர்க்கம் உணரின் மூன்றாம்
உயரும்விஞ் ஞானகலர் பிரளயா கலர்சகலர்
நிரையின்மலம் மலங்கன்மம் மாயை
நிற்குமுத லிருவர்க்கு நிராதார மாகிக்

* சிவஞானபோதம் சூத் - அ.



கரையில்அருட் பரன்துவிதா சத்திநிபா தத்தால்
கழிப்பன்மலம் சகலர்க்குக் கன்ம வொப்பில்
தரையில் ஆசான்மூர்த்தி ஆதார மாகித்
தரித்தொழிப்பன் மலம்சதுர்த்தா சத்திநிபா தத்தால்.

(உரை) எண்ணரியவுயிர்களெல்லாம் பந்தவேறுபாட்டான் மூவகைப்படும். அவற்றுள் மும்மலங்களுமுடைய சகலவர்க்கத்திற்கு நால்வகைச்சத்திநிபாத முறைமையின்வைத்து அரிதுணர்த்தவேண்டுதலின், அவ்வுயிர்கட்கே குருவாகி வந்துணர்த்தியென மேற்கூறிய சாதாரதீக்கை செய்வது. ஒருமலம்இருமலமுடைய மற்றை இருவர்க்கத்திற்குத் தீவிரந் தீவிரதரமென்னும் இருவகைச் சத்திநிபாதத்தின் வைத்துணர்த்த அமையுமாதலின், சகலவர்க்கம்போற் குருவடிவின் மறைந்துநின்று படர்க்கையான் உணர்த்தப்பட்டரிதுணரவேண்டாது அவ்விருதிறத்துயிர்கட்கும் முறையே உள்நின்றும் முன்னின்றும் உணர்த்துவதாகிய நிராதாரதீக்கை செய்யப்படும்.

இதனானே தீக்கை இருவகைத்தென்பதூஉம் அவ்விருவகைக்குமுரியார் இவரென்பதூஉங் கூறப்பட்டன. இனி இவ்விரண்டனுள் ஈண்டெடுத்துக்கொண்ட சாதாரதீக்கையிற் படும் பாகுபாடும் அவற்றியல்பும் வகுத்துக் கூறுதற்கெழுந்தன வருஞ்செய்யுட்களென்பது.

பலவிதம்ஆ சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகம் மானதமும்
அலகில்சாத் திரம்யோக மௌத்தி ராதி
அநேகமுள அவற்றினௌத் திரிஇரண்டு திறனாம்
இலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தால்
இயற்றுவது கிரியைஎழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதான் இன்னும்
நிர்ப்பீசம் சபீசமென இரண்டாகி நிகழும். ௨௫௫

(உரை) அவ்வுயிர்க்கண்ணதாகிய மலபரிபாகம் பலவகைப்படுதலின், அம்மலத்தை மோசிக்குஞ் சாதாரதீக்கையும் அதற்கேற்பத் திருநோக்கமுதலியனவாகப் பலவேறுவகைப்படும். அவற்றுள் ஏனைத் தீக்கைகளெல்லாந் தனக்கங்கமாகவுடைத்தாய்ச் சிறந்த ஔத்திரி தீக்கையாவது ஞானவதி கிரியாவதியென் றிருவகைப்படும். அவற்றுட் குண்டமண்டலம் அங்கி நெய்சுருக்குச் சுருவமுதலியஅனைத்தும்

மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதிமுதலிய கிரியை செய்வது ஞானவதி; அவையனைத்தும் புறத்தே நிலவக் கொண்டு புறம்பே அக்கிரியை செய்வது கிரியாவதியெனப்படும். இங்ஙனம் இருவகைப்பட்ட ஔத்திரிதீக்கைதான் இன்னும் நிர்ப்பீசஞ் சபீசமென வெவ்வேறிருவகைப்படும்.

கிரியை இயற்றுவதென மாறுக. ஔத்திராதியென்றதனாற் சாம்பவதீக்கை முதலியனவுந் தழுவப்பட்டன. நயனதீக்கைமுதலிய ஆறும், சுதந்திரமாய்ச் செய்யப்படுவனவும் அவுத்திரிக்கங்கமாய்ச் செய்யப்படுவனவும் என்றிருவகைப்படும். அவற்றுள் முன்னையவை ஔத்திரிக்குரியரல்லாதார்க்குச் செய்யப்படுவனவெனக்கொள்க. ௩

பாலரொடு வாலீசர் விருத்தர் பணிமொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலமது நிர்ப்பீசம் சமயா சாரம்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்(து)
ஏனுமதி காரத்தை இயற்றித் தானும்
எழில்நிரதி காரையென நின்றிரண்டாய் விளங்கும்
சாலநிகழ் தேகபா தத்தி னோடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே. ௨௫௬

**(உரை)** அவ்விரண்டனுள் நிர்ப்பீசதீக்கையாவது, மலபரிபாகமுடையவராயுந் தீக்கைப் பின் ஒருதலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றல் அறிவிலராயினார்க்கு, ஆசாரியனுவான் அதனை உணர்ந்து ஏனைக் கன்மங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய்தொழித்து, நித்திய கன்மமாத்திரையின் என்றவாறு அனுட்டிக்கும் அதிகாரமுடையராகச் செய்வதாம்; ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்துங் காமியத்தும் அதிகாரங் கொடாமையான், இது நிரதிகார தீக்கை எனப்படும். அத்தீக்கை மூன்றனுட் சமயமும் விசேடமும் ஒரோவொன்றேயாம்; ஏனை நிருவாண தீக்கை தேகாந்தத்தின் முத்தியைப் பயக்கும் அசத்தியோ நிருவாணமெனவும் அப்பொழுதே முத்தியைப் பயக்குஞ் சத்தியோ நிருவாணமெனவும் இருவகைப்படும்.



சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்கையும் அதற்கங்கமாயுஞ் சுதந்திரமாயுஞ் செய்யப்படுஞ் சமயவிசேடங்களும் நிர்ப்பீசதீக்கையெனக் கொள்க.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை
நீதியினால் நித்தியநை மித்திககா மியத்தின்
நிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதும் செய்து
சாதகா சாரியரும் ஆக்கி வீடு
தருவிக்கும் உலோகசிவ தருமிணியென் றிரண்டாம்
ஆதலினான் அதிகாரை யாம்சமயம் விசேடம்
நிருவாணம் அபிடேகம் இவற்றடங்கு மன்றே. ௨௫௭

**(உரை)** இனிச் சபீசமாவது, மலபரிபாகத்தோடு கூடக் கற்றறிவு மாற்றலும் மிக்குடையராயினார்க்கு, ஆசாரியனுவான் அஃதறிந்து சமயாசார கன்மமாத்திர நிறுத்தி ஏனையவற்றைச் சுத்திசெய்தொழித்து நித்தியகன்ம முதலிய மூன்றினும் பேரதிகாரமுடையராகச் செய்வதாம்; ஆகலின் இது சாதிகார தீக்கையெனவும் பெயர்பெறும். இத்தீக்கைப் பேறுடையார் தீக்கை வேறுபாட்டாற் சாதகரும் ஆசாரியருமென் றிருதிறப்படுவர். இந்தச் சபீசதீக்கைதான் இல்லறமுடையார்க்குத் திரோதான சுத்தி ரூப சிகாச்சேதமின்றிச் செய்வதாய உலக தருமிணியுந் துறவறமுடையார்க்குத் திரோதானசுத்தி ரூப சிகாச்சேதத்தோடு செய்வதாகிய சிவதருமிணியுமென் றிருவகைப்படும். இவை முறையே பௌதிக தீக்கை நைட்டிக தீக்கை எனவும் பரியாயப் பெயர் பெறும். சமயவிசேட நிருவாணம் அபிடேகமென்னும் பேதமெல்லாம் நிர்ப்பீசஞ் சபீசமென்னும் இவ்விரண்டனுள் அடங்கும்.

சமயாசார சுத்தியின்றிச் செய்யும் நிருவாண தீக்கையும் அதற்கங்கமாய்ச் செய்யப்படுஞ் சமய விசேடங்களுஞ் சபீசதீக்கையெனக் கொள்க. உத்தமத்தில் உத்தமரென்பார், நல்ல உத்தமரென்றார். ஓதியுணர்தலும் ஒழுக்கநெறி இழுக்காமையுமாகிய இரண்டுமுடையார் உத்தமத்தில் உத்தமரெனவே, அவ்விரண்டினில் ஒன்றில்லாதார் உத்தமத்தில் மத்திமர் என்பதூஉம், இரண்டுமில்லாதார் உத்தமத்தில் அதமரென்பதூஉம் பெற்றாம். பெறவே, நிர்ப்பீ

சஞ் சபீசமென் றிருதிறப்படுஞ் சாதார தீக்கைக்குரியார் இவ்வாறு முத்திறப்படுவ ரென்பதாயிற்று. இங்ஙனங் கூறியவாற்றால் ஔத்திரியெனத் தொகையான் ஒன்றும், ஞானவதி கிரியாவதி யென வகையான் இரண்டும், ஞானவதி நிர்ப்பீசஞ்சபீசம் கிரியாவதி நிர்ப்பீ சஞ்சபீசமென விரியான் நான்குமாயவாறு காண்க. நிர்ப்பீசஞ்சபீச மென்னும் இவற்றின் விரியாகிய சமயவிசேட முதலியவற்றின் இயல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க. இவை மூன்று செய்யுளானுஞ் சாதார தீக்கையின் வகையும் அவற்றியல்புகளுந் தொகுத்துக் கூறப் பட்டன. ௫

அழிவிலாக் கிரியையினுன் ஆதல்சத்தி மத்தான்
 ஆதல்அத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
ஒழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞானம்
 உதிப்பித்துற் பவந்துடைப்பன் அரன்ஒரு மூவர்க்கும்
வழுவிலா வழிஆறும் மந்திரங்கள் பதங்கள்
 வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யொன்றிலொன்று வியாத்தி
 கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும். ௨௫௮

(உரை) அரன், குருமூர்த்தியை அதிட்டித்துநின்று, மந்திர முதல் அறுவகைப்படும்அத்துவாக்கள் ஒன்றிலொன்றடங்க இறுதிக் கண்நின்ற கலைதிரோதானசத்தியினும் அது சிவத்தினும் அடங்கு மாறுணர்ந்து அவ்வாறடக்கி நிர்ப்பீசஞ்சபீசமெனத் தனித்தனி இரு வகைப்படுமென மேற்கூறிப்போந்த ஞானவதி கிரியாவதியென்னும் இரண்டனுள் ஒருதீக்கையானே உத்தமத்திலுத்தமர் முதலியஅம் மூவர்க்கும் அறுவகை அத்துவாக்களையுஞ் சோதிக்குமுகத்தாற் பிற விக்கேதுவாகிய மலத்தைக் கெடுத்துச் சிவம் பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக் கொடுக்கும்.

கிரியை ஆகுபெயர். ஔத்திரி இரண்டுதிறனுமிலகுஞானங்கிரி யை என முதற்கண்எடுத்துக்கொண்டு முடிவின்கண் அழிவிலாக்கிரி யையினுனுதல் சத்திமத்தானுதலென முடித்தமையின், இடைக்கட் கூறப்பட்டனவெல்லாம் இவ்விரண்டற்கும் பொதுவாமாறு காண்க. சோமசம்புபத்ததி வருணபத்ததி முதலியவற்றினும் இவ்வாறேகூறப்

## களிமேடு அப்பரவை, தஞ்சை

இதில் அப்பர் திருநாள் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திருவாளர்கள் இ. கோவிந்தசாமிப் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், பா. சிவகுருநாத பிள்ளை முதலிய பேரறிஞர்கள் சொற்பொழிவுகள் செய்தார்கள்.

---

## மதிப்புரைகள்

**கலைச்சொற்கள் :—** சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி-1936 - பக்கம் 104+22. விலை அணா 8. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் தோன்றி இரண்டு வருடங்களே யாயினும் செய்துவரும் பணி மிகவும் போற்றத்தக்கதாயிருக்கின்றது. இச்சங்கம் இக்காலத்திற்கேற்ப ஆங்கிலக் கலைச்சொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்களை ஆக்க முன்வந்திருப்பது சாலச் சிறந்த தமிழ்த்தொண்டேயாகும். தாம் ஆக்கித் தந்ததோடமையாது தமிழுலகின் ஒத்துழைப்பை நாடுவதும், அவ்வழியில் இச்சொற்களை இன்னும் திருத்தமுற, அழகுறச் செய்யமுன்வந்திருப்பதும் இச்சங்கத்தின் பரந்தநோக்கத்தைக் குறிப்பிடுகிறது. இப்பொழுது ஆக்கப்பெற்றிருக்குஞ் சொற்களிலுங்கூட மிகப்பெரும்பகுதி தெளிவாயும், எளிதாயும், அழகாயும் அமைந்திருப்பது இப்பணியின் தலைநின்றாரின் ஆழ்ந்த புலமையையும், சிறந்த அறிவையும் வெளியிடுகின்றது. இச்சொல்லாக்க முயற்சியில் பயன்படுத்தப்பெற்ற "அடிப்படையான உண்மைகள்" அறிவாளர் யாவரும் ஒப்பத் தகுந்தனவாயும், யாவராலும் மறுக்கவொண்ணாதனவாயு மிருக்கின்றன. இவ்வெளியீட்டிற்கும், பரிசுகளுக்கும், இதன் திருத்தப் பதிப்பிற்கும் வேண்டிய பொருளுதவி செய்த - செய்ய விருக்கின்ற திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் மறைத்திரு சாமிநாத சுவாமிகளின் அரிய உதவி பெரிதும் போற்றத்தகுந்ததே. தமிழன்பர்கள் யாவரும் இம்முயற்சியில் ஈடுபடுவதன்றி இச்சொற்களை நடைமுறையில் கொண்டுவர முன்வருவார்களாக. இதற்கெனக் கொடுப்பதாகவிருக்கும் பரிசுகளும் தக்கனவா யிருப்பதன்றி ஊக்கம் அளிக்கக்கூடியனவாயு மிருக்கின்றன. இத்தகைய அரும்பணி ஏனைய கலைச்சொற்களையும் சிறப்பாய்ச் சைவசித்தாந்தம் முதலிய உயிர்க்கலைச் சொற்களையும் சீர்திருத்துவதில் பயன்படுத்தப் பெறின் முற்றுப்பெற்றதாக முடியும்.

**நவசக்தி :—**ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'நவசக்தி' பத்திரிகை கடந்த பன்னிரண்டாண்டாகத் தமிழ் நாட்டுக்குச் செய்து வந்த சேவையைத் தமிழ் மக்களுக்கு விரித்துக்கூற வேண்டுவதில்லை. இடையில் 'நவசக்தி' நிற்கநேர்ந்ததன் காரணம், அப்பத்திரிகை வாயிலாக வெளி வந்தமை நேயர்கட்குத் தெரியும். அப்பத்திரிகை பழையபடி வாரப் பதிப்பாகவே 1936௵ மே௴ 3-ம் வாரம் முதல் சென்னை இராயப்பேட்டையினின்றும் வெளிவரும் என்று மிக மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9. No. 5

**சூரியன்:**—நாம் உயிர்வாழ்தற்கு இன்றியமையாததும், நவக்கோள்களுள் தலைமைபெற்றுள்ளதுமான சூரியனைப்பற்றி ஒரு நூல்வெளிவந்துள்ளது. தமிழில்வெளியான இப்புதிய நூல், சூரியனைப்பற்றியும், பிற கோள்கள் நக்ஷத்திரங்கள் ஆகிய பல பொருள்களைப்பற்றியும் வெளிவந்துள்ள பல நாட்டு விஞ்ஞான சாத்திரக் கொள்கைகளையும் இராட்டிக்கூறுகிறது. நம் நாட்டுச் சமயநூல்களிலும் பிற இலக்கிய நூல்களிலுங் காணப்பெறும் குறிப்புக்களும் மேற்கோள்களாக மிளிர்கின்றன. உள்ளதைக் கூறும் இது, கற்போர்க்குக் கட்டுக் கதைகளைக் காட்டினும் அதியற்புதத்தையும் இன்பத்தையும் பயக்கும். ஆங்கிலத்தில் வானநூல் கல்லாத எவர்க்கும் இதுபயன் தரும். இரவில் மணியறிதல், சப்தரிஷி மண்டலம், திரிசங்கு முதலியவும் இதனுள் விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே இதுபோன்ற விஞ்ஞான நூல்கள் பல வெளிவர இஃதொருவழிகாட்டியாயிருக்குமென நம்புகிறோம். இதன் ஆசிரியரும் இதுபோன்ற பல நூல்களைமேலும் மேலும் வெளியிடுவார்களென எதிர்பார்க்கிறோம். தமிழர்கள் துணை புரிவார்களாக. (ஆசிரியர்:—ஈ. த. இராஜேசுவரி அம்மையார், எம். ஏ., எல். டி., சென்னை மேரியராணி கலாசாலை விஞ்ஞான சாத்திர ஆசிரியர். விலை ரூபாய் ஒன்றேகால். கிடைக்குமிடம்: 412, டைறரோட்டு, திருவல்லிக்கேணி, சென்னை.)

---

உ

# சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இப்பதிப்பில் சிவஞானபோதமூலம், சிவஞான சுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து, மெய்கண்டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் ருஎகூ+40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது.
**பதினைந்து பிரதிகள் விலை ரூபா பத்து;**
ரயில்வே பார்சல் கூலி, தபாற்கூலி வேறு.
**உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.**

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 19, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.

048

M. 2330. "SIDDHANTHAM" Vol. 9—No. 6.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் கூ | தாது ஆண்டு ஆனித் திங்கள் 1936ஆம் ஜூன்மீ | இதழ் கூ |

உள்ளுறை | பக்கம்

| | |
|---|---|
| தொல்காப்பியமும் சைவமும் ... ... | ... ௧௬௩ |
| மகோற்சவம் ... ... | ... ௧௬௪ |
| முத்திநிலை ... ... | ... ௨௦௨ |
| தமிழர் மதவளர்ச்சி ... ... | ... ௬௦௭ |
| தில்லைச் சிற்றம்பலப்பெருமான் திருக்கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ள வெண்பாக்கள் | ... ௨௧௬ |
| "ஞானபானு" ... ... | ... ௨௧௭ |
| திருவாரூரர் ... ... | ... ௨௧௧ |
| சமயச் செய்திகள் . ... ... | ... ௨௨௧ |
| சித்தாந்த சாத்திரம் ... ... | ௬௭ - ௯௦௮ |

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1936 தனிப் பிரதி அணா 4.

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் வைகாசிமாதக்கூட்டம் திருப்பாதிரிப்புலியூர் சிவாலயத்தில் அம்மன் சந்நிதியில் திரு. வ. சு. சண்முகம் பிள்ளையவர்கள் தலைமையில் 4-6-36ல் நடைபெற்றது. ஸ்ரீல ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் விரிவான ஒரு முன்னுரையில் சைவ சமய நுட்பங்கள் பலவற்றை விளக்கிச் சமாஜத்தினை வரவேற்றார்கள். திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியாரும், ச. சச்சிதானந்தம் பிள்ளையும் 'திருக்குறள்', 'சைவசமயப் பாதுகாப்பு' என்பன பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் கருத்துரை முடிந்தபின் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் வந்தனம் கூறினார்கள். திருவிடைமருதூர் தேவார பாடசாலை ஆசிரியர் - திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள் இடையிடையே திருமுறை ஓதினார்கள்.

2. சமாஜத்தின் ஆனிமாதக் கூட்டம் 5-7-36ல் திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும். ஆடிமாதக் கூட்டம் சுந்தரர் திருநாளன்று திருநாவலூரிலேனும் திரு அஞ்சைக் களத்திலேனும் கூட்டப்படும்.

3. திருவாரூரிலிருந்து நமது சமாஜ விழா நடைபெறுவதைப் பற்றி உறுதியான விவரங்கள் கிடைக்காமையால் இவ்விழா முன்னிதழில் அறிவித்தது போல ஜூன் மாதத்தில் நடைபெறாது. ஏனைய விவரங்கள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

4. சமாஜக்காரியாலயம் கோடைவிடுமுறைக்காக 10-7-36 வரை மூடப்பட்டிருக்கும்.

## பிரிவாற்றாமை

நமது சமாஜ போஷகருள் ஒருவராகிய சோல்டன் கம்பெனி உரிமையாளர் - திரு. T. பாலசுந்தர முதலியார் 14-5-36 சிவபதமடைந்த செய்தியை மிக வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

## கட்டுரை வரையும் அன்பர்கட்கு அறிவிப்பு

கட்டுரைகளுள் சமயத்தொடர்பே இல்லாதவை, சைவ சமயிகட்குப் பெரிதும் பயன்படாதவை, சிறுவர்க்கும் பெண்கட்கும் சிறிதும் விளங்காதவை, மூன்று அல்லது நான்கு பக்கங்கட்கு மேற்பட்டவை, ஒன்றிலே முடிந்த கருத்தைத் தெரிவியாது தொடர்ந்து வரக் கூடியவை முதலியன கூடா. தொடர்ந்து வரக்கூடியவை, பெரிதும் பயன் தரத்தக்கனவாயினும் பலதிங்கட்கொருமுறையும் ஆண்டிற்கொருமுறையும் வெளிவருவதைத் தவிர்க்க, முழுக்கட்டுரையையும் அனுப்பிவிடுதல் வேண்டும். முன்னரே வெளிவந்து இன்னுந் தொடரவுள்ளவை உடனே முடித்தனுப்பப்படாவிடின் பின்னர் வெளியிடப்படமாட்டா.—**உதவிப்பத்திராசிரியர்.**

Reg. M. 2330.

உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

11 JUN 1955


# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

| | | |
|---|---|---|
| மலர் ௯ | தாது ஆண்டு ஆனித் திங்கள் 1936௵ ஜூன்௴ | இதழ் ௬ |


## தொல்காப்பியமும், சைவமும்

### உயர்திரு - சுவாமி விபுலாநந்தர் அவர்களின் சொற்பொழிவு

உயர்திரு-சுவாமி விபுலாநந்தர் 1936௵ ஏப்ரல்௴ 28உ சமாஜச்சார்பில், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலைய'த்தில், ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சமாஜ உதவிக் காரியதரிசி திரு. G. கலியாணம், B. A., D. Econ., அவர்கள் எழுதிய அதன் சுருக்கம் வருமாறு :—

'தொல்காப்பியமும் சைவமும்' என்னும் பொருள் பற்றிப் பேசப்புகுமுன் தண்டமிழ் முனிவரான அகத்தியனாரைப்பற்றிச் சில பகரலாம் என்று எண்ணுகிறேன். அகத்தியனார் கயிலையினின்றும் சிவபெருமானால் தென்னாட்டிற்கனுப்பப்பட்டாரென்றும், அவர் வரும் வழியில் வானுறவோங்கி

வளர்ந்து நின்ற மாமலையை அழுத்தினரென்றும், தமிழகத்தில் பொதியமலையில் வதிந்தன ரென்றும், சங்கமிரீஇத் தமிழாய்ந்தன ரென்றும், அவர் முதன் மாணாக்கரான தொல்காப்பியனாரைத் தம் தேவியை அழைத்து வர ஏவினரென்றும், இன்னபிற பல வரலாறுகள் நம் நாட்டிடை வழங்குகின்றன. அவைகளை நாம் புராணம், கதை என்று ஒதுக்கி விடுதல் கூடாது; நடுநிலை நின்று ஆய்ந்து உண்மை காண முயலவேண்டும். அகத்தியனாரைக் கிழக்கிந்தியத் தீவுகளில் வதியும்மக்கள், கோயிலில் வைத்துத்தெய்வமாக வழிபடுகின்றனர். நாம் அவரை ஒரு சித்தராகக் கொள்கிறோம். அவர் பேரால் இப்பொழுது அநேக தமிழ் நூல்கள் வழங்கி வருகின்றன. உள்ளத்துக்கு ஞான நூலையும் பேச்சுக்கு இலக்கண நூலையும், உடலுக்குவைத்திய நூலையும் அவர் அருளினார் என்று கூறப்படுகின்றது. பண்டுதொட்டே இவருக்கும் சைவ சமயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதைத் தமிழ் நூல்கள் வாயிலாக நாம் அறிகிறோம். "அகத்தியர் தேவாரத்திரட்டு" என்று ஒரு நூல் இருப்பது இதற்கு ஓர் எடுத்துக்காட் டாகும்.

இம்முனிவரின் முதன்மாணாக்கரே ஒல்காப்புகழ் பெறு தொல்காப்பியத்தை இயற்றியவர். இந்நூல் தமிழ்மொழிக்கு ஒரு கட்டளைக்கல். இது ஒரு சீரிய இலக்கணநூல். மற்ற மொழிகளின் இலக்கண நூல்களைப்போல் மொழிக்கு மாத்திரம் இது இலக்கணங்கூறவில்லை; மக்களுக்கும் இலக்கணம் கூறும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்தது இது. நாம் எதற்காக இலக்கணநூலை ஆராயவேண்டும்? மக்களுக்கும், விலங்குகளுக்கும் மொழிதான் வேறுபாடு. மொழியினால்தான் பொருளின் உண்மையை அறிகிறோம். மொழிக்கு இலக்கண நூல் இன்றியமையாதது. தொல்காப்பியத்தினின்றும் பழந் தமிழர்களின் பழக்க ஒழுக்கங்களையும், அவர் வணங்கிய

தெய்வங்களையும் பற்றி அறிகிறோம். கீழ்க்கண்ட சூத்திரத்தில் திருபால், முருகன், வருணன், இந்திரன் முதலிய தெய்வங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதநெய் தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

கொற்றவை முதலிய தெய்வங்களைப் பரவியதும், வெறியாடல் முதலிய வழக்கங்களும் களவியலில் கூறப்பட்டிருக்கின்றன. சைவத்தில் காளாமுகம், பாசுபதம், காபாலிகம், வைரவம் முதலியன வழங்கின. நேபாளத்தில் இப்பொழுதும் காபாலிக சமயம் வழங்கி வருகின்றது. அறிவர் என்று தொல்காப்பியத்தில் சொல்லப்படுகிறது. அவர்கள் பிறப்பிலி, இறப்பிலி என்ற தனிப்பெருந் தெய்வத்தை வணங்கினார்கள். ஆண்டவனைப் பிறவா யாக்கைப் பெரியோனாகக் கொண்டார்கள். சிவபெருமானையே பிறவா யாக்கைப் பெரியோனாகச் சிலப்பதிகாரத்தில் உரைக்கப்பட் டிருக்கிறது. இறைவனைப் பழந்தமிழ்மக்கள் மழுப்படையேந்திய அகோர ரூபமுடையவனாகக் கண்டார்கள். சாந்தகுணம் மாத்திரமில்லை; கோரகுணத்துடனும் இருந்தான். நக்கீரர் இதைப் பற்றிக் கூறியிருக்கிறார். இறைவனுக்குக் கூற்று என்ற பெயரும் உண்டு. தெய்வங்களை வழிபடு முறைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்டன.

சமயவாழ்க்கைக்குச் சமூகவாழ்க்கை இன்றியமையாதது. கீழ்க்கண்ட தொல்காப்பியச் சூத்திரத்துள் சமூக வாழ்க்கையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

“ அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன் று மரபி னேனோர் பக்கமு
மறுவில் செய்தி மூவகைக் காலமு
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணு
மனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.”

பான்மை, ஊழ் என்பன ஒரு பொருட்சொற்கள். இதன் ஆற்றல் தெய்வங்களையும் கட்டுப்படுத்துந் தன்மைத் தாக இருந்தது. தலைவன் தலைவியைக் கூட்டி வைக்கும் விதி (ஆணை)யின் வலி தெரிந்து கொள்ளற்பாலது.

“ வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும் ”

ஈண்டு வினையின் நீங்கி என்பதற்கு இயல்பாகவே வினை யினின்றும் நீங்கி என்பது பொருள். நூற்பொருளை விசா ரிப்பதாலேயே வீடுபேற்றிற்கு மார்க்கமாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகப்பொருள், புறப்பொருள் என்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன. அகம் என்பது ஒத்த அன்புடைய தலைவன் தலைவியின் கூட் டம். அது வீட்டகத்தே அல்லது இல்லின் கண்ணே நிகழ் வது; புறம் ஞானத்தைப் புகட்டுவது. அது வீட்டிற்கு அல்லது ஊருக்குப் புறம்பே நிகழ்வது. ஞானம் இருள்கடிந்து ஒளி விளக்குவதுபோல் போர்க்களத்தில் வீரம் காட்டுவது. அன்பையும் அறிவையும் (ஞானத்தையும்) அகமும், புறமும் குறிக்கின்றன. இல்வாழ்க்கை எப்படி வீட்டிற்கு மார்க்கமா கிறது என்பதையே அகப்பொருள் கூறுகிறது. தம்மிடமும் ஈசனிடமும் அன்பு இல்லாதவர்கட்கு மனைவி மக்கள், முதல்



அன்புப்பொருள்கள். இல்வாழ்க்கையில் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. தம்மைப் பொறுத்து பிறர்பால் அன்பு பாராட் டுந்தன்மை போற்றத்தக்கது. உரை, செயல் முதலியவைகள் அன்பின் வளர்ச்சிக்குக் காரணம். பெற்ற சிற்றின்பமே பேரின்பத்திற்கு வழி.

“ காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே ”

என்பது தொல்காப்பியம். மனைவி மக்கள் பேரிலுள்ள அன்பு மாறி ஈசனிடம் செல்கிறது. அன்பின் நிலைக்களம் மாறுகிறது. அன்புவழக்கை நாம் நன்றாகப்பயிலுதல் வேண் டும். “ காமப்பகுதி கடவுளும் வரையாரேனோர் பாங்கினு மென்மனார் புலவர் ” என்பது ஈங்குக் குறிக்கத்தக்கது.

தொல்காப்பியத்திற்கு இலக்கியமாக உள்ளவை திரு வாசகம், திருக்கோவையார் என்ற சைவநூல்கள். திருக் கோவையார் மாணிக்கவாசகர் ஞானத்தில் அதியுச்சமாக இருக்கும் காலத்து இயற்றியதாகும். அந்நூலினின்றும் அகப்பொருள் தன்மையை இனிது விளக்கிக் காட்டும் ஒரு செய்யுளைச் சொல்லுகிறேன் :

“நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செந்தே னும்பொதிந் துசெப்புங்
கோங்கரும் புந்தொலைத் தென்னையு மாட்கொண்ட கொங்கைகளே”

திருக்கோவையார் அன்புக்குறைவிடம் என்று சொல்லலாம். புறப்பொருள் தன்மையை விளக்கத் திருவாசகத்தினின்றும் இரு பாக்கள் கூறுகிறேன். புறப்பொருளில் போர்க்குச் செல்வது குறிக்கப்படுகிறது. மணிவாசகப்பெருமான் பிர

பஞ்சப் போருக்குத் திருப்படை யெழுச்சியை மிக மிக அழகாக அருளியிருக்கிறார்.

“ஞானவாளேந்துமையர் நாதப்பறையறைமின்
மானமாயேறுமையர் மதிவெண்குடைகவியின்
ஆனநீற்றுக்கவசம் அடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாம் மாயப்படைவாராமே.

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள்சூழப்போகீர்
ஒண்டிறல்யோகிகளே பேரணிஉந்தீர்கள்
திண்டிறல்சித்தர்களே கடைக்கூழைசென்மின்கள்
அண்டர்நாடாள்வோம்நாம் அல்லற்படைவாராமே.”

இப்படை யெழுச்சி எவ்வாறு, எதை நோக்கிச் செல்கின்றது? படையின் முன்னணியில் தொண்டர்களும், மருங்கில் பத்தர்களும், நடுவில் யோகிகளும், பின்னணியில் சித்தர்களும் செல்கிறார்கள். அவர்கள் ஏந்திச் செல்லும் ஆயுதம் ஞானவாள். அவர்கள் ஒலிக்கும் போர் முரசம் பிரணவ நாதப் பறை. கவித்துச் செல்வது மதி வெண்குடை. அவர்கள் அணிந்து செல்வது திருவெண்ணீற்றுக் கவசம். இவர்கள் எதிர்த்துப் போர் செய்வது மாயப்படை, அல்லற்படை யென்பவைகளே. இவைகளை வென்றால் வானவூர் கொள்ளலாம்; அண்டர் நாடாளலாம்.

# மகோற்சவம்

## தத்துவார்த்தம் முதலியன

[வண்ணை - வை. ஆ. சர்மா]

சர்வலோகைக நாயகராகிய சிவபெருமான் பாலில் நெய் போலவும், பழத்திற் சுவைபோலவும், பூவில் மணம்போலவும் சராசரங்கள்தோறும் நீக்கமற நிறைந்திருக்கிறார். ஆயினும் ஆலயங்களிலே தயிருள் நெய்போல வெளிப்பட்டு



நின்று அருள் செய்வர். ஆகவே, பொதுவாக மக்களுக்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது. அதிலும் நாள்தோறும் கிரமமான தரிசனம் சிறப்புடையது. தரிசனம் கிரமப்பட வேண்டுமேல் நித்திய பூஜை ஒழுங்கான முறையில் நிகழ வேண்டும். பூஜையைச் செய்வோரும் சிற்றறிவும் சிறு தொழிலும் உள்ள மக்களாதலின், மந்திர வழு, கிரியைத் தவறு, திரவியக் குறைவு, பக்தியின்மை, ஆசாரஹீனம் முதலியன சேர்ந்துவிடவுங் கூடும். இவ்வாறு நேரும் நித்திய பூஜைக் குறைவுகளை நீக்குதற்காகவே நைமித்திகக் கிரியைகள் செய்யப்படும். அவற்றுட் சிறப்புடையதே மகோற்சவம் எனப்படுவது.

மகோற்சவம் என்பது மேலாகிய யாகமாம். இது ஆன்மாக்களின் பிறவிப் பிணியை நீக்கி ஞானத்தைக் கொடுத்துப் போக மோக்ஷம் அருளும் சிவயாகமாகிய சிவதீக்ஷை அல்லது சமயதீக்ஷை எனப்படும்.

இவ்வுற்சவமானது சாகலியம், பாவனம், சாந்தம், மாங்கலியம் என நால்வகைப்படும். அவற்றுட் சாகலியமாவது சாந்தி முதலியவற்றோடு துவஜாரோகணம் முதல் தீர்த்தம் ஈறாகச் செய்யப்படுவது. சாந்தமாவது துவஜாரோகணமாதல் பகல் விழாவாதலின்றி இரவில் மாத்திரம் விழாச் செய்வது. மாங்கலியமாவது ஒருவர் பொருட்டுப் பகலில் மாத்திரம் விழாச் செய்வதாகும். முதலாவதாகிய சாகலிய உற்சவம், சௌரம், சாந்திரம், சாவித்திரம், கௌமாரம், தைவிகம், பௌனம், பௌதிகம், கணம், சைவம் என ஒன்பது வகைப்படும். அவற்றுள் தைவிகம் துவஜாரோகணம் முதல் தீர்த்தோற்சவம் இறுதியாக ஒன்பது பத்து அல்லது பதினொரு தினங்களிற் செய்யப்படும் உற்சவமாம். இதுவே யாழ்ப்பாணத்தில் உள்ள சைவாலயங்களிற் பெரும்பாலும் அநுட்டிக்கப்படுவது.

இனி இந்தச் சாகலிய நைவிக உற்சவத்தின் நுண்பொருளை நோக்குவாம். துவஜாரோகணமாவது கொடிமரத்திற் கொடி ஏற்றுதல். அது ஆன்மாக்கள் பாச நீங்கிச் சிவப்பேறு பெற்றவுடன் பஞ்சகிருத்தியம் நிறுத்தப்பட்டு ஆரம்பிக்கப்படும் சங்கார காலத்தைக் குறிப்பதாகும். கொடிமரமே பதி; கொடிச்சீலையே திரோதான (மறைப்புச்) சத்தியாகும். அதில் எழுதப்படும் இடபம் ஆன்மாவையும், சூலம் ஆரணி ஜநநி திரோதாயி என்னும் சத்திகளாகிய சிவகுணங்களையும் குறிப்பனவாம். கொடிச்சீலையோடு கட்டப்படும் கயிறு ஆன்மாவைப் பந்தித்திருக்கும் பாசமாகும். பலியிடுதல் ஆன்மாவுக்குப் பிராரத்த கன்மத்தைப் புசிப்பித்து நீக்குதலாம். தீர்த்தோற்சவம் அருட்சத்தி வழியாக அநுக்கிரகிக்குங் கிருத்தியமாம். தீர்த்தம் பராசத்தி வடிவமானது. ஆகவே உற்சவம் பஞ்சகிருத்தியமாகும்.

உற்சவ தினங்களுள் முதல்விழா தூலதேக நீக்கமாகும். இரண்டாம் விழா தூல சூக்குமதேக நீக்கமாகும். மூன்றும் விழா காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றம், இராஜசம் தாமசம் சாத்வீகம் என்னும் முக்குணம் முதலியவற்றின் நீக்கமாகும். நாலாம் விழா அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களின் நீக்கமாகும். ஐந்தாம் விழா மெய் முதலிய ஐம்பொறிகளின் நீக்கமாகும். ஆறும் விழா காமக்குரோத லோப மத மாற்சரியம் என்னும் ஆறு உட்பகைகளின் நீக்கமாகும். ஏழாம் விழா தேவர் மனிதர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புக்களின் நீக்கமாகும். எட்டாம் விழா தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குண விளக்கமாம்.



ஒன்பதாம் விழா மூன்றுருவும், முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இல்லையென்பதன் சூசனமாம். பத்தாம் விழா பரமானந்தத்தில் அழுந்துதற் பொருட்டாம். இவற்றின் விரிவு இன்னும் விம்பதந்திரத்திற் காணலாகும்.

இத்தகைய நுண்பொருள்கள் நன்கமைந்த மகோற்சவம் ஆலயத்துட் சென்று வழிபடுபவருக்காக மாத்திரமமைந்ததன்று. சிவதீக்ஷைபெறுதவர் சிவதீக்ஷைக்கருகராகாதவர் முதலிய பலரும் எம்பெருமானைத் தரிசித்துத் துன்பம் நீங்கி இஷ்டசித்திகளைப் பெற்றுய்தற் பொருட்டே அமைந்தது. ஆகவே நைமித்திகங்கள் யாவும் விதிப்படி ஆலயங்களிலே செய்யப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவாலயங்கள் பலவற்றில் நடைபெறும் மகோற்சவங்கள் பெரும்பாலும் ஊரவர்களாலேயே செய்யப்படுவன. அவர்களும் நல்ல நோக்கத்துடன் விழாக்களைச் செய்யத் தொடங்குகின்றனர். ஆயினும் சிற்சிலர் போலிப் புகழைப் பெறவேண்டுமென்னும் ஆசையால் உந்தப்பட்டுத் தமக்கும் ஆலயசேவையிற் பங்குபற்றும் ஏனையோருக்கும் அதி பாதகத்தைத் தேடிவிடுகின்றனர். அந்தோ! இவர்களது மதியீனம் இருந்தபடியென்னே! பகலிற் செய்யவேண்டிய விழாவை இரவில் தீபமேற்றியபின்பும், மற்றையதைச் சூரியோதயத்தின் பின்பும் கூட நடக்குமாறு தூண்டி நிற்கின்றார்களே. இது மட்டுமா? விழாச்செய்தலின் ஒருபாகமாகிய கேளிக்கைகளில் பெருந்தொகைப் பொருளைச் செலவிட்டும் முக்கிய அம்சமாகிய அபிஷேகம் நிவேதனம் முதலானவற்றை அலட்சியம் செய்தும் விடுகின்றனர். இவர்கள் ‘‘குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசியவரோ யாவர்’’. நிற்க. இன்னுமொருசாரார் தங்கள் மூதாதையர் வழக்கமென்றும், குறித்த சிலகோவில்களின் பூர்வீக ஆசரணை யென்றும் சொல்லிக்கொண்டு உற்சவத்தின் இறுதி

நாளில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை, அந்தோ! பதைக்கப் பதைக்க வதைக்கின்றனர். இவ்விஷயத்தில் கோவிலதிகாரிகளும் பொருள்வருவாய் கருதி வாளாவிருக்கின்றனர். அறிவொழுக்கங்களால் மேம்பட்ட பெருமக்கள்முனைந்து திருத்த முற்பட்டாலன்றிப் பாமரர் இப்பாதகச் செயலை விட்டொழியார். திருவிழாக்களை நியமமாகச் செய்தவர் செய்வித்தவர் உதவிபுரிந்தவர் ஆகிய யாவரும் பரகதி யடைவர் என்பது வேதசிவாகம நூற்றுணிபு. நித்தியநைமித்திகங்களை உரிய காலத்தில் உரிய முறைப்படி செய்தற்கு இடையூறு செய்தவர்களும் செய்வித்தவர்களும் செய்தற்குத் தாம் மறைந்து நின்று பிறரை ஏவிவிட்டவர்களும் ஆகிய எல்லோரும் பாதகர்களேயாவர். இவர்கள் தங்கள் செல்வங்களைச் சிறிது காலத்துள் இழந்து பெருநோய்களால் வருந்தியபின் பூமியிலே பிறந்து சோற்றுவியற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்று ஏற்றாலும் பிச்சைகிடையாமலேக்குற்றிருப்பர்.

ஆதலின், "அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும்" என்னும் பழமொழியை நினைந்து, தெய்வகாரியங்கட்கிடையூறு செய்து துன்பமனுபவித்தலைவிட்டு, யாவரும் இயன்ற தொண்டுசெய்து நித்திய இன்பத்தைப் பெற்று வாழ்வார்களாக.

"இந்து சாதனம்"

# முத்தி நிலை

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
திரு. சோமசுந்தர தேசிகர்]

சைவசமயம் தொகையில் பொதுவாக ஒன்றேயாயினும் வகையில் பதினாறு வகைப்படுமென்பர் பெரியோர். அவையாவன : ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம்,



குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலுபாதசைவம், சுத்தசைவம் என்பனவாம். இவற்றுள் சுத்தசைவமாவது பதி பசு பாசங்கள் நித்தியமென்றறிந்து பதிநிச்சயம் பிறந்து மௌனமே பொருளாய் நிட்டைகூடிச் சிவத்துடன் ஒன்றுபடுவதென்பர். இதுவே சித்தாந்த சைவமுமாம். 'சுத்தசைவம் நுட்பப் பொருள் உணராமைமாத்திரையேபற்றி வேறு வைக்கப்பட்டதன்றிக் கருத்துவகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவஞ் சித்தாந்த சைவத்துள் அடங்குமென் றுணர்க' என்பர் சிவஞான முனிவர் தமது பாடியத்தில்.

இனி, சித்தாந்த சைவமும் பலதிறப்படும். அவற்றுள் ஆன்மானந்தவாதமென்பதும் ஒன்று. ஆன்மானந்தவாதமாவது ஆன்மாவிற்கு இயற்கையாக ஆனந்தம் உண்டென்றும், அது மலத்தாற் றடைப்பட்டதென்றும், அம்மலம் நீங்க அவ்வானந்தம் வெளிப்பட்டுத் தோன்ற அதனை ஆன்மா அனுபவிக்கும் என்றும் கூறும் மதம். இவ்வான்மானந்தவாதத்தைக் கற்பித்தவர் மன்றுணின்றாடும் எமது பரம கருணாநிதியாகிய நடராசப் பெருமான் கோயில்கொண்டுள்ள பொன்னம்பலத்திலே கண்கட்டி மடத்திலே வாழ்ந்திருந்த மறைஞான சம்பந்தராவார். இவரே இவ்வாதத் தலைவரென்பது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் தாபகரான ஞானசம்பந்தர் செய்தருளிய முத்திநிச்சயம் என்ற நூலின் பாயிரத்தால் விளங்கும். அதனுள் 'கண்கட்டி மறைஞானபண்டாரமே ஆன்மானந்த நெறியைப் படைத்திட்டு மேற்கொண்டு ஒழுகினோராகலான் அவரோடு வாதஞ்செய்து வென்று அவருட்கோளை மறுத்து, இந்நூல் (முத்திநிச்சயம்) செய்யப்பட்டது' என்பதனால் தெளிவாகும். இவ்வான்மானந்தவாதநெறியைக் குறித்து மறைஞான சம்பந்தர்

இயற்றிய நூல் முத்திநிலை எனப்படும். அது கீழே தரப்படுகிறது. மற்றும் மறைஞான சம்பந்தருடைய சரித்திரம் விரிவாகச் சித்தாந்தம் மலர் ௪-ல் கொடுக்கப்பட்டுளது. ஆண்டுக் காண்க.

## முத்திநிலை

சிவசத்தியைத் திளைப்பர் சீவன்முத்த ரென்னும்
அவசத்த மாபா தகமென்—சிவசத்தி
தன்னைக்கண் டாங்கருளாற் சச்சிதா நந்தமெனு
மன்னைத் திளைத்துவாழ் வார். ௧

சிவசத்தியைத் திளைப்பர் சீவன்முத்த ரென்னும்
அவசத்த மாபா தகமென்—சிவசத்தி
சேரத் தருவல்ல சிற்பரா னந்தவெள்ள
மாரத் தெவிட்டா தது. ௨

சிவசத்தியைத் திளைப்பர் சீவன்முத்த ரென்னும்
அவசத்த மாபா தகமென்—சிவசத்தி
தன்னைப் புணரவென்றாய் சாற்றுவமை யேதுவமை
யன்னைமுலைப் பாலென் றறி. ௩

அகம்பிரம மென்றா யடாகெடுவாய் கேணீ
சுகம்பிரமம் பாசமுதல் சொல்லில்—இகபரமும்
நீயே சிவமல்ல நீகருட னாகையினால்
நீயோ சிவோகமென நில். ௪

ஈசன்றன் னதுசத்தி யின்பருந்து மீசனா
லாசறத்தன் சத்தியின் பான்மாவும்—நேச
முடனருந்து முத்திநிலை யோராது பாசம்
விடவுடலம் போய்ச்சிவமா மே. ௫

சிற்றின்பம் பேரின்பம் சீவகுண மென்றனைநீ
யுற்றங் கிரண்டு முணர்ந்திலையோ—சிற்றின்ப
காடிற் கருமபலம் காதனுருப் பேரின்ப
நீயும் படிகம்போ னீ. ௬



நின்மலத்தை நீக்கி நினதுருவைத் தானாக்கு
நின்மலமா மானந்த நீயென்றாய்—நின்மலமாம்
தன்வடிவாய் நிற்பதுவோ சந்தத முத்தியிலே
யுன்வடிவாய் நிற்பதுவோ வோது. ௭

பெறுவானும் பேறுநாம் பெம்மா னுற்றாண்டே
லறிவாயோ வானந்த மன்றி—யறிவேனென்
றானந்தங் காட்டி யகத்திருப்ப னென்னிலனு
மானமனு பவமொவ் வா. ௮

வேதாகமத்தின் விதித்தமுத்தி தானன்றி
நீதானே யின்பமென்ற னிட்டோம்—பேதாய்
பெறுவாய்நீ யானந்தம் பேறென் றுரைத்த
தறுவாய் மலந்தனைநீ யாம். ௯

தானின்றி நிற்கவெழுஞ் சச்சிதா னந்தனைநீ
யானென் குணமென்னிடும் பென்னே—ஊனநீ
ஞானகுணம் பெற்று நாடோறும் நானென்னு
மீனகுணம் போச்சுதில்லை யே. ௧0

ஆசகற்றி யுன்னறிவி லானந்த மாஞ்சிவனைக்
கூசகற்றி நீயென் குணமென்று—பேசியிடும்
பேயாவா திக்கேது பேசியிடின் முன்னுரைத்த
மாயாவா திக்கொப்ப வன். ௧௧

அந்நிலைபோ லானந்த மான்மாவுக் குண்டாகி
லெண்ணில் பிறப்பிறப்பை யெய்துமோ—தண்ணருளை
யோட்டாதோ வாதவனுக் கொத்தவொளி யுண்டாகிற்
கேட்டாயோ கேட்டிலையேற் கேள். ௧௨

உன்னுருவைக் கண்டிருப்பதோகெட்டேன்முத்திசிவன்
தன்னுருவைக் கண்டிருக்கத் தக்கதோ—முன்னறிஞ

ரோதுஞ் சிவன்றேற்ற மொன்றுமே காண்பரெனும்
போதமறந் தனையிப்போது. ௧௩

என்றும் பிரியா திருவருளா னீங்கியின்பாய்த்
துன்றுசிவ போகமதைச் சொல்லாமல்—உன்றன்
நலம்போக மென்றுரைத்தாய் நாமறிந்தோ நீயு
மலம்போக முத்தியென்ப வன். ௧௪

ஈசனையே காண வெனைத்தவமுன் செய்ததெல்லாம்
மோசமாய் வந்து முடிந்ததோ—பாச
வினையகன்ற போது விமலனை யுன்றாள்
தனையறிய மூடர்க்குத் தான். ௧௫

இன்பமுயிர்க் குண்டென்ற தேதோ வுபநிடதத்
துன்பில் பிரமகீதை சொன்னதேல்—இன்பஞ்சீ
வான்மாவுக் குண்டென் றறிந்ததல வான்மாவு
மான்மாவுக் குண்டென்ற தாம். ௧௬

தோன்றுபர மானந்தச் சோதியன்றி யுன்னறிவிற்
றோன்றுசுக முண்டென்றாய் சுத்தப்பொய்-தோன்றுமின்பம்
ஈச னுயிரறிவ தீதன்றி வேறுண்டோ
பாசமிலா நீயறிந்து பார். ௧௭

ஓரின்ப மில்லா தொருமலங்கள் போக்கியிடும்
பேரின்பம் நின்குணமென் பேதாய்கேள்—பேரின்பம்
நின்குணம்போற் றோன்றுமது நீயாகை யாவிரும்பின்
தன்குணமோ வக்கினிதான் சாற்று. ௧௮

ஆகங் கரணமறி யாமே சுகதுக்க
போக மிவையணைந்த போதெல்லாம்—ஏகமாய்
தானவையாம் பான்மைபோல் தற்பரா னந்தநீ
தானதுவாய் நிற்குந் தரம். ௧௯

முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்
சத்தியமெய்ஞ் ஞானசம்பந் தன்.

# தமிழர் மதவளர்ச்சி

[அ. மு. பரமசிவானந்தம்]

(சென்ற மலர்த் தொடர்ச்சி)

**வடி**ம்பலம்ப நின்ற பாண்டிய அரசன் சமுத்திர அரசனைக் குறித்துச் செய்த கொண்டாட்டமும் நோக்கற்பாற்று. *கடல் அலைகளால் தடவப்பட்ட பாதத்தை உடையவனாதலால் அவன் அப்பெயர் பெற்றான். (வடிம்பு - கடல் எல்லையாகிய அலை). அவன் வழித் தோன்றலாகிய ஒரு பாண்டியன் அவ் வருணவிழாவை நிறுத்தினது மாத்திரமன்றி அவனுடன் யுத்தம் செய்யவும் எத்தனித்தான். அந்த எண்ணத்தாற் சினங் கொண்ட வருணனது சீற்றத்தாலேயே பஃறுளி நதியையும், அநேக மலைகளையும், பாண்டியரது பல உயர்ந்த பாகங்களையும் கடல் கொண்டது. ஆனால் அதற்குச் சளையாத அவ்வீரபாண்டியன் வடக்கே சென்று இழந்த நாடுகளுக்குப் பதிலாக அநேக நாடுகளைக் கைக்கொண்டான். இந்திரன் முதலிய தேவர் (Demi Gods)களைப் பாண்டியன் மாகீர்த்தி என்பான் ஒடுக்கினது மாத்திரமன்றி அவர்களைச் சச்சரவு செய்யும் குழந்தைகள்போலப் பார்த்து வந்தான். ஒருகாலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் பெரிய யுத்தம் ஆரம்பிக்குந் தருணத்தே இம்மாகீர்த்தி அவர்கள் இடையிற் புகுந்து இருவரையும் சமாதானத்தைக் கைக்கொள்ளக்

* "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"
—புறம் - 9-ம் பாடல்—(9 - 11)

கூறினான். *தவிர, ஒருவர் சமாதானத்தை நீத்து, சச்சரவை ஆரம்பிப்பாராயின், தான் அவர்கள் எதிரிகளுடன் சேர்ந்து அவர்களை நாசஞ் செய்வதாகவும் நவின்றான். இரு கூட்டத்தினரும் அவ்வரச அவையிலிருந்து நடுக்க முற்றவர்களாய்த் தத்தம் நாட்டை நாடினர். இந்தக் கர்ணபரம்பரையான கதைகள் யாவும் பழைய தமிழ் வீரர்களது இதயங்களி லெய்திய உயர்ந்த நோக்கங்களையும், உருவங்களையும், கொள்கைகளையும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

†பன்னிரு ஆதித்தர்களையும், அஷ்டவசுக்களையும், பதினொரு உருத்திரர்களையும், இரண்டு அஸ்வினி தேவர்களையும் வேதமுறைப்படி கடவுளாகவைத்துப் பூசைசெய்ததைப் ப பாடல் என்னும் பழைய சங்கநூல் அறிவிக்கின்றது. இ தேவதைகளுக்கு அன்று செய்த பூசையானது இன்றும் ந மத்தியில் நிலவி வருகின்றது. சில அரசர்கள் பரலோகத்தை அடைவதைக் காட்டிலும் ஈண்டே உயர்ந்த வெற்றி பெற் புகழ்அடைவதற்குச் சாதனமாகிய வேதமுறை விதித்த ப

* "அல்லதூஉந் தேவரும் அசுரரும் பொருத காலத்துத் தே ரையும் அசுரரையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யா எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்ததுபோல் இருவரி மிகை செய்தீரை ஒறுப்பலென்று சந்து செய்வித்தலு மொன்று."

—இறை, அகப்பொருள், 9-ம் சூ. உ

† "விதியின் மக்களும்
ஆசில் எண்மரும் பதினொரு கபிலரும்
தாமா மிருவரும்" —பரிபாடல், III, (6 -

"உலகிரு ளகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துரை யிருவருந் திருந்துநூ லெண்மரும்
ஆதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரும் நற்றிசை காப்போரும்"

—பரிபாடல், VIII, (4 -



யாகங்களைச் செய்வதற்கு உடன்பட்டனர். பஃறுளி கடல் கொள்ளப்பட்டதற்கு முன்பு அரசாண்ட முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் பல் யாகசாலை* யென்னும் பண்பை விளக்கும் ஒரு பெயரைப் பெற்றிருந்தான். (பல் யாகசாலை என்பதற்கு அநேக யாகசாலைகளை உடையவன் என்பது பொருள்). இவனைத் தவிர இராஜசூய யாகம் செய்து சிறப்புற்ற இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னும் சோழனும் இருந்தான். வடநாட்டிலும் பல அரசர்கள் அநேக யாகங்களைச் செய்தார்கள் என அறிகின்றோம். எனவே ஆதிஆரியர்களுடைய எண்ணங்களும், கொள்கைகளும் தம் வேத ஆசாரங்களுடன் தமிழகத்திற் புகுந்தன என்று தெரிகின்றது.

தொல்காப்பியம், பரிபாடல் என்னும் இரு சங்கநூல்களும் பழைய தமிழர்களுடைய உலக சம்பந்தமான தியான முறையினையும், அவர்களுடைய இருப்பிடங்களையும், மானுட வர்க்கத்தில் நெருங்கிய விதிகளையும் விளக்கிக் கூறுகின்றன. அக்காலத்திருந்தே சாங்கிய தத்துவம் தாழ்த்தப்பட்டு வந்தது. எனினும் புத்த சைன மதங்களின் நுழைவு வுண்டாகும் வரையில் தமிழகத்தே தத்துவம் சிறந்ததாகப் போற்றப்படவில்லை என்று தெரிகின்றது. இந்த இரண்டு மதங்களை உண்டாக்கிய பெரியோர் காலத்திற்கு ஒன்றிரண்டு நூற்றாண்டுகட்குப் பிறகே அம்மதங்கள் ஈண்டு நுழைந்ததாகத் தெரிகின்றது. ஏறக்குறைய அச்சமயத்தே இத்தமிழகத்தில் ஓர் ஒளிநிறைந்த சந்திரன்தோன்றி இன்றளவும்

* "புரையி
னற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலியாவுதி பொங்கப்பன்மாண்
வீயாச்சிறப்பின் வேள்விமுற்றி
யூபநட்ட வியன்களம் பலகொல்" —புறம் - 15. (16 - 21).

அதன் ஒளியை விட்டுக்கொண்டு இருக்கின்றது. அதுவே திருக்குறள் எனப்படும். உலகம் யாவும் ஒன்றாகப் போற்றி அறியும்படியான உயர்ந்த பெயரை யுடையவரும் அவருடைய போதனைகளை உலகிலுள்ளார் தத்தம் மொழிகளில் மாற்றிப் போற்றிவருதற்குத் தகுந்த நூல் செய்தவருமாகிய திருவள்ளுவர் அறிவுசம்பந்தமான முயற்சிகள் நடக்கும் காலத்தில் இருந்தார். புத்த சைனமதக்குரவர்கள் போதித்த சிறந்த நோக்கம் பொதிந்த சொற்கள், வைதீக தர்மத்தை ஆராயவும் அதன்கர்ண பரம்பரையான போதனைகளெல்லாந்திருந்தவும், வேதத்தில் கூறியவைகளை மறுத்தார்க்கு அம்மறுப்பு நீக்கி வேதத்தை ஏற்றுக்கொள்ளச் செய்யவும், பண்டைத் தர்மங்களை நிலை நிறுத்துவதற்காகவும் ஏற்றதாக அமைக்கப்பட்டன. உலகபோதகர் இயற்றிய திருக்குறள் இக்கொள்கைகளுக்கு ஏற்றதாக அமைந்தது என்பதை ஒருபோக்காக் கூறமுடியும்.

ஆதியில் புத்தஜைனமதங்கள் இங்கு புகுந்தபோது அவைகள் வெறும் எண்ணங்களாகவே இருந்ததால் தாராளமாய் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. வீரஞ்செறிந்த தமிழனுக்கு அந்தச் சந்நியாசிகளுடைய நடத்தைகளும், தியாகசிந்தையும் உள்ளக்கிளர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கும். உலகில் பல விதமான கணக்கற்ற யுத்தங்கள் புரியும் ஒரு வீரனுக்கு அச்சந்நியாசிகளுடைய உபதேசம் சாந்தமான சலனமற்ற உயர்நிலையை அருளி இருக்கும் என்பது திண்ணம். கோவலன், கண்ணகி முதலியவர்களுடைய பெற்றோர்களைப் போன்று அளவில்லாத் துன்பத்தை அடைந்தவர்களும் தங்கள் முடிவு நாட்களைப்போக்க அத்தகைய சந்நியாசிகளை அடைந்தனர். இளங்கோ முதலிய உயர்ந்த அரசர் குலத்துதித்தவர்களும் உயர்ந்த சாக்யவம்சத்தை அடுத்து வந்தனர் என்பனதத் தெரிவிக்க எளியவாழ்வு வாழ்ந்து



வந்தனர். புத்த ஜைனர்களோடு நியாய வைசேஷிக தத்துவர்கள் தமிழ் நாட்டிற் புகுந்தனர். அந்தப் பழைய காலத்தே மீமாஞ்சை என்பது பூர்வம், உத்தரம் என இரு பகுப்பாகப் பகுக்கப்படவில்லை. மணிமேகலை காலத்தில் லோகாயதம், புத்தம், சாங்கியம், நியாயம் வைசேஷிகம், மீமாம்சை முதலிய ஆறும் ஆறு தத்துவங்களாகஎண்ணப்பட்டன. அநேக தமிழ் அறிவு மிக்க புத்த சந்யாசிகள் சைனா, திபேத்து, ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்று தமது தன்மத்தைப் பரப்பினர். அறவண அடிகள் என்ற உயரிய புத்த ஆசிரியரைப்பற்றி மணிமேகலை பலபடப்புகழ்ந்துள்ளது. தர்மசொரூபன் என்று அப்பெயர் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம். பிச்சுணி மணிமேகலையாகிய கதாநாயகியைப் போலவே இவ்வாசிரியரும் அக்கதைக்கு அவசியமானவராகக் காணப்படுகின்றனர். வரவர, புத்த ஜைன மதங்கள் வெறும் எண்ணங்களாக வரவேற்கப்பட்ட தன்மையினின்றும் மாறி இத்தமிழகத்தே அரசர்களும், அடிகளும் துணை நிற்க உயர்ந்த சமயங்களாக நிலைத்து விட்டன. அம்மதாசாரியர்கள் தமிழகமுழுவதையும் தம்மதங்களின் கீழ் அடிப்படுத்தக் கருதி பல அரசர்களையும் சீடர்களையும் துணையாகக் கொண்டு முயன்று வந்தார்கள்.

புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கடலால் கொள்ளப்பட்டபொழுது சோழருடைய தலைநகர் உறையூருக்கு மாற்றப்பட்டது. மதுரையானது பன்னீராண்டு கொடிய பஞ்சத்தால் வருந்தியது. சங்கப்புலவர்களெல்லாம் அவ்விடத்தைவிட்டுப் பிரியலாயினர். பிறகு அவர்களது பழம்பெருஞ் செய்கைகளெல்லாம் நினைவுமாத்திரையில் நின்றன. தமிழர்களது செல்வத்தைக் கண்ட பிற நாட்டு அரச வம்சத்தினர் பொறாமை கொண்டு தென்னாட்டிற் பிரவேசித்தனர். சிலப்பதிகாரத்

இல் சொல்லிய பாண்டியன் நெடுஞ் செழியன் காலத்தில் ஓர்
ஆரியனுடைய பெரிய சேனையானது தமிழகத்தே படை
யெடுத்தது. ஆனால் அச்சேனை இப்பாண்டியனால் தோற்றோ
டவே இப்பாண்டியனும் ஆரியப் படை கடைந்த நெடுஞ்
செழியன் எனப் பெயர் பெற்றான். அக்காலத்திருந்த சேர
நாட்டு அரசனும், இளங்கோவடிகளது மூத்தோனுமாய
சேரன் செங்குட்டுவன் என்பான் உயர்ந்த சைவனாயிருந்
தான் என்பதும், *சிவனார் அருளால் தோன்றினான் என்ப
தும் சிலப்பதிகாரத்தால் தெளிவுறும். இவர்களுக்குச் சில
ஆண்டுகள் முன்னிருந்த கரிகாலன் சைவனாயிருந்து காஞ்சி
காமகோட்டத் திருப்பணி முதலியனவுஞ் செய்தான் என்ப
தும் வெளிப்படை.† அக்காமகோட்டத்தே காவல் இருந்த
சாத்தனார் அளித்த செண்டாலேயே இவன் இமயத்தை
அடித்தான். எனவே, பல்வேறு மதங்களுக்கிடையே அர
சர்கள் சைவத்தைச் சார்ந்து அதை வளர்த்தனர். கூடிய
சீக்கிரத்தில் ஆரியர்கள் தமிழகத்தைக் கைக்கொள்ள ஆரம்
பித்தனர். அடுத்த நூற்றாண்டில் (கி. பி. 3 அல்லது 4)
காஞ்சியில் பல்லவர் ஆண்டது கண்கூடாகக் காண்கின்றது.
சேர, சோழ, பாண்டிய அரசர்கள் கொஞ்சகாலம் வரையும்
துன்பத்தை அடைந்தனர். தமிழக முழுவதும் ஒரு மாறு
தல் காலம் ஏற்பட்டது. வடநாட்டரசர்கள் இந்நாட்டிற்
புகுந்து தத்தம் கொள்கைகளை நிறைவேற்றிக் கொண்டார்
கள். பாண்டியர், சோழர் என்னும் பெயர்களே வடமொழிப்
பெயர்களாக மாறிவிட்டன.

(தொடரும்)

* "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ"

—சிலப். கால்கோட்காதை—98, 99.

† "கச்சிவளைக் கச்சி காமகோட்டங் காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"

—சிலப்பதிகாரம், உரை மேற்கோள்

# தில்லைச்சிற்றம்பலப் பெருமான் திருக்கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள
# வெண்பாக்கள்*

[வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

எல்லை கடலால் இகல்வேந்த ரைக்கவர்ந்த
செல்வமெலாம் தில்லைச்சிற் றம்பலத்துத்—தொல்லைத்
திருக்கொடுங்கை பொன்வேய்ந்தான் திண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் தான். 1

தில்லையிற்பொன் னம்பலத்தைச் செம்பொனால் வேய்ந்துவா
னெல்லையைப்பொன் னாக்கினா னென்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்
கொடைவேந்தன் தொண்டையார் கோன். 2

தென்வேந்தன் கூன்நிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ்வேய்ந்தான்—என்னோர்க்கும்
குற்றம் பலகண்டோன் கோலிழைக்கு வெல்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று. 3

பொன்னம் பலக்கூத்த ராடு மிடம்மணவில்
பொன்னம் பலக்கூத்தன் பொன்வேய்ந்தார்—தென்னர்
மலைமன்னர் ஏனை வடமன்னர் மற்றைக்
குலமன்னர் செல்வமெலாம் கொண்டு. 4

ஏனை வடவரசர் இட்டிடைந்த செம்பொனால்
னனெலன† தில்லை நாயகற்கு—ஆனை
சொரிகலமா மாமயிலைத் தொண்டையர்கோன் கூத்தன்
பரிகலமாச் செய்தமைத்தான் பார்த்து. 5

*Taken from the South Indian Inscriptions Volume IV page 33.

†(என்+அல்+என) எனப் பிரித்து, இருட்டு எற்றுக்கு இருக்கிறதென்று அதனை நீக்க, என்று பொருள் கொள்ளலாம்.

இட்டான் எழில்தில்லை எம்மாற் கிசைவிளங்க
மட்டார் பொழின்மணவில் வாழ்கூத்தன்—ஒட்டாரை
இன்ப மறவினைத்தா னேற்றினால் நீண்டொளிசேர்
*செம்பொற் றனிக்காளஞ் செய்து.

ஆடுந் தனித்தேனுக் கம்பலத்தே கற்பூரம்
நீடுந் திருவிளக்கு நீடமைத்தான்—கூடா
ரடிக்கத் தினைநரியும் புள்ளும் அருந்தித்
தடிக்கப் பொருங்கூத்தன் தான்.

பொன்னம் பலஞ்சூழப் பொன்னின் திருவிளக்கால்
மன்னு திருச்சுற்று வந்தமைத்தான்—தென்னவர்தம்
பூவேறு வார்குழலா ரோடும் பொருள்பெறுவான்
மாவேறு தொண்டையார் மன்.

ஆடுந் தெளிதேனை ஆயிர நாழிநெய்யால்
ஆடும் படிகண்டான் அன்றினர்கள்—ஓடுந்
திறங்கண்ட நாளன் சினக்களிற்றான் ஞாலம்
அறங்கண்ட தொண்டையர்கோன் ஆங்கு.

நட்டப் பெருமானார் ஞானங் குழைந்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம்—முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்தெவ் வேந்தர்கெட
வாட்போர்கொள் தொண்டையர்கோன் மன். 10

மல்லக் குலவரையால் நூற்றுக்கால் மண்டபத்தே
தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான்—கொல்ல
மழிவுகண்டான் சேரன் அளப்பரிய ஆற்றற்
கிழிவுகண்டான் தொண்டையர்கோ னேறு. 11

தில்லைப் பெரிய திருச்சுற்று மாளிகை
எல்லைக் குறைவரைபோ லீண்டமைத்தான்—தொல்லைநீர்
மண்மகளைத் தன்கோன் மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகிழும் தொண்டையர்கோ னுற்று. 12

---

*இவ்வீற்றடி மெல்லின வெதுகை.



புட்காணி கல்சாத்து வித்தான்பொற் கோயில்வாய்
விக்கரணம் பார்படந்தன் மேல்விதித்துத்—திக்களவும்
மாகடத்திக் கோல்நடத்தும் வாட்கூத்தன் மண்ணிலறம்
தானடத்தி நீடுவித்தான் தான். 13

வீதிசூழ் நல்விளக்கும் வீற்றிருக்க மண்டபமும்
மாதுசூழ் பாகம் மகிழ்ந்தோர்க்குப்—போதுசூழ்
தில்லைக்கே செய்தான் திசைக்களிறு போய்நிற்கும்
எல்லைக்கே செல்கலிங்க ரேறு. 14

நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச்செந் தேனின்
இடங்கவின்கொள் பச்சைஇளந் தேனுக்—கடங்கார்
பருமா ளிகைமேற் பகடுதைத்த கூத்தன்
திருமா ளிகையமைத்தான் சென்று. 15

எவ்வுலகும் எவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியாள் கோயில் திருச்சுற்றைப்—பல்வஞ்சூழ்
எல்லைவட்டம் தங்கோற் கியல்விட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று. 16

வாளுடைய பொற்பொதுவின் மன்னி நடங்காணும்
ஆளுடைய பாவைக் கபிடேகம்—வேளுடைய
பொற்பினான் பொன்னம் பலக்கூத்தன்—பொங்குசட
வெற்பினான் சாத்தினான் வேறு. 17

சேதாம்பல் வாய்மயிற் குத்தில்லைத் தேவிக்குப்
பீதாம் பரஞ்சமைத்தான் பேரொளிநீர்—மோதா
வலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன். 18

செல்வி திருந்தறங்க ளெண்ணான்குந் தில்லைக்கே
நல்லமகப் பாலெண்ணெய் நாள்தோறும்—செல்லத்தான்
கண்டா ளரும்பையர்கோன் கண்ணகன்நீர் ஞாலமெல்லாங்
கொண்டான்நம் தொண்டையர் கோன். 19

ஆதிசெம்பொன் னம்பலத்தி லம்மா னெழுந்தருளும்
வீதியும்பொன் வேய்ந்தனனால் மேல்விளக்கும்—சோதிக்

கொடியமைத்தான் பொன்னால் குறுகவலான்*ஒன்றும்
படியமைத்தான் தொண்டையர்கோன் பார்த்து. 20

நாயகர் வீதி எழுந்தருளும் நன்னாளால்
தூய அகருவெழு தூபத்தால்—போயொளிசேர்
வான்மறைக்கக் கண்டானிம் மண்மகளை வண்புகழால்
தான்மறைத்த கூத்தன் சமைத்து. 21

என்றும் பெறுதலால் ஏறு விழாப்புலியூர்
மன்றி நடனுக்கு மாமதத்தக்—குன்று
கொடுத்தான்இம் மண்ணிற் கொடுங்கலிவா ராமே
தடுத்தான்நம் தொண்டையர்கோன் றான். 22

முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி—இத்தலத்தின்
எல்லைக் கிரிவா யிசையெழுதி னான்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று. 23

தில்லை வளரும் தெளிதே னொளிதழைப்ப
நல்லதிரு நந்தா வனஞ்சமைத்தான்—வில்லதிர
கோட்டங்கொள் வாழ்வேந்தர் கொற்றக் களியானை
யீட்டங்கொள் காலிங்க ரேறு. 24

மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
மாசற்ற வற்றைப் பெருவழியும்—ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் திசையனைத்தும்
மன்புலியா ணைநடக்க வைத்து. 25

இது வெட்டுவித்தான் காலிங்கராயர் ஆண்ட அரசு. அறம் மறவற்க அறமல்லது துணையில்லை.

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:—இவ் வெண்பாக்களில் குறிப்பிடப்பெற்ற மணவில் கூத்தனை காலிங்கராயனைப்பற்றியவரலாறு அடுத்த இதழில் வெளிவரும்.

---

*வந்து எழுந்தருளுதற்கு வல்லவனாகிய இறைவன் வருதற்குப் பொருந்தும் படிக்கட்டு என்பது இதன்பொருள்.

# “ஞானபானு”

“ஆணவமலமே ஆன்மாவுக்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்ததென்பதற்குப் பசி முதலிய உவமைகள்.”

## முதலாவது பசி உவமை

“குழந்தைக்குப் பாலில் உண்டாகிய விருப்பம், தாய் கொடுத்தவிருப்பமோ, குழந்தைக்குள்ள விருப்பமோ எனின், தாய்கொடுத்த விருப்பமாயின், அவள்கொடுத்த நேரமெல்லாம் கொள்ளவேண்டும்; கொள்ளாதபடியால், அவள் கொடுத்த விருப்பமன்று; குழந்தைக்குள்ள விருப்பமாயின், எந்நேரமுங் குடிக்கவேண்டும். அவ்வாறு குடியாதபடியால், குழந்தைக்குள்ள விருப்பமுமன்று. இனிச்சித்தாந்தமெப்படியெனின் பசியே குழந்தைக்குப் பாலில் விருப்பத்தைக் கொடுத்தது; ஆயின் விருப்பத்தைக் கொடுத்த பசியும் குழந்தைக்குப் பாலை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது; விரும்பின குழந்தையும் பாலை யறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது; விரும்பப்பட்ட பாலும் குழந்தை வாயில்வந்து புகுத மாட்டாது. ஆகையால், இந்தச் செய்தியைத் தாயானவள் அறிந்து, இரக்கத்தினாலே பாலடையிலே பாலை விட்டுக் கொடுப்பாள். இங்ஙனம், குழந்தையைப் போலும் ஆன்மாவுக்குப் பசியைப்போலு மாணவம் பாலைப்போலுங் கன்மத் திலாசையை யெழுப்பத் தாயைப்போலும் பரமசிவன் பாலடையைப் போலும் சரீரத்தைக் கொடுத்தனுபவிக்கச் செய்வனெனவுணர்க.”

## இரண்டாவது வியாதி உவமை

பிணியாளனுக்கு மருந்தில் உண்டாகியவிருப்பம், வைத்தியன் கொடுத்த விருப்பமோ, பிணியாளனுக்குள்ள விருப்பமோ எனின், வைத்தியன்கொடுத்த விருப்பமாயின் மருந்துகொடுத்த நேரமெல்லாம் கொள்ளவேண்டும்; கொள்ளாதபடியால், அவன்கொடுத்த விருப்பமன்று; பிணியாளனுக்குள்ள விருப்பமாயின் எந்நேரமுங் கொள்ளவேண்டும்;

கொள்ளாதபடியால், பிணியாளனுக்குள்ள விருப்பமன்று. இனியுண்மை எவ்வாறெனின், பிணியே பிணியாளனுக்கு மருந்தில் விருப்பத்தைக் கொடுத்தது. ஆயின், விருப்பத்தைக் கொடுத்தபிணியும் அவனுக்கு மருந்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது; விரும்பப்பட்ட மருந்தும் அவன் வாயில் வந்து புகுதமாட்டாது; விரும்பின பிணியாளனு மருந்தை அறிந்தெடுத்துப் புசியான். ஆகையால், இதனை வைத்தியன் அறிந்து இரக்கத்தினாலே, மருந்தை யொரு பாத்திரத்திட்டுக் கொடுத்துக் கொள்ளச் செய்வன். இவ்வாறே பிணியாளனை யொத்த ஆன்மாவுக்குப் பிணியைப்போலு மாணவம், மருந்தைப்போன்ற கன்மத்தில் விருப்பத்தை யுண்டாக்க, வைத்தியனை யொத்த கருணாநிதியாகிய சிவபெருமான் தமது காருண்யத்தால், பாத்திரத்தைப் போலுஞ் சரீரத்தைக் கொடுத்தனுபவிக்கச் செய்வன் என அறிக.''

"இவ்வாணவமலம் ஆகந்துகமோ சகசமோ எனின், ஆகந்துகமாயின், இரசித வஞ்ஞானஞ் சுத்தி ஞானத்தை வாதிக்கமாட்டாதாற்போல ஆன்மஞானத்தை மறைக்கமாட்டாதாகையால் ஆகந்துகமன்று சகசமே''

''சகசமாயின், அக்கினிக்கு உஷ்ணம் போலவுஞ், சலத்திற்குத் தட்பம்போலவுங் குணமாய்க், குணமழியும் போது குணியுமழியுமேயென்னின், செம்பிற்குக் காளிதமுந் தண்டுலத்திற்குத் தவிடும் சகசமாயிருப்பினும் குணமாகா; இவை கெடும்போது செம்புந் தண்டுலமுங்கெடா; அவைபோல, இஃதுங் குணமாகா திது கெடும்போது ஆன்மாவு மழியாதெனவுணர்க.''

"இஃது வியாபகமாகியவுயிரை அணுத்தன்மைப்படுத்தி ஆணவமெனப் பெயர்பெறுவதுமன்றிப் பசுத்துவம், விருத்தி, மூர்ச்சை, மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதி, பாசம், அஞ்ஞானம், பந்தம், ஆவரணம், தமசு, சென்மபீசம், மூலமலம், மோகம், அசுத்தி எனப் பல பெயரும் பெறும்.''

---

# திருவாரூரர்

[திரு. P. தியாகராஜப் பிள்ளை, B.A., L.T.]

(உரிமை ஆக்கியோருக்கே)

## சுந்தரர் பிறந்த வூர்

சுந்தரர் பிறந்த வூர் நடுநாட்டிலுள்ள திருநாவலூர் என்பது *17-ம் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் வந்துள்ள "நமக்கூர்" என்னும் சொற்றொடரால் தெரிகிறது. சம்பந்தப் பெருமானைப் போலவே திருவாரூரரும் தாம் பிறந்த ஊரைப் பல பாடல்களில் சிறப்பிக்கின்றார். மேலே குறித்த பதிகத்தில் பாட்டுகள் தோறும் நந்திருநாவலூர் என்று தமக்கு, நாவலூரில் பிறந்ததனால் உண்டாகிய பெரியதொரு வுரிமையைக் காட்டுகின்றார்.

2. சம்பந்தப் பெருமான் எப்படி "காழியர் கோன்" என்று பல திருப்பாசுரங்களில் தம்மைக்கூறிக்கொண்டு, தாம் பிறந்த வூரை உலகம் அறியச்செய்தாரோ அப்படியே ஆரூரரும் 'நாவலர்கோன்' என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொண்டு நாவலூர்வாழ்ந்த மக்களையும் உலகத்தார் நன்றாய் அறியச்செய்தார். பிறந்தவிடத்தன்பு (Patriotism) என்பது தம்மூர் புகழைப் பரவச் செய்வதால் காட்டவேண்டுமல்லவா? இவர் நாவலூர் மக்களுக்குத் தலைவர் போன்றிருந்தவர் என்பதையும் பல பாடல்களிலிருந்து தெரியலாம். 3-வது பதிகத்தில் "தேரூர் நெடுவீதி நன்மாடமலி தென்னாவலர்கோன்" என்றும், 4-ல் மந்தம் முழவும் குழலும் இயம்பும் வளர் நாவலர்கோன் என்றும், 13-ல் "செய்யார் கமலமலர் நாவலூர் மன்னன் என்றும், 18-ல் "கூடலர் மன்னன் குலநாவலூர்க்கோன்" என்றும், 23, 83-ல் "நாவலர்கோன்" என்றும், 24, 39, 41, 42, 57-ல் "நலங்கிளர்வயல் நாவலர் வேந்தன்" என்றும், 64-ல் "நாடெலாம் புகழ் நாவலூராளி" என்றும் 82-ல் "நாவலர் கோமான்" என்றும், 84-ல் "ஒண்பொழில் நாவலர் கோன்" என்றும் தாம் நாவலூர் மக்களுக்குத் தலைவன் என்ற முறையை "கோன், மன்னன், ஊராளி, வேந்தன்,

*பதிகஎண் சமாஜ பதிப்பில் அடுக்கியமுறையில் எண்ண வேண்டும்.

கோமான் என்ற சொற்களால் தெரிவிக்கின்ருர். நாவலூரை யாண்ட நரசிங்க முனையரையர் ஆரூரரை மகன்மைகொண்ட காரணத்தாலும் ஆரூரர் நாவலர் மன்னர் என்று தம்மைக் கூறிக்கொண்டது பொருத்தமுடையதாகும். திருநாவலூர் சுந்தரர் தோற்றத்தால் "நாடெலாம் புகழ் நாவலூ ரா"னது 64-வது பாட்டிலிருந்து தெரிகிறது.

3. பின்னும் சில பாடல்களில் தம்மைநாவலலூரன் (85) என்றும் நாவலூரன் என்றும் குறிப்பிடுகின்ருர். 6-ல் விரி பொழிற்றிருநாவலூரன்" எனவும், 14-ல் "வளவயனுவலா ரூரேன்" எனவும், 19-ல் திருநாவலாரூரன் எனவும், 34-ல் " நறவம் பொழில் நாவலூரன்" எனவும் பாடி யிருக்கிருர். இன்னும் சில பாடல்களில் திருநாவலூரன் (33), மன்னு தொல்புகழ் நாவலூரன் (36), "வன்பனைய வளர்பொழில் சூழ்வயனுவலூர்க்கோன்" (38) "உரையினுர் மதயானை நாவ லாரூரன்" (40 62 67 69),"நாவலாரூரன் (53),குளிர்பொழிற் றிருநாவலாரூரன்" (61), மந்த முழவம் இயம்பும் வயல் நாவ லாரூரன் (73), "பொன்னலங்கல் நன்மாடப் பொதிலணி நாவலாரூரன்" (16) "நல்லார் அவர் பலர் வாழ்தரு வய னுவலலூரன்" (79) "வஞ்சியும் வளர் நாவலூரன்" (87), "நாதகீத வண்டோதுவார் பொழினுவலூரன்" (88), "குளிர் நாவலலூரன்" (97) என்றும் தாம் இன்ன ஊரைச் சேர்ந்த வர் என்று பலகாலும் சொல்லித் தாம் பிறந்தவிடத்து வைத் திருந்த மதிப்பையும் அன்பையும் காட்டுகின்ருர்.

4. ஆரூரர் மேற்கூறிய பாடல்களில் நாவலூரின் வளங்களையும் எடுத்து எடுத்துச் சொல்கிருர். தாமரை மலர் ந்த தண்வயல்களும், வலிய பனைகள் நிறைந்து வண்டு பாடும் பொழிலும் சூழ, தேரோடும் நெடுவீதிகளும் மாடங்களும் மலிந்து முழவும் குழலும் எங்கும் இயம்ப நல்லார்பலர் வாழ் தரும் ஊரென்று அதன்சிறப்பை மிக அழகாக விரித்துரைத் தார். தாம் பின்னுளில் திருவாரூரிலேயே வாழ்ந்து வந் தாலும், தாம்சிறுபோதில் பிறந்து வளர்ந்த ஊரைஎன்றும் மறவாமல் அதனைச் சிறப்பித்துப் பாடி உலகில் நாவலூரின் பெயரை நிலைக்கச் செய்தனர். இந்நாளில் இவ்வாறு செய் வாரும் உளரோ என்ற ஐயம் நமக்கு உண்டாகாமலில்லை.

# சமயச் செய்திகள்

[உதவிப் பத்திராசிரியர்]

## எல்லா ஹிந்துக்களுக்கும் உரிய கோயில்

எல்லாரும் சென்று வணங்குதற்குரிய ஒரு கோயில் காசியை அடுத்த டால்ட்டன்கஞ்ஜ் என்னுமிடத்தில் கட்டப் பட்டது. அதனைப் பண்டித மாளவியா அவர்கள் 24-4-36-ல் திறந்து வைத்தார்கள். வைதிகர்கள் பலர் போந்திருந்தனர்.

## சுயமரியாதை

மலையாளத்தில் சாங்கனசேரியில் நடைபெற்ற மகாநாட் டில் நிறைவேறிய தீர்மானம் வருமாறு:—"ஈழுவர்கள் ஹிந் துக்களாக இருக்கும்வரை சுயமரியாதையோடு வாழ முடி யாது; ஆகலின், அவர்களெல்லோரும் ஹிந்து மதத்தை விட்டு விலக வேண்டும்."

## தீயர் சீக்கியர் சமயஞ்சார்தல்

தீயர் இளைஞர் சங்கக் காரியதரிசி கே. வி. குட்டென் என்பவரும், தீய மஹாஜன சபை கிருவாகர் கன்னத் கேச வன் என்பவரும் இன்னுஞ் சிலரும் சீக்கியர் சமயத்தைத் தழுவ அமிர்த சரஸுக்குச்சென்ருர்கள். அவர்களை அழைத் துச் சென்றவர் சர்தார் கேதார்சிங்.

## பண்டிதர் ஹாங்கோ

இவர் நக்ஷத்திரங்களைக் கொண்டு எதிர்கால நிகழ்ச்சி களைக் குறிப்பதில் வல்லவராம்; உலகத்தில் யுத்தம் பூகம் பம் முதலிய நிகழும் காலத்தையும் இடத்தையுங் கூடக் குறிப்பிடுகின்ருராம். இவரை ஒரு பத்திரிகை நிருபர் கண்ட போது, 'நக்ஷத்திரங்களின் நிலை மக்கள் ஒவ்வொருவருடைய தனிவாழ்க்கையை மாத்திரமல்லாமல், ஒரு நாட்டிலுள்ள மக் கட் கூட்டத்தின் வாழ்க்கையையும் கட்டுப்படுத்துகிறது' என்று கூறியுள்ளார்.

## சமயங்களின் மகாநாடு

இம்மகாநாடு பம்பாயில் நடைபெற்றது. சர். இராதா கிருஷ்ணன் தலைமை வகித்தார். தலைவர் தம் முன்னுரையில்

"அடிப்படையான கொள்கைகளை நோக்க எல்லாச் சமயங்களும் ஒன்றே. அவைகளின் உருவத்தில்தான் வேற்றுமை. எல்லாச் சமயத்திற்கும் சகிப்புத் தன்மையே ஆதாரமாக இருக்கவேண்டும். உடலுக்குச் சுக வழி வேண்டப்படுவது போல் உயிருக்குச் சமயம்வேண்டும். கடவுள் ஒரு சமயத்திலேயே உண்மையை வைத்துவிடவில்லை. பல சமயங்களும் ஒரே கடவுளை யடையும் பல வழிகளாகும்."

## சங்கராச்சாரியரும் திருவருளும்

இதுகுறித்து டாக்டர் நாகராஜ சர்மா அவர்கள் கூறுவதாவது :—"தெய்வத் திருவருள் ஒன்றே ஒருவருடைய துன்பத்தை விலக்கி இன்ப அநுபூதி நிலையை அளிக்கும்" என்று சங்கரர் துணிந்து கூறுகிறார். கடவுளுக்குப் பக்தி செய்தற் பொருட்டும், கடவுள் திருவருளால் துன்பத்தினின்றும் நீங்கி நிலைத்த முழு இன்பத்தைப் பெறுதற் பொருட்டுமே சங்கரர் சமயத்தின் அவசியத்தை வற்புறுத்துகிறார். 'தத்துவ ஆராய்ச்சிக்குச் சமயம் விரோதமானது' என்னும் நியாயமற்ற கொள்கையைச் சங்கரர் ஒப்புக் கொள்ளவில்லை. சமயமும் தத்துவ ஆராய்ச்சியும் ஒன்றுக்கொன்று உதவியாகவே இருக்கின்றன.

## திருநெல்வேலிக் கோவிலும் குற்றாலம் பிள்ளையும்

பார்ப்பனர் மாத்திரமே சென்று வணங்கிக் கொண்டிருந்த கருப்பக் கிருகத்திற்கடுத்த அறையில் இப்போது பார்ப்பனரல்லாதாரும் சென்று வணங்குகிறார்கள். தருமகர்த்தர், பார்ப்பனரல்லாதாரை எப்போதும் அவ்வறைக்குட் புக விடுதல் கூடாதென திரு. ஏ. எஸ். குற்றாலம் பிள்ளை ஒரு வழக்குத் தொடுத்தார். அது கீழ்க் கோர்ட்டிலும் பிறகு ஜில்லா கோர்ட்டிலும் தள்ளப்பட்டது. நீதிபதி, 'ஒருவர் தான் சென்று வழிபடும் உரிமைக்கு இடையூறு ஏற்படாமலிருக்கும்போது, ஒரு மாறுதல் தன்னுடைய சொந்த சமய உணர்ச்சிக்கு விரோதமாக இருக்கிறதென்றும், அம்மாறுதல் என்றும் ஏற்படாமலிருக்க வேண்டுமென்றும் ஒருவர் வழக்கிட உரிமை யிருப்பதாக எத்தீர்மானமும் எடுத்துக் காட்டப்படவில்லை. தன்னுடைய உரிமைகட்கு இடையூறுண்டானால் தான் ஒருவர் வழக்குத் தொடுக்கலாம்' என்று கூறினார்.



## சமயங்களின் கூட்டம்

சென்னைக் கிறிஸ்தவ இளைஞர் கல்விக்கழக (Y. M. C. A. Athenaeum) ஆண்டு விழாவில் சமயங்களின் கூட்டமொன்று கூடியது. இருபத்தைந்து சமயங்களின் பிரதிநிதிகள் இருந்தனர். இக்கூட்டத்தின் நோக்கம் உலகத்திலுள்ள எவர்க்கும் உரிய ஒரு பொதுப் பிரார்த்தனைப் புத்தகம் உண்டுபண்ண வேண்டுமென்பது. மத்தியஸ்தராக விருந்த திரு. எஸ். எஸ். இராஜகோபாலன் ஒரு பொதுப் பிரார்த்தனையை எல்லோருடைய அங்கீகாரத்தின் பொருட்டுப் படித்துக்காட்டி, மிகுதியான கிரியைகளினின்றும் சமயத்தைப் பிரிக்கவே தற்கால உலகம் விரும்புகிறதென்றும், உண்மைச் சமயம் எல்லா மக்களுக்கும் உரியதாக இருக்க வேண்டுமென்றும் கூறினார். தலைமை வகித்த கனம் ஜென்டில் அவர்கள், 'இக்கூட்டத்தின் நோக்கம் நிறைவேறுமாயின் உலக இன்பம் உண்மையிற் பெருகும். ஆனால் அதற்குள்ள இடையூறுகள் யாவரும் அறிந்தவை. உலகத்தில் ஒரே ஒரு சமயம் இருக்க வேண்டுமானால் அதற்கு ஓர் அடிப்படையான கொள்கை இருத்தல்வேண்டும். தங்களை மற்றவர்கள் எவ்வாறு நடத்த விரும்புகிறார்களோ அவ்வாறே உலகத்திலுள்ள மக்கள் எல்லோரையும் தாங்கள் நடத்தவேண்டுமென்பதே அக்கொள்கையாம்' என்று கூறினார்.

## சோதிடம்

பாலக்காட்டு வக்கீல் திரு. அகோரம் ஐயர் 21-4-36-ல் டெல்லியில் 'மனிதனுடைய எதிர் காலவரலாறு' என்னும் பொருள் குறித்துப் பேசினார். அவர் கூறிய சில குறிப்புக்கள் வருமாறு:—

ஒரு நாட்டின் வரலாறு அந்நாட்டுத் தலைவர்களுடைய ஜாதகத்தைப் பொறுத் திருக்கிறது.

சிலர், சோதிடம் ஒரு திருத்தமான விஞ்ஞான சாத்
திர மென்பர். இது பௌதிகக் கலையைப்போல்சோதித்துக்
காட்ட இயலாததாகலின், அதனோடு ஒப்பவைத் தெண்ணு
வதற்கில்லை.

* * *

ஒருவன் வாழ்க்கையிலுள்ள முக்கியமான நிகழ்ச்சிகளை
முன்னரே அறிதல் கூடும். ‘ நமக்கு வெகுதூரத்திலுள்ள
கிரகங்கள் நம்மைப் பிணிக்குமா? ஒருகால் உயிரில்லாப்
பொருள்களைப் பிணிக்கலாம்; மனிதனைப் பிணிக்குமா?’ என்று
வினவலாம். கோள்கள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன
வென்பதில் வியப்பொன்றுமில்லை.

* * *

சோதிடக் கல்வி, தற்காலநிலையைக் கவனிக்கவிடாமல்
எதிர்கால நிகழ்ச்சியையே நோக்கியிருக்கச் செய்கிறதென்
றும், இன்னும் ‘விதி’ என ஒன்றைக் கற்பித்து மக்கள்
முயற்சியைத் தடைசெய்கிறதென்றும் சொல்லப்படுகிறது.
விதியை நம்புகிறவர்கள், மக்கள் அதனைத் தடுத்துக்
கொள்ள இயலாதெனக் கூறுகிறார்கள். இந்திய தத்துவக்
கொள்கையும் இச்சோதிடமும் ‘விதி’யை வற்புறுத்துகிற
தென்று கூறல் நியாயமாகாது.

* * *

சோதிட நூல்கள் கூறும் யோக பலன்களை அவ்வாறே
நம்பி விடுதல் கூடாது. ஆயுளைப் பற்றியும் வரையறுத்து
முடிவு கட்ட இயலாது. ஒருவனுடைய வாழ்நாட்களாகிய
சங்கிலிக் கோவையில் பலவீனமான தனிச் சங்கிலிகள் பல
இருக்கலாம். அவற்றால் அது அறுபடவுங் கூடும். மக்கட்கு
வரும் நோய் முதலியனவே அறுபடக் கூடிய சங்கிலிகளென்
னலாம். மனிதன் எச்சரிக்கையாக இருப்பதால் பெறக்கூடிய
வாழ்நாட்களை, அங்ஙனம் இல்லாமையால் குறைத்துக்கொள்
ளுதல் கூடும். சோதிட சாத்திரியாகிய வராஹ மிஹிரர்
‘வைதிக வாழ்க்கையே முழு வாழ்நாளையும் நிச்சயமாய்த்
தரும்’ என்று கூறுகிறார்.

பட்டன. இதனானே ஆசிரியன் தீக்கை செய்யுமாறு தொகுத்துக் கூறப்பட்டது. ௯

மந்திரங்கள் முதல் ஐந்தும் கலைஐந்தின் வியாத்தி
மருவும்மந் திரமிரண்டு பதங்கள் நாலேழ்
அந்தநிலை யெழுத்தொன்று புவனநூற் றெட்(டு)
அவனிதத் துவமொன்று நிவிர்த்தி அயன் தெய்வம்
வந்திடுமந் திரம்இரண்டு பதங்கள் மூவேழ்
வன்னங்கள் நாலாறு புரம்ஐம்பத் தாறு
தந்திடும்தத் துவங்கள்இரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலைமால் அதிதெய்வம் தானும். ௨௫௯

வித்தையின்மந் திரமிரண்டு பதம்நாலைந்து
விரவும்எழுத் தேழுபுரம் இருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வம்
தாவில்உருத் திரனாகும் சாந்தி தன்னில்
வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னொன்று
வன்னமொரு மூன்றுபுரம் பதினெட் டாகும்
உத்தமமாம் தத்துவமும் ஒருமூன் றாகும்
உணரில்அதி தேவதையும் உயரீச னாமே. ௨௬௦

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்கள்
தாம்மூன்று பதமொன்(று)அக் கரங்கள்பதி னாறு
வாய்ந்தபுரம் மூவைந்து தத்துவங்க ளிரண்டு
மருவும்அதி தேவதையும் மன்னுசதா சிவராம்
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்கள்
எண்பத்தொன் றக்கரங்கள் ஐம்பத்தொன் றாகும்
ஆய்ந்தபுரம் இருநூற்றே டிருபத்து நாலாம்
அறிதருதத் துவம்முப்பத் தாறுகலை ஐந்தே. ௨௬௧

(உரை) அத்துவாக்கள் ஒன்றினொன்று வியாத்தியாய் முறையானே பஞ்சகலைகளுள் அடங்குமாறு யாங்ஙனமெனின்,—அசுத்தம் மிச்சிரஞ் சுத்தமென்னும் மூவகை அத்துவாக்களும் ஐவகைப்பட்டுப் பஞ்சகலைகளுள் அடங்குமாறு சங்காரமுறையின் வைத்தெண்ணி இவ்வாறு கண்டு கொள்க.

மந்திரமுதலியவற்றிற்குங் கலையில் வியாத்திகூறியது பரம்பரையின் வியாப்பியமாதல்பற்றியாதலான், மேல்ஒன்றிஒன்று வியாத்தியென்பதனோடு முரணுமையறிக. சாந்தியாதீதகலை நீட்டும்வழி நீட்டல். இவைமூன்று செய்யுளானுந் தீக்கைசெய்தற்கண் அத்துவாக்கள் ஒன்றிஒன்று வியாத்தியாதல் அறிந்தடக்குமாறு வகுத்துக் கூறப்பட்டது. அற்றேல், இறைவனிங்ஙனங் குருமூர்த்தியை அதிட்டித்து நின்று செய்யுந் தீக்கையில் ஏனை மலசுத்திகளை யொழித்து அத்துவ சுத்தியே மிகுத்துக் கூறியது என்னையென்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுளென்பது.

(௭-௮-௧)

மூன்றுதிறத் தணுக்கள்செயும் கன்மங் கட்கு
முன்னிலையாம் மூவிரண்டாம் அத்து வாவின்
ஆன்றமுறை அவைஅருத்தி அறுத்துமல முதிர்வித்(து)
அரும்பருவம் அடைதலுமே ஆசா னாகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்தங் கத்துவா தொடக்கறவே சோதித்(து)
ஏன்றஉடற் கன்மம்அநு பவத்தினால் அறுத்திங்(கு)
இனிச்செய்கன் மம்மூல மலம் ஞானத்தால் இடிப்பன்.

**(உரை)** அநாதிமறைப்பாகிய ஆணவமலமும் வாதனைபற்றி நிகழும்ஆகாமியவினையும் ஒளிமுன்இருள்போலஇறைவனது ஞானசத்தியால் ஒழியற்பாலன; அவ்வாணவ மலத்தை முதிர்வித்தற்பொருட்டு ஈட்டிய முறையானன்றிப் பக்குவமுறையான் நுகர்விக்கப்பட் டெஞ்சிக்கிடந்த கன்மமலமும் அதற்குப் பற்றுக்கொடுத்து நிற்கும் முன்னிலையாகிய மாயேயமலமுங் கிரியாசத்தியால் ஒழியற்பாலன; உடம்பு முகந்துகொண்ட பிராரத்த கன்மம் அனுபவத்தால் ஒழியற்பாலன: இங்ஙனமாகலாற் கிரியாசத்திவிருத்தியாகிய தீக்கையால் எஞ்சிநின்ற கன்மங்களைச் சுத்தி செய்தற்பொருட்டு, அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய அத்துவசுத்தியே ஈண்டுக் கூறப்பட்டன.

இவ்வாறு வகுத்தோதற்பாலனவற்றை விரிவஞ்சி ஒரு முடிபாக வைத்தோதினார். இரண்டும் ஒரு பொருள்வினையாதற்குரிய இயைபு தோன்ற அருத்தியறுத்துத் தோன்றியறுத்தென உடன் கூறினார். ஆன்றமுறை பக்குவமானமுறை. மலமுதிர்தலாவது தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்கள் எல்லாவற்றோடுங் கூடிப் பதனழி



யுஞ் செவ்வித்தாதல். உயிர் பருவமடைதலாவது அறிவித்தவாறே அறியவல்லுஞ் செவ்வித்தாதல். அரும்பருவமென்றார், எய்தற்கருமை நோக்கி. அது வருஞ் செய்யுளிற் பெறப்படும். பருவமடைதலுமே ஆசானாகித் தோன்றி என்றதனானே, பருவமடையாதார்க்குத் தீக்கை செய்தலும் அடைந்தார்க்கு அது செய்யாமையும் பழுதென்பது பெற்றாம். இதனானே அத்துவசுத்தியின் சிறப்புக் கூறப்பட்டது. உரை தருமென்பதுமுதல் இத்துணையுங் குருவாகி வந்துணர்த்தி என்னும் முதற்கூற்றுப் பொருளை விரித்துணர்த்தியவாறு. இனி, மன்னு மருளாலுணர்த்தியென்னும் இரண்டாங் கூற்றினை இருபத்தைந்து செய்யுளான் விரித்துணர்த்துகின்றார். ௧௦

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.

**(உரை)** மேற்கூறிய அரும்பருவமடைதல், இங்ஙனஞ் சோபான முறையாற் பல பிறவிகளினும் ஏற்பட்டு நிகழ்ந்து முற்றுப் பெறுவதன்றி, ஒருங்கே யொருகாலத்து முற்றுப்பெறுவதன்று.

சைவத்திறமென்றது சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை. சென்றாலென்பது சேறலருமை விளக்கி நின்றது. இதனானே மேற்கூறிய பருவமடையுமுறைமை கூறுமுகத்தான் மன்னு மருளென்றதன் வகையும் அவற்றிற்கு வாயிலிவை என்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன. ௧௧

இம்மையே ஈரெட்டாண் டெய்திஎழி லாரும்
ஏந்திழையார் முத்தியென்றும் இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே யென்றும்முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை யென்றும்அட்ட குணமுத்தி யென்றும்

மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றும்தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றும்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே. ௨௯௮

(உரை) ஏனைச் சமய நூலார் கூறும் முத்திகளாவன சோபான முறையால் நிலமுதல் நாதமீறாய்க் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட்படுவனவாய அரிவையர் இன்புறுமுத்தி முதலாயினவாம். வேதாகம நூலுண்மை யுணர்ந்த யாங் கூறும் முத்தியாவது முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட சிவனடியைச் சேரும் முத்தியாம்.

வரிழையை என்னும் இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. ஆர் முத்தி வினைத்தொகை. உம்மையை எதிரது தழீஇயிற்றாக்கி ஈண்டுக் கூறாத சமய முத்திகளையும் இவற்றுடன் வைத்துக் கூறிக்கொள்க. இதனானே புறச்சமயநெறி நிற்றல் முதலியனவெல்லாஞ் சைவத்திறத்தடைதற்குச் சோபான முறையான் வாயிலாமாறு அவற்றது பயன் கூறுமுகத்தானே இனிது விளக்கப்பட்டது. ௧௨

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.

(உரை) கண்ணில்லார் பலர் குழீஇக்கொண்டு வேழமின்றுழித் தலைப்பட்டுக் கையினால் தைவந்து வேறுவேறு கூறும் இலக்கணங்களெல்லாங் கண்ணுள்ளானொருவன் கண்டு கூறும் அதன் இலக்கணத்துள் ஏகதேசமாய்க் காணப்பட்டடங்குமாறுபோல, ஏனைச்சமய நூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாயவாறுபற்றி அவ்வந் நூல்களிற் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க் காணப்பட்டு அவற்றுள் அடங்கும். சிவபிரானாற் செய்யப்பட்டு அவ



னையே தமக்கு முதலாகக் கொண்டுரைக்கும் அவ்விருவகைநூலும் அவ்விறைவன் திருவடியி லடங்கும். ௧௫

அருமறையா கமமுதனூல் அனைத்தும்உரைக் கையினான்
அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்
தருவர்கள்பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தர்க்கமொடுத் தரங்களினாற் சமயம்சா தித்து
மிருதிபுரா ணம்கலைகள் மற்று மெல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம்வே தாங்கம்
சுருதிசிவா கமம்ஒழியச் சொல்லுவதொன் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே. ௨௯௯

(உரை) நூலெனப்படுவனவெல்லாம் ஒரு நிகரனவாதலின்றி முதல்நூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்கநூல் எனப் பலவேறுவகைப்பட்டு மேன்மேன் நூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாம். அவற்றுள் ஏனைச் சமய நூல்களெல்லாம், முதல் நூலாகிய வேதாகமப்பொருளை முழுவதும் உள்ளவாறுணரமாட்டாதார் அவற்றுட் சில பொருளைச் சமுத்திரகலச நயம்பற்றி ஆண்டாண்டெடுத்துக்கொண்டு தத்தம் அறிவளவுக்கேற்பத் தொகுத்தும் விரித்துஞ் செய்த நூலாகலான் அவையெல்லாம் பூருவபக்க நூலெனப்படும். சமயநூலல்லவாகிய மிருதி புராணங் கலைகள் மற்றுமென்பதனால் தழுவப்படும் உபாகம முதலாயின வெல்லாம் அவ்வேதாகமப் பொருளை உள்ளவாறுணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற்பொருட்டு நால்வகை யாப்பினுள் ஒன்றான் வழிபடுத்துச் செய்த நூலாகலான் அவை வழிநூலெனப்படும். ஏனைக் காருடந் தக்கிணம் முதலிய ஆகமாங்கங்களும், சிக்கை கற்பசூத்திரம் முதலிய வேதாங்கங்களும், முறையே அவ்விரண்டனையும் உள்ளவாறுணர்தற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின். அவை சார்புநூலெனப்படும். இவ்வாறன்றி வேதாகமங்களின் அடங்காத பொருளாயொன்றனை எடுத்துக்கொண்டு சுதந்திரமாய்ச் செய்யும்நூல் ஒன்றுமில்லை உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகள் என்கடவார்.

சமுத்திரகலச நயம்பற்றி எடுத்துக்கொண்டு தருதற்கும் அவர் சுதந்திரர் அல்லரென்பார், அரனருளாலென்றார். பிறநூறிகழ் பூர்வமென முன் வருதலின் ஈண்டு வேறு கூறாதொழிந்தார். சாதித்துத்

தருவர்களென இயையும். ஆமென்பதனை மேலுங் கூட்டுக. ஆகமாங்கத்தை அங்கமென்றது தலைக்குறை. ஒன்றுமென்னுமும்மை விகாரத்தாற் றொக்கது. அறை உத்தரம். எல்லாம் அருமறையாகமத்தே காணப்பட்டடங்குதலை இனிது விளக்கியவாறு. ௧௪

வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
  வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅம லன்தருநூ லிரண்டும்
  ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்
  நிகழ்த்தியது நீள்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
  திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும். ௨௬௭

(உரை) வேதஞ் சிவாகமம் இரண்டும், ஏனையோர் செய்யப்படும் வழிநூல் சார்புநூல் பூருவபக்க நூல்களின் ஒன்றாக வைத்தெண்ணுதற்கு ஒருவாற்றானும் இயைபின்றி அவையனைத்திற்கும் முதனூலாகி அநாதிமுத்தனாகிய இறைவனால் தரப்படுநூலாக, ஏனையவெல்லாம் இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்விருவகை நூலுமே நூலென்றுயர்த்துக் கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனால் தரப்படும் முதனூலை ஒன்றாக வைத்தெண்ணாமல் இங்ஙனம் இருவகைப்படுத் தெண்ணியது என்னையெனின்,—அஃதொக்கும்; முதல்வன் பெருங்கருணையாளனாகலின், உலகத்தார் உய்தற்பொருட்டுஞ் சத்திநிபாதமுடையார் உய்தற்பொருட்டுந் திருவுளத்திற் கருதி, பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரமும் அதனை அவ்வாறாகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போல, முறையே வேதமுஞ் சிவாகமமுஞ் செய்யப்பட்டனவாகலான் அவை இரண்டும் முறையானே பொதுநூல் சிறப்புநூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேதத்திற்கூறுங் கருமகாண்டப் பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சி நின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின்சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேறாய வேதத்தின் பூர்வபக்கப்பொருளைச் சொல்லுமனை நூல்களெல்லாம் பூர்வபக்கநூலெனவும் அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்லுவதாய சிவாகமஞ் சித்தாந்த நூலெனவுமாம்.



சிவாகமத்தின் சிறப்புக்கூறியவாறு. இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாம் போலியென்பது சொற்கிடக்கை முறையானும் மகுடாகம முதலியவற்றானும் அறிக. இவை மூன்றுசெய்யுளானும் அவ்வநூல்களதியல்பு கூறுமுகத்தான் மேலது வலியுறுத்தப்பட்டது. ௧௫

சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
  செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
  மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
  மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
  பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி.

(உரை) இத்துணைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி வீடுபேற்றிற்கு நேர்வழியென உபமன்னியன் அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும், அதனைத் தெளியமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாந் தூரபிமானங்கொண்டு பிதற்றும்அவ்வுலகத்தார் என்கடவர். ஔத்திராதியென்றாற்போல முத்தியந்தம் முத்தாந்தமென மரீஇயிற்று. பித்தாந்தம் பித்தமுடிபு; பெரும்பித்தென்பதாம். ௧௬

இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
  முதன்மைஅனுக் கிரகமெல்லா மியல்புடையான் இயம்பு
மறைகளா கமங்களினான் அறிவெல்லாந் தோற்றும்
  மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கும்
முறைமையினால் இன்பத்துன்பங் கொடுத்த லாலே
  முதன்மையெலாம் அறிந்துமுயங் கிரண்டு போகத்
திறமதனால் வினைஅறுக்குஞ் செய்தி யாலே
  சேரும்அனுக் கிரகமெலாம் காணுதும்நாம் சிவற்கே.

(உரை) முற்றுணர்வு முதலிய மூன்றுஞ் சிவபிரானுக்கே யுளவென்பது மேற்கூறியவாற்றாற் பெறப்பட்ட மறையாகமம் இயம்பு

தல் முதலிய மூன்றேதுவானும் முறையே அறியக் கிடத்தலான், அங்ஙனம் இம் மூன்றனுணும் இயல்பாகவுடைய அம்முதல்வன் செனனமொன்றிலே திருக்கடைக்கண் சேர்த்தி ஞானவாரிமடுத்தானந்தம் பொழிதற்கும் அச்செனனமொன்றிலேதானே மலங்கழுவிச் சிவன்முத்தராகவைத்தாண்டு வரும்பிறப்பை யறுத்தற்கும் பாதமலர்க்கீழ் வைத்தற்கும் வல்லவனுவான்.

இறைவனென்றது வல்லவனென்னுந் துணையாய் நின்றது. பல சனனங்களிலும் ஆகாதவற்றையெல்லாம் ஒருசனனத்திலேதானே அங்ஙனமாகச் செய்யுமாறியாங்ஙனமென்பாரை நோக்கி அவ்வாசங்கை நீக்கி மேலதனை வலியுறுத்தியவாறு. இதற்குப் பிறரெல்லாம் ஓரியைபின்றித்தன்மேலுங் கூறியதுகூறலென்னும் வழுப்பட வைத்துரைப்ப இவை இரண்டுசெய்யுளானுஞ் சைவத்திறத்தடைதற் சிறப்புக் கூறப்பட்டது. ௧௭

சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையும்
நன்மார்க்க நாலவைதாம் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபதமென்பர். ௨௭௦

(உரை) அங்ஙனஞ் சைவத்திறத்தடைந்தார் சிவனடியைச் சேர்தற்குரிய நெறி தாதமார்க்கமுதலிய நான்குவகைப்படுதலின், அவையே சரியைமுதலிய பெயரான் வழங்கப்படும். அவற்றிற்குப் பயன் முறையே சாலோகமுதலிய அபரமுத்தியுஞ் சாயுச்சியமாகிய பரமுத்தியுமாம்.

சாலோக்கிய முதலியவற்றிற்குப் பொருள் வருகின்ற செய்யுட்கள் நான்கினும் ஆசிரியர்தாமே மொழிபெயர்த்துரைக்கின்றவாற்றானறிக. இதனானே, சைவத்திறத்தடைந்தாராற் செலுத்தப்படுஞ் சரியை முதலிய நான்கும் முத்திநெறியாதற்கட்படும் பேதமும் அவற்றின் பயனுங் கூறப்பட்டன. ௧௮



தாதமார்க் கம்சாற்றிற் சங்கரன்தன் கோயில்
தலம்அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வ(து)
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோர் ஈசனுல கிருப்பர்.

(உரை) புறத்தொழின்மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும். ௧௯

புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே. ௨௭௨

(உரை) புறத்தொழில் அகத்தொழிலென்னும் இரண்டானும் அருவுருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை எனப்படும். ௨௦

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி அலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.

(உரை) அகத்தொழின்மாத்திரையானே அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகமெனப்படும்.

சகமார்க்கமுழத்தலென வினைமுடிக்க. இவ்வியோகமுழந்தவ ரென எடுத்துக்கொண்டுரைக்க. ௨௧

சன்மார்க்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் தானே. ௨௭௪

(உரை) புறத்தொழில்அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழின்மாத்திரையானே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு ஞானமெனப்படும். அவ்வழிபாடிவையென்பது முன்னர் வகுத்துக் கூறப்படும். ஈண்டு வேதமென்றது வேதஞ்சிவாகமமென்னும் இரண்டினுமுள்ள கருமகாண்டத்தை. சிவாகமமும் வேதமென வழங்கப்படும். கீழுள்ளவற்றைக் கீழெனக் கண்டு கழித்தாலன்றி மேலுள்ளன பயன்படாவென்பார், கீழாகவென்றார். கழித்தென்பது சொல்லெச்சம். பதிபசுபாசந் தெரித்தலாவது அம்மூன்று பொருளையுந் தடத்தலக்கணத்தின் வைத்து வகுத்துணர்த்துதல். பரசிவனைக் காட்டலாவது, அம்மூன்றனுட் பதிப்பொருள் ஏனைப்பாசபசுக்களுக்கு மேலாதல்இனிது விளங்கச் சொரூபலக்கணத்தின் வைத்துணர்த்துதல். ஈண்டு ஞானமென்றது ஞானசாத்திரத்தின்மேற்று. தெரித்துக்காட்டு ஞானநூலெனவே, ஞானகாண்டமெல்லாந் நூலாருந்ததிநியாயம்பற்றி இங்ஙனம் இருபகுதிப்பட நிகழுமென்பதாயிற்று. நாடுதல் சிந்தித்தல். நாடியெனவே, நாடுதற்கு வேண்டப்படும் ஓதல்கேட்டல்களும் உடன்கொள்ளப்படும். பின்மார்க்கச்சிவன் வினைத்தொகை. பின்னுதல் அத்துவிதமாய் இயைதல். நாடாவண்ணம் பின்னிய சிவனென்றுரைக்க. மார்க்கம் இடைப்பிறவரல். சன்மார்க்கமாவதுணர்ந்து கழித்து நாடியுடனும்பெற்றியென வினைமுடிபுசெய்க. மேல் இச்



சரியை இக்கிரியையென்றாற்போல ஈண்டும் இஞ்ஞானப் பெருமையெனச் சுட்டு வருவித்துரைக்க. இவை நான்கு செய்யுளானும் மேல் எடுத்துக்கொண்ட சரியைமுதலிய நான்கிற்கும் இலக்கணங் கூறப்பட்டது. ௨௨

ஞானநூல் தனையோதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபம் செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன் றுயருமிவை ஊட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம். ௨௭௫

(உரை) சிவதருமோத்தரத்திற் கூறியவாறே ஒன்றற்கொன்றேற்றமாகிய கன்மவேள்வி தவவேள்வி செபவேள்வி தியானவேள்வி ஞானவேள்விஎன்னும் ஐந்தனுள், முன்னைய நான்கும் போகத்தையூட்டுவனவாக, ஓதல்முதல் ஐவகைப்பட்ட ஞான வேள்வியொன்றுமே வீடுபேற்றைத் தருவதாகலான் அஃதுணர்ந்தோரால் அங்ஙனம் ஐவகை ஞானவேள்வியே வேட்கற்பாற்று.

தெளிதற்கும் நிட்டைக்கும் நூல் வேண்டாமையின் நூலானுகற்பாலனவாய ஏனைஐந்துமே ஈண்டு வேள்வியென்றெடுத்துக் கொள்ளப்பட்டன. நற்பொருளைத்தான்கேட்டல் கேட்பித்தலெனக் கேட்டற்குப்பின் வைத்தோதாமையான், ஈண்டுக் கேட்பித்தலென்றது, ஆசிரியனை வழிபட்டுத் தான் கேட்டலின்றியும் ஓதவும் ஓதுவிக்கவும் பெற்று நூலின்கண் அதிகாரமுடையராயினார் அந்நூற்பொருளைத் தமது மதிநுட்பத்தாலுணர்ந்து தம்மாலோதுவிக்கப் பட்டார்க்கு உரைத்தலையென்பது பெற்றாம். கேட்டற்குப் பின்னர்த்தாகிய ஏனைக் கேட்பித்தல், பிறர்க்குரையிடத்தே நூற்கலப்பானு மென்பவாகலிற் சிந்தித்தற்பயத்ததாய் அதனுள் அடங்குதலின், வேறு வைத்தெண்ண வேண்டாவாயிற்று. அற்றாகலினன்றே வருஞ் செய்யுளிற் கேட்டற்குப்பின் சிந்தித்தலே கூறியொழிந்ததூஉமென்க.

கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
    கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கள்
    மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்(கு)
ஈட்டியபுண் ணியநாத ராகி இன்பம்
    இனிதுநுகர்ந் தானருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவால்
    ஞானநிட்டை அடைந்தடைவர் நாதன் தாளே. ௨௭௬

(உரை) மேற்கூறிய ஞானவேள்வி ஐந்தனுள் முன்னைய மூன்றினும் ஆசிரியன் அறிவுறுக்கும் உண்மைஞானம் நிகழாமையின், உண்மை ஞானமெனப்படுவன ஏனைக் கேட்டல் சிந்தித்தல்களும் சிந்தித்ததனைப் பின்னர்த் தெளிதலுந் தெளிந்தவாறே அதன் பின் நிட்டை கூடுதலுமென்னும் நான்கேயாம். இம்முறையே வந்து நிட்டைபொருந்தினோர் வீட்டினைத் தலைப்படுவர். இந்நான்கினுள் மேவுதலின்றித் தீக்கையில் அத்துவ சுத்தி பண்ணப்பட்டு ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல் மாத்திரையினின்று தப்பினவர், பதமுத்திகளின் வைகிநீங்கியதுணையானே ஆசிரியன் மாட்டுக் கேட்டல் முதலிய நெறியால் நிட்டையினைத் தலைக்கூடி வீடுபெறெய்துவர்.

ஓதல்முதலிய மூன்றில் நின்றார்க்குங் கேட்டல் முதலிய ஆசிரியனையின்றியமையாவென்பது உணர்த்துதற்பொருட்டு, இந்தப் பார்மேனாட்டியநற் குலத்தினில்வந் தவதரித்தென்ற துணையேயாகலின் அதுவே நியத மன்றெனக்கொள்க. சரியை முதலியவற்றில் நின்றாரும் அங்கு நாதனே முன்னிற்கின் நணுகுவர் நற்றாளே என வருஞ் செய்யுளிற் கூறப்படுதலின். இனி மேவாதுதப்பினவர் என்பதற்குக் கேட்டல் முதலிய மூன்றினின்று தப்பினவரென்று உரைப்பாருமுளர். கேட்டபின்னர்க் கேட்க வேண்டாமையானும், சிந்தித்தபின் நூல் வேண்டாமையானும், தெளிந்தவழி நிட்டைமேவுதற்கு இடையீடின்மையானும், கேட்டல் முதலியவற்றினின்றார், சுத்ததத்துவ புவனங்களின் அபரமுத்தராக வைகியவாறே பரமுத்தியைத் தலைப்படுவதன்றி மீளுதலின்மையானும், அவர்களைச் சரியைமுதலியவற்றின் நின்றாரோடொப்ப வைத்து அங்ஙனமுரைத்தல் சிறிதும் ஏலாமையானும், மேலைச்செய்யுளோடு இயைபுபடாமையானும், அவ



றுரைப்பனவெல்லாம் போலியென்றொழிக. இவை இரண்டு செய்யுளானும் மேற்கூறிய ஞானமாவது இத்துணைப் பகுதித்தென்பதூஉம் அவற்றுட் பொதுச்சிறப்பாமாறும் அவற்றிற்குரிய பயன் வேறுபாடு முணர்த்தியவாறு. ௨௪

தானம்யா கம்தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
    சாந்திவிர தம்கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வர்
    ஈசனியோ கக்கிரியா சரியையினில் நின்றோர்
ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
    ஒடுங்கும்போ தான்முன்னிலா தொழியின்உற்ப வித்து
ஞானநெறி அடைந்தடைவர் சிவனை அங்கு
    நாதனே முன்னிற்கின் நணுகுவர்நற் றாளே. ௨௭௭

(உரை) மேலேமேலே போயும் மீளுதற்கேதுவாகிய பசுபுண்ணியம்போலன்றி, மேம்பட்ட சரியை முதலிய சிவபுண்ணியங்களை விதிவழி அனுட்டித்தோரும், மேவாது தப்பினவரோடொப்பத் தத்தமக்குரிய பதமுத்திகளின் நெடுங்காலம் வைகி முடிவின்கண் எவ்வாற்றானும் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவர்.

இதனானே சரியை முதலியவற்றிற்குப் பயன் மேற்கூறிய சாலோகமுதலிய பதமுத்திமாத்திரையேபோலும் என்னும் ஆசங்கையை நீக்கியதூஉமாயிற்று. ௨௫

சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
    திலமளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலின்அழுந் தாதவகை எடுத்துப்
    பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
    சரியைகிரி யாயோகந் தன்னினும்சா ராமே
நவமாகும் தத்துவஞா னத்தை நல்கி
    நாதன்அடிக் கமலங்கள் நணுகுவிக்கும் தானே. ௨௭௮

(உரை) விதிவழியின்றிப் பத்திவழியினின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவின்கண் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவர்.

பத்திநெறியில் நின்றோர்க்குப் பக்குவமிகுதிப்பாட்டாற் சரியைகிரியாயோகம் எளிதிற் கைகூடி முற்றுப்பெறுவனவன்றி ஏனோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையுமுடையனவல்ல வென்பார், சரியைகிரியாயோகந் தன்னினுஞ்சாராமே என்றார். ஆகலின் சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வரென மேற்கூறிய சோபானமுறையோடு முரணாமையறிக. இவை நான்கு செய்யுளானும் ஐவகைவேள்வி யாற்றினோர் பெறும் பயனும் சரியை முதலியவற்றிற் சரித்தோர் பெறும் பயனும் சிவஞானிகட்குச்செய்யுந் தானப்பெருமை கூறுமுகத்தாற் பத்திநெறியில் நின்றோர் பெறும் பயனும் உணர்த்துமுகத்தானே, எந்நெறியில் நின்றோர்க்கும் வீடுபேறெய்துதற்கண் ஞானநெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது. ௨௯

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவர் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர். ௨௭௯

(உரை) மேற்கூறியவாற்றால் ஏனையவெல்லா ஞானத்தைப் பயப்பிக்கும் ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமாவதென்பது வேதமுதலிய பிரமாண நூல்கட்கெல்லாந் துணிபாகவும், அவற்றோடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தீக்கைமாத்திரையே அமையும் ஐவகை வேள்விமுதலிய கன்மங்களே அமையும்.பத்திநெறிமாத்திரையே அமையுமென்று இவ்வாறு பிதற்றும் பேதைநீரார் ஒருவாற்றானுந் தெருட்டற்பாலரல்லரெனவும். ஞானமல்லாதனவெல்லாம் அஞ்ஞானமாகலின் அவ்வஞ்ஞானப்பகுதிகளாற் பந்தமுறுதலின்றி வீடுபெறுதல் கூடாதெனவும், அவ்வஞ்ஞானப்பகுதிகளெல்லாம் ஒளிமுன் இருள்போல ஞானத்தின் முன்னர்ச் சத்திகெட்டொழியும். அவையொழியவே, அவற்றானாய பந்தம் நீங்கும், அது நீங்கவே, முத்திநிலை கைகூடுமாகலான் ஞானமொன்றேமுத்திக்குச்சிறந்தகாரணமெனவும் ஞானத்துள்ளுந் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதி முதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலான்,அவையும் பந்தமுறுத்துவனவேயன்றி வீடெய்துவிக்க மாட்டாமையின், அவற்றின் வேறாய திருவடி ஞானமொன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவுங் கூறுவர் அந்நூல்களின் உண்மையுணர்ந்தோர்.

ஏகாரம் இரண்டும் பிரிநிலைக்கண் வந்தன. சொல்லவுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க. தான் இரண்டும் அசை. ஆனத்தால் ஆனவதனாலென்க. ஆனவென்பதனுளகரமும் அதனாலென்பதனுள் அன்சாரியையுந் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன ;*"பெற்றத்தாற் பெற்றபயன்" என்றாற்போல. ஆதல் உண்டாதல். இதனானே, பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமல்லவாதல் இனிது விளக்கி மேலது வலியுறுத்தப்பட்டது. இத்துணையும் ஞானத்தினியல்பும் அதன் பயனும் பொதுவகையாற் கூறி, இனிச் சிறப்புவகையாற் கூறுகின்றார். ௨௭



சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனாம் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
தூரியனாம் சிவன்தோன்றும் தானுந் தோன்றும்
தொல்லுலக மெல்லாம்தன் னுள்ளே தோன்றும்
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்
நின்றநிலை யெல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும். ௨௮௦

(உரை) தனது கிரணத்தோடுந் தோன்றும் ஞாயிற்றின் சந்நிதிமாத்திரையானே சூரியகாந்தக் கல்லின்கண் நெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல, கேட்பித்தலோடுந் தோன்றும் ஆசிரியன் சந்நிதிமாத்திரையானே மாணாக்கன்மாட்டு, மேல் ஈரிரண்டாங் கிளவியின் ஞானமென்றவற்றான் முந்திய ஞானமாகிய கேட்டலறிவு விளங்கித் தோன்றும் ; அது தோன்றவே, பதிமுதலிய முப்பொருளும் அவை யொன்றினொன்று வியாபக வியாப்பியங்களாமாறும் நிருவிகற்பமாய்த் தோன்றும்.

---

* திருக்குறள் - சுற்றந்தழால் - .

அருளான் என்புழி ஆன் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது; *"தூங்குகையா னோங்குநடைய" என்றாற்போல. ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலாற் கேட்பித்தலை யுணர்த்திற்று. ஆசிரியன் நூற்பொருள் உரைக்கும்வழி ஆசிரியன்ஞானமே மாணாக்கன் மாட்டுச் சென்று பற்றுவதுபோலுமென்னும் ஆசங்கை அறுத்தற் பொருட்டுத் தோன்றத்தோன்றுமென்றார். உவமை கூறியதுமது. சடத்துக்கன்றிச் சித்துக்குச் சங்கிரமங் கூடாதென்பது சிவாகம நூற்றுணிபென்க. அணுவோரண்டமாம்படி நேரியனாகலால் உயிர்க்குயிராதலும் அண்டமோரணுவாம்படி பரியனுமாதலால் எங்கு நிற்றலும் பெறப்படுமென்பார், நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும் நின்ற நிலையென்றார். முன்னிகழ்ந்தென்பதனை யாண்டுங் கூட்டுக. முன்னிகழுந் தோற்றமாவது சவிகற்பத்துக்கு முன்னாக நிகழும் நிருவிகற்பத் தோற்றம். இதனானே கேட்டலாமாறும் அதன்கண் நிகழும் அனுபவமுங் கூறப்பட்டன. ௨௮

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந் தோர்குருவின் அருளால்
புக்கனுட்டித் தேநிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி ஓட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ(டு)
ஒக்கவுறைந் திவர்அவனை அவன்இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன்தோற்ற மொன்றுமே காண்பர்.

(உரை) பக்குவ முதிர்ச்சியானாலாஞ் சத்திநிபாத மேவப்பெற்றார்க்கு அக்கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்து முறுக விளையும்; அப்பொழுது தம்மாசாரியாதல் தம்மோடொருசாலை மாணாக்கராய்த் தம்மின் மூத்தாருளொருவராதல் சிந்திப்பிக்கப்பெறும் அந்நூற்பொருளின்கண்ணே கருத்தொருங்கி நுழைந்து முன்னொடுபின் மலைவற ஏது திருட்டாந்த முதலியவற்றாற் சிந்தித்து நிட்டை கூடுதற்கண் வேட்கை மிக்குடையராகப் பெற்றார், சிந்தித்தற் கருமமே மேற்கொண்டு மற்றொன்றினும் பற்றொன்றின்றிச் சீவன்முத்தரோடொத்

* தொல்காப்பியம் - சொல் - வேற்றுமையியல் - ௧௫.



து பேரறிவாகிய சிவமுஞ் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றின்னொளியுங் கண்ணொளியும்போல் அத்துவிதமாய் நிற்றலான், ஆண்டுத் தாமுளராதல் அறியப்பெறாது சிவத் தோற்றமொன்றே காணப்பெற்று நிருவிகற்பஞ் சவிகற்பமென்னும் இரண்டிற்கு மிடைநிலத்தே நிற்பர்.

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்திநிபாத மேவுதலுஞானம் விளைந்தெனவே, அஃதங்ஙன மேவாதவழி அக்கேட்டலறிவு முறுகுதலின்றி அஃகி நிகழுமென்பதாயிற்று. விளைந்தவழி என்பது விளைந்தெனத் திரிந்தது. ஓர் குருவெனப் பொதுப்படக் கூறினார், ஒருசாலை மாணாக்கராய்த் தம்மின் மூத்தாரையுந் தழுவுதற்கு. புரிதல் விரும்புதல். சீவன் முத்தராகி யென்புழி ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்துநின்றது; *"ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற்போல. உடந்தையாய் உறைந்து காண்பரென்றது, மழைபெய்து குளம் நிறைந்ததென்றாற்போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது. உம்மை சிறப்பு. ஏகாரம் பிரிநிலை. †அடைபவர் சிவமேயாகுமதுவன்றித் தோன்றுமென்ற கடனதென் என்பதும் இந்நிலையெனக் கொள்க. இதனானே சிந்தித்தலாமாறும் அதன்கண் நிகழும் அனுபவமுங் கூறப்பட்டன. ௨௯

அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயில்
பிறியாத சிவன்தானே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதார னாயே. ௨௮௨

(உரை) ஆசிரியன் திருவருளால் இருவகைப் பாசங்களும் நீங்கிக் கேட்குமுறையிற் கேட்டுச் சிந்திக்கு முறையிற் சிந்தித்துப் பின் அன்பு செய்தடங்கி நிற்கப் பெறுவார்க்கு, முதல்வன் இயல்பு கேட்

* திருவாசகம் - கோயில் மூத்ததிருப்பதிகம் - ௭.
† சிவப்பிரகாசம் - உண்மை - ௬௧.

டற் காலத்துப் பொருட்டன்மையற்றிப் பேதமாய்த் தோன்றிச் சிந்தித்தற்காலத்துக் கலப்புப்பற்றி அபேதமாய்த் தோன்றித் தெளிந்த பின் இவ்விரண்டுமின்றி நேரியனும் பரியனுமாயதோர் முறைமை பற்றி எவற்றினும் ஒற்றித்து நின்றே ஒன்றினும் பற்றிலனாய் வேறு தோன்றும்.

நின்று நிராதாரனாய்த் தோன்றுமெனெனக் கூட்டுக. தெளிதலாமாறும் அதன்பயனும் இனிது விளக்குதற்பொருட்டு மேற்கூறிப் போந்தவற்றையும் அனுவதித்து உடன்கூறினார். கூடாதே வாடாதே யென ஈண்டுக் கூறவே, ஏனைக் கேட்டல் சிந்தித்தல்களின் ஒரோ வழிக் கூடுதலும் வாடுதலும் நிகழுமென்பதாயிற்று. அற்றாகவின்றே ஆண்டிவ்வாறினிது விளங்கப்பெறாதாயிற்றென்பது. இருந்தவருமை நோக்கி இருப்பையாயினென்றார். இதனானே தெளிதலாமாறும் அதன்கண் நிகழும் அனுபவமுங் கூறப்பட்டன. ௧௦

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் ஆக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணானாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்றான்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதான்போல் நிற்பன்.

(உரை) வியாபகமாகியவுயிர் அவ்வியல்பிழந்து கீழுமேலும் ஏகதேசப்பட்டுச் சேறற்குக் காரணம், அங்ஙனஞ்சென்று அவ்வப்பயன் நுகரச்செய்யும் இருவினைத் தளையேயாகலின், அத்தளை இரண்டனையும் ஞானநூலோதல் முதற் சிந்தித்தலீறாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதலுணர்வெனப்படும் அரத்தான் அறுக்கப்பெற்றார்க்கு, காரணமின்மையிற் காரியமாகிய ஏகதேசச்செலவும் இன்றாயொழியும்; அஃதொழியவே, அவர் கரணங்களின் வயத்தராதலின்றி மேலங்ஙனந் தோன்றிய இறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு ஒருவாற்றானுங் குறைவின்றி இம்மையே சீவன்முத்தராகி, மாசு நீங்கியவழி ஆடையின் வெண்மை ஆடைமுழுதும் விளங்கினாற் போல, இக்குளிவாங்குங் கலம்போல் உழல்வதாகிய இவ்வுடம்பு நீங்



குப்பெறும் பரமுத்தி நிலையில் தமது வியாபகமெங்கணும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனோடொத்து நிற்பர்.

சிவசமமாதற்குரிய சாதாரண தன்மியாவதிஃதென்பார், எங்குமாயென்றார். தெளிந்தார்க்குக் கண்ணுதல்தன்நிறைவதனிற் கலத்தற்கண் இடையீடின்மை இனிதுவிளக்குவார், இடையீடாவன இவையென்பதூஉம் அவை கழிந்தவாறும் உடன் கூறினார். கண்ணுதல் தன் நிறைவதனிற் கலந்தார்க்குப் பண்டை ஏகதேசவுணர்வு தூர்ந்து போதலின், ஏகதேச வுடம்பில் நிகழும் இன்பத்துன்பத்திற்கு ஏதுவாகிய உற்பாத முதலியவற்றை நோக்கி வரக்கடவதோர் கவலையின்மையின், எங்கெழிலென் ஞாயிறெமக்கென்று குறைவின்றி நிற்பாராயினரென்பது. *"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான் - மனக்கவலை மாற்ற லரிது" என எதிர்மறைமுகத்தாற் கூறியதும் இதுபற்றியென்க. கலந்து முத்திபெறு மிவனென வியையும். இதனானே நிட்டையாமாறும் அதன் பயனுங் கூறப்பட்டன.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினொ டாடலிவை பயின்றிடினும் பயில்வர். ௨௮௪

(உரை) இந்த நிட்டையுடையார்க்கு விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் வேண்டாம்: அவர் செய்தன வெல்லாந் தவமாம்.

பாலர்குணம் அறவொழிதற்கும், உன்மத்தர்குணம் ஒருகாற் செய்தொருகாலொழிதற்கும், பிசாசர்குணஞ் செயலிழப்பினின்று செய்தற்கும் உவமையாயின. இவ்வாறன்றி, மேலுணவு தேடாமை முதலியவற்றிற்கு அம்மூன்றும் உவமையாயின என்பாருமுளர். இச்செய்யுளின் எடுத்துக்கொண்ட பொருளோடியைபின்மையானும்,

* திருக்குறள் - கடவுள் வாழ்த்து - எ.

*"பாலருன்மத்தர் பிசாசரிலெனவு—முறங்கினேன்கை வெறும்பாக் கெனவுந்—தானேதவிராதானல்" எனப் பிறாண்டுந் தவிர்தன்மாத் திரைக்கே அவற்றை எடுத்துக்காட்டியவாற்றானும், அஃதீண்டைக் கேலாமை யறிக. பாடலினெடாடலிவையயிறல் பரமானந்தமேலீடு நோக்கி நிகழ்வதென்க. ௩௨

தேசமிடம் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போல்செய்யாச் செயலதனைச் செய்
ஈசல்படு மனமின்றி உலாவல் நிற்றல் [தங்(கு)
உறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தல்
மாசதனில் தூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்தில் திருத்தத்தில் மைதுனத்தில் சினத்தின்
ஆசையினின் வெறுப்பின் இவை யல்லாது மெல்லாம்
அடைந்தாலும் ஞானிகள் தாம் அரனடியை அகலார். ௨௮௫

(உரை) விகாரமுறுதற்கேதுவாகத் தம்முன் மாறுபட்டதொழில் பலவற்றையுஞ் செய்தாராயினும், அவைபற்றி அவர் சிறிதும் விகார முறுவாரல்லர்; உண்மையானோக்குவார்க்கு அவர் செய்யுஞ் செயல் வேறாகலான்.

செய்யாச்செயலதனைச் செய்தற்கு வேறொரு நியதியும் வேண்டாமென்பார், தேசமிடங் காலந் திக்காசனங்களின்றி என்றார். இன்றிச்செய்வதெனவும் அடைந்தாலுமூசல்படு மனமின்றியெனவு மியையும். அடைந்தாலுமென்னும்உம்மை சிறப்பின்கண் வந்தது "உவரிதோன்றிவாழ் தொழிலவாயினு மயிலைதீஞ்சுவை யுப்பின்" என்றாற்போல. இவை இரண்டு செய்யுளானும் நிட்டைமேவினோர்க ளது ஆசாரங் கூறப்பட்டது. ௩௩

இந்நிலைதான் இல்லையேல் எல்லா மீசன்
இடத்தினிலும் ஈசனெல்லா விடத்தினிலும் நின்ற
அந்நிலையை அறிந்தந்தக் கரணங்கள் அடக்கி
அறிவதொரு குறிகுருவின் அருளினால் அறிந்து

* சங்கற்ப நிராகரணம் - ௨.



மன்னுசிவன் தனையடைந்து நின்றவன்ற னாலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவானுபவம் சுவானுபூ திகமாம். ௨௮௬

(உரை) இங்ஙனங் கூறிய முறையானே, அகம்புறமென்னாமல் எங்கணும் ஏகநிலையாய்க் கண்டு இறைநிறைவில் அழுந்துவதாகிய நிட்டை மேவுதல் அரிதாய்ப் பண்டைப் பயிற்சிவயத்தாற் சுட்டுணர்வு பற்றிப் பிரபஞ்சங் காட்சிப்பட வருமாயின் அதனைக்காணும்பொழுதே இறைவனதற்குள்ளாயும் புறமாயுநிற்குநிலையுமுடன்கண்டு, அவ்வா றண்டத்தின் நிற்குநிலை அறிதலரிதாயிற் பிண்டத்தின் நிற்குநிலை யுள் ஒன்றின்வைத்தறிந்து அதுவாயிலாகப் புகுந்தாதல் அவ்வியல் பைத் தலைப்பட்டறிந்து ஆண்டுக்காணுங் கரணங்களெல்லாம் பேரின்ப மாகப் பேணி, இவ்வாறு கருவிகளோடுந் தொழிற்பட்டு நிற்பதாகிய சகலசாக்கிரத்திற்றானே கருவியொன்றனோடுங் கூடாது தொழி லிறந்து நிற்கும் நின்மலதுரியாதீதநிலை கைகூடும்படிமுயல்வார், சிவானுபவந் தமதாகக்கொண்டு அனுபவிக்கப்பெறுவார்.

அந்நிலையை அறிந்தென்றது அண்டத்தின் வைத்தறிதலை எனவும், அறிவதொருகுறி குருவினாலறிந்தென்றது அவ்வறிவிற்கேது வாய்ப் பிண்டத்தின் வைத்தறிதலை எனவுமுணர்க. சிவன் ஆகு பெயர். அகரச்சுட்டு வருவித்துரைக்க. முயலென்பது முன்னிலை யேவல். சிவானுபவஞ் சுவானுபூதிகம்என்புழித் தொக்குநின்ற வாறா வது முறையே செயப்படுபொருண்மைக் கண்ணும் வினைமுதற் பொருண்மைக்கண்ணும் வந்த காரகம்; அமிழ்தவுண்டி கடவுளர் உண்டி என்றாற்போல. இதனானே அந்நிட்டை மேவப்பெறாதார்க்கு அது பெறும்உபாயங் கூறப்பட்டது. ௩௪

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவென் இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பாத்தையடை பராவுசிவ ரன்றே

ஆக்குமுடி கவித்தரசாண் டவர்கள் அரிவையரோ(டு)
அனுபவித்தங் கிருந்திடினும் அகப்பற்றற் றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றாலும்
நுழைவர்பிறப் பினின்வினைகள் நுங்கி டாவே. ௨௮௭

(உரை) இங்ஙனம் பசுகரணஞ் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரத்தினின்று கொண்டுதானே கரணங் கடந்த அதீதத்தைப் புரிந்தார், கருவிகளின் நீங்கி நிட்டைமேவினோரோ டொப்பச் சிறந்தாரே யாவர்; அவ்வுண்மையறிந்தார் உண்டுடுத்துப் பூசி முடித்துச் செய்யுந் தொழிலொப்புமையேபற்றி அவரை உலகத்தாரோடு வைத்தெண்ணற்க.

பராவுதல் சஞ்சரித்தல். இதனானே அங்ஙன முயன்றாரது பெருமை கூறப்பட்டது. ஞானவதிகாரப்பட்டமைபற்றி ஈண்டுக் கேட்டலுடன் வைத்து ஒருவாற்றாற் றொகுத்தோதிய இன்னோரன்னவை யெல்லாம் வருகின்ற சூத்திரங்களான் விரித்துக் கூறப்படும். புறச்சமய நெறி என்பது முதல் இத்துணையும். இரண்டாங்கூற்றைத் தெரித்துணர்த்தியவாறு. ௫௰

கருவிகழிந் தாற்காணு மொன்றுமெனிற் காணார்
காணாதார் கன்னிகைதான் காமரசங் காணாள்
மருவிஇரு வரும்புணர வந்த இன்பம்
வாயினாற் பேசரிது மணந்தவர்தாம் உணர்வர்
உருவினுயிர் வடிவதுவும் உணர்ந்திலைகாண் சிவனை
உணராதார் உணர்வினால் உணர்வதுகற் பனைகாண்
அருள்பெறின்அவ் விருவரையும் அறிவிறந்தங் கறிவர்
அறியாரேற் பிறப்பும்விடா தாணவமும் அறாதே. ௨௮௮

(உரை) இருவரும் புணர வந்த இன்பம் பேசரிதாயினும் மணந்தவர் தாம் உணர்வர், அக்காமரசங் கன்னிகை காணாள்; அதுபோல அருள்பெறில் அவ் விருவரையும் அறிவிறந்தங்கறிவர், காணமாட்டாத அபக்குவர் அதனைக் காணார்தாமேயாகலான் அவருக்கு உணர்த்தும் வாயிலில்லை. இது நிற்க. பன்னிறங்களான் மயங்கித் தன்னொளி இழந்த படிகம்போல உருவான் மயங்கியே ஆன்மசொரூபம் உணரப் பெற்றிலர்; அதனையுணராதார் அப்பெற்றித்தாகிய உருவுணர்வால் அவ்வான்மாவுக்குள்ளாகிய சிவனையும் அறிவாமென்றல் பாவகமாத்திரையேயாகலாற் கருவியறிவிறந்துநின்று அருளானறியப் பெறாதார்க்கு ஏகதேசமாகிய கருவியுள்ளளவும் ஏகதேசக்காட்சி நீங்காமையாற் பிறவியொழியாது; பிறவிக்கு மூலமாகிய ஆணவமலமும் பற்றறக் கழியாது.

இஃது எடுத்துக்காட்டுவமை. ஈண்டுருவென்றது கலையாதிமண்ணந்தமாகிய கருவிக்கூட்டத்தை. இன் ஏதுப்பொருட்கண் வந்த ஐந்தாமுருபு. அது பகுதிப்பொருள் விகுதி. உணராதார் சிவனையுணர்வதென இயையும். உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உணராதாரென்றது சிவசங்கிராந்தவாதிகளை நோக்கிக் கூறியது. காணிரண்டுங் கட்டுரைக்கண் வந்த வசைநிலை. இதனானே பசுகரணங்கள் சிவ கரணமாகத் துன்னிய சாக்கிரத்தைப் பெற்றார் அதன்மேலுங் காணங்கடந்த அதீதத்தைப் புரிதற்கு அறிவு செல்லுமாறு யாங்ஙனமென்னுஞ் சிவசங்கிராந்தவாதிகளை மறுக்குமுகத்தால், துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லுயிர் என்ற மூன்றாங்கூறு வலியுறுத்தப்பட்டது. ௫௯

பன்னிறங்கள் அவைகாட்டும் படிகம்போல் உள்ளம்
பலபுலன்கள் நிறங்காட்டும் பரிசுபார்த் திட்(டு)
இந்நிறங்கள் என்னிறம்அன் றென்று தன்றன்
எழில்நிறங்கண் டருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்
பொய்ந்நிறமும் புலன்நிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல். ௨௮௯

(உரை) தன்னையடுத்த பன்னிறங்களின் இயல்பே தன் மாட்டுக் காட்டி நிற்கும் பொதுவியல்புடைய படிகம்போல, ஆன்மாவுந் தன்னாற் சாரப்பட்ட கருவிகளின் இயல்பே தன் மாட்டுக் காட்டி நிற்கும். தனது பொதுவியல்பை முன்னர்ச் சிந்தித்தறிந்துகொண்டு, பின்னர் அப்படிக ஒளி அவற்றின் வேறுளதாயினாற்போல, தனது சிறப்பியல்பு இவற்றின் வேறாயுண்டென்பதும் உணர்ந்து பின்னங்ஙனம் பொதுவியல்பையே தன்னியல்பாகச் செய்துநிற்கும் அக்கருவிஞானம் பொதுவியல்பேயாயொழியும்படி தன்னியல்பு விளங்குதற்கு ஏது

வாகிய உண்மையுணர்ந்தான் அத்தன்னியல்பின் விளங்கித் தோன்றுஞ் சிவத்தையுறுவன்; மீள அக்கருவிக் கூட்டத்திற் செல்வானல்லன். சிறைப்பட்டநீர் முறிந்தவழிக் கடலிற் சென்றடங்கி மீளாதவாறுபோலும்.

கருவிகள் அப்பெற்றியவாயவழி அவற்றை நீங்கி அருள்பெறுமாறு யாங்ஙனமென்று நோதலுறுவார்க்கு உபாயங் கூறியவாறு. சேர்தற்கு இடையீடின்மை விளக்குவார், முடுகியோடி என்றார். ௩௭

எங்குந்தான் என்னினும் எய்த வேண்டா
எங்குமிலன் என்னின்வே றிறையு மல்லன்
அங்கஞ்சேர் உயிர்போல்வன் என்னின் அங்கத்(து)
அவயவங்கள் கண்போலக் காணு ஆன்மா
இங்குநாம் இயம்புந்தத் துவங்களின்வைத் தறிவ(து)
இறைஞானந் தந்துதா ளீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியும்உட் சோதியும்பெற் றாற்போல்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே. ௨௯௦

(உரை) உயிர் கரணங்களெல்லாஞ் சிவமயமேயெனின் வேற்றுமையின்மையாற் கருவிவழிச் செல்லுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையானும், அதுபற்றி எல்லாஞ் சிவமாதலில்லையெனின் எவற்றினும் வியாபகமாயுடன் நின்று செலுத்துவதாகிய அவனதிறைமைக்கு இழுக்காய் முடியுமாகலானும் இருவகையுமின்றிக் கலப்பினால் உடம்பின்கண் உயிர்போல ஒப்பநிற்பன் என்பது பெறப்படுமாகலான், உடம்பின்கண் உளவாகிய ஐந்திந்திரியங்களினும், உயிர் ஒப்ப நிற்பினும் ஏனை இந்திரியங்கள் நான்கும் ஒளியால் அவ்வான்ம போதத்தோடும் விரவிச் செய்மைக்கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியுங் கண்ணிந்திரியம்போல வியாபித்தறியமாட்டாவாய்த் தம்மாட்டு வந்த விடயங்களை நின்றாங்குநின்று இயைந்தறிவனவேயாமன்றே. அதுபோல ஆன்மாவினுந் தத்துவங்களினும் வைத்துப் பார்த்து வேற்றுமை யறிந்துகொள்ளப்படுமாகலான், அப்பெற்றித்தாகிய உயிர் அப்பெற்றித்தாகிய கருவிஞானத்தைக் கைவிட்டு இறைஞானந்தந்து திருவடிகளை யீயப்பெறுதல் ஒளியிழந்த கண் மாசு நீங்கியவழித் தன்னொளியையுந் தனக்கு உள்ளொளியாய் நின்று செலுத்தும் ஆன்மபோதத்தையும் ஒருங்கே பெற்றாற்



போலுமாகலின், அவ்வழி இறைவன் ஆன்மாவின் அறிவுக் கறிவாய்த் தோன்றுவானன்றி ஏகதேசமாகிய ஏனைக் கருவியறிவுக்குள் அறிவாய்த் தோன்றுவானல்லன்.

இறைவனொப்ப நிற்பினும் ஏகதேசப்பொருள் ஏகதேசப்பொருளே வியாபகப்பொருள் வியாபகப்பொருளேயென்பார், உவமை எடுத்துக்காட்டி ஆன்மாவினும் நாமியம்புந் தத்துவங்களினும் இங்கு வைத்தறிவதென்றார். நாமென்னுமுளப்பாட்டுத் தன்மை *“நாமமையாமத்தென்னே வந்துவைகி நயந்ததுவே” என்றாற்போல ஈண்டிழித்தற்குறிப்புத் தோன்ற முன்னிலைக்கண் வந்தது. அறிவதென்றது வியங்கோள்; “†கொள்ளப்படாதுமறப்பது” என்பதுபோல இங்கென்பது உவமவுருபுதோன்ற நின்றது. ஈதல் ஆகுபெயர். இழந்தவென்னும் அன்பெறாத வகரவீற்றுப் பலவறிசொல் விழிகளையுணர்த்திப் பெற்றாற்போலென்னும் பயனிலைகொண்டது. மாசுநீக்கந்தோன்றத் துங்கவிழிச் சோதியென்றார். யாண்டுமொப்ப நிற்குஞ் சிவத்தினொடும் பொருந்தினவன் மீளினும் அதுபற்றி இழுக்கென்னையெனுஞ் சிவாத்துவிதசைவரை நோக்கி ஒப்பநிற்கும்வழியும் வேற்றுமையுண்டென்பது உவமைமுகத்தான் இனிது விளக்கிப்போதான் பின்னையென்றதனை வலியுறுத்தியவாறு. ௩௮

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கிஅது விடும்பொழுதிற் பாக்கும்
மாசுபடு மலமாயை அருங்கன்மம் அனைத்தும்
அரனடியை உணரும்போ தகலும்பின் அணுகும்
நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
ஆசையொடும் அங்குமிங்கு மாகிஅல மருவோர்
அரும்பாச மறுக்கும்வகை அருளின்வழி யுரைப்பாம்.

(உரை) சிவத்தைப் பொருந்தியவன் ஒரோவழிக் கருவிகளின் மீளவருமாயின் அது நீர்ப்பாசிபோல அற்றம் பார்த்து வந்து தலைப்

---

* திருக்கோவையார் - ௧௬௪.

† திருக்கோவையார் - ௮௭.

பதும் வாதனைபற்றி நிகழ்வதாகலின், அவ்வாதனை முன்னர்க் கூறப்பட்டுபாயத்தைக் கடைப்பிடித்துச் செய்து நீக்கிக்கோடற்பாற்று.

இவை மூன்றுசெய்யுளாலும் அவரினீக்கி மலமகற்றித் தாளுக்கி மலரடிக்கீழ்வைப்பனென்ற நாலாங்கூற்றுப் பொருள் வலியுறுத்தப் பட்டது. ௩௧

---

## ஒன்பதாஞ் சூத்திரம்

மேலைச் சூத்திரத்தாற் பேறு முதலியவற்றை யுணர்ந்தானுக்கு அப்பேறு பயப்பதாகிய சாதனஞ் செய்யுமாறு வகுத்துக் கூறுதற் கெழுந்தது ஒன்பதாஞ் சூத்திரம்.

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
    பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
    நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதின்
ஆசைதரும் உலகமெலாம் அலகைத்தே ராமென்(று)
    அறிந்தகல அந்நிலையே யாகும் பின்னும்
ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க
    உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலா மோட. ௨௯௨

(உரை) மேற்கூறியவாற்றால் ஏனை இருவகை ஞானங்களாலும் எய்துதற்கரியனாகிய பரம்பரனை அவனது திருவடிஞானமொன்றானே தன்னறிவின்கண் வைத்தாராய்ந்து, நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கப் பெறுதவழிப் பற்றுச்செய்தற்கேதுவாகிய எத்திறப்பட்ட பிரபஞ்சமும் நின்றுழி நில்லாது பெயருங் கானற்றேரின் இயல்பினவாகக் கண்டு கழிப்பவே, அத்திருவடிஞானம் விளங்கி அந்நிலை கைகூடப் பெறும். அதன்பின்னும் அவ்வாறு பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி யொரோவழி வாதனைபற்றிச் சலியாமைப்பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்தை அவ்விதிப்படி யறிந்து உச்சரிக்க.

ஈண்டு ஊனமென்றது வாதனாமலத்தை. நில்லாதே நீங்கிப் போதினெனவே, அவ்வாறு நிற்றலும் அனுவாத முகத்தான் ஈண்டு



விதிக்கப்பட்டதாயிற்று. ஆகவே, இச்செய்யுள் முதனூல் ஒன்பதாஞ் சூத்திரம்போல முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க. ௧

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
    விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
    நணுகிஆன் மாஇவைகீழ் நாட லாலே
ஆதலினால் நான்பிரம மென்னு ஞானம்
    கருதுபசு ஞானம்இவ னுடலிற் கட்டுண்(டு)
ஓதியுணர்ந் தொன்றொன்று உணர்ந்திடலாற் பசுவாம்
    ஒன்றாகச் சிவன்இயல்பின் உணர்ந்திடுவன் காணே. ௨௯௩

(உரை) மேற்கூறிப்போந்த மூவகை ஞானங்களுட் பாசஞானமாவது நால்வகை வாக்கின் பகுதியவாகிய வேத முதலிய சொற்பிரபஞ்சமும், நிலமுதல் நாதமீறாகிய பொருட்பிரபஞ்சமும் என்னும் இவைபற்றி நிகழும் ஏகதேச ஞானம் அனைத்துமாமெனவும், ஏனைப் பசுஞானமாவது இவற்றைப் பொருந்திய ஆன்மா இவைஅனைத்துந் தன்கீழ் வியாப்பியமென் றறிந்து நீங்கித் தான் அவற்றிற்கு மேற்படுதலான் அங்ஙனம் அதுபற்றி நிகழ்வதோர் செருக்கால் அநாதி முத்தனைப்போல முத்தனாகிய யானும் அவ்வாறு பிரமமாவேனெனச் சடுதியின் மதிக்க வருவதோர் சிவசமவாத ஞானமெனவும் உணர்க.

ஞான வேற்றுமை தெரித்துக் கூறியவாறு. அற்றேல், அறிந்து நீங்குதலின் வேற்றுமையின்மையாற் சமப் பிரமமென்றற் கிழுக்கென்னை என்னும் ஆசங்கை நீக்குதற்பொருட்டு அநாதிமுத்தனோடு ஆதிமுத்தன் இடையறிந்து நீங்குதலின் வேற்றுமை பெரிதாதல் காட்டுவார், இவனுடலிற்கட்டுண் டோதியுணர்ந் தொன்றொன்று உணர்ந்திடலாற் பசுவாம் ஒன்றாகச் சிவனியல்பின் உணர்ந்திடுவன் காணே என்றார். பசுத்துவ நீங்கிய வழியும் அவ்வாறு மதித்தல் பசுத்துவ வாதனைபற்றியாகலான் அது பசுஞானமே யாமென்பது. நான் பிரமம் என்னும்ஞானம் ஏகான்மவாதம்பற்றி நிகழுஞானமெனினுமாம். நாடலாலெனவும் உணர்ந்திடலாலெனவும் உணர்ந்திடுவனெனவுங் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். நாதமுடிவான வெல்லாமென்றதும் அது. நணுகிய என்னும் பெயரெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது; "தகுவரியன்பு" என்றாற்போல. ஒன்றா

கச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே என்றதனாற் பதிஞானத் தியல்பு இதுவென்பதூஉம் பெறப்பட்டது. அஃதங்ஙனமாக வைகரி யாதித் திறங்களெல்லாம் பாசஞானமெனக் கழிப்பின், வைகரியாதித் திறத்துட்பட்ட ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல் முதலியன ஞான பூசையென மேற்கூறியது போலியாய் முடியும்போலு மெனின்,—முடியாது; பதிஞானம் விளங்குதற்கு ஏதுவாமுகத்தாற் பயன் படுதலுடைமையின். ௨

காரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னில்
கதியாகும் சினைமுட்டை கருமாத்தின் உயிர்கள்
மரணங்கொண் டிடஉறங்கி மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை அடையச்
சரணங்கள் புகுநிழல்போல் தனைஅடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகும்
அரணங்க ளெரித்தவன் தன் அடியைஅறி விறந்தங்(கு)
அறிந்திடர் செறிந்ததுகள் அகற்றி டீரே. ௨௬௪

(உரை) அங்ஙனம் நான் பிரமமென நிகழுஞானமேயன்றி ஆன்மா இவைகீழ்நாடி நீங்குதன்மாத்திரையே முத்தியாதலமையு மென அதற்கு முன்னாக நிகழும் பாடாணவாதஞானமும், சேய்மைக் கட் சென்ற ஒருவன்நிழல் உச்சிப்போதின்கண் அங்ஙனஞ் சேற லொழிந்து அவனடியுள் வந்தொடுங்கினாற்போலக் காணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்துழி அங்ஙனஞ் சேறலொழிந்து தன் மாட்டு வந்தொன்றி நிராதாரமாய் நிற்குமதுவே முத்தியாத லமையு மெனப் பாடாணவாதஞானத்தின் பின்னாக நிகழும் பேதவாத ஞானமுமென்னும் இவையும் பசுஞானமாம். இவ்வாறு நிகழும் பசு ஞானங்களுக் கேதுவாகிய பசுத்துவமாதனை இவற்றைக் கைவிட்டுச் சிவஞானத்தாற் சிவனையுந் தம்மையும் அறியப்பெற்றார்க்கன்றி நீங் காது.

இதுவும் உம்மை இறந்தது தழீஇயிற்று. கதியாகுமென்றது செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களோடு தனித்தனி சென்றியையும். சினைமுட்டை கருமாத்தினுயிர்கண் மருவவென் றுரைக்க. மருவவென்பது சொல்லெச்சம். முத்தியாமென்னில் என்பதனைத் தனையடையுஞ் சமாதி என்பதனோடுங் கூட்டுக.



ஞாயிற்றைக் காணப்பெறாதார்க்கு இருள் நீங்காதவாறுபோலத் தனை யடையுஞ் சமாதி முத்தியென்பார் சிவனையறியப் பெறாமையின் அவர்க்கு மலந் தவிராதாயிற்றென்பது. கதியாகுமெனவுந் தவிராது மலமெனவும் ஈண்டுக் கூறியது, மேலைச் செய்யுளின் உணர்ந்திட லாற் பசுவா மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவனென்றாற் போல ஆசங்கை நீக்கி அவை பசுஞானமாதலை வலியுறுத்தற் பொருட்டு. ௩

சிவனை அவன் திருவடிஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லாம்
அவனையணு காவென்றும் ஆத லானும்
அவனடிஅவ் வொளிஞான மாத லானும்
இவனுமியான் துவக்குதிர மிறைச்சி மேதை
என்புமச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ
அவமகல எனையறியேன் எனும்ஐய மகல
அடிகாட்டி ஆன்மாவைக் காட்ட லானும். ௨௬௫

(உரை) ஈண்டுக் கூறிப்போந்த ஞானங்களுள் முப்பொறி முத லியனபற்றி ஏகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர்வாகிய பாசஞானத்திற் கும், தற்சொரூபமே அறியமாட்டாது பலதலைப்பட்டையுற்று நிற்ப தாகிய பசுஞானத்திற்கும்,தானே தற்பிரகாசமும் பரப்பிரகாசமுமாய் எல்லாப் பொருளையும் இனிது விளக்குவதாகிய பதிஞானம்போல, விளக்குமாற்றல் செல்லாமையால் அப்பெற்றித்தாகிய பதிஞானம் ஒன்றானே பதிப்பொருளை அங்ஙனம் அறியற்பாற்றெனமேற்கொண் டது.

சிவஞானத்தாலன்றி அறியப்படாமைக்கு ஏதுக்காட்டியவாறு. ௪

கண்டிடுங்கண் தனைக்காணா கரணம் காணா
காரணங்கள் தமைக்காணா உயிருங் காணா
உண்டியமர் உயிர்தானுந் தன்னைக் காணா(து)
உயிர்க்குயிராம் ஒருவனையுங் காணா தாகும்
கண்டசிவன் தனைக்காட்டி உயிருங் காட்டிக்
கண்ணாகிக் காரணங்கள் காணாமல் நிற்பன்
கொண்டானை உளத்திற்கண் டடிகூடிற் பாசம்
கூடாது கூடிடினும் குறித்தடியின் நிறுத்தே. ௨௬௬

(உரை) பாசபசுஞானங்கள் பரப்பிரகாசமாய் நிற்பினுந் தற்பிர காசமாய் நிற்றல் செல்லாதென்பது கண்மேல்வைத் தறியக் கிடத்த லானும், சிவனைப் பதிஞானத்திற்குத் தற்பிரகாசமாய் நிற்றலுஞ் செல்லுமென்பது தானவ்விரண்டற்குங் காட்டாய்த் தனக்கொரு காட்டு வேண்டாது நிற்றல்பற்றி அறியப்படுதலானும், சிவனை அவன் திருவடிஞானத்தாற் சேறலே பொருத்தமுடைத்து.

மேலதற்குத் தரிசனங் காட்டியவாறு காணுமதென்னுந் தவ் வீறு விகாரத்தாற் றொக்கது. கண்டிடும் என்பதனைக் கரணங்கள் என்பதனோடுங் கூட்டுக. கண்டிடுதல் கண்டுப் பரப்பிரகாசமாதன் மேற்று. உண்டியமர்தலும் அது. எடுத்துக்காட்டுவமை. தனைக்காட்டி உயிருங்காட்டிக் கண்டசிவனென இயையும். காட்டிக் கண்ட சிவ னென்றது அனுவாதம். கண்ணுறியென்பது காட்டாகியென்றவாறு; *சொன்னவிவன் கண்ணு என்றாற்போல. கரணங்களாற் காணுமெ லென மூன்றாவது விரித்துரைக்க. கரணங்களெனவும் உயிரெனவும் சிவனெனவும் அவ்வப்பொருண்மேல் வைத்து உபசரித்தார். இரண் டாங்கூற்றுக்குத் தோற்றுவாய் செய்வார், பாசங்கூடாது கூடிடினும் குறித்தடியில் நிறுத்தே என்றார். இவை நான்கு செய்யுளானும் முதற்கூற்றின் பொருள் விளக்கப்பட்டது.

குறித்தடியின் நின்(று)அட்ட குணமெட்டுச் சித்தி
கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி அறுவகையும் மேலொழிய முடங்க
வெறும்பொயென நினைந்திருக்க மேலொழிவு மில்லான்
நிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொரு வர்க்கு
நினைப்பரியான் ஒன்றுமிலான் நேர்படவந் தன்னே
பொறுப்பரிய பேரன்பை அருளியதன் வழியே
புகுந்திடுவன் எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே. ௨௬௭

(உரை) குருவின் அருளாலறிவதொரு குறியின்கண் உறைத்து நின்றுகொண்டு, காலாக்கினி புவனமுதல் அநாசிருதபுவனமீறாயுள்ள எவ்வகைப்பட்ட புவனமும் இதற்குமுன் அனுபவித்துக் கழித்தமை யிற் கான்ற சோறெனக்கண்டு அருவருத்துவிட்டு, அறுவகை அத்துவை

* சிவஞானபோதம் - ௯ - உ - வெண்பா. ௧.

வுட்பட்ட மூவகைப்பிரபஞ்சமுங் காரணரூபத்திற் சிறிதுங் காணப்படாமையாற் பித்திகைவடிவங் காண்பார்க்குக் காணப்படாதாய் அதன்கண் மறைந்த சித்திரவடிவம்போல முழுப்பொய்யெனக் கண்டு அவ்வாறு கண்ட காட்சி சலியாதிருக்கப்பெறின், அப்பிரபஞ்சத்திற்கு இலக்கணமான ஞானசொரூபம் ஆண்டினிது விளங்கித் தோன்றும்; தோன்றவே, வறியார்க்கு நிதிவாய்த்துழிப்போல அதன்கண் பெருங்காதல் மீதூரும்; அது மீதூரவே *"இன்பி லினிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்-அன்பின்னிலையே அது" ஆகலான் அவ்வன்பின்வழியே பேரின்பமயமாய்ப்புகுந்து உயிரின்கண் விளங்கித்தோன்றும் அந்தஞானத்திற்கு முதலாகிய ஞேயம்.

அட்டகுணம் எட்டுச்சித்தி கோகனதனென்றது பைசாசபதத்தின் அட்டமாசித்தியை நோக்கி எண்மடங்கேற்றமாகிய அட்டசித்தியுடைய பிரமபதமென அதன் பெருமை கூறியவாறு. கோகனதன் ஆகுபெயர். ஒற்றுமிகாமை வடநூன்முடிபு. வாழ்வுகுலவுபதம் திப்பியமகளிரும் அதிவிசித்திரமாகிய மாடமுமாளிகையும் முதலிய போக்கியப்பொருட் சிறப்புக்களான் அழகுபெற்ற பதம். ஒற்றுமை பற்றிக் குணம் குணியாக உபசரிக்கப்பட்டது. இதனானே ஆசைதரும் உலகமெலாம் அலகைத்தேராம் என்றறிந்தகலுமாறும் அந்நிலையேயாமாறும் வகுத்துணர்த்தி இரண்டாங்கூறு வலியுறுத்தப்பட்டது. ௯

கண்ட இவை யல்லேன்நான் என்றகன்று காணாக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்றான் நின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநா னேனென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே. ௨௯௮

(உரை) உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாகவுணர்கின்ற உயிராவது, சுட்டுணர்வுட்பட்ட அப்பாசமுமன்று, சுட்டுணர் விறந்துநின்ற அப்பதிப்

* திருவருட்பயன் - இன்புறுநிலை - ௧௦.

பொருளுமன்று இரண்டற்கும் வேறெனக் கண்டு, வேறாகிய பாசத்தை மேற்கூறியவாற்றால் ஒருவி, ஏனைப்பதிப்பொருள் வேறாயினும் வியாப்பிய வியாபகபாவகத்தாற் கண்ணொளியும் ஞாயிற்றினொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய தனது தொண்டினையும் இறைவன் கலப்பினையும் நோக்கி நின்று, கருடோகம்பாவனைபோலச் சிவோகம்பாவனை யொருவன் செய்யப்பெறுமாயின், அக்கருடன் அம்மாந்திரிகனுக்கு வேறாதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறுபோல, சிவனும் இவனில் வேறாதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனாகச் செய்வன்; வேதாந்த மகாவாக்கியத்திற்கும் இதுவே பொருளாகக் கொள்க.

இப்பாவனை யின்றியமையாச் சிறப்பிற்றென்ப துணர்த்துவார், பயனுமுடன் கூறினார். பாழுமென்ற உம்மை இறந்தது தழீஇயது. பரம் அவனெனத் திணைமயங்கிற்று. தொண்டாவது சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையஉயிர் கழிபாழும் நானல்லேனெனக் கருதியவழி முன்போல முனைத்தலின்றி ஒங்குணர்வின் உள்ளடங்கி அதன்வழித்தாய் நிற்றல். முனைத்துநின்று செய்யும் உலகத்தொண்டின் நீக்குதற்குக் கசிந்த தொண்டென விசேடித்தார். வேறாயவழியுஞ் சோகமெனப் பாவித்தற்குரிய இயைபு இருவர்மாட்டுமுண்மை விளக்குவார், கசிந்த தொண்டினொடுமுளத்தவன்றான்நின்றகலப்பாலே என்றார். கருடபாவனையை எடுத்துக் காட்டியதும் அதன்கண் ஐயநீக்குதற் பொருட்டென்பது. எனவே, கருடோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனைக்கு மந்திரத்தினது ஆற்றலும் அவ்வாற்றல்வழி நின்று பாவிக்கும் மாந்திரிகனதாற்றலும் ஒருதலையான் வேண்டப்பட்டு ஆண்டைக்கு நிலைபெறுமாறுபோல, சிவோகமெனப் பாவித்து நிற்கும் அத்துவிதநிலைக்கு இறைவனது கலப்பும் இவனது தொண்டும் ஒருதலையான் வேண்டப்படுமென்பது போந்தமையால், அங்ஙனந் தொண்டு செய்தற்குரிய ஆன்மாவினது ஞானக்கிரியைகளும் கலத்தற்குரிய இறைவன் ஞானக்கிரியைகளும் ஆண்டுக் கேடின்றி நிலைபெறுமென்பதூஉம் அருத்தாபத்தியான் உணர்ந்துகொள்க. *" உன்றன் குலமிரண்டென் குல

* உலகுடை நாயனார் - கழிநெடிலடியாசிரிய விருத்தம் - ௬.

162351

உ

சிவமயம்

# திருப்புகழ்

கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, மயில் விருத்தம், வேல்விருத்தம், திருவகுப்பு, திருவெழுகூற்றிருக்கை, உரைக்குறிப்புகள், தெய்வப்பெய ரட்டவணை, விஷய ஆராய்ச்சி அட்டவணை, வரலாறுகளின் அட்டவணை, தலக்குறிப்பட்டவணை, இலக்கண விசேடங்கள், அரும் பொருளகராதி, பாட்டு முதற்குறிப்பகராதி, அருணகிரிநாதர் சரித்திரம், நூலாராய்ச்சி, அருணகிரிநாதரைக் குறித்து ஆன்றோர் கூறிய பாடல்கள் முதலிய அருமையான சிறப்புக்களுடன், பல ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெற்ற சிறந்த பாடங்களைக் கொண்டு, இதுவரையில் அச்சிடப்படாத பல புதிய திருப்புகழ்ப் பாடல்களோடு 1361 பாடல்களும் 1108 பக்கமுங்கொண்ட ஒரே நூலாக நல்ல கிளேஸ் காகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பட்டு முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றுத் திருவண்ணாமலையில் நமது சமாஜத்தின் 30-ம் ஆண்டு நிறைவு விழாவில் அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகவேள் சந்நிதியில் வெளியிடப்பட்டது.

தனிப்பிரதி விலை ரூ. 3. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூ. 10. ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 2½.

**உடனே பிரதிகட்கு மணியார்டர் மூலம் விண்ணப்பம் செய்க.**

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-ஏ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10—6—36.

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 9, No. [illegible]

உ

சிவமயம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் அச்சகத்தில் சுத்தப்பதிப்பாக வெளிவந்து விட்டது. இப்பதிப்பில் சிவஞான போதமூலம், சிவஞானசுவாமிகளருளிய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞான போதச் சூர்ணிக்கொத்து, பேராசிரியர் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல வெள்ளைக் காகிதத்தில் டெமி [illegible] பக்கங்கொண்டு முழுக் கலிக்கோ பைண்டு செய்யப் பெற்ற அழகிய பதிப்பு.

தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;
ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா [illegible].

பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து;
ரயில்வே பார்சல் கூலி, தபாற்கூலி வேறு.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-எ, கல்லுக்காரத் தெரு
மயிலாப்பூர், சென்னை
10-6-1936

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
கா[illegible]

Printed by T.V. Volaganathan at the Sadhu [illegible]ess, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by M. Balasubramania Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.